NO5-11
61431

OFFICE OF THE REGISTRAR OF
1. SEP 1915

# சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”

VOL-11 தொகுதி-11 | August ஆகஸ்டுமீ 1915. | No - 1. பகுதி-1.

## அரசனும் - குடிகளும்.

“மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை”, “சக்கர நெறி நில்” என்று பெரியாரருளிச் செய்திருப்பதை நாம் நன்கு சீர்தூக்கி நோக்குவோமாயின், அரசனது கடமை யித்தன்மையதா மென்பதும், குடிகளது கடமை யித்தன்மையதா மென்பதும் நமக்கு நன்கு விளங்குவனவாம். அரசன் தன்னுடைய கடமையையும் குடிகள் தம்முடைய கடமையையும் மறவாது மேற்கொண்டொழுகி வருவாராயின், அவ்விருதிறத்தார்க்கும் நன்மை யென்று சொல்லப்படுவன வனைத்தும் நிச்சயமாக வுண்டாவனவாம். அரசன் தன் குடிகளிடத்து அருளும், குடிகள் தம்மரசனிடத்து அன்புமுடையவரா யிருப்பாராயின், அவர்கட்குத் தீமை யுண்டாவது பெரும்பான்மையு மில்லையாம். ஒரு காட்டில் வசிக்கும் புலிக்கு அக்காடு காவலாக விருப்பது போல, அப்புலியும் அக்காட்டிற்குக் காவலாக விருப்பதாம். புலியைப் பிறர் கொல்லா திருப்பதற்குக் காரணம் காடு நெருக்கமா யிருப்பதேயாம்; காடு அழியா திருப்பதற்குக் காரணம் இக்காட்டில் புலி வசிக்கின்றதே யென்னும் பயத்தால் பிறர் வந்து, அதனை வெட்டா திருப்பதே யாம். புலியினுடைய இருப்புக் காட்டிற்கும், காட்டினுடைய இருப்புப் புலிக்கும் அத்தியாவசியகமாய் வேண்டுவனவாக விருத்தல் போல, அரசனுடைய இருப்புக் குடிகளுக்கும், குடிகளுடைய இருப்பு அரசனு

161431



[illegible]ம். அத்தியாவசியகமாய் வேண்டுவனவாம். காடு நெருக்கமா
யிராதிருந்தால் புலிக்குக் கேடும், புலி பலவீனமான விடத்துக்
காட்டிற்குக் கேடு முண்டாவது நிச்சயமாம். காடுநெருக்கமா யிராத
விடத்துப் புலியைக் கொல்வதெளிதாம்; புலி பலவீனமாய விடத்
தோ, (அதனைக் கொன்று) காட்டை யழிப்ப தெளிதாம். காடு
நெருக்கமாயும், புலி பல முடையதாயு மிருக்கு மளவும் புலி
யைக் கொல்வதும் அருமையாம்; காட்டை யழிப்பதும் அருமை
யாம். அரசனது நிலைமையையும் குடிகளது நிலைமையையும் யாம்
நிதானமாக யூகித்து நோக்குவோ மாயின், அவ்விருதிறத்தாரும்
புலிபோலும் காடுபோலு மிருக்கின்றன ரென்பது நன்கு விளங்கு
வதாம். அரசன் குடிகளிடத்து அருளும், குடிகள் அரசனிடத்து
அன்பு முள்ளவளவும் அவர்கள் அச்சமற்றவராய் வாழ்வது நிச்ச
யமாம். அரசனிடத்து அருளும், குடிகளிடத்து அன்பும் குறையு
மாயின், அரசன் கெடுவதும் நிச்சயமாம்; குடிகளழிவதும் நிச்ச
யமாம். அரசன் தன்குடிகளிடத்து மாறாத அருளுடையவனாயிரு
ப்பானாயின், குடிகள் தம்மரசனிடத்து மாறாத அன்புடையவரா
யிருப்பா ரென்பது பிறழாத விஷயமாம். அரசன் தன் செங்கோல்
முறைமை தவறாதொழுகுதலே அவன் தன் குடிகளிடத்து அருளு
டையவனாக விருத்தலாம்; குடிகள் தம்மரசனது சக்கரநெறி நின்
றொழுகுதலே அவர்கள் அரசனிடத்து அன்புடையவராக விருத்த
லாம். அரசனிடத்து அருளும் குடிகளிடத்து அன்பும் [illegible]
யின், அவர்கள் வசிக்கும் நாடு தீராத கலகத்திற்கு உறை [illegible]டமாக்
விருப்பதன்றி மற்றொன்றாக விருப்பதில்லையாம்.

செங்கோலென்பது நீதியாம்; முறைமை யென்பது நீதியைத்
தவறாது செலுத்துதலாம். நீதியைத் தவறாது செலுத்தித் தன்
குடிகளையாளும் அரசனிடத்துக் குடிக ளன்பில்லா திருப்பது ஒரு
காலத்து மின்மையின், அரசன் தன் குடிகளிடத்து அருளுடைய
வனா யொழுகுதலே அவனுடைய கடமையாம். குடிகள் தம்மர
சன் விதித்த விதிக்கு மாறாகாதொழுகி வருவாராயின், அவர்களி
டத்து அரசனுக்கு வெறுப்பு எஞ்ஞான்றும் உண்டாவதில்லையாம்.
தம்மரசனது ஆக்கினை சக்கரவழியில் (நீதி வழியில்) நிற்பது குடிக
ளிடத்துப் பிறழாதிருக்குமாயின், அவர்கள் தம்மரசனது அருளு
க்குப் பாத்திராவர்; தன் குடிகளிடத்து நீதி செலுத்துவதில்
தவறாதிருப்பது அரசனிடத்துப் பிறழாதிருக்குமாயின், அவன்

m 2/11/105
11 25.11



தன் குடிகளது அன்பிற்குப் பாத்திரனாவ னென்பதை ஞாபகத்
தில் வைத்துக்கொண்டு நம்முடைய கடமைக்கு மாறாகா தொழுகி
வருவோமாயின், நாம் நம்மரசனது அருளுக்குப் பாத்திராய்
வாழ்வது தவறுவதில்லையாம். அரசனுடைய தவறு நம்முடைய
தவற்றிற்கும், நம்முடைய தவறு அரசனுடைய தவற்றிற்கும்
காரணமா யிருத்தலின், அரசன், குடிகளென்னு மிருதிறத்தா
ருள் ஒவ்வொருவரும் தத்தங் கடமையை மறவாது செய்து வரு
தல் வேண்டும். அரசன் தன்னுடைய கடமையைச் செய்யவில்
லையே யென்று குடிகளும், குடிகள் தம்முடைய கடமையைச்
செய்யவில்லையே யென்று அரசனுங் கருதித் தத்தங் கடமை
யைச் செய்யா தொழிவது ஒருபோதுங் கூடாது. அரசன் குடிக
ளென்னு மிருதிறத்தாருள் ஒவ்வொருவரும் தத்தங் கடமையை
மறவாது செய்துவருவாராயின், நாடெங்கும் வாழ்ந்து நல முறுவ
தாம்.

அரசனுக்கு அருளாவது அவன் தன் குடிகள்மீது தொடர்பு
பற்றாது இயல்பாகப் பிரியமுடையவனாக விருத்தலாம்; குடிகளு
க்கு அன்பாவது அவர்கள் தம் மரசன் மீது தொடர்பு பற்றிப்
பிரியமுடையவராக விருத்தலாம். அரசனும், குடிகளும் இவ்வாறி
ருத்தலே அவர்கள் தத்தங் கடமையைச் செய்து வருவதாம்.

அரசன் தன் குடிகள் மீது அருளுடையவ னாகாதிருப்பனா
யின், அவர்கள் ராஜாங்க உத்தியோகஸ்தர், பகையரசர், கள்வர்
முதலாயினோரும், துஷ்ட மிருகங்களுஞ் செய்யுந் தீங்கில்லாது
வாழ்வது முடியுமோ? நாம் தீங்கில்லாது வாழவேண்டுமாயின்,
நம்முடைய கடமையை நாம் தவறாது செய்து வருதல் வேண்டும்.
நம்முடைய கடமையை நாம் தவறாது செய்து வருவோமாயின்,
அரசன் தன்னுடைய கடமையைத்தவறாது செய்வது நிச்சயமாம்.
"வைய மன்னுயி ராகவம் மன்னுயிர், உய்யத் தாங்கு முடலன்ன
மன்னனுக்கு" என்று கம்பராமாயணங் கூறுவதை நோக்குவோ
மாயின், அருளுடைய அரசன் தன் குடிகளைத் தன்னுயிராகக்
கொண்டொழுகுவா னென்பது நன்குவிளங்குவதாம். குடிகளாகிய
உயிர் வசிப்பதற்குரிய வுடம்பு அரசனாக இருத்தலின், உடம்பும்
உயிரும் போல அரசனும் குடிகளும் ஒத்து வாழ்வது அத்தியாவசி
யகமாம். "வேந்தன் சீறி னுந்துணை யில்லை" என்று பெரியாரருளி
யிருத்தலை நன்கு கவனித்து, சக்கர நெறிநின்றொழுகி வரு

கின்ற குடிகள் ஒருபோதும் தீங்கடைவதில்லை யென்பதை நாம் மறவாது மேற்கொண்டொழுகுதல் வேண்டும். குடிநலமில்லா நாடும் நீதியில்லாவரசும் சிறப்படைவதில்லை யென்பதை நன்குணர்ந்து, நம்மை யாண்டுவரும் நமது சக்ரவர்த்தியாரிடத்துப் பேரன்புடையவரா யிருந்தொழுகி வருவோமாயின் நாம் பெறவேண்டிய நன்மையென்பன வனைத்தையும் நிச்சயமாகப் பெறுதற் குரியவராவோம்.

அரசர் குடிகளது தவப்பயனாக வந்தவதரிக்கின்றமையின், அவரிடத்துக் குடிகள் உடல் பொரு ளாவியென்னுமூன்றனையும் பேரன்புடன் சமர்ப்பணஞ் செய்தொழுகக் கடமைப் பட்டவரா யிருக்கின்றனர். இக்கடமையைக் குடிகள் எஞ்ஞான்று மறவாதிருத்தல் வேண்டும். அரசனும் நீதிநெறி தவறாது அரசு புரிந்து குடிகட்கு ஆவனவற்றைச் செய்யக் கடமைப்பட் டிருக்கின்றான். † முறை வேண்டினாரும் குறைவேண்டினாரும் கொற்றவ (அரச) னில்லாவிடத்துத் தீராத துன்பத்திற்கு ஆளாய் வருந்துவ ரென்பது சிதையாத சித்தாந்தமா மாகலின், முறைவேண்டுதலும் குறைவேண்டுதலு முடைய நமக்கோர் அரசன் இன்றியமையாது வேண்டும்; நாம் அவ்வரசன் விதித்த விதிக்கு மாறில்லாதொழுகி வருவோமாயின், அவனுடைய அருளும் நம்முடைய அன்பும் உடலும் உயிரும்போல இருந்து, ஆவனவற்றை யெல்லாம் நமக்குப் பயப்பனவாம். நமது சக்ரவர்த்தியா ரவர்கள் முறை வேண்டினாரையுங் குறை வேண்டினாரையுங் கவனிக்க வேண்டியவாறு கவனித்து நம்மீது பெருங்கருணை செய்து வருதலினாற்றான், நாம் அவரிடத்துப் பூரண அன்புடையவரா யிருக்கின்றோம். அப்பூரண அன்பு நம்மிடத்து மாறாதிருக்குமாயின், நாம் மேன்மையென்பன வெல்லாவற்றையும் பெறுதற்குத் தகுதியுடையவராவோம்.

---

† முறைவேண்டினர் - வலியவராற் றுன்பமடைந்தவர்; குறைவேண்டினர் - வறுமையடைந்து யாசித்தவர்.



திருவாய்மொழி.

"திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக்
கண்டேனே யென்னும்."

திருக்குறள்.

"வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி."

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

புறநானூறு.

"மாண்ட, அறநெறி முதற்றே யரசின் கொற்றம்."

மணிமேகலை.

"கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்."

சீவகசிந்தாமணி.

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்."

பழமொழி.

"மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி யொழுகிற்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்."

கம்பராமாயணம்.

"கோளு மைம்பொறி யுங்குறை யப்பொருள்
நாளுங் கண்டு நடக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர சேயரசு".

நீதிநெறிவிளக்கம்.

"மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்."

இப்பிரயோகங்கள் இங்கு நன்கு கவனித்தற் குரியனவாம்.

## சுகநூல்.

### 23ம் பாடம்.

### தொத்துநோய்கள் (தொடர்ச்சி).

சிரங்கு:—சிலந்தி இனத்தைச் சேர்ந்த ஒரு சிறு புழுவினால் சிரங்கு உண்டாகிறது. அப்புழுவானது (முக்கியமாகப் பெட் டைப்புழு) தோலின் உட்புறத்தில் தனக்கு ஒரு வாசஸ்தானம் ஏற்படுத்திக்கொண்டு, அங்கே எண்ணிறந்த முட்டைகளிட்டு, விரைவாக விருத்தியாகிக் கொண்டுபோகும். அஃது ஒரு சரீரத்தி லிருந்து மற்றொரு சரீரத்திற்சென்று, அந்தந்த சரீரத்திலும் சிரங்குகள் உண்டாக்கிக்கொண்டு பரவும். சிரங்குப் புழு தோலு க்குள் சென்றவுடனே அங்கே நமைச்சல் ஏற்படும். அதனாலே தான் சிரங்கு பிடித்தவர்கள் சதா சொறிந்தவண்ணமாக இருக்கி ன்றார்கள். சிரங்கு முதலில் கையில் வரும்; அதைச் சொஸ்தப்படு த்தாவிட்டால், அது தேகமுழுதும் பரவும். சொறி, சிரங்குள்ள பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கமாட்டார்கள்.

சிரங்குக்கு மருந்து கந்தகம். கந்தகம் சிரங்குப் புழுவைக் கொன்றுவிடும். சில நீர்களில் கந்தகம் இயற்கையாகவே இருக் கின்றது. சிரங்கு பிடித்தவர்கள் தினந்தோறும் அதிகாலையில் கந் தக நீருள்ள குளங்களில் ஸ்நானம் பண்ணுதல் சுகமாம். பொது வாகச் சிரங்கு வராமலிருப்பதற்கு, தேகத்தை எப்போதும் சுத்த மாக வைத்திருத்தல் வேண்டும்.

வைசூரி (அம்மை):—

இந்நோயை ஸகலரும் அறிவார்கள். முதலில் ஜ்வரம், இடு ப்புநோவு, பிறகு தேகத்தின்மீது சிவந்தபுள்ளிகள் காணப்படும். அவை, திரண்டு, பருத்துக் கொப்புளங்களாகும். அவற்றுக்குள் ளே முதலில் ஒரு தெளிவான நீர் உண்டாகி, வர வரத் தடித்துச் சீழாகும். கடைசியாகக் கொப்புளங்கள் நசுங்கி, காய்ந்து அவற் றின் மேற்றோல் விழுந்துவிடும். தேகமுழுதும் என்றைக்கும் அழியாத வடுக்கள் ஏற்படும்.

அம்மையினால் மரணம் சம்பவிப்பதுண்டு. பொதுவாகத் தேக த்தின் அங்கங்கள் அவலக்ஷணமாகி விடும். அம்மை நோய்க்குத் தப்பவேண்டுமானால் அம்மை குத்திக்கொள்ளுதல் நன்று. சிற்சில சமயங்களில் அம்மை வைக்கப்பட்டவர்களுக்கும் வைசூரி வருவ



துண்டு. ஆனால் அவ்வளவு பலமாக இருக்காது. ஒருதரம் அம்மை கண்டவர்களுக்கு மறுதரம் அம்மைவருவதில்லை என்கிற இயற்கை விதியை அநுசரித்து அம்மைகுத்தும் வழக்கம் ஏற்பட்டது.

பசுக்களுக்கு உண்டாகும் வைசூரிக்கு கோவைசூரி என்று பெயர். கோவைசூரியிலுள்ள பசுங்கன்றுகளின் மடிமீது காணப்படும் கொப்புளங்களிலிருந்து பாலையெடுத்து, அதனுள் ஒருகூரான கத்தியின் நுனியைத் தோய்த்து, புஜத்தின்சதையை இலேசாக மூன்று இடங்களில் கீறி, அப்பாலை இரத்தத்தோடு கலந்து விடுதல் அம்மைகுத்துதல் எனப்படும். அந்த இடங்களில் கொப்புளங்கள் உண்டாகி, சீழ்பிடித்து, நசுங்கிக் கடைசியாக உலர்ந்து போம். கோவைசூரிப் பாலைச் சின்னஞ்சிறிய குழாய்களில் பத்திரமாக வைத்திருப்பார்கள். ஒருதரம் அம்மைவைத்தால், அதன் சக்துவம் எட்டு அல்லது பத்து வருஷம் நீடித்திருக்கும் அதற்குப் பிறகு மறுபடியும் அம்மை குத்துதல்வேண்டும்.

எந்தவயதில் அம்மைவைத்தல் சுகம்? ஊரில் அம்மைநோயின் உபத்திரவமிருந்தால், குழந்தை பிறந்த சில தினங்களுக்குள், அம்மைவைத்தல் சுகமாம். எங்ஙனமாயினும், முதல் மாதம் முடிகிறவரையில் காத்திருத்தல் நன்று. மேலும் அம்மைநோயால் ஏழு, எட்டுநாள்கள் கஷ்டம். அம்மைகுத்திக் கொள்வதால் இரண்டு மூன்று நாள்கள்தானே தொந்தரவு. ஆகையால் அம்மை வைத்துக் கொள்ளுதல் சிலாக்கியமல்லவா? அம்மை குத்துதல் கண்டிப்பாக நடைபெறும் ஜெர்மனிதேசத்திலே அம்மைநோய் கிடையாது. நாம் இதுவரையில் பெரிய அம்மையைப்பற்றிப் பேசினோம். அம்மையில் அநேக விதங்கள் உள: சின்னம்மை, கொத்துமல்லி அம்மை, தொண்டைமாரி என்பன. இவற்றுள் பெரிய அம்மை கொடியது.

கக்குவான்:—இது சாதாரணமாக 10வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் ஒருநோய். மூச்சுவிடாமல் இருமல் உண்டாகும். சிலசமயம் வாந்தியும் ஏற்படுவதுண்டு. முதலில் இலேசான ஜ்வரத்தோடு கொஞ்சம் சளி பிடிக்கும். பிறகு இருமல்; இது வர வர மூச்சு திணறிப்போகும் வண்ணம் இடைவிடாமல் நடைபெறும். அதனால் குழந்தையின் முகம் வெளுத்து, முழிகள் பிதுங்கி, கண்கள் உப்பி அவற்றில் நீர்வடியும். கடைசியாக

வாந்தி எடுக்கும். தெளிவான கோழை வந்துவிழும். இக்கோ
ழைமூலமாக நோய்பரவும். இந்நோயுள்ள குழந்தைகளைத் தனி
ப்படுத்துதல் அவசியமாம்.

அஸ்திஜ்வரம்:—இதுவும் ஒரு கொடியநோய். இது குடிநீரால்
பரவுகின்றது. சுத்தமான குடிநீரை உபயோகிக்கும் பட்டணங்
களில் இந்நோய் கிடையாது. தேகத்தில் ஆயாசம், கைகால்களில்
வலி, தலைபளுவு, தூக்கமயக்கம், மூக்கில் இரத்தம் வருதல், உக்
கிரமானகாய்ச்சல், இருமல், இளகலான மலப்போக்கு இவையெல்
லாம் அஸ்திஜ்வரத்தின் குறிகளாம். கண்களுக்குப் புலப்படாதன
வாகிய அதி ஸூக்ஷ்மமான நோய்க்கருக்களால் மலம்நிறைந்திரு
க்கும். அக்கருக்கள் குடிநீரால் தேகத்துள் சென்று நோய் உண்
டாக்குவதால், குடிநீரை வடிகட்டி, கொதிக்கவைத்து உபயோ
கித்தல் நன்றாம்.

## 29ம் பாடம்.

### தொத்துநோய்கள் (தொடர்ச்சி).

க்ஷயரோகம், காசம்:—இந்நோயின் குறிகளாவன: தேகம்
வர வர மெலிந்து போதல், பலஹீனம், பசியின்மை, தூக்கமின்
மை, இரவில் வேர்வை, அநேகமாய் வயிற்றுப்போக்கு, பலமான
இருமல், கடைசியில் ஒருவிதமான கோழை வந்துவிழும். இக்
கோழை ஒரு தெளிவான நீரில் மிதக்கும்.

காசநோய் ஒரு ஸூக்ஷ்மமான கிருமியினால் உண்டாகி, உமிழ்
நீர், மலம் இவற்றால் பரவுகின்றது. அது நுரை ஈரல்களையும்,
மூளையையும் பற்றும். காசநோயாளிகளின் உமிழ்நீரும், மலமும்
உலர்ந்துபோனால், அவை தூளாகிவிடும். வீடு, தெருமுதலியவற்
றைப் பெருக்கிச் சுத்தம்பண்ணும்போது அத்தூள்கள் இடம்
மாறும். அவற்றைச் சுவாசிப்பவர்களுக்கு நோய் வந்துவிடும்.
ஆகையால் நோயாளிகளின் உமிழ்நீரையும், மலத்தையும் அப்போ
தைக்கப்போது எடுத்துவிட்டு, சுத்தம் பண்ணுதல் அவசியமாம்.
அவர்களின் உடைகளைக் கொதிநீரில் துவைத்தல்வேண்டும். அவர்
கள் எச்சில் உமிழ்தற்கு, நன்றாக மூடக்கூடிய பிரத்தியேகமான
காளாஞ்சி ஒன்றிருக்கவேண்டும். அக்காளாஞ்சிக்குள்ளே நோ
ய்க்கருவை ஒழிக்கும் மருந்தை வைத்திருத்தல் அவசியம்; காளா
ஞ்சியைத் தினந்தோறும் கொதிக்கவைத்த நீரால் சுத்தம்பண்ணு



தல் நன்று. க்ஷயரோகி வெளியே செல்லும்போது அவன் எச்
சிலை உமிழ்தற்கென்று ஒரு கைக்குட்டை வைத்திருக்கவேண்டும்.
தெருவில் துப்புதல்கூடாது.

மேலேசொன்ன விஷயங்களைக் கவனிக்காமல் அலக்ஷியமாக
இருக்கும் நோயாளிகள் தமக்குத்தாமே கெடுதிதேடிக் கொள்கிற
துந் தவிர, தம்மைச்சுற்றி இருப்பவர்களுக்கும் கெடுதிசெய்கிறார்
கள். அவர்கள், தாம் ஒருநோய் ஊற்றாக இருந்துகொண்டு, தம்
மைச் சுற்றி இருப்பவர்களுக்குச் சதாநோயைக் கொடுத்துக்
கொண்டிருக்கிறார்கள்.

க்ஷயரோகியின் எச்சிலை, முற்றம், தோட்டம், எரு முதலிய
வற்றின்மீது கொட்டுதல் சுகத்துக்கு ஹானியாம். ஏனென்றால்
அவ்விடங்களில் கோழிகள் வசிப்பதால், அவற்றுக்குக் காசநோய்
வருதல்கூடும். அக்கோழிகளைச் சாப்பிடுகிறவர்களுக்கும் அந்
நோய் உண்டாகும்; தோட்டத்தில் பசுமாடு மேய்வதுண்டு; பசு
வும் அந்நோயின் கிருமிகளை உட்கொள்ளும்படி நேரிடும். அப்பசு
வின்பாலை நன்றாகக் காய்ச்சாமல் உபயோகிக்கிறவர்கள் க்ஷயரோக
த்தால் பீடிக்கப்படுவார்கள்.

பொதுவாகக் குடியினாலும், நல்ல வெளிச்சமும், நல்லகாற்று
மில்லாத வீடுகளில் வசிப்பதாலும் க்ஷயரோகம் சுலபமாக உண்
டாகும். மதுபானங்களை விலக்குதல், தகுதியான உணவு, சுக
மானவீடு, இரவும் பகலும் காற்றை வீட்டுக்குள் நன்றாக நடமாடு
ம்படிசெய்தல், சூரியகிரணங்களை வீட்டுக்குள் அதிகநேரம் படும்
படி செய்தல், மூக்கினால் சுவாசித்தல் இவையெல்லாம் மிகவும்
சுலபமாகக் கையாடக்கூடிய சுகவிதிகளாம்.

விஷபேதி:—வாந்தியும், மலப்போக்கும் உண்டாவதால்
இதை வாந்திபேதி என்றும் சொல்வதுண்டு. மலம் நாற்றமில்
லாத தெளிவான நீராகப்போகும். அதில் அரிசியைப்போல
வெண்மையான வஸ்துக்கள் அநேகம் நிறைந்திருக்கும். கண்களு
க்குப் புலப்படாத மிகவும் ஸூக்ஷ்மமான (,) இந்த வடிவுள்ள
கிருமிகளால் விஷபேதி உண்டாகிறதென்று "கோக்" என்ற சாஸ்
திரியார் கண்டு பிடித்திருக்கிறார். அக்கிருமிகள் குடிநீராலும்,
உணவுப்பொருள்களாலும் பரவுகின்றன. ஆகையால் விஷபேதி
காலத்தில் குடிநீரைக் கொதிக்கவைத்தும், உணவுப்பொருள்களை

நன்றாக வேகவைத்தும் உபயோகப்படுத்தினால், கொஞ்சங்கூட ஆபத்தில்லை. மேலும் அக்கருக்கள் ஜீரணக்கருவியாகிய குடலுக்குள்சென்று பேதியை உண்டாக்கும்; அதனால் வாயால் மூச்சு வாங்காமல் மூக்கினால் சுவாசித்தல் சுகமாம்.

இருண்ட, நெருக்கமான, வெளிச்சமில்லாத வீடுகளில் வசித்தல், பொதுவாக பலஹீனம், குடி, மிகவும் குறைச்சலான அல்லது மிதமிஞ்சிய உணவு, நன்றாகக்களைத்துப் போகும்வரையில் வேலைசெய்தல், சீதளம் இவையெல்லாம் விஷபேதிக்கு அநுகூலமாம். நாகரீகமான தேசங்களிலே விஷபேதி கிடையாது. இந்தியாவிலே விஷபேதி சாதாரணமாகி விட்டது. அதனை ஒழிப்பதற்குப் பிரயத்தனப்படுதல் படித்தவர்களின் கடமையாகும்; நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அங்கே கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதுந் தவிர, முக்கியமாகத் தொத்துநோய்களைப் பற்றியும், அவற்றைப் பரிகரிக்கும் விஷயத்தைப் பற்றியும், பொதுவாக சுகவிதிகளைப்பற்றியும் அடிக்கடி போதித்தல் வேண்டும்.

நாய்வெறி:—வெறிபிடித்த நாயின் கடியால் இவ்வியாதி மனிதனுக்கு உண்டாகும். வெறிநாயின் லக்ஷணங்களாவன: கலக்கம், மயக்கம், சோககம், தாகம். வெறிநாய் மெத்த ஆவலோடு ஜலத்தைக் குடிக்கும்; தன்பல்லில் அகப்பட்ட எல்லாவற்றையும் (ஆட்டுமயிர், மரம், வைக்கோல், பாய்) கிழித்து விழுங்கிவிடும்; கம்மலான சப்தத்தோடு குலைக்கும்; அஃது எல்லாமிருகங்களையும், முக்கியமாக வேறு நாய்களையுங் கடிக்கும்; வெகுதூரம் ஓடும்; அதனால் களைத்துப்போய், நாவைத் தொங்கவிட்டுக்கொண்டும், உதடுகளினின்று நுரையைக் கக்கிக்கொண்டும் காணப்படும்.

வெறி நாய்க்கடி மிகவும் கொடியது. ஆகையால் நாம் அறியாத நாய்களின் அருகேசெல்லுதல் கூடாது. அவற்றைத் தழுவுதல் கூடாது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? நம்மிடத்தில் ஒருநாயிருந்தால், அதனை ஜாக்கிரதையாகப்பாதுகாக்கவேண்டும். அதனுடைய குணத்தின் மாறுபாடுகளைக் கவனித்தல் வேண்டும். கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும், மிருக வைத்தியரைக் கொண்டு சோதனைசெய்தல் நன்று.



வெறிநாய்க் கடிக்குச் சிகிச்சை:—

1. காயத்தின் மேல்புறத்தை இறுகக் கட்டவேண்டும்; உதட்டில் புண்ணில்லாதிருந்தால், காயத்தில் வாயைவைத்து நன்றாக உறிஞ்சுதல் சுகமாம்.

2. பழுக்கக்காய்ந்த இரும்புகொண்டு காயத்தைச் சுடுதல் வேண்டும்.

3. "பஸ்தேர்" வைத்தியசாலையில் வெறிநாய்க் கடிக்காக அம்மை குத்திக்கொள்ளுதல் அவசியமாம். இக்காரியத்திற்கு வேண்டிய பால் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ வெறிபிடித்த முயல்களின் முள்ளந்தண்டுக் கொடியாலானது. தென்னிந்தியாவிலே, நீலகிரியில் வெறிநாய்க் கடிக்காக 'பஸ்தேர்' வைத்தியசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

## 30ம் பாடம்.

தொத்துநோய்க் காலங்களிலும், அவற்றுக்குப் பிற்காலங்களிலும் நாம் அநுசரிக்கவேண்டிய விதிகள்:—

1. நோயாளியைத் தனிப்படுத்துதல் அவசியமாம். அவனுக்குச் சிகிச்சை செய்கிறவர்கள் மாத்திரம் அவனுடைய அறைக்குள் செல்லலாம்.

2. நோயாளிக்குச் சிகிச்சை செய்கிறவர்கள், அறையைவிட்டு வெளியே வந்தவுடனே தம்முடைய உடையைமாற்றுதல் வேண்டும்; தவிர முகத்தையும், கைகளையும், நோய்க்கிருமிகளை ஒழிக்கும் மருந்து கரைத்த ஜலத்தைக்கொண்டு கழுவுதல் வேண்டும். அம்மருந்துகளாவன துருசி, சுண்ணாம்புக்குழம்பு, ரஸக்கற்பூரம் முதலியன.

3. தொத்துதோஷத்தைப் பரிகரித்தல்:— நோயாளியின் உடைமுதலிய அவன் உபயோகித்த வஸ்துக்களை வெந்நீரிலும், மேலேசொன்ன மருந்து ஜலத்திலும் துவைத்தல் வேண்டும்; நோயாளியின் அறையில் கந்தகம் கொளுத்துதல் மிகவும் நன்று.

4. வைசூரியுள்ள பிள்ளைகளை 40 நாட்கள் வரையில் பள்ளிக்கூடத்தில் சேர்த்தல் கூடாது. சின்னம்மையானால் 16 நாட்களும், கக்குவானுக்கு 15 நாட்களும் சென்று, பிள்ளைகளை சவுக்

காரத்தினுல் நன்ருகக் கழுவி, நன்ருகச் சுத்தம்பண்ண உடைகளோடு மறுபடியும் சேர்க்கலாம்.

நோயாளிக்குச் சுகந்தரக்கூடிய விஷயங்கள்:—

1. நோயாளியைச் சுற்றி சுத்தமான காற்றே நடமாடுதல் வேண்டும். ஆகையால் அவன் ஒரு இருண்ட அறையில், கூட்டத்தின் மத்தியில் இருத்தல்கூடாது.

2. நோயாளி மிகவும் சுத்தமாக இருத்தல்வேண்டும். எந்த நோயானுலும், முகத்தையும், கைகளையும் வெந்நீர்கொண்டு கழுவலாம். வியாதி ஆரம்பித்த உடனே தலைமயிரைச் சடைபோடுதல் நன்று. போர்வை, தலையணை, உறை, உடை முதலியவற்றை அடிக்கடி மாற்றுதல்வேண்டும்.

3. நோயாளி அமரிக்கையாக, முக்கியமாகக் கவலையில்லாதிருத்தல் வேண்டும். அவனுடைய அறையில் கூட்டம்கூடாது; சந்தடி கூடாது. நோயாளி அதிகமாகப் பேசுதல் கெடுதியாம்.

4. தக்கசமயத்தில் வைத்தியரை வரவழைத்தலும், அவருடைய விதிகளைக் கவனமாகக்கேட்டு, அவற்றை அநுசரித்தலும், தேகத்துள் செலுத்தவேண்டிய மருந்தை வெளி உபயோகத்திற்கும், வெளி உபயோகத்திற்கான மருந்தை உள்உபயோகத்திற்குமாக எதிரிடையாய், அவசரத்தாலாவது, அறிவீனத்தாலாவது செய்யாமல் மருந்துகள் விஷயமாக ஜாக்கிரதையாக இருத்தலும், அவற்றைக் குறிப்பிட்ட நேரங்களில் நோயாளிக்குக் கொடுத்தலும் அத்தியாவசியமென்பது சொல்லாமலே விளங்கும்.

புரொபெசர் · சுப்பிரமணிய அய்யர்,

புதுச்சேரி.

## Principles of Teaching Space and Number Work.

## கணித சாஸ்திரத்தின் முக்கிய தத்துவங்கள்.

சகோதரர்களே! சகோதரிகளே! இன்று உங்களுக்கு இடத்தையும் எண்ணையும் சார்ந்த (கணக்குப்) பாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதில் அநுசரிக்கவேண்டிய முக்கிய வழிகளைப்பற்றிச் சொல்லத் துணிகின்றேன்.



இப்பாடமானது எலிமெண்டரீ பாடசாலைகளில் போதிக்கத் தக்கதே யென்றும், இது சிறு குழந்தைகளின் மனோ தத்துவங்களுக்கு இசைந்ததே யென்றும், முன்னர் இப்பத்திரிகையில் வெளிவந்த, "எலிமெண்டரீ பாடசாலைகளில் போதிக்க வேற்பட்ட பாடப்பட்டியும், மனோதர்ம சாஸ்திரத்தின் ஆதாரமும்," என்ற வியாசத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றன.

இடத்தையும் எண்ணையும் சார்ந்த பாடத்திற்குக் கணித சாஸ்திரம் என்று பெயர்.

உலகத்தில் நாம் சாதாரணமாய்ப் பார்க்கக்கூடிய பொருள்களெல்லாம் சிற்சில குணங்களை யுடைத்தாயிருக்கின்றன. அவைகளிற் சாதாரணமானவை உருவம், நிறம், வாசனை, பரிசம் (உஷ்ணம்,குளிர்ச்சி, மிருது, கடினம்,வழுவழுப்பு, கறகறப்பு), சப்தம், உறையுந்தன்மை, திரவத்தன்மை, உடைபடுந்தன்மை, தகடாகுந்தன்மை, கம்பிக்குந்தன்மை,கரையுந்தன்மை, உருகுந்தன்மை, சங்கியை, பரிமாணம் முதலியனவாம்.

மேற்கூறிய சாதாரண குணங்களிற் சிற்சிலவற்றைப் பற்றிச் சில சில சாஸ்திரங்கள் கூறும். உதாரணமாக: வஸ்துக்களின் உருவம், நிறம் முதலியவைகளைப்பற்றிச் சித்திரமு (சிற்ப சாஸ்திரப் பகுதியு)ம், வாஸனை, பரிசம், கரையுந்தன்மை முதலியவைகளைப் பற்றிப் பதார்த்த விஞ்ஞான சாஸ்திரமும்(Physics and Chemistry), சங்கியை, பரிமாணம் முதலியவைகளைக் பற்றிக் கணித சாஸ்திரமும் நன்கு கூறுகின்றன.

ஆதலால் கணித சாஸ்திர மென்பது எண்ணிக்கை அல்லது சங்கியை, பரிமாணம் அல்லது இடம் இவற்றைப் பற்றிப் போதிக்குஞ் சாஸதிரமா மென் றேற்படுகின்றது.

### எண்ணிக்கை அல்லது சங்கியை-

எண்ணிக்கை யென்பது எத்தனை யென்னுங் கேள்விக்கு விடையாய், ஒரு பசு, இரண்டு புத்தகங்கள், பதினைந்து ரூபாய் என்னும் ஞானத்திற்குக் காரணமாயிருக்கின்றது. இஞ்ஞானம் கண்ணுல் அறியத்தக்கது. கட்புலனற்ற குருடர்கள் பொருள்களைத் தொட்டுப் பரிச உணர்ச்சியால் அறிவது வழக்கம்.

## இடம் அல்லது பரிமாணம்.

இங்குச் சிலர் பரிமாணத்திற்கும் இடத்திற்கும் என்ன சம்பந்த முண்டென்று சந்தேகிக்கலாம். இட மென்பது பொருள்களின் இருப்பிற்கு ஆதாரமாயிருப்பது. இதற்கு சூனியஸ்தலமென்றும் (Vacuum) வெளியென்றும் ஆகாச மென்றும் பற்பல பெயர்கள் வழங்கப்படும். இவ்வெளியில் தான் பத்துத்திசைகளும் கற்பிக்கப்பட் டிருக்கின்றன. இது பொருள்களின் இருப்பிற்கு ஆகாரமா யிருத்தலால் அப்பொருள் களின் எல்லாப் பக்கங்களிலும் இது சம்பந்தப்பட்டிருக்கின்றது. பொருள்கள் தங்கள் இருப்பிற்கு எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடத்தை ஆகாயத்தில் (சூனியஸ்தலத்தில்) ஆக்கிர மித்துக் கொள்ளுகின்றன என்றால் 2 அடி அகலம் 4 அடி நீளம் 3 அடி உயரமுள்ள ஒரு பெட்டியின் இருப்பிற்கு 2 அடி அகலம் 4 அடி நீளம் 3 அடி உயரமுள்ள இடம்வேண்டும். இப்பரிமாண த்திற்குக் குறைந்த இடம் அப்பெட்டியின் இருப்பிற்குப் போது மான தாகாது. பரிமாணத்திற்குச் சரியளவுள்ள விடமே போது மானதா மாகையினால் இடமும் பரிமாணமும் ஒன்றேபோல் விவக ரிக்கத்தகும். ஆதலால் அவ்விரண்டிற்கும் பேதமேயின்று. பரிமா ணமென்பது எவ்வளவென்னும் ஞானத்திற்குக் காரணமாயிருப் பது. எவ்வளவென்னுங் கேள்விக்கு விடை அகலம், நிகளம், அல் லது உயரம் பருமன் முதலிய அளவுகளாம் நெடுமை, குறுமை பருமை, நுண்மை முதலியசொற்கள் பரிமாணத்தைக் குறிக்கும் சொற்களாம்.

ஒரு பொருளின் பரிமாணத்தைச் சிறப்பு வகையாக அறிவ தற்குச் சில சாதனங்கள் அத்தியாவசியமாகவேண்டற்பாலனவாம். அவை அடிக்கோல், கஜக்கோல் முதலியனவும், ஆழாக்கு, படி, மரக்கால் முதலியனவும், மற்றுஞ் சிலவுமாம். இத்தகைய சாதன ங்களின்றேல், ஒரு பொருளின் பரிமாணம் ஐயமற அறியப்பட்ட தாகாது. எங்ஙனமெனின் "நாய் பூனைபைக்காட்டிலும் பெரிது ஆட்டைவிடச் சிறிது" என்று ஒருவன் சொன்னால்நாயின் பரிமா ணம் ஸ்தூலமாக அறியப்படுமே யன்றி இவ்வளவினது தானெ ன்று குறிப்பிட்டுக் கூறப்பட்ட தாகாது. பரிமாணத்தைக் குறிப் பிட்டுக் கூறவேண்டுமாயின் அளவு கோல்களைச் சாதனங்களாகக் கொள்ளல் வேண்டும். கொள்ளின் அதன் (நாயின்) உயரம், நீளம்



கால்களின் நீளம் முதலியவைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். ஆத லால் கெஜம், அடி, அங்குலம் முதலிய நீட்டலளவைகளும், படி, ஆழாக்கு முதலிய முகத்தல் அளவைகளும் அத்தியாவசியமெனப் பெறப்பட்டன.

நிற்க, சாதாரணமாகக் கணிதசாஸ்திரத்தில் துலாமானம், அஃதாவது நிறுத்தலளவை உபயோகப்பட்டு வருகின்றது. ஆனால் கணிதசாஸ்திரமோ சங்கியை, பரிமாணங்களை மாத்திரம் குறிக்கு மென்று முன் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் முற்கூறிய இல க்ஷணம் பொருந்தாதென்று சிலர் சந்தேகிக்கலாம். ஆயினும் அவர்களுக்குப் பரிமாணத்திற்கும் எடைக்கும் உள்ள சம்பந்தம் இங்ஙனமென்று தெரிந்திருப்பின் சந்தேகிக்க இடந்தராது. ஆத லால் அதை இங்குச்சற்று விளக்குவோம். சாதாரணமாய்ப் பரி மாணத்தையுடைய பொருள்களுக் கெல்லாம் எடையுண்டு. இது நியமம். நம்மால் பார்க்கப்படும் பொருள்களெல்லாம் எடையை யுடைத்தாயிருப்பதால்என்பரிமாணத்தையுடையபொருள்களுக்கு எடையிருப்பது அவசியம்? எடையென்பது பூமிக்கும் வஸ்து க்களுக்கும் இயல்பாயுள்ள ஆகர்ஷண சக்தியைத்தடுத்தலினால் உணரப்பட்ட உணர்ச்சியேயாம். ஒவ்வொரு பொருளும் பல ஆயிரக்கணக்கான பரமாணுக்களின் கூட்டத்தாலாயதென்று நம் மில் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றோம். இவ்வணுக்கள், அப்பொருளானது சூனியஸ்தலத்தில் எவ்வளவு இடத்தை ஆக்கிர மித்திருக்கின்றதோ அவ்விடத்திற்குத் தக்கபடி அடர்த்தியாக வோ விசாலமாகவோ சேர்ந்திருக்கும். 1 அங்குல நீளம், 1 அங் குல அகலம், 1 அங்குல உயரமுள்ள ஒரு வெள்ளிக்கட்டியைக் காய்ச்சினால் அக்கட்டியில் சேர்ந்த அணுக்கள் தம்மில் ஒவ்வொ ன்றும் ஒவ்வொன்றைவிட்டு விலகுவதினால் முன்னிருந்த பரிமா ணத்தைக் காட்டிலும் அதிக பரிமாணமுடையதாகின்றது. ஆனால் எடையோ மாறுபடுவதில்லை. இதுபோலவே ஒரு ஆழாக்கு காய்ச்சி உருக்கினநெய், தோயுமானால், அது முன்னிருந்த பரி மாணத்தைக் காட்டிலும் குறைந்த பரிமாணமுடையதாகின்றது. எடை ஒன்றேயாம். ஆதலால் அணுக்களின் கூட்டத்தின் நெரு க்க விசாலத்திற்கேற்பப் பரிமாணம் பேதப்படுகின்றது; என்றால் பரிமாணத்திற்குக்காரணம் அணுக்களின் கூட்டமேயாம். எடை க்கும் அணுக்களின் கூட்டமே காரணமாமென்று முன் கூறப்பட்

டதினால் இவ்விரண்டிற்கும் (பரிமாணம் எடை) அணுக்களின் மூலமாய்ப் பரஸ்பர சம்பந்தமுண்டு. ஆதலால், பரிமாணத்தில் எடையையும் சேர்த்துக்கொள்வது உசிதம். வெளிப்படையாகக் கூறின் கணிதசாஸ்திரம் பொருள்களின் சங்கியை, பரிமாணம், எடைகளைக் குறிக்குமென்றேற்படுகிறது. இங்ஙனமே கால அளவும் கணிதத்தில் உபயோகப்படுகின்றதே, காலம் எதில் அடங்குமெனின் ? சங்கியையிலடங்கும். காலமென் பது பூமியின் சலனத்தால் ஏற்படுவதாம். பூமியின் சலனத் தால் பகலிரவுகள் உண்டாகின்றன. பருவகாலங்களுமுண்டா கின்றன. சூரியோதயம் முதல் சூரியாஸ்தமனம் வரையில் பக லென்றும், சூரியாஸ்தமன முதல் சூரியோதயம் வரையில் இர வென்றும் நாட்கள் பகுக்கப்பட்டிருக்கின்றன. பகல், 12 மணிகள் அல்லது 30 நாழிகையாகவும், இரவும் அப்படியே 12 மணிகள் அல்லது 30நாழிகையாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. மணிகள் நிமிஷங்களாகவும்,நிமிஷங்கள் செக்கண்டுகளாகவும் பற்பலவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தனக்குத்தானே பூமியின் ஒருசுற்று 1நாள்; பலசுற்றுகள் பலநாள்; ஒன்றிற்குக்குறைந்த சுற்று மணி; அதற்கும் குறைந்தசுற்று நிமிஷம். ஆதலால் எப்படித்தனிப் பொருள்கள் இரண்டுசேர்ந்தது ஜதையோ, ஒன்றிற்குக் குறைந் தது பின்னமோ, அப்படியே பலநாட்கள் சேர்ந்தது வாரம், மாதம், வருடமென்றும், குறைந்தது மணி நிமிஷங்களென்றுங் கூறப்படும். ஆதலால்தான் கால அளவு எண்ணிக்கையில் அட ங்குமென்று முன் கூறப்பட்டது.

இந்தக் கணித சாஸ்திரமானது ஒரு மனிதனுடைய வாழ் நாளில் அவன் எவ்வித அந்தஸ்துள்ளவனாக விருப்பினும் அவ னுக்கு அத்தியாவசியமாக வேண்டற்பாலது. ஆதலாற்றான் "எண்ணென்பவேனை யெழுத்தென்பவிவ்விரண்டுங்கண்ணென்ப வாழு முயிர்க்கு.", "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று திருவள்ளுவநாயனாராலும் ஒளவைப்பிராட்டியாராலும் கணித சாஸ்திரம் கண்ணுக்கொப்பாகச் சொல்லப்பட்டது.

உபயோகங்கள். (1). உலக விவகாரங்களில் (அஃதாவது கொடுக்கல், வாங்கல், வியாபார முதலிய வைகளில் தீவிரமாயும் திருத்தமாயும் கணக் கிட உபயோகப்படுகின்றது.



(2) தர்க்கித்தல், தீர்மானித்தல், ஒரு விஷ யத்தை அதிகநேரம் சிந்தித்தல் முதலிய மனோதர்மங்களை விர்த்திசெய்கின்றது.

ஆகையினால் இப்பாடம் பிள்ளைகளுக்கு அவசியம் போதிக் கத் தக்கதே—

இப்பாடத்தைப் போதிக்கையில் உபாத்தியாயர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன:—

(1). திருத்தம் (Accuracy)

(2) விரைவு (Rapidity)

(3) தைரியம் (Brevity)

(4) சுத்தம் (Neatness)

(5) சரியானமுறைகள் (Right methods)

போதனுமுறையில் அநுசரிக்கவேண்டிய பத்ததி:—

(1) கற்பிக்கவேண்டிய கணக்கிற்கு அநுஸரணையான சிறு கணக்கைக் கொடுத்து விளக்குதல்,(2) தெளிவாய் விளக்கின சிறு கணக்கு எந்த முறையாகப் போடப்பட்டதோ அந்த முறையை அநுஷ்டித்து வேறொரு கணக்கைக் கரும்பலகையில் உபாத்தி யாயர் போடுதல் (Model sum).

(3) இந்தமாதிரி கணக்கின் மூலமாய்ப் பொதுவிதியைப் பிள்ளைகளிடத்திருந்து வருவித்தல். (Eliciting-the method)

(4) அப்பியாசங்கள்.

N. B. Short & simple methods to be applied.

சுருக்கமானதும் சரியானதுமான முறைகளை அநுஸரிக்க வேண்டியது அவசியம்.

## கணிதம்.

- எண் (சங்கியை)
  - தனிப்பொருள்கள்
    - Units, tens, hundreds &c.—
    - Pair, Dozen, Gross, Score.—
    - Quire, Ream, Bale &c—
  - நாணயங்கள்
    - Indian—
    - English—
  - காலம்
    - Indian—
    - English—
- இடம் (பரிமாணம்)
  - நீட்டலளவை (Lines)
  - சதுர அளவை (areas)
  - கன அளவை (solids)
  - நிறுத்தல் அளவை weight
  - முகத்தலளவை (measures)

Application of Nnmbers to

(1) Loose objects—
(2) Coins—
(3) Time
(4) Lines
(5) Areas
(6) Cubes or Solids
(7) Measures
(8) Weight

## குசேலோபாக்கியானம்.

(முன்தொடர்ச்சி.)

பின்னர்ப் பலவாகிய ரத்ன ஆலத்திகள்சுற்றி வேகமாக அவர்க்கிருபக்கங்களினுமுற்றி, வணங்கிநின்றனர். பிறகு குசேலர் பல்வகை வாத்தியங்கள்முழங்க மலைபோலப்பருத்து,சூரியனொளிம்மூழங்குமாறு விளங்குகின்ற தமது மாளிகையினுள்ளே சென்றனர். சென்றவர் வெள்ளிக்குவியலும்,சுவர்ணக்குவியலும்,மாணிக்



கக்குவியலும், முத்துக்குவியலும், வச்சிரக்குவியலும், மாகதபச்சைக்குவியலும், பவளக்குவியலும்,கோமேதகக்குவியலும், இரத்தினவகையினுள்மற்றுள்ளவற்றின் குவியல்களும் அங்குள்ள அறை (வீடு) தோறுமிருத்தலையும், பொன்னுபாணப் பெட்டியும், இரத்தினுபரணப் பெட்டியும், வெள்ளியாபரணப் பெட்டியும், விசேஷ ஆபரணப்பெட்டியும் தமது இருபத்தேழு புத்திரர்களுக்கும் அணிந்துகொள்ளுதற்பொருட்டுத் தனித்தனி வகுத்து வைக்கப்பட்டுள்ள ஆபரணப்பெட்டியும், பற்பல நிறங்களையுடைய பட்டாடைப்பெட்டியும் அளவற்றனவாக விருத்தலையும், பொற்கலத்தை யெதிரேவைத்து, அதில்சோறிட்டுப் பால்வார்த்து வேண்டி வேண்டி யூட்ட,முகத்தைத்திருப்பிக் கொண்டு வேண்டாமென்று கூறுகின்றவரும், அப் பாற்சோற்றைத் திரும்பிப்பாராது செல்லுகின்றவரும், சிறிது பசியுமில்லையென்று கூறுகின்றவருமாகத் தம்முடைய புத்திரர்கள் செருக்கடைந்திருத்தலையும், தம்மக்கள் நெற்றியிற் சுட்டியும், மார்பிற் பஞ்சாயுதங்களும், காத்திற் கடகமும், காதிற்பொற்குண்டலமும், இடையில்பொன்னரை நாணும், காலிற்சிலம்பும் விளங்கக் கலகலகல வென்று அழகாக நின்று விளையாடுதலையும், சமையலறைமுற்றும் அரிசி, பருப்பு, திருத்தாத கறிகளும், திருத்திய கறிகளும், பொன், வெள்ளி, செம்பு, ஈயமுதலியவற்றாற் செய்தபாத்திரங்களும், சமையற்குவேண்டிய மற்றைய பொருள்களும் நிறைந்திருத்தலையும் பார்த்துக்கொண்டு வரும்போது, அவரது மனைவியார் விரைவாக எதிரேவந்து, எண்ணெயிட்டுக் கொண்டு ஸ்நானஞ்செய்தருள வேண்டுமென்று கூறினார். அவ்வம்மையார் அவ்வாறு கூறியவளவில் ஒரு பணிப்பெண் ஓராசனத்தை யங்குக்கொண்டுவந்து வைத்தாள். அதன் மீது குசேலர் உட்கார்ந்தனர்; மற்றொரு பணிப்பெண் எண்ணெய்ப் பொற்கிண்ணத்தைவைத்தனள்; இன்னொரு பணிப்பெண் விசிறியெடுத்து விசிறினாள்; வேறொரு பணிப்பெண் அப்பொற்கிண்ணத்திருந்த பரிமளத்தைலத்தைத் தன்காத்தில்வார்த்து, அவர் சிரசின்மீது விட்டுத்தேய்த்து, பின்னர் அவருடம்பின்மீது அத்தைலத்தைப் பூசினாள். குசேலர் இவ்வாறு எண்ணெயிட்டுக்கொண்டபின் நீர் நிரம்பிய பாத்திரங்கள் நிறைந்துள்ள திருமஞ்சனசாலை (குளிக்கும் அறை)க்குள்சென்று, அங்குள்ள பணிப்பெண்கள் கூடிவந்து, சீக்காயிட்டுத்தேய்த்து,

எண்ணெயைப் போக்கிப் பதமாகக் காய்ச்சிய நீரை இத
மாக வார்க்க முழுகி, ஈரம்போக்கும் ஆடையால் உடம்பைத்
துடைத்துக்கொண்டு, வேறுடைதரித்து, தமக்குரிய நித்திய கர்
மங்களைச் செய்து, போஜனசாலைக்குள் புகுந்து இந்திர (கிழக்கு)
திசையை நோக்கியிருந்து தம்மக்களோடும், அந்தணர் பல
ரோடும் தம்மனைவி சுசீலையருகே யிருந்துபசரிக்கப் பல்வகைக்
கறிகளோடு அன்னத்தை யன்பாக வுண்டெழுந்து, நீர்கொண்டு
வாய்பூசி, தம்முடனிருந்துண்ட அந்தணர்களுடன் சந்தனம் பூசி
பூமாலை தரித்து, தாம்பூலந்தரித்திருந்தனர்.

இப்பெரியார் தம்முடன் வந்த அரசர் முதலாயினோரனைவர்
க்கும் நல்விருந்து செய்து, சந்தனம் புஷ்பம் தாம்பூலங்கள்தந்து
உபசரித்து, தத்தம் ஊர்க்குப்போமாறு அவர்களை அனுப்பிவிட்டு,
சிலநாள் தமக்குக் கண்ணபிரானருளால் கிடைத்த பெரும்போகத்
தை யனுபவித்து வந்தனர். இவ்வாறனுபவித்து வரும்போது ஒரு
நாள் தமது அந்தப்புரத்தை யடைந்து அங்குத் தம்மக்களையும்
மனைவியையும் அவ்விடத்தினின்றும் அனுப்பிவிட்டு, தாமிருந்த
அறையின் கதவிரண்டையுமூடித்தாழ்ப்பாளிட்டுத் தனித்திருந்து,
இம்மைக்கண் பொருளைத்தேடுதல், காப்பாற்றுதல், இழத்தலென்
னும் மூவகைத் துன்பங்களுண்டாகா நிற்கின்றன; மறுமையிலோ
பாவ கருமத்தால் நரகத்துன்ப முண்டாகின்றது; அந்தோ! சீச்சீ!
இப்பொருளை நல்லறிவுடையோர் மறந்தாயினும் எமக்குவேண்டு
மென நினைப்பாரோ? நல்லறிவுடையோர் நல்லூழ்வினையினால் தம
க்குப் பெருஞ்செல்வங் கிடைத்தாலும், காலமுண்டாக ஈசனைந்
தியானித்து வாழவேண்டுமென்னுங் கருத்துடையவராய், பொரு
ளாலுண்டாகும் துன்பத்தை யாராய்ந்தறிந்து நிச்சயித்து, பொ
ருள் முழுவதையும் துறந்து விடுவர். அதனால் அவர்கள் பொரு
ளாலுண்டாம் துன்பமொழிதலேயன்றித் தமது மனம்வாக்குக்
காயமென்னும் திரிகரணமும் தாம் குறித்த இலக்கில் தவறாது
நிற்கப் பேரின்பமாக வாழ்வர்; மெய், வாய், கண், மூக்குச் செவி
யென்னும் இந்திரியங்களைந்தனையும் அவற்றிற்குரிய பரிசமுதலிய
விஷயங்களைந்திலும் செல்லாவாறு தடுத்தல் எவர்க்கும் நல்ல
தொழிலாம்; அப்பரிசமுதலிய விஷயங்களை யனுபவித்தற் பொ
ருட்டுத்தேடிய பொருளனைத்தையும் விடுதல் அதனினும் மேலான
தொழிலாம்; விட்ட எப்பொருள்களுள்ளும் விருப்பிற்குரியன



வாகச் சிலவேனுமிருக்குமாயின், மனம் அப்பொருள் நோக்கிப்
பகிர்முகப்படுவதாம்; மனம் அவ்வாறு பகிர்முகப்படு மாயின்,
அது அளவில்லாத பிறவியின் சம்பந்தத்தையுண்டாக்குவதாம்;
துன்புறச்செய்கின்ற பிறவியின் சம்பந்தத்தை யொழிக்க நிச்ச
யித்துள்ள பெரியோர்க்குப் பத்துவகையிந்திரிய வுணர்வோடும்,
ஐவகை வாயுக்களோடும், காமவினைகளோடுங் கூடிய மன
மென்னும் அருவுடம்பும், ஸ்தூலசரீரமென்னும் உருவுடம்பும்
மிகையாமாயின், வேறுசம்பந்தமுள்ள பொருள்கள் எவையாம்?
தானல்லாத உடம்பையானென்றும் தன்னோடியையில்லாத பொ
ருளை எனதென்றுங் கருதிப் பெரிதும் வருந்துவதற்குரிய அபி
மானத்திற்குக் காரணம் அஞ்ஞானமேயாம். அவ்வஞ்ஞானத்தை
யொழிப்பவனே முத்தியென்னும் முடிவில்லாத இன்பத்தை
யடைவன்; பற்றுவதற் குரியனவாகாத யானெனதென்னு மிரு
வகைப்பற்றினையும் இறுகப்பற்றி விடாதவரைத் துன்பங்கள்யா
மிவர்தம்மைப் பற்றுதல்கூடாதென் றன்புசெய்து தாட்சணி
யஞ்செய்யுமோ? பற்றுக்களெல்லாவற்றையும் முழுவதும் விட்ட
பெரியோரே வீட்டினையடைதற் குரியராவர்; பற்றுக்களையுடைய
வரோ எப்போதும் நிலையில்லாத பொருள்கள் பலவற்றையுங்
கண்டுதுன்புறுவர்; கடவுளும், இருவினைப்பயனும், மறுபிறப்பும்,
முயற்கொம்பு, ஆமை மயிர், ஆகாயத் தாமரைகளைப்போலப் பொய்
யாமென்று கூறும் மயக்கநூல்களை நல்லுணர்வற்றுப் படித்து
வருவது அஞ்ஞானமும் விபரீதமும் மிகுவதற்குக் காரணமாம்.
அஞ்ஞானமுதலியன எப்போதும் பிறப்பையே தருவனவாம்;
ஆதலால் அவ்வஞ்ஞானமுதலியன ஒழிதல் இன்புறுவதற்குக்
காரணமாம்; கடவுளும் இருவினைப்பயனும்மறுபிறப்பும் உளவோ
இலவோவென்னும் ஐயத்தினின்று நீங்கினோர்க்கு ஞானானுபவ அப்
பியாசம் வாய்ப்பதாம்; அதனால் மெய்யுணர்தல் வருவதாம்; அது
மிகுந்தோறும் அந்தஞானானுபவ அப்பியாசமும் பொருளின்
பங்களைத்தேடுதலென்னும் உலகாசார ஞானமும் ஒழிவனவாம்;
பிறப்பிற்கு முதற்காரணமாய அஞ்ஞான முழுவதுங் கெடுமாறு
செம்பொருளென்னுந் திருமாலையொற்றுமையுற இடைவிடாது
பாவித்தலே சமாதியாமென்று அறிஞர் கூறுகின்றனர்; இச் சமா
தியை மரணமடையுமளவும் செய்துவருகின்றவர்க்குமரணகாலத்
தில் வேறுசிந்தனையுண்டாவதில்லையாம். வேறு சிந்தனையுண்டா

மாயின், அச்சிந்தனைக்கேற்றவாறு பிறப்புண்டாவதாம்; அநாதியாய அவிச்சை, அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரம், அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னும் அவா, அதுபற்றி அப்பொருட்கட்செல்லும் ஆசை, அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபம் என்னும் குற்றங்களைந்துங் கெடுமாயின், பிறவிப்பிணியொழியுமென்று அறிவுநூல்கூறுகின்றது; எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் எழுவகைப்பிறப்பினையும் உண்டாக்கும் வித்து அவாவேயாம். அப்பிறப்புக்களின் துன்பங்களை யறிந்தவன் இனிப் பிறவாமையை விரும்புவதன்றி வேறெதனையேனும் விரும்புவானோ? விரும்பானன்றோ? அந்தப் பிறவாமையானது ஒருபொருளையும் விரும்பாமையை விரும்புவானுக்குத் தானே விரைவாக வுண்டாவதாம்;

அந்தோ! அந்தோ! ஒரு பொருளையும் விரும்பாமையையொக்கும் பெருஞ்செல்வம் காணப்படுகின்றஇவ்வுலகின் கணில்லை; இனி யவ்வளவேயன்றிக் கேட்கப்படுகின்ற துறக்கத்தின் கண்ணுமில்லை யென்று அறிஞர் கூறுவாராயின், அப்பெருஞ்செல்வத்தை அன்போடு பெறுகின்றவனுக்கு உவமையாம் பொருளுமுண்டோ? பிறவியற்றவனென்று சொல்லப்படுவான் அப்பிறப்பிற்கு நேரே காரணமாகிய ஆசையைத் துறந்தவனேயாவன்; ஒருவன் அவ்வாசை யொன்றனையும் ஒழிக்காது வைத்து (காணி மனை முதலிய) பிற காரணங்களை யெல்லாம் துறந்தானாயினும் அவையுண்டாக்கும் சில துன்பங்கள் நீங்கினனாவதல்லது அவன் போலப்பிறவியற்றவனாவனோ? தோற்றமுடையன வெல்லாம் நிலைபெறுவதில்லையென்றுணர்தல், புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய உடம்பின்கண்ணும் உளதாகிய அபிமானத்தை அவற்றினது நிலையாமையை நோக்கிவிடுதல் பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபின்றி யுள்ளவாறுணர்தல் என்னும் மோட்சசாதனங்களெல்லாவற்றையும் பெற்று அவற்றால் மோட்சமடைதற்குரியவனாயிருக்கின்றவனை மறவிவழியாற் பையநுழைந்து மீண்டும் பிறப்பின்கண்ணே வீழ்த்திக் கெடுக்கவல்லது அவாவாம். ஆதலால் அவ்வவாவிற்கு நடுங்கி அதனையஞ்சிக் காப்பதே அறிவுடையாரது தொழிலாம். ஆதலால் யாம் இல்வாழ்க்கைக்கணிருந்து முத்தியைப்பெற நிச்சயிப்பது ஒருவன் மலையைப்பிடுங்கிக் கடலிலிட்டு அதனைப் புணையாகக்கொண்டு



கரையேறுவது போலாம். இல்வாழ்க்கையில் பெருஞ் செல்வத்தோடிருப்பவன் கடவுளைத் தியானஞ்செய்யச் சிறிதெண்ணுவானாயின், தன்னைக்காண வருவாரைத் தானெதிர்கொண்டு சென்றழைத்துத் தழுவவும், வினயமாகவும் விநோதமாகவும் பேசவும், அவர்கள் விரும்பியதைக் கொடுக்கவும் அவனுக்குக் காலம் கழிவதாம்; தியானஞ்செய்ய வேண்டுமென் றெண்ணிய வெண்ணமோ அழிந்துபோவதாம். சிலர் பெருஞ்செல்வ முடையாரிடத்து ஒருபொருளையும் பெறுதலிலராயினும், இவர் அப்பிரபுவின் சிநேகரெனூரார் சொல்வதற்காக அவரைச் சூழ்ந்து திரிகின்றனர்; சிலர் எப்போதாயினும் அவர்நட்பால் ஒருபயனுண்டாகுமென்று கருதி, மூடியுள்ள நெய்க்குடத்தை எறும்புகள் சூழ்ந்து திரிவது போல அவரைச் சூழ்ந்துதிரிகின்றனர்; உலகத்தார் பெருஞ்செல்வமுடையாரை நோக்கிப் பொறுமையுடையவரே! புகழுடையவரே! நிறையுடையவரே! நீதியுடையவரே! சன்மார்க்க முடையவரே! என்றுகூறி அவர்தம்மைச் சூழ்ந்துதிரிகின்றனர். பொறுமை, புகழ், நிறை, நீதி, சன்மார்க்கம் என்பனவற்றுள் ஒன்றுமில்லாத அவர்கள் அவற்றைக்கேட்டுப் பலர் நமக்கமைந்திருப்பனவற்றையெல்லாம் கூறுகின்றனரென்றுகருதி மகிழ்கின்றனர்; பெருஞ்செல்வத்தால் களித்திருக்கும்போது தெய்வசிந்தனை ஒழிகின்றது; அதனால் அறநெறியிலொழுகுதல் ஒழிகின்றது; அதனால் பாவம் ஒளிநீங்க இருள்வருவதுபோல வருகின்றது; அதனால் நரகங்கள் பலவற்றையடைந்து கொடுந்துன்பங்களை யடைவது மிகுதியாகின்றது; அக்கொடுந் துன்பங்களை யனுபவிப்பவர் எவரோ? அவற்றை நினைத்தாலும் மனம் வெந்து புழுங்குகின்றது. இத்துன்பங்களுக்குக் காரணம் செல்வமேயாமென் றிவ்வாறு ஆலோசித்து இந்தவருத்த மொழியுமாறு எம்பிரானைத் துதிப்பேமென்று நிச்சயித்து,

செய்யா மொழியென்னும் வேதத்தைத் திருடிக்கொண்டு கடல்புகுந் தொளித்த சோமுகாசுரனை மச்சாவதாரமெடுத்துக் கொன்று அதனை யுலகில் பரவச்செய்து உயிர்களைக் காத்த பகவானே! நமஸ்காரம்; திருத்துழாய் மாலையணிந்த தேவனே! நமஸ்காரம்;

தேவாசுரர்கள் மந்தரமலையை மத்தாகநாட்டிச் சந்திரனைத் தூணாகவமைத்து வாசுகியைக் கடைகயிறாகப் பூட்டித் திருப்

பாற்கடலைக் கடைந்தபோது, அம்மந்தரமலை அழுந்திப்போகாவாறு கூர்மாவதாரமெடுத்து, அதனைச் சுமந்தசோதியே! நமஸ்காரம்; பூமியைப் பாயலாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு பாதாளலோகத்திற் சென்றொளித்த ஹிரண்யாட்சனைக் கொல்லுதற் பொருட்டு வராகாவதாரமெடுத்த வள்ளலே! நமஸ்காரம்; மலர்மகள் வாழும் மார்புடையவரதனே! நமஸ்காரம்; தன்தமையனாகிய ஹிரணியாட்சனைக் கொன்றமைக்காகப் பழிவாங்கக்கருதி, தேவர் முதலிய யாவரையும் வருத்தி, தன்பெயரையே கூறிவணங்கிவருமாறுசெய்த இரண்யகசிபனைக் கொல்லுதற்பொருட்டு, நரசிங்கரூபமாகித் திருத்தூணிற்றோன்றியவனே! நமஸ்காரம்; காசிபனுக்கும் அதிதிக்கும் புத்திரனாய்த்தோன்றி, மாவலிசக்ரவர்த்தியினிடத்துச்சென்று மூன்றடிமண்ணை யாசித்துப்பெற்று, திரிவிக்கிரம அவதாரமெடுத்து மண்ணையும் விண்ணையும் உன்திருவடிகளால் அளவுசெய்து முடிவில் அவனைப் பாதலத்திலழுந்திக் காத்தவாமனனே! நமஸ்காரம்.

நீதிநெறி தவறிய வேந்தர்களைக் கொல்லுதற்பொருட்டுச் சமதக்கினிக்கும் ரேணுகைக்கும் புத்திரனாய்ப்பிறந்த பரசுராமனே! நமஸ்காரம்.

அயோத்தியர்க்கிறையாய தசரதற்கும் கௌசலைக்கும் தனயனாய்த்தோன்றி, தாடகையைக்கொன்று, விசுவாமித்திரர்வேள்வியைக்காத்து, கல்லைப்பெண்ணாக்கி, மிதிலைக்குச்சென்று, சிவதனுசையொடித்து, சீதையைமணம்புரிந்து, திரும்பிச் சிற்றன்னையின்சொல்லைச் சிரசாகவகித்து, தேவி சீதையும், தம்பி இலட்சுமணனும் பின்தொடர்ந்துவர, அயோத்தியைக்கடந்து சென்று, குகனென்னும் வேடனை நட்புக்கொண்டு பெருந்தவமுனிவர் வாசஞ்செய்யும் பன்னசாலைகள் பலவற்றைக்கடந்து சென்று, சித்திரகூடஞ்சேர்ந்திருந்து, தன்னை அயோத்திக் கழைத்துக்கொண்டுபோகவந்த தம்பி பரதனுக்கு இன்சொற்கூறிப் பாதுகைதந்து, அவனை அயோத்திக்குப்போகச்செய்து, தண்டகாரண்யம் சார்ந்து, சண்டைக்குவந்த விராதனைச்சாய்த்து, சரபங்க முனிவர்க்குத் தரிசனந்தந்து, அகஸ்தியராசிரமத்தையடைந்து, அவரருள்பெற்று, பஞ்சவடியைச்சேர்ந்து, சடாயுவைக்கண்டு நேசித்து, இராவணனிளையவளாய சூர்ப்பனகி செய்த கலகம்பற்றிச் சண்டைக்குவந்த கரன்முதலாயினரைக் காலனூர்க்கனுப்பி, மாய



மானாய்வந்த மாரீசனைக்கொன்று, சீதையை யெடுத்துச்சென்ற இராவணனோடு பொருது, அவன் வாளால் சிறையறுப்புண்டு சோர்ந்துகிடந்த சடாயுவைக்கண்டு தளர்வுற்று, அச்சடாயுவிற்கு ஈமக்கடனைச்செய்து முடித்து, கவந்தனுயிரைக் காலனுக்குத்தந்து, சவரிசெய்த விருந்துண்டு, மதங்கமலையையடைந்து, சுக்கிரீவனோடு நட்புச்செய்து, மராமரங்களைத் தொளைத்து, வாலியை வதைத்து, அனுமார் வாயிலாக அறிவதையறிந்து, கடலில் கணைவிட்டு, அதனை வழிவிடச்செய்து, இலங்கையிற்சென்று, போர்முகத்தில் இராவணனை அவன் தம்பி கும்பகர்ணன் புத்திரன் இந்திரஜித்து முதலாயினரோடுகொன்று, விபீஷணனை யிலங்கைக்கிறைவனாக்கி, சீதையை மீட்டு அயோத்தியையடைந்த சீராமனே! நமஸ்காரம்; வசுதேவர்க்கும் தேவகிக்கும் மகனாய் (வயிற்றிடை)த் தோன்றி, சிறிதுமாதம் உரோகிணியின் வயிற்றின்கணிருந்துபிறந்து, பிரலம்பன் முதலாயினோரைக்கொன்றுயிர்களைக்காத்த பலராமனே! நமஸ்காரம். (வரும்)

## நீதிநூல் விளக்கம்.

### 1-வது தெய்வமுண்டெனல்.

### (The omnipresence of God)

கோபுரமொன்றைப் பார்ப்போமானா லதை உண்டுபண்ணினவன் ஒருவனுண்டென்பது போலவும், பொன் அல்லது இரத்னங்களினாற் செய்த ஆபரணமொன்றைப் பார்ப்போமானால் அதைச்செய்த தட்டான் (பொற்கொல்லன்) ஒருவன் உண்டென்பதுபோலவும், நாம் தரித்துக்கொள்ளும் ஆடையை (வஸ்திரத்தை) நோக்குவோமானால் அதை நெய்தவனொருவனுண்டென்பதுபோலவும், இவ்வண்டபிண்ட சராசரங்களனைத்தையு நோக்கும்போது, அவற்றை யுண்டுபண்ணினவ னொருவனுண்டென்பது பிரத்யக்ஷமாய் விளங்கும்.

சித்திரம் ஒருவனெழுதாது தானே எழுதிக்கொள்ளாது; பாவையானது ஒருவனாட்டாது தானே ஆடிக்கொள்ளாது; வீணையானது ஒருவன்மீட்டாது தானே சப்தமிடாது என்பனவற்றைப்போல மேற்கூறிய சராசரங்களனைத்திலும் நடக்கும் வைபவங்

கள் அனைத்தும் ஒருவனிருந்து நடத்துகின்றானென்பது உள்
ளங்கை நெல்லிக்கனிபோன்று விளங்குகின்றதல்லவா!

வாசனை வீசுமிடத்துப் புஷ்பமுண்டென்றும், புகையுண்
டாகுமிடத்துத் தீயுண்டென்றும்,மரங்கள் அசையுமிடத்துக் காற்
றுண்டென்றுஞ் சொல்வதுபோலக் கடவுள் உண்டென்னு முண்
மைக்கு உலகமே சாக்ஷியாகும்.

ஆகாயம், காற்று, உயிர் முதலியவற்றை நாம் கண்ணால்
பார்க்க முடியாது போனாலும், அவை உண்டென்று சொல்லு
வதுபோலத் தெய்வம் உண்டென்பது மெய்யே. மேகமில்லாமல்
மழையும், வயலில்லாமல் விளைவும், சூரியனில்லாமல் ஒளியும்,
ராஜனில்லாமற் காவலும், தாயில்லாமற் பிள்ளையும் ஜனனமும்,
விதையில்லாமல் விருக்ஷங்களும் அதன்பலங்களும், விளக்கில்லா
மற் சாந்தியும் அனலும், முத்து-எள் முதலியவைகளின்றி எண்
ணெய்யுமில்லை யென்பதுபோலத் தெய்வமொன்றில்லாம லுலக
மில்லை.

மூக்கன்றி, வாய் கண் காதுகள் வாசனையை அறியமாட்டா.
வாயன்றி ஏனையபுலன்கள் பேசவறியா. குருடன் சூரியனது
ஒளியைப்பார்க்க முடியாது. செவிடன் சமுத்திர ஓசையைக்
கேட்க முடியாது. பித்தர்களோ, தம்பார்வையிலேயே வருந் தீங்
கை யறியமாட்டார்கள் என்பனவற்றைப் போல, ஞானக்கண்
படையாதவன் தெய்வத்தைப்பார்க்கவாவது அவனுளனென்ற
தோற்றத்தைத்தெரியவாவது கூடாததேயாம்.அன்றியும், தெய்வ
முண்டென்னும் உண்மைக்குதாரணமாக இங்கு ஒரு கதை வரை
வாம்.

தேவராசனை வென்றபாண்டியன் ஆளு நாடானது (பாண்
டியதேசம்) தேவநாட்டையும் வென்றதென்று சொல்லும்படியாக
இருந்த அப்பாண்டிய நாட்டிலே,ஆகாயத்தை யளாவிய மாட கூட
மும் மலைக்கூட்டங்களுஞ் சேனையாகவும், மேகமண்டலத்தைச்
சார்ந்துபறக்கும் கொடிக் கூட்டங்கள் சிறகுகளாகவும், கோபுர
மாகியஇராஜன்பெரிய துவஜத்தம்பநாட்டியிந்திரன்மேற்செல்லும்
படைவீடுபோல கொள்கை யென்றோர் திருநகருளது. புலிக்
கொடியைத்தாங்கிய சோழராஜனும் பறவைகளைப் படுக்கும் வில்
லைக் கொடியாகத்தாங்கிய சேரராஜனும தோல்வியடையும்படி
யாக மீனக்கொடியைத் தாங்கிப் பாண்டியன் அரசிருக்கும் அத்



தாணிமண்டபமுள்ள அந்நகரத்தில் பிராமணகுலத்தில் சுந்தரம்
போன்ற குசலனென்றொருவனிருந்தான். அவன் ஆறு அங்க
மும், ஐந்து வேள்வியும் நான்கு ஒழுக்கமும், மூன்றக்கினியும்
நடத்தி, இம்மை மறுமைப்பயன்கருதி, ஒருமையோடு கூடிய
மனத்தையுள்ள அந்தணகுலத்தாருடனே மணக்குமங்கத்தை
யுடைய மானினது பாலையூட்ட யானைக்கன்றுகள் உண்டுகளிப்பது
போல சாஸ்திரங்களைப்படித்து மகிழ்வானாப் மேலான நூல்களை
ஓதி, பலபுராணங்களை வாசித்து, பல செடிகளிலும்போய் மெல்
லிய தழைகளையே மேயும் ஆட்டைப்போன்று எவரிடத்தினும்
போய் அத்திரிமனுவாசிட்டமென்னும் பலநூல்களைக்கற்று அகங்
காரமேலீட்டால் சமயநூல் பிதற்றித் திரிவானாயினான். உட்சமய
மாறும் பொருந்திய நூல்களைக்கற்றிருந்தும் சன்மார்க்கத்தை
விட்டுவிட்டுத் துன்மார்க்கப் பிரவேசத்திலுழன்று வைதிகத்தைத்
தழுவாது, புறச்சமயநூலுணர்ந்து வேறுமதங்களை அறிந்து
தானறிந்த பாவசம்பந்தமான விஷயங்களைப் பிறர்க்குரைத்து அவர்
களுக்கு ஒரு குருவைப்போல் நடித்தும் விளங்கி நின்றான்.

அந்தோ! நூல்பலபயின்றானாயினும் அதனுண்மையான
பொருளை (மெய்ப்பொருளை)த் தேறாது (உணராது) அநேக
பதார்த்தங்க ணிறைந்த கடைவீதியில் போயும் கரும்பை விட்டு
வேம்பைவாங்கும் சிறுவனைப்போல விளங்கினான். தன்குலப்பெரு
மையுங்கைவிட்டு நூல்கற்றோர் சொல்லும் நெறியில் நில்லாதவ
னாகி, பிறர்க்குரைத்துந் தானறியாத பேதையாகி, வேதவாக்கியங்
களான மெய்ப்பொருளெல்லாம் பொய்ப்பொரு ளென்றும், என்
பார்வைக்குக் கீழ்த்திசை மேற்றிசையாய்த் தெரிவதால் வேறு
திசையில்லை, திக்குப்பாலகரில்லை, பழவினைகளொன்று மில்லை,
செய்யும்வினையெல்லாம்அப்போதைக் கப்போது அழிதலால் பாவ
புண்ணியமில்லை, கறந்தபாலானது முலையினிடத்தும், கடைந்த
வெண்ணெயானது மோரினிடத்தும்,கழிந்த கனியானது மரத்தி
னிடத்தும் திரும்பப் புகாவாறுபோ லிறந்தவர் பிறப்பதில்லை;
அவர்களினுயிர்கள் கீழேயாயினும்மேலாயினும் பறந்திடக்காண்ப
தில்லை; ஆதலால் சிறந்தோர் சொர்க்கமுமில்லை சீழியும் நர
கமுமில்லை, தெய்வமுமில்லை, ரூபம்வேறில்லாததால் ஜாதி வித்தி
யாசமில்லை எனச் சாதித்தான்.

இம்மாதிரியாகத் தான்பார்த்த முயலுக்குக் கால் மூன்றே
என்பதுபோன்று சாதிக்கத்தலைப்பட்ட குசலன் தத்தமக்கியைந்த

போகத்தை யனுபவித்தலே முத்தி என்றும்அவ்வாறின்றித் துறவு பூண்பதுதான் நரகமென்றும் அவரவர் சரீரத்திற்கேற்ப உண்பதும் உடுப்பதுமே தருமமென்றும் பசியினால் சரீரம் வருந்தும்படி தவமியற்றுதலே பாவமென்றும் பலவாறு தான்கொண்ட மூடக் கொள்கையையே புகன்று நன்மார்க்கத்திலுள்ளவரை மயக்கிஅந்தகாரத்தில் புகுத்துதல்கருமமாகக்கொண்டான். அரிய பெரிய தருமநீதி உணர்ந்த பிராமணர்களை ஏமாற்றிக் காமநூலைப் பயிலும்படி செய்து காலை மாலை ஸ்நாநஞ்செய்து திருநீறணிவாரை இளவெந்நீரில் ஸ்நாநஞ்செய்யச்செய்து பரிமளமிகுந்த திரவியங்களைப் பூசச்செய்துஓமத்தின்மீதுஇடும்படியான நெய்யை உணவின்மீது இடும்படிசெய்து, வேதனை என்று மொழியும் விரதத்தை ஆண்பெண் இருதிறத்தாருக்கு மூட்டி, காமத்தை விளைவிக்கச்செய்து தான்விழுவதான கொடிய நாகக்குழியில் விழும்படி செய்துவந்தான்.

இம்மட்டோடு விட்டுவிட்டானா அந்தோ சிவாலய விஷ்ணு ஆலயத்திற்குத் தெரிசனஞ்செய்யச் செல்வாரையும், கங்கை கோதாவரி காளிந்தி காவேரி தாம்பிரபரணி முதலிய நதிகளுக்குத் தீர்த்தமாடச் செல்வாரையும் தடுத்து வருவதான ஓர் உத்யோகத்தையுங் கைக்கொண்டான். இதுவன்றித் திருக்குற்றாலம் செல்வாரை அந்தியிலும் சந்தியிலும் அரியபெரிய விசேடதினங்களிலும் தப்பாதே நியமமாகக்கொண்டு தனது அறிவென்னும் பாலை வெடிப்பு நிலத்திற் கொட்டினான்.

பாவனையினாலாவது செய்கையினாலாவது பக்தியினாலாவது பயத்தினாலாவது விளையாட்டினாலாவது திருக்குற்றால ஸ்தலத்தைத் திக்குநோக்கித்தெரிசித்தால் மோக்ஷத்திற்குப்பாத்திரனாவனென்று படித்திருந்தும் தான் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் குசலன் உணரவில்லை. ஆகாயத்திற்றோன்றுஞ் சூரியனை யார்கைக்குள்ளே மறைக்கவல்லார்?ஒருவருமில்லையென்பதுபோலத் தன்பதியிலுள்ளாரையன்றி அடுத்த நகரத்தாரை மேல்கண்டவாறு செய்ய முடியுமோ என்றாலும் இவன் புறமத நூலால் யாவரையும் வென்றுதிரிந்தானாகையால் அவ்வூர்க்கெல்லாம் இவன் ஒருவன் மட்டும் உயிர்களுக்குத் துன்பமியற்றும் களைபோன்றிருந்தான்.

கச்சணிந்த தனத்தையுடைய மாதர்மயலிற்சிக்கிய மடமையோன் (குசலன்) இவ்வாறிருக்க மேகங்கள் தவழப்பட்ட சோ



லைகள் நிறைந்த சோழவள நாட்டில் காவேரியாற்றிற்கு வடதீரத்தில் உலகமெல்லாம் புகழக்கூடிய மேன்மைதங்கிய சைவப் பிராமண குலத்து வல்லாளன் என்னும் பெயரையுடைய ஒருவன் சைவவேதாந்த புராணங்கள் பலவும் ஐயந்திரிபறக்கற்று, மக்கள் மனைவாழ்வு சுற்றம் செல்வமுதலியன சந்தையிற் கூட்டமென உணர்ந்து உலகத்தில் பாவநெறியினால் படர்ந்து வரும் மாயையான இருளை அடக்கும் உண்மையான சிவநெறிவிளக்கத்திற் சிறந்து காலைநேரத்தில்வரும் ஞானசூரியன் போல விளங்கினான்.

இவன் சரீரத்தாலும் வாக்கினாலும் மனத்தினாலும் செய்யப்படுவதான செயல்களுக்கு மேலான அரியபெரிய செயல்களை அறிந்து சிறந்த புண்ணியநதிகளெல்லாம் சென்று முழ்கிப் பரமனை வணங்குதல் வாழ்த்துதல் முதலிய தியானங்களைத் தன்மதியினாலுணர்ந்து, கங்கை முதலியபலதீர்த்தங்களாடிச் சிவதலங்கள் யாவும் சென்று தெரிசித்துவருவதற்கு அதுவரை தன்னுடைய சரீரம் இருப்பது நிச்சயமில்லையென (சரீரநிலையாமையை) உணர்ந்து உலகத்திலுள்ள தீர்த்தங்களெல்லாம் தரும்பலன் திரிகூடமலையிற் பொங்கி வருகிற சித்திராநதி தருமென்பதையும், எவ்வகையாலும் உயர்ந்தது திருக்குற்றால ஸ்தலமென்பதையும் புராணங்களால் அறிந்து ஆங்குச்செல்வதற்குப் புண்ணியமான விரதம் பூண்டு, காவேரி நதியிலாடி ஆங்குள்ள கடவுளைப்பணிந்து சேது சென்று மூழ்கி திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணியரைத் தெரிசித்து (மேலே கூறிய குசலன் வசிக்கும்) கொள்கை நகரெய்தி அங்ஙோர் அந்தணவீதியிற் புகுந்தான்.

இவ்வந்தணனின் சைவ வேடத்தைக்கண்ட குசலன் பொருதவனாகி அவ்வேதியனை நோக்கித் திருநீறும் உருத்ராட்சமணியும் அணிந்து பிராமணனென்னுங் கோலம்பூண்டவனே நீ எடுத்த கோலத்தால் பார்க்கத்தக்க நூலினையறிந்திலை போலும் என்றான்.

சிவராமலிங்கம் பிள்ளை.

## பத்மினி.

இந்தியாதேசத்தின் வடமேற்கிலே ஸிந்து நதிக்குக் கிழக்
கே இராஜபுதனமென்னும் ஒரு நாடுளது. வெளி நிலமுளதாயும்
காடு மலை செறிந்துள்ளதாயும் அந்நாடு காணப்படும். இராஜபுத்
திரர் என்று தென்னிந்தியாவில் சொல்லப்படுவோர் ஆதியில் இந்
நாட்டில்தான் குடியிருந்ததாக மதிக்கப்பட்டு வருகின்றனர். இந்
நாட்டில் மோவர்என்னும் மாகாணமிருந்தது. இம்மாகாணம்
சுமார் 800 வருடங்களுக்கு முன்னே அதிக கீர்த்திபெற்றிருந்
தது. எல்லாவித ஐசுவரியத்திலும் இந்த மோவர் மாகாணத்துக்
குச் சமானமான பிறிதொரு ஊர் பரதகண்டத்தில் அக்காலத்தில்
இல்லையெனப் பல தேசசரித்திர ஆராய்ச்சிசெய்த பண்டிதர்கள்
எழுதியிருக்கின்றனர். இந்த மோவர்நாடானது இந்தியாதேசத்
திற்கு ஒரு நகநாயகம்போல் விளங்கிக்கொண்டிருந்தது. சித்தூர்
இதற்குத் தலைநகர. கல்விச்செல்வமும், பொருட்செல்வமும் நாக
ரீகமும், தங்குவதற்குச் சித்தூர் தலைநகர் உறைவிடமாக விருந்தது.
ஐரோப்பியசாதியார் செய்வதை மேன்மையென மதித்து அவர்க
ளைப்போல நடக்கத் தற்காலத்தில் நாம் எவ்வித முயற்சி செய்கி
றோமோ அவ்விதமாகச் சித்தூர் தலைநகரிலுள்ளார் இந்தியா முழு
தும் மதிக்கப்பட்டுவந்தார். சுமார் 800 வருடங்களுக்கு முன்னே
அதாவது சித்தூர்நகரானது மற்றெல்லா நாடுகளுக்கும் வழி காட்
டிக்கொண்டு வந்தது.

சித்தூர்நகரம் இவ்விதப்பிரசித்தி யடைந்திருந்தகாலத்தில்
மஹாராஜா இலக்ஷ்மணசிங் கென்பவன் மோவர் தேசத்துக் கதி
பதியா யிருந்தான். ஆனால் அக்காலத்தில் அவன் இளைஞனாயிருந்
தமையின் அவன் சிற்றப்பனாகிய பீமன்சிங் கென்பவன் இலக்ஷ்
மண சிங்குக்குப் பதிலாக இராஜ்யபரிபாலனஞ் செய்து வந்தான்.
வீரத்திலும், ஆலோசனையிலும் பீமன்சிங்குக்கு ஒப்பாரும் மிக்கா
ருமில்லை. அஞ்சாமையும், கொடுத்தலும், விவேகமும், ஒருகாரிய
ஞ் செய்வதில் ஊக்கமும் ஆகிய இந்நான்கு குணங்களும் அவனி
டத்தில் இயல்பாகப் பொருந்தியிருந்தன. ஆகவே மோவர்நாடா
னது இவனது பரிபாலனத்தில் செழித்தோங்கியதுபோல வெறெ
ப்பொழுதும் அவ்வளவு சீராக ஆளப்படவில்லை. நீர்வளம் நில
வளம் நிரம்பப்பெற்றதாய் குடிகள் எல்லாரும் தரித்திரம் க்ஷாமம்
பீடைநோய் முதலிய வொன்றுமில்லாமல் பீமன்சிங்கு காலத்தில்



சுகித்து வாழ்ந்துவந்தனர். பீமன்சிங்விஷயத்தில் குடிகள் அதிக பயபக்தியையும், விசுவாசத்தையும் பொன்மையுங் காட்டிவந்தனர். இவ்வித சுகவாழ்வானது நெடுநாள் நில்லாதெனக் காணப்பட்டது.

இவ்வுலகத்தின்கண்ணே எதுவும் நீடித்திருப்பதில்லை. சுகமும் துக்கமும் மாறிக்கொண்டே வருகின்றன. இது கடவுளுடைய நிபந்தனைபோலக் காண்கிறது. ஆகவே மோவர் நாட்டாரும் தங்கள் சுகவாழ்வை இழக்கக் காலம்வந்து விட்டது. இவ்வித விபத்து இவ்வளவு சீக்கிரம் சம்பவிக்குமென ஒருவரும் கனவிலு மெண்ணவில்லை. முசல்மான்களுக்கு அரசனான அலாவுடின் என்பவன் வடஇந்தியாவைத் தன் கைவசப்படுத்திக்கொண்டு நகரங்களையும் பட்டணங்களையும் கொள்ளையடித்துப் படுநாசம் செய்துவந்தான். இதன்றியும் ஆலயங்களையழித்து, வயோதிகர்களையும் குழந்தைகளையும் கொலைசெய்வது முதலிய அடாத காரியங்களைச் செய்துகொண்டே ஒவ்வொரு ஊராகப்பிடித்துக் கொண்டு மோவர் தேசத்தைக்கிட்டினான். மோவர் தேசமானது மேன்மைவாய்ந்த அரணுளதாகக் கண்டான். வெளிநிலமும் மலையுங்காடும் செறிந்ததா யிருந்ததுடன் உயரமும் அகலமும் திண்மையுமுள்ளதான சுவர்களால் காக்கப்பட்டிருந்ததைக் கண்டான். மேலும் இத்தேசமானது தன்னுள்ளிருப்போர்க்கு வேண்டும் பொருளெல்லா முடையதாயும் சௌகரிய பராக்கிரமமுடைய சுத்த வீரரையுமுடையதாயும் காணப்பட்டமையின் அதனது அரண் தகர்க்கப்படக்கூடியதாய் அலாவுடினுக்குத் தோன்றவில்லை. சேனைப்பெருமையால்தன்னைச் சூழ்ந்துவளைத்த பகைவரைத் தன்னகத்திலுள்ள வீரர்களால் வெல்லச்செய்யக் கூடியதாயும் போர் தொடங்கியபோதே பகைவர் நாசமுறச் செய்யவல்லவீரருள்ளார் என்னும் பெருமையை யுடைத்தாயிருந்தது. அம்மோவர்நாடு இந்நாட்டின் அரணையும், இராஜபுத்திரர்களின் வீராவேசப் பராக்ரமத்தையும், அரசனிடம் குடிகளிருந்தவிசுவாசத்தையும் கண்டு அலாவுடின் என்னும் முசல்மான் மன்னன், மோவர் நாட்டிற்குட் பிரவேசிக்கத் தைரியமற்றவனாகி, ஒருகால் தான் இதுவரையடைந்திருக்கும் புகழுக்குப்பங்கவருமெனச் சிந்தாகுலனாய், அபாரவல்லமையுள்ள தனது அளவிறந்தசேனையை வேறொருபக்கம் திருப்பி நடத்த எண்ணங்கொண்டான். அத்தருணத்திலே பீமன்சிங்கின் மனைவி. மிகரூபலாவண்ய முடையவளென்றும், அவளைப்

போன்ற அழகுடைய ஸ்திரீ இப்பூமண்டலமுற்றிலும்ஓடோடிப் பார்த்தாலும் கிடைக்கமாட்டாளென்றும் இவ்வாறு அவளுடைய அழகைப்பற்றிக் கேள்விப்பட்டான். காமத்துக்கும் பேராசைக் கும் அலாவுடின் அடிமைப்பட்டவனுகையால் மேவர் தேசத்தி ற்குள் பிரவேசிக்ககூடாதென்னும் எண்ணத்தைமாற்றி அங்கே யே தங்கிக் கூடாரத்தை நாட்டினான்.

மேவர்நாட்டின் இராஜகாரியத்தைப் பார்த்துவந்த பீமன் சிங்கென்பவனது மனைவியாகிய பத்மினி இராணியையடைய அலாவுடின்முதலில் இரகசியமாய் அனேகமுயற்சிகள் செய்தான். தூதர்களை நகரத்திற்குட் செலவிடுத்துத் துர்நடக்கையையுடைய சில ஸ்திரீகளுக்கு லஞ்சங்கொடுத்துப் பத்மினி இராணியினிடத் தில் தன் கருத்தைத் தெரிவிக்கும்படி கூடியமட்டும் சாகசம் செய்து பார்த்தான். பத்மினி இராணியார் இத்தன்மையரென அலாவுடின் அறிந்திலன். அவள் அதிக மனத்தூய்மையுடைய வள். "கற்புறு சிந்தைமாதர் கணவரையன்றி வேறு, பிற்புறத் தவரை நாடா" ராகலின் இவனது அரசச்செருக்கும் பராக்கிர மும் ஆற்றலும் அம்மாதினிடத்தில் பயனிலவாயின. இவ்வாறு இவன் பிரயத்னம் வீண்போகவே தனது மகத்தான சேனையுடன் மேவர்தேசத்தின்மேல் படையெடுத்துச்சென்று சித்தூர் என் னும் தலைநகரை முற்றுகைசெய்தான். அஃதாவது தன்சேனை யால் அந்நகரைச் சூழ்ந்துகொண்டான் இராஜபுத்திரர் இவனை இலேசாகவிட்டனரா? அவர்கள் சிங்கக்குட்டிகளாயிற்றே. தேங் காய்க்கு மாங்காய் தோற்குமாவென்று வெகுபராக்கிரமத்துடன் அலாவுடினை எதிர்த்து நின்றனர். அவர்களது நகரம் நின்றுள்ள மலை எவ்வளவு உறுதியோ அவ்வளவு பலமாய் நிலைகுலையாது நின்று யுத்தஞ்செய்தனர். இரவென்றுபாராமலும் பகலென்று பாராமலும் யுத்தம் அதிக கொடூரமாய்ப் பலநாள் நடந்துகொண்டு வந்தது. ஜயமாவது அடையவேண்டும் அல்லது இறந்தாவது போகவேண்டுமென்கிற பிடிவாதத்துடனே இராஜபுத்திரர்கள் போர்புரிந்து வந்தார்கள். எவ்வளவு நஷ்டம்வந்தாலும் சரி எப் படியாகிலும் மேவர்நாட்டைக் கீழ்படுத்தவேண்டுமென்கிற திட த்தீர்மானத்துடன் முசல்மான்கள் முற்றுகைப்போட்டுக் கொண் டிருந்தனர்.

(வரும்)

பெ - மாணிக்கசாமி முதலியார், ரங்கோன்.

OFFICE OF THE REGISTRA...
7 - OCT 1...
MA...

# சக்ரவர்த்தினி

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL-11 தொகுதி-11 | September செப்டம்பர் 1915. | No -2. பகுதி-2.

## காவலுனே பாவையர்க் கழகு.

பெண்கள் அரம்பை முதலாயினோர் போல அழகுடையவ ராயிருப்பினும், நிறையால் தம்மைக்காக்குங் காவலில்லாதவரா யிருப்பாராயின், அவர்களுக்கு அவ்வழகால் பயனில்லையாம். வரைவின்மகளிர் நிறையால் தம்மைக் காக்கும் காவலில்லாதவரா யிருத்தலின், அவர் மேன்மையுறுதற்குரியராகா திருக்கின்றனர். பொதுமகளிர் ஆடல் பாடல் அழகென்பனவற்றால் அறிவிலாரை மயக்கி, அவரிடத்துள்ள பொருளை யபகரிக்கின்றனரே யன்றி, தமக்கு நல்லன வற்றை யொருபோதுந் தேடுவதே யில்லை யாம்; கற்புடைய மகளிரோ நிறையால் தம்மைக் காக்குங் காவலை விரும்புவதன்றி, ஆடல் பாடல் அழகென்பனவற்றுள் ஒன்றையும் விரும்புவதில்லையாம். மகளிர்க்கு இன்றியமையாது வேண்டுவது நெஞ்சைக் கற்புநெறியி னிறுத்துதலாம். பெண்களுக்கு நிறை யென்பது இதுவேயாம். இந்நிறையால் தம்மைக்காப்பதில்லாத பெண்கள் எத்தன்மையுடையவராயிருப்பினும், பொதுமகளிரோ டொப்பாவரென்பதற்கு யாதும் ஐயப்பாடில்லையாம்.

நிறையால் தம்மைக் காக்குங்காவலில்லாத பெண்களை அவர் கணவர் சிறையால் காப்பது பயனில்லாத செயலாம். நிறையால் தம்மைக்காக்குங் காவலில்லாத பெண்கள் சிறையால் காப்பதால் நிறையுடையவராவதில்லையாம்.

† "குக்கலைப் பிடித்து நாவிக் கூட்டினி லடைத்து வைத்து, மிக்கதோர் மஞ்சள் பூசி மிகுமணஞ் செய்தா லுந்தான், அக்குலம்

† குக்கல் - நாய்; நாவி - புனுகுபூனை.

வேற தாமோ வதினிடம் புனுகுண் டாமோ, குக்கலே குக்க லல்
லாற் குலந்தனிற் பெரிய தாமோ" என்றுள்ள செய்யுளின்படி
நிறையால் தம்மைக்காக்குங் காவலில்லாத மகளிர் எவ்வளவுசிறைக்
காவலுள்ளவிடத்தும், குலமகளிராவதில்லையாம். அக்காவல்
அவர்களை யொருவாறு அவர் மனம் சென்றவா றொழுகாத
வாறு தடுக்குமே யல்லாமல் கற்புடைய மகளிராக்குவ
தில்லையாம். சிறைக்காவல் மதிற்காவல், வாயிற்காவல்
முதலாயினவாம். சிறையாவது ஒருவன் தானினைத்தவாறே
யொழுகுதலின்றிப் பிறர்நினைத்தவாறே யொழுகுதலாம். நாம்
கதைகளில் பெருங்காவலுடைய அரசர்களது மனைவியர்களும்
வியபிசாரஞ்செய்து, காலக்கிரமத்தில் அதனால் அவமான மடை
ந்து, துன்பமடைந்தனரென்று படித்திருக்கின்றோமன்றோ ? இத
னல் சிறைக்காவல், நிறைக்காவலென்னு மிரண்டனுள், மகளிர்க்கு
நிறைக்காவலில்லாத விடத்துச் சிறைக்காவலால் பயனின்றாமென்
பது நன்கு விளங்கும். குலமகளிடத்துத் தற்காத்தல், தற்கொண்
டான் பேணல், சொற்காத்தலென்பன அத்தியாவசியகமாக விருப்
பனவாம்.

(1) தற்காத்தலாவது குலமகளிர் தம் நெஞ்சைக் கற்பி
னெறியில் நிறுத்தி, அதனல் தம்மைக் காத்து வருதலாம். இது
தான் அவர்க்கு உத்தமமாய காவலாம்; ஏனைய மதிற்காவல்
வாயிற்காவல் முதலாயின அவர்கட்குப் பிறர்வாயிலாகத் தீமை
யுண்டாகாவாறு காக்குங் காவலாம்.

(2) தற்கொண்டான் பேணலாவது அவர்கள் தமது கண
வரைத் தெய்வமாகப் பாவித்து வழிபாடு செய்வதாம்.

(3) சொற்காத்தலாவது அவர்கள் தமது புகழும் தமது
கணவரது புகழும் எவ்வகையாலும் நீங்காவாறு நற்குண நற்
செய்கைகளுடன் ஒழுகிவருதலாம். (சொல்-புகழ்)

இம்மூன்றனுள் முதலது தலைமையுடையதாம்; இஃதின்று
யின், ஏனையவை யிருப்பதே யில்லையாம்.

தற்காத்தல், தற்கொண்டான்பேணல், சொற்காத்தல் என்னு
மூன்றனுள் தற்காத்தலே பெண்களுக் கின்றியமையாத (அத்தியா
வசியகமான) அழகாம்; அதனினும் மேலாய அழகில்லையா
மென்பதுணர்த்தவே, நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டி
யார் "காவலுனே பாவையர்க்கழகு-நிறையால் தம்மைக் காக்கும்



காவலே மகளிர்க்கழகாகும்" என்றருளிச் செய்தனர். ஔவை
யார் காவலுனே பெண்களுக்கழகு என்னுது, காவலுனே பாவை
யர்க்கழகு என்று கூறியதினல், நிறையால் தம்மைக் காக்குங்
காவல் யௌவனப் பெண்களுக்கு அத்தியாவசியகமாமென்
பது நன்கு விளங்கும். பாவையர்-பாவைபோலு மழகுடைய மக
ளிர். பாவை-பதுமை (பொம்மை).

யௌவனப் பெண்களுக்கு, மதிற்காவல், வாயிற்காவல்
முதலிய சிறைக்காவலினும், நெஞ்சைக் கற்பின் நெறியில்
நிறுத்துதலாகிய சிறைக்காவல்அத்தியாவசியகமாகலின், அக்காவல்
செய்து கொள்ளுதற்குரிய முறையைத் தம் பெண்களுக்குத்
தந்தை தாயர் அத்தியாவசியகமாகக் கற்பித்தல் வேண்டும்; இத
னைக் கற்பியாது மற்றையவற்றைக் கற்பிப்பது பயனில்லாத செய
லாம். சீதை, தமயந்தி முதலாயினோர் சரித்திரங்களைப் படித்துப்
பார்ப்போமாயின், அவர்கள் நிறையால் தம்மைக் காக்குங் காவலை
யுடையவரா யிருந்தனரென்பது நன்கு விளங்கும்

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

என்று ஔவையார் மூதுரையில் கூறியிருப்பது நிறைக்காவ
லுடைய மகளிரையும், அஃதில்லாத மகளிரையும் உணர்த்துவ
தாம். நிறைக்காவலுடைய மகளிருள்ள வீட்டில் இல்லாதது
ஒன்றுமில்லையாம்; அஃதில்லாத மகளிருள்ள வீட்டில் உள்ளது
ஒன்றுமில்லையாம்; அவ்வீடு புலிதங்கியிருக்கும் புதர்போல்வதாம்.
நிறைக்காவலில்லாத மகளிர்க் கிலக்கணம்; அவர் தங்கணவர்க்
கடங்காது பேசுதலாம்.

நிறையால் தம்மைக்காக்கும் காவலையுடைய மகளிர்க் கிலக்
கணம் கற்புடைமையாம்; அஃதாவது அவர்கள் அறிவு ஆசாரங்
களைத் தமது கணவர் வாயிலாகவேனும், தாய்தந்தையர் வாயி
லாகவேனும், செவிலி (வளர்த்ததாய்) வாயிலாக வேனும், சான்
றோர்வாயிலாகவேனும் கற்றொழுகு மொழுக்கமாம். இவ்வொழுக்க
முடையவர் நிறைக்காவலை யுடையவராயிருப்பது நிச்சயமாம்.
ஒவ்வொரு தாய் தந்தையரும் தம்பெண்களுக்குக் கற்புடையவ
ராயிருக்கக் கற்பித்துவருவாராயின், காலக்கிரமத்தில் பெண்கள்

யாவரும் நிறைக்காவலுடையவரா யிருந்து, உலோகோபகாரமாய
செயல்களைச் செய்து வருவாரென்பது தவறுததாம்.

முற்காலத்தில் தேவராதனென்றொரு முனிவரிருந்தார்;
அவருடைய மனைவி கற்பிற்கரசி. அம்முனிவர் தமது மனைவியின்
கற்பினையாராய்ந்துணர்தற்பொருட்டு, இராக்கதவடிவங்கொண்டு
வந்து, அவ்விம்மையாரைப் பலாத்காரமாகத் தூக்கியெடுத்துச்
சென்று, நூறு யோசனை விஸ்தீரணமுடைய ஒரு மடுவின் கரையி
லிறக்கி, தான, சாம, பேத, தண்டமென்னும் நால்வகை யுபாயங்
களால் புணரமுயன்றனர்; அதற்கு அவ்வம்மையார் சிறிதுஞ் சித்
தங் கலங்கா துறுதியாயிருந்தனர். அதுகண்டு அவ்விராக்கத
வடிவ முனிவர் அவ்வம்மையாரைக் கீழே தள்ளிப்புணர முயன்
றார்; அதற்கவ்வம்மையார் சிறிது மச்சமுறாது, தமதிரண்டு கரங்
களையும் சிரசின் மீது தூக்கிக்குவித்து "ஓ! தருமதேவதையே!
யானிதுகாறும் மனம் வாக்குக் காயமென்னும் திரிகரணங்களா
லும் ஒருதவறுமின்றி யென் பர்த்தாவிற்குப் பணிவிடை செய்து,
கற்புடையவளா யிருந்த துண்மையாயின், என்னுடம்பு கால்முதற்
கொண்டு மார்பு பரியந்தம் கல்லாகக்கடவது" என் றுரக்கக்கூவி
னர். அவ்விராக்கதன் அவ்வம்மையார்மீது விழப்போம்போது,
அவரது தேகம் கால்முதற்கொண்டு மார்பு பரியந்தம் கல்லாய்
விட்டது. அத்தேவராத முனிவர் தம்முடைய மனைவியின்
கற்புடைமையைக் கண்டு வியந்து, இராக்கதவடிவத்தை யொ
ழித்துத் தமது நிஜவடிவத்தை அவ்வம்மையார்க்குக் காட்டி,
அனுக்கிரகஞ் செய்தாரென்று பாரதம் விராடபர்வத்திலுள்ள
கதையை நன்கூன்றி நோக்குவோமாயின், "காவருனே பாவையர்க்
கழகு" என்பது இனிது விளங்குவதாம்.

## மநுதர்ம சாஸ்திரம்.

"மாதர்கள் தங்களைத் தாமே காத்தல்வேண்டும்; அதுவே
அவர்களுக்குச் சிறந்த காவலாகும்; சிறந்த காவலரை வைத்துப்
புறத்தே போகவிடாது வீட்டிலேயே நன்றாகக் காத்தாலும் அத
னாலவர்கள் காக்கப்படுவதில்லை"

## திருக்குறள்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்,
நிறைகாக்குங் காப்பே தலை."



## மணிமேகலை.

"கன்னிக் காவலுங் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வம் பேணாப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்லள்."

இப்பிரயோகங்கள் இங்கு நன்குணர்தற் பாலனவாம்.

## குசேலோபாக்கியானம்.

(முன்தொடர்ச்சி.)

பசுக்களை மேய்த்துவரும் நாளில் ஒரு நாள் பலபலமாதர்
கூட்டத்தோடு திருவாய்ப்பாடியை யடைந்து, தந்தை வசுதே
வரை விழுங்குகின்ற மலைப்பாம்பைக் காலால் மிதித்தொழித்து,
மீண்டுங் காட்டையடைந்து அங்குக் கோபிகைகளை யபகரித்துச்
சென்ற சங்கசூடனை வதைத்து, (அவனிடத்திற் கவர்ந்த) இரத்
தினத்தைத் தமையனாய பலராமனுக்குக்கொடுத்து, நாரதமுனிவர்
சொல்லால் கம்ஸனனுப்பக் குதிரைவடிவாய் வந்த கேசியென்னு
மசுரனையும் மற்றவனையும் கொன்று, அக்கம்ஸன்வசிக்கும்
வடமதுரையையடைந்து, ஆடைதரமறுத்த வண்ணானை யமனூர்க்
கனுப்பி, ஆபரணந்தந்தவனுக்கு அழகைத்தந்து, அன்போடு மலர்
மாலையணிந்தவனுக்குப் பரமபதந்தந்து, சந்தனக்குழம்பளித்த
கூனியை அழகியவளாக்கி, உடனே ராஜசபையிற்சென்று,
அங்கெதிர்த்துவந்த குவலயாபீடமென்னும் யானையையும் சாணூ
ரன் முஷ்டிகனென்னும் மல்லரிருவரையும் நாசமாக்கி, கம்ஸனை
இவ்வுலகத்தில்லாமற்செய்து, உக்கிரசேன மகாராஜனை வடமது
ரைக்கரசனாக்கி, உபநயன விவாக முதலிய சடங்குகளைத் தந்தை
செய்விக்கச் செய்துகொண்டு, சாந்தீபமுனிவரிடத்துச் சகல கலை
களையு மோதியுணர்ந்து, பஞ்சஜநனென்னு மரக்கனைக்கொன்று,
அவனெனும்பைச் சங்கமாக்கிக்கொண்டு, அவன் பிரபாச தீர்த்தத்
திற் கொன்ற சாந்தீபமுனிவர் புத்திரனைப்படைத்து, அவர்பத்
தினியார் முன்நிறுத்தி, திருவாய்ப்பாடியிலுள்ள கோபியரைத்
தேற்றும் பொருட்டு உத்தவனையனுப்பி, அழகிய தையலான

கூனியோடு கூடியின்புற்று, திருதராஷ்டிரனுக்கு நல்லறிவு
புகட்ட அக்குரூரனையனுப்பி, சராசந்தன் தோற்றோடு மாறு
அவனுடன் பதினேழுமுறை யுத்தஞ்செய்து, காலயவனன் வட
மதுரையைப் போர்செய்ய வளைத்துக்கொண்டமை பற்றிக் கடல்
நடுவே துவாரகையென்னும் நகரையுண்டாக்கி, போர்செய்ய
மாட்டாத வன்போல விரைந்தோடி முசுகுந்தனுறங்குகின்ற
ஒரு மலைக்குகையுள்ளே நுழைந்து, அம்முசுகுந்தன் கோபப்
பார்வையால் அக்காலயவனனை நீறுகச்செய்து, பலராமனோடு
துவாரகைக்குச்செல்லும்போது போர்செய்யவந்து வளைத்துக்
கொண்ட சராசந்தனுக்குப் பயந்தவன்போலப் பலராமனோடு
அங்குள்ளதோர் மலைமீதேறி, அங்கு நெருப்புவளைத்துக்கொண்ட
தற்காகச் சிறிதுங்கலங்காது விரைவாக அம்மலையினின்றுங்
குதித்துத் துவாரகையையடைந்து, விதர்ப்பநாட்டரசன் செல்
வப் புதல்வியாகிய உருக்குமணிபிராட்டியார் தமது தமையனாகிய
உருக்குமியின் சொற்குப்பயந்தனுப்பிய தூதன் கூறியதைக்
கேட்டு உடனே தேர்மீதேறி விதர்ப்பதேசத்திற்குச்சென்று,
அங்குத்துர்க்கையின் திருவடிகளைவணங்கி ஒருமலர்ச்சோலைக்க
ணிருந்த உருக்குமணி பிராட்டியாரை யெடுத்துத் தேர்மீது
வைத்துக்கொண்டு எதிர்த்துவந்த அரசர்களைத் தோல்வியுறச்
செய்து, உருக்குமியின துருபிமை யரிந்தொழித்து, பின் துவார
கையையடைந்து, உருக்குமணிபிராட்டியார்பெற்ற பிரத்தியும்நன்
ஓரசுரமாயையால் மீன்வயிற்றடைந்து, இரதிதேவியெடுத்து வளர்
க்கவளர்ந்து, அவளுடன் கூடி யின்புற்று வருவதறிந்த சம்பரா
சூரன், அவனைச் சிறைசெய்ப, அவனைச் சிறையினின்று நீக்கும்
பொருட்டு, அவ்வசுரனைக்கொன்று, பின்சத்திரா சித்தென்பவன்
சூரியனிடத்துப் பெற்றுச் பிரசேனனிடத்துக் கொடுத்த சமந்தக
மணியை யொருசிங்கம் கவர்ந்துகொண்டதையும், அச்சிங்கத்தி
னிடத்தினின்றும் அம்மணியை யொருகரடிகவர்ந்து ஒருமலைக்
குகையிற் சென்றதையு முணர்ந்து, அக்குகையில் சென்று (கரடி
வடிவாயுள்ள அச்) சாம்பனைப்போர்செய்து கொன்று அவன்
மகளாகிய சாம்பவதியையும் சமந்தகமணியையுங் கைக்கொண்டு
வெளியேவந்து, அம்மணியைச் சத்திராசித்துவிற்குக் கொடுத்து,
அவன் புத்திரியாகிய சத்தியபாமையை மணந்து, பின் பாண்டவர்
துன்பமொழியுமாறு அவர்களிடத்திற் சென்றிருக்கும்போது,
சததந்வா மாமனாகிய சத்திராசித்தை யுறங்கும்போது கொன்று



அவனிடத்திருந்த சமந்தகமணியை யபகரித்துக்கொண்டானென்
றுணர்ந்துசென்று, அவனை இயமனூர்க்கனுப்பி, அக்குரூரன் சமந்
தகமணியோடுவந்துகண்டதற்குவந்து, அம்மணியையும்அதுதரும்
பொற்குவியல்களனைத்தையும்சத்தியபாமைக்குக்கொடுக்கக் கடவா
யென்று அவனுக்கேகொடுத்து, பின் சுபத்திரையை அருச்சுன
னுக்கு விவாகம்புரிவித்து, இந்திரப்பிரஸ்தத்தையடைந்து அருச்
சுனனோடு காட்டுக்குச்சென்று வேட்டையாடும்போது, காளிந்
தியைக் கூடிக்களிப்புற்றுத் துவாரகையை யடைந்து, பின் அவந்தி
தேசத்தரசன் புத்திரியாகிய மித்திரவிந்தையை யெடுத்துத்
தேர்மிசைவைத்துக்கொண்டு, எதிர்த்துவந்த துரியோதனன்
முதலாயினோரை அஞ்சி நிற்கப்போர்செய்து வென்றுபின், கோ
சலத்தரசன்புத்திரியாகிய சத்தியென்னும் நப்பின்னைப் பிராட்டி
யாரைப் போர்க்குரிய விடையேழையும் தழுவிவென்று கூடிப்
பின், கேகயத்தரசன் புதல்வியாகிய பத்திரையைப் பாங்காகக்
கூடி, பின் மத்திரதேயத்தில் மச்சயந்திரத்தைக் குறிதவறு
தெய்து இலக்கணையைக் கடிமணஞ்செய்து, பின் நரகாசுரனைக்
கொன்று வாசவனது மனக்குறையை யொழித்து, நரகாசுரன்
நகரத்துப் பிலவறையில் சிறையாயிருந்த பதினாறுபிரமங்கையரைப்
பரிந்து மணம்புரிந்து, சத்தியபாமையின் வேண்டுகோளுக்கிணங்
கிப் பஞ்சதருக்களை யிந்திரலோகத்திருந்து துவாரகையில் கொ
ண்டுவந்துவைத்து, பின் அளவற்ற மைந்தர்கள் பிறக்க ஆநந்த
மடைந்து, பேரனாகிய அநிருத்தனைச் சிறைசெய்த பாணாசுர
னது கைகளையறுத்தொழித்து, பின் பச்சோந்தியாய்க் கிடந்த
நிருக வேந்தனது சாபத்தையொழித்து, பின் காசிவேந்தனையும்
வாம்பனைப்பான் (கண்ணன்) யானேயென்று வெளிப்பட்ட
பவுண்டரவாசுதேவனையும் இயமனுக்குணவாக்கி, காசியிலிருந்து
பகைவன்மகனனுப்பிய பூதத்தைத் துன்புறத்துரத்தி, துரியோ
தனன்மகளைப் புணர்ந்திருந்தமைபற்றிச் சிறையாயிருந்த சாம்
பனைப் பலராமர் சென்று மீட்டுவந்தமை கண்டு பரமாநந்த
மடைந்து, நாரதமுனிவர்கண்டு தரிசிக்குமாறு அவர்க்குப்பதினாறு
யிரந் திருவுருக்காட்டி, சராசந்தனைக் காலைப்பிடித்துக் கிழித்துக்
கொல்லுமாறு அவனோடு போர்புரியும் வீமனுக்கு ஓர் புல்லினை
யெடுத்துக் கிழித்துக்காட்டி, நீண்ட காலமாக வருத்தமுற்றிருந்த
அரசர்களது சிறையை யொழித்து, தர்மபுத்திரர் இராஜசூய
யாகஞ்செய்தபோது அவமதித்துப்பேசிய சேதிதேசத்தரசனாகிய

சிசுபாலனைக் கொன்று, சாலுவனையும் தந்தவக்கிரனையும் அவர் தம்சேனைகளோடு வதைத்து, பின்பார்த்தனுக்குச் சாரதியாயிருந்து, பீஷ்மர் முதலாயினோரைப் பாண்டவரால் மடியச் செய்து பூபாரத்தைக் கழித்து, தர்மபுத்திரர்க்கு அரசுரிமை தந்து, என்னமுக்குக் கந்தையிலிருந்த அவலையுந்தின்ற கண்ணபிரானே! நமஸ்காரம்;

இனி யிமையவர் துதிக்கப்பரியுருவெடுக்கும் எம்பிரானே நமஸ்காரம்;

வேதமுங்காணு விமலனே! நமஸ்காரம்; எல்லாமாயிருப் பவனே! நமஸ்காரம்; கஜேந்திரனைக் காத்த கடவுளே! நமஸ் காரம்; அடியவர்க்கு அவரெண்ணியவற்றை யெண்ணியவாறளிக் கும் இறைவனே! நமஸ்காரம் என்றிவ்வாறு பிருதியாகத் தோத் திரஞ்செய்து, இருகண்களிலும் நீர்த்ததும்ப, இருகரங்களையும் சிரமீது குவித்து, கண்ணபிரான் எனக்கின்னருள் புரிய இங் கெழுந்தருளுவாரென்று மனநெகிழ்ந்துருகி யிருந்தனர்.

இவ்வாறாகக் குசேலரிருக்கும்போது அவர்க்குந் தரிசனந் தந்தருளுமாறு, வேதப்பொருளாய் விளங்கும் கண்ணபிரான் முடியிலணிந்துள்ள இரத்தின மகுடம் மரகதமலைமீ துதயமான சூரியன்போல விளங்கவும், காதிலணிந்துள்ள இரத்தின மகர குண்டலம் இருபுறமும் ஒளியை வீசி விளங்கவும் தோளிலணிந் துள்ள * அங்கதத்தின் பிரகாசம் மேலெழாநிற்கவும், அந்தப்பிர காசம் கீழேயும் பரவினாற்போல உத்தரீயம் பிரகாசிக்க வும், நன்மார்க்கம் நடைபெறவும் தர்மம் தழைக்கவும் மக்களனை வரும் மகிழ்வடையவும் மாமறைகளை யருளிச்செய்த திருவாயி லிருந்து சிறிது புன்முறுவல்தோன்றவும், மனம்வாக்குக் காய மென்னும் திரிகரணமும் ஒத்து நிற்கத் தம்மை யிடையறாது வழிபாடுசெய்யும் அடியார்க்கருள் செய்யும் கமலக் கண்களி லிருந்து அருள் வெள்ளம் பெருகா நிற்கவும், சூரியனும் சந்திர னும் இறைவன் இராமாவதாரஞ்செய்து சூரிய வம்சத்தையும் கிருஷ்ணாவதாரஞ்செய்து சந்திரவம்சத்தையும் விளக்கியருளிய தன்மையையுணர்ந்து முறையே வலப்பக்கத்திலும் இடப்பக்கத் திலும் வந்திருப்பதுபோல வலக்கரத்திலும் இடக்கரத்திலும் சக்கரமும் சங்கும் விளங்காநிற்கவும், மக்கள் தங்குறை கூறி முறையிடாவண்ணம் அவர்களை நோக்கி நீர் அஞ்சவேண்டா மென்று மேலெடுத்துள்ள அபயாஸ்தமும், நீர் எனது திருவடிக்

* அங்கதம்-வாகுவலயம்.



கன்புசெய்கவென்று தனது திருவடியைக் காட்டுகின்ற வரதா ஸ்தமும் அன்றலர்ந்த தாமரை மலர்போல விளங்கா நிற்கவும், திருப்பாற் கடலைத் தேவர்கள் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய கௌஸ்துபமணி இலக்குமி வசிக்கும் திருமார்பின் கணிருந்து பேரொளி வீசா நிற்கவும், திருமார்பின்கண் வசிக்கும் இலக்குமி கௌஸ்துபமணிவீசும் வெயிலால் வருத்தமுறாதிருக்கு மாறமைத்த ஓர் இளஞ்சோலைபோல நறுமணம் வீசுகின்ற துளப மாலை திருமார்பின்கண் தேன்சிந்தி விளங்காநிற்கவும், திருமார் பின்கண் தமது கலங்காத பிரதாபம்போலச் செஞ்சந்தனக் குழம்புப் பொலிவாகத் தோன்றவும், திருவரையின்கண் செம் பொனுடையும் உதரபந்தனமும் பொன்னிரட்டை நாணும் பிர காசியாநிற்கவும், இரண்டு பக்கங்களிலும் உருக்குமணி பிராட் டியார் சத்தியபாமை முதலிய அஷ்ட மஹிஷிகள் சூழாநிற்கவும், துந்துமியைந்தும் காரும் கடலும்போலப் பேரொலி செய்யவும், தேவர்கள் பூமழை பொழியவும், அரமகளிர் நடனஞ்செய்யவும், அறம் தழைப்பவும், உலகத்தார் மகிழ்வடையவும் வந்து தோன் றினர்.

குசேலமாமுனிவர் இவ்வாறு கண்ணபிரான் தமக்குமுன் வந்து தரிசனந்தந்ததைக் கண்டவுடனே விரைந்தெழுந்து, கரை யையுடைத்தெழுகின்ற வெள்ளம் போலவும், தன்தாயின் வர வைக்கண்ட மழவிளங் கன்றுபோலவும், தம்மனமும் பின்னு மாறு விரைவாயோடி, அவர்திருவடியை விரைவாக விழுந்து வணங்கி யெழுந்து நின்று முடிமீது கரமிரண்டையும் கூப்பி, அவரை மும்முறை வலம் வந்து அவர் திருவடியின்மீதுவைத்த அன்புபெருகா நிற்கவும், ஆநந்தக்கண்ணீர் ஒழுகாநிற்கவும், பூமி யிற் கிடத்திய தண்டைப்போல மீண்டும வணங்கித் துள்ளியெ ழுந்து யாம் பெருந்தவஞ் செய்திருக்கின்றோமென்றுகருதி, அவர்க்குச் சிறப்பாகப் பூசைசெய்து பாத்தியமுங்கொடுத்து, அன்புமிக்குச் சுரந்துபொங்க எதிரே நின்று குடந்தக் கூத்தாடி, ஐயனே! உன்னுடைய வருகை பங்கனிருக்கு மிடத்திற்குக் கங்கைவந்ததொத்திருக்கின்றது; உனது தரிசனம் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கள், நைமிசாரணிய முதலிய ஆரண்யங் கள், மேருமுதலி யமலைகள்என்பனவற்றுள் எதனையாவது அடை ந்து நெடுங்கால முணவின்றி, இந்திரியங்களை யடக்கித் தவஞ்செய்

பவர்க்கேயன்றிப் பாவியாகிய வெனக்குங் கிடைத்தது வியப்
பாகவே இருக்கின்றது ; ஐயனே ! வேதநான்கும் ஓலம் ஓல
மென்று அளவற்றகாலங் கதறி வாயிளைத்தும் காண்டற்கருமை
யாய உனது தரிசனம் இருவினைவயமாய் நின்று கலங்கி, செய்வ
திது தவிர்வதிது என்றுணராதுமயங்கியிருக்கின்ற அறிவிலியாகிய
அடியேனும் தரிசிக்கக் கிடைத்தது புதுமைபாகவே யிருக்
கின்றது.

பெருந்தவப் புண்ணிய முடையார் எப்போது இறைவன்
நமக்கு இன்னருள்செய்ய எழுந்தருளுவானோ வென்றெதிர்
பார்த்து நிற்க, மனக்களங்க முடைய வென்னை யொருபொரு
ளாகக் கொண்ட உனது கருணையை எண்ணியளவிடுவதாமோ ?
வேதம் நான்கும் அவற்றையுணர்ந்த பிரமனும் காணாத இக்காட்
சியைத் தரிசிக்கப்பெற் றுபசாந்தமடைந்தவர் விரும்புகின்ற
பேரின்பத்தையடியேனு மடைந்தனன்; என்னிடத்திருந்து நீ
ரிடத்து வான்பெறும் பொருளு மிருக்கின்றதோ ? தேவ தேவ
னே ! நீ அடியேனது தீமை மிக்க சித்தத்தினிடத்து வைத்தற்
பொருட்டே நின் திருப்பாதத்தைக் காளிங்கனென்னும் சர்ப்பத்
தின் றலைமீதுவைத்து நடித்தும், சகடா சுரனை யுதைத்தும், (இர
மாவதாரத்தில்) பாலைவனத்தில் நடந்தும் முன்னர்ப் பழக்கிறு
யென்று, இன்றடியேனறிந்து கொண்டனன் ; இழிதகைமை
யுடைய அடியேனது மனத்தில் உனது அம்போருகப்பாதத்தை
வைத்தால், அது (இராமாவதாரத்தில் கல்லை மிதித்துப் பெண்
ணாக்கிய) முன்னைப் பழக்கத்தால் சகிப்பதாம்; ஆயினும், என்
தாய்மாருடைய கைகளில் ( பிடிக்கும்போது ) அப்பாதத்தின்
வெப்பம் படுமேயென்று மிகவும் அஞ்சுகின்றனனென்று
பற்பலவாறுகத் துதிசெய்து, தழுவிவிட்ட வெண்ணெயும் கரு
ங்கலென்று கூறுமாறு மனங்கசிந்துருகா நிற்க அவர்க்கெதிரே
நின்றனர். அவ்வாறு நின்ற குசேலமாமுனிவரைக் கண்ண
பிரான் நோக்கிக் கருணைமிக்குப் பெருந்தவ முனிவரே! நீர்விரு
ம்பியதியாது? அதனைக் கூறுவீராக வென்று கூறியருளினர்.
அதுகேட்டு, அப்பெருந் தவமுனிவர் அடியேன் கடைத்தே
றினேனென்று கூறி, கைகளிரண்டனையும் முடிமீதுவைத்துக்
குவித்து வணங்கி, அறிஞர் விரும்பாத இக்கொடிய செல்வம்



அளவிடற்கரிய பிறவிகளுக்குக் காரணமாம்; செவ்வையாக ஆரா
ய்ந்து நோக்கினல் இன்பத்தையெள்ளளவாகவேனும் இது தருவ
தில்லையாம் ; நாடோறும் மனம் வாக்குக் காயமென்னுந் திரி
கரணங்களையும் உன்திருவடியினிடத்துச் செலுத்தும் நாயடி
யேன் உன்னடியாரது பாதங்களை வணங்கிக் கடைத்தேறுவ
தொழிந்து, இக்கனுப்போன்ற செல்வப்பெருக்கி லாழ்ந்தோ
களிப்படைந்து வாழ்நாளைக் கழிப்பேன்; முன்னரே இது வேண்
டாமென்று வெறுத்துக் கோபித்துக் கொள்ளாதிருந்த செல்வத்
தைப் பின்னர்க்கொள்ளுவேனுயின், யான் பேரறிவுடையவனுவ
னே? அதுவேயுமன்றிக் கொண்டவிரதத்தையும் அழித்தவ
னுவேன் ; ஞானிகளது நகைக்கும் நாணுது நடப்பவனுவேன்;
குளத்தில் குளிக்க இறங்கினவன் அதிலுள்ள சேற்றை வாரித்
தன் மீது பூசிக்கொள்ளுவானே? காலிலுள்ள பொன்விலங்கைக்
கழ்ற்ற முயன்றவன் இரும்பு விலங்கைப் பூண்டு கொள்வானே ?

ஆதலால், ஐயனே ! எனக்கு இவ்வநித்தியசெல்வம் வேண்
டாம்; முன்னிருந்தவறுமையே இன்னும்வேண்டும் ; அடியார்
விரும்புவனவற்றை யளித்து, அவரைக்காக்கும் நீ தயவுசெய்து,
என்கருத்தை நிறைவேற்றுதல் வேண்டுமென்று கூறினர்.

எழுதருமறைகட் கெட்டாத இறைவனுய கண்ணபிரான்
குசேலர்கூறிய வனைத்தையுங்கேட்டுப் புன்னகைபுரிந்து, நீர் செல்
வத்தை விரும்பாது தரித்திரத்தை விரும்பிக்கேட்பதற்குக் கார
ணம்யாது? அதனைக் கூறுவீராக என்றனன்.

அதற்குக் குசேலர் ஐயனே! அக்காரணம் முன்படியேன்
செய்தவிண்ணப்பத்தாலே வெள்ளிடை மலைபோல விளங்கிக்
கிடந்தது, நினைத்தல் முதலிய வெல்லாவற்றையும் இயல்பாகவே
யறியும் நீ ஒன்றுமறியாதவன்போல என்னை வினவுதல் மாட்
சிமையுடையதாமோ ? ஐயனே! உனது திருவடித் தியானஞ்
செய்து வாழ்நாளைக் கழியா நிற்குமெனக்கு இச்செல்வம் பெருந்
தடையாய் வந்துசேர்ந்தது ; இங்கு இச்செல்வத்தைப் பாது
காத்து, உலகவாழ்க்கையை மேற்கொண்டு, மனவருத்த
முடையவனுக நான் வாழ்நாளைக் கழித்தல் நலமுடையதா
மோ? எம்பிரானே! நீ யெனக்குக் கருணைசெய்யவேண்டுமெ
ன்று பிரார்த்தித்து, அவரது திருவடியில்விழுந்து வணங்கினர்.

அப்பொழுது கண்ணபிரான் குசேலமுனிவரை நோக்கி, மறைமுனிவரே! நீர் மனம்வருந்துதல் வேண்டாம்; கவலையனைத்தையும் விடக்கடவீரென்று கூறி, அவருடம்பினைத்தடவி, நீர் சிந்தையும்மொழியும் செலலா நிலைமையதாய அந்தமிலின்பத்தை யடைவீரென்றருள்செய்து, முனிசிரேட்டரே! யான் உமக்குப் பெருஞ்செல்வத்தையளித்தது உம்மைச்சேர்ந்தவர்கள் பொருட்டேயாம்; உம்முடைய மனம்போல அவர்களது மனமும் துறவினையுடையதோ? உம்மைச் சார்ந்துள்ள மனைவிமக்கள் முதலாயினோர் வறுமையால் துன்பமடைந்திருத்தல் தகுதியுடையதாமோ? அச்செல்வம் கிடைத்தமையை யெண்ணி மனங்கலங்குதல்வேண்டாம்; எம்மையிடைவிடாது பூசிக்கும் முனிவரே! மெய்ப்பொருளையறிந்தமேலோர் இல்லறம் துறவறம் என்னுமிரண்டனுள் எவ்வறத்திலிருப்பாராயினும் பொய்ப்பொருளை விரும்புவாரோ? விரும்பாரன்றோ? அவர்தம்மை அப்பொய்ப் பொருளாயினும் வந்து தன்வயத்ததாக்குமோ? ஆக்காதன்றோ? அப்பொய்ப்பொருளெப்போதும் அசத்தேயாம். மருந்துடன்மந்திரமுடையாரைப் பாம்பின் விஷம் யாது செய்வதாம்? சூரியனை யிருட்கூட்டம் யாது செய்வதாம்? ஒன்றும் செய்யாவன்றோ? ஆகலால் உம்மை இப்பெருஞ்செல்வம் யாதுசெய்வதாம்? ஒன்றும் செய்யாது. நீவிர் உமது நிலையினின்றுந் தவறாது எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் நிற்பீர்க. மெய்யுணர்ந்தோர் தமக்குரிய செயலைச்செய்யும்போது யாதொரு மாறுபாடுமின்றித் தாமரை யிலைமீதுள்ள தண்ணீர்போலப் பற்றில்லாதிருப்பர்; எம்மை வழிபாடுசெய்யுமுமக்கு இச்செல்வத்தால் பந்தமுண்டாகாது; நீவிர் இவ்வுலகில் நெடுநாள் வாழ்ந்திருந்து முடிவில் எமது பரமபதத்தையடைந்து இன்பமடைய உமக்கு வரங்கொடுத்தோம். தவத்தாற் சிறந்த சற்குண முனிவரே! நீவிர் இப்பெருஞ் செல்வத்தோடு சிறப்புட னிருப்பீராக; நீவிர் செல்வம் வேண்டாமென்று அதனையிகழ்வீராயின், நமது மனைவியாகிய இலக்குமியை யிகழ்ந்தவராவீர்; நீவிர் இகழுவதற்கஞ்சி அவ்விலக்குமி நீங்குவாளாயின், யாமும் உம்மைவிட்டு விலகுவோமென்று பலவார்த்தைகளை அவர் மறுத்துப் பேசாவாறு கூறி, அவர்க்கனுக்கிரகஞ்செய்து, மறைந்துபோயினர்.



பரிச்சித்து வேந்தே! உலகத்தில் எவர்க்கேனும் தெய்வபலத்திற்குச் சமமாயபலமும் இருக்கின்றதோ? இல்லையன்றோ? கண்ணபிரான் தமக்கருள்செய்து மறைந்தவுடனே, குசேலமாமுனிவர் வாட்டமற்ற மனமுடையவராய், எம்பெருமான் தந்திருவுள்ளத்தெண்ணியது இவ்வாறேயென்று கருதி, நீரிலிருக்கும் சடை அந்நீரைப் பற்றாதிருப்பதுபோல, பிரபஞ்சத்தொடர்பையடைந்தும் அதனைச்சிறிதும் பற்றாதவராய், கண்ணனினையடிகளை யிடைவிடாது தியானஞ்செய்து கொண்டிருந்து, நெடுங்காலமின்பமாக வாழ்ந்து, முடிவில் விண்ணவர் மலர்மழைபொழிந்து வாழ்த்தப் பரமபதத்தையடைந்து, திருமாலின் சேவை செய்து, பரமாநந்த மடைந்தனர்.

## இந்நூற் பயன்.

அரசரேறே! இக்குசேலமா முனிவரது கதையை யெழுதி வைப்பவரும், அன்போடு கேட்பவரும், எழுதிய புஸ்தகத்தைப் பூசிப்பவரும், படிப்பவரும் பெருஞ்செல்வமடைந்து, சந்ததிவிர்த்தியாக வாழ்ந்து, நல்லுணர்வடைந்துபின் பெருங்கதியடைந்துவாழ்வார்க ளென்று கூறி, குசேலர் சரிதத்தை முடித்தனர் சுகமுனிவர்; இக்கதையை யன்பாய்க் கேட்டுவந்த பரிச்சித்து மகாராஜன் அம்முனிவரது பாதகமலங்களை ஆர்வத்தோடு வணங்கியெழுந்து, ஐயனே! யானிக்கதையைக்கேட்டு ஆநந்தமடைந்தேனென்று கூறினன்.

## முற்றிற்று.

“மன்னு மாமறை வாழி மறையவர்
பன்னு மான்முகில் வாழிநற் பார்த்திவர்
மின்னு நீதியும் வாழி மிகுநல
மென்னு மிக்கதை யின்றமிழ் வாழியே.

## கடமை.

மனிதன் தன்னோடு பிறருடைய நன்மையுங் கருதியே வாழவேண்டியவனாகின்றான். ஒருவன் எந்நிலையி லிருந்தாலும் தான் செய்யவேண்டியவற்றைச் செய்யாதிருத்தல் இயலாது. நாம் நம் கடமையைச் ‘செல்லும் வாயெல்லாஞ்செய்’ தல் வேண்டும்.

மனிதனுடைய சிறந்த கடமையாவது ஜேம்ஸ் ஆலன் கூறுவதுபோல அகங்காரத்தை அடக்கி இதய சிங்காதனத்தில் மெய்ப்பொருளை வீற்றிருக்கச் செய்தலேயாகும். இக்கடமையைச் செலுத்தியவர்களே தமது பிறப்பினாலெய்தும் பலனைப் பெற்றோராவர்.

கடமை என்பதொன்றே நம்மை மிருகத்தினின்றும் மேம்படச் செய்யும் நற்செய்கைகளுக்கெல்லாம் அடிப்படையாயுள்ளது. கடமை என்பது பொதுவாக நல்ல எண்ணத்தினால் வருஞ் செய்கையைக் குறிக்கும்; அதுதான் செய்பவனுக்கும் பிறர்க்கும் இன்பம் பயத்தலின் வைத்து அறியப்படும் "கடனென்ப நல்லவை யெல்லாம்" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்.

பிரபஞ்சமே சகலருடைய நன்மையின் பொருட்டு மாறுதலில்லாத சில விதிகளை அனுசரித்து நடப்பதாயின், நாமும் அங்ஙனமே மாறுதலில்லாத சில ஒழுக்க முறைகளை அனுசரிக்க வேண்டியது அவசியமன்றோ? நம்மிடத்துப் பொருள்களுள் தீயனவற்றினின்று நல்லனவற்றைப் பகுத்தறியும் ஆற்றல் அமைந்திருப்பவும் அதை எப்பொழுதும் நன்குபயன் படுத்தாது போவதும் விசனிக்கத்தக்கது. அந்தோ! நாம் அங்ஙனம் பயன் படுத்தாது மனம்போன போக்கெல்லாம் போய் அற்பலாபத்தை உத்தேசித்து அனைவர்க்கும் துன்பத்தையும் விளைத்து நம்மையும் பலவீனப்படுத்திக்கொள்ளுகின்றோம். ஆனாலும்எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கும் கடவுள் அங்ஙனம்ஒரேபோக்காய்ச் சுயநலப் பிரியர்களை விட்டுவிடுவது மில்லை. "பிறந்தா ருறுவது பெருகிய துன்பம், பிறவா ருறுவது பெரும்பேரின்பம்" ஆதலின் இந்தச் சரீரத்தைக்கொண்டு பலர்க்கும் எவ்வாற்றானும் நன்மையே புரிந்து, முடிவில் கடவுளோடு இரண்டறக்கலத்தல் வேண்டும். இதனையே சகல சமயாசாரிகளும் வற்புறுத்தி இருக்கிறார்கள்.

"அனைத்தினும் சிறந்தவன் மனிதன், மனிதனினும் சிறந்தது மனம்" அத்தகைய மனம் நம்மிடத்திருப்பதினாலே மிகப்பரிசுத்தமா யிருக்கும் அன்பைப்பற்றியே இடைவிடாது சிந்தித்து அதன் மயமாகவே நாம் மாறும்படி. இன்றியமையாத காரியங்களையெல்லாம் இயற்றவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் சரீரமோ ஓர் அற்புத இயந்திரமாகவே இருக்கிறது. அதைக்கொண்டு



தெய்வமாகவும் அல்லது மிருகமாகவும் மாறலாம். உலகத்திலுள்ள துன்பத்தை இயன்ற அளவு குறைப்பதற்கும், இன்பத்தை அதிகப்படுத்துவதற்கும் நம்முடைய காசரணுதிகள் பயன்படவேண்டும். அங்ஙனம் செய்வோமானால், நாம் மனிதரேயாயினும், ஒழுக்கத்தினால் தெய்வமாகவே கருதப்படுவோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானு
றையுந், தெய்வத்துள் வைக்கப் படும்" குறள்.

நம்மிடமுள்ள அருமையான சக்திகளையெல்லாம் அனைவர்க்கும் நலம் தரும்படியான மார்க்கத்தில் பிரயோகிப்பதே நமது கடமையாகும். அது தேகமனோபலங்களை அதிகப்படுத்தவும், நல்லொழுக்கத்தை நிலைநிறுத்திக் காக்கவும், கேவலமான காரியங்களைச் செய்யவொட்டாது தடுக்கவும் வல்ல ஓர் சாதனமாயிருக்கிறது.

தன் சக்தியைச் சரியான வழியில் செலுத்துபவன் ஒரு சிறிய வேலையையும் அற்பமென்று அலக்ஷியஞ் செய்யாது "செய்வன திருந்தச்செய்" என்ற ஔவையார் மொழிக்கு இலக்காவான். செய்யவேண்டியவற்றை முழுமனதோடும் செய்யாதிருத்தல் தனக்கும் பிறர்க்கும் இயற்றிய குற்றமாகவே முடியும். உதாரணமாக, ஒருபெரிய நதியின்மேல் பாலம் ஒன்று பலமாய்க்கட்டப்படாமல் பார்வைக்கு மாத்திரம் அழகாயிருப்பின், அது அநேகர்க்கு ஆபத்தாய் முடியும். அதோடு கட்டினவனும் தண்டிக்கப்படுவானன்றோ? ஆகவே, பணலாபத்தைக் கருதாது ஊக்கத்துடன் ஒரு செயலை முடித்துவிட்டால், அதனால் பெறப்படும் மகிழ்ச்சியே பணலாபத்தினும் பல மடங்கு சிறந்த லாபமாகும்.

பசியென்னும் பிணியை ஒழிப்பதற்காகப் பணஞ்சேகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமே கடமை யெனக்கருதலாகாது. உலகப் பொருள்களைச் சேர்த்து வைக்க விரும்பும் சில சுயநலப்புலிகள் சம்பளத்துக்குத் தகுந்த வேலை செய்யவேண்டுமெனக் கருதுவதும் மடமையேயாகும். ஒரு ஆலங்கன்று நால்வகைச் சேனைகளும் தங்குவதற்குரிய பெரிய மரமாக வளர்வதற்குமுன், மழை வெயில் முதலியவற்றால் அதிகக் கஷ்டப்பட வேண்டுமென்று அஞ்சுவதும் உண்டோ? இவ்விதமாகக்கடமையானது நமது அநுபவம் சக்தி முதலியன அதிகப்படுவதற்கு ஏற்பட்ட ஒரு கல்விச்சாலையாமென்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். பின்வரும்

சில விதிகளைக்கவனித்தால், அக்கல்விச்சாலையில்தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை மிக எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

1. வினைத்திட்பம் (Earnestness):—அஃதாவது கையிலுள்ள வேலையில் முழுமனதையும் செலுத்தல். இது ஒரு காரியத்தைக் கடைபோக முடித்தற்கு இன்றியமையாதது. எத்தேசத்தும் எக்காலத்தும் இதனையுடையான் எண்ணியாங்கு எதனையும் முடித்தற்கு வல்லவனாவான்.

"வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற" திருவள்ளுவர்.

2. மகிழ்ச்சி (Cheerfulness):—தன் வேலையில் மனமகிழ்ச்சியுள்ளவன் பலராலும் விரும்பப்படுவான்; ஒருவராலும் வெறுக்கப்பட மாட்டான். ஊழையும் உப்பக்கங் காண்பான்; எப்படி? உலைவின்றித் தாழாது உஞற்றுபவனாதலின்.

3. ஊக்கம் (Enthusiasm):—இது நமது அற்புத இயந்திரத்தை ஓட்டும் நீராவியாகும். இது ஒருவனுக்குப் பல வேலைகளையும் திருத்தமாகச் செய்யும் ஆற்றலைக்கொடுக்கும். மனப்பாங்கே ஒரு வேலையின்முடிவைத் தீர்மானிப்பதாகலின், தன் வேலையில் ஊக்கமில்லாதவர் அவமானமே அடைவரென்பது திண்ணம்.

4. சாமர்த்தியம் (Skill):—எந்த வேலையை எங்ஙனம் எப்பொழுது செய்தால் முழுப் பிரயோஜனத்தையும் அடையலாமென்று தெரிந்து கொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவன் உலகத்தில் மிகவும் உன்னத நிலைக்குவருவான்.

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற்செயின்." பொய்யாமொழி.

5. தற்சார்பு (Self-Reliance):—தமது சக்திகளுள் நம்பிக்கை வைத்தல். இக்குணம் அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களினும் சிறந்தது. நீ உன்னைப்பற்றி வைத்திருக்கும் மதிப்பே உலகத்தார் உனக்குக் கொடுப்பதாகும்.

6. தோற்றம் (Good appearance):—நீ உனக்கு வைத்திருக்கும் மதிப்பை (Self respect) உன்தோற்றம் காட்டுகிறது. தேகத்தைக் கவனியாதவன் மனத்தையுங் கவனியான். உடல் மாசை நீக்காதவன் உள்மாசை எங்ஙனம் நீக்குவான்? கால்வாய் தாண்டாதவன் கடல் தாண்டுவது எங்ஙனம்? வறுமை சுத்தமுடைமைக்கு இடையூறாகாது.



7, தக்க அலுவலைத் தெரிந்தெடுத்தல்:—(Choice of a suitable calling) நமது தேக நிலைமைக்கும் மன நாட்டத்திற்கும் தகுந்த வேலையை ஜீவிய காலத்திற்கு வைத்துக்கொள்வதே எவ்விதத்திலும் சிலாக்கியமானது.

8. தேக சௌக்கியம்:—இயந்திரம் செம்மையாக இருந்தாலன்றோ வேலை செவ்வனே நடக்கும். 'சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும்' 'உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்' 'உடம்பதனையானிருந்து ஓம்புகின்றேன்' என்றார் திருமூல நாயனாரும். ஆதலால் நாமும் தேகத்தைப்பேணுதலைப் புறக்கணியாது தேக சௌக்கியத்தை முற்றுமடைய விரும்புவோமானால் நல்வழியில் நடத்தலே அதற்குச் சாதனமென்பதை மறக்கமாட்டோம்.

9. உயர்வுள்ளவர்:—(Setting your working standards high) நீ தினந்தோறும் செய்யும் வேலை உனது ஒழுக்கம் என்ற கட்டடத்தைக் கட்டுவதற்கு உரிய செங்கலாகும். 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்பது பொய்யாமொழி. எப்பொழுதும் மேன்மையால் நடக்கப்பழகிக் கொள்ள வேண்டும். உயர்ந்த நோக்கமுள்ளவன் தினசரி வேலைகளை மிக நன்றாய்ச் செய்வானென்பதில் சந்தேகமில்லை.

ஆகையால் மேலே காணப்படுகிற ஒன்பது பகுதிகளையும் நன்கு ஆராய்ந்து ஒருவன்சரிவர நடப்பானானால், அவன் மேலான இன்பத்தை அடைவான் என்பதில் ஐயமில்லை.

**நெல்லை-மாணிக்க வாசகன்.**

## பத்மினி.

(முன்தொடர்ச்சி.)

தன்னுடைய போர்வீரர்கள் அநேகர் மாண்டமையின் பகைவரை எதிர்த்து நிற்பது அசாத்தியமெனத் தோன்றி சமாதானத்துக்கு ஏற்பாடு செய்தான். அலாவுடீன் சமாதானத்துக்கு வழிகொடுத்தால் அநேக பொன் நாணயங்கள் முசல்மான்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமென்று தூதர்கள் மூலமாக அலாவுடீனுக்குத் தெரிவித்தான். சமாதானம் செய்யப் பீமன் சிங்

கிற்குச் சற்றேனும் மனமில்லை. இதைவிட உயிரைத் துறப்பது
சிரேஷ்டமென வெண்ணங் கொண்ட பீமன்சிங்கென்பவன் தன்
மேல் அதிக நேசமும் விசுவாசமும் வைத்துவந்த குடிகளின்
நிமித்தம் சமாதான ஏற்பாடு செய்ய இணங்கினான். துராத்மா
வான அலாவுடீன் என்பவன் எவ்வித நியாயமான சமாதானத்துக்
கும் ஒத்துவரவில்லை. "இராஜபுத்திரர்களுக்குச் சமாதானம் வே
ண்டுமானால் அதற்கு ஒரே மார்க்கமுளது. அது என்னவெனில்
பத்மினி இராணியைத் தனது காம இச்சையைத்தீர்க்கும் வண்
ணம்தனக்குத் தத்தம் செய்து விடுவதே. இதுவன்றி வேறுமார்க்க
மில்லை" என்று அலாவுடீன் விடை கூறி அனுப்பினான். இவ்
வித அவமானத்திற்கு இராஜ புத்திரர்கள் உட்படுவார்களா?
படார். ஆகவே மறுபடியும் சண்டை ஆரம்பித்தது. முற்றுகையும்
நடந்து கொண்டுவந்தது. இவ்விதமாகச் சுமார் 1½ வருடம் கடந்
தது. அலாவுடீன் எவ்வளவோ ஆயிரக்கணக்காகச் சேனைகள்
வைத்திருந்தும் சித்தூராகிய தலைநகரைக் கைப்பற்ற அசக்தனா
யிருந்தான். கொந்தளிக்கும் கடலில் அலைகள் பலமாக இடை
விடாது மோதியபோதிலும் கன்மலையானது எப்படி அசையாது
நிற்கின்றதோ அதைப்போலவே எவ்வளவு மும்மரமாக முசல்
மான்கள் பலமாகத் தாக்கின போதிலும் இராஜபுத்திரர்கள் தங்
கள் இடத்தைவிட்டு நகர்ந்தாரில்லை. இதனால் அலாவுடீன் என்
னும் முசல்மான் அரசன் சண்டைசெய்து சண்டைசெய்து சோ
ர்வும் களைப்பும் அடையலாயினன். இராஜ புத்திரர்களையும் சித்
தூரையும் விட்டுப் போய்விடலாமா என்று அலாவுடீன் எண்
ணும்படி நேரிட்டது. ஆயினும் பத்மினி மாதைக் கைப்பற்ற
இன்னொரு பிரயத்னம் செய்துபார்க்கலாமென்று இராஜ புத்திரர்
களிடம் ஒரு தூதனை அனுப்பினான். பத்மினிமாதை ஒருதரமா
வது கண்ணால் பார்த்துவிட்டால் இராஜ புத்திரர்களுடன்
சமாதானஞ் செய்து தனது சேனைகளை யிட்டுக்கொண்டு தன்
னூர்போய் விடுவதாக அலாவுடீன் அந்தத் தூதருடன் சொல்லி
யனுப்பினான். இராஜ புத்திரர்களும் தங்கள் நிலைமை அதிக துர்ப்
பலமாயிருந்ததை நோக்கி என்ன உத்தரம் அலாவுடீனுக்கு அனு
ப்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பெரியகூட்டம் ஒன்றுகூட்
டினார்கள் பத்மினி இராணியின் பிரதிபிம்பத்தை ஒரு கண்ணா
டியில் பார்க்கச் சம்மதிப்பட்டால் அவ்விதம் அலாவுடீன் பார்ப்
பதில் தீங்கில்லை யென்றும்அப்படி கண்ணாடியில்பிரதிபிம்பத்தைப்



பார்க்க வரும்பொழுது சில போர்வீரர்களுடன் தான் கோட்
டைக்குள் அலாவுடீன் பிரவேசிக்கலா மென்றும் அக்கூட்டத்
தில் தீர்மானித்தார்கள். இந்தத்தீர்மானத்தை அலாவுடீனுக்குத்
தெரிவித்தார்கள். அவனும் அதற்குச் சம்மதித்தான். பத்மினி
இராணியின் உருவைக் கண்ணாடியில் காட்ட ஒரு நாள் குறிக்கப்
பட்டது. சண்டை முற்றும் நின்றுவிட்டது. குறித்தநாளில் குறி
த்த காலத்திலே அலாவுடீன்வந்தான்; அவனுக்குப் பத்மினி யெ
ன்னும் இராணியின் பிரதிபிம்பம் கண்ணாடியில் காண்பிக்கப்
பட்டது. இவ்வாறு தான் பத்மினியின் உருவத்தைக் கண்டதற்கு
அதிக திருப்தி யடைந்தவனாகக் காண்பித்துக்கொண்டது மன்றி
இராஜபுத்திரர்ஊர்மேல் படையெடுத்துவந்து இத்தனை நாள் சண்
டைசெய்ததற்காகத் தான்அதிகத் துயரப்படுவதாகவும், தான்இற
ந்துபோகு மளவும் நண்பனாக இருப்பதாகவும், வாக்குதத்த மளி
த்தான். பீமன்சிங்கினிடம் விடைபெற்றுப் போகாமுன் பின்வரு
மாறு சொன்னான். "எனது அரிய சினேகிதனே! இராஜபுத்திர
ஜாதியார் இவ்வளவு வீராவேச முடையவரென்றும், அவர்களு
டைய இராஜ காரியத்தை நடத்திவரும் நீ இவ்வளவு மேம்பா
டானகுணத்தை யுடையவனென்றும், புகழும் கீர்த்தியும் நிரம்பப்
பெற்றவனென்றும் எனக்குத்தெரிந் திருந்தால் நான் யுத்தத்தி
ற்கு வந்தே யிருக்கமாட்டேன்; உங்கள் நட்பையடையக் கோரி
யிருப்பேன். உன்னுடைய நட்பால் இன்று நான்மிகவும் கண்ணிய
மடைந்தேன். இன்று முதற் கொண்டு இராஜ புத்திரர்களுக்கும்
முசல்மான்களுக்கும் பகைமை போய்விட்டது. பகைமை இனி
எப்பொழுதுமே உண்டாகாது" என்று இவ்வாறான அன்புவா
ய்ந்த மொழிகள் கூறி பீமன் சிங்கை ஆலிங்கனஞ் செய்து அவ
னது கரத்தைத் தனது கரத்தால் பிடித்துக் குலுக்கிப் பேருவகை
காட்டிப் பின்னுமொரு மொழி பகரலாயினன். "ஒருவரை விட்டு
ஒருவர் நாமிப்பொழுது பிரிந்து செல்லாமுன் நான் ஒன்று உன்
னைக்கேட்டுக் கொள்ளுகிறேன். நீ ஆசைபங்கம் செய்யமாட்டா
யென்று நம்புகிறேன்; அது யாதெனில் நாளைக்கு நீ என்னுடைய
பாசறைக்கு வந்து உனது சன்னிதானத்தால் என்னைக் கண்ணி
யப்படுத்த வேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்" என்
றான். சத்தியசீலனும் கம்பீரமுடையவனுமான பீமன் சிங்கென்
னும் மன்னன் அலாவுடீன் கபட வெண்ணத்துடனே ஏதோ
தீங்குசெய்ய நம்மை அழைப்பிக்கின்றான் என்று சங்கியாது அப்

படியே ஆகுக என்று மறுமொழி பகர்ந்தனன். அலாவுடீன் மன உல்லாசத்துடன் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

தான் வாக்குதத்தம் செய்த வண்ணம் சில ஆட்களுடன் பீமன் சிங்கென்பவன் குதிரை மீதேறிக் கோட்டையை விட்டுப் புறப்பட்டு முசல்மான் அரசனிருந்த பாசறையை நோக்கிச் சென்றனன். ஆனால் நம்பிக்கைத் துரோகியாகிய அந்த அலாவுடீன் பீமன்சிங் பாசறைக்குப் போகும் வழியில் நூற்றுக்கணக்கான போர் வீரர்களை ஒளித்துவைத்துக் கொண்டிருந்தான். பீமன்சிங் தங்களை நெருங்கிவந்த வுடனே திடீரென்று அவன்மேல் விழுந்து இராஜ புத்திரர்கள் பீமன்சிங்கை இரக்ஷிக்கக் காலந்தராது முசல்மான்கள் பீமன் சிங்கைக் கைதியாக்கிக் கொண்டனர். இச்சமாச்சாரத்தைப் பாசறையிலுள்ள அலாவுடீன் கேள்விப்பட்ட வுடனே பேருவகை அடைந்தான். சித்தூரிலோ இது அதிக மனக்கலக்கத்தையுங்குழப்பத்தையும் உண்டாக்கியது. இவ்விதமாக மனக்கலக்கத்தாலுங் குழப்பத்தாலும் இடியுண்டு வருந்திக் கொண்டிருந்த இராஜபுத்திரர்களிடம் அலாவுடீனால் அனுப்பப்பட்டதூதன் ஒருவன் வந்து பின்வருமாறு உரக்கக் கூவினன். அடே இராஜ புத்திரர்களே! நீங்கள் இப்பொழுதுஉங்கள் பத்மினி இராணியை எங்களுடைய தளகர்த்தரும் மன்னனுமாகிய அலாவுடீன் வசம் இந்த க்ஷணமே கொண்டுவந்து விடாதிருப்பீர்களானால் உங்கள் இறைவனாகிய பீமன்சிங் கென்பவன் கொல்லப்படுவான். சண்டையும் மறுபடியும் துவக்கப்படும். இது எங்களுடைய இராஜன் தாகீதென்று செவ்வனே யறியுங்கள் என்றான். இவ்வாறு செருக்குடன் முசல்மான் தூதன் கதறிய மாற்றங்களைச் செவியேற்ற இராஜ புத்திரர்களின் மனமெப்படி யிருந்திருக்கலாமென்றுமனதினால் யூகித்துணரக் கூடுமேயன்றி வாக்கால் விவரித்துரைக்கற் பாலதன்று.

இலக்ஷ்மணசிங் இராணா என்பவன் ஒரு சிறுபையன்; பீமன்சிங்கின் குமாரர்கள் பன்னிரண்டு பேரும் அவ்விதமே மிக இளைஞரா யிருந்தனர். பீமன்சிங்கை முசல்மான்கள் நம்பிக்கைத் துரோகஞ் செய்து சிறையில் அடைத்து விட்டார்கள் என்று தெரிந்த வுடனே சேனாதி பத்யத்தை பத்மினியின் சகோதரனாகிய கோர்சிங் கென்பவன் வகித்துக் கொண்டான். ஆனால் இராஜாங்கத்தை மாத்திரம் பத்மினி இராணிதானே நடத்த



எடுத்துக் கொண்டனள். தனது கணவனாகிய பீமன்சிங்கென்பவன் முசல்மான்கள் கையில் அகப்பட்டுக் கொண்டானே என்கிற சமாசாரம் பத்மினிமாதைத் துக்கக்கடலில் ஆழ்த்திப் பிரமையடையும்படி செய்யவில்லை. அவனை அம்முசல்மான்களின்வசத்தினின்றும் விடுவிக்கும் மார்க்கத்தை யோசிக்கலா யினள். உடனே ஒரு பெரிய சபை ஒன்று கூட்டினள். அதில் பெரியோர்களையும், சர்தார்களையும், தளகர்த்தர்களையும், பிரபுக்களையும், சிற்றரசர்களையும், வரவழைத்தனள். எல்லாரும் வந்து கூடியவுடனே பீமன் சிங்கை மீட்கும் வகையை யோசித்துச் சொல்லும்படி ஆஞ்ஞாபித்தனள். பத்மினி மாதைக் கைப்பற்ற வேண்டுமென்னும் பிடிவாதங் கொண்ட துராத்மாவான அலாவுடீன் என்பவன் எந்த ஏற்பாட்டுக்குத்தான் சம்மதிப்பான்; சண்டைசெய்து அவனை வெல்லலாமெனில் அதுஅசாத்தியமாக இருந்தது. என்ன செய்வதென்று அச்சபையோருக்கு ஒன்றும் புலப்படாமல் நடுக்கடலில திசைதப்பி மயங்கும் மாலுமியைப் போலத் திகைத்து நிற்பதைப் பார்த்துப்பத்மினி சூழ்ச்சி ஒன்றுஎடுத்துரைத்தனள். தான் அலாவுடீனிடம் செல்வதாகவும் அப்படிச் செல்வதால்அலாவுடீன் எண்ணம்கைகூடாமலும் அவளது பதிவிரதா தருமம் குலையாமலும்இருக்கும்படியான மார்க்கத்தைச் சபையோருக்குத் தெளிவாக எடுத்துக் காட்டவே, அச்சபையோரும் அவளது ஏற்பாட்டை நன்று நன்று என்று கைகொட்டி அங்கீகரித்தனர். இந்த ஏற்பாட்டின் பிரகாரம் பத்மினி மாது உம்மிடம்வரப் பிரியமுள்ளவளா யிருக்கின்றனள். ஆனால் அவள்மேலிருக்கும் பேரன்பினால் அவளது தாதிகள் அவளைப் பின்தொடர்ந்து உமது கூடாரத்தின் வாசற்படி வரை வந்து வழிவிட்டுச் செலவு பெற்றுப் போக உத்தரவுகொடுக்க வேண்டுமென்று அத்தாதிகள் எல்லோரும் கண்ணீர்விட்டு மிகவும் மன்றாடி பத்மினி இராணியைக்கேட்டுக் கொள்கின்றமையின் அத்தாதிகளும் திரைபோட்ட பல்லக்குகளுடன் வரும்படி தாங்கள் உத்திரவு அளிக்க வேண்டும். இவ்விதம் பத்மினி மாது தங்கள் வசம் ஆனவுடனே பீமன் சிங்கை விடுவிக்க வேண்டும். இது தங்களுக்குச் சம்மதமாயின் சமாதானஞ் செய்ய இராஜ புத்திரர்கள் தயாரா யிருக்கின்றனர் என்று இவ்வாறு சொல்லும்படி ஒரு தூதனுக்குக் கட்டளையிட்டு அல்லாவுடீனிடஞ் செல விடுத்தனர். அந்தத் தூதனும் அலாவுடீனிடம் அவ்விதமே போய்ப் புகன்றனன். இதைக்கேட்டவுடனே காமுக

னை அலாவுடீன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனன். இராஜ புத்திரர்கள் சொல்லியனுப்பிய ஏற்பாடுகள் யாவற்றிற்கும் எனக்கு முற்றும் சம்மதியே; நீ விரைவாக அவர்களிடம் திரும்பிச் சென்று பத்மினிமாதைக் காலதாமதஞ் செய்யாமல் என்னிடம் வரும்படி சொல் என்று அலாவுடீன் மறுமாற்றங்கூறித் தூதனை அனுப்பி விட்டான்.

தூதன் வந்து அலாவுடீன் சம்மதத்தைத் தெரிவித்தவுடனே பத்மினி இராணி பல்லக்கிலேறிக் கோட்டையை விட்டுவெளி வந்தனள். அவளை 700 பல்லக்குகள் பின் தொடர்ந்து வந்தன; அதிக பல சாலிகளான இராஜபுத்திரர்கள் இப்பல்லக்குகளைச் சுமந்து சென்றனர். இவ்வாறு சுமந்து சென்ற இராஜ புத்திரர்கள் தங்கள் உடுப்புகளில் போர்செய்யும் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தனர். ஒவ்வொரு பல்லக்குள்ளும் இரண்டிரண்டு போர் வீரர்கள் பூரண ஆயுதபாணிகளாய் உட்கார்ந்துகொண் டிருந்தனர். இவர்களுக்குத் தளகர்த்தனாகிய கோராவும் அவனது குமாரனாகிய 12 வயதுள்ள படால் என்பவனும் ஒரு பல்லக்கில் ஏறி பத்மினிமாதைப் பின் தொடர்ந்துசென்றனர். பல்லக்கிலேறி வந்த யாவரும் தாதிகளென்றே முசல்மான்கள் எண்ணினர். ஐயம் ஒன்றும் தட்டாமையால் இராணியின் வரவை இராஜ மரியாதையுடன் கண்ணியப் படுத்தித் திரைபோட்டு மூடியிருந்த 700 பல்லக்கையும் முசல்மான் காவலாளிகள் பாசறைக்குள் செல்ல விடுத்தனர்.

பத்மினி மாதைச் சந்திக்க அலாவுடீன் விரைந்து ஓடி வந்தனன். அப்போது திரைக்குள்ளிருந்தபடியே பத்மினி மாது ஒரு மொழி கூறினள். அது யாதெனில் "ஓ! மன்னர் மன்னனே! யான் உமது ஆதீனமாகவிருக்கும்படி வந்திருக்கிறேன். உமது ஆதீனமாகா முன் கடைசியாக என் கணவனை ஒருதரம் பார்த்துப் பேச ஆவல் கொண்டவளாயிருக்கிறேன். தாங்களிதற்கு உத்தரவு அளிக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டனள். காமாந்தகாரத்தால் சூறை கொள்ளப்பட்டு அறிவு மயங்கிய அலாவுடீன் இந்த வேண்டுகோளுக்கிணங்க யாதொரு ஆக்ஷேபனையுங் கண்டிலனாகையால் பீமன்சிங்கை யடைத்து வைத்திருந்த் சிறைச்சாலைக்குப் பல்லக்கைக்கொண்டு போகும்படி கட்டளையிட்டனன்.



இதற்கு முந்திய நாள் இரவில் இரண்டு இராஜபுத்திரர்கள் வாயுவேக மனோவேக மென்று சொல்லக் கூடியதாயும், மின்னல் வெளிச்சம் தோன்றி மறையுங் காலத்திற்குள் அதிக தூரம் விரைவாய்ச் செல்லக்கூடியதாயும் இருந்த இரண்டு குதிரைகளுடன் முசல் மான்கள் வேஷம்பூண்டு முசல் மான்கள் பாசறைக்குள் காவலாளிகளின் கண்ணில் மண்ணைப்போட்டுச் சென்று பீமன் சிங்கிருந்த கூடாரத் தண்டை பத்மினிமாதின் கட்டளைப்படி அந்தக் குதிரைகளுடனே காத்துக் கொண்டு நின்றிருந்தனர். பீமன் சிங் இராணுவின் கூடாரத் தண்டை பல்லக்குகள் வந்தவுடனே, தான் கட்டளையிட்டபடி இரண்டு இராஜபுத்திரர்கள் குதிரைகளுடனே காத்துக் கொண்டிருந்ததைக் கண்ட மாத்திரத்திலே பத்மினி இராணியின் மனக்லேசம் வெயிலின்முன் பனிபோல நீங்கிற்று. பத்மினி மாது தன் கணவனிருந்த கூடாரத்திற்குள் சென்றபோது இதைக்கண்ட பீமன் சிங் அதிக ஆச்சரியமடைந்து "பெண்ணே! நீ என்னகாரியம் செய்தனை? நீ ஏன் இங்கே வந்தனை?" என்று கூவி அலறினன். "என்பிராண நாயகனே! சந்தடி பண்ணாதேயும், உம்மை விடுவிக்கத்தகுந்த ஏற்பாடுசெய்து வந்திருக்கிறேன். நாம் ஏறிப்போக இரண்டு குதிரைகள் வெளியே நிற்கின்றன. காலதாமதம் செய்யாமல் உமது உடுப்புகளையும் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு புறப்படும் புறப்படும் என்று அவன் காதண்டை சந்தடி செய்யாமல் கூறினள். அவனும் அவ்வாறே தயாராய் விட்டான். இருவரும் சரேலென்று கூடாரத்திற்கு வெளியேவந்து அங்கு நின்று கொண்டிருந்த குதிரைகளின் பேரில் ஏறிக்கொண்டு சதிபதி யிருவரும் மறைந்து விட்டனர். இதனைக் காவலாளிகள் எதிர் பாராமையின் இவர்களைத் தடுக்க இயலாமற் போயிற்று.

(வரும்).

P. Manikasamy Moodr, Rangoon.

## காலத்தினருமை.

மிகுபிரசித்தி பெற்றிருப்பதும் இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலமென வகுக்கப்பட்டிருக்கிற முக்காலத்திற்கும் பொதுவாயிருப்பதும், அநாதியாகவுமுள்ள காலமானது, க்ஷணம், நாழிகை, நாள், பக்ஷம், மாதம், வருஷம், யுகம், பிரளய முத

லாகவும் கணிக்கப்பட்டிருக்கிறது. 'எல்லா ஜீவராசிகளையும் தன் வயப்படுத்தும் காரணத்தாலேயே காலம் என்னும் சொல் காலன் என்னும் காரியமாக நின்றது. அத்தகைய காலனானவன் வெகுகாலமாக, காலத்தின் நியதியை முன்னிட்டு காலத்தை வீணாக்குவோர்களின் காலத்தை அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறான். தன்னை அறியவிரும்பும் ஒவ்வொரு ஜீவனும் காலனானது எவ்வாறு காலத்தைக் குறியாகக் கொண்டுளதோ அவ்வாறே குறியாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு குறிப்பாகக் கொண்டாலன்றோ காலனை ஜயிக்கலாம். காலமானது மறதியையுடையவனுக்கு மறலியாக அஃதாவது காலனாக மாறுகின்றது. ஆகவே வெகுநுட்பமான காலத்தையும் மிகுவிழிப்போடிருந்து அதன் கதியை அறிவதே அறிவுடையோர்களின் கடமையாம்.

நாம் இப்பொழுது சொல்வதால் காலத்தினருமையை அறிந்தவர்களாகக் கொள்வோம்; காலம் மிகமேலானது; மிகச்சிறந்தது; மதிப்புள்ளது எனத்தெரிந்துகொண்டிருக்கிறோம். அத்தகையகாலமானது, கைப்பொருள்போல, ரத்னங்கள்போல, உபயோகப்படுத்த நமது வசத்தில் கிடைத்திருக்கிறது; முன்னோர்களால் சம்பாதிக்கப்பட்டு அதனருமை யறியாது நமக்குக்கிடைத்திருக்கும் பொருளைச் செலவிடுவதுபோல, இக்காலத்தைச் செலவிடுவதுதக்கதன்றாம். எந்தப் பொருளானது சரியான தருமத்தினாலடையப்படுகின்றதோ, அந்தப் பொருள் சுகத்திற்குக்காரணம்; நமது கண்முன்பாக, காலமானது, இதோநானிருக்கின்றேன், என்னை, உனது இஷ்டமானபடி விளையாடு என்று சொல்லுகிறதை நீ பார்க்கலாம். பொழுதுபோகவில்லை, எக்காரியத்தை மேற்கொள்ளலாம் என்றெண்ணி இன்னது செய்வதென்றறியாது, சீட்டு விளையாடல், வீண்வார்த்தை பேசுதல், வம்பாடுதல் முதலிய செய்கைகளில் தலையிடுவதை நீ நிதானித்துப் பார்க்கும்பொழுதெல்லாம் மிக அருமையானகாலம், உன்வசத்தில் கிடைத்திருப்பதை நீ உணரலாம்; விடாநோயாளிகள், தங்களுக்குள்ள எல்லாச் செல்வத்தையும் கொடுத்து காலத்தைக் இச்சிக்கிறார்கள்; உண்மையாகவும் சுருக்கமாகவும் சொல்லுமிடத்து ஒருக்ஷணப் பொழுதிற்காவது ஈடாகவுள்ள வஸ்து இவ்வுலகில் ஒன்றுமில்லை. அத்தகைய காலம் உன்கைப் பொருளாக இருப்பதை யெண்ணி யெண்ணிப் பார்.



உலகத்தில் துக்கப்படுவோரனைவரும் காலத்தினருமையை அறியாதவர்களே. காலத்தினருமையை அறிந்திருக்கிறவர்கள் தங்கள் காலத்தைக் கடத்துவதில் சாஸ்திரங்களைக் கண்களாகக் கொண்டிருக்கிறார்கள். அளவிடவொண்ணாத ஆச்சர்ய ஸ்வரூபமானகாலத்தினாலறிவுறுத்தப்பட்ட ஜீவகோடிகளில் கீழான எறும்பினங்களும் அந்தந்தக்காலங்களில் ஆகாராதிகளைத் தேடிக்கொள்வதைக்காணும் பகுத்தறிவோடு கூடிய மனிதர்கள் அவ்வண்ணம் செய்யத்தவறினால் அவர்களை நாம் காலாதீதரென்றன்றி மற்றெவ்வகையினரென்று கூறமுடியும்? ஆனால் காலத்தை அதிக்கிரமித்தவர்கள் மார்க்கண்டேயர் போன்றவர்களாம் என்பது பிரமாணமன்றோ?

அன்பர்களே! அன்றாடம் நிகழும் நமதனுபவத்தையே சிறிது ஆழ்ந்து பார்ப்போம். ஊணுறக்கமாதீனர்களான நாம் இப்பொழுது பசிவேளை வந்துவிட்டது, ஆகையாலுண்போம், உறக்கவேளை வந்துவிட்டது, ஆகையாலுறங்குவோம் என்னும் ஸ்வதருமங்களைச் செய்யத்தூண்டுகிற காலமானது, சாஸ்திரங்களினால் ஒருபொழுதாவது, முன்னதற்கு விரோதமாகப் பிரவர்த்திக்கத் தூண்டுகிறதேயில்லை. இக்காலத்திலுண், இப்பொழுதுறங்கு என்றறிவிக்கிற காலதத்துவத்திற்கு விரோதமாக நடக்கிற அகங்காரத்தோடு கூடியபுருஷன் அவஸ்தையை அடைகிறான் என்பது எவ்வாறு அனுபவமோ (தக்கவேளையில் சாப்பாடில்லை, தூக்கமில்லை அதனால் வியாதியடைந்தேன்) அவ்வாறே காலதத்துவகதியை அறிவிக்கிற சாஸ்திரங்கள், முறைபாக பிர்மசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம் என்ற படிகளிலுள்ள புருஷனை, நீ கல்விகல், ஆசார்ய பக்திசெய் என்றற்றொடக்கத்தனவான செய்கைகளை, இதைச்செய், இதைச்செய் என்றறிவிக்கின்ற வண்ணம் அனுஷ்டிக்காதவன் தர்மார்த்தங்களான புருஷார்த்தங்களையிழந்து கேவலம் நாயினுங் கடையாகிறான் என்று சொல்வதற்கென்னதடை?

க்ஷணம், நாழிகை, பகலிரவு முதலியவைகளாகப் பரிணமித்திருக்கிற காலமானது, நீ இச்சிக்கிற ஒவ்வொரு வஸ்துவையும் கொடுப்பதற்கு உனது முயற்சியை எதிர்பார்க்கிறது. அவ்வாறே முயற்சியற்றவர்களின் திரவியங்களை அபகரிக்கின்றது.

அன்பனே! நமக்கிப்பொழுது காலரத்னம் கிடைத்திருக்கிறது; நமதிச்சைகளுக்குள் எந்த இச்சையானது "இவ்வருமையான காலரத்னத்திற்கு ஈடாக நிற்கும்? இது நமதற்ப அறிவினால் தீர்மானிக்க முடியாததாம். பதார்த்தங்களை அறிவதற்குச் சாதநமாயுள்ள கண்ணைப்போல் அறிவானதெய்வத்தை அறிவதற்குச் சாஸ்திரங்கள் சாதநமாயிருக்கின்றன.

பிறபதார்த்தங்களை "இது புஸ்தகம் இது படம்" என்றுபார்க்கிற கண்ணானது தன்னையாரென்று பார்க்க மனதின் ஸஹகாரியாகவும் மனது தன்னையாரென்று நோக்கத் தான் பரமார்த்த ஸ்வரூபமாகவும் ஆசார்ய அநுக்கிரகத்தா லுணருகின்றது. இவ்வுணர்வு காலத்தினருமையை யுணர்ந்த அறிவாளிகளுக்கே சித்திக்கின்றது.

எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டும், எனது இன்பமே எல்லா உயிர்களும் என்றதைக்காட்டும் பொருட்டும், கருணையினால் திருவுளங்கொண்டவதரித்த கண்ணன் "நான்காலஸ்வரூபியாக இருக்கின்றேன்" என அர்ஜுனனுக் குபதேசித்ததை நன்குணருபவர்கள் தங்கள் காலத்தைக் கடத்துவதில் கவலையைக் கொள்ளார்கள்.

ஆகவே யிந்நாள்வரை கடவுளை காலமாகயிருக்கின்ற வழியையுணராமற் போனதையெண்ணி, இது முதற் கொண்டே, இப்பொழுதே, வரும்காலன் என்னும் பயத்தை அறவே ஒழித்து, புராதனமான இந்துமதம் வருங்காலத்திலும் முன்னிற்பதுபோல முன்னின்று காலனை ஜயிக்க, ஜயத்தை அடைந்திருக்கிற கடவுளின் கட்டளைகளைக் கடவாது, காலங்களிற் செய்யவேண்டி அமைந்துள்ள, சாஸ்திரங்களிற் சொல்லிய மகான்கள் கூறியிருக்கிற, அறிவுடையோர்கள் அனுஷ்டிக்கிற கடமைகளைத் தவறுதுசெய்வோமாக. அவ்வாறு செய்கின்ற நேரந்தான் ஆனந்தமானநேரம், உல்லாஸமானகாலம், அழகான காலம், இச்சைகளனைத்தும் நிறைவேற்றப் பகவான் அவதரிக்கின்ற காலம்.

ஆகவே காலத்தைக்கடக்கக் காட்டியிருக்கிற பெரியோர்களுடைய மார்க்கங்களை நிதானித்து ஊன்றிப்பாருங்கள்; அவர்கள்



தங்கள் காலத்தை எவ்வாறு செலவழித்திருக்கிறார்கள் என்பதை உணருங்கள்; யாதொரு சாஸ்திரங்களிலேயே தங்கள்காலத்தைச் செலவழித்திருக்கின்றனர்களோ, அத்தகையசாஸ்திரங்களை வாசித்தாராயுங்கள்; அவற்றின் கட்டளைகளைக்கலக்காது நடப்பதுதான் கடவுளருளுக்குப் பாத்திரமாகும்வழி அவ்வழியிலேதான் சகல இன்பங்களும் நிரம்பியிருக்கின்றன. ஆதலால் அன்பனே! நீநடக்கிற எல்லாவழிகளினின்றும் திரும்பி நித்திரைக்குப் போகுந் தருணம், நீநடந்திருக்கிற உன்னுடைய வழிகள்சாஸ்திரங்களால் விரோதிக்கப்படவில்லையா? அறிவுடையோர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவா? நீசெலவழித்திருக்கிற உன்னுடையகாலங்களில் அவசியமில்லாது செலவழித்திருக்கிற ஒரு சிறுகாலத்தையாவது நீ காணவில்லையா? நீ செய்திருக்கிற செய்கைகளில் ஒன்றும் உனக்குத்துக்கத்தைக் கொடுக்கவில்லையா? என்பவற்றைப் பரிசீலனைசெய்து பார். அப்பொழுது கடவுள் கிருபைபுரிவாராக.

R. Venkataramier.

## யுத்தம்.

இப்போது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் மிகு உக்ரமாகி வருகின்றது. பிரெஞ்சுப்பெல்ஜியப் போர்முகத்தில் ஜெர்மானியரின் ஆதிக்யம் குறைவுபட்டு வருகின்றது; பிரெஞ்சு பிரிட்டிஷ் சேனைகளும், பீரங்கிகளும், ஆகாயவிமானங்களும் மீசரப்பட்டு, ஜெர்மன் அரண்களையும, ரயில்வே ஸ்டேஷன்களையும், குண்டு மருந்துச்சாலைகளையும் தகர்த்து வருகின்றன. ஜெர்மன் ஆகாய விமானங்கள் இங்கிலாண்டின் கடற்கரையோரத்திலுள்ள கிராமங்களின்மீது சென்று வெடிகுண்டுகளை யெறிந்து வருவதனால் பிரமாதமொன்றும் நிகழவில்லை. ஜெர்மன் கீழ்நீர்க்கப்பல்களுள், 20 கப்பல்கள் கடற்கிரையாயினமையின், அவற்றின் ஆரவாரம் குறைந்து வருகின்றது.

கிழக்குப்போர்முகத்திலும் ஆஸ்டிரிய ஜெர்மானியரின் வன்மை குறைந்துவருகின்றது. இங்கு ருஷ்யர் மிகு உக்ரமாக வெதிர்த்து நிற்கின்றனர். ருஷ்யத் தெற்குப் போர்முகத்தில் ஆஸ்

டிரியஜெர்மானியர் மிகுதியுந் தோல்வியடைந்து வருகின்றனர். இங்குப் பகைவர் ஆயிரக்கணக்காக ருஷ்யர் வசம் சிறைபாகின்றனர். மாரிக்காலம் ருஷ்யாவில் வருகின்றமையின், ஆஸ்டிரிய ஜெர்மானியரின் நிலைமை கவலைக்கிடமாகும்.

இத்தாலியப் போர்முகத்தில் ஆஸ்டிரியர் தோல்வியே யடைந்து வருகின்றனர்.

டார்டனல்சில் நடக்கும் சண்டை தாமதமாகவே நடந்து வருகின்றது. பிரிட்டிஷாரிங்குச் சிறிது சிறிதாகவே முன்னேறிச் செல்லுகின்றனர்.

செர்பியர் போர்க்குத் தயாராகி யிருக்கின்றனர். செர்பியாவின் தலைநகரத்தை நேசராஜாங்கத்தாரின் பீரங்கிகளும், ஆகாய விமானங்களும் காத்து வருகின்றன.

துருக்கிக்கு யுத்ததளவாடங்களை ஜெர்மானிய ரிதுகாறும் ரொமேனியாவின் மூலமாக அனுப்பிவந்தனர்; இனி அவ்வாறு செய்தல் கூடாதென்று ரொமேனியா ஆட்சேபனை செய்திருக்கின்றது. இதனால் துருக்கிக்குப் பலங்குறைந்து போகும்.

ரொமேனியா, பல்கேரியா, கிரீஸ் தேசங்கள் யுத்தத்திற்குச் சந்நத்தமாகி வருகின்றன. இத்தேசங்கள் எந்தக்கட்சியிற் சேருமென்று தெரியவில்லை.

துருக்கியில் குருக்கள்மார்கள் கூட்டங்கூடி, அன்வர் பாட்சாவின் மீதும், சிறியதுருக்கிக் கட்சியாரின் மீதும், ஜெர்மானியர் மீதும் விரோதபாவங்காட்டி வருகின்றனர்; அன்வர் பாட்சாவையும், அவரைச்சேர்ந்தவரையும், மதப்பிரஷ்டஞ் செய்திருக்கின்றனர். குருக்கள்மார்களின் செய்கை துருக்கி ஜனங்களுக்குஞ் சேனைகளுக்கும் யுத்தத்திற்கு விரோதமான உணர்ச்சியை யுண்டாக்கியிருக்கின்றது. இதனால் துருக்கி நேசராஜாங்கத்தாரோடு சமாதானஞ் செய்துகொள்ளுமென்று தெரிகின்றது.

யுத்தம் நீட்டித்துவருவது உலகத்திற்குக் கஷ்டநஷ்டங்களையுண்டாக்கிவருவதாயிருக்கின்றது. யுத்தம் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

OFFICE OF THE REGISTRAR OF ...
7 - JAN 1915
MADRAS

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

| | | |
|---|---|---|
| VOL-11<br>தொகுதி-11 | October<br>அக்டோபர்மீ 1915. | No-3.<br>பகுதி-3 |

# கிட்டாதாயின் வெட்டெனமற.

விரும்பிய பொருளனைத்தும் நம்மனோர்க்கு விரும்பியவாறு கிடைத்தல் நியமமாகவின்மையின், விரும்பிய பொருள் கிடைக்காதபோது அதுபற்றி வருத்தமுறுதல் எவர்க்குந் தகுதியுடையதன்றாம். நாம் மேற்கொண்ட காரியங்கள் முடிவுபெறுங் காலம் வந்தபோ தல்லாமல் மற்றைக்காலத்தில் முடிவுபெறாதனவாயிருத்தலை நோக்குமிடத்து, நம்மனோர் மேற்கொண்ட காரியங்கள் முடிவதற்கும் முடியாமைக்கும் நல்வினை தீவினை யென்பன முறையே காரணமா யிருக்கின்றனவென்பது நன்குவிளங்கும். நம்மனோர் மேற்கொண்ட காரியங்கள் முடிவுபெறுவதற்குக் காரணம் நல்வினையே யாமென்றுணர்வோர் தாம் விரும்பிய பொருள்கிட்டாதொழிவதுபற்றி வருத்த முறுவதேயில்லையாம். "மேலைத், தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்" என்றுள்ள பிரயோகத்தை நன்கூகித்து நோக்குவோமாயின், நமக்குக் கிட்டாதபொருளைக் குறித்து நாம் மட்டில்லாத துக்கத்தை யடைந்து வருத்தமுற மாட்டோம்.

பாண்டவர் ஆண்மை அறிவு முதலியவற்றாற் சிறந்திருந்தனரென்பது நூல்வழங்கில் மிகு பிரசித்தமாமன்றோ? அவர்கள் திருமாலின் அவதாரமாகிய கிருஷ்ணரது உதவியை யுடையவராயிருந்தும், தம்பகைவரை அவர் தீமை செய்த அப்போதே கொல்லாமைக்குக் காரணம் யாது? அவரை வெல்லுதற்குரிய காலம் வாராமையேயாம். ஆனால், அவர்கள் தம் பகைவரை வென்றபின் தாம்

கருதியவாறு போகங்களை யனுபவித்தனரோ வெனின், இல்லை. உறவினர், நண்பர், மக்கள் முதலாயினோரைப் போர்முகத்திலிழந்த அவர்கள் தாம் கருதியவாறு போகத்தை யனுபவித்தாரெனல் கூடுமோ? இதனால், நம்மனோர் கருதியவற்றுள் சில கிடைக்கும்; சில கிடைக்கா; கிடையாதவற்றைப்பற்றி வருந்துதல் கூடாது; அவற்றை யுடனே மறந்துவிடல் வேண்டுமென்பது பெறப்படுவதாம். நாம் விரும்பிய பொருள் நமக்கு விரும்பியவாறு கிடைப்பதும், மாறாகக் கிடைப்பதும் நம்வயத்தனவன்று; கர்மத்தின் வயத்தனவாமென்று அடிக்கடி நினைத்து வருபவர் அடிக்கடி தாம் விரும்பிய பொருள்களுள் பலவோ சிலவோ ஒன்றோ விரும்பியவாறு கிடையாமைபற்றித் துன்புறுவதில்லையாம்.

"கருதிப்போய்க், கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல், முற்பவத்திற் செய்த வினை (சிறந்த பயனையடையலாமென்று நினைத்துச் சென்று கற்பக விருட்சத்தை யடைந்தவர்க்கு அவ்விருட்சம் எட்டிக்காயைக்கொடுத்ததாயின், அதற்குக் காரணம் அவர் முற்பிறப்பிற்செய்த தீவினையேயாகும்)" என்று வாக்குண்டாம் கூறுவது நமக்கு யாதறிவுறுத்துகின்றது? யாதும் நீ கருதியவாறு முடிவதன்று; நீ செய்தவினைக் கேற்றவாறாக முடிவதாமென்பதை யன்றோ அறிவுறுத்துகின்றது? ஆதலால், விரும்பியபொருள் விரும்பியவாறு கிடையாததுபற்றி நாம் வருத்தமுறுவது ஒருபோதுங் கூடாதாம். நாம்விரும்பியவற்றுள் ஒன்றோ, சிலவோ, பலவோ கிட்டாதொழிதல் நமக்கு நன்மையையே தருவதாமென்று கருதிவருவோமாயின், கிட்டாத பொருளைப்பற்றி வருந்துவது நிச்சயமாக வில்லையாம். ஒருகாலத்தில் நாம்விரும்பியவற்றுள் ஒன்றோ, சிலவோ, பலவோ கிட்டாமைபற்றி வருத்தமுறும் நாம் அவ்வொன்றோ, சிலவோ, பலவோ கிட்டியிருக்குமாயின், இன்னின்ன ஆபத்துக்களுண்டா யிருக்குமேயென்று மற்றொரு காலத்தில் நினைத்தற்கு முரியவராவோம். நாம் விரும்பியவெல்லாம் நமக்குக் கிட்டிவிடுமாயின், பெருந் துஷ்டர்களாய் உலகத்திற்குப் பெரும்பகைவராய்விடுவோம். நம்மனோரது புத்தி பெரும்பான்மையுந்தீயனவற்றின்கண்ணேயே செல்லுவதாகவிருத்தலின், நம்மனோர் விரும்பியன வனைத்தையும் நல்லனவா யிருக்குமென்று சொல்லுதல் கூடுமோ? ஆகையால், நாம் விரும்பியவற்றுள் ஒன்றோ, சிலவோ, பலவோ நமக்குக் கிட்டாதொழி



ந்தமை நமக்கு நன்மையையே தருவதாமென்று கருதி வருத்தமுறாது வாழ்தல்வேண்டும்; இவ்வாழ்வு நம்மனோர்க்கு இன்பத்தையன்றித் துன்பத்தைத் தருவதில்லையாம்.

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா (வாராதபொருள்கள் வருத்தமுற்றழைத்தாலும் வாராவாம்; வரக்கூடிய பொருள்களை நீங்கள் போங்களென்று கடிந்துகூறினாலும் அவை போகாவாம்)" என்று நல்வழிகூறுவதை நம்மனோர்நன்குணர்தல்வேண்டும்; உணர்ந்தால், நாம் "கிட்டாதாயின் வெட்டென மற - நீ விரும்பியபொருள் கிடையாதாயின், அதனை விரைவாக மறக்கக்கடவாய்" என்று நமது ஔவைப்பிராட்டியார் கூறியிருப்பதற்கு நல்லிலக்கியமாக விருப்போம். நம்மனோர் தாம் விரும்பிய பொருள் கிடையாததுபற்றி வருத்தமுற்றுத் தீயசெயல்களைச் செய்வது எவ்வாற்றானுங் கூடாது; செய்தால், பழிபாவங்களே யுண்டாவனவாம். நமக்குப் பிரியமான ஒருவரிறந்தமைபற்றி யெத்தனை வருஷந்தான் புரண்டழுதாலும் அவர் வருவரோ? வாராரன்றோ? அவர் வாராரென்பதை யறியாது அவரைநினைந்தழுவதைச்சீக்கிரமாக மறந்துவிடுவதன்றோ இங்குச் செய்தற்குரிய செயல்? இவ்வாறு வாராத பொருளைப்பற்றி வருந்தாதிருப்பதே நமக்கு நன்மையைத் தருவதாம்.

காரியத்தைச்செய்வது நமது கடமை, அதனை முடிவுபெறச் செய்வது கடவுள் கடமையென்று தீர்மானித்து மெய்வருத்தம், பசி, உறக்கம், பிறர்செய்யும் நிந்தனை முதலியவற்றைக் கருதாது நாம் மேற்கொண்ட காரியத்தைச் செவ்வையாகச்செய்தல் வேண்டும்; அது முடிவுபெறா விட்டால் அதுபற்றி அணுவளவாக வேனும் வருத்தமுறுவது கூடாது; இவ்வாறு வாழ்வதே நமக்கு நல்வாழ்க்கையாம்.

"ஐங்காதம்போனாலும்தன்பாவந் தன்னுடனே"; "தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்றற்றொடக்கத்தனவாகவுள்ள பழமொழிகளை நாம் நன்குணர்வோமாயின் கிட்டாதபொருளை வெட்டெனமறந்து கிடைத்ததுகொண்டு திருப்தியுடையவரா யிருப்போம். இது நமக்குக்கிடைக்கமாட்டாதென்று நிச்சயமாக வுணர்ந்த பிறகு அதுபற்றி வருந்துவது கூடவே கூடாது; ஆனால், நியாயமாகக் கிடைப்பதுபற்றி முயற்சி செய்யாதிருப்பது ஒருவகையாலுங் கூடாது.

நம்மனோர் விரும்பிய பொருள் கிடைத்தவிடத்து மகிழ்ச்சியும், கிடையாதவிடத்து வாட்டமுமடையாது எப்போதும் ஒரு தன்மையராக விருக்கவேண்டுமென்று கருதியே நமது தமிழ்த் தெய்வமாகிய ஔவையார் 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்றருளிச் செய்தனர்; இதனைக் கடைப்பிடித்து ஒழுகிவருவோமாயின், நாம் கவலையில்லாது வாழ்தற்குரியவராவோம்.

சிறு பஞ்சமூலம்.

"கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்."

தண்டலையார் சதகம்.

"அட்டதிசை யெங்கணும்போ யலைந்தாலும் பாதாள மதிற்சென் றாலும், பட்டமென வானூடு பறந்தாலு மென்னவதிற் பயனுண் டாமோ, பிட்டுவா மண்சுமந்த தண்டலையா ரேமுன்னாள் பெரியோர் கையில், இட்டபடி யேயொழிய வேறுசைப் படின் வருவ தில்லை தானே."

இப்பிரயோகங்கள் இங்கு நன்குணர்தற் பாலனவாம்.

சுக நூல்.

31-ம் பாடம்.

தோல் சம்பந்தமான நோய்கள்:—

தொத்து நோய்க் கிருமிகளெல்லாம் சரீரத்தின் இயற்கையான துவாரங்கள் வழியாகத் தேகத்திற்குட் செல்லுகின்றன. தோலானது ஒரு சிலாக்கியமான கவசந்தான். ஆனால், அதன்மீது எங்ஙனமாயினும் ஒரு இலேசான காயம் ஏற்பட்டால், அவ்வழியாகக் கிருமிகள் உள்ளே சென்று விருத்தியாகிக் கொண்டு போம். ஆகையால், தேகத்தின்மீது ஏற்படக்கூடியனவாகிய இரணங்களைத் தகுந்த கவனத்தோடு சிகிச்சைசெய்தல் வேண்டும்.

இரணங்கள் சுலபமாகச் சீழ் பிடிக்கும் சுபாவமுடையன. அதனால், அவை சீக்கிரமாகச் சொஸ்தமாவதில்லை. காற்றிலுள்ள அதி ஸூக்ஷ்மமான கிருமிகளே அவற்றை ஆறவொட்டாமல் கெடுக்கின்றன. ஆகையால், இரணங்களிலே காற்றுச் செல்லாவண்ணம், அவற்றைச் சுத்தம் செய்து கட்டுதல் வேண்டும். இக்காரி



யம் சுகமாக ஐரோப்பிய வைத்திய சாலைகளில் நடைபெறுகின்றது.

இரத்தக் காயங்கள்:—மிகவும் இலேசான காயங்களை "ப்ளாஸ்தர்" போட்டு ஆற்றிவிடலாம். இரத்தக் காயங்களுக்குச்செய்ய வேண்டிய சிகிச்சைகளை இரண வைத்தியர்கள் நன்கறிவார்கள். புதியவெட்டுக் காயத்தினின்று ஒழுகும் இரத்தத்தை உடனே நிறுத்த எத்தனித்தல் வேண்டும். இரத்தநாடி அறுபட்டிருந்தால், அதனினின்று ஒழுகும் இரத்தம் செவப்பாக இருக்கும். மேலும், அது ததும்பித்ததும்பிவடியும்; அப்போது அக்காயத்திற்குமேலே (பொதுவாக இருதயஸ்தானத்திற்கும் காயத்திற்கும் இடையில்) சதையைப் பலமாகக் கட்டிவிடுதல் வேண்டும். இரத்த நாளம் அறுபட்டிருந்தாலோ, அதனினின்று வரும் இரத்தம் கருமையான செவப்பாக இருக்கும்; சாதாரணமாக ஒழுகும்; அதை நிறுத்துவதற்குக் காயத்தின் கீழே சதையைப் பலமாகக் கட்டுதல் வேண்டும். எங்ஙனமாயினும், காயத்தின் மீது பழந்துணி நூலை வைத்து அமுக்குதல் நன்று; மேற்கண்ட சிகிச்சைகளை அதி சீக்கிரமாகச் செய்யவேண்டும். அதுதான் முக்கியம். தொடையின் இரத்தநாடியிலிருந்து 10 நிமிஷத்திற்குள் 12 இராத்தல் இரத்தம் வடிதல் கூடும்.

எலும்பு முறிதல்:—

எலும்புகள் ஒடிந்து போவதுண்டு. அப்போது அவ்வவயவங்களை அசைத்தல் அசாத்தியமாம்; எலும்பு ஒடிந்த இடம் சதை உப்பி, இரத்தங் கட்டிக்கொண்டு, கருமையாகக் காணப்படும்; வைத்தியர் வருவதற்குமுன், எலும்பு முறிந்த அவயவத்தைக் கொஞ்சங்கூட அசையா வண்ணம் செய்தல்வேண்டும்.

சுளுக்கு:—ஒரு எலும்பின் தலையானது எக்காரணத்தாலாயினும், அஃதிருக்கும் குழியைவிட்டுப் பெயர்ந்து விடுதல் "சுளுக்கு" எனப்படும். மந்திரவாதிகளைக்கொண்டு சுளுக்கைச் சொஸ்தப்படுத்த எண்ணங் கொள்ளுதல் தவறும்; வைத்தியராலேதான் எலும்பு யதார்த்தஸ்தானத்தை அடையும்; அவர் வருகிற வரையில் நோவைப் பொறுத்துக் கொண்டிருப்பதற்குச் சுளுக்குள்ள இடத்தில் குளிர்ந்த ஜல ஒத்தளம் போடுதல் நன்று.

நெருப்புக்.காயம்:—இது மிகவும் உபத்திரவமானது; இலே
சான காயத்தினுல் ஆபததில்லை; அது குளிர்ந்த ஜல ஒத்தளத்
தால் தீரும். ஆழமானபெரிய காயங்களால் மரணம் சம்பவிப்ப
துண்டு. காயத்தின்மேல் எண்ணெய்ச் சீலை போடுதல் வேண்டும்.
உடையில் தீப்பிடித்துக்கொண்டால், ஓடஎத்தனிக்காமல், உடனே
தரைமீது படுத்துக்கொண்டு உருளுதல் நன்றும்; ஓடினுல் தீ
அதிகரிக்கும்; கூடுமானுல், உடையைச் சீக்கிரம்களைதல்வேண்டும்.
கனமான ஒருதுப்பட்டியைக் கொண்டு தேகத்தை மூடிவிட்டால்,
தீ அவிந்து விடும்.

மூர்ச்சை:—பிரக்ஞை அற்று விழுந்து விடுதல் மூர்ச்சை
எனப்படும். மூர்ச்சை அடைந்தவர்களை நல்ல காற்றுள்ள இடத்
தில் தரைமீது படுக்கவைத்தல் சுகமாம்; முகம் வெளுத்திருந்
தால், கால்களைவிடத் தலையைக் கொஞ்சம் தாழ்வாகவைத்தல்
வேண்டும். உடனே உடைகளைத்தளர்த்துதல் அவசியமாம். கடை
சியாகக் காடியை முகத்தின்மீது தேய்த்தலும் சௌக்கியத்திற்கு
இடமாகும்.

## 32-ம் பாடம்.

## போலி மரணம்.

தூக்குப் போட்டுக் கொண்டாலும், விஷக் காற்றுகளைச்
சுவாசித்தாலும், நீரில் முழுகிப்போனுலும் போலிமரணம் சம்ப
வித்தல் கூடும். அப்போது குறைந்தபக்ஷம் ஒருமணிநேரம் வரை
யில் தகுந்த சிகிச்சைகளைச் செய்து பார்த்தல் விவேகமாம்;
ஏனென்றல், அநேக சந்தர்ப்பங்களில், ஒன்று அல்லது இரண்டு
மணிநேரஞ் சென்று உயிர் பெற்றவர்கள் அநேகர் இருக்கின்றார்
கள். தூக்கு விஷயத்தில் சீக்கிரமாகக் கயிற்றை வெட்டிவிடுதல்
முக்கியமாம். விஷக்காற்றுகளைச் சுவாசித்து மூர்ச்சை அடைந்த
வனைச் சுத்தமான நல்ல காற்றுள்ள இடத்திற்குக் கொண்டுபோக
வேண்டும்.

நீரில் முழுகப்போகிறவனை அல்லது முழுகிப்போனவனைக்
காப்பாற்றக் கூடிய உபாயங்கள்.

நீரில் முழுகிப்போகுந் தருணத்திலிருப்பவனைக் காப்பாற்று
தல், நீஞ்சத்தெரிந்தவர்களின் கடமையாகும். ஆயினும் விவேக
மும், பொறுமையு மில்லாதவர்கள் இச்சகாயத்தைச் செய்ய எத்



தனித்தல் அதிகக் கேட்டை விளைக்கும். காப்பாற்றப்போகிறவ
னுக்குக் கால்களால் நன்றாகநீஞ்சத்தெரிதலும், ஜலத்திற்குள்
மூழ்கத் தெரிதலும் அவசியமென்பது சொல்லாமலே விளங்கும்.
மேலும், விவேகமில்லாமல், ஆத்திரத்தோடு, அவஸரமாக முழு
குந்தருணத்திலிருப்பவனை அணுகுதல்கூடாது. அணுகினுல்அவன்
கெட்டியாகப் பிடித்துக் கொள்வான். இங்ஙனம் இரண்டுபேரும்
மரணமடைவார்கள். ஆகையால், விவேகியானவன் முழுகிப்போ
கிறவனுக்கு எதிரில் செல்லாமல் பின்புறமாகப்போய், கைகளை
நீட்டி, அவன் அக்குள்களைப் பலமாகப் பிடித்துக் கொள்வான்;
பிறகு அவனுடைய தலை, ஜலத்திற்கு வெளியில் இருக்கும்படி
யாக, அவனைக் கொஞ்சம் உயரத்தூக்கி, அங்ஙனமே காலால்நீந்திக்
கொண்டே, கரைக்குத் தள்ளிக்கொண்டு போவான்.

சில பண்டிதர்கள் பின்வரும் உபாயம் சிலாக்கியமென்று
தெரிவிக்கின்றார்கள்:—

காப்பாற்றுகிறவன் முழுகிப்போகிறவனுக்குப் பின்புறமாகச்
சென்று, இடதுகையால் அவனுடைய தலைமயிரையும், வலது
கையால் அவனுடைய வலது தோளையும் பற்றி, மெதுவாக
அவன்தலையைத் தன்மார்புமீது அமர்த்தி, ஒருகையால் மாத்திரம்
அவர் காத்தைப் பற்றிக்கொண்டு, மற்றொருகையாலும், முது
காலும் நீந்திக்கொண்டே கரைசேரலாம்.

நீரில் அமிழ்ந்து செத்துப்போனவனை, ஜலத்தினின்றுந் தூக்
கின உடனே என்னசெய்யவேண்டும்? பொதுவாக ஜலத்தில்
அமிழ்ந்துபோன 8-வது நிமிஷத்தில் மூச்சடைப்பு நேரிடுகின்
றது. இருந்தபோதிலும் பின்வரும் சிகிச்சைகளை நீரில் ஒருமணி
நேரம் முழுகிக்கிடந்தவனுக்கும் செய்துபார்த்தல் சுகமென அநு
போகத்தில் ஏற்பட்டிருக்கின்றது. அச்சிகிச்சைகளைச் செய்வ
தற்கு ஒருவன் வைத்தியனுக இருத்தல் வேண்டுமென்பது அவ
சியமில்லை. ஸகலரும் செய்துபார்க்கலாம். கூடியவரையில் அதி
சீக்கிரமாகச் செய்தல் முக்கியமாம்

மூச்சடைப்பட்டவனுடைய உடைகளை அவசியமானுல் கிழி
த்தாவது எடுத்துவிடு; அவன் வாய்க்குள்ளிருக்கும் மணலையும்,
கோழையையும் வெளியாக்கிச் சுத்தஞ்செய்; அவனைமல்லாத்தி,
வாயிலிருந்து ஜலம்வடியும் வண்ணம், வலது புறமாகப் படுக்கவை.

பற்கள் நெருங்கி இருந்தால், அவற்றை நீக்கி, அவற்றின் இடை
யில் ஒரு தக்கையைப் பதித்துவிடு; வாய்திறந்திருக்கும் அவனு
டைய மார்பை அழுக்கி, அழுக்கிக் கூடியவரையில் உட்கொண்ட
ஜலத்தை வெளிப்படுத்து. இக்காரியங்களுக்குப் பிறகு, "லாபோ
ர்த்" வைத்தியர் கண்டுபிடித்த "செயற்கைச் சுவாசத்தைச்"செய்
தல் வேண்டும்.

செயற்கைச் சுவாசம்:—மூச்சடைப்பட்டவனுடைய நாவை,
பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் ஒருதுணியினால் பல
மாகப் பிடித்துக்கொண்டு ஒரு நிமிஷத்திற்கு 15 அல்லது 20
தடவை லபத்தோடு மெதுவாக இழுத்திழுத்து விடுதல்வேண்
டும். இங்ஙனம் செய்வதற்குமுன், ஒரு இறகைத் தொண்டைக்
குள் செலுத்தி வாந்திபெடுக்கச் செய்தல் நன்று. மேலே சொ
ன்னவிதமாகச்செயற்கைச் சுவாசத்தைச் செய்துகொண்டிருக்கும்
போது, நாவானது இலகுவாக இராமல் இழுப்பதற்குக் கொஞ்
சம் கடினமாக இருந்தால், நின்றுபோன மூச்சு மறுபடியும் நடை
பெற ஆரம்பிக்கின்றது. இறந்தவன் உயிர்பெற்றான் என்றர்த்தம்.

இங்ஙனம் ஒருவன் செய்துகொண் டிருக்கும்போது, மற்
றொருவன் நோயாளியின் பின்புறம் நின்றுகொண்டு, அவனுடைய
கைகளைப் பிடித்து, தலைப்பக்கமாக உயரத்தூக்கி இரண்டுக்ஷணங்
கள் சென்று, அவற்றை இறக்கி, மடித்து மார்போடு சேர்த்து
அழுக்குதல் வேண்டும். இரண்டுக்ஷணம் சென்ற பிறகு, மறுபடி
யும் கைகளை உயரத்தூக்குதல், அவற்றைத் திரும்பவும். இறக்கு
தல், இங்ஙனம் நிமிஷத்திற்கு 15 தடவைகளாக இக்காரியத்தைச்
செய்தல்வேண்டும். வேறு சிலர் குளிர்ந்து, விறைத்துப்போன
கைகால்களை, உஷ்ணம் உண்டாகும்படி தேய்த்துக்கொண்டிருத்
தல் நன்றாம்.

மூச்சடைப்பட்டவனுக்கு மூர்ச்சை தெளிந்த உடனே,
அவனை ஒரு உஷ்ணமான மெத்தையின்மீது படுக்கவைத்து,
சூடான தண்ணீர்கலந்த சாராயத்தைக் குடிப்பித்தல் வேண்டும்.
மேலேசொன்ன சிகிச்சைகள் எக்காரணத்தினால் மூச்சடைப்
பட்டிருந்தாலும் பயனைத்தருவன.

(வரும்).

Professor Subramanya Iyer,
Pondicherry.

## வீரத்தன்மையுள்ள ஹிந்துமாது சிரோமணிகள்.

## பத்மினி.

(முன்தொடர்ச்சி.)

பாசறையில் எங்கேபார்த்தாலும் குழப்பமும் திகிலும் உண்
டாயிற்று. இதுதான் நல்லசமயமென்று பல்லக்குகளிலிருந்தஇராஜ
புத்திரர்கள் கீழே இறங்கி தங்களாயுதங்களைஉருவிக்கொண்டுமுசல்
மான்களைத் தாக்கினார்கள். இதனால் பீமன்சிங்கையும் தைரிய
சாலியான அவனது மனைவியையும் பின்தொடர்ந்து சென்று
அவர்களைப்பிடிக்க அசாத்தியமாயிற்று. இராணுவும், இராணியும்
தப்பி ஓடிக்கொண்டிருந்த வழிமுழுதும் இருபக்கங்களிலும்
இராஜபுத்திரர்கள் சூழ்ந்திருந்தமையின் அவர்களிருவரும் பத்திர
மாய்ச் சித்தூர் நகரைப்போய்ச் சேர்ந்தனர்.

இஃது இப்படியிருக்க பாசறையிலே முசல்மான்களுக்கும்,
இராஜபுத்திரர்களுக்கும் பெருத்தயுத்தம் நடந்தது. இராணுவாகிய
பீமன்சிங்கைச்சிறையிலிருந்து விடுவிக்க ஏற்பாடு செய்தபோதே
தாங்கள் யாவரும் உயிரைவிட வேண்டுமென்று தெரிந்துகொண்
டேயல்லவா அவர்கள் பல்லக்கிலேறி இராணியுடன் சென்றனர்.
ஆகையினால் அதிக உக்கிரமாகச் சண்டைசெய்து இராணுவையும்,
இராணியையும் பின்தொடர்ந்து செல்லாவண்ணம் முசல்மான்களு
க்கு இடையூறுகள் செய்து நின்றனர். ஒரு சிங்கமானது தான்
உயிர்தப்பிச்செல்ல வழியில்லையென்று கண்டால் எவ்வளவு உக்கிர
த்துடனே தாக்குமோ அவ்வளவு உக்கிரத்துடனே இராஜபுத்திரர்
கள் போர்செய்தார்கள். ஆனால் வெகு சீக்கிரத்திலே எண்ணிறந்த
முசல்மான் வீரர்கள் வந்து இராஜபுத்திர வீரர்களைச் சூழ்ந்துகொ
ண்டனர். இதனைக்கண்ட இராஜபுத்திரர்கள் முதுகுகாட்டி ஓடாமல்
இரஷபங்களைப்போலச் சண்டைசெய்தனர். இவரது தளகர்த்தனான
கோராவென்பவன் வீழ்த்தப்பட்டு வீர சொர்க்கமடைந்தான்.
உடனே அவனது புதல்வனான பாதல்என்னும் சிறுவன் தளகர்
த்தத் தன்மையை வகித்து யுத்தத்தை நடத்த ஆரம்பித்தனன்.
12 வயதுள்ள ஒரு சிறுபையன் ஒரு சிங்கக்குட்டி யானையைத்
தாக்கிக்கொல்லமுயல்வது போல முசல்மான்களை நிர்ப்பயமாய்த்
தாக்கி அவர்களைக்கொன்று அதிக வீராவேசத்துடன் சண்டை
செய்தபோது அவனைக்கண்ட எவன்தான் தானும் சண்டை செய்

யாம விரும்பான்? ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு என்னும் ஆன்
றோர் வாக்கை மனதிற்கொண்டவராகி உயிருக்கு வரும் அபாய
த்தை நோக்கினாரில்லை. தேசத்தைக் காப்பாற்றுவதும், இரா
ஜாவைப் பகைவர் கையினின்றும் எவ்விதமாகிலும் விடுவிக்க
வேண்டுமென்கிற அவாவும், ஸ்திரீகளின் பதிவிரதத்தன்மை குலை
யாமல் இரக்ஷிக்கவேண்டு மென்கிற கடமையினுணர்ச்சியும் ஆகிய
இவைமுதலிய எண்ணங்களே அந்த இராஜபுத்திரர்களுக்கு உயிரி
னுஞ் சிறந்தவையா யிருந்தன. தற்காலத்து ஹிந்துக்களாகிய
நமக்கு இவ்வித சிறப்புவாய்ந்த நோக்கங்களெல்லாம் போய் "பந்
திக்கு முந்திக்கொள் படைக்குப்பிந்திக்கொள்" என்னும் இழிவை
விளைவிக்கத்தக்க எண்ணம் புகட்டப்பட்டு வருகின்றது. மாண
பயம் யெல்லாரையும் பிடித்துக்கொண்டிருப்பதினாலல்லவா
நாம் புழுக்கள்போல நமது வாழ்நாளைக் கழித்துவருகின்றோம்.
மாணத்தைத் திரணமெனக் கருதிய அந்த இராஜபுத்திரர்கள் சண்
டைசெய்து எல்லாரும் மாண்டனர். நடந்த விருத்தாந்தத்தைச்
சொல்ல ஓர் இராஜபுத்திரனாகிலும் சித்தூருக்குத்திரும்பிச்சென்று
னில்லை. எல்லாரும் மாண்டு வீரசொர்க்கமடைந்தனர். அல்
லாவுதின் பாசறை தொம்சமாய் விட்டது; அவனுடைய சேனையில்
சற்றேறக்குறையப் பாதி மாண்டுவிட்டது. இது நடந்து சுமார்
1200 வருடங்களாகின்றன. இந்தச்சண்டையில் மாண்ட 12 வய
துள்ள படால் என்னும் சிறுவனுடைய வீரச்செயல்கள் இந்நாளி
லும் இராஜபுதனத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

பீமன்சிங் தப்பித்து அவனது ஊர்போய்ச் சேர்ந்ததும், .2
வயதுள்ள துணிகரமும் தைரியமுமான படால் என்னும் சிறுவன்
மாண்டதும் முசல்மான்களையும் இராஜபுத்திரர்களையும் முறையே
உயிருக்குத்துணிந்து சண்டை செய்யும்படி ஏவின. முசல்மான்
பூண்டு முழுதையும் தொலைத்தாகிலும் விடவேண்டும் அல்லது
நாமாகிலும் ஊர்பேரில்லாமல் சண்டையில் மாண்டாயினும் போக
வேண்டுமென்று இராஜபுத்திரர்கள் கங்கணங் கட்டிக்கொண்டனர்.
அவ்விதமே முசல்மான்கள் சித்தூரையும் பத்மினி இராணியை
யும் கைப்பற்றவேண்டும்; இல்லாவிடில் படுகளத்தில் பிராணனை
விட வேண்டுமென்று அல்லாவுதின் பிரதிஞ்ஞை செய்தனன்.
ஐயோ!, இராஜபுத்திரர்கள் எண்ணம் நிறைவேறும்போலத்
தோன்றவில்லை. அக்ரமக்காரனான அலாவுதின் ஜயமடைவா



னெனக் காணப்பட்டது. எப்படியெனில் பீமன்சிங்கென்பவன்
ஒரு கனவு கண்டான். தனது இஷ்டதேவதை "மால்பூகேஜ"
அஃதாவது நான்பசியாயிருக்கிறேன் என்று சொன்னதுபோல
ஒருசத்தம் கேட்டான். சித்தூரை இரக்ஷித்துவந்த தேவியான
வள் பீமன்ஸிங்கின் கனவில் பிரஸன்னமாகி இராஜவம்ஸத்தி
லுதித்த 12 பேரின் உதிரத்தைக் குடித்தாலொழிய என்தாகம்
தீராதென்றுகூறினாள். இக்கனவு கண்டதுபோலவே அவனுடைய
பிள்ளைகள் ஒவ்வொருவராக போர்களத்திற்குச்சென்று மாண்ட
னர். இப்படி 11 பிள்ளைகள் இறந்தனர்; இன்னும் ஒரு முறை
தான் சண்டை செய்யவேண்டியதா யிருந்தது; முசல்மான்களைத்
துறத்திவிடக் கடைசியாகப் பிரயத்தனஞ் செய்தனர். எவ்வளவு
ஊக்கமுடையவர்களாயும் சௌரிய பராக்கிரம முள்ளவர்களாயும்
உயிர்க்குத் துணிந்தவர்களாயும் இராஜபுத்திரர்களிருந்தபோதி
லும் பயனற்றதாய் முடிந்தது. அல்லாவுதின் சேனை ஆயிரக்
கணக்காக யிருந்தது. இராஜபுத்திரர்கள் ஒரு கைபிடி அள
வாயிருந்தனர். ஆதலின் ஜயமடைவோம் என்கிற கோரிக்
கை கிஞ்சித்தும் இராஜபுத்திரர்களுக்கில்லை. தாமெடுத்தகாரியம்
கைகூடாவிடினும் தங்கள் உயிரை இரக்ஷித்துக் கொள்ளும்பொரு
ட்டு முசல்மான்களுக்குக் கீழ்ப்படிவதை விட தங்கள் ஊரை
யும் ஸ்திரீகளின் பதிவிரதத் தன்மையையும் உடலில் உயிருள்ள
வரையிலும் இரக்ஷிப்பது மேன்மையென்று சண்டை செய்யத்தீர்
மானித்தனர். தங்கள் வம்சம் முற்றும் நிர்மூலமாகு மென்பது
திண்ணமென்று தெரிந்தமையின், இராஜவம்சத்தைச் சார்ந்த
ஒரு பிள்ளையை எப்படியாகிலும் இரக்ஷித்து வைத்தால் இவனால்
கடைசியில் சித்தூர் இராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்க இயலு
மென்று நினைத்து பீமன்சிங்கின் கடைக்கோடி பிள்ளையை ஒரு
தாதிகையில் கொடுத்து காட்டிற்குள் பிரவேசித்திருக்கும்படி கட்
டளையிட்டனுப்பினர். அவளும் அப்படியே செய்தனள். இம்
மாதிரியாக இராஜவம்சத்தைப்புதுக்கக்கூடிய ஓர் இராகுமாரனைக்
காப்பாற்றினர். இது முசல்மான்களுக்குத் தெரியாமற் போயிற்று.

கிழம் கிட்டு நிராதாரவான குழந்தைகள் இவர்கள் தவிர மற்
றெல்லா இராஜபுத்திரர்களும் யுத்தகளம் போயினர். பீமன்சிங்
இவர்களுக்குத் தளகர்த்தனாகிச் சண்டையை நடத்தினான். இராஜ
புத்திரரும் முசல்மான்களும் உயிருக்குத்துணிந்து மிருந்தபடிவா

தத்துடன் போர்புரிந்தமையின் எவ்வளவு மும்மரமாய்ச் சண்டை நடந்திருக்குமென்று யூகித்துணரற்பாலதேயன்றி உரைக்கற்பாலதன்று. உதயத்திலிருந்து மாலை வரையிலும் தேங்காய்க்கு மாங்காய் தோற்குமா என்று தோற்புப் கெலிப்பின்றி சண்டை நடந்தது. அந்திப்பொழுதில் ஒரு இராஜபுத்திரன் கூட உயிரோடில்லை. அல்லாவுதின் பிரம்மாண்டமான சேனையும் சற்றேறக்குறைய முற்றும் மாண்டது.

சித்தூர் நகரத்திலிருந்தோர்க்குச் சண்டையின் முடிவு சாயரக்ஷை தெரிந்து நகரத்தின் மத்தியில் பெரியகாஷ்டம் ஒன்று உண்டுபண்ண பத்மினி இராணி கட்டளையிட்டனள். காஷ்டம் தயாரானவுடனே பத்மினி இராணி தனது தாதிமார்களுடன் நகரிலுள்ள மற்ற மாதர்களுடனும் அரண்மனையை விட்டு வெளியே வந்து காஷ்டத்தண்டை வந்தனள். காஷ்டத்திற்கு தீ மூட்டப்பட்டது. பத்மினி இராணி இந்தக் காஷ்டத்தை ஏழுதரம் வலம் வந்து அக்காஷ்டத்தில் குதித்தனள். மற்ற ஸ்திரீகளும் அப்படியே செய்தனர். அல்லாவுதின் ஜயபேரிகை யடித்துக்கொண்டு நகரத்திற்குள் பிரவேசித்தபோது என்னகண்டான் ? பத்மினி மாதைக் கண்டனனு? அல்லது மற்றெந்த மாதரையாயினும் கண்டனனு ? அல்லது ஏதாவது ஐசுவரியத்தையாயினும் கண்டனனு? பட்டணம் குட்டிச்சுவர்போ லிருந்ததையும், காஷ்டத்தின்தீ நீற்று வருவதையும் கண்டான். இராஜபுத்திரர்களுடைய ஒற்றுமையும், தேசாபிமானமும், இராஜபக்தியும் வீரத்தன்மையும் வியக்கத்தக்கன.

P. Manikasamy Mudaliar, B. A.,

Rangoon.

## தீமையை எப்படி வெல்வது ?

(ஓர் உண்மையான கதை.)

உபதேசத்தைக் காட்டிலும் அனுஷ்டானம் சிறந்ததென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. இந்த நீதி நமது ஆரியா வர்த்தத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததுபோல இதரதேசங்களில் அவ்வளவு அனுஷ்டிக்கப்பட்டு வந்ததாக அந்தத் தேசசரித்திரங்



களால் நமக்கு விளங்கவில்லை. மனிதனுடைய வாழ்நாளை நான்கு
ஆச்ரமங்களாகப் பிரித்து அந்தந்த ஆச்ரமங்களுக்குள்ள விதிகளை
யும் நிர்ணயித்து அவனவன் தன்தன் ஆச்ரமத்துக்குரிய கடை
மைகளை அணுவளவும் பிசகாமல் ஒழுகக் கடவன் என்று நம்
முன்னோர் விதித்தனர். மஹரிஷிகளுடைய சாந்தம், தூய்மை,
உதாரம், கருணை இவைகள் நிறைந்த ஒழுக்கங்களால் அவர்கள்
மிகுதியும் கற்பித்தார்களே யொழிய உன்னதமான இடங்களில்
நின்றுகொண்டு புங்கானுபுங்கமாய் உபதேசம் செய்யவில்லை.
"நீங்கள் பாபிகள், அழியாத நகரத்தில் விழப்போகிறீர்கள்.
நான் சொல்லுகிற மார்க்கம் ஒன்றே உங்களுக்கு நற்கதி கொடுக்
கும்" என்று உரத்துக் கூறுமல் நன்னெறிவிட் டகன்றொழுகும்
ஆன்மாக்களிடத்தில் பிரேமையும், அநுதாபமும் பாராட்டி வார்த்
தையாலன்றி தங்கள் ஒழுக்கத்தாலேயே அவர்களை நன்மார்க்கத்
திற் சேர்த்தனர்.

ஸம்ஸாரத்தில் உழன்று உதரபோஷணத்திற்காக எத்தொழி
லையும் செய்யும் ஆன்மாக்களுக்கு ஸாதுக்களுடைய தரிசனுனுக்
கிரகத் தினாலேயே இருள் நீங்கி அறிவுண்டாகிறதென்பது பிரத்தி
யக்ஷானுபவம். பிறவிப்பெருங்கடல் நீந்துவதற்கு ஸாதுக்க
ளுடைய தரிசனம் பிரசண்டமாருதத்திலும் அசையாத ஒரு நீரா
விக்கப்பலை ஒக்கும். ஜீவனுக்கு ஜீவனே துணையேயொழிய
சாஸ்திரங்கள் உபாங்க (துணை)க்கருவியேயாம். தீமையை நன்
மைதான் ஜயிக்கும். இருளை ஒளிதான் போக்கும். தண்டனை
யினால் ஜீவர்கள் சீர்திருத்தப்படுகிறார்கள் என்பது அனுபவ
விரோதம். நியாயஸ்தலங்களில் விதிக்கப்படும் தண்டனைக் குள்ளா
னவர்கள் காராக்கிருகவாஸம்முடிந்தவுடன் மறுபடியும்அவ்விடத்
துக்கேபோக மார்க்கம் தேடுவதை நாம் கண்ணாரப்பார்த்திருக்
கின்றோம். இதை நியாயாதிபதிகள் கவனிப்பாராயின் உலகத்தில்
குற்றம் மிகுதியும் குறையுமென்பதிற் றடையில்லை. ஓர் அயோக்
கியனுடைய மனோபாவத்தைப் பீனல் கோடானது (Penal code)
மாற்றச் சக்தியற்றது. சட்டங்கள் எவ்வளவுக் கெவ்வளவு கொடு
மையா யிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு தேசத்தில் குற்
றங்கள் அதிகரிக்கின்றனவென்பது அனுபவசித்தாந்தம். காராக்
கிருகவாஸம் மனிதனைத் துர்க்குணத்திலேயே ஸ்திரப்படுத்து
கிறது. துஷ்டத்தனத்துக்கு மாற்று தண்டோபாயமல்ல. ஒன்றுக்

கொன்று முற்றிலும் மாறான இரண்டுபொருள்களை நாம் உற்று நோக்கினால் அவைகளிரண்டினுடைய உருவமும் நம்மனத்தில் செவ்வனே பதியும்; அதுபோலவே தன்னைவிட முற்றிலும் மாறான குணங்களோடு கூடிய ஒரு புண்ணியாத்மாவினுடைய தரிசனத்தால் அவருடைய ஸத்குணங்கள் மாத்திரமல்ல நமக்குப் புலப்படுவது, நமது மனோதிருஷ்டிக்கு எதிரில் நிற்கும் அவருடைய தேஜஸ்வினால் நம்மிடத்திலுள்ள துர்க்குணங்களான இருள்விளங்கக் காணலாம்.

நாம் மேற்சொல்லிவந்த நீதியை விளக்குகிற ஒருமாஹானுடைய திவ்யசரித்திரத்தை ஈண்டுக் கூறுவாம்.

வங்காளதேசத்தில் அன்பே உருவெடுத்து அவதரித்த ஸ்ரீசைதன்னியஸ்வாமிகளுடைய அவதாரத்தால் புனிதமும் கீர்த்தியும் அடைந்த நதியா என்றொருபுண்ணிய ஸ்தலமுண்டு. ஸ்ரீ சைதன்னிய ஸ்வாமி முத்தியடைந்து சுமார் 10 வருஷத்துக்குப் பிறகு நதியாவில் லோகதாஸர் என்னும் பெயர் பூண்ட மகான் ஒருவர் இருந்தார். இவர் வைசியவருணத்தினர். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருக்கு வாய்த்ததுபோல் இவருக்கும் மடமை, அச்சம், நாணம், பயிர்ப் பென்னும் நான்கு குணங்களும் ஒன்றுசேர்ந் தவதரித்ததோ என மனிதர் வியக்கத்தக்க இல்லக்கிழத்தி வாய்த்திருந்தார். இத்தம்பதிகளுக்கு மக்கட்பேறில்லை. கடலிலிருந்து எடுக்கப்படும் சங்கவியாபாரம் அவருடைய தொழில். அதில் அவருக்கு நல்லவருமானம். தன்னுடைய வருமானத்தில் ஸரிபாதியைத் தருமத்திற் செலவிட்டு மிகுந்தபாதியில் குடும்பச்செலவுக்கு அவசியமானது போக பாக்கியைப் பின்னால் உபயோகப்படும் பொருட்டுச் சேர்த்துவைத்திருந்தார். ஆகையால் அவரிடத்தில் எப்போதும் கையிருப்பில் பணம் உண்டென்னும் உண்மை தெரியாதவர்கள் அந்த ஊரிலில்லை.

இப்படி நம்கதாநாயகர் ஒழுங்காய் இல்லற நடாத்திவருநாளில் நதியாவில் ஒருகாலத்தில் திருட்டுப் பயம் அதிகமாயிருந்தது. அந்தத்திருடர்கள் மஹாஸமர்த்தர்களானதால் ஜனங்கள் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவர்களைப்பற்றிய உளவு சிறிதும் அகப்படவில்லை. மிகவும் கௌரவமுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இந்தத்திருடர்களுடைய சேஷ்டையால் குடிக்கக்கஞ்சி அற்றவைகள் ஆயின.



நம் கதாநாயகரோவென்றால் ஒருவிளக்கை மிகவும் சிறியதாய்வைத்து அதைச்சிறுதுவாரங்கள் உள்ள ஒருபானையால் மூடிவிட்டு இரவெல்லாம் தானும் தன்மனைவியுமாக மாறி மாறி விழித்திருந்து வீட்டைக்காவல்காத்து வந்தனர்.

ஒருநாள் மந்தாரத்தால் இருளதிகரித்திருந்தது. இரவில் அப்போதைக்கப்போது குலைக்கும் நாய்களின் சத்தமும், காற்றால் அசையும் இலைகளின் ஒலியும் ஆந்தைகளின் குரலும் தவிர வேறு சப்தமொன்று மில்லாதிருந்தது. அன்று அர்த்த ஜாமம்வரையில் வழக்கம்போல் தான் காவல்காத்துவிட்டுத் தன்மனையாளை நித்திரையினின்றும் எழுப்பி வீட்டைப் பார்த்துக்கொள்ளச்சொல்லிவிட்டுத் தாம் அயர்ந்து உறங்கிவிட்டார். சற்றுநேரத்துக் கெல்லாம் யாரோ சுவற்றில் கன்னம் வைக்கிறதுபோலமெதுவான சப்தம் அவ்வம்மையாருக்குக்கேட்டது. அதுகேட்டதும்அவ்வம்மையார் மெதுவாய்த்தம்கணவரை எழுப்பினார். புருஷன் எழுந்திருந்ததும் நடக்கும் விஷயம் இன்னதென்று நிஸ்ஸந்தேகமாய் அறிந்துகொண்டு பரமபாகவத சிரோமணியான லோகன்தாஸர் சற்றும் விகற்பமடையாத மனத்தினராய்ச் சோரர்களுடைய வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்தால் பிறகு தப்பிவெளியே ஓட முடியாதபடி சில உபாயங்கள் செய்தார். திருடர்கள் உள்ளே நுழைந்ததும் விளக்கின்மேல் மூடியிருக்கும் பாத்திரத்தை எடுத்துவிட்டு அவர்கள் எந்தக் கதவைத்திறந்துகொண்டு ஸுலபமாய் ஓடக் கூடுமோ அந்தக் கதவண்டை தன் மனைவியை இருக்கும்படி ஆஞ்ஞாபித்துவிட்டுத் தான் தயாராய்க் கொண்டிருக்கும் கள்ளவாயிலண்டைபோய் உட்கார்ந்தார். திருடன் உள்ளே நுழைந்ததும் முன்ஸங்கேதப்படி எல்லாம் நடந்துவிட்டது. விளக்குவெளிச்சம் திடீரென்று பிரகாசித்தது. மந்திரத்தால் கட்டுப்பட்ட ஸர்ப்பம் அசைவற்று நிற்பதுபோலத் திருடன் மூச்சுவிடவும் சக்தியற்று அசையாது மாக்கட்டைபோல் நின்றான். நமது பக்தரும் அவர்மனைவியும் என்னசெய்தார்கள்? கயிறுகொண்டு திருடனைக் கட்டப் பிரயத்தனப்பட்டார்களா? இல்லை. பின்னென்னசெய்தார்கள்? திருடனுடைய நிலைமையைக் கண்ணுற்ற அளவில் லோகன்தாஸருக்கு ஓர் ஆச்சரியமும், பிரமமும், வெட்கமும், வாத்ஸல்யமும் ஏககாலத்தில் மனதில் உதித்தன. சற்று அவனுடைய முகத்தை உற்றுநோக்கிவிட்டு ஆச்

சரியத்தோடு பின்வருமாறு உரைக்கலானார். "கண்ணியமுள்ள ஸகோதரா? இதென்னவேலை! சீ! சீ! இதென்ன அவமானம்! மகாகௌரவமுள்ள பிராமணகுலத்திற் பிறந்து இந்த க்ருத்யத்துக்கு வரும்படி நேர்ந்த நிர்ப்பாக்கியம் என்னை? நானோ இழிகுலத்திற்பிறந்தவன். தங்கள்பிதா அடியேனுடைய புன்குடிலுக்கு எழுந்தருளித் தன்திருவடி தூளிகளால் அதைப் புனிதமாக்கினார். அவருடைய கர்ப்பத்திற் பிறந்த தாம் இவ்வேஷத்தோடு இங்குவந்ததென்னை! மகாதுக்கம்! மகாதுக்கம்!! அடியேன் தங்களுடைய பாததூளி; என்னுடைய சொத்தெல்லாம் தங்களுடையதே. கண்ஜாடை காட்டினமாத்திரத்தில் தங்களிடத்தில்வந்து சேரக்கூடிய இந்தஸொத்தையுடைய இம்மாதிரி முயற்சிகள் செய்வானேன்! தேவரீர் திருமேனியெல்லாம் மண்ணடைந்திருக்கிறதே! முகம்வாடியிருக்கிறதே! அரையில் வஸ்திரம் கந்தையாயிருக்கிறதே! இந்த நிலைக்குத் தாங்கள் வரவேண்டுமா? போனதுபோகட்டும். ஏதோ நாயினேன் ஜன்மாந்தரத்திற்செய்த பாக்கியவசத்தால் தங்களுடைய பாததூளியால் என்புன் குடிசையைப் புனிதப்படுத்தினீர்களே? ஜலம் தயாராயிருக்கிறது; ஸ்நானம்செய்யுங்கள்; தாங்கள் தயவுசெய்து என் வீட்டிலிருக்கும், பலகாரங்களையும் பழத்தையும் புசித்து அடியேனைக் கிருதார்த்தனாக்கவேண்டும்." என்றுலோகன் தாஸர் பிராமணனுடைய பாதங்களில் விழுந்து பிரார்த்தித்தார். இப்படிச்சொல்லிவிட்டு லோகன்தாஸர் தன்மனைவியைக் கூப்பிட்டு ஒரு திண்டை யெடுத்து அவருக்கு அளித்துவிட்டுக் கொஞ்சம் ஜலம் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

நமது கண்ணியமுள்ள ஸகோதரருக்குலோகன்தாஸருடைய மனது தெரியாததல்ல; நிஷ்களங்கமான மனதோடு தாஸர்செய்த உபசாரமானது நமது நண்பருடைய மனதில் ஞானமாகிய விளக்கை ஏற்றிவைத்தது. அந்தவிளக்கின் உதவியால் இனி தன் வாழ்நாளுக்கு ஏற்படப்போகிற மேன்மையும், அழகும், தூய்மையும் அப்போதே தன்மனத்திலிருக்கும் இருளையும், துர்வாஸனையையும் போக்கி ஒருபரிமளத்தையும், ஒளியையும் கொடுப்பதாக அவர் உணர்ந்தார் கண்களிலிருந்து துலாமாதத்து வர்ஷம்போல நீர் தாரைதாரையாக வடிய ஆரம்பித்தது. விசனத்தினால் அவருடைய ஹிருதயம் வரண்டது. லோகன்தாஸருடைய தர்மபத்தினியானவள் சிற்றுண்டிகளை எதிரில்வைத்து அருந்தவேண்டுமென்று உபசரித்தாள். அவர் எப்படி அவைகளைப் புசிப்பர்? லோகன்தாஸரோ அவைகளைப் புசியாவிட்டால் கூக்குரலிட்டு அயலாரைக் கூப்பிடுவேனென்று பயமுறுத்தினார்; நமது "கண்ணியமுள்ள ஸகோதரர்" மிகப்பிரயாஸத்தோடு இரண்டு மூன்று கவளங்கள் உள்ளே செலுத்தினார். சற்றுநேரம்பொறுத்து "நாம் இந்தக்கன்னவாசலை மூடிவிடுவோம். இல்லாவிட்டால் ஊரில் காலையில் பெரும்குழப்பம் உண்டாகும்" என்று லோகன்தாஸர்சொன்னார். லோகன்தாஸர்மனைவி தண்ணீர் கொண்டுவந்துவார்க்க லோகன் தாஸர் சேர்குழைத்துக்கொண்டு நமது "கண்ணியமுள்ள ஸகோதரர் உண்டாக்கிய சுவற்றின் கன்னவாயிலை மூடினார். பிறகு 10 பொன்மோகராக்களையும் ஒருவிலையுயர்ந்த சால்வையையும் நம் "ஸகோதரர்" எதிரில்வைத்து அடிபணிந்து ஸ்வாமி! இந்த அல்பமான காணிக்கையை அங்கீகரிக்கவேண்டும், இனித்தங்களுக்கு எப்போது திருவுள்ளமோ அப்போதுதெரிவித்தால் அடிமையாவனவற்றைச்செய்ய ஸித்தமாயிருக்கிறேன்; இனி இவ்விதம் நிந்தனையான காரியத்தில் தாங்கள் ஒருபொழுதும் பிரவர்த்திக்கவேண்டாம்" என்றுலோகன்தாஸர்மகாவினயத்தோடு சொன்னார். இது வரையில் மௌனயோகத்திலிருந்த நம் "ஸகோதரர்" தம்மனத்தை அடக்கமுடியாதவராய் "ஸகோதரா! நான் ஒன்றையும் தொடமாட்டேன். இனிதிருட்டென்பதைக் கனவிலும் ஸ்மரியேன். அழிவற்றதான உன்மனச்சாந்தியை என் ஞானமாகிய விளக்கைக் கொண்டு பார்த்தபிறகு இந்தத் துச்சமான பொருள்களினிடத்தில் எனக்கு விருப்பம் எப்படி உண்டாகும்? நாளை ஸூரியன் உதித்ததும் ரகுநாதனை நதியாவிலாவது வங்காளத்திலாவது யாரும்காணமாட்டார்கள். மனிதருள் கடையேன் நான். ஸத்ஸங்கமும் ஸத் உபதேசமும் பெறும் பாக்கியத்தை இதுவரையில் நானடையவில்லை. என்தகப்பனார் ஒரு கீர்த்திபெற்ற ஆசாரியர்; அவர் புத்திரனாகிய நான் என்னபாதகம் செய்யாதொழிந்தேன். கொலை, களவு, விபசாரம், மோசம், ஸாதுக்களையும், நிரபராதிகளையும் ஹிம்ஸித்தல் ஆகிய துர் விஷயங்களில் எதைப் பாக்கியாய்விட்டேன். உமது கடாக்ஷத்தால் எனக்கு ஞானோதயமாயிற்று; எனக்கு உத்தாரந்தாரும்" என்றார். இப்படிச் சொல்லிக்கொண்டே லோகன்தாஸரை ஆலிங்கனம்செய்துவிட்டு அவர் போய்விட்டார்.

மறுநாள் ரகுநாதரைக்கண்டவர்யாருமிலர். அவர் எங்கே போய்விட்டாரென்பதும் யாருக்குந் தெரியாது. பலவருஷங்கள் கழிந்தபிறகு அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். அப்போது ரகுநாதர் மனுஷனாகக் காணப்படவில்லை; தேவதாம்சமாக விளங்கினார். இவர்தாம் நமது ஆரியாவர்த்தத்தில் கீர்த்திபெற்று இன்றைக்கும் நம்மால்கொண்டாடப்படுகிற ஸ்ரீமான் ரகுநாத கோஸ்வாமியாவர்.

லோகன்தாசரோ தம்ஸொத்தையெல்லாம் லோகோபகாரார்த்தமாக விநியோகம்செய்துவிட்டுத் தாமும் தம் பக்தியுமாகத் திருவள்ளுவநாயனார்போலவே செல்வத்தைவெறுத்து இறைவனடியைச்சேர்ந்து பிறவிப்பெருங் கடலை நீந்தினார்.

K. Rungasamy Iyengar, Bellary.

## ஸ்வயமறுப்பு.

உலகவிஷயங்களில் சுகமாய் இன்புற்று வாழ ஒவ்வொருவனும் நியாயமான வழியில் பிரயத்னம் செய்தல்வேண்டும். அங்ஙனம் நாம்செய்யும் முயற்சியானது, ஜனங்கள் கௌரவிக்கும்படியான நல்வழியாய் இருத்தல் அவசியம். நாம் நம் ஜீவியத்தில் மரியாதையாய் வாழவேண்டி முயற்சிசெய்வதே ஒருபெரிய கல்வி கற்பதாயிருக்கிறது. அங்ஙனம் நாம்கற்றுக்கொள்ளும், சுய மரியாதை, விடாமுயற்சி, பொறுமை, பணம் சேகரித்தல் முதலிய நற்குணங்களுள் "ஸ்வயமறுப்பு" என்னும் விஷயமும் முக்கியமானதா யிருக்கின்றது.

பணம் சேகரித்து விட்டால் மாத்திரம்போதாது. அதைச்சிக்கனமாய்ச் செலவழித்தல்தான் கடினம். பின்னுக்கு வரக்கூடியதையோசித்து, தன்னை மறந்துச் சேகரித்து வைத்தலே உத்தமமாம். சுயமறுப்பு இல்லாமற்போனால் ஒருகுடும்பம் சரிவர நடைபெறாது. அன்றாடம் கூலிவேலை செய்யும் தொழிலாளியும்கூடத் தன்னையும் தன் சுகத்தையும் மறந்து, தன் வரும்படியிற் சிறிது சேர்த்துவைத்தால் தான் கஷ்டகாலங்கட்குதவும்.

நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளுள் "ஸ்வயமறுப்பு" கண்டிசியானது. இது சுயநலத்தையும், பொதுநலத்தையும்



பொருந்ததாகும், சுயமறுப்பு என்பதற்கு, பின்னுக்கு வரக்கூடிய கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக, தற்காலத்திய இன்பத்தை மறந்துவிடல் என்றுபொருள். கஷ்டஜீவனமுள்ளவன் பின்னுக்காகச்சேர்த்து வைக்கவேண்டிய தவசியந்தான், ஆனாலிது ஸ்வயநலத்தைக் கருதும் சுயமறுப்பாகும். நம்மவர்களுள் பலர், ஆத்மார்த்த சிந்தையுடையவர்களாய், ஞானத்தையடையக்கருதி ஸந்நியாசிகளாய் விடுகின்றனர். இதுவும் சுயநலத்தைக் கருதிய ஸ்வயமறுப்புதான். இவர்கள் தம் எண்ணத்தைக்கருதி கஷ்டத்தை யனுபவிக்கின்றார்களே யொழிய பொதுஜனங்களின் நன்மையைச் சிறிதும் நினைப்பதில்லை.

ஆனால் ஸ்ரீ விவேகாநந்தர், ஸ்ரீ அபேதாநந்தர் முதலிய மஹான்கள் ஸந்நியாசிகள் தாமே! அவர்கள் சுயநலத்தைக் கருதினாரா? அவர்கள் இந்தியா முன்னுக்குவரச் செய்துள்ள எண்ணற்ற காரியங்கள் எல்லாருக்கும்தெரிந்திருக்கின்றன. அவர்கள் துறவிகளாயிருந்த போதிலும், ஜனஸமூகத்தி னிடையிலிருந்து பல நற்காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட புண்ணியவான்கள் தாம் இந்தியாவிற்குத் தற்காலம் வேண்டியது.

ஸ்வயநலப் பேய்கள் நம்மவர்களுள் இருக்கலாகாது. தனவான்கள், தம் சுகத்தை மறுக்காவிட்டாலும், ஸ்வயநலத்தையொழித்து தேசத்திற்கென்று உழைக்கும் சிலரையாவது உற்சாகப்படுத்த, தம் திரவியத்தில் சிறிது காலாகாலங்களில் உதவிவந்தால் அதுவே போதுமானதாகும். சுயநலத்தை ஒரு மிருகம் கூட நாடுகின்றது. மனிதனும் அவைகளைப்போலிருந்தால் இவன் எங்ஙனம் அவைகளைவிட மேலானவனாவன்? கேவலம் மிருகவகுப்பைச் சார்ந்த குரங்கினங்கள்கூட ஸ்வயநலத்தையும் கருதாது, ஓர் அந்நியரான ஸ்ரீராமருக்கு உதவிபுரிந்து இருக்கும் பொழுது, ஆறறிவுடைய மனிதன் எவ்வளவு லோகோபகார சிந்தையுடையவனாயிருக்கவேண்டும்? ஆகலின் நாம் ஸ்வயநலத்தைக் கருதாது, சுயமறுப்புடன் தேசத்திற்கென்று பாடுபட்டும், அங்ஙனம் பாடுபடும் சிலரையாகிலும் உற்சாகப்படுத்துவது நம் கடமையாகும். இல்லாவிடில் நமக்கும் ஓர் இழிவான மிருகத்திற்கும் பேதம் ஒன்றுமிராது.

N. S. ஸ்ரீநிவாஸ சர்மா, வேலூர்.

## குழந்தைகளும் நகைகளும்.

அழகில் இயற்கையழகு, செயற்கையழகு என இருவகை உண்டு. குழந்தைகளுக்கு இயற்கையில் அழகிருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்தேசத்து ஹிந்துக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நகை தரிக்கும் வழக்கம் தினேதினே அதிகரித்து வருகின்றது. தாய் தகப்பன்மார்கள் சோற்றுக்குத் திண்டாடும்பொழுதும் கடன்பட்டாயினும் தம் குழந்தைகளுக்கு நகை யணிகின்றார்கள். சிலர் ஏழையாயிருந்தாலும், ஜம்பத்தின்பொருட்டு தம் குழந்தைகளுக்கு, சுபப்பிரயோஜன காலங்களிலும், தேர், திருவிழா நாட்களிலும் நகைகளைத் தரித்து, அயலார் தம்மைப் பெருமைபாராட்டச் சந்தோஷிக்கின்றார்கள்.

இவர்கள் தம் குழந்தைகளுக்கு நகைகளைப்போட்டு சந்தோஷிக்கின்றார்களேயன்றித் தம் குழந்தைகளுக்கு வரும் துன்பத்தைச் சிறிதும் நினைக்கின்றார்களில்லை. குழந்தைகள் நகைகளைச் சுமக்கமாட்டாமல் வருந்தியும் அதனை வாய்விட்டுச் சொல்லவும் சக்தியற்றனவாயிருக்கின்றன; இவற்றைப் பெற்றோர்கள் அறிவதில்லை. குழந்தைகளுக்கு நகைதரிப்பதால் அவைகளுக்குப்பிராணஹானி நேரிடுகின்றது. திருடர்கள் நகைகளின்மீது ஆசை வைத்து, அந்நகைகளைப் பறித்துக்கொள்வதுமன்றி அக்குழந்தைகளையும் கொன்றும் விடுகின்றனர். இப்படிப்பட்ட விஷயங்கள் ஆயிரக்கணக்காய், பத்திரிகைகளிலும், அநுபவத்திலும் கண்டிருந்தும் நம்மவர்கள் தம் குழந்தைகளுக்கு நகைகள் அணிவதை நீக்கினார்களில்லையே! என்னே! இவர்கள் மதியீனம்!!

எவ்வளவோ 'தவம்செய்து பெற்ற பிள்ளைகளுக்கு, நகைகளையணிந்து யமன்கையில் ஒப்புவிக்கின்றார்களேயன்றி, அப்பிள்ளைகளுக்குக் கல்வியைக் கற்பிக்கவும், தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரவும் முன் வருகின்றார்களில்லையே. நகை தரிக்காவிடில், குழந்தைகள் எங்குப்போய் விளையாடினாலும் பாதகமில்லை. ஆனால் நகைதரித்தாலோ பிள்ளை எங்குப்போயிற்றோ? எந்தத் திருடன் நகைகளைக் கழற்றிக்கொண்டானோ? அல்லது எந்தக் கொலைப்பாதகன் நகைக்காகக் குழந்தையைக் கொன்றுவிட்டானோ? என்று எப்பொழுதும் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருக்கும். ஏனோ இவ்வித கஷ்டங்களெல்லாம்? நகைளுக்குச்



செலவழிக்கும் பணத்தைக் கல்விக்காகச் செலவிட்டால் அது எவ்வளவு மாண்புடையதாகும். நகையின் அழகிலும் கல்வியின் அழகே சிறந்ததும் பெருமையுமுடையது. அதனாலன்றோ?

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாம் என்னு நடுவு நிலைமையால்
கல்வியழகே யழகு."

என்று நாலடியாரும் கூறுகின்றது.

ஆதலால், பெற்றோர்கள் அருமையாகப்பெற்ற தம் குழந்தைகளுக்கு நகைகளை யணிவித்து கொலைப்பாதகர்கள் கையில் ஒப்புவிக்காமல், அக்குழந்தைகளுக்குக் கல்வியைப் புகட்டுவதிலும், தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவதிலும் கருத்துடையவர்களாயிருந்தால் நம் இந்தியா சுகப்படும் என்பதிற் சிறிதும் ஐயமென்பதேயில்லையாம்.

N. S. ஸ்ரீனிவாஸ சர்மா,
வேலூர்.

## சுகத்தெளிவுரை.

### 1-வேண்டுகோள்.

அஞ்ஞானாந்தகாரத்தில் அழுந்திய சிலமாந்தர், கடவுளுண்மையென்னும் திக்குநோக்கியும் விழியாராய், இந்தப்பிரபஞ்சத்தினையாக்கினானும் ஆள்வானும் அழிப்பானுமாய ஒரு முதல் இல்லையென்று பெருங்கூச்சலிட்டு ஏற்றுகின்றனர். அன்னோர், கடவுளுண்டென்னும் விஷயத்தை உறுதியாய் நம்பியிருப்போர்களைநோக்கி, கடவுள் உண்டென்னில், அவரையெங்களுக்குக் காட்டுக? என்று அரட்டுவதும் வழக்கம். அத்தகைய எண்ணங்களுடைய மாந்தர் சற்றான்றி யோசிக்கக்கடவர். காணல் என்பது கண்ணின் தொழில். எந்தவிதமான கண்கொண்டு அவர்கள் கடவுளைக் காண விரும்புகின்றார்கள்? காணற்குக் கருவியாயிருக்குங் கண்கள் ஸ்தூலக்கண்ணென்றும் புத்தியென்றும் ஆத்மாவென்றும் மூவகைப்படும். அவற்றுள், ஸ்தூலபதார்த்தங்களாயும் ஸூக்ஷ்மபதார்த்தங்களாயுந் தோன்றுவதோடு அவைகட்கெல்லாங் காரணப்பொருளாயும் வீற்றிருக்குங் கடவுளைக் காணற்கு

வற்றதாய (ஆத்மக்) கண் சாதாரண மாந்தரிடத்துத் திறக்கப்பட்
டிலது. இந்த அழகிய உலகத்தைக் காண்டற்கேதுவாகிய (ஸ்தூ
லக்) கண்கள் யாங்கள் பெற்றுளோமேயென்று சொல்வீர்களா
னால், பார்க்குஞ் சக்தி யுங்களுக்குச் சொந்தமென்பதெப்படி?
யென்பதைக்குறித்து மன அமைதியோடும் தெளிந்த உணர்வோ
டும் நீங்கள் யோசிக்கவேண்டிய தாவசியகம். சொந்தமாயின்?
ஓர் இருட்டறையில் உங்களுடைய ஸ்வசரீரத்தையாதல், ஒரு
யானையின் பெருத்த சரீரத்தை யாதல் காண்டற்கு அந்தச்சக்தி
உபகாரப்படாமற் போவதற்குக்காரணமென்ன? சந்தோஷகரமான
சூரியன் உதயஞ்செய்கின்றான்; அல்லது அக்கினியினது ஜீவ ஒளி
தோற்றுகின்றது. அப்பொழுதுதானே உங்கள் கண்களுக்குப்
பொருள்களைப் பார்த்தல் சாத்தியப்படுகின்றது. மற்றைப்படி இவ்
வூனக்கண்கள் ஒன்றையும் பார்க்க அறியாவே. ஒளியினுடைய
துணையின்றி யானையானுலுங்கூட உங்கள் ஊனக்கண்களுக்குத்
தட்டுப்படாமற் போமாயின் ஸூட்சுமங்கட்கெல்லாஞ் ஸூட்சும
மாகிய கடவுளை எவ்விதமான கண்கள்கொண்டு காணவிரும்புகின்
றீர்கள்? ஒளியினுடைய உதவிகொண்டு இவ்வுலகத்துப் பொ
ருள்களைப்பார்க்கும் வல்லமை யுங்களுக்கு ஸித்தித்தல்போல, சித்
ஜோதியாகக் கடவுள் உங்களுக்குள் வெளிப்படும்பொழுது அந்
தப் பிரகாசத்தின் உதவியும் புத்தியாகிய கண்ணுங்கொண்டு கட
வுளைக்காணல் உங்களுக்கு ஸாத்தியமாகும். இன்னும், ஆத்மாவும்
பரமும் ஐக்கியமாகும்பொழுது கடவுள் ஆத்மக்கண்ணாக வெளிப்
படுதலும், பரத்தோடொன்றிய ஆத்மாவானது ஒருமையாய்இரண்
டற்றதாய் எல்லாவற்றையும் விழுங்கும் பரமாத்மா வாகிய உண்
மைப்பொருளாய்த்தன்னையுங் கடவுளையுங்காணும். அக்காலையில்,
கடவுளன்றி வேறுபொருளொன்றும் அவ்வாத்மக்கண்ணிற்குப்
புலப்படாது. அப்பொழுது கடவுளுண்டென்பதை விசுவசிக்கும்
விஷயத்தில் யாதொருவினாவும் புலப்படுகின்றது மில்லை. பரந்த
வுலகமெங்கணும் உங்களுடைய சொந்த ஆத்மாவின் அல்லது
தனிப்பரம்பொருளின் தோற்றத்தைத்தவிர வேறொன்றும் காட்
சிக்குப் புலனாகாதொழிதலால், எல்லாரையும் அன்போடும் இரக்
கத்தோடும் மதிப்போடும் நோக்கி முடிவில்லாத சாந்திநிலையில்
வாழ்ந்திருப்பீர்கள். இவ்வாத்மக்கண் திறக்கும்வரை சாந்தம்வரு
தலுமில்லை. ஆகலின், எல்லாரும் தத்தம் ஆத்மக்கண் திறக்கும்



படி விடாது முயற்சிசெய்யக்கடவர். செய்தால்தான், நிலவுலகத்
தில் சாந்திநிலை எல்லாவற்றிற்கும் மேலாய்க் குடிகொண்டிருக்கும்.
மதிப்பு அவமதிப்பு தோல்விவெற்றி என்னுங்கொள்கைக்கு அடி
மைப்பட்டிருத்தலானும் சுயாபிமானம் பராபிமான மென்றிவை
களாற் பீடிக்கப்பட்டிருத்தலானும் உண்டாகுந் துன்பத்தால் யாவ
ரும் வருந்துதல் ஒழிக. ஓம் சாந்தி-பரசாந்தியுங்கட்கெல்லாம் பனி
க்கக்கடவது. * (சமயம், சாத்திரம், கடவுள்) இந்துக்களே! மகம்
மதியர்களே! கிறிஸ்தவர்களே! பண்டிதர்களே! மவுல்வியர்களே!
பாதிரிகளே! மதிப்பு அவமதிப்பு, பகை சச்சரவு, சுயாபிமானம்
பராபிமானம் என்பவைகளைப்பற்றியுள்ள எண்ணங்களைமுற்றுங்
களைந்து விடுங்கள். யாம்கூறும் வார்த்தைகளைக் குறியாகக்கேட்டு
வியாவகாரிகதசையினும் பாரமார்த்திக தசையினும் உங்களுக்
கும் எல்லாமாந்தர்க்கும் நன்மையுண்டாகும்படி முயற்சிசெய்யுங்
கள். வாஸ்தவத்தில், கடவுள் - சமயம் - சமயசாஸ்திரம் என்ப
வற்றைப் பற்றி மனிதர்க்கும் தெளிவான உணர்வில்லை. வேதத்
தையும், விவிலியத்தையும், கோரானையும், புராணத்தையுங் கையி
ற்பிடித்துக் கொண்டு சண்டைக்குக் கொடிகட்டி ஒருவரால் வண
ங்கப்படுங் கடவுள் மற்றையரால் வணங்கப்படுங் கடவுளல்லர்
என்று மூடத்தனமா யெண்ணி, பகை சச்சரவு பரஸ்பர நிந்தனை
முதலிய தீமைகளுக் காட்பட்டுச் சஞ்சலம் என்னும் வனத்தில்
திகைப்புண்டு திரிகின்றனர். அவர்கள் சமயம் உண்மையாகவே
எப்படிப் பட்டதென்றும், சமய சாஸ்திரங்கள் எவையென்றும்?
கடவுள் எத்தன்மையரென்றும்? கடவுள்என்னும்பெயரால் அழை
க்கப்படுகின்ற வஸ்து வாஸ்தவத்தில் எவ்வியல்பினது என்றும்?
யோசிக்கின்றார்களில்லை. வஸ்துக்கும் ரூபத்துக்கும் உள்ள பேத
த்தை நன்கு பகுத்தறியாதவன் உண்மை ஞானத்தை யடைதல்
கூடாது. ஞானமில்லாமல் சாந்தம் எப்படிவரும்? பகுத்தறிவினு
லேயே ஞானம் வரும். ஞானத்தினாலேயே சாந்தம் வரும் —
ஆதலால், சமயம்-சமயசாஸ்திரம்-வழிபடுகடவுள்என்னும் பெயர்க
ளாலே சுட்டப்படும் வஸ்துவினது இயல்பைப்பற்றி ஆராய்ச்சி
செய்வது எல்லா மாந்தர்க்குங் கடப்பாடாகின்றது. வஸ்துவை
யறிய வேண்டுமாயின், நிலையில்லா தழிகின்ற வற்றிற்கும் (அநித்
தியத்திற்கும்) என்றும் அழியாது நிலைபெறுவதற்கும் (நித்தி
யத்திற்கும்) பேதம் பகுத்தறிய வேண்டும். ஆகலின், இப்பெயர்

களாற் குறிக்கப்படும் ஸத்தானது சுபாவத்தில் ரூபமுங் குணமுமில்லதா? அன்றேல் இரண்டுமுள்ளதா? என்று ஆலோசனை பண்ணுங்கள். முன்னதாயின், அது அவாங்மனோ கோசரமாயுள்ள அதீதபரம் பொருளாகும். "உள்ளம் அவனையுள்ளாது. பேச்சும் அவனைப்பேசாது-" மனஞ்செத்து வாக்குஊமைப்படுமிடத்து, ஆராய்ச்சியும் பகுத்தறிவும் எங்ஙனம் நிலைபெறும்? — இப்பொழுது கூட உங்களுடைய மனமும் வாக்கும் கனவில்லாத நித்திரையிற் கட்டப்பட்டிருக்கும் பொழுது, ஆத்மா, சமயம் - சமயசாஸ்திரம், வழிபடு கடவுள் - ஒருமை - பன்மை-வெறுமை என்னும் விஷயங்களைக்குறித்த சகல நினைவுகளும்— அவை உண்டு இல்லையென்னும் நினைவுகூட- எங்கேயோமறைந்து விடுகின்றன. விழித்து மனமும் வாக்கும் வெளிப்பட்டவுடனே, சமயம்-சமய சாஸ்திரம்-ஆத்மா - கடவுள் என்பவைகளைப் பற்றிய எண்ணம் புறப்படுகின்றது. இதனால் மனமும் வாக்கும் இறந்த இடத்திலே ஆராய்ச்சியும் பகுத்தறிவு மில்லையென்பது தெளிவாகின்றது. அஃதாவது இவை ரூபமுங்குணமுமுள்ளநிலையில் மட்டுமேயிருக்கின்றன—ரூபமுள்ள நிலையென்பது, நினைவும் இந்திரியங்களும்—மனமும் வாக்கும்—என்றிவற்றுளையதும், இவற்றிற்கு விஷயங்களாயதுஞ் சேர்ந்து விளங்காநின்ற பிரபஞ்சமாயிருக்கின்றது. இப்பிரபஞ்சம், மனம் வாக்குகளுக்கதீதமாகிய நிலையில் சர்வ வியாபகப் பரம்பொருளிடத்திலே யொன்றிநிற்கும். அப்பரம்பொருள் உண்மையில் நமது சமயமும், சமயசாஸ்திரங்களுமாவது— இப்பிரபஞ்சமாவது, அல்லது மனம் வாக்குகளுக்கப்புறப்பட்டதாவது உங்கள் சமயம், சமய சாஸ்திரம் வழிபடு பொருளாகாதாயின், அவைதாமென்ன? கடவுள் - சமயம் - கோரான் - விவிலியம் - வேதம் - என்றித்யாதி சப்தங்களால் நீங்கள் குறிக்கின்ற வஸ்துத்தான் யாது? இப்பிரஞ்சத்தையும் மனம் வாக்குகளுக் கதீதமான பொருளையும் விட்டு வேறொன்று மிருத்தல் கூடாது. ஒருகாலும் இருந்ததுமில்லை; இருக்கின்றதுமில்லை; இருப்பது மில்லை என்பது பிரத்தியட்சமாயிருக்கின்றது. இவ்விரண்டனுள் ஒன்று மாகாதாயின், உங்கள் கடவுள் - சமயம் - சமய சாஸ்திரங்கள் எதுவாயிருத்தல் கூடும்? பரம்பொருளை யறிதற்கல்லவோ, ஏசு - மகம்மது - ரிஷிகள் - தீர்க்கதரிசிகள் - பைகம்பர் என்றின்னோர் கடவுள் - சமயம் - சமய சாஸ்திரம் என்னுஞ் சொற்றொகுதிகளைப் புனைந்து வைத்



தார்கள். இவை அதனை யறிதற்கேது வில்லையாயின், அந்நூல்களை யெழுதியோரது நாமங்களா? இப்பிரபஞ்சத்தையும் வாக்குமனோதீதத்தையுந் தவிர வேறொன்று மில்லாததனால், கடவுள் - சமயம் - சமய சாஸ்திரம் என்பன இவற்றால் உட்கொள்ளப் படுதல் வேண்டும். இன்றாயின் அவை சூன்யமாம்—கடுதாசியும் மையும் கடவுள் முதலிய (மேற்குறித்த) நிரபதார்த்தங்களென்று சொல்லுவீர்களானால், ரிக்கார்ட்டு ஆபீஸ்களிலுள்ள கடுதாசிக் கட்டுகள், மைத்தொகுதிகள் இவை யடங்கலும் அவைகளே யாகும். சப்தமாயின், ஆகாசத்தில் நிரம்பியிருக்கும் சப்தங்கள் யாவும் அவைதாமாகும். சத்திய ஞானத்திற்கு அவை நாமங்களாயின், இப்பிரபஞ்சமாயும் வாக்குமனோதீதமாயும் விளங்குகின்ற தனிப்பரம் பொருளே எல்லாவற்றையும் அகப்படுத்து நிற்கும் உண்மைப் பொருளாகின்றமையின், அவை யிப்பொருளிற் பிரிந்தியங்க வன்மையிலவாம். இஃதிவ்வாறாயின், உங்களுக்குள்ளே பரஸ்பரம் உண்டாம் பகை வழக்குச் சண்டைகளுக் கிடமெங்கே? சுயாபிமானம் பராபிமானம் என்றிரண்டாலும் அலைப்புண்ணும் மாந்தர் சத்தியநியமத்தைக் கடந்து உலகத்துக்குந் தங்கட்கும் ஒருங்கே கேடுவிளைக்கின்றனர். வாஸ்தவத்தில், இப்பிரபஞ்சத்தையும் வாக்குமனோதீத நிலையையும் உட்படுத்து நிற்கும் ஒருபரம் பொருளே கடவுள் - சமயம் - சமயசாஸ்திரங்களாகின்றதென்பதனை அவர் அறியார். ஆகவே, உலகநன்மைக்காகப் பாடுபடாதவராய் வார்த்தைகளைப்பற்றிச் சண்டையிட்டுத் துக்கமே தங்களுக்கு விதித்தவிதியென்று அதனுள் அழுந்துகின்றார்கள்— கடவுள் தங்களுக்குச் சொந்தமாயினும், மாந்தர் அவரையறிகின்றலர். கடவுளையறியாமல் கடவுள் - சமயம் - சமயநூல்கள் என்பவற்றைப்பற்றியும், உடலைப்பேணுதற்குரிய உணவைக்குறித்தும் அவ்வுடலைத்தானே மறைதற்குறிய உடையைக்குறித்தும் எழுதிவைக்கப்பட்ட ஒவ்வொருமதக்கோட்பாடுகளுக்கும் அப்பியாசங்களுக்கும் தலைவணங்கி அவைகளைப் பின்பற்றி ஆத்ம சுதந்தரத்தைக்கைவிட்டலைகின்றனரே! ஒவ்வொருசமயமும் ஒவ்வொரு சாதியும் தனக்குரியவற்றைப் புகழ்தலும், பிறருரிமையைப் பழித்தலும் ஸஹஜம். ஒவ்வொரு சமயியும் தன்மனோகற்பனையினால் தனக்குச்சொந்த மென்றுதோன்றும் நெறிக்கு மற்றையோரையும் இழுக்கப்பார்க்கின்றான். ஒவ்வொருசமயமும் கட

வுளைத்தனக்குரிய விசேஷ ஐசுவரியமாகப் பாவிப்பதனால் வேறொருவரும் அதனுடைய உத்தரவின்றிக் கடவுளிடத்துச் சுதந்தரம் பாராட்டப்படாதாம். கடவுளோ, திரிகாலத்திலும் ஒரேதன்மையராயிருக்கின்றார். பாந்தர் பகைவழக்குச் சண்டைகளென்னும் முள்ளஞ்செடிகளில் விழுந்து துன்பம் துக்கம் பாவம் என்னும் பழங்களை நாளும் பறிக்கின்றனர். தாங்களே குருடராயிருப்பதை மறந்து தாங்கள் குருடரென்று பெயரிட்டழைக்கும் ஏழைமாந்தர்க்கு உதவிபுரிவோமென்று கையை விரைந்து நீட்டுகின்றனர். தன்தொழில் தெரியாத ஒருவைத்தியன்தான் சிகிச்சை செய்யப்புகுந்த சரீரத்தைப் புண்படுத்துவானாயின், அரசன் அவனைத் தண்டிப்பான்; ஜனங்களும் அவனைப்புறத்தேதள்ளுவார்கள். தம் கையினாற் செய்யப்பட்ட ஜீவனைக்கொல்லுந் துஷ்டருக்குக் கடவுள் அத்தகைய சிட்சைகள் செய்யமாட்டாரென்று நினைக்கின்றீர்களோ? வீண்பெருமைகாட்டி அறிவுடையனாயிருப்பதைவிட மூடனாயிருத்தலே நலம். நாம் வழிபடுங்கடவுள்-நாம்மேற்கொண்டொழுகுஞ் சமயம்—நாம் நம்பிவருஞ் சமபசாஸ்திரம்-நாம் சேர்ந்திருக்குஞ்சாதி - நாம் ஒழுகும் ஒழுக்கம், இவை வாஸ்தவத்தில் என்னென்னவென்று விசாரணைசெய்வது நமக்கெல்லாங் கடனாகும். நம்மனத்தோடு பொருந்திவராத பிறரை நிந்திக்கற்கேதுவான பேதம் எங்கேயுள்ளது? புத்திமேலீட்டினால் இறுமாந்திருக்கும் மாந்தரீர்! சற்று ஊன்றியோசியுங்கள். இச்சரீரம் வருமுன்னர், கடவுள்-பரமேசுவரன்- அல்லா-பரப்பிரஹ்மம் முதலான சங்கையற்ற தெய்வத்திருநாமங்களைப்பற்றி உங்களுக்கு என்ன தெரிந்தது? சாஸ்திரங்களைப்பற்றியாவது, பாஷைகளைப்பற்றியாவது அப்போது நீங்கள் என்ன அறிந்தீர்கள், நீங்கள் இருந்த விஷயமே உங்களுக்குத் தெரியாதாயின், கடவுளிருந்தாரென்பதைப்பற்றி என்னகண்டிருப்பீர்கள்? ஒவ்வொருவனும் பாராட்டித்திரிகின்ற ஞானத்தோடு அவன்பிறந்தானல்லன் என்பது திண்ணம். சரீரவிஷயத்தில் எப்படி நிருவாணமாய்ப்பிறந்தீர்களோ, அப்படியே மனமும் வெறுமையாய்த் தான்வந்தது.

# யுத்தம்.

ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தம் அதிக உக்ரமாகிவருகின்றது. ஜெர்மன் சக்ரவர்த்தியார் மேற்கரங்கத்திலும், கீழரங்கத்திலும் தீர்மானமான வெற்றியடையச் சாத்தியமாகாமையைக் கருதி செர்பியாவில் தம்முடைய சக்தியைச் சிறிதுகாட்டப் பெரும்படைகளைத் திரட்டியனுப்பி யுத்தஞ் செய்துவருகின்றார். இப்போது செர்பியாவில் நடக்கும் யுத்தத்தில் பெரும்பான்மையாக எல்லாராஜாங்கத்தாரும் கலந்தே சண்டைசெய்து வருகின்றனர்.

ஜெர்மெனி, ஆஸ்டிரியா, பல்கேரியா ஒருபுறமும், பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா, இத்தலி, செர்பியா, மாண்டிநீக்ரோ ஒருபுறமுமாக நின்று போர்செய்கின்றன. ஜெர்மனியும், ஆஸ்டிரியாவும் செர்பியாவை அழித்துவிடவேண்டுமென்று அதிக்கிரமித்து அதன்மீது படையெடுத்திருக்கின்றமையின், சிறிய ராஜ்யமாகிய செர்பியாவிற்குதவியாக நேசராஜாங்கத்தார் தமது சேனைகளையனுப்பி யுத்தஞ்செய்து வருகின்றனர். செர்பியாவில் நடக்கும் யுத்தம் இதுகாறும் நடந்துவந்த யுத்தத்திலும் அதிக உக்ரமானதாம்; இங்கு நடக்கும் யுத்தம், ஐரோப்பாயுத்தத்தை ஒருவாறு முடிவாக்குவதாம். பால்கன் நாட்டாரைத் துருக்கியின் கொடுமையினின்று மீட்டுவிட்டது ருஷ்யா; அதன்மீது பல்கேரியா யுத்தத்திற் கெழும்பியது நன்றியை மறந்து விட்டதாம்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முயவில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்னும் வேதவாக்கிற்கிலக்கியமாகப் பல்கேரியா அழிந்துபோமென்பதற் கையமொன்று மில்லையாம்; பல்கேரியா, ரொமேனியா, கிரீஸ்தேசங்கள் தற்காலலாபத்தையெதிர்பார்த்து நடக்கின்றனவேயன்றி,முற்கால எதிர்கால சம்பவங்களைநோக்கி நடப்பனவாக வில்லை. இதனால் இத்தேசங்கள் எதிர்காலத்தில் மிகுந்தகஷ்டங்களையேயநுபவிக்க நேரிடும். இப்போது பல்கேரியாவை மூன்றுபாரிசத்திலும் நேசராஜாங்கத்தார் தாக்கி வருகின்றனர்; ருமேனியாமார்க்கமாகவும் ருஷ்யாவந்து பல்கேரியாவைத் தாக்கமுயற்சிசெய்து வருகின்றது. செர்பியா மிகு வீராவேசத்துடன் ஆஸ்டிரிய ஜெர்மானியரை யெதிர்த்து வருகின்றது; ஆயினும் அது நேசராஜாங்கத்தாரின் உதவி யில்லாது

நெடுநாள் பகைவரையெதிர்த்து நிற்பது கூடாது. இதுகாறும் ஆஸ்டிரிய- ஜெர்மானியர் செர்பியாவில் அடைந்த வெற்றிக்கீடாக அரைலட்சம் போர்வீரைப் பலியாகக் கொடுத்திருக்கின்றனர்.

பிரெஞ்சுப்பெல்ஜியப் போர்க்களத்தில் ஜெர்மானியர் நேசராஜாங்கத்தாருடன் எதிர்த்து நிற்கக் கூடாதவராய்விட்டனர். கலே, பாரிஸ் நகரங்களைப்பிடிக்கு மெண்ணத்தை விட்டுவிட்டனர்; இப்போது தமதூரைநோக்கிச் செல்லவேண்டியவர்களாகி விட்டனர்.

ருஷ்யப்போர்முகத்திலும், ஆஸ்டிரிய ஜெர்மானியர் மிகுதியும் சேதமடைந்தும், தோல்வியடைந்தும் வருகின்றனர். பின்னும் மழைக் காலத்தில் அவர்கட்குப் பெருஞ்சேதமுண்டாம். பால்டிக் கடலில் நடந்துவரும் ஜெர்மன் வர்த்தம் முற்றிலும் நின்றுபோய் விட்டது; இதற்குக் காரணம் அங்குப்பிரிட்டிஷ் கீழ்நீர்க்கப்பல்கள் செய்துவரும் போராட்டமேயாம்; இவை ஜெர்மன் போர்க்கப்பல்களையும் அங்கு வெளிவரவொட்டாது தடுத்துவருகின்றன.

இத்தலிபரிப்போது செய்துவருஞ் சண்டை மிகு உக்ரமாகவிருக்கின்றது; ஆஸ்டிரியர் வன்மையை இத்தாலியாழித்து முன்னேறிச் செல்லுகின்றனர்.

டார்டனல்ஸ் போர்முகத்தில் விசேஷமான சம்பவங்கள் ஒன்றும் நிகழவில்லை. மெசபொடேமியாவில் பிரிட்டிஷார் டைகிரிஸ் நதியைநோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்; ஆசியாமைனரிலுள்ள அர்மீனியரைத் துருக்கியர் மிகுஉபத்திரவஞ் செய்து வருகின்றனர்; ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களைக் கொன்று விட்டனர்; இவ்வதிபாதகச் செயல்களைச் செய்துவரும் துருக்கியர் எங்ஙனம் வெற்றிபெறப் போகின்றனர். ஜெர்மனி, ஆஸ்டிரியா, துருக்கி, பல்கேரியா தேசங்கள் துஷ்டசதுஷ்டயர்கள் போன்று மிகுதியும் கொடுமை செய்து வருகின்றனர். இந்தத் துஷ்டசதுஷ்டயர்கள் அழிவடையுங் காலம் சமீபித்து விட்டது; உலகத்திற்கேட்டை விளைவித்து வருமிவர்களைக் கடவுள் அழித்து உலகத்தில் க்ஷேமத்தை விளைவிப்பாராக.


# சக்ரவர்த்தினி

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி".

VOL-11 } தொகுதி-11 — November நவம்பர்மீ 1915. — { No 4. பகுதி-4


## கீழோராயினுந் தாழவுரை.

"சுளிக்கச்சொல்லேல்", "நொய்யவுரையேல்", "பழிப்பன பகரேல்", "வெட்டெனப்பேசேல்" என்று ஆத்திசூடி கூறுவதை நன்கூகித்து நோக்குமிடத்து, ஒவ்வொருவரும் யாவரிடத்தும் வணக்கமுடையவராகப் பேசவேண்டும்; வணக்கமுடையவராகப் பேசாவிடத்துத் தீமை பல அவர்க்குண்டாவனவாமென்பது செவ்விதாக விளங்குவதாம். நம்மனோர் காக்கை கத்துவதை வெறுப்பதையும், குயில் கூவுவதை விரும்புவதையும் நோக்குவோமாயின், ஒவ்வொருவரும் இன்சொல்லை விரும்புவதன்றி வன்சொல்லை விரும்புவதில்லையாமென்பது விளங்காதிருப்பதன்றும். தமது பணிவைப் புலப்படுத்தும் சொல்லை யாவரிடத்துங் கூறிவருகின்றவர்க்கு எக்காலத்திலும் துன்பமுண்டாவதில்லையாம். மனவடக்கம், வாக்கடக்கம், காயவடக்கமென்னு மூன்றும் ஒவ்வொருவர்க்கும் அத்தியாவசியகமாகவேண்டுவனவாம். இம்மூன்றனுள், வாக்கடக்கம் யாவரிடத்துண்மையாயிருக்கின்றதோ அவரிடத்து மற்றைய இரண்டடக்கமும் அத்தியாவசியகமாக இருப்பனவாம். வாக்கடக்கமாவதுஒருவர் பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய், குறளை (புறங்கூறல்), கடுஞ்சொல்லென்பனவற்றைப் பேசுவதொழிந்து, தமக்குயர்ந்தார், ஒத்தாரென்பவரிடத்தேயன்றித் தாழ்ந்தாரிடத்தும் வணக்கமுடையவராகப் பேசுதலாம். இவ்வாக்கடக்கமுடை

யவர்க்கு நல்லனவெல்லா மூண்டாமென்பதற்கு யாதோர் ஐயப்
பாடு மில்லையாம்.

யாம் யாவராலும் நன்குமதிக்கப்பட்டு மேன்மையுடையவராக
விருக்கவேண்டுமென்று விரும்புகின்றவர் பிறருடைய குற்றங்
களைக் கூறுவதொழிந்து, அவரது குணங்களைப் பலரறியுமாறு
கூறி, யாவரிடத்தும் தமது பணிவைப் புலப்படுத்துஞ் சொல்
லைச் சொல்லிவருதல் வேண்டும். இவ்வாறொழுகுகின்றவர்க்
குப் பிறரால் நன்கு மதிக்கப்படுதலும் மேன்மையுண்டா
வதும் நிச்சயமாம். "இவர் நம்மினும்மிகத் தாழ்ந்தவரன்றோ? இவ
ரிடத்துமா நம்பணிவைப்புலப்படுத்துஞ் சொற்களைச் சொல்லல்
வேண்டும்" என்றகங்கரித்து, கீழோரிடத்து வரம்புகடந்து பேசு
பவர் அவரால் வெளிப்படையாகவாவது மறைவாகவாவது நிந்
திக்கப்படுதல் நிச்சயமாம். கீழோரை நாம் வரம்புகடந்து பேசுதல்
அவர்க்கு நம்மைப்பழித்துப் பேசும் பாகுபாட்டைக் கற்பிப்பது
போலவாம். நாம் எப்போதும் பிறரிடத்து அக (மன) மலர்ச்சி
யும் முகமலர்ச்சியுமுடையவராய் வஞ்சனைகலவாத சொற்களைப்
பணிவாகப் பேசிவருவோமாயின், நமக்கு யார்பகைவராவார்? எவ
ரும் பகைவராத லில்லையாம். "தீங்குசெய்பவரிடத்துமா வணக்க
மாகப்பேசல் வேண்டும்; அவரைவைவது குற்றமாகாதே" என்று
கருதி, நமக்குத்தீமைசெய்பவரிடத்து நாம் வரம்புகடந்து பேசு
வோமாயின், அவர் நமக்குமேன்மேலும் துன்பந்தருஞ்செயல்களை,
பேசிய அப்போதாவது சிலகாலம் பொறுத்தாவது செய்வது நிச்
சயமாம்; இதனைச் சிறிதூன்றி நோக்கினால் நன்குவிளங்கும். நம்ம
னோருட் பெரும்பான்மையோர் தமக்கு மிக்காரிடத்தும் ஒத்தா
ரிடத்தும் வணக்கமாகப்பேசி, தாழ்ந்தாரிடத்து வணக்கமின்றிப்
பேசிவருவது மிகு பிரசித்தமாம்; அவ்வாறு பேசிவருவது
தகாதென்றுணர்ந்துதற்பொருட்டே நமது ஔவைப்பிராட்டியார்
'சுளிக்கச்சொல்லேல்', 'நொய்யவுரையேல்' என்றற்றொடக்கத்
தனவாக ஆத்திசூடியின்கண் கூறியதனோ டமையாது, கொன்
றைவேந்தனில் "கீழோராயினுந் தாழவுரை (ஒருவரிடத்துப்
பேசும்போது அவருனக்குக்) கீழாயினவரா யிருப்பினும் (அவரி
டத்து நீ) வணக்கமாகப் பேசக்கடவாய்" என்றருளிச் செய்தனர்.

கீழாயினோர் தமக்கு மேலாயினோரிடத்துவந்து பேசுவது
அவரிடத்துயாதாயினு மோருதவியைப் பெறுதற்பொருட்டாம்;



அப்போதுமேலாயினோருட்பெரும்பான்மையோர் அவர்மீதிரக்கங்
கொண்டு அவர் கேட்டவற்றுள் கொடுக்கக்கூடியதைக் கொடா
மல், அவரைக்கோபித்துப் பேசுகின்றனர். இது பெருங்குற்றத்
தைத்தரும் செயலாம். இக்குற்றந்தருஞ் செயலைச் செய்பவர்
பிறர்மதிப்பிற் குரியவராகி வாழ்வது ஒருபோது மில்லையாம்.
"லோபிப்பயல், ஏழைகளுக்கு அவர் விரும்பியவற்றைக்கொடாமல்
அவர்களை வாயில்வந்தவாறு திட்டியனுப்புகின்றானே" என்று
பிறர்பழித்துப் பேசுவதை அவர் பெறுவது தவறுவதில்லையாம்.
இதுபற்றித் தான் குமரகுருபரசுவாமிகள் நீதிநெறிவிளக்கத்தில்
"ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல், ஓஒ கொடிது
கொடிதம்மா - நாகொன்று, தீவினைக் கம்பியனால் வாய்பூட்
டிடப்படின்மற், றுவா ரிவரென்செய் வார்" என்று கீழோரிடத்
துத் தாழவுரையாதவரைப் பழித்துக் கூறினர்.

சர்க்கரைப்பந்தரிலே தேன்மாரிபெய்தாற்போல யாவரிடத்
தும் வஞ்சனை கலவாதுபேசிவர நாம்பழகிவருதல்வேண்டும்;பழகி
வருவோமாயின், எப்போதும் நற்கருமங்களையே செய்துவருதற்
குரியவராவோம்; நற்கருமங்களையே செய்துவருவோமாயின்,
புகழ்பொருள் புண்ணியங்களையுடையவராய் மேன்மையுற்று வாழ்
ந்து, எல்லாம்வல்ல இறைவனருளுக்கும் பாத்திரராவோம்.

ஒருவன் தன்வாழ்நாளை யினிதாகக்கழிக்க விரும்புவானாயின்,
அவன் ஒழுக்கம், வாய்மை, நாண் என்னு மூன்றனையும் அத்தியா
வசியகமாக வுடையவனாதல் வேண்டும். ஒழுக்கம்-சரீரசுத்திக்
கேதுவாய கருமமாம், அது ஸ்நானம் பூசைமுதலியனவாம்; வாய்
மை-பிறர்க்குத் தீங்குபயவாத சொற்களையினிமையாகக் கூறலாம்;
நாண்-பழிபாவங்களுக்கேதுவாய செயல்களைச்செய்ய அஞ்சுத
லாம். இம்மூன்றனுள் வாய்மை,ஒழுக்கமும் நாணும் பிறழாதிருக்
கின்றனவென்பதை விளக்குவதாக விருத்தலின், ஒவ்வொருவரும்
வாய்மையுடையராகவிருக்க முயலுதல்வேண்டும். இஃதுடையவர்
கீழோரிடத்துந் தாழவுரைத்தல் நிச்சயமாம்.

கும்பிடுங்கள்ளர், திருநீறுகுழைத்திடுங்கள்ளர், அழுங்கள்
ளர், தொழுங்கள்ளர், ஆசாரக்கள்ளர் முதலாயினோர் யாவரிடத்
தும் வணக்கமாகப்பேசுவது பிறர்பொருளை யபகரித்தற் பொருட்
டாகலின், அவர்வணக்கமாகப்பேசுவது விஷங்கலந்த பால்போல்வ

தாம். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியும்" என்னும் பழமொழிப்படி அவர்கள் தீக்குணமுடையாரென்பது சில நாளிலேயே தெரிந்துவிடுமாதலின், அவருரை எவ்வாற்றானும் கொள்ளப்படுவ தாகாததாம்.

வாய் நன்றாகவிருந்தால் ஊர் நன்றாக விருக்குமென்பதைக் கவனித்துக் கீழோரிடத்தும் வஞ்சனை கலவாது வணக்கமாகப் பேசி வருபவர் பெரும்பான்மையும் இன்புற்று வாழ்வரென்பதை நம்மனோர் கவனித்தொழுகி வருவாராயின், அவர்க்கு நல்லன பலவுண்டாவது நிச்சயமாம்.

திருக்குறள்.

"துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு."
"பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற."

வளையாபதி.

"ஆக்கப் படுக்கு மருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திரிய மைந்தனுள்
நாக்கல தில்லை நனிவெல்லு மாறே"

என்னு மிப்பிரயோகங்கள் இங்குநன்குணர்தற் பாலனவாம்.

## யோக்யதை.

"ஒருதேசத்தின் பலம், தொழில், முயற்சி, நாகரிகம் ஆகிய இவை அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பது அங்குள்ள மனிதர்களின் நன்னடத்தையேயாம்; தேசரக்ஷணத்துக்கும் அதுவே மூலாதாரம்" என்று ஓர் ஆங்கிலப்புலவர் கூறுகின்றார். நற்குண நல்லொழுக்கம் எந்தெந்த நிலைமைக்கும் பெருமையை உண்டாக்கும்; எவ்வளவுதாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும்; இது பணத்தைக்காட்டிலும் அதிகசெல்வாக்குடையது. யோக்கியதையுடைமையேஒருவருக்குஉயர்ந்தகுலத்தில் பிறந்ததாகும்; அதனினின்று தவறி நடப்பதே தாழ்ந்தகுலத்தில் பிறந்ததாகும். ஆதலால் ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும் தான்பிறந்த குலத்தினாலுண்டாவ



தில்லை; ஆனால் தன்னுடைய யோக்யதையினாலேதான் உண்டாகின்றது. வ்யவஹாரத்தில் நீதியுடைமையும், சொன்னசொல் தவறாமையும், ஸதா ஸத்யத்தையே உரைக்கும் தன்மையும், பெரியோரிடத்துக் கீழ்ப்படிதலும், தாழ்ந்தவரிடத்துத் தயை, தாக்ஷிண்யத்துடனும், ஸமமானவரிடத்து நட்புடனும் ஒழுகுந்தன்மையும் யோக்யதையின் லக்ஷணங்களாம்.

யோக்கியதையின் உயர்ச்சிக்கு ஐச்வர்யம் அவச்ய ஸாதனமன்று; உலகவிஷயங்களில் நமக்கு மிகவும் பயன் கொடுக்கக்கூடியது யோக்யதையேயன்றிப்புத்திக் கூர்மையன்று; மனிதரின் உயர்ந்த குணத்திற் கெல்லாம் மூலகாரணமாயிருப்பது உண்மையாயிருத்தலேயாம். ஒருமனிதனுடைய யோக்கியதை அவனுடைய ஒவ்வொருசெய்கையிலும், வார்த்தையிலும் வெளிப்படுகின்றது. யோக்யனை உலகம் நம்பும். அவனை ஜனங்கள் தம் தலைவனாகக் கொள்வர். "ஒருதேசத்தின் க்ஷேமத்திற்குக் காரணம் அதன் வருமானமன்று; பலத்தகோட்டையன்று; அழகிய மாடமாளிகைகளுமல்ல; ஆனால் அதில்வஸிக்கும் யோக்யர்கள் தாம் அத்தேசத்தின் முற்போக்கிற்கு உரியவர்கள்' என்பது மார்டின் லூதரின் (Martin Luther) கூற்று.

யோக்யனுடைய செயல்கள் நீதியால் ஆளப்படுகின்றன. நீதியானது ஒருராஜாங்கம் நிலைத்திருப்பதற்கு ஒரு தூண்போன்றதாம். அநீதியான ராஜாங்கம் ஒருபோதும் ஸ்திரமாக நிலைகிற்காது; வெகு சீக்ரத்தில் அது அழிவுறும்; அதுபோல் ஒரு மனிதன் முன்னுக்குவர உண்மையும் நீதியும் அவச்யமாகவேண்டியிருக்கின்றன. நன்னடத்தையுள்ளமனிதர் கடவுள் பக்தி, பெரியோரிடத்து வணக்கம், பகைவரிடத்துப் பரோபகாரம் ஆகிய இக்குணங்களையுடையவராயிருப்பர். யோக்யனுக்கு உண்மையே தெய்வம்; ஸத்யத்தை உரைப்பதே நோன்பு.

ஜாதிபற்றியே உயர்வுதாழ்வு கருதலாகாது. நீச ஜாதியானாயினும், நற்குண நல்லொழுக்கமும், தெய்வபக்தியும்உடையோனே பெரியவனாவன்; தர்மங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது வாய்மை. நற்குண நல்லொழுக்கங்களை இளம்பருவ . முதல் கற்றுவரல்வேண்டும்; வயது சென்றபின் அவைகளிற் பழகுவது ஒருவராலும் முடியாது; "இளமையிற்கல்".

யோக்யதையானது எல்லாருக்கும் சிறப்பைத் தருவதால் அஃது உயிரைக்காட்டிலும் அதிகமாகப் பாதுகாக்கப்படல்வேண்டும். நல்லொழுக்கமானது ஒருவனுக்கு அறத்துக்குக்காரணமாய் இம்மை மறுமைகளில் இன்பத்தைத்தரும்; தீயொழுக்கமானது, பாபத்துக்குக்காரணமாய் இருமைகளிலும் துன்பத்தைக் கொடுக்கும். சாந்தகுணம் மேன்மக்களுடைய யோக்யதைக்கு உத்தமப் பிரமாணமாம். தம்மிலும் இழிந்தோர், தம்மைச்சார்ந்தோர் தமக்கு ஒப்பாவோர் ஆகிய இவர்களுடைய மனத்தை வருத்தலாகாது என்று நினைவில் இருத்திக்கொள்ளும் இயற்கையும், அவர்கள் மானத்தை அபிமானிக்கும் இயல்பும் யோக்யர்கள் செய்யும் தொழில்களாம். யோக்யர்கள் எப்பொழுதும் தம்மனஸாக்ஷிக்கு விரோதமாய் ஒன்றும் செய்யார்கள். "நன்னடக்கையுடைமையே இவ்வுலகில் உயர்ந்தபேறு என்று ஒவ்வொரு மனிதனும் அதை நாடுவது கடனாகும்"—Samuel Smiles.

யோக்யதையின் மாண்பைப்பின்வரும் ஓர் மேனாட்டுப்புலவர் கூற்றாலறிக;":—ஒருதேசத்தை உயர்த்துவதும், அதனைப்பலப்படுத்துவதும்; அதற்கு ஓர் மஹத்வம் உண்டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச்செல்வாக்கு உண்டாகப் பிறர் அடங்கி அதை அபிமானிக்கும்படி செய்வதும், லக்ஷாதிலக்ஷம் பேருடைய ஹிருதயத்தைவணக்கி அதற்குமுன் இதரதேசத்தார்கள் கர்வம் அடங்கித் தலைவணங்கும்படி செய்வதும், கீழ்ப்படியச்செய்வதற்கு ஏற்றகருவியும், மேன்மை பெறுவதற்கு மூலாதாரமாயிருப்பதும், ஒரு தேசத்தாருக்கு மெய்யான ஸிம்ஹாஸநம், க்ரீடம், செங்கோல் ஆகிய இவைகளை விளைவிப்பதும்; ஒருவருடைய குலப்பெருமையுமல்ல; நாகரிகப் பெருமையுமல்ல; புத்திவிவேகங்களின் திறமைமாத்திரமுமல்ல; ஆனால் நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையேயாம்"

"ஸ்வதேச நன்பன்."

## எல்லாரும் தத்தம் தொழிலில் திருப்தியோ டுழைத்தல்வேண்டும்.

### கல் தச்சன்.

ஜப்பான் தேசத்திலே ஒரு காலத்தில் மிகவும் ஏழையான ஒரு கல்தச்சன் இருந்தான். அவன் ஒருசாதாரண வேலைக்காரன். மிகவும் கடினமான தொழில்; அற்பமான கூலி. இக்காரணங்கள் பற்றி அவனுக்குத் தன் தொழிலில் திருப்தி இல்லாமல் உழைத்துக் கொண்டிருந்தான்.

"நல்ல பட்டாடைகளோடு, மிகவும் மிருதுவான இலவம் பஞ்சு மெத்தைகள்மீது என்றைக்காகிலும் சயனிக்கும் அவ்வளவு பெரும்பாக்கியம் எனக்குங் கிடைக்கப்போகிறதா"' என்று இங்ஙனம் அடிக்கடி அவன் வானைநோக்கி முறையிடுவது வழக்கம். ஒரு நாள் ஆகாயவாணி அதனைக்கேட்டு "உன் இஷ்டம் போல் ஆகுக" என்றாள்.

கல்தச்சன் தனிகனாய் விட்டான்; மிகவும் நேர்த்தியான பட்டாடைகளோடு ஓரிலவம்பஞ்சுமெத்தையின்மேல் சயனித்துக் கொண்டிருக்கிறான்.

ஜப்பான் சக்ரவர்த்தி தன் பரிவாரங்களுடன் ஆடம்பரமாக வீதியில் சென்றுகொண்டிருக்கிறார்; முன்னே காலாட்களும் குதிரை ஆட்களும் ஓடுகின்றார்கள்; பின்னே ஒரு குதிரைப்படை; சக்ரவர்த்தியைச் சூழ்ந்துகொண்டிருந்தவர்களுள் சிலர் சாமரை வீசுகிறார்கள்; வேறு சிலர் பொன்மயமான ஒருபெரிய குடையைத் தாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆடம்பரத்தைக் கல்தச்சன் கண்டுவிட்டான்.

"அளவிறந்த பரிவாரங்களோடும், பொன்மயமான குடையோடும், நான்வெளியே உலாவும்படியான அதிகாரம் எனக்கில்லாதவரையில் இப்போதுள்ள பெரும் பாக்கியத்தால் என்ன பயன்? நான் ஏன் சக்ரவர்த்தியாக இல்லை?" என்று முறையிட்டான்.

"அங்ஙனமே ஆகுக" என்றாள் ஆகாயவாணி. கல்தச்சன் உடனே சக்ரவர்த்தி ஆகிவிட்டான்; அவனுக்கு முன்னும் பின்னும் குதிரைப்படை; அவனைப் புடைசூழ்ந்துகொண்டு அநேகர் அவனுடைய தலைக்குமேல் ரத்ன கசிதமான ஒரு பெரும் பொன் குடையைப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

சூரிய தாபம் பொறுக்கக் கூடியதாயில்லை; சூரியன் தன் கொடிய கிரணங்களால் பூமியை வறட்டுகிறான்; புழுதிநிறைந்த பாதைகள் அக்கிரணங்களைப் பிரதிபலிக்கச் செய்கின்றன; எங்கும் அனல், தீமயம். கண்திறந்து பார்க்க முடியவில்லை.

"சூரியனுக்கு முன் செங்கோலா?. என்றான் கல்தச்சன்." நான் சக்ரவர்த்தியாக இருப்பதில் என்னபயன்? சூரிய வெப்பத்தைச் சகிக்க முடியவில்லையே! சூரியன் ஆணை பெரிதாக இருக்கின்றது. ஆஹா! நான் சூரியனானால்......

"சரி, உன்னைப்பார், திருப்திதானா" என்றாள் ஆகாயவாணி. உடனே கல்தச்சனாகிய சக்ரவர்த்தி சூரியனாகிவிட்டான்; அவன் தன் கிரணங்களைக்கொண்டு மேலும், கீழும், வலப்பக்கமும், இடப்பக்கமும், எங்கும் கொளுத்த ஆரம்பித்துவிட்டான். பூமியிலுள்ள புற்களையும், சக்ரவர்த்திகளின் முகங்களையும் கொரோமாக எரிக்கின்றான்.

ஓஹோ திடீரென்று சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் ஓர் மேகம் வந்துவிட்டது; அது சூரியனுடைய கதிர்களைப் பூமிக்குச் செல்லவொட்டாமல் தடுத்துவிட்டது.

"ஆஹா" என்றான் சூரியன்; "என்னமமதை! என் ஆணையை ஒருமேகம் அதிக்கிரமிக்கின்றதா? ஆகையால் மேகம் பலவான்; நான் ஏன் மேகமாயில்லை?"

"ஓ! உன் எண்ணம் நிறைவேறிவிட்டது பார்" என்றாள் ஆகாயவாணி.

மாறுதல் நடந்தாயிற்று; புதியமேகம், அதிக கர்வத்தோடு, சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் அநேக மைல்கள் தூரம் பரவியிருந்தது; அது எவ்வளவு பலமாகச் சூரிய கிரணங்களைத் தடுத்ததென்றால் அதனால் நிழலை அடைந்த பூமியின்பாகங்களெல்லாம் பசுமையாகிவிட்டன. பிறகு நல்ல மழை; எங்கும் பெருவெள்ளம்; நதிகளும், ஏரிகளும் கரை புரண்டன. வயல்களில் ஜலப்பிரளயம்; வெள்ளத்துக்கு எதிர்க்க வஸ்து ஒன்றுமில்லை; மரங்கள் மிருகங்கள், வீடுகள், காடுகள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டன. ஆனால் ஓரிடத்தில் மாத்திரம், ஒரு பெரும் பாறை, ஓரே ஒருகல், ஆடாமல், அசையாமல், வெள்ளத்தை



எதிர்த்து நின்று கொண்டிருக்கிறது. உரத்த இரைச்சலோடு வரும் வெள்ளம் மிகவும் வலுவாக அதனைத் தாக்குகின்றது. பாறை அசையவில்லை; ஜலமானது நுரையைக் கக்கிக்கொண்டு அதனுடைய காலில் வந்து மாய்கின்றது.

"ஒரு கற்பாறை என்னை எதிர்க்கின்றதா? சரி, நான் கற்பாறையாக ஆகிக்கின்றேன்" என்றது மேகம்.

"ததாஸ்து" என்றாள் ஆகாயவாணி.

புதிய கருங்கல், மிகவும் கர்வமாகத் தலையைத்தூக்கிக்கொண்டு, சூரிய கிரணங்களால் சரிக்காமலும், வெள்ளங்களைப் பற்றிக் கவலையில்லாமலும் குழப்பமான அலைகளின் மோதல்களால் அசையாமலும் நின்றுகொண்டிருக்கின்றது.

ஆயினும் அப்பாறையின் அடிப்பக்கத்தில், ஓர் எளிய மனிதன் நின்றுகொண்டிருக்கின்றான்; அவன் கந்தையாகிய உடையும் கைகளில் உளியும் சம்மட்டியும் தரித்திருக்கின்றான்; அவ்வாயுதங்களைக்கொண்டு அப்பாறையைச் செதுக்கித் தள்ளுகின்றான்.

"என்ன" என்றது பாறை. "ஒரு மனிதனுக்கு இவ்வளவு சக்தியா? எதற்கும் அசையாத என்னை, இவன் இச்சிற்றுளிகொண்டு கொஞ்சங்கொஞ்சமாக வெட்டுகின்றானே! ஆகையால் நான் அவசியம் மனிதனாவேன்."

"உன் எண்ணம்போல் ஆகுக" என்றாள் ஆகாயவாணி.

பாறை கல்தச்சனாகிவிட்டது. பழைய கல்தச்சன்; ஓர் எளிய கல்தச்சன்; ஒரு சாதாரண வேலைக்காரன்; மிகவும் கடினமான தொழில், அற்பமான கூலி. ஆனால் தன்தொழிலை மிகவும் திருப்தியோடும் உற்சாகத்தோடும் செய்துகொண்டு வந்தான்.

புரொபெசர் N. சுப்ரமணிய ஐயர்.

## அர்கால்நாட்டின் ராணி.

வட இந்தியாவில் பேஹார் (Behar) என்னுமொரு மாகாணமுளது. அதில் பக்ஸார் (Buxar) என்னுமொரு பட்டணமுண்டு. அதனருகே அர்கால் என்னும் ஓர் ஊருண்டு. இதனை ஒருபெரிய ஜமீன் என்று சொல்லுதல்கூடும். கௌதமன் என்னும் ஒரு பிரபு ஒருகாலத்தில் இவ்வூருக்கு அதிபதியாயிருந்து வெகுபராக்கிரமத்

துடனே தன்நாட்டின் காரியத்தை நடத்திவந்தான். அப்போது
முசல்மான்கள் ராஜரீகம் ஓங்கியிருந்தது. இந்த முசல்மான்கள்
மெல்லமெல்ல எல்லாநாடுகளையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு
சிற்றரசர்களையும் பிரபுக்களையுங் கப்பங் கட்டும்படி செய்துவந்
தனர். மேற்கூறிய அர்கால்நாட்டதிபதியாகிய கௌதமனையும்
அவ்வாறே கப்பங்கட்டுமாறு கேட்டனர். அவன் அதற்கு உடன்
படவில்லை. ஆகவே டில்லியிலிருந்த துலுக்கச் சக்ரவர்த்தி இந்த
அர்கால்நாட்டைத் தாக்கும்படி தனது பிரதிநிதியாகிய அயோத்
தியா கவர்னருக்குக் கட்டளையிட்டான். இந்தக்கவர்னரும் சக்ரவர்
த்தியின் ஆக்கினைப்படி ஒரு பெரும்படையுடன் அர்கால்நாட்டை
எதிர்த்தான். கௌதமன் சாமானியனல்லன். வெகு பராக்கிரம
சாலி; சமர்த்தன்; போருக்கஞ்சாதவன்; ஜயம் பெறுதற்குரிய
சூழ்ச்சியில் நிபுணன். இவன் இவ்வளவு பராக்கிரமமுடையவ
னென எவரும்அறிந்திலர். அயோத்தியக் கவர்னரை அர்கால்நாட்
டில் கால்வைக்காதவண்ணம் அடித்துத் துரத்திவிட்டனன். அப்
பொழுதுதான் கௌதமன் இத்தன்மையனென யாவருக்குந்
தெரியவந்தது. அயோத்தியக் கவர்னர் உயிர்தப்பிப்போனது
அதிக வியக்கத்தக்க விஷயமாக விளங்கியது. அயோத்தியாக் கவர்
னரது சேனை சின்னபின்னமாகி பெரும்பான்மையும் நசித்துப்
போக, மிகுந்த சிலகாலாட்படையுடன் டில்லி முசல்மான் சக்ரவர்
த்தியால் அனுப்பப்பட்ட அயோத்யாக் கவர்னர் தன்னூர்போய்ச்
சேர்ந்தான். கௌதமன் ஜயபேரிகை யடித்துக்கொண்டு தனது
ஊருக்குவந்து திருவிழா, விருந்து முதலியவைகளினால் சந்தோ
ஷம் கொண்டாடினான். இச்சம்பவம் நேர்ந்த சிலநாட்களில் பௌர்
ணமி தினம் வந்தது. கௌதமன் மனைவி பௌர்ணமி தினம் விர
தம் இருப்பதுண்டு. அந்நாட்களில் இராணி உபவாசமிருந்து
கங்கையில் ஸ்நானஞ்செய்து தனது இஷ்டதேவதையின் பூஜையில்
சிரத்தையுடையவளா யிருப்பது வழக்கம். இந்தப் பௌர்ணமி
தினம் முசல்மான்கள் கங்கைநதிக்கரையில் சேனைகளுடன் இறங்கி
யிருந்தமையின் அந்நதியில் ஸ்நானஞ்செய்வது இயலாதது
போல் தோன்றவே, இராணியின் மனது அக்கசாகரத்தில் அழு
ந்தியிருந்தது; தான் இதுகாறும் நடத்திவந்த தவத்திற்குப் பங்
கம் வந்துவிடுமோ என்னும் பயமானது அம்மாதை வாட்டினது.
துராத்மாக்களான துலுக்கரைத் தாண்டிச்சென்று கங்கைக்கரை
யை எப்படி கிட்டுவது? அந்நதிதீரத்தில் மூழ்கி சில சடங்குகள்



செய்து மீண்டும் எவ்விதம் இல்லம் சேர்வது? துணிந்து செல்லு
வோமாயின் முசல்மான்கள் கத்திக்குஇரையாகிவிடுவோம்;உயிருக்
குப் பார்த்தால் இத்தனை ஆண்டுகளாக நாம் மேற்கொண்ட விர
தத்திற்கு பங்கம் வந்து "நமக்கு இனிஉளதென நினைக்கும் கதி
யை" இழந்துவிடுவோமோ? முற்பிறப்பில் எத்தவம் புரிந்தோ
இம்மானிடப் பிறவிபெற்றுக் குணசீலனும் ஐசுவரியவானுமாகிய
கௌதமனுக்கு வாழ்க்கைப்பட்டோம் நமது ஐசுவரியமும் நமது
சுகமும் கடவுள் கிருபையினாலல்லவா கிடைத்திருக்கின்றன. இச்
சுகமும் என்னாளுமிருக்குமோ?எதற்குத் தொடக்கமுண்டோ அத
ற்கு அந்தமுண்டல்லவா? யோசித்துப்பார்க்கில் உலகவாழ்க்கை
யில் சுகமேஇல்லை. "தோன்றின் றழியப்படுங் கொடும்பிறப்பிற்
றுன்பமேயன்றி யெட்டுணையு மூன்றி நெஞ்சகத் தோர்ந்திடிற்
பிறிதிலை" என்று நமது மூதாதைகள் கூறியிருக்கின்றனர். எத்
தனைநாள் அனுபவித்தாலும் நேற்றனுபவித்த சுகந்தானே இன்
றைக்கு இருக்கின்றது;நாளைக்கும்வரும். அந்தமுடைய இந்தவிஷய
சுகத்தை யனுபவிப்பதற்கா இந்த மானிடதேகமும் ஐசுவரியமும்
நேர்ந்துள்ளன. வந்தவழியை மறந்து இந்தத்தேக சுகமும் தேகத்
தைச்சார்ந்த பொன்பூமியுமாகிய மயக்கத்திலாழ்ந்து கிடப்பதோ
அழகு? என்று மழியாச்சுகம் பெறவேண்டின் வைராக்கியத்தைக்
கடைப்பிடித்தல் வேண்டும். பிறவிக்கடலை இவ்வைராக்கியமென்
னும் தெப்பத்தைக்கொண்டல்லவா மகாபுருஷர்கள் கடந்திருக்
கின்றனர். ஆதலின் என் வைராக்கியத்தை நிறைவேற்றுவதில்
உயிர் நீங்கினும் நீங்குக என்று இவ்வாறு சிலநேரம் தன் மன
திற்குள் போராடி பூர்வபுண்ணிய பலத்தாலும் தான் இதுகாறும்
இயற்றிவந்த விரதத்தாலுண்டாய கடவுள் கிருபையாலும்கங்கைக்
கரைக்கு எவ்வாறாகிலும் சென்று ஸ்நானஞ்செய்து வரவேண்டு
மென்று தீர்மானித்தனள். நள்ளிரவில் தானும் தனது தாதி
களும் கங்கைக்குப்போகப் புறப்பட்டனர். திரும்புகாலையில் மாறு
வேடம்பூண்டு வரலாமென்னும் எண்ணத்துடன் புறப்பட்டுச்
சென்றனர். இரவோடிரவு வெகுதுரிதமாகச் சென்று அருணோ
தய மாகாமுன் கங்கைக்கரையை நண்ணி ஸ்நானகட்டத்திற்குச்
சென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டனர். அதிக மனஉல்லா
சத்துடனே யாதொரு இடையூறுமின்றிச் செய்யவேண்டிய சில
யக்கியங்களை ராணி செய்து முடித்தனள், ராணியானமையின்
ஜனங்கள் கவனத்தை யிழுக்காமலிருக்க முடியுமோ. ஸ்நானம்

செய்யவந்தவள். அர்கால்நாட்டு ராணியென எப்படியோ தெரிந்து
விட்டது; இச்சமாச்சாரத்தைக்கங்கைக்கரையில்பாசறையிட்டிருந்த
அயோத்தியாநகர் கவர்னருக்குத் தெரியவந்தது இந்த ராணி
யை அவளுடைய தாதிமார்களுடனே சிறைப்படுத்தி வரும்படி
அயோத்தியக் கவர்னர் தமது சேனையை யனுப்பினர்.

அர்கால் ராணி தனது தாதிகளுடன் கங்காநதி கட்டத்
தைவிட்டு தனது அரண்மனைக்குத் திரும்பி வந்துக்கொண்டிருக்
கையில் முசல்மான் வீரர்கள் இவர்களைச் சூழ்ந்துகொண்டனர்.
அதனைக்கண்ட ராணியின் மனம் எப்படிக் கொதிப்படைந்திருக்கு
மென யூகித்துணரற்பாலதேயன்றி மொழிகளால் எடுத்துரைக்
கற்பாலதன்று. திகிலடைந்தபோதிலும், ராணி ஒரு துளி கண்ணீர்
விட்டவளல்லள்; பகையாளிகள் தன்னைச்சூழ்ந்து வரவர கோபா
க்னியைச் சொரியுங்கண்களையுடையவளாய் வந்த அபாயத்தை
ஒரு திரணமாக நோக்கினவளாய் தனது தாதிகள் தன்னைப்
புடைசூழ வெகு தைரியத்துடனும் அமரிக்கையுடனும் தனது
இஷ்டதேவதையைச் சிந்தித்து சற்று நின்றனள்.

"ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்."

என்னும் ஆன்றோர் வாக்கு அவள் மனதிற்றோன்றியது. நாம்
இதுகாறும் செய்ததவம் வீண்போமா; வீண்போகாதாகலின்
பகைவர்களை எதிர்த்து நிற்பதே நலமென எண்ணி ஊன்றிநின்ற
னள். இதனைக்கண்டு தாதிகள் தாங்கள் மறைத்துவைத்திருந்த
உடைவாட்களைக் கையிற்கொண்டு பகைவர்களை ஒறுக்க ஆயத்த
மாயினர். முசல்மான்களை யெதிர்த்து வழிசெய்துக்கொண்டு
அர்கால் நாட்டைக் கிட்டுவது அசாத்தியமென தோற்றியது. உடனே அவள் என்னசெய்தனள் என்றால் அங்கி இராணிக்குத்
ருந்த ஹிந்து ஜனங்களைக்கண்டு பின்வரும் சொற்களைக்கூறி சிங்
கம்போல் கர்ஜித்தனள். ஓ! ஹிந்துஜனங்களே! உங்களில் பிரபு
ஒருவருமில்லையா? மீசையுள்ள ஆண்பிள்ளைகள் ஒருவருமில்லையா?
தாய்மாரைப் படைத்தவன் ஒருவனுமில்லையா? மனைவியை யுடைய
வன் ஒருவனுமில்லையா? அனாதரவான பெண்பிள்ளைகளாகிய எங்
களை முசல்மான்கள் இம்சிக்கப் பார்க்கலாகுமா? இரத்தம்
உங்களுடலி லிருக்குமானால் உடனேஎழுந்திருந்து எங்களை இர



16143

க்ஷிக்க வாருங்கள். இது கடவுள்மேலாணை. அப்படி செய்யா
தொழிவீராகில் எனது சாபத்துக் கிரையாவீர்கள்" என்று இவ்
வாறு அவள் கூறிய தட்சணத்திலே அபாய்சண்டு, நிரபாய்
சண்டு என்னும் இரண்டு தைரிய புருடர்கள் தங்களையபிமானி
த்த சிஷ்யர்களுடன் திடீரென்று கிளம்பி முசல்மான்களைப் பிள
ந்து வழி செய்துக்கொண்டு ராணியும் அவளுடைய தாதியும்
இருந்த இடத்திற்கு வந்துவிட்டனர். ராணியையும் தாதிமார்
களையும் தங்கள்மத்தியில் வைத்துக்கொண்டு முசல்மான்களை
வெட்டி அதிகபிரயாசத்துடன் அரண்மனை நோக்கி வழிசெய்து
கொண்டே போகத் தலைப்பட்டனர். நடந்துசெல்ல ஒவ்வொரு
அடிக்கும் உன்னைப்பிடி என்னைப்பிடி என்று கஷ்டப்பட்டுக்
கொண்டுபோக தைரியசீலனான நிர்பாய்சண்டு என்பவன் காயம்
பட்டிறந்தனன். அதைப்போல அவனைச்சார்ந்தவருட் சிலரும்
மாண்டனர். சீக்கிரம் சகாயம் வந்துவிட்டது முசல்மான்கள்
ராணியைச் சூழ்ந்துக்கொண்டனர் என்னும் சமாச்சாரம் அர்கால்
நாட்டுக் கதிபதியாகிய கௌதமனுக்குத் தெரிந்தவுடனே தனது
மனைவியை இரக்ஷிக்கப் பெரியசேனையுடன் ஓடோடியும்வந்தனன்.
இவன் வந்துக்கொண்டிருந்ததைப் பார்த்த முசல்மான்கள் மூலைக்
கொருவராக ஓடிவிட்டனர். இதைக்கண்டு எல்லாரும் ஆனந்தக்
கடலில் மூழ்கினர். இராணியின் வீரகுணத்தைப் புகழ்ந்தனர்.
அவள் தாதிமாரின் விசுவாசத்தை வியந்து மெச்சினர்; இந்த
ஆபத்தின் விலக்கு ராணியின் தபோவலிமையென்று சிந்திக்கலா
யினர் சிலர்.

அர்கால் அதிபதி அபாய்சண்டின் வீரத்தை மெச்சி தனது
புதல்வியை அவனுக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தனன்.

அயோத்தி கவர்னர் ஒருஸ்திரீயை எதிர்த்ததினால் அவனது
அந்தஸ்துக்கு மிக இழுக்குண்டாகி அவனது நட்பினரும் பகை
வரும் அவனை நிந்திக்கலாயினர்; நமது ஆயுதத்தை ஒரு பெண்
பால்மேல் பிரயோகித்தோமே என்கிற அவமானமானது அவனை
ஆயுள்பரியந்தம் வாட்டிக்கொண்டேயிருந்தது.

P. மாணிக்கசாமி முதலியார், பி. ஏ.,
இரங்கோன்.

rn2.11, 1105
1105.11

# பெருமை.

அகம், பாவம் (ஹாவம்) என்னுமிரண்டையும் எவன் நன்குணர்ந்து அவைகளை அறவே நீக்கி நன்மைகடைப்பிடித்து நடக்கின்றானோ அவனே பெருமையுடையவனெனப்படுவான். ஏனெனின், அகம் என்பது மனத்துள் வந்த ஒரு மாசு; அதுவே வேற்றுமைப்படுத்தும் தன்மையுடையது. அம்மாசு மனத்தில் வேரூன்றியவுடனே மேற்சொன்ன பாவம் என்பது அதனுடன் கூட்டாளியாக வந்துறைந்து விடுகின்றது. இவ்விரண்டும் ஒன்று கூடி மனத்தின் கருத்தாக உடனே வெளிப்படுகின்றன. அவையிவ்வாறிருப்பது பற்றியே ஆன்றோர் இவ்விரண்டையும் ஒன்றெனமதித்து எவன் யான், எனது என்று அகமமதையினுண்டாய சப்தத்தை அடிக்கடி கூறுவதையொழித்து அதனைத் தனக்குகந்த ஓர் அருங்குணமாகக் கருதாது அடக்கம், பொறை, வாய்மை முதலிய மேலோர்க்குரிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்று நன்னெறியில் வழுவாமே நடக்கின்றானோ அவனே பெருமையுடையவன் என மதித்துளார். ஆங்கில நாட்டிலும் பெருமை என்பது ஒரு சிறந்த குணமாக மதிக்கப்படுகின்றதேயன்றி அதை ஒரு மாற்றத்தகுந்த பண்டமாகக் கொள்வதில்லை. இதை விளக்கும் பொருட்டு ஒருசிறு திருஷ்டாந்தம் கூறுவோம்:—

ஆங்கில நாட்டில் ஓர் ஊரில் ஒரு சாலைக்கு ஒருபரீக்ஷை உத்தியோகஸ்தர் சென்றார்; அவர் வந்ததும் ஒரு வகுப்பை அணுகி மாணாக்கர்களைக் கூப்பிட்டு யான் ஒரு கேள்வி கேட்கப்போகின்றேன்; அதற்கு விடைபகர்வோன் தக்கபரிசளிக்கப்படுவான் என உரைத்து, உலகின்கண் யார்பெரியவன்? அஃதாவது பெருமையுடையவன் யாவன் எனப் பொருள்படுமாறு கேட்டனர். அதற்கு சிலர் சரீரம் பெருத்தவர் பெரியவரென்றும், வேறு சிலர் பணம் பெருத்தவர் பெரியவர் என்றும், மற்றுஞ் சிலர் படிப்பில் அதிகப்பட்டவர் பெரியவரென்றும், ஏனைய சிலர் வயதுமுதிர்ந்தவர் பெரியவரென்றும் விடைகூறினர். ஆனால் ஒரு பையன் மட்டும் அவ்விதம் உரைக்காமல் நற்குணங்கள் அமையப்பெற்றவர் பெரியவரென்று சொன்னான். இதைநன்கு உணர்த்துமாறு உபாத்தியாயர் பின்வருமாறு விளக்கினார்.



உலகத்தில் யார் பெரியவர்—Who is a great man in the world? a great man is a g-r-e-a-t man.

| | | | |
|---|---|---|---|
| g=Generosity | - | காருண்யம் | Godliness=தெய்வபக்தி |
| r=Righteousness | — | நன்னெறி | Religiousness=சக்தி |
| e=Earnestness | — | ஊக்கம் | Efficacy=நன்னடக்கை |
| a=Amicability | — | ஒற்றுமை | Aphorism=தெய்வப்பிரீதி |
| t=Truthfulness | — | சத்தியம் | Thoughtfulness=யோசனை |

மேற்சொன்னவகையாய், பெருமை என்பது ஜனங்கள் சாதாரணமாய் நினைக்குமாறு 'பணத்தினாலாவது, உத்தியோகபதவியினாலாவது, பேசும் திறத்தினாலாவது, மற்றவெளிப்பகட்டினாலாவது அடையக்கூடியதன்று; இக்குணம் இம்மை மறுமையென்னும் இரண்டிற்கும் முக்கியமான சாதனங்களிலொன்றாம். இதை அடையக்கூடியதும், அடைந்து தன்னிடமே வைத்தற்குக் கூடியதும் எது? மனமாம். அம்மனமன்றி வேறு உளதோ? ஆகவே, யாவர் தன்மையிடத்திலிருந்து நீங்கிப் பர்க்கையிடத்தினுறைந்து கடவுளை வழிபட்டு நடக்கின்றாரோ அவரே பெருமையுடையவர் ஆவர் என்பதற்கு எள்ளளவேனும் ஐயமில்லையாம்.

A. S. Venkatraman.

## WONDERS IN NATURE.

## இயற்கையற்புதங்கள்.

ஈசுவர சிருஷ்டியில் அவருடைய அதிக கவனிப்பையும் பாதுகாப்பையும் உடையவை எவை என்ற சந்தேகம் ஒரு சமயத்தில் என்மனதில் தோன்றிற்று. இதைப்பற்றிச் சற்று ஆராய்ந்தேன்; என் சந்தேகம் நிவர்த்தியாயிற்று. இவ்வித சந்தேகம் இயற்கைவிசாரணை செய்யும் ஒவ்வொருவர் மனதிலும் உண்டாகக்கூடுமென்கின்ற அநுமானத்தினால் இதை வெளியிடலானேன்.

"பூமியானது கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட உடனே முதல்முதல் அதில் உண்டாக்கப்பட்டது பசுமையான புற்பூண்டுகளே. பிறகுதான் ஜீவவர்க்கங்கள் சிருஷ்டிக்கப் பட்டன" என்று சிருஷ்டி என்கிற விசாலமான புத்தகத்தில் முதற்பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு தகப்பனுக்குத் தன் மூத்த பிள்ளையினிடத்தில் அதிக ப்ரீதியிருப்பதுபோல் ஈச்வரனுக்கும் தான் முதலில் சிருஷ்டித்த புல்பூண்டுகளிடத்தில் அதிகப் பிரீதியிருக்கும் என்று ஊகித்தேன். இவ்வூகை சரியானதோவன்றோ

வென்த்தெரிந்து கொள்ள புல்பூண்டுகளிடத்திற் செல்லவெண்ணி
கீழே நோக்கினேன்; உடனே புற்களைக் கண்டேன். அவைகளுக்
கும் எனக்கும் நடந்த சம்பாஷணையாவது:—

நான்:—ஓ புற்களே! உங்களுடைய க்ஷேமமென்ன? சௌக்கிய
மாக விருக்கிறீர்களா? தந்தை உங்களிடத்தில் ப்ரீதியாயிருக்கின்
றாரா? என்று கேட்டேன்.

புற்கள்:—ஐயா சகோதரரே! எங்கள் க்ஷேமத்தை வினவும்
சகோதரர்களும் பூமியின்மேல் இருக்கின்றார்களோ? தாங்கள்
பாண்டவர்களின் சகோதரரான கௌரவர்களில் விகர்ணனையொத்
தவராயிருக்கின்றீர்; மிக்க சந்தோஷம்; தாங்கள் எங்களுடைய
க்ஷேமத்தை நாடியதற்கு நாங்கள் மிக்க நன்றியறிதலுள்ளவர்
களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்; எங்கள் க்ஷேமத்தை
என்னவென்று சொல்லுவது! உலகசிருஷ்டியில் நாங்கள்தாம்
முதல் முதல் உண்டாக்கப்பட்டோம்; முதலில் உண்டாக்கப்பட்ட
தும் போதும்; நாங்கள் படும் கஷ்டமும் போதும்; எரிமலை
களின் சமீபத்திலும், பாலைவன மணற்பிரதேசங்களிலும், சுரங்
கங்களினடியிலும், பனிக்கட்டிகளால் நிறைந்துள்ள துருவப் பிர
தேசங்களிலும், மலைக்கற்களினிடையிலும், இப்படி ஈரமும்
மண்ணும் உள்ள எல்லாவிடங்களிலும் நாங்கள் குடிகொள்ள
வேண்டியது அவசியம். இது தந்தையினது உத்தரவு. மேற்கூறிய
விடங்களில் நாங்கள் அன்னபானாதிகளுக்குப் படும் துன்பத்திற்கு
அளவேயின்று; இவ்வளவு கஷ்டத்திற்கும் சகித்துக்கொண்டு
தந்தையின் உத்தரவிற்கு மீறாமலிருப்பதாற்றான் அவருடைய
அதிகப்ரீதிக்குப் பாத்திரர்களாயிருக்கின்றோம்" என்று சொல்
லின.

நான்:—"ஓ புற்களே! நீங்கள்தாம் உலகசிருஷ்டியில் முதன்
மையானவர்களென்றும், உங்கள்பேரில் தந்தைக்கு அதிகப்ரீதி
இருக்கலாமென்றும் அனுமானித்து அவ்வனுமானம் சரியோ
வன்றோவெனத் தெரிந்து கொள்ளவே உங்களிடத்தில் வந்து
கேட்டேன். என் அனுமானம் சரியாகவே யேற்பட்டது. ஆயி
னும் நீங்கள் எந்தெந்த வகையில் தந்தையினுடைய பரம ப்ரீதிக்
குப்பாத்திரர்களாயிருக்கிறீர்களென்பதைஅறிய மிக்க ஆவலுள்ள
வனாயிருக்கிறேன்; தயைசெய்து சொல்லவேண்டும்" என்றுகேட்
டேன்.



புற்கள்:—ஐயா நாங்கள் பூமியின்பேரில் முதலில் உண்டாக்
கப்பட்டபோது உஷ்ணதேசம் என்றும், சீதளதேசமென்றும், எரி
மலையென்றும், மணல்வெளியென்றும் யாதொரு விலக்கில்லாமல்
பூமியில் எங்கும் வளரும்படியான ஒருவிதமான சக்தியைக் கட
வுள் (தந்தை) எங்களுக்குக் கொடுத்திருக்கின்றார். இவ்விதமான
சக்தி எங்கும் நிறைந்தஅவருக்கேயன்றி மற்றெவருக்கும் இல்லை.
தந்தையின்குணம் பிள்ளையினிடத்திற் காணலாமென்ற முது
மொழியை உண்மையென்று ரூபிக்கும் பாக்கியத்தை நாங்கள்
கடவுளிடத்தில் பெற்றதைக் காட்டிலும் வேறு எதைப் பெறப்
போகின்றோம்; மேலும் எங்களுடைய சரீர அமைப்பைக் கவனித்
தாலும் அவர் எங்கள்பேரில் அதிக கவனிப்பாயிருக்கிறாரென்பது
நன்குவிளங்கும்.

எங்கள் சரீர அமைப்பு:—(1) மெலிந்து நீண்ட இலைகள். (2)
குழாயைப்போன்ற தாள். (3) கணுக்கள். [4) கணுக்கள் தோறும்
உண்டாகும் குச்சு வேர்கள்.

பூமி எங்கும் பசுமையாயிருக்கவும், சாகபக்ஷிணிகளுக்கு
ஏராளமான ஆகாரமாக விருக்கவும் தான் நாங்கள் படைக்கப்
பட்டோம். நாங்கள் பிராணிகளால் எவ்வளவுக்கெவ்வளவு மிதி
பட்டு மேயப்படுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நன்றாய்ச் செ
ழித்து வளர்வோம். நாங்கள் பூமியின் பேரில் அடர்த்தியாய்
வளர்வோமாகையால் வெளிச்சத்தையும் காற்றையும்கிரகிப்பதற்கு
எங்கள் இலைகள் மெலிந்து நீண்டிருக்கின்றன. இங்ஙனம் எங்கள்
இலைகள் மெலிந்து நீண்டிராவிட்டால் எங்களுள் ஒருவருக்கொரு
வர் வெளிச்சத்தையும் காற்றையும் கிரகிப்பதில் சச்சரவு உண்டா
கும்.

நாங்கள் குழாயைப் போலிராமல் கெட்டியாயிருந்தால் பிரா
ணிகளால் மிதிபடும்போது உடைந்து நாசமாவோம். குழையா
யிருப்பதாற்றான் பிராணிகளால் மிதிபடும்போது அவர்களின்
பாதங்களின் கீழ் மடிந்திருந்து பிறகு நிமிர்ந்து நிற்கின்றோம்.

எங்களிற் சிலர் பூமியின்மேல் படருவதும் உண்டு; அங்ஙனம்
படரும்போது தாள்களுக்கிடையிடையேயுள்ள கணுக்களினின்
றும் வேர் இறங்கும்; இப்படி அதிகமாக வேர்களையுடைத்தாயிருப்
பதால் ஆகாரம் நன்றாய்ச் சேகரிக்க மிக்க அநுகூலமாயிருக்கின்

றது. இவற்றாலேயே நாங்கள் தந்தையின் பரமப்ரீதிக்குப் பாத்திரராயிருக்கின்றோமென்று புலப்படவில்லையா என்று சொல்லின.

நான் மிக்கசந்தோஷத்தோடு அவைகளுக்கு வந்தனமளித்து "ஓ புற்களே! உங்களில் அநேக ஜாதிகளுண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுடைய பிரிவுகளையெல்லாம் சொல்ல வேண்டும்" என்று கேட்டேன்.

புற்கள்:—ஐயா சகோதரரே! நாங்கள் எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைச் சூரிய உஷ்ணமும் வெளிச்சமும் இருக்கும்போதே தயார்செய்துகொள்ள வேண்டியது அவசியமானதால் இனித் தங்களோடு அதிகநேரம் பேசிக்கொண்டிருக்க முடியாது; தயவு செய்து நாளையதினம் வந்தால் எங்கள் வகைகளையும் இன்னும் தாங்கள் கேட்கும் இதரவிஷயங்களையும் சொல்லத் தயாராயிருக்கின்றோம். மன்னிக்கவும்" என்று சொல்லி முடித்தன.

உடனே நானும் "நாளையதினம் போகலா"மென்ற தீர்மானத்துடன் திரும்பினேன்.

(வரும்.)

ந. சுப்பிரமணிய அய்யர்,
திருவெட்டீச்வரன் பேட்டை.

## சுகத்தெளிவுரை.

(முன்தொடர்ச்சி).

உங்கள் சரீரத்தை உடையினால் மூடக்கற்றுக் கொண்டது போல, வாசனைகளினால் மனத்தையும் மூடக்கற்றுக்கொண்டீர்கள்; ஆனால் மெய்யுணர்வுக்கும் உங்களுக்கும் வெகுதூரம். இப்பொழுது, புத்தியினால் நீங்கள் அதிரஹஸ்யமான இடங்களிற் போவதும் ஆகாச மண்டலங்களிலெல்லாஞ் சஞ்சரித்தும், எல்லாம்வல்ல இறைவன் மாட்டுள்ள ஏகசக்ரத்தை அபகரிக்கலாமென்றெண்ணுகின்றீர்களா? உங்களுக்குள்ளே விளங்குகின்ற இந்த அற்பஜோதிப்பொறி கனவற்றநித்திரையில்மங்கும்பொழுது நீங்கள் என்ன அறிகின்றீர்கள்? அச்சமயம், வங்கு வற்றின நாயொன்று வந்து உங்கள் அதரத்தைப் பானம்பண்ணலாம்; பிளவைநோயால் வருந்தும் மூடனொருவன் உங்கள் வஸ்திரத்தை யுரிந்துகொள்ளலாம்; உங்கள் அங்கங்கள் நோயால் எப்பொழுது



மெலியுமென்பதையும், உங்கள் பிராணன் மரணத்தால் எப்பொழுது பிரியுமென்பதையும் சொல்லப் புத்திக்கு வலியில்லையே! உங்களுடைய பிரகாசமிக்க மனமும், அதிஸூக்ஷ்மமான புத்தியும் என்னென்று சொல்லுவோம்? ஒருஸ்திரீயினது கடைக்கண் பார்வையோ, சுவர்ணத்தின் தோற்றப்பொலிவோ, ஜனசாமானியங்கள் கூறும் வெறும்புகழ் மொழிகளோ? எதிர்ப்படின் இவற்றிற்கு உடைந்து சரணாகதியடைதலைத் தினந்தோறுங் கண்கூடாகப் பார்க்கவில்லையா? ஆதலால் வெட்கம்நிறைந்து உங்களைமூடி, கர்வத்தைத் திலதர்ப்பணம்பண்ணி உங்கள் மனத்தில் தாழ்மையைப்பதிக்க வேண்டாமா? ஒரு ஜாலவித்தைக்காரன் வந்து வித்தைபண்ணும்பொழுது உங்கள் மனங்களெல்லாங் கலக்கமடைகின்றன; பொறிகளோ சிதறி நாநா பக்கமுந் திகைப்புறுகின்றன. எல்லாம்வல்ல இறைவரது அளவுகடந்த வல்லமையை இந்த நீங்கள் எதனைக்கொண்டு அளக்க உத்தேசித்திருக்கின்றீர்கள்? அவ்விறைவரே தலைவர். சத்தியத்திற்குத் திறவுகோல் அவரேயாகலின், அவரையடைந்தாலன்றி அதனையடையவொண்ணாது. ஞானிகளும், சித்தர்களும், தீர்க்கதரிசிகளும், பைகம்பர்களும், அவதார புருஷர்களும், தெய்வ மூர்த்தங்களும், தங்களை நெறியிலுய்ப்பதாக மாந்தர் சொல்லுகின்றனர். ஆனால் உண்மைப்பொருளைப் பற்றி அவர்கள் உள்ளத்திலே என்ன உணர்ந்திருக்கின்றார்கள்? சொப்பனங் காண்பவர்களுள் ஒவ்வொருவனும் தன்றன் சொப்பனத்தையே வாஸ்தவமாகக்கண்டு மற்றவன்காணும் விஷயத்தையறியாதவனாகின்றான். கனவுகள் அழியுந்தன்மையன; சத்தியம் என்றும் நிலைபெறுந்தன்மையது. தனக்குப் போதிக்கப்பட்டதைப் போதகன் போதிக்கின்றான்; தன்னாற்பார்க்கப்படுவதைத் தீர்க்கதரிசி சொல்லுகின்றான். மூர்த்தங்கள் தங்கள் கருமங்களை நிறைவேற்றுகின்றன. கடவுளோ என்றும் நிர்விகாரியாயிருக்கின்றார். அவர் தாம் சத்தியம்; மனிதர், பிள்ளைப்பருவத்தில் தாம் கேட்பவற்றை வாலைப்பருவத்தில் நம்பி அந்தியகாலம் வரை மனத்தில் வைத்துக்கொண்டிருந்து, பொய்ப்பக்திக்குக் கூலியாக வியாகுலத்தை எங்கணும் பரப்பித் துன்பத்தைச் சம்பாதிக்கின்றார்கள். துவைதியும் அத்துவைதியும் அஃதாவது ஸகுணசொரூபத்தில் நாட்டமுள்ளவனும், பிரகிருதி தத்துவசாஸ்திரிகளும், பிரபஞ்சமேயில்லையென்னும் ஸர்வ நாஸ்திகவாதிகளும், ஒருங்கே தங்கள் மனத்திற்கேற்கும் புரட்டுக் காட்டப்பட்டவர்களை

யாகின்றனர். தங்கள் மனத்திற் படுவதை யுண்மையென்று பாரா
ட்டி மற்றையோருடைய அபிப்பிராயங்களைப் பொய்யென்று
பழித்துத் துன்பச்சுமையைத் தங்கள் ஜீவன்கள்மேற் சுமத்தித்
திரிகின்றார்கள். உண்மைவஸ்துவோ, ஏகமாய் இரண்டற்றதாய்,
தனதுரிமைச் சாந்தத்தில் அசைவற்றுறைகின்றது. ஸ்திதி வர்
ணம் சமயம் என்றிவற்றாற் பலவகைப்பட்ட மனிதர் எல்லாரும்
தாழ்மையும் பக்தியுமுள்ள இருதயத்தோடு ஒன்றுசேர்ந்து உண்
மைவஸ்து விசாரணையில் முயல்வாராக. எது உள்ளதோ அது சத்
தியம். எது தோற்றமோ அது பொய் ஜோதியே தன் வெளிப்
பாடு அல்லது தோற்றமாகப்பெற்று ஸர்வவியாபகமாய் விளங்கும்
பரம்பொருள் எதுவோ அதுவே சத்தியம். அதனையொழிய மற்
றவையெல்லாம் பொய்யே. ஏனென்றால் அவை யிருக்கின்றன
வென்பதே பொய்யாம். பலவென்னுந் தொகுதியுட் பட்டவை
பரம்பொருளினின்றும் பிரிவுப்பட்டு வேறியங்குந் தன்மைய
வென் றெண்ணுமெண்ணமே பொய்; பலவும் ஒன்றே ; அதுவும்
கடவுளே என்பது சத்தியம். சத்தியம் என்பது எல்லாருக்கும்
எக்காலத்தும் சத்தியமே. பொய்யென்பது எல்லாருக்கும் எக்கா
லத்தும் பொய்யே. சத்தியக் காட்சியின்றேல், ஞானமில்லை;
ஞானமின்றேற் சாந்தமில்லை. ஞானியானவன் எல்லாவற்றிலும்
ஏகாத்மாவினை புணர்ந்தவனுகையால், தானுரிமையாகப்பெற்ற
சாந்தத்தினை, அஃதாவது பரம்பொருளினதுசாந்தத்தினை, எல்
லாரும் எக்காலத்தும் ஆனந்தத்துள்தோய்ந்து வாழ்வடையும்படி
அவர்களுக்கெல்லாம் அளிப்பதிலேயே கண்ணாயிருக்கின்றான்.
சத்தியமான வஸ்துவைக் கண்டுபிடிப்பது எல்லா மாந்தர்க்கும்
கடனாகும். மனிதர் வணங்குங்கடவுள் யாவர்? இவ்வார்த்தை
களைச் சிந்தித்து வாஸ்தவத்தைக் கிரஹித்துக் கொள்ளுங்கள்.
அவர் அரூபியாயும் குணரஹிதராயு மிருப்பாராயின், அவரை
வாக்கினால் வசனிக்கமுடியாது. மனத்தினால் எண்ணமுடியாது.
இந்திரியங்களினால் அவரை புணரவும் முடியாது. ஜாக்ர, ஸ்வப்ந,
ஸுஷுப்தி என்னும் மூன்றவஸ்தைகளும் அவரிடத்திற் கிடை
யாது. எண்ணமென்பதும் அவரிடத்திற் கூடாதகாரியம் ; மன
மும் வாக்கும் ஓய்வடைந்திருக்கும் ஸுஷுப்தி யவஸ்தையில்
எண்ணமாவது விசாரணையாவது இருக்குமென்றல் எவ்வண்ணம்
பொருந்தும்? அந்த அவஸ்தைமாறி ஜாக்ராவஸ்தை வரும் பெ



ழுது மனமும் வாக்கும் தந்தொழிலிற் பயில ஆரம்பிக்கின்றன.
ஒவ்வொருவனும் தன் முந்தியவாசனைகளைப் பின்தொடர்ந்து
செல்லுகின்றான். எந்த நாமத்தாலாவது அழைக்கப்படும் உங்களு
டைய கடவுளுக்கு ரூபமுங்குணமும் உண்டென்னில், அரூபியாய்
குணரஹிதமாயுள்ள வஸ்துவே, உங்களையு முட்படுத்தி விரிந்து
தோன்றும் பிரபஞ்சமாக அநாதியே வெளிப்பட்டிருக்கின்றதென்
பதை ஞாபகத்தில் வையுங்கள். இதுதான் பிரசன்னமாயிருக்
கின்ற கடவுள். இவரையே பாதகண்டத்துப் பூர்விகஜனங்கள்
விராட், அஃதாவது, பரமேசுவரன்என்று வழங்கினார்கள். சூரியன்
அவருடைய கண்ணாகும். சந்திரன் அவருடைய மனமாகும். அவ
ருடைய வாய் அக்நியாம். இந்திரியங்களும் (சாதாரணமாய்ப்
பூதங்களென்று வழங்கப்படும்), அவற்றிற்குரிய விஷயங்களும்
அவருடைய பலவிதமான அங்கங்களாம். ரூபங்களையுங் குணங்
களையுங் கடந்தவரே இந்த ரூபங்களெல்லாமாயுங் குணங்களெல்
லாமாயு மிருக்கின்றார்; பலவும் வாஸ்தவத்தில் ஒன்றே. அவ்வொ
ன்றும் இரண்டற்றதே. எல்லாப்பொருள்களும் அவருக்கு அங்
கங்களும் உறுப்புக்களுமாகின்றன. முற்சொல்லிய எந்தமூன்று
அவஸ்தைகள். சேர்ந்து நமக்கு வாழ்க்கை நிலமாகின்றனவோ,
அம்மூன்றும் அவரிடத்தில் அவராலேயே உதிக்கின்றன. அவ
ரைக்கடந்த தொன்றுமில்லை. உங்களுடைய சமயம், உங்கள் சாஸ்
திரம், உங்கள் வகுப்பு, உங்களைப் பிறரிடத்திலிருந்து பேதிக்கும்
மதக்குறிகள், உடைகள், என்றிவை சத்தியமாயிருக்குமாயின்,
அவை அரூபிகளாயிருத்தல் வேண்டும், அல்லது அவைகட்கு
ரூபமிருத்தல் வேண்டும்; இரண்டில் எவ்வழியாகப் பார்த்தாலும்,
அவை பலவென்றல் கூடாது. அரூபியாயிருப்பது பகுக்கப்படும்
பொருளன்று; ரூபமுடையது பரமேசுவரனது ஒரு அங்கம் அல்
லது உறுப்பாயிருத்தல் வேண்டும். அவை இவற்றுள் எது
வாயாவது, எல்லாமாயாவது இருப்பின் பலவாதலெங்ஙனம்?
உங்களிடத்திலிருக்கு மன்றானை எல்லாரிடத்துமிருப்பது; தெய்
வாங்கங்களில் ஒவ்வொன்றும் சமயத்தாலும் ஜாதியாலும் பகுக்
கப்படாது ஸர்வவியாபகமாயிருக்கின்றது. அங்ஙனம் ஒரே தன்
மையவா யிருக்கின்றமையின், அங்கங்களெல்லாம் ஒன்றேயாகும்;
மற்று ஸ்தூலசரீரமானது உங்கள் சமயம் சாஸ்திரம் சாதியாமா
யின், எல்லாருடையசரீரமும் ஒரேபொருளினால் ஆக்கப்பட்டது

(பூதகாரியம்)என்பது உங்களுக்குத் தெரியாததன்றே. மனமும் இந்திரியங்களும் அவையாமாயின், அங்கேயும் இந்தநியாயம் பொருந்தும். ஜீவாத்மாவே இவையென்னில், எல்லாரிடத்தும் ஜீவாத்மாவாய் வெளிப்பட்டிருப்பது கடவுள்தான் என்பதைக் கவனியுங்கள். ஆத்மாக்கள் அவ்வொரு கடவுட்சோதியின் பொறிகளேயாம். இவைகளொன்றும் மேற்சொல்லிய கடவுள் முதலான திரிபதார்த்தங்களாகாதாயின், அவை யிருக்குமென்பதே கிடையாது—ஆதலால் எல்லாவிதமான பக்ஷையையும் அதர்மத்தையும் விட்டொழியுங்கள். ஜாதி சமயம் சங்கமென்பவற்றின் தொடக்கத்ததாய் வரும் அபிமானக்கட்டை உதறியெறிந்து, உண்மையாயிருக்கிற கடவுளைத் தேடி அவரைவிடாது பற்றி, உலகநன்மைக்காகவும் உங்களுடைய நன்மைக்காகவும் பாடுபடுங்கள். இதுதான் மோக்ஷம். இதுதான் நிர்வாணம், இதுதான் முக்தி ஓம்சாந்தி.

(வரும்)

# ஸுரேந்த்ரன்.

## 1. ஜாமீன் பத்ரம்

"Basis Virtutum Constantia" மாறாத உறுதியான திடசித்தமே ஸகல தர்மங்களுக்கும் அஸ்திவாரம்.

"இதுவும் ஸர்வ வல்லமையுள்ள பரமேச்வரனது திருவிளையாடலோ? கடன்வாங்கிய பணத்தையும் இழந்து, அருமையான புத்ரனையும் கைசோரவிட்டுப் பரதவிக்கும் நான், என் முன்னோர்கள் ஸுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு மேலாக வாழ்ந்துவந்த செழிப்பான நிலங்களையும், அழகான மாளிகையையும், பாவி மார்த்தாண்டனுக்குப் பறிகொடுக்க வேண்டியிருக்கிறதே! தவணை நாட்களும் அதிக சீக்ரமாகக் கழிந்து வருகின்றன. நம் பூர்வ ஜன்மவினையினாலோ என்னவோ, நமது ஆப்த ஸ்நேஹிதரான திலீப மஹாராஜாவும் தம்நாட்டை, துர்க்குணங்களின் அவதாரமாகிய தமது ஸஹோதரன் மஹேசனிடம் விட்டுவிட்டு, முரடர்களான மஹம்மதியர்களுடன் போராடச் சென்றுள்ளார். அவர் இங்கு இப்பொழுது இருந்தால் நமது கடன் பணத்தை மிகவும் எளிதாகக்கொடுத்து நமது பூஸ்திதியை நமக்கே ஸ்திரம் செய்து



விடுவாரே! அந்தப் பாக்யம் நமக்கு இல்லாமற் போய்விட்டதே! ஹா"— என்று பெருமூச்செறிந்தார் ஸ்ரீதரர்.

இந்தியாவின் பழையகாலத்து நிலைமை அதன் சரித்ரத்தை வாசித்தவர்கள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஸுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன், நம்தேசத்தில் சிறுசிறு ராஜ்யங்கள் பல இருந்தன. ஆறு அல்லது ஏழு சிறு ராஜ்யங்கள் ஒருபெரிய ராஜ்யத்தின் தலைவனுக்குக்கீழ்ப்படிந்து அவனுக்குக் கப்பங்கட்டி வந்தன. அங்ஙனம் தலைமைவஹித்து வந்த அரசர்களுள் ஒருவனும் இந்தியாவின் மத்தியிலுள்ள விந்திய பர்வதங்களுக்குச் சற்று வடக்கே இருக்கும் உதயபுரி யென்னும் ராஜஸ்தான நகரத்திலிருந்து ராஜரீகஞ்செய்து வந்த திலீபேந்த்ரன். அவன், நலத்தாலும், பலத்தாலும், கொடையாலும், படையாலும், தீரத்தாலும் நிகரற்றஉத்தமன்; காரணமின்றிப் பிறரால் துன்புறுத்தப்பட்டவர்களை ரக்ஷிக்கும் குணமுடையவன். ஆகவே, அவனை ஸகலரும் தம் ஸஹோதரனென்றே கருதி வந்தனர்.

திலீபன் உதயபுரத்தை ஆண்டுவருங்கால், காஷ்மீரத்தில் ஓர் ஹிந்து அரசன் செங்கோல் செலுத்திவந்தான். ஆசியாக் கண்டத்தின் மத்தியபாகங்களிலிருந்து கணக்கற்ற மஹம்மதியர்கள் திரள்திரளாய், கைபர்கணவாய் மூலம் இந்தியாவுக்குள் நுழைய ஆரம்பித்தார்கள். நம்தேசத்திற்குள் வந்த அந்தத் துலுக்கர்கள் சும்மா யில்லாமல் காஷ்மீரநாட்டை ஆண்டுவந்த ஹிந்து ராஜாவை வலுவில் சண்டைக்கு இழுத்தார்கள்; அத்துடன் நிற்காமல் ப்ரஜைகளையும் கஷ்டப்படுத்த ஆரம்பித்தார்கள். உடனே அவ்வரசன், வட இந்தியாவிலுள்ள முக்ய ராஜாக்கள் சிலரைத் தனக்கு ஸஹாயம் செய்யும்படி வேண்டிக்கொண்டான். தேசபக்தியினால் தூண்டப்பட்ட திலீபன் தன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு காஷ்மீரத்துக்கு உடனே சென்றான். மஹம்மதியர்களை முற்றிலும் முறியடித்து விட்டபின் தான், திரும்ப தன் நாட்டிற்கு வரமுடியும் என்று திலீபன் ஜனங்கட்குக்கூறி, தான் வரும் வரை தன் ஸஹோதரன் மஹேசன் தேசத்தை யாளும்படிச் செய்துபோனான்.

மஹேசனுடைய ஆளுகையை மூன்று மாஸத்திற்குள்ளேயே ப்ரஜைகள் வெறுக்கலானார்கள். அவன், அநாவச்யமும், அந்யாயமுமான வரிகளை நவீனமாக ஏற்படுத்திக் குடிகளை வருத்தினான்;

மங்கைப் பர்வம் வாய்ந்த அழகிய மாதர்களைக் கற்பழிக்க முயன்றான்; ஸன்மார்க்கர்களின் ஸஹவாஸத்தைத் தவிர்த்து, அற்ப அறிவும், சொற்பஞானமுமுள்ள துஷ்டர்களின் உறவை நாடினான். தன் தமையன் திலீபனிடம் விச்வாஸமாயிருந்தவர்களை, அல்பகாரணங்களைக் கொண்டும் சிக்ஷிக்கலானான். ஆகவே, அநேக ப்ரபுக்கள் திலீபனது வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள்; ரஹஸ்யத்தில் மஹேசனது மரணத்தையும் கோரினார்கள்.

இந்த அத்யாயத்தின் முதலில் ஸ்ரீதரர் தமது வீட்டில் ஓர் அறையில் உட்கார்ந்து வ்யாகூலப்பட்டுக்கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீதரர் பணக்காரர் தான்; ஆனால் தத்காலம் அவரது ஆஸ்தியெல்லாம் அடமானஞ் செய்யப்பட்டிருந்தது; கூடியசீக்ரத்தில் பணம் கொடுக்காவிட்டால் அவர், தம் ஆஸ்தி முழுவதையும் இழக்கநேரிடும். அவருக்கு இரண்டு மக்கள் இருந்தனர். அவர்கள் கிரிசா என்ற பெண்ணும், மாதவன் என்னும் புத்ரனுமாவர்.

திலீபன் மஹமத்யர்களைத் துரத்தும்பொருட்டுக் காஷ்மீரத்துக்குச்செல்லும்போது, மாதவன், ஒருசிறுபட்டாளத்தின் தலைவனாக, அவன் சைன்யத்தில் அமர்ந்தான். காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகரத்திலிருந்து திலீபன் துலுக்கர்களைத் துரத்தியடித்துவந்தான். ஆனால் அவர்கள் பின்னும் பின்னும் கூட்டம் கூட்டமாக எதிர்க்க ஆரம்பிக்கவே, திலீபன் ஒரு வர்ஷத்துக்கு மேலாக காஷ்மீரத்தில் இருக்கநேரிட்டது. பரோபகாரமான இப்பெரும் வேலையை அவன் மேற்கொண்ட மூன்று மாஸங்கட்குப் பிறகு, சிறந்த பலசாலிகளான முரட்டு மஹமத்யர்கள் ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்து திலீபனுடன் சண்டையிட்டார்கள். மொத்தத்தில் திலீபன் ஜயமடைந்தானாயினும், அவனது அன்புக்குப் பாத்ரனாயிருந்த மாதவன் அம்மஹமத்யர்கள் கையில் அகப்பட்டுவிட்டான். அவர்கள் அவனைத் துன்புறுத்தாமல், காபூலுக்கு அழைத்துச்சென்று அங்கு அரசாண்டுவந்த அப்துல்ரஹிமான் என்னும் தங்கள் "அமீரிடம்" கொண்டுபோய் விட்டார்கள். அந்த அமீர் மாதவனது முகத்தில் தோன்றிய தைர்யக் குறிப்பையும், சண்டைசெய்தபோது அவன் காட்டிய பராக்ரமத்தையும் கண்டு மனமகிழ்ந்து, 2000 ஸவரன்கள் தந்தால் அவனை



விடுவிப்பதாகத் தெரிவித்தான். உடனே மாதவன் தன் தகப்பனார் ஸ்ரீதரருக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்தினான். அவர், மஹேசனுடைய அந்யாய அரசாட்சியின் கீழ் அவதிப்பட்டு வருவதையும் கவனியாது, தமது செழித்த நிலங்களையும் அழகிய "பங்களா"வையும் ஜாமீனாகவைத்து 2000 ஸவரன்களை மார்த்தாண்டன் என்கிறவனிடமிருந்து கடன்வாங்கி ஓர் ஆள்மூலம் அனுப்பினார். அனுப்பிப் பலநாட்களாகியும் ஒரு சமாச்சாரமும் அவருக்கு எட்டவில்லை. கடனைத்திரும்பக்கொடுக்க ஒருவருஷமே தவணை கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டு மாஸங்களும் கடந்தன. செய்தி ஒன்றும் தெரியவில்லை.

இவைகளையெல்லாம் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீதரர் முன் ஒரு ஸேவகன், கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு, வந்து நின்றான். அவனுடைய உடையையும், மார்பில் போட்டிருந்த "பட்டை"யையும் கண்டதும் அவர் ஸுரேந்த்ரனுடைய ஸேவகன் என்பதை அறிந்து கொண்டார். அந்த வேலைக்காரன் அவருக்கு மிகவும் வணக்கமாக "ஸலாம்" செய்து கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். அக்கடிதத்தில்:— ஸுரேந்தரனுடைய 24 வது பிறந்தநாள் உத்ஸவம் அன்று கொண்டாடப்படும் என்றும், அந்தஸமயம் ஸ்ரீதரர், அவரது குடும்பத்தினர், அவரது அத்யந்த ஸ்நேஹிதர்கள் ஆகிய இவர்களுடைய வரவு மிகவும் ஸந்தோஷமாய் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் எழுதப்பட்டிருந்தது. அவர் அக்கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள்ளேயே கிரிஜா அங்கே வந்து,

"அப்பா! இன்று ஸுரேந்த்ரருக்குப் பிறந்த நாளாமே. ஸாயங்காலம் நாம் போகலாமா? என்றாள்.

ஸ்ரீதரர்:—ஸுரேந்த்ரனைப்பற்றி உனக்கு என்ன அவ்வளவு கவலை. அவனுடைய பிறந்த நாட்களையெல்லாம்கூட ஞாபகத்தில் வைத்திருக்கிறாயே.

கிரிஜா:—அதற்குக் காரணம் அவரது நற்குணங்களும், நன்னடத்தையுமேயாம். மேலும், அவர் நம் திலீபரை விச்வாஸிப்பதுடன் மஹேசனை மனமாற வெறுக்கின்றார். அவருடைய சபலமற்ற மனஸுக்காகவாவது அவரை நாம் நினைக்கக் கூடாதா?

ஸ்ரீதரர்:— ஆம், கிரிஜா; ஸௌரேந்த்ரனும் நானும் எது வந்தாலும் வரட்டும் என்று திடசித்தத்துடன் திலீபேந்த்ரரையே ஸதா நம்பியிருக்கிறோம். அவர் நம்மை எப்பொழுதும் கைவிடார் என்று நான் எண்ணியிருக்கிறேன். எனக்கோ வயஸாய்விட்டது. நான் சாகும் தருணத்தில் நம்முன்னோர்கள் ஸம்பாதித்து அநுபவித்துவந்த இந்த மாளிகையையும் நமது நிலங்களையும் இழக்கவேண்டியிருக்கிறதே என்ற பெரிய வ்யஸநம்தான் என்னைப் பாதிக்கின்றது. 2000 ஸவரன்களுக்கு நான் எங்குபோகிறது? இன்னும் ஒன்பது மாஸங்களுக்குள் நான் பணம் கொடாவிடில் நம் ஆஸ்திமுழுதும் போய்விடும். காஷ்மீரத்தில் மஹமதியர்கள் இடைவிடாமல் வந்துகொண்டிருக்கிறார்களாம். ஆகவே திலீபமஹாராஜா வர இன்னும் ஒரு வருஷம் பிடிக்குமென்று பலர் சொல்லுகிறார்கள். மார்த்தாண்டனுடைய உறவினனாகிய ஸுகுமாரனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்தால் அவன் 2000 ஸவரன்கள் தருவதாகக் கூறுகின்றான். ஸுகுமாரன் ஜமீன்தாரன் தான்; ஆனால் அவனுக்கு வயஸ் 40 ஆகிறது. அதனால் தான் நான் பின்வாங்குகின்றேன். எல்லாம் பரமபிதாவின் ஆஜ்ஞையின்படித்தான் நடக்கும். ஆகவே உலகவிஷயம் ஒன்றுமே தெரியாத உனக்குப் பல கவலைகளைத்தர எனக்கு இஷ்டமில்லை. கிரிஜா! உன்னிஷ்டப்ரகாரமே இன்று ஸாயந்த்ரம் நாம் ஸௌரேந்த்ரன் பங்களாவிற்குப் போவோம்.

உடனே கிரிஜா தன் அறைக்குப் போய்விட்டாள். கிரிஜா குழந்தையாயிருக்கும்பொழுதே அவளுடைய தாயார் இறந்துவிட்டாள். அவளுக்கு இப்பொழுது வயஸ் ஸுமார் பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். ரஜபுத்ர கன்னிகையாதலால், ப்ராஹ்மணர்களைப்போல் அவளுக்குப் பத்துவயஸுக்குள்ளேயே கல்யாணம் செய்யவில்லை. கண்கள் போன்றவைகளான எண்ணையும் எழுத்தையும் அவள் கற்றதுடன் சிறிதுவித்தையும் போர்த்திறத்தையும் தானாகக் கற்றுக்கொண்டாள். கத்தி, கேடயம் உபயோகிப்பதில் சிலமர்மங்களை அவள் தமையன் மாதவன் அவளுக்குக் கற்றுக்கொடுத்திருந்தான். வயஸு ஏறஏற அவள் அழகில் மேம்பட்டுவளர்ந்தாள். ஆகவே அவள் தன்னுடைய பதினேழாவது வயஸில் உதயபுரியெங்கும் தனது அழகில் புகழெய்தினள்." பலர் இவளை மணக்க எண்ணினார்கள். ராஜ்யாதிபதியான மஹேசனும் ப்ரயத்நப்பட்டான். ஆயினும் என்ன ப்ரயோஜனம்? கிரிஜா, ஸௌரேந்த்ரனையே மணப்பதாக நிச்சயித்து விட்டாள். இதனை ஸ்ரீதரரும் ஊஹித்துக் கொண்டார். படிப்பிலும், குணத்திலும், நடத்தையிலும், பணத்திலும் ஸௌரேந்த்ரன் சிறந்தவனாக விளங்கியதால் அவளுடைய எண்ணத்தை அவர், கலைக்க முன்வரவில்லை. கிரிஜா, 10-12 - வயஸில், பள்ளிக்கூடம் சென்று வரும்பொழுது, திலீபன் ஸ்ரீதரரிடம் ஒரு தடவை, ஸௌரேந்த்ரனே அவளுக்குத்தக்கவன் என்று சொல்லியிருந்தான். கிரிஜா மங்கைப்பர்வமடைந்ததும், அவளை ஸ்ரீதரர் க்ருஹத்தில் பலமுறை கண்ட ஸௌரேந்த்ரனும், தான் அவளையே பாணிக்ரஹணம் செய்து கொள்ளப் போவதாக உறுதிசெய்து கொண்டான். மனஉறுதியே ஜயத்திற்குக் காரணமாக விருப்பதை அவன் நம்பினான். (வரும்)

எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா.



## பாடலீபுத்ர நகரம்.

பாடலீபுத்ர மென்னும் சிறந்த நகரம் நமது நாட்டு நகரங்களிலெல்லாம் மிக்கப் பிரசித்திபெற்றதும், அநேக ராஜவம்சங்களுக்கிருப்பிடமாயுமிருந்தது; அந்நகரத்தின் சரித்திரத்தை அறியவேண்டுமாயின், 2000 வருடத்திற்கு முன் அஜாதசத்ரு என்ற அரசன் ஆண்ட நாளில் அப்பட்டணம் எந்தஸ்திதியிலிருந்தது என்றும்; பிறகு ஆயிரக்கணக்கான வருடங்களில் நாளதுவரைக்கு நேர்ந்த மாறுதல்கள், அதில் அரசுபுரிந்த ராஜவம்சங்கள் முதலியவைகளைப் பற்றியும் விசாரிப்பது அவசியம். லார்ட் ஹார்டிஞ்ச் (Lord Hardinge), ஸர் சார்லெஸ் பெய்லி (Sir Charles Bayley) ஆகிய இவ்விருவர்கள் ஆளுகைக்குட்பட்ட இப்போது காணும் பாடலீபுத்ரநகரம் ஆதியில் காணப்பட்ட ஸ்திதியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும். பாடலீபுத்ர மென்பதற்குப் பொருள் பாடலீயென்ற ஒரு மடல் ரோஜாவின் (என்றும் குன்றாத) மகன் என்பதேயாம். மற்றத் தேசங்கள் தங்களுக்குள்ள சுந்தரமான ரோஜா புஷ்பங்களை நினைத்துப் பெருமை பாராட்டுமாயின், நாம் நமக்கென்றமைந்த மனோஹரமான லீமந்தி அல்லது பாடலி புஷ்பத்தால் திருப்தியடைவோம். அக்பர் சக்ரவர்த்தி பிறந்த

போது உமாயூன் (Humayun) கஸ்தூரி தானம் செய்தானென்று கேள்விப்படுகிறோம். அதற்குக்காரணம் யாதென்று விசாரிப்போமாயின், பிறந்த அக்பரின் கீர்த்தி கஸ்தூரியின் சுகந்தம் பரவுதல்போல், வியாபிக்கவேண்டுமென்று அத்தானஞ் செய்யப்பட்டதென்று ஏற்படுகிறது; அதைப்போலவே எங்கும் பரவி தன் சுகந்தத்தால் பரிமளிக்கச்செய்கிற பாடலியையே தாயாய்க்கொண்ட பாடலீபுத்ரநகரம் கீர்த்தியில் உலகப்பிரசித்தி பெற்றதாயிற்று.

உலகத்தில் யாவருமறிந்த புராதன நகரங்களான நினீவா, பாபிலோன், பர்ஸிபோலிஸ், எக்பதன, டமாஸ்கஸ், டைர் முதலானவைகளைப்போல் பாடலீபுத்ர நகரம் அவ்வளவு புராதனமாயில்லாவிடினும் ஆசியாக் கண்டத்திலுள்ள நகரங்களெல்லாவற்றிலும் ஒருமிக்க பழய நகரமென்றே கூறலாம்.

உலகத்தில் மற்றப் பெரிய நகரமெல்லாம் உருமாறி அழிந்து கிடக்கும்போது பாடலீ புத்ரநகரம் மட்டில் செழித்து ஜீவநகரமாக விளங்குகின்றது. இந்நகரத்தின் ஆதிகதைகளை நாம் எளிதில் அறியக்கூடும். இதன் ஆதிகாலததைப்பற்றி விசாரிக்கும்போது, மானிடப்பிறவி கொண்டவர்களிலெல்லாம் சிறந்தவரான கபிலவஸ்துவைச்சேர்ந்த புத்த ததாகதரென்ற புருட சிம்மத்தின் ஜீவியகாலம் நினைவுக்கு வருகின்றது. அம்மகான், நாலிருதாண்டு கழித்த ஞானவயதில் ராஜக்கிருகத்திலிருந்து தன் ஜனனக்ஷேத்திரமாகிய கபிலவஸ்துவை யடைந்து சமாதிநிஷ்டையைக் கழிக்க எண்ணிப்போகையில், வழியில் ஸோன் என்ற நதி கங்கையுடன் ஸங்கமமாகுமிடத்தைக் கடக்க நேரிட்டது. அங்கே மகததேசத்தரசனாகிய அஜாதசத்ருவின் மந்திரி பொருவர், கங்கைக்கு அக்கரையில் பிரபலமாய் ஆட்கொண்டு போர்புரிவதே தொழிலாயுடைய லிச்சாபிகள், விதேகர்கள் என்ற ஜாதியாரை விலக்கிப் பயமுறுத்தும்பொருட்டு கோட்டை, மதிர்ச்சுவர் முதலானவற்றைக் கட்டிக்கொண்டிருந்தனர். மகா புத்திமானும், தீர்க்கதர்சியாயும், மகததேசத்தைச்சுற்றி நாலா பக்கங்களிலும் 45 வருடங்கள் திரிந்து பார்த்தவரான படியாலும், அவர் அவ்விடம் உலகெங்கும்பிரசித்திபெற்று உத்தமோத்தமமான ராஜநகரமாகுமென்று, தம் ஞானதிருஷ்டியால் கண்டு வெளியிட்டார். அவர் சொன்னபடியே, அதேயிடம் வெகுசீக்கிரத்தில் ஒரு பெரிய வியாபாரஸ்தானமாகவும், ராஜபட்டணமாகவும் ஆயிற்று. மகததேசத்துச்



சக்ரவர்த்திகள் ராஜக்கிருகத்திலும், பாடலீபுத்ரத்திலும் இங்குமங்குமாயிருந்து சிலகாலம்கழித்துவந்தார்கள். ஆனால் நந்தன், சிசுநாக வம்சத்தைத் தலையெடுக்காமலடித்து க்ஷத்திரியர்களையே முற்றுமழிக்க முயன்றபோது, ராஜக்கிருகத்தில் தங்குவதே நாகவாஸத்தை யொத்ததாயிற்று. அதே காரணமாய் அவர் பாடலீபுத்ரத்திலேயே வசித்துவந்து அதைத்தம் ராஜதானி பட்டணமாக்கிக்கொண்டார். புராதன ராஜநகரமான ராஜக்கிருகமோ காடடர்ந்து வசிப்பதற்கே தகாததாயிற்று. புராணக்கதைகளில்கூட ராஜக்கிருகத்தை வனப்பிரதேசமாகச் சொல்லப்படுகிறது. நந்தர்கள், மௌரியர்கள் ஆகிய இவ்விருவர்களின் அன்புற்ற அரசாட்சியில் பாடலீபுத்ர நகரம் செழித்து, நீர்வளம், நிலவளம், குடிவளம் பெற்று உன்னத ஸ்திதியை யடைந்தது.

சாணக்யருடைய பிரசித்தமான அர்த்த சாஸ்திரத்தில் நகரத்தின் முக்கிய லக்ஷணமாவது, நெடுக்கில் வரிசையாய் மூன்று ராஜவீதிகளும், குறுக்கில் அதேவிதமாய் மூன்று ராஜவீதிகளும், பன்னிரண்டு பிரதான வாசற்படிகளும் ஏற்பட்டிருக்கவேண்டுமென் றெடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. சந்திரகுப்தர் ராஜசபையில் விளங்கின மகாஸ்தினஸ் என்ற பெருமான் பாடலீபுத்ரத்தைக்குறித்துப்பிரஸ்தாபிக்கும்போது அதில் 60வாசற்படிகளும் 350 கோபுரங்களும் அடங்கியிருந்ததென்று கூறுகிறார். நகரத்தின் மதில்கள் அநேக குதிரைக்காரர்கள் சமவரிசையாய்க் குதிரை மேல் சவாரிசெய்து கொண்டு போகத்தக்க அவ்வளவு விசாலமாயுள்ளதாயிருந்தனவென்றும் சொல்லப்படுகிறது. ஒரு கோபுரத்திற்கும் மற்றொரு கோபுரத்திற்கும் மத்தியில் 75 அடி அகலம் இடைவெளிப் பிரதேசம் காணப்பட்டதாம். கௌடில்யரும் மேலே சொன்ன மகாஸ்தினஸ் என்ற இரண்டு லோகப்பிரசித்தர்கள் பாடலீ புத்ரத்தின் மேடைகள், மாளிகைகள், உத்யானவனங்கள், நாடகசாலைகள், ராஜசபைகள் முதலான இன்னுமநேக காட்சிகளைக்குறித்து வர்ணித்திருப்பதை மறுபடி எடுத்துரைப்பது வீணாகும். ஆனால் அவ்வுத்தம நகரம் மௌரியமண்டலத்திற்கு ராஜாங்கஸ்தானமாகஇருக்கத்தவறினது முதல் நாளது வரையில் அதில் உண்டான மாறுதல்கள், சீர்திருத்தங்கள், ஏற்பாடுகள் முதலான முக்கிய விஷயங்களைப்பற்றி விசாரிப்பது உசிதமே.

(தொடரும்,)

T. K. சடகோபாச்சாரியார், பீ. ஏ.,
சென்னை.

## பெண்கள் தொழில்.

இவ்வுலகத்தில் ஒரு பெண் ஒரு தக்க புருஷனை விவாகம் செய்துகொண்டு அவனுக்கு நற்றுணையாக விருப்பதே அவளுக்குச் சத்தியமானதும், மேன்மையுடையதுமான தொழில் என்று முற்காலத்திலும் இப்போதும் எப்போதும் நினைக்கப்படுகின்றது. அல்லாமலும், இவன் சம்மந்தமாக வரும் குழந்தைகளைப் பெற்றுத் தாயாக ஆகுதல், தனது புருஷனது வீட்டிற்கு எஜமானியாக இருந்து காரியங்களை நடத்துதல் முதலிய காரியங்களைச் சரிவர நடத்துதலும் அவளுடைய முக்கியத் தொழிலாம். ஒரு மானிட ஜெந்துவுக்கு வரக்கூடிய கருமங்களில் இவை மேன்மையும் கெம்பீரமும் முக்கியமுமாம். இவை செவ்வனே செய்யப்படுமாயின், அவள் உலகின் அரசியாகச் சாந்தத்தாலும், நேர்மையாலும், பரிசுத்தத்தாலும், ஆக்கப்படுவாள். அவளது இயற்கைக் குணத்தாலும் நற்பார்வையாலும் வலிமையாலும் குறைபாட்டாலும் இத்தொழில்கள் சிறப்பாக அவளுக்கே உரியதென்று ஒவ்வொரு முகாந்தரத்தினாலும் வெளியாகின்றது. ஆகையால் அவள் தான் இஷ்டப் பட்டு மேன்மையாகக் கருதும் ஒரு புருஷனைக் கலியாணஞ்செய்துகொண்டு அவனுடைய காவலின் கீழ் மிகச் சாந்தமாகவும், பொறுமையாகவும், தனக்குள்ளே அறிவு அழகு தைரியம் முதலியவற்றோடும் தனக்குக் கிடைத்த வாழ்க்கையில் வாழ்தலே ஒரு பெண்ணின் உண்மையான விதி (நியதி) யாம்; ஒரு பெண் இந்த நியதியைக்கடப்பளாயின் அல்லது இவ்வுலக வாழ்க்கையை வேண்டாமென்று தள்ளிவிடுவளாயின் இவ்வுலகத்தில் தனக்கு எதிரிட்டுக் காணக்கூடிய ஏதாவது ஒருநேர்மையான வேலையைக்கடவுளுக்கும் மனிதனுக்கும் பயந்து ஏற்றுக் கொள்ளலாமென்று காணப்படுகிறது. அச்சடித்தல், தைத்தல், நெய்தல் (நெசவு), குமஸ்தா வேலை செய்தல் முதலியன இப்போது புருஷர்களால் மாத்திரம் செய்யப்பட்டு வருவன; ஆனால் ஸ்திரீகளும் தாம் செய்யக்கூடிய பலவகைப்பட்ட அல்லது பல தொழில்களைக் கைக்கொள்ளலாம். மருத்துவம் முதலிய மருந்து சம்பந்தமான தொழில்கள் பெண்கள் ஏற்கக்கூடாத தொழிலல்ல; ஏனெனின், ஆவலும் உண்மையும் நிறைந்திருந்த பண்டைக் காலத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் வைத்தியம் செய்து வந்திருந்தார்களென்று தெரிகின்றது. மேலும், இந்தத் தொழி



லில் இவர்களுக்கு மிக்க ஊக்கமு மிருக்கின்றது. * * * * என்று தாமஸ் கார்லைல் என்னும் ஒரு பெரிய கிரந்தகர்த்தரும் தத்துவ சாஸ்திரியுமான தனது நண்பருக்குக் கடித மூலமாகத்தெரிவித்திருக்கிறார். இதனால் ஏற்படுவது பெண்கள் புருடனது காவலிலிருந்து வீட்டுக்காரியங்களைப்பார்க்கவேண்டு மென்பதாம்.

ஆறுமுகசெட்டியார்,
சென்னை.

## யுத்தம்.

இப்போது ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் யுத்தம் மிகு உக்ரமாகி வருகின்றது. பிரெஞ்சுப் பெல்ஜியப் போர்முகத்தில், ஜெர்மானியர் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்; ஓய்வில்லாமல் ஜெர்மன் அரண்கள் தகர்க்கப்பட்டு வருகின்றன; ஆகாய விமானப் போரும் இங்கு மிகு உக்ரமாக நடந்து வருகின்றது; இதிலும் ஜெர்மானியர் தோற்று வருகின்றனர்.

ருஷ்யப் போர்முகத்தில். ருஷ்யர் பகைவர் முன்னேறிச் செல்வதற்கு இடங்கொடாது அவர்களை மிகு உக்ரமாகத் தாக்கி வருகின்றனர். ரீகாவையும், டிவின்ஸ்கையும் பிடித்து விடவேண்டுமென்று ஜெர்மானியர் செய்யும் பிரயத்னங்களெல்லாம் அடலமாகி வருகின்றன. ருஷ்யப் போர்முகத்திற்கு வர எழுபது லட்சம் ருஷ்ய வீரர்கள் தயாராகி வருகின்றனர்; ருஷ்யருக்குத் தினந்தோறும் யுத்த தளவாடங்கள் இங்கிலாண்டு, பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான் தேசங்களிலிருந்து வந்து கொண்டே யிருக்கின்றன. பெருந் திரளாக வரப்போகும் ருஷ்ய சேனையைத் தடுப்பது பகைவரால் சாத்தியமாகாது.

இத்தாலியப் போர்முகத்தில் ஆஸ்டிரியர் மிகுதியும் சேதமடைந்து வருகின்றனர்; ஆஸ்டிரியர் பலமாகச் சண்டை செய்து வருகின்றனர்; ஆயினும், அவர்கள் இத்தாலியருடன் சண்டை செய்வது அசாத்தியமாகி விருக்கின்றது. கொரீசியா நகரம் சீக்கிரத்தில் இத்தாலியர் வசமாய் விடுமென்றும், அது வாயிலாக அவர்கள் செர்பியாவுக்கு உதவி செய்தல் கூடுமென்றும் தெரிகின்றன.

செர்பியப் போர்முகத்தில் செர்பியாவின் நிலைமை அபாயகரமாகத்தா னிருக்கின்றது. பகைவர் செர்பியாவின் பாதிப் பாகத்தைப் பிடித்து விட்டனர்; மொனஸ்டர் வரை அவர்கள் வந்திருக்கின்றன ரென்று தெரிகின்றது; பல்கேரியரும், ஆஸ்டிரிய ஜெர்மானியரும் சேர்ந்து போர் செய்கின்றனர்; செர்பியருக்கு இன்னும் நேச ராஜாங்கத்தாரின் உதவி வாராமையே பகைவரின் வெற்றிக்குக் காரணமாகின்றது. நேசத் துருப்புக்கள் அக்டோபர் மாதம் 6ந் தேதி முதல் சலோனிக்காவில் இறங்கிக் கொண்டிருக்கின்றன; அங்ஙன மிருந்தும், செர்பியருடன் அவர்கள் போய்க் கலப்பது கஷ்டமாக விருக்கின்றது. பிரெஞ்சுப் படை பல்கேரியப் படையை யெதிர்த்துப் பிரபல வெற்றிகள் பெற்று வருகின்றது.

டார்டனல்ஸ் யுத்தம் சாவதானமாக நடந்து வருகின்றது.

மத்தியதரைக் கடலில் ஜெர்மன் கீழ்நீர்க் கப்பல்கள் ஆரவாரஞ் செய்து வருகின்றன. அதனால் சென்ற இரண்டு வாரங்களாகச் சில கப்பல்கள் கடற்கிரையாகி வருகின்றன.

இப்போது நடைபெறும் யுத்தம் சீக்கிரத்தில் முடிவு பெறுமென்று காணப் படவில்லை; யுத்தம் சீக்கிரம் முடிவு பெற்றால் தான் உலகம் க்ஷேம மடைதல் கூடும். உலகம் க்ஷேம மடையுமாறு எல்லாம் வல்ல இறைவன் கருணை புரிவாராக.

---

ஆசையினால் அவமானமுண்டாகின்றது.
கோபத்தினால் கெடுதி யுண்டாகின்றது.
மாதரால் தீவினையுண்டாகின்றது.
நீரினால் நோயுண்டாகின்றது.
சோம்பேறிக்குக் கல்வி சித்திப்பதில்லை.
கல்வியில்லாதவனுக்குப் பொருள் வருவதில்லை.
பொருளில்லாதவனுக்குச் சிநேகிதரில்லை.
சிநேகிதரில்லாதவருக்கு இன்பமில்லை.
குறைகுடம் கூத்தாடுகின்றது.
நிறைகுடம் நீர்தளும்புவதில்லை.
வெற்றோலை சப்திக்கின்றது.
பச்சோலை சப்திப்பதில்லை.
பித்தளை சப்திக்கின்றது.
தங்கம் சப்திப்பதில்லை.

MADRAS

# சக்ரவர்த்தினி

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி".

VOL-11 தொகுதி-11 | December டிசம்பர்மீ 1915. | No 5. பகுதி-5

## குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.

நம்மனோர் தம் பகைவர்க் கிடங்கொடாது வாழவேண்டுமாயின், தமது சுற்றத்தாரைப் பொன்னேபோற் போற்றியொழுகிவருதல்வேண்டும். தமது சுற்றத்தார்மீது அன்புடையவரா யொழுகாதவர் தமது நட்டார்மீதும், ஊரார்மீதும், நாட்டார்மீதும் அன்புடையவரா யொழுகுவது ஒருவாற்றானு மில்லையாம். இவ்வாறிருப்பவர்க்குத் தீமை தொடர்ந்துண்டாவது நிச்சயமாம். தமது தாய், தந்தை, சகோதார், மைத்துனர் முதலாயினோரிடத்துக் குற்றத்தையே நோக்கிவருபவர்க்கு நன்மையுண்டாவதெவ்வாறும்? "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்" என்னும் பழமொழிக்கிணங்க, சுற்றத்தார் செய்வனவற்றையெல்லாங் குற்றமாகக்கருதி, அவர்மீது வெறுப்புற்றிருப்பவர் தமக்குச் சுற்றத்தினராயிருந்து தம்மைக் காப்பவரொருவருமில்லாதவராய், எந்தவேளையினும் யாரென்ன செய்வரோ? என்னு மச்சமுடையவராய்க் கவலைக் குறைவிடமா யிருப்பரென்பது பிறழாதவிஷயமாம்.

ஒருவர்க்குச் சுற்றத்தாரென்பவர் அவரைவிடாது சூழ்ந்திருப்பவராவர். நம்மைவிடாது சூழ்ந்து பாதுகாத்து வருகின்றவர் யாரென்று நாம் நன்கூகித்து நோக்குவோமாயின், அவர் தாய், தந்தை, சகோதார், மைத்துனர் முதலாயினோராவ ரென்பது

பெறப்படுவதாம். நாம் சுற்றத்தார் மீது குற்றத்தையேகற்பித்து, அவரை வெறுத்து விலக்கிவருவோமாயின், நமக்குத் துணையாயிருப்பவர் யாவர்? தாய், தந்தை, சகோதரர் முதலிய சுற்றத்தாரை வெறுத்து விலக்கிவருபவரிடத்து யாராவது நட்புடையவராயிருப்பது கூடுமோ? சுற்றத்தாரும் நட்பினருமில்லாதவர்க்குத் தீங்குண்டாயின், ஆறுதல்கூறி, அவரைத் தேறுதல் செய்வார்யார்? ஒருவருமிலராவர்; ஆகவே, அவர்கதி அதோகதியேயாம். "உற்றாரை யுதாசினங்கள் சொல்ல வேண்டாம்" என்றுலகநீதி கூறுவதாலென்ன விளங்குகின்றது? உறவினர் அல்லது உற்றாரென்னுஞ் சுற்றத்தார் ஓரொருபொழுது துன்பத்திற்கேதுவாகிய செயல்களைச் செய்வதுகூடும்; அதுகாரணமாக அவரை யுதாசீன வார்த்தைகளைக் கூறிப்பழித்தல்கூடாது; பழித்தால் அவர் நன்மைசெய்தற்குரியராகாதொழிவர்; அதனால் அவரைப்பழித்தவர்க்குத் துன்பங்கள் தொடர்பாகவுண்டாகுமென்பனவற்றையன்றோ விளக்குகின்றது? சுற்றத்தாரது தொடர்பில்லாதவர்க்கு நட்டாரது தொடர்பிருத்தல் கூடாதாகலின், அவர் ஒற்றைமரம்போல நிற்பவராவர். "ஒருமரம் தோப்பாகாது" என்னும் பழமொழிக்கிணங்க அவர் வாழ்க்கை வாழ்க்கையே யாவதில்லையாம்.

நாம் குற்றஞ்செய்வதுபோல நமது சுற்றத்தாரும் குற்றஞ்செய்கின்றனர்; மக்கள் தவறில்லாதிருப்பது கூடாது; நாம் சுற்றத்தார்க்குச் சிலபோது நன்மைசெய்வது தீமையாக முடிவதுபோல, அவர் நமக்குச் சிலபோது நன்மை செய்வது தீமையாக முடிகின்றதென்று கருதி, சுற்றத்தார்மீது குற்றம்பாராட்டாமலொழுகிவருகின்றவர் நன்மையென்று சொல்லப்படுவனவற்றையெல்லாமடைவது நிச்சயமாம். நமது சுற்றத்தார் நமக்குத்தீமையையே செய்துவந்தாலும் நாம் அவர்க்கு நன்மையையேசெய்து வருதல் வேண்டும். நாம் அவர்க்கு நன்மையையே செய்துவருவோமாயின், அவர் ஒருகாலத்தில் தாஞ்செய்த தீமையைப்பற்றி வருத்தமுற்று, நமக்கு நன்மையே செய்துவருதற்குரியவராவர். நமது சுற்றத்தார் நமக்குக் குற்றமான செயல்களைச் செய்துவருகின்றாரென்று கருதி அக்குற்றத்தைப்பாராட்டி வருவோமாயின், நமக்குப் பகைவர் யாராவர்? நமது சுற்றத்தாரேயாவர். நமக்கு நமது சுற்றத்தாரே பகைவராய் விடுவாராயின், நமது பகைவர் நமக்குத் தீமையை மிக வெளிதாகச் செய்தற்குரியவராவர்; ஆத



லால் நாம் நமது சுற்றத்தார்மீது குற்றம் பாராட்டுவதொழிந்து அவர்மீது அன்புடையவராயொழுகிவருதல் வேண்டும்; இங்ஙனமொழுகிவருவோமாயின், பகைவரில்லாது நாமின்றியமையாது செய்தற்குரிய செயல்களைச் செய்து பேரும், புகழும், பெருவாழ்வுமுடையவராவோம்.

பாண்டவர்கள் சகுனியோடு சூதாடித் தமது நாடிழந்து காட்டில் வசிக்கும்போது, துரியோதனன் அவர்களையவமானஞ்செய்ய வேண்டுமென்று கருதி, அவர்களிருக்குங் காட்டிற்குத் தமது பரிவாரத்துடன் வேட்டையாடுவது வாயிலாக வந்து, தனதிளைப்பு நீங்க அங்கு ஒரு தடாகத்தில் தம் மனைவியுடன் மூழ்கி விளையாடுவானானான்; அவனுடன் வந்த கர்ணன் முதலாயினோரும் அங்ஙனமே செய்வாராயினர். அப்போது அங்கு அத்தடாகத்தில் தன் மனைவியுடன் மூழ்கிவிளையாட வந்த சித்திரசேனனென்னுங் கந்தர்வ வேந்தனுக்கும் அவர்களுக்கும் அது காரணமாகப்பெருஞ்சண்டையுண்டாயிற்று. அக்கந்தர்வ வேந்தன் அவர்களை வென்று துரியோதனனைப் பிடித்துக்கொண்டு சென்றான். அதனைத் தருமபுத்திரரறிந்து தமது சகோதரர்களுக்கு அவனை மீட்டுவருமாறு கட்டளையிட்டு அவனுக்கு நன்மை செய்தனரென்று பாரதங் கூறுவதை நன்குப்புணர்வோமாயின், நமது சுற்றத்தார் நமக்கு மிகக் கொடுஞ்செயல்களைச் செய்தாலும், நாம் அவர்க்குக் கூடுமானவளவும் நன்மைசெய்ய வேண்டுமென்பது விளங்காமற்போகாது. ஆதலால் நாம் கூடுமானவளவும் நமது சுற்றத்தார்க்கு அவர் செய்யுங் குற்றத்தை நோக்காது நன்மையையேசெய்து வருதல்வேண்டும்; செய்து வந்தால் "சுற்றத்தாற் சுற்றப் படவொழுக (தன் சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத்தழுவியொழுகுக)" லுடையவராய்மேன்மையுற்றுவாழ்வோம். காமாலைக் கண்ணனுக்குக் காண்பனவெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோன்றுவன போல நமக்குச் சுற்றத்தார் செய்வனவெல்லாம் குற்றமுடையனவாகத் தோன்றுமாயின், நாம் சுற்றத்தாரில்லாது துன்புறுவோம். சுற்றத்தாரிடத்துப் பெரும்பான்மையும் குற்றம் பார்ப்பது கூடாதென்று வற்புறுத்தவே நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் "குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை:—(தாய், தந்தை, சகோதரர் முதலாயினோர் செய்வனவற்றுள் ஒருவன்) குற்றத்தையே கருதி வருவானாயின், (அவனுக்குச்) சுற்றத்தாரே

யிலராவர்" என்றருளிச் செய்தனர். சுற்றத்தாராவார் நேருறவினரும், அவரது உறவினரும், அவரது உறவினருமாவர். இவர்களிடத்துக் குற்றத்தைப்பாராட்டாது குணத்தையே பாராட்டி அவர்க்கு வேண்டுவனவற்றைக் குறிப்பறிந்து கொடுத்து அவரோடு மனமொத்துக்கலந்து வாழ்ந்து வருபவர்தாம் பெரும்பான்மை யுந்துன்பமிலராவர்.

நமக்குச் சுற்றத்தாரிடத்துக் குற்றங்காண்ட லெப்போதுண்டாகின்றதெனின், அவர் நமது காரியத்தை நம்மைக்கேளாது செய்தவிடத்தும், கெடும்வகை செய்தவிடத்தும், தமக்குவேண்டிய பொருளை நம்மிடத்தினின்றுங் கொண்ட விடத்துமுண்டாகின்றது? அப்போதுதான் நாம் விழிப்புடையவரா யிருந்து அவரது குணங்களைக் கவனித்தல்வேண்டும். அவர் வேற்றுமை கருதாது நல்லெண்ணத்துட னவ்வாறு செய்திருப்பாராயின், அதுபற்றி, நாம் அவர்மீது குற்றங்காண்பது ஒருபோதுங்கூடாது; வேற்றுமை கருதித் தீய வெண்ணத்துட னவ்வாறு செய்திருப்பாராயின், அதுபற்றி அவர்மீது குற்றங் காண்பது நியாயமே; ஆயினும், அதனை வெளியாக்காம லவர் விஷயத்தில் விழிப்பாக விருத்தல் வேண்டும். இவ்வாறில்லாத விடத்துத் தீமை பல விளைவதாம்.

சுற்றத்தார் நம்மிடத்து அன்புமிக்கு நாம் செய்யுந் தீய செயல்களைப்பற்றி நமக்குக் கண்டித்துப் புத்தி கூறுவாராயின், அதனை நாம் "உளைய வுரைத்து விடினு முறுதி, கிளைகள்வாய்க் கேட்பது நன்றே" என்று பழமொழி கூறுவதைக் கவனித்து அவர் மீது குற்றங்கூறாதிருத்தல் வேண்டும். அது நமக்குச் சால நன்மை பயப்பதாம். "உற்றபெருஞ் சுற்ற மொழியா மனைவியுடன், பற்றிமிக வாழ்க" என்று நீதி வெண்பா கூறுவதைக் கவனித்து "அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல், உற்றுழித் தீர்வாருறவல்லர்—அக்குளத்தில், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, ஒட்டி யுறுவார்" உண்மையான வுறவினராவரென்றுணர்ந்து, அவரிடத்துக் குற்றம்பார்ப்பதொழிந்து மனைவி மக்களுடன் வாழ்வதுடையார்க்குநட்டார் பலராவர்; ஊரார் அன்புடையவராவர்; தீமைசெய்வாரொருவரு மிலராவர்; நாடெங்கும் அவர் புகழ்விளங்குவதாம். நாம் பேராசை யுடையவராகாது நமக்கு வரும்பொருளில் சிலபாகத்தை நமது சுற்றத்தார்க்கும் பங்கிட்டுக் கொடுத்து அவர்மீது குற்றங்காண்ப தொழிந்து வருவோமாயின்,



குறைவிலாச் சுற்றமுடையவராய்ப் பெரியோர்கள் கருணைக்கும் பாத்திராய் எல்லா நலமும் பெறுதற்குரியவராவோம். நாம்நமது சுற்றத்தாரை நம்முயிர்போற் கருதி, அவர் மீது குற்றங்காண்பதில்லா தொழுகிவருவோமாயின், முடிவில் எல்லா வுயிரையும் நம்முயிர்போல்கருதி யொழுகும் பாக்கியமுடையவராவோம்; இப்பாக்கியம் நமக்குண்டாமாயின், தவறாது நடுக்கமில்லா திருப்பதற்குரியவராவோம். இந்நிலையே நாம் பெறத்தக்க பேறும். இது சுற்றத்தாரிடத்துக் குற்றங்காணுமை வாயிலாக வருவதாக விருத்தலின், "குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை" என்பதனை மேற்கொண்டொழுகுவது நமக்கு முக்கியமான கடமையாம்.

"மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்" என்று நல்வழி கூறுவது இங்குணர்

தற்பாலதாம்.

## சிருஷ்டி-கடவுள்.

பல்வகைச் சமய பேதங்களுட் பட்ட மாந்தர்: கடவுட்டலைமையின் துவைதாத்வைத பேதங்கள், கடவுளிடத் திருந்து பிரபஞ்சம் வெளிப்படுதல், அவருடைய ரூபா ரூபங்கள் என்னுமிவற்றையும் இவைபோன்ற மற்றைய விஷயங்களையும் பற்றி யொருவரோடொருவர் வாதிக்கின்றனர். வாதப்போர் நடக்கும்பொழுதுண்டாகும் குரோதமும் வைஷம்யமும் பலவிதமான சஞ்சலத்தைத் தந்து மனத்தைப் புண்படுத்துகின்றன. ஆதலால், இதனைவசிக்கும் இந்துக்களே! மகம்மதியர்களே! கிறிஸ்தவர்களே! பண்டிதர்களே! மவுல்வியர்களே! பாதிரிகளே! நீவிர் சற்றுச்செவிசாயுங்கள்; வீணான அபிமானங்களை அடியோடு களைந்துவிட்டுச் சத்தியமாகிய கடவுளை விடாது பற்றுங்கள்; மேற் கூறிய வாதத்திற் கேதுவாகிய விஷயங்களைப் பற்றிய உண்மையைச் சித்த சமாதானத்தோடும் புத்தித் தெளிவோடும் விவேகமாய்க் கிரகியுங்கள்; மெய்ச் சமயமாய் விளங்காநின்ற கடவுளின் ஆஞ்ஞைகளை விசாரித்துணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதன் மூலமாய் உங்களுடைய சொந்த நன்மையேயாகிய உலக நன்மையைச் சம்பாதியுங்கள். கடவுளிடத்

துப் பக்தி பண்ணுகின்றவர்களுள் சிலர், எல்லாவற்றையுந் தன்னு
ளடக்கிச் சர்வ வல்லமையையுந் தானே வகித்துள்ள பரம்பொருள்
உருவமில்லாதது; ஆகையால் உருவமுடைய பொருளொதுவாயி
னும் அதனை மதித்தலாகா தென்பர். வேறுசிலர், கடவுளை உருவ
முடையதாகப்பாவித்தே வழிபடல் வேண்டுமாகலின், அருவப்பொ
ருள் வணங்கத் தக்க தன்றென்பர். உண்மையை எளிதாய்க் கிர
ஹிக்கும் பொருட்டு ஆராயத் தக்கனவாய் இதனோடு சம்பந்தப்
பட்ட வேறு விஷயங்களு முள. சிலர் இத் தோன்றும் பிரபஞ்சம்
தன்னுளடங்கிய சராசரங்களோடு கடவுளின் ஒருபாகத்திலிருந்து
வெளிப்பட்ட தென்று கூறுவர். மற்றையோர், கடவுளுக் கன்னிய
மாய தொருபொருள் உலகஞ் சிருஷ்டிக்கப் படுதற்கு வித்தாய்
ஆதியிலிருந்த தென் றறைகின்றனர். இன்னுஞ் சிலர், ஆதியில்
கடவுளே யிருந்தார், வேறொன்று மிருந்ததின்று, சிருஷ்டிக்க
வேண்டுமென்னுஞ் சங்கற்பம் அவர் மனத்தில் உதித்தலும், சிரு
ஷ்டிப் பொருள்கள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் புறப்பட்டன வென்
றபிப்பிராயப் படுகின்றனர். சரியான முடிவுக்கு வரவேண்டு
மாயின், கடவுளை எல்லாம் வல்லவரென்றும், சர்வ வியாபகரென்
றும், ஒருவரென்றும், சொல்லுவதற்குக் காரணமென்னை யென்னு
முதற் கண் விசாரிப்பது அத்தியாவசிகமாம். ஒருவராயும் பகுக்கக்
கூடாதவராயும், எல்லாம் வல்லவராயும், அநந்தராயும் விளங்கா
நின்ற கடவுள், ஸர்வ ரூபங்களையும் அரூபத்தையும் ஸர்வ நாமங்
களையும் குணங்களையுஞ் செயல்களையும், இவை மட்டுமேயன்றி
ஜீவாத்மாக்களையுந் தம்முள்ளே யடக்கித் தாமாகவே யிருக்கின்
றார். அப்படியில்லையாயின், ஜீவர்களையும் அவற்றிற்குரிய நாமரூப
குணஞ்செயல்களையுமொழித்துப் பார்க்குங் காலத்துப் பரம்பொரு
ளானது கடவுளென் றழைக்கப்பட்டாலுஞ் சரி, அல்லது அல்
லா-ஈசான்-பரப்பிரஹ்ம மென்றழைக்கப் பட்டாலுஞ் சரி, அதனை
ஸர்வ வியாபகத்வத்தையும், ஸர்வ சக்தித்வத்தையுமுடையதெனல்
அமையாது. பூமி - ஜலம் அக்னி - வாயு-ஆகாசம்-சூரியன் - சந்தி
ரன் - நக்ஷத்திரங்கள் - மின்னல் முதலாகிய உறுப்புக்களையுடைய
இப்பிரபஞ்சம், ஜீவர்கள், இவற்றின் வேறாய அருவநிலை இவை
யனைத்தும் வியாபித்துத் தாமாய் விளங்கலின், கடவுளுக்குச் சர்வ
வியாபகத்வமும் ஸர்வ சக்தித்வமும் சித்திக்கின்றன; இந்த முடி
வற்றபூரண வஸ்துவினிடத்துச் சர்வவியாபகத்வமும் சர்வ சக்தி



த்வமும் பெற்றேனும் பெறுதேனும் பிறிதொரு பொருள் நிலைத்
திருத்த லெங்ஙனம்? ஒரு மரத்தை ஸர்வத்தையு முட்கொண்ட
தென்றும் ஸர்வ குணங்களு மமையப்பெற்ற தென்றும் சொல்லு
வீர்களாயின், அதில் வேர் - கிளை - மூலை - பழம் - இலை முதலிய
வும், இனிமை - கசப்பு முதலிய சுவைகளும் அடங்கி யிருத்
தலை நீங்கள் நிச்சயமாய்க் குறிக்கின்றீர்கள். இவைகளுளொன்
றை யொழித்தாலும் எல்லாவற்றையுந் தன்னுளடக்குந் தன்
மையும் ஸர்வ குணங்களுடைமையும் மரத்திற்குச் சித்திக்காது.
அன்றியும், அவ்வாறொழித்துப்பார்த்தல், மரமென்னும் பதத்தின்
பொருளை மட்டுப்படுத்தி அது குறையுடைய தெனவுங் காட்டும்;
இவ்விதமாகவே, சராசரம் நாமத்தொகுதிகள், ரூபங்கள், குணங்
கள், சக்திகள் என்றிவற்றாலான இப்பிரபஞ்ச முழுமையினும்
இப்பிரபஞ்சாதீத அருவ நிலையினும் வியாபித்துத் தாமாய் விளங்
கிக் கடவுளானவர் சர்வ வியாபகராயும் எல்லாம் வல்லவராயும்
ஒருவராயு மிருக்கின்றார். பிரபஞ்சத்தினது உறுப்பு - குணம் -
சக்தி - யென்றிவற்றில் உறுப்பொன்றையோ, குணமொன்றையோ
சக்தியொன்றையோ, ஒழித்துப் பார்க்கும் காலத்துக் கடவுளின்
ஸ்வரூபநிச்சயம் குறைவுபட்டுத் தவறு முடையதாகும்; ஆதலால்,
உருவத்தையொழித்து அருவமட்டுமே எல்லாவற்றையும் அடக்கு
மியல்பும் தனிப்பெரும் வல்லமையும் பெறுதல் கூடாது. அருவத்
தை யொழித்து உருவமே அவ்விரண்டு குணங்களும்பெறுமென்ற
லும் தவறும்.

இனிக் கடவுள் தனது தனிப்பெரும் வல்லபத்தால் சூன்யத்தி
லிருந்து அஃதாவது யதார்த்தத்தில் இல்லாத பொருளிடத்திலிரு
ந்து இவ்வுலகத்தைச் சிருஷ்டித்துச் சத்திய தோற்றத்தை யதற்
குத் தந்திருக்கின்றனரென்று கூறுவாரது சிருஷ்டி விஷயக்கோட்
பாட்டை ஆலோசிக்குமிடத்து, கடவுள் தனது சிருஷ்டிசங்கற்பத்
தால் வெறுமையிலிருந்து இவ்வுலகத்தைத் தோற்றுவித் திருப்பா
ராயின். அவரது ஹங்கார சங்கற்பத்தால் அது பழையபடி வெறு
மையல்லதுபொய்ம்மையிடத்து ஒடுங்குமென்பது அறிதற்பாற்றும்.
பொய்ம்மையிலிருந்து புறப்பட்டது மீட்டும் அதனுள்ளேயொ
டுங்கும்; உலகம் மெய்ம்மையிலிருந்து வெளிப்பட்டதா யிருக்கு
மாயின், என்றும் நிலைபெறும்; தோற்றமாத்திரமேமாறுதலடைந்து
கொண்டிருக்கும், உங்களுக்குள்ளே ஜாக்ர ஸ்வப்ந ஸுஷுப்தி

யவஸ்தைகள் நிகழ்வதுபோல, உலகமும் இந்திரியக்காட்சிக்குரிய வனத்திலிருந்து மனக்காட்சி நிகழும் புவனத்திற்கும் அதிலிருந்து காரணாவஸ்தைக்கும் மாறுதலடையும். சிருஷ்டிப் பொருள்களுட்பட்ட நீங்கள் பொய்யாமிடத்து, உங்களுடைய பக்திகரும ஞானங்களும் நீங்கள் வணங்குங் கடவுளும் பொய்யேயாகின்றன. வாஸ்தவத்தில் இல்லாததும் மாயா சொரூபமுமான பொருள், உள்ளதும் சத்தியசொரூபமுமான வஸ்துவை என்றும் உணரமாட்டாது, உண்மைக்கே உண்மை புலப்படும். உண்மையில் உள்ளோராகிய பெற்றோர்க்குப் பிறந்த பிள்ளைகள், தாமும் உள்ளவர்களேயாகின்றனர். அவர்களுடைய பக்திகரும ஞானங்களும் அந்நீர்மையனவே. வாஸ்தவத்தில் இல்லாத பெற்றோரிடத்திருந்து பொய்ம்மைப்பிள்ளைகளே உதிப்பனவாம். வித்தின் தன்மையை முளைசார்ந்தேதீரவேண்டும். மற்றவிதம் அசம்பாவிதமாம். மெய்ம்மையாகிய கடவுளிடத்திருந்து பொய்ம்மைச் சிருஷ்டிஉற்பவித்தல் இயலாத காரியம். கடவுள் மெய், உலகம் பொய் என்று கூறுவதனால் வாஸ்தவத்திற் கருதப்படுவது இதுதான், உலகம் கடவுளுக்கன்னியமாயதொரு பொருள்; ஆயினும், உண்மையினுள்ளது என்று நாமென்னும்எண்ணம் நம்மை வஞ்சிக்குந் தன்மையதாம். திருஷ்டாந்தம்- ஜலத்தை உண்மைப் பொருளென்று கொள்ளுமிடத்து, குமிழிகள் பனிக்கட்டி - மேகங்கள் முதலியன ஜலத்தினின்றும் வேறாய உண்மைப் பொருள்கள் என்று எண்ணும் எண்ணம் மயக்கமென்பது திண்ணம். வாஸ்தவத்தில், சிருஷ்டியைப் பற்றி வரும் பல அபிப்பிராயங்களுள்ளும் ஓரே உண்மையே அடங்கியிருக்கின்றது. அவ்வபிப்பிராயங்களாவன:— கடவுளானவர், தமது சங்கற்பத்தினால், தாமே சிருஷ்டிப் பொருள்களாக வெளிப்படுகின்றார். அவர் தம்முடைய சங்கற்பத்தினால் பிரபஞ்சத்தோற்றத்தைத் தம்முளேயே சிருஷ்டிப்பதனால், இல்லாத பொருள்கள் இருப்பனவாகின்றன; அல்லது தம்மில் ஒரு பாகத்தை அவர் உலகமாக உருப்படுத்தினார். இவ்வாறு பேதப்பட்ட கருத்துகட்கெல்லாம் பொருள் ஒன்றே. இவ்வபிப்பிராயங்களின்படி, இவ்வுலகத்திற்கு உபாதான காரணமும் நிமித்தகாரணமும் கடவுளது சங்கற்பமே; உலக முழுதும் கடவுளது சங்கற்பமேயாயிருக்கின்றது. வாளினது கூர்மை வாளின் வேறாகாமை போல, வாஸ்தவத்தில் கடவுளின் சங்கற்பமேயாயிருக்கின்ற இவ்வுலகமும் கடவு



ளின் வேறாகாது. நீங்களெல்லோரும் கடவுளிடத்திருந்து தோன்றி, அவரது சுபாவத்தினராகாதிருப்பீராயின், உங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுதற்குரிய பொருள்களை அவர் அன்பினுதவுதல் எற்றுக்கு? அவர் உங்களுடைய பசிக்கும் வயிற்றுக் கன்னமும் தவிக்கும் நாவிற் கமிர்தமுந் தருகின்றனர். வெற்றுடலுக் காடையும் உடற்பிணிக்கு மருந்தும் உபகரித்திருக்கின்றார். உங்களுடைய அஞ்ஞானாந்தகாரத்தைத் துரத்தி வியவகாரிக தசையினும் பாரமார்த்திக தசையினும் உண்டாகும் குறைகளை நிவிர்த்திக்கும் பொருட்டு, வானிலொளியாகத் தம்மைப் புலப்படுத்தியிருக்கின்றார். தனக்கன்றிப் பிறர்க்காகப் இச்செயல்களை ஒருவனும் புரியானே. அவர் உங்களுடைமையும், நீங்கள் அவருடைமையு மாதலில்லையெனில், அவரிடத்து உங்களுக்கு அபரிமிதமான அன்பும் வணக்கமும், அவருக்காயின் எத்துணைக் கருமமும் மகிழ்ந்து புரிவதற் கண் பொன்றுவாசையும் எங்கிருந்து வரக்கூடும்? கடவுளின் மக்களெல்லாம் அதர்மங்களையும் வாதங்களையும் ஒழித்து விட்டு அவரைப் பக்தி செய்தலில் ஒருங்குசேர்ந்து தங்களுக்கு மோக்ஷத்தையும் உலகத்துக்கு நன்மையையுந் தேடக்கடவர். பல பிள்ளைகளது பரமபிதாவானவர், அவர்களெல்லாராலும் விசுவசிக்கவும் வழிபடவும் படுவாராயின், அளவு கடந்த அன்பினால் அவர்களுக்கு நித்தியானந்தத்தை யருளிச்செய்வார். ஆனால் மாந்தர்களோ தங்கள் கடவுளைக் கைவிட்டிருக்கின்றனர். மக்கள், தங்கள் சொந்தப்பிதா இன்னாரென் றறிகின்றிலர்; அதனாற்றானே, அவர்களுக்குத் துன்பங்களெல்லாம் உண்டாகின்றன. இனியேனும், விவேகத்தாற் கடவுளை யறியத் தலைப்படுங்கள்; விவேகமில்லாவிட்டால் - மெய்யுணர்தல் கூடாது; மெய்யுணர்வில்லாது ஞானம் வராது; ஞானமின்றிச் சாந்தியுண்டாகாது. ஓம் சாந்தி-பரசாந்தி யுங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

தேசாபிமானியின் முதற்கடமை தனது தேசத்தில்
கல்வியைப் பரவச் செய்தலாம்.

## "பெஸ்தால் லோஜி"

சிறு பிள்ளைகளிடத்தில் பரிபூர்ணமான அன்பு செலுத்தி, அவர்களுடைய கல்வியின் நிமித்தம் ஸகலத்தையும் அர்ப்பணம் செய்த மகான்களுள் ஒருவர் "பெஸ்தால்லோஜி" சாஸ்திரியார்

இவர் 1746ம் ஆண்டில், "ஸ்வித்சர்லாந்து" தேசத்திலே, "ஜுரீக்" பட்டணத்தில் பிறந்தவர். ஸகல மனிதர்களுக்கும், முக்கியமாகக் கஷ்டப்படுகிறவர்களுக்கு எப்போதும் உபகாரமாக இருத்தல்வேண்டும் என்பதை அவருடைய தாயார் அவருடைய இளம்மூளையில் பதித்துவிட்டாள். ஆகையால் ஜனங்களின் நிர்ப்பாக்கியமான ஸ்திதிக்கு ஒரு மருந்து தேடவேண்டியதவசியம் என்ற ஏக்கம் அவர் மனதில் குடிகொண்டது. ஒரு வேளை, சட்டங்களில் ஏதாவதொரு பிரயோஜனமுள்ள சீர்திருத்தத்தைக் காணலாம், அதனால் ஜனங்களுக்குச் சுகம் உண்டாகக்கூடும் என்று நினைத்து, அவர் நீதி சாஸ்திரம் படிக்கத் தொடங்கினார். அதில் திருப்தியடையாமல், கடைசியாகச் சட்டங்களை மாற்றுவதைக் காட்டிலும், கல்வியினால் ஜனங்களின் அறிவை விளக்குதல் சரியான மருந்தென்று நிச்சயித்தார். சட்டங்கள் எவ்வளவு நல்லனவாக இருந்தாலும் போதா. ஒரு தேசத்தினுடைய க்ஷேமம் அதனுடைய பாடசாலைகளிலிருக்கின்றது. ஆகையால் பாடசாலைகளைச் சீர் செய்தல் நன்றெனத்தேர்ந்து, பிள்ளைகளுக்குப் போதிக்கும் தொழிலைக் கைக்கொண்டார். அவர் அத்தொழிலைப்பற்றிப் பின் வருமாறு எழுதியிருக்கின்றார்.

"பெருமையுள்ள தொழிலே! நீயே எல்லாவற்றிற்கும் மேலானவள்; உன்னைத்தான் நான் விரும்புகிறேன்; நான் பிள்ளைகள் மத்தியில் இருந்துகொண்டு, அவர்களிடத்தில் அன்பு செலுத்தி, அவர்களுக்குக் கல்வியைப் போதிப்பேன். இங்ஙனம் நான் அதிக நன்மை புரிவேன். இராஜாங்கத்தில் எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்திலே இருந்தபோதிலும் இவ்வளவு நன்மை செய்தல் முடியாது.

இவ்விதமான உதார எண்ணத்தினால் உற்சாகமடைந்து அவர் ஏறக்குறைய எண்பது பிள்ளைகளைச் சேர்த்தார். எண்பது எளியபிள்ளைகள், அநாதைப்பிள்ளைகள், பிச்சைக்காரப் பிள்ளைகள், தீயமார்க்கத்தில் விழுந்து போனவர்கள். அவர் அவர்களுக்குச் சொன்னதாவது:—வாருங்கள் பிள்ளைகளே! நான் உங்களுக்குக் கல்வி கற்பித்து, யோக்கியமாகவும், சுகமாகவும் ஜீவனம் பண்ணும் மார்க்கத்தைக் காண்பிக்கிறேன்.

உடனே அவர் ஊரிலுள்ள ஒருகட்டடத்தை வாங்கி, அதைப் பாடசாலையாக்கி, இத்தனைபிள்ளைகளுக்குச் சாப்பாடும், கல்வி



யும் கொடுத்துக்கொண்டு வந்தார். இத்தொழிலில் அவருக்கு வருமானம் இல்லாதபடியினால், அவருக்கிருந்த அற்ப ஆஸ்தியும் போய்விட்டது; ஆனால் அவருடைய போதனாமுறைகள் வாலிபர்களின் மனதைக் கவரக் கூடியனவாகவும், அவருடைய இருதயம் தயாளம் நிரம்பியும், அவருடைய சித்தம் திடமாகவும் இருந்தன. துர்மார்க்கத்தில் திரிந்துகொண்டிருந்த அவ்வளவு பிள்ளைகளையும் விவேகிகளாகச் செய்வதற்காக அவர் எடுத்துக்கொண்ட பிரயாசைகள் பூர்ணபலனைக் கொடுத்தன.

"என்னுடைய ஆஸ்தி அழிந்துபோயிற்று, ஆனால் என்னுடைய போதனாமுறைகள் பலித்தன. நான் முன்னைக்காட்டிலும் அதிக பாக்கியவான்." என்று

ஒரு சமயம் அவர் சொல்லியிருக்கிறார். உண்மையில் அவருடைய முறைகள் தாம் இப்போது எல்லாப் பாடசாலைகளிலும் வழங்கி வருகின்றன; அவராலே தான் கல்வியானது பிள்ளைகளுக்கு இவ்வளவு சுலபமாகவும் இன்பமாகவும் ஆயிற்று.

பெஸ்தால்லோஜி சாஸ்திரியார் கொஞ்சமேனும் அதைரியப்படாமல், வேறு புதிய பாடசாலைகளை ஏற்படுத்திக்கொண்டே போனார். அவருடைய உதாரகுணத்தைப் புகழாமல், அநேகர் அவர்மட்டில் பொறாமை கொண்டார்கள். அவர்கள் அவருக்கு, எழுதவாவது, எண்ணவாவது சரியானபடி வாசிக்கவாவது தெரியாதென்று சொல்லிக்கொண்டு திரிந்தார்கள். அவரோ மிகவும் அடக்கமுடையவர்; ஆதலால் அவர் "இவையெல்லாம் நான் அறியாமலிருந்தது உண்மையே; அதனாலே தான் அறிவில்லாத ஜனங்களுக்குத் தகுதியாக அதி சுலபமான முறைகளைக் கண்டுபிடிக்கும்படி நேரிட்டது" என்று மறுமொழி உரைத்திருக்கிறார்.

அவருடைய செய்கைகள் எங்கும் பரவின. அவருடைய பாடசாலைகளையும், அவற்றை நடத்தும் ஆச்சரியமான மனிதனையும் பார்ப்பதற்கு, நாலாப் பக்கங்களிலிருந்து அநேக வித்துவான்களும் சாதாரண ஜனங்களும் தினந்தோறும் வந்துகொண்டிருந்தார்கள். பெஸ்தால்லோஜி சாஸ்திரி பிள்ளைகளைக் கேள்விகேட்கும் வகையும், கற்பிக்கும் முறையும் பார்க்க வந்தவர்களுக்கு அதிக வியப்பபை உண்டுபண்ணின. ஸகலரும் அம்முறைகள் சுலபமெனக் கருதினார்கள். இங்ஙனம் போதிப்பது தான் அருமை

என்பதை அவர்கள் அறியவில்லை. பிள்ளைகள் அதிக பிரி
தோடு தம்மை அறியாமலேயே கற்கின்றார்கள்; விளையாடுவத
எவ்வளவு சந்தோஷமாக ஓடுவார்களோ, அவ்வளவு களிப்போ
பாடசாலைகளுக்குச் செல்லுகின்றார்கள். கல்வியையும், உணவை
போல, விரும்புகின்றார்கள்.

சால்ஸிரியின் கீர்த்தி வளர்ந்துகொண்டு போயிற்றே யன்றி அவருடைய ஆயுள்வளரவில்லை. மேலும் அவர் தமது சொத்து முழுதும் பிள்ளைகளுக்கென்றே அர்ப்பணம் செய்துவிட்டார். அதனால் மிகவும் தரித்திர தசையடைந்து 1827 இல் இறந்தார்.

அவர் தமது நண்பர்களில் ஒருவருக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

“நான் முப்பது வருஷம் தரித்திரத்தோடு சண்டை செய்தேன்; இன்றைக்கும் நான் வெளியே, ஜனசமூகங்களுக்குச் செல்வதில்லை, நான் பிச்சைக்கார உடைதரித்திருக்கின்ற படியினால் ஸகலரும் என்னைக் கேலிபண்ணி இகழ்கிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் எனக்குப் பகல் சாப்பாடே கிடைப்பதில்லை. உன்னுடைய இளஞ் சிஷ்யர்களெல்லாம் சந்தோஷமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில், நான் காய்ந்துபோன ஒரு சிறிய ரொட்டித்துண்டைத் தெருவில் அவஸரமாக விழுங்கியிருக்கிறேன்”.

இத்தகைய மகான்களல்லவா சரியான தியாகிகள், உண்மையான லக்கியம் செய்தவர்கள்-மனிதஜாதி அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடவது.

N. சுப்பிரமணிய அய்யர்,

புரொபெசர்.

## அநுபவ நீதிவாக்கியத்திரட்டு.

### காப்பு.

நறுமலரா ளுடனுறையும் நரசிங்கன் பதமலரிற்
சிறுநீதி வாக்கியமாஞ் சீர்மாலை சூட்டுதற்கு
மறுவுடைய் திருமார்பில் வாழ்கின்ற மங்கையவள்
பொறுமையுடன் காப்பாளே புகழ்ராம தாசனெனை.



### அவையடக்கம்.

தெளிசேர் புலவர்பாற் றெரிந்தனு பவித்த
வெளியே னறிவுக் கெட்டிய நீதியைக்
கிளிபோற் பிதற்றினேன் கீழு ளார்க்கென
ஒளிசே ரறிவுளார் உவத்தல் ஞாயமே.

### நூல்.

(1) கடவுளைப் பற்றுதல் கற்றோர் களின்செயல்.
(2) உன்னைநீ யறிந்தால் ‡உண்மையும் விளங்கும்.
(3) பரதார பரிக்ரஹம் பரம்பரை விநாசம்.
(4) உள்ளதைக் கொண்டு உற்றதை முடி.
(5) அடைந்ததை நினைந்து அகமகிழ்ந் திரு.
(6) ஆரியன் மொழிப்படி யறவழி யிற்செல்.
(7) காசையே கோரிக் கருமஞ் செயற்க.
(8) உற்றுநோக்கு முத்தமர்க் குலகமே வசியம்.
(9) துறவிக் குலகம் துன்பமாய் விளங்கும்.
(10) நல்லோர் மனநோய் தீயோர்தங் கேடு.
(11) மனங்கண்டு போதிக்கும் மதியூகி யேகுரவன்.
(12) மறைந்தன தோன்றும், தோன்றின மறையும்
இந்த விரண்டு மியற்கை யாகும்.
(13) ஏற்றமும் தாழ்வும் எடைபோடப் பட்டவை.
(14) உத்தமர் நலிவும் தீயவர் சுகமும் உலகநன் மைக்கே.
(15) கற்புடைப்பெண்களின் கனதுயரெல்லாம்
காரணரான கயவர்கேட் டிற்காம்.
(16) விநாடிகா லச்சுகம் வெகுகால கஷ்டம்.
(17) அகத்தி னியல்பை முகத்தியல் காட்டும்.
(18) சிற்றின்ப நாடகத்தின் திரைநீக்கி நோக்குவையேல்,
பற்பலவாம் பிணிஇடும்பைப் பதநடனம் நீ காண்பாய்.
(19) முன்தீவினையோடு-பின்வினையும் தேடாது,
முன்ஞானத்தோடு-முத்திபெற நீமுயல்வாய்.
(20) அருளுளார்க்குலகம் அருளேயாகும்.
(21) தீயோர்க் குலகம்-தீதேயாகும்.

(வரும்.)

ஸ்ரீராமையங்கார், திருவல்லிக்கேணி.

‡ (உண்மை - பரம்பொருள்)

# MODEL NOTES OF LESSONS FOR TEACHERS.

## மாதிரி பாடம்—பாலர் வகுப்பு.

ஒரு பையன் கையில் ஏதோ தின்பண்டம் வைத்துக்கொண் டிருந்தான். அதை ஒருகாகம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டது. பையன் அழுதுகொண்டே காகத்தைப் பார்த்துக்கொண்டு ஓடிறன். காகம் பையன்வீட்டுப் புறக்கடையில் ஒரு தென்னைமரத் தின்மேல் உட்கார்ந்தது. அது அம்மரத்தில் கூடுகட்டியிருந்தது. காகம் கூட்டில்போய் உட்கார்ந்தவுடன் கூட்டிலிருந்து ஒரு முட்டை தவறி கீழே விழுந்தது. விழுந்த வேகத்தினல் முட்டை உடைந்து அதிலிருந்து ஒரு குஞ்சுவெளிப்பட்டது. இதைப்பார்த் தப்பையன் பயப்பட்டுத் தன் தாயரிடம் நடந்தவைகளைச் சொல்லி அழைத்துவந்து காட்டினன். அதற்குத் தாயார் "என் குழந் தாய்,பயப்படாதே! இது காக்கைகுஞ்சு. இது முட்டையிலிருந்து தான் உண்டாகும். பக்ஷிகளெல்லாம் இம்மாதிரி முட்டையிலிரு ந்துதான் உண்டாகின்றன" என்று சொல்லி அவனை அழைத் துச் சென்றாள்.

| பாடம். | பாடத்தை நடத்தும் மாதிரி. | பரஸ்பர சம்பந்தமாய்ப்போதனு முறையில் கையாடக் கூடிய விஷயங்கள். |
|---|---|---|
| மேற்சொல்லிய கதை. | 1. கதை விவரிப்பு: சித்திரத் தையாவது களிமண் விவ ரிப்பையாவது (Illustration by clay modellings) பிள்ளைகள் உற்றுப்பார்த் தல். | 1. உபாத்தியாயர்ஷேகதை யை ப்ரத்பக்ஷ ப்ரமாண மாக விவரித்துக் கதை யைச் சொல்லவும்.<br>1. கதை விவரிப்பு டிரா யிங்க்.<br>2. களிமண்ணுல் ஷேகதை யை விவரித்தல். |
| | 2. கறுப்புப்பலகையில் விவ ரித்தசித்திரத்தையும், களி மண் விவரிப்பையும் பிள் ளைகளுக்குத் தெளிவாய் விவரித்துத் கதையை ஸ் தூலமாய்ப் பிள்ளைகளிட த்திலிருந்து வரவழைக்க வும். | 2. சம்பந்தமானதொழில்கள்<br>(a) சித்திரம்: 1. தென் னைமரம். 2. முட்டை.<br>(b) களிமண் வேலை: முட்டை.<br>(c) குச்சிவைத்தல்: தெ ன்னைமரம்.<br>(d) விதைவைத்தல்; முட் டை. |
| | 3. கதையைப் பிள்ளைகளுக் கு நன்முய்விளக்கிச் சொ ல்லவும்.<br>(In a dramatic manner accompanying gestures) | 3. கதைக்குச் சப்பந்தமான பாட்டைஅபிநயத்துடன் பாடுவது. |
| | 4. பிள்ளைகளின் சொந்தமா னபாஷையில்அவர்களுக் குச் சொன்ன கதையை வாயால் சொல்லும்படி செய்யவும். பாஷையைப் பற்றிக் கவனித்தல் கூடாது. | 4. இயற்கை விசாரணைக் குரிய வேடிக்கை சம் பாஷணை.<br>Pleasure talk on Nature.<br>காகம் பறக்கும். எத ஞல்?<br>காகம் முட்டையிடும்.<br>காகம் ஒரு பக்ஷி. பக்ஷி கள் எல்லாம் இரக்கைக ளினுல் பறக்கின்றன. முட்டையிடுகின்றன. குஞ்சுகள் முட்டையிலி ருந்து உண்டாகின்றன. காகம் கறுப்பு. |
| | கடவுளின் விவேகத்தை ப் போதிக்கவும். | (இங்கே வர்ணங்களைப் போதிக்க)<br>முட்டை பளுவானது.<br>பளுவான பொருள்களை ச்சொல்லு.<br>பளுவானவைகளை மே லே தூக்கிப்போட்டால் கீழே விழுகின்றன. முட் டை பளுவானதால் மரத் திலிருந்து தவறிக் கீழே விழுந்தது.<br>தேங்காயை அறுத்துப் போட்டால் அதுவும் கீழே விழும்.<br>தேங்காய் உடையுமா? உடையாது. ஏன்?<br>தேங்காயின்மேல் மட்டையிருக்கிறது. |
| | விளையாட்டு. எல்லாரும் கடவுளை த்யானம் செய்தல். 1. பாட்டு. | |

என். சுப்பிரமணிய ஐயர், திருவேட்டீசுவரன் பேட்டை.

## பாடலீபுத்ர நகரம்.

### II.

அசோகவர்த்தன மகாராஜா ஜீவபலிகொடுத்து நடத்தப்பட்ட யக்ஞங்களைத் தன் ராஜ்யத்தில் கூடாது என்று முழுதும் தடுத்துவிட்டார். அதனால், அந்தராஜ்யத்திலும் அதற்கு வெளியிலுமுள்ள பிராமணர்களெல்லாம் ஒன்றுகூடி, தங்கள் அதிகாரத்திற்குக் குறைவு நேரிட்டதைக்கண்டு, கோபங்கொண்டு, அந்தராஜவம்சத்திற்கு வேர்ப்பூச்சியாகி, அதைக் கருகச்செய்து அழிக்கத் தங்களாலியன்றவரை முயற்சிசெய்தனர். அசோகமகாராஜா இறந்த 50 வருடத்திற்குள் தாங்கள் கோரியபடியே அந்தராஜ்யத்தைக்கைக்கொண்டு, எந்த அசோகர் இவர்கள் செய்வித்த யக்ஞங்களைத்தடுத்தாரோ, அந்த மகாராஜாவின் மாளிகையில் ஒரு அச்வமேதயாகம் கோலாஹலத்துடன் நடத்தினார்கள். இதனையெல்லாம் முன்னின்று நடத்தினவர்கள் ஸங்ககோத்திரத்தான ஸாமவேதிய பிராமணர்களே. இவர்கள் ஸாமவேதவகுப்பில் ஒன்றுக்குத் தலைமைபெற்ற ஆசார்யர்கள். இவர்களுக்குள் புத்தியிலும் சிறந்தவராயிருந்து மேற்கூறிய காரியங்களை ஸாதித்துவைப்பதில் முன்னின்றுழைத்துப் பின்பு கீர்த்தியடைந்தவர் புஷ்யமித்ரர்என்பவர். மௌர்யர்களுடைய் பெயர் பாடலீபுரத்தில் இதற்குப் பிறகும் சிலகாலம் வழங்கிவந்திருந்தாலும், அப்புராதன நகரத்தின் ஆளுகைமுழுமையும் மாளவதேசத்தில் விதிசமென்ற நகரத்திலிருந்தாண்டுவந்த ஸங்கர்களுக் குட்பட்டதாயிருந்தது. ஸங்கர்கள் அடிசருக்கித் தாழ்வடைந்த காலத்தில், அவர்களுடைய மந்திரிகளான கண்வாயர்கள் அந்தராஜ்யத்தில் ரோஹில்கண்டிலிருந்து நின்ற ஒரு பாகத்தை ஆண்டுவந்து, முக்கியமாய்ப் பாடலீபுத்ரத்தில் பூர்ணாதிகாரம் செலுத்தி வந்தார்கள். இப் பாடலீ புத்ரநகரம் கல்விக்கே இருப்பிடமாயும், வியாபாரங்களுக்கெல்லாம் தாய்வீட்டையொத்த பெரும் சந்தையாயிருந்ததுமன்றி, இந்நகரத்திலிருந்தே, நம்நாடு முழுதும் வழங்கி வருகிற சட்டதிட்டங்கள், பற்பல ஆசாரங்கள், மதக்கோட்பாடுகள், நீதிகள், நியாயங்கள் முதலியன உண்டாய்ப் பரவினவென்று ஏற்படுகிறது. நமது நாடெங்கும் நகரமென்றால் இதற்கே ஏற்றுப்பொருந்தின பெயர் என்று எண்ணப்பட்டு வந்தது. பௌத்ததர்ம வித்யைக்கும்



பௌத்தாசாரங்களுக்கும் இதுவே முக்கியமான இருப்பிடம். அதேமாதிரி ஜைனவித்தைக்கும், ஜைனாசாரங்களுக்கும் இதுவேதான் முக்கியமாய்ப் பரவுமிடமாயிருந்தது. இந்த நகரத்திலிருந்தே பத்ரபாகு என்ற ஜைனப்பிரசித்தர் அநேக ஜைனஸந்யாஸிகளை அழைத்துச் சென்று மைசூரில் அமர்த்தினார். பௌத்தசங்கம் ஒன்றுகூடி, உத்தர பௌத்தர்கள், தக்ஷிண பௌத்தர்கள் என்ற இரண்டுகக்ஷிகளாகத் தீர்மானித்துப் பிரிந்த விடம் பாடலீபுத்ரநகரமே. பௌத்தமதத்தைப்பரவச் செய்யவேண்டுமென்று பௌத்தஸந்யாஸிகள் உலகெங்கும் அனுப்பப்பட்டது இவ்விடத்திலிருந்தே. ஸிங்களத்திற்குச் சென்று அங்கே பௌத்தமதத்தை ஸ்தாபித்து இன்றைக்கும் அத்தர்மம் அங்கே கொண்டாடப்பட்டுவரச் செய்தலில் சென்ற ஸந்யாஸிகள் இங்கிருந்து சென்றவர்களே. உனச்சதி (Unassati) என்பவர் தம் பிரசித்தமான கிரந்தத்தை எழுதின இடம் இவ்விடம்தான். இந்நகரத்திலேதான் ஆர்யபட்டர் என்ற பிரசித்திபெற்ற வடமொழி நூலாசிரியர் எங்கெங்கும் வியாபகத்தை யுடையவராய்க் கிரந்த ரத்னங்களை எழுதினது. கௌடில்யருடைய அர்த்தசாஸ்திரம், பதஞ்சலியின் மகாபாஷ்யம், கோஹலரின் நாட்யசாஸ்திரம், வாத்ஸ்யாயனருடைய காமசூத்ரம் ஆகிய இந்நான்கும் சகலருமறிந்த வடமொழிக் கிரந்தங்கள், இந்நகரத்திலேயோ அல்லது இதற்குச்சமீபித்த பிரதேசங்களிலோ எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனெனின், அந்நூலாசிரியர்கள் பாடலீ புத்ரத்திற்கென்றமைந்த ஞானபிவிருத்தியை நன்கறிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். பாடலீ புத்ரத்தின் நகரவாசிகள் நாடகசாலைகளில் மிக்க பற்றுதலுள்ளவர்களாக விருந்தனர். ஆனால் அவர்கள்கொண்ட பிரியம் நாடகத்தின் அங்கங்கள் எல்லாவற்றிலும் சமமாய்ச் செலுத்தப்படாமல் அபிநயத்தில் மட்டும் பற்றுதலடைந்திருந்தது. அவர்கள் ஸங்கீதத்திலும் நாட்யத்திலும் அன்பற்றவர்களாகயிருந்தனர். இதுமிக்க ஆச்சரியகரமானதாகவே தோன்றுகிறது.

கண்வாயர்களுக்குப் பின் பாடலீ புத்ரத்தை ஆந்த்ர சதவாஹனர்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு ஆண்டுவந்தார்கள். அவர்களும் பிராமணர்களென்றே ஏற்படுகிறது. இவர்களும் அங்கே ஒரு நூற்றாண்டு தவறாமல் அரசாட்சி செய்து வந்தார்கள்.

பிறகு குசர்கள் (Kushars) என்ற ஜாதியார் அந்நகரத்தின் மீது படையெடுத்து வந்து அதனைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் தலைவனான கானிஷ்கா என்ற வீரப்பிரதாபர் அதைமீட்டுக்கொள்ள 9 கோடி ரூபாய்கள் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனையிட்டார். பலவீனர்களான பாடலீபுத்ரத் தாசர்கள் அப்பெருந்த தொகையைக்கட்டச் சக்தியற்றவர்களாய் அதற்குப் பதிலாய் கானிஷ்கருக்குத் தங்களிடமிருந்த சில வெகுமதிகளை அனுப்பினார்கள். அவற்றுள், சுமார் 3 கோடி ரூபாய் பெறுமான புத்தருடைய கமண்டலுவும், அக்காலத்திலேயே எங்கும் பிரசித்தராகவும், பின்பு நமது தேசமெங்கும் கீர்த்திபெற்ற தத்வ சாஸ்திர பண்டிதரான அச்வகோஷர் என்றவருமே இரண்டு முக்கியமான வெகுமதிகள்; அவ்வச்வ கோஷரையும் மூன்று கோடிரூபாய்கள் பெறுமானவராக மதிப்பிட்டதாகச் சொல்லப்படுகின்றது. (வரும்)

T. K. சடகோபாச்சாரியார்,
சென்னை.

# ஸுரேந்த்ரன்.

## II

## தேசப்ரஷ்டம்.

"They do not love that do not show their love"-Shakespeare.

தமது அத்யந்த ஸ்நேஹத்தை வெளியில் காட்டினால் தான், ஒருவர் உண்மையாகவே நேசிக்கிறார் என்பது அறியப்படும். அங்ஙனம் தம் நட்பை வெளிக்குக் காட்டாவிட்டால் அவர் உண்மையில் அன்புடையவரல்லர்.

ஸாயங்காலம் மணி ஏழரையிருக்கும். உதயபுரியின் தெருக்களில் ஜனங்கள் மிக அவஸரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். குளிர் காலமாக இருந்ததால், பலர், முகம் மாத்ரம் தெரியும் வண்ணம் சால்வைகளைத் தம் தலைகளில் போர்த்துக்கொண்டு சென்றனர். அவர்களுள் இருவர் ஜனங்களின் கவனத்தைக் கவருபவராயிருந்தனர். ஒருவன் காவி வஸ்த்ரம் உடுத்துக்கொண்டு ஸந்யாஸியைப் போல் தோன்றினன்; மற்றவன் ப்ரபுவைப் போல்



உடைகளைத் தரித்திருந்தான். இவர்களிருவரும் வெகு வேகமாக நடந்து சென்று கடைசியில், வாசலில் பலவித தீபங்கள் வைத்திருந்த ஒரு "பங்களா" வை அணுகினர். அந்த மாளிகையின் வாசற் கதவிற்குமேல் அழகிய சித்திர எழுத்துக்களில் "ஜயவிலாஸம்" என்றிருந்தது. அதனைக் கடந்து அவர்கள் உள்ளே சென்றனர். அங்கு ஒரு பெரிய "ஹால்" இருந்தது. அங்கு ஸூர்யன் ப்ரகாசிப்பது போல் வெளிச்சம் இருந்தது. ஹாலில் ஒருபக்கம் பல ஸ்த்ரீகளும், மற்றொருபக்கம் அநேக ப்ரபுக்களும் உட்கார்ந்து ஸந்தோஷமான முகத்துடன் விளங்கினர். உட்சென்ற இருவரும், ஜன நடமாட்டமில்லாத ஒரு மூலையில் போய் உட்கார்ந்தனர். உள்ளே வந்தவுடன் கூட, ஸந்யாஸியைப் போலிருந்தவன், தன் தலையின் மீதிருந்த வஸ்த்ரத்தை எடுக்காமல் முகத்தை மூடிய வண்ணமாகவே இருந்தான்.

அந்த ஹாலில் ஒரு மஹான், ஸுரேந்த்ரனுடைய ஸத்குணங்களைப் பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்து முடித்தவுடன், அந்த ஹாலே இடிந்து விழும்போல் "திலீப மஹாராஜா நீடூழிவாழ்க! மஹேச கொடுங்கோன் மன்னன் சீக்ரமே நாசமுறுக!! ஸுரேந்த்ரனுக்கு ஸகல க்ஷேமங்களும் உண்டாவதாக!!!" என்ற பெரும் கோஷம் உண்டாயிற்று. இதனைக்கேட்டதும் அந்த ஸந்யாஸி வேஷத்தோடு வந்தவனுக்கு ஆத்ரமும், கோபமும் பொங்கி எழுந்தன.

பிறகு ஸுரேந்த்ரன் தனது ஆஸனத்தை விட்டு எழுந்து வந்திருந்தவர்களை நோக்கிப் பின் வருமாறு கூறினன்:—"ப்ரபுக்களே! ஸ்நேஹிதர்களே! ஸ்த்ரீ ரத்நங்களே! இன்றைய என்பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு நீங்கள் யாவரும் வந்து என்னைக் கனப்படுத்தியதற்காக உங்களுக்கு நான் அன்பார்ந்த வந்தனம் அளிக்கின்றேன். நாயினும் கடையேனாகிய என்னைப்பற்றி மிகவும் மேன்மையாய்ப் பேசிய மஹானுக்கு நான் நமஸ்கரிக்கின்றேன். என்னிடம் இருப்பதாகக் கூறிய நற்குணங்களை நான் மேற்கொள்ள ப்ரயத்நப் படுவேன். நமது மஹா ராஜா திலீபேந்ரிடத்தும், அற்பனாகிய என்னிடத்தும் நீங்கள் கொண்டுள்ள அன்பிற்காக நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். மனதிலிருக்கும் அன்பை வெளிக்காட்டுவது தான் உத்தமம். ஆனால் நீங்கள் அதிகமாக ஒன்று செய்து விட்டீர்கள். அதற்காக நான் வ்யஸநப் படு

கின்றேன். மஹேசன் என்னதான் துஷ்டனாயிருந்தாலும் அவ
னைப் பற்றி இவ்வளவு பெரிய ஸபையில் தூஷித்துப் பேசுவது
விரும்பத்தக்க தன்று. இந்த ஸபையிலெனக்குச் சத்ருக்களு மிரு
ப்பார்கள். ("இல்லை, இல்லை, இல்லை" என்ற பெரிய சப்தம்).
ஆனால் ஸந்தோஷம். எனினும் நீங்கள் அங்ஙனம் செய்திருக்கக்
கூடாது. மஹேசன், இப்போது, திலீபருடைய ஸ்நேஹிதர்களைத்
தேசப்ரஷ்டம் செய்வதும், அவர்கள் ஸொத்தை அபகரிப்பதுமாக
இருப்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமல்லவா?......ராத்ரியின்
குளிரையும், ச்ரமத்தையும் கருதாமல் இங்கு வந்து என்னைச் சிற
ப்பித்ததற்காக உங்களுக்கு மறுபடியும் நான் என் மனத்ருப்தி
யைத் தெரிவிக்கின்றேன்."

இங்ஙனம் பேசி யானபின் ஸுரேந்த்ரன் ஒவ்வொருவரிட
மும் வந்து க்ஷேமம் விசாரிக்கலானான். ஸ்ரீதரரிடம் வந்ததும்,
அவன், "நமஸ்காரம். உங்கள் தேஹ ஸௌக்யம் எப்படி யிருக்கி
றது? கிரிஜா க்ஷேமமா? நிற்க, ஊரில் ஒரு புகார் கிளம்பி யிருக்
கிறதே தெரியுமா உங்களுக்கு? ஸுகுமாரனும் மஹேசராஜனும்
ராத்ரிவேளைகளில் தெருவுகளில் வந்து சில அஸந்தர்ப்பமான
க்ருத்யங்களைச் செய்கிறார்களாமே! ஆகவே நீங்கள் உமது புத்ரி
யைக் குறித்து அதிக கவனத்துடனிருக்க வேண்டும்" என்று
கூறினான். அவரும் அவனை ஆசீர்வதித்தார்.

ஸுரேந்த்ரன், கடைசியாக, மூலையில் உட்கார்ந்திருந்தவர்
களிடம் வந்து, "க்ஷமிக்கவேண்டும், ஹா ஸுகுமாரா! நீங்கள்
ஏன் முன்னேவந்து உட்காரலாகாது? உம்மை ஸேவகர்கள் கவ
னிக்கவில்லையா" என்று பரபரப்புடன் வினவ, ஸுகுமாரனும்
"ஸுரேந்த்ரா! உனக்கு ச்ரமம் ஏன்? எனக்கு உடம்பு சிறிது
அஸௌக்யம். ஆதலால் முன்னே வரவில்லை. மேலும், இந்த
ஸந்யாஸி ஹிமாலய பர்வதத்திலிருந்து வந்துள்ளார். இவர்
மௌனி; ஜனங்களின் மத்தியில் வஸிக்க ப்ரியமில்லாதவர். இது
த்ரான் நான் முன்னே வராததற்குக் காரணம்" என்று சொன்
னான். ஸுரேந்த்ரன் அதற்கு "எனினும் இவர் முக்காடிட்டுக்
கொண்டு முகத்தை மூடியிருப்பதைக் காண்பது எனக்கு வருத்த
மும் கஷ்டமுமா யிருக்கிறது" என்று பதில் சொல்லிவிட்டு விலகி
விட்டான்.



பால்யம் முதற்கொண்டு பேச்சுப் பழக்கம் இருந்ததால்
ஸுரேந்த்ரன் கிரிஜாவுடன் இந்த ஸந்தர்ப்பத்தில் பேச ஆசை
கொண்டான். அதற்குத்தகுந்த ஸமயமும் கிடைத்தது வீட்டுக்
குத் திரும்பிப்போக வேண்டுமென்று கிரிஜாவுடன் ஸ்ரீதரர்,
வந்துகொண்டிருக்கும்பொழுது, வழியில் ஸுகுமாரனைக் கண்
டார். ஸுகுமாரனும் ஸ்ரீதரரும் பத்து நிமிஷநேரம் வரை
ஸம்பாஷித்துக் கொண்டிருந்தனர். ஸுகுமாரன் ஸ்ரீதரரிடம்
"உமது பெண்ணை எனக்கு மணம் செய்து கொடுத்தால் நான்
2000 ஸ்வரன்களைத் தந்து உமது நிலங்களையும் மாளிகையையும்
மீட்பிக்கின்றேன். ஆப்கானிஸ்தானத்து அமீரோ உமது குமார
னைக் கொலைசெய்துவிட்டு உமது பணத்தையும் பெற்றுக்கொண்
டான். உமது முன்னோர் வாழ்ந்த நிலங்களையும் நீர் ஏன் இழக்க
வேண்டும்?" என்று சொல்ல, ஸ்ரீதரர் தாம் யோசிப்பதாக உத்த
ரம் அளித்தார்.

இவர்கள் இப்படி ஸம்பாஷித்துக்கொண்டிருந்த அந்தப்
பத்து நிமிஷநேரம், கிரிஜா ஸுரேந்த்ரன் ஆகிய இவ்விருவரால்
வேறுவிதமாகக் கழிக்கப்பட்டது. இவ்விருவரும் தத்தம் மனதி
லிருந்த அந்தரங்க அன்பை வெளிப்படக் கூறவேண்டுமென்கிற
அவாவுடையவர்களாய்ப் பலநாள் காத்திருந்தனர். நல்லஸமயம்
இப்பொழுது கிடைத்துவிடவே, பின்வரும் ஸம்பாஷணை அவர்க
ளிருவருக்கும் நடந்தது.

ஸுரேந்த்ரன்:— கிரிஜா! போய்வருகிறாயா? மஹேசனது
ஆளுகையில் ப்ரஜைகளுக்கு ஒரு க்ஷணம்கூட மனவமைதி கிடை
யாது. நேற்றுவரையில் குற்றமற்றவராயிருந்த உமேசசந்த்ரரை,
மஹேசன் ஏதோ சாக்குவைத்துத் தேசப்ரஷ்டம் செய்துவிட்
டான். உமேசசந்த்ரர் திலீபருடைய ரஹஸ்ய ஸ்நேஹிதர்.......
ஆகவே, என்னுடைய உயிருக்கும் ஹானிநேரிடுமோ என்று
நினைக்கின்றேன்.

கிரிஜா:—நீங்கள் அப்படியெல்லாம் நினைக்கலாகாது. மனித
னால் ஒன்றும் செய்ய முடியாது? அதர்மம் எங்காவது ஸ்திரமாக
நீடித்திருந்ததுண்டா? யோக்யர்கள் முதலில் கஷ்டத்தை யநுப
வித்தாலும், முடிவில் ஸுகத்தையே அடைவார்கள். அந்தக் கஷ்
டமும் விரைவில் ஒழிந்துபோம்.

ஸுரேந்த்ரன்:—நீ சொல்வது முற்றிலும் உண்மைதான், என் தாயார் இறக்கும்பொழுது என்கையில் மோதிரத்தை வைத்து இதனை, நான் என்னை யார் சபலமற்ற உறுதியான மனஸுடன் நேசிக்கிறார்களோ அவர்களிடம் கொடுக்கும்படி சொன்னாள். இதனை நான் உனக்குக் கொடுக்கட்டுமா? நீயே ஸதா இதனைத் தரித்திருப்பாயா" என்று சொன்னவுடன், கிரிஜா மிகவும் வெட்கமுடையவளாய்ப் புன்முறுவலுடன் அந்த மோதிரத்தை வாங்கி உடனே தன் விரலில் அணிந்து, அதனை ஸதா ஸர்வகாலமும் கையிலேயே போட்டிருப்பதாகத் தன் கடைக்கண்களால் ஜாடைக்காட்டிவிட்டுத் தன் தந்தையிடம் போய்ச் சேர்ந்தாள். ஸுரேந்த்ரனுக்குத் தன்னையுமறியாத ஸந்தோஷமும் குதூஹலமும் உண்டாயின. பின்னர் ஸபை கலைந்தது.

மறுநாள் காலை ஸூர்யன் உதயமாயின பின் உதயபுரம் வெகு ரமணீயமாக விளங்கியது. "ஜயவிலாஸம்," காண்பவர் கண்களைக் கவரும் தன்மையதா யிருந்தது. ஸுரேந்த்ரனே அந்த க்ருஹத்திற்குத் தலைவன்; ரொம்ப ஆஸ்திவந்தன். அவன் கீழ், பல ஸேவகர்களிருந்தனர். அவர்களுள் நால்வரே முழு விச்வாஸமுடையவர்களாய், அவனுடைய அன்பிற்கும் தயைக்கும் பாத்ரர்களா யிருந்தனர். அவர்கள், கோவிந்தன், கிருஷ்ணன், முகுந்தன், அபிராமன் என்ற பெயர் படைத்தவர்கள்.

காலையில் குடும்பவேலைகளை முடித்தானதும் ஸுரேந்த்ரன், தான்கிரிஜாவுடன் ஸம்பாஷித்ததையும், தான் அவளிடம் தன் கணையாழியைத் தந்ததையும், அவள் அதனைப்பெற்ற விதத்தையும் ஆகிய இவைகளையெல்லாம் குறித்து யோசனைசெய்து, ஆநந்தக்கடலில் மூழ்கியிருந்தான், அப்பொழுது முகுந்தன் ஸுரேந்த்ரனிருந்த அறைக்குள் சென்று "யாரோ ஒரு ராஜஸேவகன் வந்திருக்கிறான்" என்று சொன்னான். சிறிதுநேரத்துக்குள் ராஜாங்க ஊழியன், ராஜாவின் முத்திரையிடப்பட்ட ஒரு கடிதத்தைக் கொணர்ந்து ஸுரேந்த்ரனிடம் தந்தான். இதற்குள் 'ஜயவிலாஸ' ஸேவகர்கள் யாவரும் ஸுரேந்த்ரனது அறைக்குப் புறமே வந்து நின்றனர்.

ஸுரேந்த்ரன், அக்கடிதத்தைப்படிக்க ப்ரியமற்றவனாய், அதனைக்கொணர்ந்தஸேவகனிடமே கொடுத்து வாசிக்கச்சொன்னான். அவனும் பின்வருமாறு அதனைப்படித்தான்:—"மாட்சிமை



தங்கிய மஹேசமஹா ராஜா, ராஜசபையினரின் அநுமதிபெற்று, "ஜயவிலாஸம்" என்றமாளிகைக்கும் அதனைச்சார்ந்தநாற்பது காணிநிலங்களுக்கும் ஸொந்தக்காரரான ஸ்ரீ ஸுரேந்த்ரருக்குக் கட்டளையிடுவதியாதெனில், ஸ்ரீ ஸுரேந்த்ரர் ராஜவிச்வாஸமுள்ள பரம்பரை; கௌரவமுள்ளவம்சத்தில் பிறந்தவராயிருந்தும், தத்காலம் அவர் ராஜத்ரோஹியாயிருக்கிறார் என்பதும், தேசப்ரஷ்டம் செய்யப்பட்டவர்களை அநுதாபிப்பதுடன் ரஹஸ்யமாக ஸஹாயம்செய்து வருகிறார் என்பதும் தக்கஸாக்ஷ்யங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, ஆகவே, அவருடைய "ஜயவிலாஸமும்" அதன் 40 காணி நிலங்களும் ராஜாங்கத்துக்கு ஸொந்தமாய் விட்டன. அவரும் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார் இந்தக்கட்டளை ப்ரதம நியாயஸ்தலத்தாரால் ஆமோதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டளை பிறந்த 24 மணிநேரத்திற்குள் அவர் உதயபுரியின் எல்லையைத் தாண்டிவிட வேண்டும். இல்லாவிடின் உயிருக்கே ஹானி நேரிடும். இப்படிக்கு மஹேசமஹாராஜா."

ஸுரேந்த்ரன்:—பொய்! பொய்! ஸகலமும் பொய்.

முகுந்தன்:—அநியாயம். இன்னும் மஹேசன் சாகாமலிருக்கின்றானா?

ஸேவகர்கள்:—கொல்லுங்கள் அந்த ஊழியனை எண்டா! நீ அந்தத்தடியனுக்கு உளவாளியோ! முதலில் அவனைப் பைஸல் செய்யுங்கள்.

ஸுரேந்த்ரன்:—ஸேவகர்களே! தாறுமாறாய் உளறாதேயுங்கள். அவன் என்ன செய்வான் பாவம்! நமது வினையை நாம் வெறுக்கவேண்டும். அப்பா! ராஜஸேவகா! நீ சீக்ரமாகப்போய் விடு.

(ராஜாங்க ஊழியன் போய்விடுகின்றான்)

நமதகதியும் இப்படியாயிற்று?

ஸேவகர்கள்:—ஐயன்மீர்! நீங்கள் ஒன்றுக்கும் வ்யஸனப்பட வேண்டாம். உங்களுக்காக நாங்கள் உயிரையும் கொடுக்க ஸித்தமாயிருக்கிறோம், எங்களை நீர் எவ்விதம் வேண்டுமென்றாலும் நடத்தலாம். உங்களுடன் கூட எங்குவரச்சொன்னாலும் வருகின்றோம்.

முகுந்தன்:—கருணைக்கடலே! தர்மாத்மாவாகிய உமக்கு இக்கஷ்டம் உண்டானது ஆச்சர்யமாகத்தா னிருக்கிறது. ஸுகமோ துக்கமோ எதுவந்தாலும் அது ஒருவனது நன்மைக்காகத்தான் என்று நீரே எனக்கு ஒருதரம்சொல்லியுள்ளீர். ஸர்வதயா

பரரான கடவுளிடத்தும், நமது நாட்டின் உண்மை அரசரான திலீபரிடத்தும் அத்யந்தப்ரீதிவைத்துடைய உமக்கு எத்தீமை வரினும், உடனே ஸூர்யனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். ஆதலால் நீர் கவலைப்படவேண்டாம்.

அபிராமன்:—பேரன்பினீர்! இந்த அல்பப்பதரின் ஆஜ்ஞை உதயபுரியின் எல்லைக்குள் தானே! நாம் இதைவிட்டு வேற்றுநாட்டுக்குச் சென்று விடலாமே.

க்ருஷ்ணன்:—ஆம், அங்ஙனமே செய்வோம். நமதுபழைய மஹாராஜாவந்தால் நம்மை மன்னித்துவிடுவார்.

முகுந்தன்:—அன்புடையீர்! இவர்கள் சொல்வதும் வாஸ்தவமே. உதயபுரியைபடுத்துச் சங்கரவனம்என்று ஒருகாடு இருக்கின்றது. அதற்குள் ஒருவன்சென்று விட்டால், அவனையாரும் காணமுடியாதாம். அவ்வளவு அடர்த்தியாக இருக்கிறதாம் அக்காடு. ஆனால் அந்தக்காடு உதயபுரியின் எல்லைக்குள்ளும் சிறிது தூரம்செல்லுகின்றது எனினும் பாதகமில்லை. நாங்கள் தேஹம் வருந்தி உமக்குச்சாப்பாடு அளிப்போம். இதுவரை எங்களைநீர் ஸஹோதரரைப்போல் ரக்ஷித்துவந்தீர். இப்போது நாங்கள் உமக்குக் கைம்மாறுசெய்வோம். யுக்தமானதை நீர் செய்யலாம்.

ஸுரேந்த்ரன்:—அன்பர்களே! உங்களுடைய விச்வாஸம் மிகவும் பாராட்டற்பாலது. முகுந்தன் சொல்லியபடியே இன்று இரவு உதயபுரிக்கு வடக்கேயுள்ள சங்கரவனத்திற்கு நாம் செல்வோம். அதற்குள் க்ருஷ்ணு! கோவிந்தா! நீங்களிருவரும் முன்னேபோய் ஒரு சிறுகுடிசையை, ஜனங்கள் கண்களில்படமுடியாத ரஹஸ்யமான இடத்தில், நிர்மாணம்செய்துவையுங்கள், அநேக வந்தனம்.

உடனே அவ்விருவரும் போய்விட்டனர். ஸுரேந்த்ரன் தனக்கு நேர்ந்த ஆபத்தைச் சுருக்கமாக எழுதி கிரிஜாவிடம் கொடுக்கும்படி முகுந்தனை அனுப்பிவிட்டான். பின்னர்ப் பகவானைக் குறித்து, அவன் அன்றுமுழுதும், பாமாலைகள் பாடி அன்று பகலைக்கழித்தான்.

"ஜயவிலாஸ'த்துக்கு, ஸுகுமாரனுடன், பிறந்த நாள் உத்ஸவத்திற்குவந்த, ஸந்யாஸிவேஷத்துடன் முக்காடிட்டிருந்தவன், மஹேச. ராஜன் என்பதை நமது வாசகர்கள் ஊஹித்தறிந்து கொண்டிருப்பார்களென்று எண்ணுகின்றோம்.

எம். எஸ். ஸ்ரீநிவாஸ. சர்மா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 1915
MADRAS

# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-11 தொகுதி-11 | January ஜனவரி௴ 1916. | No 6. பகுதி-6.

## கூரம்பாயினும் வீரியம்பேசேல்.

நம்மனோர் கல்வி, ஆண்மை, செல்வம், அதிகாரம், சொற்செலவு, உயர்குடிப் பிறப்பு, இல்வாழ்க்கைச் சிறப்பு முதலியவற்றால் மிகச் சிறப்புடையவராயிருப்பினும், அவை காரணமாகப் பிறர் அறிந்தோ அறியாமலோ தமக்குத் தீமைசெய்தவிடத்து, அவர் வருத்தமுறுமாறு தமது மேன்மையைக்கூறி, அவரை யிகழுவாராயின், அவர்க்கது பெருந்தீமையை யுண்டாக்குவதாம். பொறுமையால் மேம்பாடுண்டாவதென்பதை யுணராமலிவர் நமக்கு மாறாயிருக்கின்றனரென்றுணர்ந்து, தமது மேன்மையைக் கூறி, அவரைப்பழிப்பவர் தீமைபலவற்றை யடைந்து சிதைவாரென்பது சிசுபாலன், துரியோதனன் முதலாயினோரது சரித்திரத்தை யுணர்ந்தவர்க்கு நன்குவிளங்குவதாம். சிசுபாலன் தருமபுத்திரர் ராயசூய யாகஞ்செய்தபோது கண்ணபிரானுக்கு அக்ரபூசை செய்ததைப் பொறாமல் தனது மேன்மை புலப்படுமாறு கண்ணபிரானை யிகழ்ந்து பேசினமையால், அவர் பொறுக்குமளவும் பொறுத்திருந்து, பின்னவனைக் கொன்றாரென்பதும், துரியோதனன் பாண்டவர் தனக்கு மாறாயிருக்கின்றனரென்றுணர்ந்து, அவர்களைச் சூதாட்டத்தில் சகுனிவாயிலாக வென்று தனது மேன்மை புலப்படுமாறு இகழ்ந்தமையால், அவர்கள் பொறுக்குமளவும் பொறுத்திருந்து பின்னவனை அவன் புத்திரர் மித்திரர் முதலாயினாரோடுகொன்றனரென்பதும், பாரதத்தில் மிகுபிரசித்தமாமன்றோ? சூதாட்டத்தில் தருமபுத்திரர் நாடுநகர முதலியவற்

னையும், சகோதரரையும், தம்மையும் தோற்றபோது துரியோ
தனன் தம்பையும், தமதுசகோதரரையும், துரோபதையையும்தனது
மேன்மை புலப்படுமா றிகழ்ந்து கூறியதைப் பொறுத்திருந்த
மையை நோக்குமிடத்து யாது விளங்குகின்றது? ஒருவர் தம்
பகைவர்க்குச் செய்யவேண்டியவற்றை வலி காலம் இடமென்பன
வற்றை யறிந்து செய்யவேண்டுமேயன்றி, அவரைத் தமது மேன்
மை புலப்படுமா றிகழ்ந்து கூறுதல் பயனுடையதாகாதென்பது
செவ்வனே விளங்கும்.

“யாகாவா ராயினு நாகாக்க ; காவாக்காற், சோகாப்பர்
சொல்லிழுக்குப்பட்டு-தம்மாற் காக்கப்படுவன வெல்லாவற்றை
யுங் காக்கமாட்டா ராயினும் நாவொன்றனையுங் காக்கக்கடவர்;
அதனைக் காவாராயிற் சொற்குற்றத்தின்கட் பட்டுத் தாமே
துன்புறுவர்” என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்
கூறுவதை நோக்குமிடத்து, ஒருவன் வலி காலம் இடமென்பன
வற்றை யுணராமல் தனக்குமாறாயவரைத் தனது மேன்மை புலப்
படுமா றிகழ்தல் நாகாவாமையி லடங்குவதென்பது விளங்
காமற் போகாது. நாம் நாவடக்க முடையவராகப் பழகிவருவோ
மாயின், “ஆரியக்கூத் தாடினுங் காரியத்திலே கண்” என்னும்
பழமொழிக்கிணங்கக் காரியத்திற் கண்ணாயிருப்போமேயன்றி
நாவடக்கமில்லாது, நமது மேன்மையை உயர்ந்தா ரிழிந்தா ரொத்
தாரென்னு மிம்மூவரிடத்திலும் கூறமாட்டோம். எப்போது
நாம் நமது மேன்மையைப் பிறரிடத்துக் கூறுகின்றோமோ அப்
போதே நம்மிடத்துக் கேடுவர வழிநோக்கி யிருப்பதாம். பிறர்
செய்த குற்றத்தைப் பொறுக்க முடியாதபோதுதான் நாம் அவ
ரை நோக்கி “விட்டேனாபார்; யாரென்றென்னை நீ நினைத்துக்
கொண்டிருக்கின்றாய்? யானுன்னைக் கொல்லவேண்டுமென்று நினை
த்தாலிப்போதே கொன்றுவிடுவேன்” என்றற் றொடக்கத்தனவற்
றைக் கூறியிகழுகின்றோம்; இதனால் வருவது கேடேயாமென்றுண
ராதிருக்கின்றோம். நாமிவ்வாறு கூறுவதால், நமது பகைவர்
விழித்துக்கொண்டு நாமிருக்க வேண்டியவாறிருக்க வேண்டு
மென்றுகருதி, அதற்கேற்றவற்றைச் செய்து கொள்ளுகின்றனர்;
அதனால் நாம் வலி கால மிடமென்பனவற்றை யறிந்து அவரை
வெல்வதுமுடியா தாகின்றது; ஆகலான் நாமெப்போதும் தற்புகழ்
ச்சி யிலலாதவரா யிருக்க முயலுதல் வேண்டும். “தன்னை வியந்து



தருக்கல் - செல்வ முடைக்கும்படை”, “வியவற்க வெஞ்ஞான்றுந்
தன்னை,” “தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர், நன்னீர்
சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை, வியவாமை யன்றே வியப்பா
வது” என்று பெரியார் கூறி யிருத்தலை நன்குணர்வோ மாயின்
எப்போதும் நமது மேன்மையை யெவரிடத்தும் பேசுதற்
குரியவராக மாட்டோம்.

சூரபதுமன், இரணியன், இராவணன் முதலாயினோர் நாம்
கல்வி, ஆண்மை, செல்வ முதலியவற்றால் மேம்பாடுடையவரா யிரு
க்கின்றோமென்று-தருக்குற்று, செய்வதின்னது தவிர்வதின்ன
தென்றுணராது தமது மேன்மையைத் தாமே புகழ்ந்து கூறி,
பழி பாவங்களுக் கேதுவாய செயல்களைச் சிறிதுஞ் சோர்வில்
லாது செய்து வந்தமையாலன்றோ தமதுஉறவினர் மித்திரர் முத
லாயினாரோடு மாண்டனர்? அவர்கள் நாவடக்க முடையவராய்த்
தமது மேன்மையைத் தமக்கு மாறா யிருப்பவரிடத்தும் பேசா
திருப்பாராயின், கேடுறுவது கூடுமோ? கூடாதன்றோ? சீராமர்
சீதா பிராட்டியாரை மணந்து மிதிலைமா நகரினின்றும் புறப்பட்டு
அயோத்திக்கு வரும்போது, தம்மை வந்தெதிர்த்துத் தமது
மேன்மையைக் கூறி யிகழ்ந்த பரசுராமரை நோக்கிப் “பூதலத்
தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும், வேதவித்
தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய், ஆதலிற் கொல்ல
லாகா தம்பிது பிழைப்ப தன்றால், யாதிதற் கிலக்க மாவ தியம்
புதி விரைவில்” என்று பணிவாகக் கூறியதையும், தருமபுத்திரர்
வலிகாலமிட மென்பனவற்றை நோக்கித்துரியோதன் செய்த அவ
மானத்தைத் தம தாற்றலை வெளியிடாது பொறுத்துக் கொண்
டிருந்ததையு மூன்றி நோக்கி வருதல் நமக்கத்தியாவசியக மான
கடமையாம். இக்கடமையை நாம் மேற்கொண்டொழுகி மேன்
மையையடையவேண்டுமென்று கருதியே ஔவைப் பிராட்டியா
ரவர்கள் “கூரம் பாயினும் வீரியம் பேசேல் (உன் கையிலிருப்பது)
கூரியஅம்பேயானாலும் (உன்) வீரத் தன்மையை(எவரிடத்தும் நீ)
பேசா திருக்கக்கடவாய்” என்றருளிச் செய்தனர்.

ஒருவர் தமது வீரத்தன்மையைப் பிறரிடத்துப் பேசுவதற்
குக் காரணம் பேதைமையும் புல்லறிவாண்மையுமாம். பேதை
மையாவது செய்வது தவிர்வ துணராமையாம்; புல்லறிவாண்
மையாவது ஒருவன் தான் சிற்றறிவினனா யிருந்தே தன்னைப் பே

ரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறு முறுதிச் சொல்லைக் கொள்ளாமையாம். இவ்விரண்டுமுடையவனன்றி மற்றவர் தம்மைப் பிறரிடத்து வியந்து கூறுவதின்மையின், நாம் பேதைமையையும் புல்லறிவாண்மையையு மொழிக்கப் பெரிது முயலுதல்வேண்டும். தமக்கு மாறா யொழுகுவாரை வெல்வது வேண்டி வலிகால மிடமென்பனவற்றை யறியாது வெகுண்டுரைப்பவர் உமிக்குத்திக்கை வருந்துவார் போன்றவராவர்; அவர் அதனால் நலமுறுவதிலர்; அவர்க்கு வருவது தீமையேயா மென்பது நமக்கு நன்கு விளங்குமாயின், நாம் கல்வி ஆண்மை முதலியவற்றால் கர்வங்கொண்டு பகைவரொன் றறிந்தவரைப் பழித்துப் பேசி, பழிபாவங்களுக் காளாய் வருத்தமுறுவதில்லையாம். "அடக்க மமரருளுய்க்கும்" என்று திருவள்ளுவர் கூறுவதை மகா வாக்கியமாகக் கொண்டு தமது வீரத் தன்மையை வீணே வியந்து பேசாது வருபவர் நன்மை யென்பனவற்றை யெல்லா மடைவாரென்பதறிந் தொழுகக் கடவுள் நமக்கு நன்மதி தர, அவரைப் போற்றுவோ மாக.

திருக்குறள்—பெருமை.

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை,
யணியுமாந் தன்னை வியந்து"

நாலடியார்—சினமின்மை.

"எல்லாம், ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்,
பொறுக்கும் பொறையே பொறை."

இப்பிரயோகங்க ளிங்கு நன்குணர்தற் பாலனவாம்.

## WONDERS IN NATURE.

## இயற்கை யற்புதங்கள்.

(106ம் பக்கத்தின் தொடர்ச்சி).

நான். மறுநாள் புற்களினருகே சென்று "ஓ புற்களே! நேற்றுப்பகலில் நீங்கள் வாக்களித்தவண்ணம் உங்கள் இனத்திற் சேர்ந்த பிரிவுகளைத் தெளிவாய்ச் சொல்லக் கோருகிறேன்" என்றுகேட்டேன்.



புற்கள். "வாரும் சகோதரரே! வாரும். உங்களைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் கேட்ட விஷயத்தைப்பற்றிச் சொல்லத் தயாராயிருக்கிறோம்; சொல்லுகிறோம் கேளுங்கள். எங்கள் குடும்பத்திற் சேர்ந்த ஜாதிகளையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்துக் கூறுவதாயிருந்தால், எங்கள் ஆயுளும் போதாது; ஆதலால் சங்கிரகமாய்க் கூறுகிறோம். மூங்கில், கரும்பு, சோளம், கம்பு, நாணல், கோதுமை, கேழ்வரகு, நெல், கோரை, கொருக்கு, பேய்க்கரும்பு, முஞ்சம்புல், விழல், அருகம் புல், வரகு முதலியன முக்கியமானவைகளாம். இவையன்றி இன்னும் நூற்றுக்கணக்கான உட்பிரிவுகளும் உண்டு. நேற்றைய சம்பாஷணையில் எங்கள் தேக அமைப்பைப்பற்றித் தங்களுக்குச் சொல்லியிருக்கிறோம்; அஃதாவது 1. மெலிந்து நீண்ட விலைகள். 2. கணுக்கள். 3. கணுத்தோறும் உண்டாகக் கூடிய குச்சுவேர்கள் முதலியன. இந்த லக்ஷணத்தைக்கொண்டு எங்கள் இனத்தை இதர தாவரங்களினின்றும் பிரித்தறியலாம்.

நான். "ஓ புற்களே! நீங்கள் மெலிந்து நீண்ட இலைகளும், கணுக்களும் எங்கள் குடும்பத்திற்குச் சிறந்தகுறி யென்றுரைத்தீர்கள்—தென்னை, பனை, ஈந்து முதலியமரங்களுக்கும் மெலிந்து நீண்ட இலைகள் இருக்கின்றன; வெளிப்பார்வைக்குக் கணுக்கள் போன்ற வளையங்களும் மரத்தில் காணப்படுகின்றன. ஆதலால் அம்மரங்களும் உங்கள் இனத்தில் சேர்ந்தன வென்றே கூறலாமன்றோ?" என்று கேட்டேன்.

புற்கள். "ஓ சகோதரரே! தென்னை, பனை, ஈந்து முதலியவைகளும் எங்கள் இனத்தைச் சேர்ந்தவைகளென்று கூற என்னதடையிருக்கின்றது? அவைகளும் எங்கள் குடும்பத்திற் சேர்ந்தனவே? நீங்கள் மேற்கூறிய லக்ஷணத்தினால் ஊகித்தறிகிறீர்களாவில்லையா வெனத்தெரிந்து கொள்ளுவதற்காகவே யாங்கள் கூறவில்லை." என்று சொல்லின.

நான். "ஓஹோ! அப்படியானால் மெத்தசந்தோஷம். மேலே கூறப்பட்ட உங்கள் இனத்திற் சேர்ந்த ஒவ்வொன்றும் கடவுளின் கிருபைக்கும் பாதுகாப்பிற்கும் பாத்திரமானவைகளென்றே நினைக்கிறேன்." என்று சொன்னேன்.

புற்கள். "ஆம், எங்கள் இனத்திற் சேர்ந்த ஒவ்வொன்றும் கடவுளின் கவனிப்புக்கும் பாதுகாப்பிற்கும் பாத்திரமானவைகளே. இதில் என்ன சந்தேகம்?" என்று வினவின.

நான். "ஓ புற்களே! சந்தேகம் யாதுமின்று. மேலே
நீங்கள் கூறிவந்த வகைகளில் பெரும்பான்மையனவான
தென்னை, கரும்பு, நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, வரகு
முதலியவைகள் மனிதர்களின் உணவுப்பொருள்களாயிருத்தலின்
அவைகள் அவர்களாலேயே கவனிக்கப்பட்டு வளர்க்கப்படு
மன்றோ? ஆதலால் கடவுளின் கவனிப்பு அதிகமாய் வேண்டப்படுவ
தில்லை யென்பதே எனக்குச் சந்தேகம்." என்று சொன்னேன்.

புற்கள்:—"ஓ சகோதரரே! அங்ஙனமன்று. எவ்வளவு தான்
மனிதரால் கவனிக்கப்பட்டு வளர்க்கப்பட்டாலும் கடவுளின் கவ
னிப்பு இன்மையேல் என்னவாகும்? தாங்கள் கூறுவது எப்படி
யிருக்கிறதெனின், குருடன் குருடனுக்கு வழி காட்டுவதை யொ
க்கும். மனிதனை கடவுளின் கவனிப்பை யபேக்ஷித்திருக்க
அவன் மற்றொரு சிருஷ்டிப் பொருளைக் காப்பாற்றத்தக்க அவ்வ
ளவு வல்லமை யுடையவனென்று எப்படி கூறலாம்? தாங்கள்
மனிதரா யிருந்தும் அவ்வாறு கூறுவது சரியன்று. இதற்கொரு
திருஷ்டாந்தம் கூறுகிறோம்; சற்றுக் கவனமாய்க் கேளுங்கள்—
ஒரு காலத்தில் ஒரு மனிதன் கருப்பஞ் செடியொன்றை வளர்த்
தான். கரும்பின் முக்கியப் பிரயோஜனம் அதன் சாறென்று
உங்களுக்குத் தெரிந்திருக்கும். சாற்றிலிருந்து வெல்லம் எடுக்கிறா
ர்களல்லவா? வளர்க்கப்படும் போது மனிதனால் கூடிய வரையில்
கருப்பஞ் செடியானது கவனிக்கப்பட்டு வந்தது. இப்படி யிருக்
கையில் ஒருநாள் எறும்புக் கூட்டங்கள் கரும்பிலுள்ள இனிய
சாற்றிற்கு ஆசைப்பட்டு அக்கரும்பிற்குள் நுழைய யோசித்தன.
வழியேது? கரும்பின் மேலே கடினமான பட்டை யிருக்கிறது;
எப்படி அந்தக் கடினமான பட்டையைத் துளைப்பது? முடியாத
ன்றோ? ஆகையால் ஒருவிதம் தீர்மானித்தன. கணுக்களினின்
றும் எழும் இலைகளின் அடிப்புறத்திலிருந்து நுனிக்குச்செ
ன்று இலையின் மேற்பக்கத்திற் போய் நுனியிலிருந்து அடியை
நோக்கிக் கணுவின் மிருதுவான பாகமாகியஇலை புறப்படும் இடத்
தில் துளைத்துக் கரும்புக்கு உள்ளே சென்று இனிய ரசத்தைக்
குடிக்கலாமென்று தீர்மானித்து இலையின் அடிப்புறமாகவே
நுனிக்குச் சென்றன. நுனியிலிருந்து இலையின் மேற்பக்கமாக
இலை புறப்படுமிடத்திற்கு வரத்திரும்பியபோது கடவுளால் சிரு
ஷ்டிக்கப்பட்ட கோடிக்கணக்கான காவலாட்கள் எறும்புக் கூட்ட



ங்களின் வழியை மறித்தன. "இக்காவலாளிகள்" எவை என்று
உங்களுக்குத்தெரியுமா? கரும்பிலையின் மேற்பக்கத்தில் நுனிப்புற
மாய் வளர்ந்திருக்கும் சிறிய முட்களேயாம். இம்முட்கள் கடவு
ளால் சிருஷ்டிக்கப்படாவிடின், ஒரு கரும்புச் செடியாயினும் மனி
தனுக்கு உபயோகப்படுமென்று நினைக்கிறீர்களா? அல்லது ஒவ்
வொரு கரும்பிலும் எறும்புகள் வரவொட்டாமல் மனிதனால் தடு
க்க முடியுமென்று நினைக்கிறீர்களா? என்று சொல்லி முடித்
தன.

நான்:—"ஓ புற்களே! மிக்க சந்தோஷம். இங்ஙனமே
ஒவ்வொரு வகையிலும் உள்ள முக்கிய விஷயத்தைச் சொல்லக்
கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கேட்டேன்.

புற்கள்:—"ஐயா சகோதரரே! தயவுசெய்து நாளைக்கு வரு
வீராயின் சொல்லுகிறோம்; மன்னிக்கவும்" என்று சொல்லி
முடித்தன. உடனே நாளையதினம் போகலாமென்று திரும்பி
னேன். (தொடரும்)

ந. சுப்பிரமணிய அய்யர்,
திருவெட்டேசுவரன் பேட்டை, சென்னை.

—உயிர்க்குறுதிபயக்கும் சில நீதிமொழிகள்.

(1) திருவாலவாயென்னும் மதுரையின் கண்ணே சமணி
ருள்முடியிருந்த காலத்தில் கூன்பாண்டிய அரசனுக்குற்ற
சூலைநோயைத் தீர்த்தற்பொருட்டுத் திருஞான சம்பந்த மூர்த்தி
சுவாமிகள் எழுந்தருளி திருவாய்மலர்ந்தருளிய மந்திரமாவது
நீறு என்னும் திருநீற்றுப்பதிகத்தை, காலை நண்பகல் மாலை
இம்மூன்றுவேளைகளிலும் பாராயணஞ்செய்து, அத்திருநீற்
றினை, உங்களுடைய தேகமுழுவதும் அணிந்து கொள்ளுங்
கள்.

(2) உலகபந்தபாசங்களுக்கு உரியவராகவுள்ள உங்களுடைய
சுற்றத்தாரினின்றும் பிரிந்து யாவருக்கும் பொதுவாயுள்ள புறந்
திண்ணைகளில் தனிமையாக உட்கார்ந்து சிவயோக நித்திரை
செய்து கொண்டிருங்கள்.

(3) இவ்வுலகத்தார்கண்டு சிரிக்கவும், அவ்வுலகத்தார்கண்டு
உளம்பூரிக்கவும், சிவவேடம் பூண்டு சிவயோக நித்திரையிலிருங்
கள்; சிவபிரான் தமது இரண்டு திருவடிகளையும் தந்து உதவுவர்.

இவ்வுண்மையைக் கருணைபற்றி, நமக்கு உபதேசஞ் செய்த பட்டினத்தடிகள், பாடியிருப்பதை நன்கு சிந்தியுங்கள்.

"ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர் சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வேரீ ருமக்கவர் தாமேதருவ ரிணையடியே."

(4) சிவனடியார்களைச் சிவனென்று பூசியுங்கள்.

(5) சிவபூசை, சிவத்தியானம் என்பனவற்றில் விருப்பம் வையுங்கள்.

(6) இவ்வுலகிலே, ஒருவன் இன்றியமையாது அனுபவிக்க வேண்டிய பெரும்பயன், மேலே கூறியருளிய, சிவனடியார் உறவும் சிவபூசைகளுமேயாம் என்று தெளிமின்கள்.

(7) மான்மழுவேந்திய கரங்களினையுடைய சிவபெருமான் சிவத்தொண்டர்களிடத்தும், அத்தொண்டர் வழிபடும், சிவலிங்கத்தினிடத்தும் எழுந்தருளியிருப்பது சத்தியமென்று உணர்மின்கள்.

(8) உணர்ந்த பின், சிவச்செயல்களை சிவச்செயல்களென, சிந்தையிற்கொண்டு, உயிருக்கு உறுதியைத்தேடுமின்கள்.

(9) இம்மாதிரியாயுள்ள சிவநேசம், சிவபூசைஎன்பனவாதிகளில் மனங்கசியச் செய்வதே மதியெனக்கொண்டு, அன்போடு அவரைக் கைகூப்பித் தொழுங்கள்.

(10) இவைகளுக்குத் தடையாயுள்ள அகங்காரம், கோபம், ஆணவம், பொய், காமம், என்பனவாதிகளை வாதில்வென்று கொல்லுங்கள்.

ஏனெனின், இவற்றின் உண்மைகளை, தம் அனுபவத்தில் வைத்து உலகோருக் குபதேசம் செய்த
பட்டினத்தடிகள் திருவாக்கு பின்வருமாறு ஞானம் போதிக்குமாற்றாற் கண்டுஉணரக் கடவோமாக.

"அடியாருறவும் அரன்பூசை நேசமு மன்புமன்றிப் படிமீதில் வேறுபயனுளதோ"

ரா. சந்திரகாசன்,
தூத்துக்குடி.

## சளி பிடித்த நரி.

"என்றைக்கு மில்லாத இவ்வளவு சலிப்பு இன்று ஏற்படக் காரணம் காண்கிலேன். தேகமுழுதும் திமிர்ப்பாக இருக்கிறது. சோம்பல் அதிகரிக்கின்றது. காலம் சீக்கிரமாகக் கழியவில்லை. ஒரு வேலையிலும் மனது செல்லவில்லை" என்று, ஒருநாள் ஒரு சிங்கம் தனக்குள் சொல்லிக்கொண்டு, கால்களை நீட்டி, கொட்டாவிவிட்டு, வாலைக் கீழே அடித்து, தனது குகையில் தரை மீது புரண்டு கொண்டிருந்தது. பிறகு தன் குடிகளைப் பார்த்து, அவர்களுடன் பேச எண்ணங்கொண்டு, முக்கியமாக இராஜாங்க விவகாரங்களைப் பற்றிச் சம்பாஷிப்பதற்குக் கழுதை, ஓநாய், நரி இம் மூவரையும் வரவழைத்தது.

குறிப்பிட்ட நேரத்தில் நால்வரும் சந்தித்தார்கள். உடனே மிருக ராஜன் தன் வீட்டிற்கு வந்தவர்களுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து, அவர்களுக்குத் தன் அரண்மனை முழுதும் காண்பிக்க விரும்பி, அவர்களை அழைத்துக்கொண்டு, களஞ்சிய சாலை, பண்டகசாலை, போஜன சாலை முதலிய சாலைகளில் சென்றான். குகை மிகவும் அழகாகவும், செழிப்பாகவும் இருந்தது. ஆனால் அதனுள் உலாவும் துர்க்கந்தம் சகிக்க முடியாதிருந்தது. எங்குப் பார்த்தாலும் எலும்புக் குவியல்கள், அழுகிப்போன மாம்சத் துண்டுகள், ரோமக் குவைகள் இவற்றினின்று ஒரு அருவருப்பான துர்நாற்றம் எழும்பி வெகுதூரம் வீசிற்று.

வந்தவர்களுக்கு அரண்மனையின் ஸகல பாகங்களையும் காண்பித்துவிட்டு சிங்கமானது அவர்களை வாசலில் உட்காரச்செய்து, தானும் அமர்ந்து, தீனி வழங்கிற்று. சாப்பிட்டான பிறகு ராஜா முதலில் கழுதையைப் பார்த்துச் சொன்னதாவது:—

"என் சிங்காரக் கழுதையே! என்னுடைய வீட்டைப்பற்றி என்ன நினைக்கிறாய்? உண்மை பேசுவாய்". கழுதை:—மஹாராஜா! என்னை ஒரு பொருட்டாக எண்ணி என்னுடைய அபிப்பிராயத்தைக்கேட்டது எனக்குக் கௌரவமே. அதற்கு நான் அருகனல்லன் ஆயினும் நீர் உண்மையைக் கேட்கிறபடியினால், ஒரு கிழக் கழுதையும் தன் அபிப்பிராயத்தைச் சொல்லத் துணிந்தது; கேளும்; உம்முடைய அரண்மனையும், அதனுடைய செல்வமும் புகழத்தக்கன. சாலைகளை அழகாகவும், ஒழுங்காகவும் அமை

திருக்கின்றீர். எனக்கு மிகவும் சந்தோஷம்; ஆனால் இங்கு ஒரு கெட்டக் காற்று, அழுகிப்போன வஸ்துக்களின் துர்நாற்றம் வீசுகின்றன. கொலை நாற்றம்.

சிங்கம்:—"ஆஹா! அபாண்டமான பொய் பேசுகிறாய். என் வீட்டில் துர்க்கந்தம் அடிக்கிறதென்று எங்ஙனம் சொல்லத் துணிந்தாய்? உன்னுடைய மதியற்ற துணிவுக்கு இதுதான் தண்டனை" என்று சொல்லிக்கொண்டே அதன்மேற் பாய்ந்து அதனைக் கொன்று போட்டது.

பிறகு ஓநாயைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லிற்று.

"பொய்யாக அவதூறு பேசுகிறவர்களை எங்ஙனம் சிக்ஷிக்கிறேன் என்பதைப் பார்த்தனையா? இப்போது நீ உண்மை பேசுவாய். உன் அபிப்பிராயம் என்ன?"

"மஹாராஜா" என்றது ஓநாய் கொஞ்சம் வருத்தத்தோடு; கழுதைக்குப் புத்தியில்லை; பைத்தியம்; துர்க்கந்தம் பைத்தியம்; உம்முடைய வீட்டிலும் துர்நாற்றம் அடிக்குமா? உம்முடைய அரண்மனையில் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றன. ஆஹா! என்ன வாசனை! என்ன சுகந்தம்! நல்ல மல்லிகையின் மணமல்லவோ இங்கு வீசுகின்றது."

"அங்ஙனமா!" என்றது சிங்கம். "நல்ல வாசனையா! சரி! அயோக்கிய நய வஞ்சகா! உன்னுடைய இச்சக வார்த்தைகளின் பலனை அநுபவிப்பாய்" என்று சொல்லிக்கொண்டே அதனைக் கிழித்தெறிந்து போட்டது.

கடைசியாக நரியைப்பார்த்து:—"என்னுடைய பிரியமுள்ள நரியே! என்னுடைய நியாயமான தீர்ப்புகளைக் கண்டாயே; நீ என்ன நினைக்கிறாய்? நான் அவதூறான பொய் வார்த்தைகளையும், இச்சகப் பேச்சுகளையும் எங்ஙனம் ஏற்கிறேன் என்பது தெரிந்ததா? சரி! நான் ஒரு தர்மராஜா. சத்தியந்தான் எனக்கு முக்கியம். இப்போது உன் அபிப்பிராயத்தையும் தெரிவிப்பாய்

சிங்கத்தின் வார்த்தைகளைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த நரியானது பலமுறை இருமிக்கொண்டும், தும்மிக்கொண்டும், மூக்கைத் தரை மீது தேய்த்துக்கொண்டும் பின்வருமாறு மறுமொழி கூறினது.



"உதார குணமுள்ள பிரபுவே! உம்முடைய அதிகாரத்தையும், கௌரவத்தையும் மெச்சாதவர்கள் எக்காட்டிலும் இல்லை. நீரோ மிகவும் பலவான்; உம்முடைய தீர்ப்புக்கள் விவேகமுள்ளன. அவற்றில் நியாயம் நிறைந்து ததும்புகிறது. கழுதைக்கும், ஓநாய்க்கும் தகுந்த தண்டனை தான் விதித்தீர். இப்போது நான் என்ன நினைக்கிறேன் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறீர் அல்லவா? நான் உண்மையே பேசுவேன். உம்முடைய அரண்மனைக்குள் எல்லாம் அழகாகவும், சுகமாகவும் இருக்கின்றன. மிகவும் விலையுயர்ந்த கட்டடம்; செல்வம் நிறைந்த மாளிகை. ஆனால் அங்குள்ள வாசனையைப்பற்றி என்றார். நிர்ணயிக்க இன்று முடியாது ஏனென்றால்...அச்...அச்...அச்...அச் எனக்குச் சளி பிடித்துக்கொண்டிருக்கிறது.

N. Subramanya Iyer,
புதுவை.

## சுகத்தெளிவுரை.

### கடவுள் வழிபாடு.

(முன்தொடர்ச்சி.)

"கடவுள் ஸர்வ வியாபகர்" என்று மனிதன் தன் நாவினாற் சொல்கின்றானே தவிர, அவனுடைய இருதயத்திற்கும் உண்மைக்கும் வெகு தூரம். மெய்ம்மொழிகளை அவன் வாக்கினாற் சொல்வானாயினும் அவற்றிலடங்கிய உண்மையை விவேகத்தோடங்கீகரிக்கின்றானில்லை. மனவமைதியோடும் தெளிந்த வுணர்வோடும் எல்லாரும் கடவுளுடைய ஸர்வ வியாபகத்வத்தில் அழுந்தித் தியானிக்கக் கடவர். உள்ள பொருள்கள் ஜீவர்களாயினும் ஜீவனற்றவையாயினும், அவற்றில் ஒவ்வோரணுவிலும் கடவுட்டன்மை முழுதும் வியாபித்திருக்கின்றது; ஏனெனின் அவர் ஒருவராயும் அகண்ட சொரூபியாயுமிருக்கின்றார். சிறிது பெரிதென்னுந் தாரதம்மியமின்றிச் சகல பொருள்களிலும் ஸர்வ வியாபகரான கடவுளானவர் குடிகொண்டிருக்கின்றாரென்று மனிதர் பிரஸ்தாபிக்கின்றனர். ஏனென்றால், அவர்கள் இப்பொருள்கள் கடவுளுக் கந்நியமாய் நின்று விளங்குகின்றன வென்று கொள்ளுகின்றனர். ஆனால், நாம் உணர்வை யூன்றி, பொருள்கள் நமக்குப் புலப்படுதற்குக் காரணமாயிருக்குங் குணங்கள், விசேஷணங்கள்

ரூபங்கள் என்றிவைகளைப் பிரித்து விடுவோமாயின் அங்கிருப்பது (அவற்றிற்கெல்லா மாதாரமாயிருப்பது) கடவுளேயென்றறிவோம். விசேஷணங்களும் ரூபங்களும் உணர்வாற் பிரிக்கப்பட்ட போதினும், பிரிக்கப்படும் ஆதார வஸ்துவினின்றும் வேறிருப்பு அவற்றிற்கு வாஸ்தவத்தில் இல்லை. மண்ணை யோராதார ஸத்தாக எடுத்து நோக்குவோமாயின், அரண்மனைகள் - பலவித பண்டசாலைகள் - கடைத்தொகுதிகள் - கோட்டை கொத்தளங்கள் - பானை பாண்டங்கள் என்றிவை யெல்லாம் ரூப விசேஷணங்களாற் பேதப்பட்டிருப்பினும், உண்மையில் மண்ணொழிய வேறொன்றில்லையெனக் காண்போம். ரூபங்களும் விசேஷணங்களும், ஆதார ஸத்தினுமேலே அந்த ஸத்தோடொன்றி விளங்குவனவா யிருக்கின்றமையின் உணர்வினாற் கற்பிக்கப்பட்டவைக ளாகின்றன. இவை நிற்க, உங்கள் கண்களை யகத்தே திருப்புவீர்களாயின், அக்கண் அல்லது உணர்வு அது சம்பந்தப்பட்டிருக்கும் ஸத்தினது குணம் அல்லது சக்தி மாத்திரமா யிருக்கின்றதென்றும், ஆதலால், அவ்வுணர்வு அந்த ஸத்தோ டைக்கியமானதென்றும் அறிவீர்கள். மெய்க்காட்சியினால், ஸர்வ வியாபகராகிய கடவுள் இடையறாது தரிசிக்கப் படுகின்றனர்; எல்லாப் பொருள்களும் அவரின் வேறாயும் ஆயினும் அபேதமாயும் காணப்படுகின்றன. ஆச்சரியமடையும்படி நாநா விதமாய்த் தோற்றுமிப் பிரபஞ்சத்தின் கண், எவ்விடத்தும் ஒரே கடவுள் தரிசிக்கப் படுகின்றார். ஒன்றாய் அகண்டிதமாயுள்ள பரம்பொருளினுடைய ஸர்வ வியாபகத்வம் ஒரு பொழுதும் காட்சியை விட்டு மறைவதில்லை. இங்கே ஒரு சந்தேக முண்டாகலாம். அஃதாவது எல்லாப் பொருள்களிலும் யானென்று வழக்கிற் சொல்லு மென்னுடைய அறிவிலுங் கடவுளே யிருக்கின்றார். இவைகள் கடவுளிடத்தே யிருக்கின்றன; கடவுள் ஸர்வ சக்திமான் என்னில், ஒவ்வொரு பொருளினின்றும் எல்லாப் பயன்களையு மடைதல் ஏன் ஸாத்தியப் படவில்லை? மணலி விருந்து எண்ணெயும், பனிக்கட்டியி விருந்து சூடும், அக்நியி விருந்து குளிர்ச்சியும் பெற நாம் ஏன் வலியற்றவர்களா யிருத்தல் வேண்டும். நம்மைப் போன்ற ஜீவர்களிடத்தில் மட்டும் நட்பை விரும்பி, அவர்கள் சரீரத்துக்குக் காரணமா யிருக்கிற மண்ணிடத்து ஏன் அதை விரும்புகின்றோ மில்லை? இந்தச் சந்தேகம் மெய்க்காட்சி யில்லாதபோது மட்டுமே நிகழத்தக்கது. ஏனென்றால், எல்லாப் பொருள்களும் இருக்குந் தன்மையில் அபேதமாயி



னும், குணங்கள், விசேஷணங்கள், ரூபங்கள் என்றிவற்றில் அபேதமானவைகளல்ல. எல்லாம் வல்ல கடவுள், ஒவ்வொரு பொருளினின்றும் எல்லாப் பயனுமடையக் கூடாத விதத்தில் தமது சக்திகளை வெளிப்படுத்தி யிருக்கின்றார்; கடவுள் எல்லாம் வல்லவராயின், அவர் தம்முடைய சக்தியை எப்பொழுதும் எவ்விடத்தும் காட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்னும் நியதிக்குட்பட வேண்டிய தவசியமன்று. ஸர்வ சக்தித்வத்தில், அவர் தமது சக்தியை யெப்படி யுபயோகிக்கின்றாரோ அப்படி யுபயோகிக்கும் வல்லமையும் அடங்கியே யிருக்கின்றது. அவரது ஸர்வ வல்லமை ஒரு சக்தியேயன்றி பாரமன்று. கடவுளானவர் தம்முடைய ஸர்வ வல்லமையில், பனிக்கட்டியிற் சூடுகாட்டுவதற்கு வேண்டிய சக்தியை யடக்கி விட்டு அதனை அக்நியில் வெளிப்படுத்தி யிருக்கின்றார். இதே மாதிரியாக உயிர்ப்பு விழிப்புக்கட்குரிய அவரது சக்தி, கல்லிடத்து உறங்கி, மனிதனிடத்து நன்றாக விழித்திருக்கின்றது. உயிருள்ளனவும், உயிரில்லாதனவும் இருக்குந் தன்மையில் வேறு பொருள்களாகாது ஒன்றேயா யிருப்பினும் குணரூபங்களில் அவை பேதப்படுகின்றன; உயிருள்ளதாய் விளங்குங் கடவுளே உயிரில்லாத தாயும் விளங்குகின்றார். எவ்வாறெனில், ஜாக்ரத்திலும் ஸ்வப்நத்திலும் (விருத்தியினால்) விகசித்திருக்கும் உங்கள் பிரஜ்ஞை ஸுஷுப்தியில் விருத்தியின்றிச் சங்கோசித்திருப்பது போல, கடந்த பொருளா யிருக்கின்ற கடவுளே காட்சிப் பொருளாயு மிருக்கின்றார். கடவுள் தம்முடைய ஸர்வ வல்லமையை எவ்விடத்து எப்பொருளிலும் வெளிப்படுத்தின ரல்லராகலான், காரிய ஸாத்தியத்திற்கு அநுகூலமான விஷயங்களை அறிந்து செய்தல், பகுத்தறிவுடைய ஜீவர்க்கெல்லாங் கடனாகும். நீங்கள் தாகம் வந்தால் ஜலத்தைக் குடிக்கின்றீர்கள். குளிரா யிருந்தால் அக்நியிற் போய்க் காய்கின்றீர்கள்.

நீங்கள் கடவுளையடைய ஆசிப்பீர்களாயின், இவ்வாசையைத் திருப்தி செய்யலா மென்னும் நம்பிக்கை அவருடைய சங்கற்பத்தையே யாதாரமாகக் கொண்டிருக்கின்றது. நாம் கடவுளைப் பெறலா மென்று நம்பி யிருக்கின்றோம். ஏன்? மனிதற்கு அந்தப் பேறே கதியெனக் கடவுள் விதித்திருக்கின்றார். ஆதலால், அக்காரிய ஸித்திக்கென்று அவர் நியமித்திருக்கும் மார்க்கத்தில் நம் மனத்தைத் திருப்புதல் அவசியம். கடவுளுக்கு இருவகை நிலைகளுள்ளன; ஒன்று மனம் வாக்கிரண்டையுங் கடந்தது; அங்கே

செயலொன்றுங் கிடையாது; மற்ற அவர் ரூபத்தோடு வெளிப்பட்ட அவசரம், அதுவே பிரபஞ்சம். அவர், தம்மை நமக்குத் தந்து மோக்ஷத்தை யளித்தல் பிந்திய நிலையிற்றான் ஆதல் வேண்டும். ஏனென்றால், அதீத நிலையிற் செயலொன்றும் நடைபெறாது. இந்தப் பிரகாரமாக மோக்ஷம் அல்லது கடவுட்பேறு என்று சொல்லப்படும் மாறுதலை நமக்குள் தோற்றுவித்தற்குக் காரணமாவதொன்று பிரபஞ்சத்தி லுளதாதல் வேண்டும். உண்மையைப் போதிக்கும் ஆசாரியர்கள், மாந்தர் நடுவுட்டோன்றி, ஜனசமூகங்களால் தீர்க்கதரிசிக ளென்றும் அவதாரங்களென்றும் ரிஷிகளென்றும் வழங்கப்படுகின்றனர். இவ்வுருவங்கள் கொண்டுதானா கடவுள் நமக்குப் பரப்பிரசாதத்தை யளிக்கின்றார். இந்தக் குறிப்பிட்ட மநுஷர்களை வழிபடுவதனால் நமக்குக் கடவுட் பேறு கைவருமா? அல்லது மோக்ஷம் பெறல் வேட்டு ஸர்வ வியாபகப் பரம்பொருளைத் தான் வழிபட வேண்டுமா? வர்க்கம், சாதி, குடும்பம், பாலியபழக்கங்கள் என்றிவற்றால் மேற்கொண்டதூர் அபிப்பிராயங்களை யறவொழித்து விட்டு, சொல்லிய விஷயத்தைக் குறித்து ஆலோசித்து உண்மையைக் கிரஹித்துக் கொள்வீர்களாயின், முக்காலத்தினும் காலாதீதத்தினும் ஆனந்தம் உங்களுடையதேயாகும். நுரை திரை குமிழிகள் சமுத்திரத்தினகத்தில் தோன்றி மீட்டுஞ் சமுத்திரத்தே சென்றடைதல் போல தீர்க்க தரிசிகள் அவதாரங்கள் ரிஷிகளெல்லாரும் கடவுளிடத்தே பிறந்து கடைசியாக அவரிடத்தேயே யொடுங்கியுபசாந்தி யடைகின்றனர். அந்நியபதார்த்தமாய்,ஒன்றும் நித்தியமாயிருத்தலில்லை; மிக இழிந்தோரும், மிக உயர்ந்தோரும், அதிதரித்திரரும், அதி யைசுவரியவான்களும், அதி சுத்தர்களும், மிக அசுத்தர்களும், அதி புத்திமான்களும், அதி மூடர்களும் கடவுளிடத்தே யுற்பவித்து மீட்டும் அவரிடத்தே பூர்ணமாய்ப் புகுந்து ஒடுங்குகின்றனர். கடவுளானவர் தமது சங்கற்பத்தால் அவருடைய சரீரமாகப் பாவிக்கப்பட வேண்டிய இப்பிரபஞ்சமாகியும், யாதொரு மாறுதலு மின்றி அகண்ட சொரூபராய் ஏகராகியும் எல்லாமாயு மிருக்கின்றார். அவர் இப்பொழுது எதுவா யிருக்கின்றாரோ அதுவாயே என்றென்று மிருக்கின்றார். நுரை திரை குமிழ் யெல்லாம் ஒரே பொருள்தாமே. ஒரு குமிழி எவ்வளவு பெரிதா யிருந்தாலும் மிகச்சிறிதா யிருக்கிற மற்றொரு குமிழியைக் காக்கும் வல்லமை யதற்கில்லை. குமிழி பெரிதாயினும் சிறிதாயினும் அதனைத் தன்



னோடொன்றாக்கி அதற்கு அமைதியைக் கொடுக்கும் வல்லமை சமுத்திரத்திற்கே யுள்ளது. எவனாவது ஒரு விசேஷ புருஷனை வழிபடுவதனால் ஆத்மார்த்த லாபம் சிறிதும் பெறமுடியாது. ஞானைசுவரியமுடைய இம்மஹான்கள் சரீரத்தோ டிருக்கும் வரை அவர்க ளுபதேசங்களை அன்போடும் வணக்கத்தோடும் நாம் கேட்டல் வேண்டு மென்பது கடவுளுடைய கருத்து. ஆதலால் நம்முடைய கடமையும் அதுவே. ஆனால், அவர்களுடைய ஜீவகாலத்திற்குப் பிறகு அவர்களைத் தனித்து வணங்குவது ஆத்மார்த்தவழுவாகும். சாதாரணமாய் உத்தேசிக்கப் படுவதுபோலவே உண்மையும் இருக்குமாயின், பூமியில் இத்தகைய புருஷர்கள் பிரவாகம் போல வந்து கூடி யிருத்தல் அமையும். இப்பிரபஞ்சமாயும், பிரபஞ்சாதீதமாயும், ஸகுணமாயும், நிர்க்குணமாயும், அகம்புறமென்னு மிரண்டிடத்து ஒளியாயும் விளங்கா நின்ற ஸர்வ வியாபக நித்திய பாவஸ்துவே வணங்கத்தக்கது. ஈடேற்றமாகிய ஜீவபர வைக்கியத்திற் கேதுவான ஒளியைத் தருபவர் அவரன்றி யில்லை. ஆனால் ஸர்வ வியாபகராகிய கடவுளை வணங்குவ தெப்படி? அதீத வஸ்துவானது இந்திரியங்கள் மனம்வாக் கென்பவற்றிற் கப்பாலா யிருக்கின்றது. மௌனத்தின்வைப்பான நிர்க்குண தெய்வத்தை இத்தன்மைய தென்றுணர்வதே யல்லாமல் வணங்க முடியாது. பிரபஞ்சத்திற்குப் பிரஞ்ஞை யில்லாதது போலவே அவருக்கும் பிரஞ்ஞையில்லை யென்று மாந்தர் சொல்லுகின்றனர். ஆதலாற் கடவுள் வழிபாடு அஸாத்தியம். ஏனென்றால் அதீத நிலையில் செயல் நிகழ்தற்கு வேண்டிய சக்தியில்லை; பிரபஞ்ச நிலையில் பிரஞ்ஞையில்லை. இங்கே எழுப்பிய ஆசங்கை தோற்ற மாத்திரையே யன்றி வாஸ்தவமானதன்று. கடவுளுக்கு ஸர்வ வியாபகத்வம் உளதாகலின், மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் பிரஞ்ஞை எவ்விடத்தும் இருக்கின்றது. ஏனென்றால் பிரஞ்ஞை யென்பது பரம்பொருளி னின்றும் பிளவுபட்ட தொன்றன்று; கடவுளினுடைய இந்தச் சக்தி அல்லது நிலை அடங்கி யிருக்கும் பொழுது அஃதாவது வெளிப்படா திருக்குமாயின், அப்பொழுது பிரஞ்ஞை யில்லை யென்கிறோம். வெளிப்படும் பொழுது பிரஞ்ஞை யுண்டென்கிறோம். பிரஞ்ஞையும் பிரஞ்ஞை யின்மையும் வேறு வகைப்பட்ட நிலைகளின் பெயர்களே யன்றி வெவ்வேறு வஸ்துக்கள் அல்லது இருக்கைகளின் பெயர்கள் அல்ல.

ஒரே ஜீவன் அஃதிருக்கும் நிலைக்குத் தக்கபடி பிரஞ்ஞையுடையதாயும் பிரஞ்ஞையில்லாததாயு மிருக்கின்றது. இவ்விதமாய், பிரபஞ்சத்து ளடங்கிய சக்தி குணங்களெல்லாம் முடிவில் அவருடையனவே யாகும். இந்தச் சக்திகளைப் பிரயோகிப்பதனால், கடவுள் நம்மகத்துள்ள வற்றிற்கும் புறத்துள்ளவற்றிற்கும் இறைவராகின்றார். எல்லாப் பொருள்களையும் கடவுளுடைய சக்தியாகவோ குணங்களாகவோ பாவித்தால், பிரஞ்ஞையுடைய தெது? பிரஞ்ஞையில்லாத தெது என்னும் விசாரணை பயனற்றதாகின்றது. நாம் ஆலோசிக்க வேண்டியதெல்லாம், விரும்பப்பட்ட காரியம் ஸித்தியாகச் செய்யத்தக்க சக்தி யெதுவென்று பார்ப்பதேயாம். நம்முடைய இந்திரியங்களுக்கு விரைவில் பிரத்யக்ஷமாகக் கூடிய ஸ்தூலபதார்த்தங்களுள் உஷ்ணம் என்று சொல்லப்படும் ஒரு திரவியம் அல்லது சக்தியே பிரகிருதி தத்துவத்தின் விகாரங்களனைத்தையும் உண்டாக்குகிறதை நாம் காண்கிறோம். இவ்வாதார சக்தியின் அதிஸ்தூல ரூபம் அக்கினியாம். அக்கினியினுடைய உதவியின்றி, ஒரு பதார்த்தமும் ஸ்தூல நிலையிலிருந்து ஸூக்ஷ்ம நிலைக்குப் போவதில்லை. அக்கினியினுள் இடம்பட்ட ஒவ்வொரு பதார்த்தமும் அதனுடைய சொந்த சுபாவம் அல்லது நிலையை விட்டு அக்கினியாகிப் பின்பு படிப்படியாய் இந்திரியங்களது காட்சிக்குப் புலப்படாமல் மறைகின்றது. பிரகிருதி தத்துவ முழுதுஞ் சோதித்துப் பார்ப்போமாயின் சக்திக்கெல்லாம் மூலகாரணமான அல்லது மாறுதல்களை யெல்லாம் உண்டாக்குஞ் சக்தியானது நம்முடைய இந்திரியங்களாலே கற்பிக்கப்படும் உபாதிகளோடு விளங்கும் பொழுது சூரியனா யிருக்கின்றதென்றும் எண்ணிறந்த சூரியர்களும் அவ்வொரு சக்தியினது வெளிப்பாடுகள் அல்லது தோற்றங்களாயேயிருக்கின்றனவென்றும் அறிகின்றோம். இந்தச் சக்தி யில்லாமல் ஒருவிதமான விகாரமும் உண்டாக முடியாது. எத்தகைய விகாரங்களும் இதனாலேயே யுண்டாகின்றன. உயிருள்ளனவும் உயிரில்லனவும் சூரியனுடைய செயலினால் அல்லது பிரேரகத்தினால் தத்தந் தொழில்களை நிறைவேற்றி யொன்றற்கொன்று ஆஸ்பதமா யிருக்கின்றன. இருதயத்தினுடையவோ, சுபாவத்தினுடையவோ, அல்லது அறிவினுடையவோ மாற்றமாகின்ற கடவுட் பேறு ஸாத்தியமாயின், அதுவும் இதே காரணத்தினால் உண்டாகவேண்டும். ஏனென்றால், வேறொன்றுக்கும்



விகாரமுண்டாக்கும் சக்தி கிடையாது. அக்கினியானது பொருள்களை ஸ்தூல நிலையிலிருந்து ஸூக்ஷ்ம நிலைக்குக்கொண்டுபோவதுபோல, சூரியனென்று சொல்லப்படுஞ் சக்தியானது இந்திரியக் காட்சிக்குட்படும் பொருள்களின் முன்னிலையிற் சலிக்கும் மனத்தினால் உண்டாகும் பந்தத்தி லிருந்து அங்ஙனம் சலியாத மனத்தினால் அடையப்படும் நிலையாகிய மோக்ஷம் அல்லது கடவுட் காட்சிக்கு நம்மைக் கொண்டுபோகின்றது. இந்தப் பிரகாரமாகக் கடவுள், தம்மோ டபேதமாயிருக்கின்றதும் மனிதர்களாற் சூரியனென்று சொல்லப்படுகின்றதுமான தமது சக்தியினால் நம்மை வீடடைவிக்கின்றார். நம்முடைய இந்திரியங்களுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்ட கடவுள் அத்தகையராயினும் இக்காரணத்தை முன்னிட்டு ஸர்வ வியாபக சக்தியாகிய சூரியனாக வெளிப்பட்டிருக்கின்றனர். சாதாரணமாய் மாந்தர், சூர்யனை ஒருபெரிய ஜோதியண்டம் என்பர். ஆயினும் அளவிடக் கூடிய தென்றும் எண்ணுகின்றனர். நல்லது, சூரியனென்று சொல்லப்படும் சக்தி எவ்விடத்தும் எப்பொருள்களிலும் வேலை செய்கின்ற தென்பதை அவர்கள் பரியாலோசிப்பார்களாயின் சூரிய சப்தத்தால் ஜனங்கள் கிரஹிக்கும் வஸ்துவானது கடவுளுடைய வியாபக சக்தி வெளிப்பாட்டின் ஒரு கிரணமாயும் ஸ்தூலத் தோற்றமாயும் இந்திரிய கற்பிதமாயும் இருக்கின்ற தெனக் காண்பார்கள். ஜீவவந்தனாய் புத்திமானா யிருக்கும் மனிதனுக்குக் கண் எப்படியோ, அது போலவே பிரபஞ்சத்திற்குச் சூரியனுமாகின்றது. ஓர் அரசனுக்கு வழிபாடு செய்ய உங்களுக்கு இஷ்ட மிருந்தால் நீங்கள் அதனை அவன் கண் முன்னேயே செய்கின்றீர்கள்; அப்படியே, நீங்கள் கடவுளை வழிபட விரும்புவீர்களாயின், கடவுளுடைய சரீரமாய் விளங்கும் பிரபஞ்சத்திற் கண்ணாகிய சூரியன் முன்னிலையிற் செய்யவேண்டும். நமக்குப் பிரஞ்ஞையா யிருக்கின்ற சக்திதானே நமக்குப் புறத்திற் சூரியனா யிருக்கின்றது. அது பிரகிருதி தத்துவத்தில் உஷ்ணம் ஜோதி பிராணன் முதலான பல விதமான நாமங்களால் அழைக்கப் படுகின்றது. தன்னொரு நிலை எல்லாவற்றையுங் கடந்து நிற்குந் தன்மையதாகிய ஸர்வ வியாபக பரம்பொருளின் இத்தோற்றத்தை யுணர்ந்து அன்பு பக்தி சத்தியம் என்பவற்றோடு பூரணமாய் நாம் கடவுளை வழிபடுவோம். அவர் மனிதராற் சூரியனென்று சொல்லப்படுஞ் சக்தி ரூபத்தில் நின்று தம்மை நமக்கு அருளிமுத்தியை வருவிப்பார். ஓம் சாந்தி.

பரசாந்தி யுங்கட்க்கெல்லாம் பலிக்கக்கடவது.

## ராமாயணச் சுருக்கம்.

அயோத்தியை அரசாண்ட சூர்யகுலத் தரசரில் தருமநெறி தவறாது உலகமெங்கும் புகழோங்க அறுபதினாயிரம்வருஷம் செங்கோல் செலுத்திவந்தவர் தசரத சக்ரவத்தியாவர். அவர் புத்திரப் பேறில்லாது, புத்ர காமேஷ்டியாகஞ் செய்து, 4 புத்ரர்களைப் பெற்றனர். அவர்களுள் மூத்தவர் ஸ்ரீராமர். அவர்க்கு யுக்த வயது வந்த காலத்தில் யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைக்க, பூபதியாகிய தசரத மகாராஜன் எத்தனித்தான்.

இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போவதையறிந்த தசரதரின் பத்தினியாகிய கைகேயி, தான் முந்தி அவரிடம் பெற்றிருந்த இரண்டு வரங்களின்படி, ஒன்றால் இராமரை வனத்துக்கு அனுப்பவேண்டுமென்றும், ஒன்றால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டும் என்றும் அவரிடம் வேண்டிக் கொண்டாள். தசரதர், தருமமாகிய கயிற்றால் கட்டுண்டு, சத்தியமான சொல்லைக்காப்பாற்றும் பொருட்டுக் கைகேயியின் கருத்துக்கிணங்கி, இராமரை வனத்துக்குச் செல்ல உத்தரவு கொடுத்தார். மகாவீரனாகிய இராமன் கைகேயிக்குத் தமது தந்தை செய்த பிரதிக்ஞையைக்காப்பாற்றுவதற்கும், தந்தைவாக்கியப் பரிபாலன நிமித்தமும், கைகேயியின் திருப்திக்காகவும் வனம் செல்லப் புறப்பட்டார். இராமபிரான் வனஞ்செல்லப் புறப்படுவதைப் பார்த்ததும், சுமித்திரைக்கு ஆனந்தத்தை விருத்திபண்ணுகிறவரும், வணக்கத்துடன் கூடினவரும், தமையனாகிய இராமருக்கு அன்புடையவருமான இலட்சுமணர், ஒரு தம்பி தன் தமையனிடம் இம்மாதிரி இருக்கவேண்டுமென்பதை உலகத்தாருக்கு உணர்த்துவதன் பொருட்டு, அவரோடு தாமும் வனத்திற்குச் செல்லப் புறப்பட்டார். இதையறிந்ததும், இராமபிரானின் ஆருயிர்போலுள்ளவளும், ஜனகபுத்திரியும் அவதாரமாகிய மோகினிபோல் சகல இலட்சணங்களு மமைந்தவளும் ஸ்திரீகளுக்குள் உத்தமியுமான சீதாபிராட்டி, உரோகிணி சந்திரனை யனுசரிப்பதுபோல், இராமரை அனுசரித்து அவருடன் வனஞ்செல்லச் சித்தமானாள்.

பிறகு இராமர், சீதை, தம்பி இலட்சுமணர் இவர்களையும் அழைத்துக்கொண்டு வனமேகினர்; பட்டணத்தாரும், சுமந்தி



ரர் முதலிய மந்திரிமார்களும், தந்தையாகிய தசரதரும் பந்துக்களும் அவரைப் பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றார்கள். கங்காநதிக்கரையிலுள்ள சிருங்கபேர பட்டணத்திற்குச் சென்றதும் தருமசீலராகிய இராமபிரான் வேடர்களுக்கு வேந்தனாகிய குகனையடைந்து, சுமந்திரர் முதலானவர்களை விட்டுப் பிரிந்தார். இராமபிரான் சீதா இலட்சுமணர்களுடன் குகனைக்கொண்டு கங்காநதியைக்கடந்து, பரத்வாஜாசிரமத்திற்குச் சென்றார். பிறகு அவர் உத்தரவினால் சித்ரகூட பருவதம் சென்று, ஓர் அழகான பர்னசாலைகட்டி அதில் வசித்துக்கொண்டிருந்தார்.

இராமபிரான் இங்கு வசித்துக்கொண்டிருக்கையில் அவரைவிட்டுப் பிரிந்த துக்கத்தால் தசரத மகாராஜன் சொர்க்கலோகஞ் சென்றார். பிறகு வசிஷ்டர் முதலியவர்கள் இராஜ்யாபிஷேகத்தை ஏற்றுக்கொள்ளும்படி பரதனுக்குப் பன்முறையுங் கூறினார்கள். மகாபலமுள்ள பரதன் அதற்குச் சம்மதிக்காமல், இராமபிரானிடம் அனுக்ரகம்பெறுவதன்பொருட்டுச் சித்ரகூடபருவதம்சென்று அவரைக்கண்டு, “அண்ணா! தருமங்களை யறிந்த நீர் தான் அரசன்; நான் அரசனாவதெப்படி? ஆகையால் தாங்களே இராஜ்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டு” மெனக் கேட்டான். இராமசந்திரர் ஔதாரியம், மகிமை, தம்மையாசிரயித்தவர்களை ஆதரிக்கும் உத்தமகுணம் இவைகளையுடையவராயினும் தந்தைவாக்கிய பரிபாலன நிமித்தம் இராஜ்யத்தைஏற்றுக்கொள்ளச் சம்மதிக்காமல், இராஜ்ய பரிபாலனம் செய்யத் தமது பாதுகைகளை அடைக்கலமாகக் கொடுத்துப் பரதனை அயோத்திக்கு அனுப்பினார். பரதன் பாதுகைகளைப்பெற்றுத்திரும்பி அயோத்தியின் எல்லைக்குள் நுழையாமல் அதற்கப்புறமுள்ள நந்திக்கிராமம் என்னுமிடத்தில் தங்கி அயோத்தியை ஆண்டுவந்தான்.

பிறகு சத்தியசந்தரும் இந்திரியங்களை ஜயித்தவருமான இராமபிரான், நாம் இங்கிருந்தால் பட்டணத்து ஜனங்கள் அடிக்கடி நம்மிடம் வருவார்களென்றெண்ணி, சித்ரகூடத்தை விட்டுப் புறப்பட்டுத் தண்டகாரண்யத்தில் பிரவேசித்தார். தாமரைமலர்போன்றகண்களுள்ள இராமபிரான் தண்டகாரண்யத்தில் தம்மையெதிர்த்தவிராதனென்னும் அரக்கனை வதம்செய்து விட்டுச் சரபங்க மகாமுனிவரைக்கண்டார்.

பிறகு சுதீக்ஷணர், அகஸ்தியர் இவர் சகோதரராகிய சுதர்சனர் இவர்களைக்கண்டு சேவித்தார். அகஸ்தியமுனிவர் கூறியபடி இந்திரனால் கொடுக்கப்பட்ட வில், கத்தி, குறையாத பாணங்களைக் கொடுக்கும் அம்பறுத்தூணி இவைகளைப் பெற்றுக்கொண்டார். அசுரர்கள் இராக்கத ஸ்திரீகள் இவர்களின் வதத்தை யுத்தேசித்துக் காட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் இராமரிடம் அநேக முனிவர்கள் வந்தார்கள். தண்டகாரண்ய வாசிகளும் அக்கினிக் கொப்பானவர்களுமான முனிவர்களுக்கு ஸ்ரீ இராமபிரான் தாம் அரக்கர்களை வதஞ்செய்வதாகப் பிரதிக்ஞை செய்து கொடுத்து அவர்களுக்குச் சந்தோஷ முண்டாக்கினர்.

பிறகு ஜனஸ்தானத்திலிருந்து பஞ்சவடி தீரத்திற்கு வந்த சூர்ப்பனகை என்ற அரக்கியின் மூக்கையும், கொண்டையையும் ட்சுமணரைக்கொண்டு அறுத்து அவளை விரூபப்படுத்தினர். பிறகு அந்தச் சூர்ப்பனகையின் சொல்லைக்கேட்டு அமருக்கு வந்த கரன், திர்சிரஸ், தூஷணன் முதலியவர்களையும் அவர்களுடன் வந்தவர்களையும் சங்கரித்தார். அந்த வனத்தில் வாசஞ்செய்யும் இராக்கதர்களிற் பதினாயிரம் பேர்கள் இராமரால் அடிபட்டு உயிர் துறந்தார்கள். இப்படித் தன் பந்துக்களும் தம்பிமார்களும் இராமரால் வதஞ் செய்யப்பட்டதை அறிந்த இராவணன், மாரீசன் என்ற அசுரனைத் தனக்கு ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொண்டான். மாரீசன் இராவணனைப் பார்த்து, "ஏ இராவணா! அதி பராக்ரமசாலியாகிய அந்த இராமருடன் விரோதஞ் செய்துகொள்வது உனக்கு அழகல்ல," என்று கூறி இராவணனைத் தடுத்தான்.

காலபாசத்தினால் கட்டுண்ட இராவணன் அவன் வாக்கியத்தை அநாதரவு செய்து, மாரீசனுடன் இராமருடைய ஆசிரமத்திற்கு வந்தான். மாயாவியான மாரீசன் தன் மாயையால் இராம இலட்சுமணர்களை வெகு தூரம் அழைத்துக்கொண்டு சென்றான். இராவணன் ஜடாயுவை வதம்செய்து இராமபிரானுடைய பத்தினியாகிய சீதாபிராட்டியை யபகரித்தான். அடிபட்டுக்கிடக்கும் ஜடாயுவைப்பார்த்து, சீதையை இராவணன் அபகரித்துப்போனானென்பதை அவனாலறிந்த இராமர் சோகத்தையும் வியாகூலத்தையு மடைந்து பிரலாபித்தார். பிறகு ஜடாயுவைத் தகனஞ்செய்து சீதையைத் தேடச்சென்றார். வழியில் விகாரரூபியான கபந்தன் என்னும் ஓர் அரக்கனைப்பார்த்தார். மகாபராக்கிரமசாலியான இராமர் அவனை வதஞ் செய்து அவனைத் தகனஞ் செய்தார். கபந்தன் சொர்க்கஞ்சென்றான். சொர்க்கத்திற்குச் செல்லும் கபந்தன் இராகவனைநோக்கி, "ஏ இராகவ! தர்மமறிந்தவளும் தர்மம் செய்பவளும் சன்னியாசாசிரமத்தி லிருப்பவளுமான சபரியிடம் செல்" என்று கூறினான். இராமர் அவ்விதமே சபரியிடம் சென்றார். சபரி இராமனை நன்றாகப் பூஜித்தாள். பிறகு பம்பாநதிக் கரையில் அனுமாரோடு சேர்ந்து மகிழ்ச்சியடைந்தார். அவர் மூலமாகச் சுக்ரீவனிடம் சென்றார். மகாபராக்ரமசாலியாகிய இராமர் சுக்ரீவனிடம் தமது விருத்தாந்தத்தையும் சீதையின் விருத்தாந்தத்தை விசேஷமாகவும் கூறினர். அவைகளைக் கேட்டதும் சுக்ரீவன் அக்கினிசாக்ஷியாக இராமரிடம் சிநேகம் செய்து கொண்டான். பிறகு வானர ராஜனான சுக்ரீவன் தனக்கும் வாலிக்குமுள்ள விரோதத்தைக் கூறினான். இராமர் அதைக்கேட்டதும் தாம் வாலியை வதம் செய்வதாக வாக்களித்தார். அப்பொழுது சுக்ரீவன் வாலியின் பராக்ரமத்தை ராமருக்குத் தெரிவித்து, இராமருடைய வீரியத்தில் சந்தேகங்கொண்டான். உடனே அங்குப் பருவதத்திற்குச் சமானமாகவிருந்த துந்துபியின் எலும்புக்கூட்டைக் காண்பித்தான். இராமர் அதைப்பார்த்து அலக்ஷியமாக நினைத்துத் தமது காற் பெருவிரலா லெற்றிவிட்டார். அது பத்து யோசனை தூரத்திற்கப்பால் சிதறி விழுந்தது. பிறகு சுக்ரீவன் ஏழு சாலவிருக்ஷங்களைக் காண்பித்தான். அவைகளனைத்தையும் இராமர் ஒரே பாணத்தால் துளைத்தார். அதைப் பார்த்த சுக்ரீவன் வியப்புற்று இராமருடன் கிஷ்கிந்தைக்குச் சென்று கம்பீரமாகக் கர்ச்சித்தான். அந்தக் கர்ச்சனையைக்கேட்ட வாலி யுத்தத்திற்கு வெளிக்கிளம்பினான். அப்பொழுது தன்னைத் தடுத்த தாரைக்குச் சமாதானஞ் செய்துவிட்டுச் சுக்ரீவனிடம் யுத்தஞ் செய்தான். இராமர் அவனை ஒரே பாணத்தால் அடித்துவிட்டுச் சுக்ரீவனைக் கிஷ்கிந்தாபதியாக்கினர்.



பிறகு சுக்ரீவன் சகல வானரர்களையும் வரவழைத்துச் சீதையைத் தேடும்பொருட்டுத் திக்குகள்தோறும் அனுப்பினான். பிறகு அனுமார் சம்பாதியின் வார்த்தையைக்கேட்டு நூறுயோசனை விஸ்தீரணமுள்ள லவண சமுத்திரத்தைத்தாண்டி இலங்கைசென்றார்.

இராவணனால் பரிபாலிக்கப்படும் அந்த இலங்கையில் அசோகவனத்தில் சோகத்தையடைந்து தியானம் செய்துகொண்டிருக்கும் சீதையைப்பார்த்தார். சீதையினிடம் அடையாளத்தைக் காண்பித்து இராமபிரானுடைய முயற்சியையும் அறிவித்துச் சீதையைச் சமாதானப்படுத்திவிட்டு, கோபுரவாயிலையும் அசோகவனத்தையும் அழித்தார். இதைக்கண்டு யுத்தத்திற்கு வந்த பஞ்சசேனாதிபதிகளையும் ஏழு மந்திரி குமாரர்களையும் வதஞ்செய்து மிகுந்த பராக்ரமமுள்ள அக்ஷயகுமாரனைக் கசக்கிப் பிழிந்தார். இந்திரஜித்தினால் விடப்பட்ட பிர்ம்மாஸ்திரத்தினால் கட்டுண்டார். பிறகு பிர்ம்மாவின் வரமகிமையால் அவ்வஸ்திரத்தினின்றும் விடுபட்டு இராக்கதர்களை நாசஞ்செய்து, சீதையிருக்குமிடந்தவிர இலங்கையில் மற்ற இடங்களை எரித்துவிட்டு நற்செய்திகூற இராமரிடம் வந்தார். இராமரைக் கண்டதும் "கண்டேன் சீதையை" என்றுகூறி அவரை வலம் வந்து வணங்கி மகிழ்ந்தார். பிறகு சுக்ரீவனுடன் இராமர் சமுத்திரக்கரைக்குச் சென்று சூரியனுக்குச் சமமான பாணங்களைப் பிரயோகித்துச் சமுத்திரத்தைக் கலக்கினார். சமுத்திரராஜன் இராமருக்கு முன் தோன்றி நளனைக்கொண்டு தன்மேல் அணைகட்டிச் செல்லும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டான். அவ்விதமே இராமர் அணைகட்டி அவ்வழியாக இலங்கைசென்று அங்கு இராவணனுடன் போர்புரிந்து சீதையை அடைந்தார். சீதை மிகவும் வெட்கத்துடன் அவர்முன் வந்தாள். இராமர் சீதையை உதாசீனம் செய்தமையால், சீதை உடனே அக்னிப்பிரவேசஞ் செய்தாள். பிறகு அக்னிபகவான் வாய்மொழியால் சீதை குற்றமற்றவளென்று கேட்டு இராமர் மனமுவந்து சீதையை ஏற்றுக்கொண்டார். சகல தேவதைகளும் அவரைப் பூஜித்து மலர்மாரி பொழிந்தார்கள்.

* * * *

பிறகு விபீஷணனை இலங்காதிபதியாகச் செய்வித்துத் தம்மை கிருதகிர்த்தியனாக நினைத்து மனக்கவலையற்றுச் சந்தோஷமடைந்தார். பின்தேவதைகளினுடைய வரப்பிரசாதத்தினால் யுத்தத்தில் மடிந்தவானரர்களை யெழுப்பியழைத்துக்கொண்டு புஷ்பகவிமானத்திலேறி அயோத்திக்குப் புறப்பட்டார். மார்க்கத்தில் இராமர் பரத்வாஜாசிரமத்தை யடைந்து அனுமாரைப் பரதனிடம் அனுப்பினார்.



உடனே சுக்ரீவனுடன் புஷ்பகவிமானத்தின் மீதேறிக்கொண்டு நந்திக்கிராமத்தை யடைந்தார். நந்திக்கிராமத்தில் தமது சகோதரர்களுடன் ஜடாவிசர்ஜனம் செய்தார்.

பிறகு இராமபிரானைச் சீதையுடன் சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து, பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். சகல ஜனங்களும் சந்தோஷத்தையடைந்தார்கள்; தர்மத்தைச்செய்தார்கள்; பிறகு அந்த அயோத்தியாபட்டணத்தில், வியாதி, துர்ப்பிக்ஷம், பயம் இவைகள் கிடையா. தந்தை கண்முன்பு புத்திரனிறப்பதில்லை. விதவைகளேற்படுவதில்லை. காற்றினாலாவது, அக்னியினாலாவது, ஜலத்தினாலாவது, பசியினாலாவது, திருடர்களாலாவது ஒருவருக்கும் பயமேகிடையாது. பட்டணங்களும் இராஜ்யங்களும் தனதான்ய சம்பத்துடன் நிறைந்திருந்தன. எல்லோரும் கிருதயுகத்தில் எப்போதும் சந்தோஷித்திருந்ததுபோ லிருந்தார்கள். நூறு அசுவமேதங்கள், பகுசுவர்ணகம் என்னும் யாகங்கள் இவைகளைச்செய்து பதினாயிரங்கோடி கோக்களைப் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்தார் இராமர். இராஜ பரம்பரைகளை இன்னும் நூறுமடங்கதிகமாக ஏற்படுத்தி இவ்வுலகத்தில் நான்கு வருணத்தார்களையும் அவரவர்களுக்குரிய தருமங்களைச் செய்து வரும்படி ஏற்படுத்துவார். இராமர் பதினோராயிரவருஷம் வரையில் இராஜ்ய பரிபாலனம் செய்து பிர்ம்மலோகம் சென்றார். பாபத்தைப் போக்கிப் பரிசுத்தத்தைக் கொடுக்கும் வேதங்களுக்கு ஒப்பான இந்த இராம சரித்திரத்தைப் படிப்பவன், சகல பாபங்களிலிருந்து விடுபட்டுப் புத்திர பௌத்திராதிகளுடன் பரலோகஞ்சென்று சொர்க்கத்தில் விளங்குவான். பிராமணன் படிப்பானாகில் வாக் சுத்த முண்டாகும். க்ஷத்திரியன் படிப்பானாகில் இராஜாவாக ஆவான். வைசியன் படிப்பானாகில் லாபம் அடைவான். சூத்திரன் படிப்பானாகில் தன் ஜாதிக்குள் உயர்ந்தவனாவான்.

# ஸுரேந்த்ரன்

## III

### ஓட்டம்.

"Fortior cone justus"—L.—ஸத்யத்தையும் ந்யாயத்தையும் ஸ்திரமாகப்பற்றி நிற்பவர்கள் ஸிம்ஹத்தைக் காட்டிலும் பலத்திலும், தைர்யத்திலும் மேம்பட்டிருப்பார்கள்.

ஸுரேந்த்ரன் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டான் என்பதைக் கேட்டதும் பாமரஜனங்களும்கூட திடுக்கிட்டார்கள். அதர்ம தேவதை உதயபுரியில் ப்ரத்யக்ஷமாகித் தனிச்செங்கோல் செலுத்திவருவதாக ஓர் கவி சாதுர்யமாகச் சில பாடல்களைப் பாடினர். ஸுரேந்த்ரன் பஹிஷ்காரம் செய்யப்பட்டபின் மூன்றுமாஸங்கள் வரையில்தான், மனிதர்கள் அவனைப்பற்றி ப்ரஸ்தாபித்து வந்தனர். நாள் ஆக ஆக அவனை மறந்துவிட்டனர். "ஆறினகஞ்சி பழங்கஞ்சியல்லவா?"

ஆனால் ஸதாகாலமும் ஸுரேந்த்ரனது ஸுகத்தை ஒரே ஒரு ப்ராணிதான் கோரிவந்தது. ஸ்ரீதரர் இவ்விஷயத்தை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. தமது பூஸ்திதியை எங்ஙனம் ரக்ஷிப்பது என்பதே அவரது பெரிய கவலை. கடன் பணத்தைத் தருவதற்காக, அவர் ஸேவகர்களையெல்லாம்வேலையினின்று நீக்கிவிட்டுச் சிக்கனமாக ஜீவனம்செய்ய ஆரம்பித்தார்; ஆடம்பரமான செலவுகளைத் தவிர்த்துவிட்டார்; ஸுரேந்த்ரன் தேசப்ராஷ்டம் செய்யப்பட்ட ஏழுமாஸங்களுக்குள் மிகவும் கஷ்டப்பட்டு ஆயிரம் ஸவரன்களை ஸம்பாதித்துவிட்டார். கடன்வாங்கி பத்து மாஸங்களாய் விட்டன. இன்னும் இரண்டு மாஸங்களுள் பணம் கொடாவிடில் அவருடைய நிலங்கள் யாவும் மார்த்தாண்டனுக்கு சொந்தமாய்விடும். தான் ஸம்பாதித்த ஆயிரம் ஸவரன்களையும் அவர், ஒருநாள் மார்த்தாண்டன் க்ருஹத்துக்குச்சென்று, அவனிடம் அவைகளைக் கொடுத்து மீதியைக் கூடிய சீக்கிரத்தில் தந்து "பைஸல்" செய்வதாகச் சொன்னார்.

ஒருநாள் கிரிஜா தன் ரஹஸ்ய ஸேவகியாகிய நந்தாவைக் கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்தாள்.

கிரிஜா:—என்ன! நந்தா! திலீபமஹாராஜா இன்னும் இரண்டு மாஸங்களில் வந்துவிட்டுப் போகின்றாரென்று ஜனங்கள் பேசிக்கொள்ளுகிறார்களே? அது நிஜமா?

நந்தா:—அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆனால் எனக்கு அதில் நம்பிக்கையில்லை. அவர் ஸ்ரீ நகருக்குச்சென்று ஒருவருஷமும் ஒருமாதமும் ஆயிற்று. ஆனால் இதுவரையும் அவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மஹேசனுக்குத் தத்ஸமயம் அத்ருஷ்டகாலம் தான்.



கிரிஜா:—மஹேசன் என்ன அவ்வளவு அயோக்யனா? அவனை எல்லாரும் நிந்திக்கிறார்களே? என்ன காரணத்தால் அவன் ஸுரேந்த்ரரைத் தேசப்ரஷ்டம் செய்தானோ தெரியவில்லை. அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் காரணத்தைக் குறிப்பிடவில்லையே.

நந்தா:—அந்தக் கண்ராவியை ஏனம்மா கேட்கிறாய்? ஸுரேந்த்ரருடைய உண்மையான நண்பரும் வேலைக்காரருமான முகுந்தரை நான் நேசிக்கிறேன். கல்யாணமும் அடுத்தமாதத்தில் நடத்துவதற்கு இரண்டு குடும்பத்தினரும் ஸம்மதித்தனர். ஆனால் அவர் ஸுரேந்த்ரருடன் போய்விட்டார். போய் நாலைந்துமாஸமாகிறது. அவர் எங்கிருக்கிறாரோ? இவையெல்லாம் பாவி மஹேசனது க்ருத்யங்களல்லவா?

கிரிஜா:—முகுந்தனா உனக்குப் புருஷனாகப் போகின்றான்? அவன் நல்லவனென்றும், யோக்யனென்றும் ஸுரேந்த்ரர் எனக்குச் சொல்லியுள்ளார். அது கிடக்கட்டும். ஸுரேந்த்ரரும் அவருடைய ஸேவகர்களும் உதயபுரியின் வடக்கேயுள்ள சங்காவனத்தில் வஸித்துவருகிறார்களாம். அவ்வனம் இந்நாட்டைச்சேர்ந்ததாம். ஆதலால் அவர்களைத் தண்டிக்கும்பொருட்டு மஹேசன் ஸிப்பாய்களை அனுப்பிப்பிடித்து வரச்சொன்னானாம். அவர்கள் காடுமுழுவதையும் தேடியும் அவர்களைக் காண முடியவில்லையாம்.

நந்தா:—சங்காவனத்திலா அவர்கள் இருக்கிறார்கள்? அப்படியானால் நான் க்ஷேமமடைவேன்.—உங்கள் தகப்பனார் அதோ வருகிறார். நான் போய் என்வேலையைப் பார்க்கிறேன்—(என்று சொல்லிப்போய்விட்டாள்).

ஸ்ரீதரரும் கிரிஜாவும் மிகவும் வ்யஸநகரமாய்ச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த ஸம்பாஷணையின் ஸாராம்சம் ஸ்ரீதரர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளில் அடங்கியிருந்தது. "கிரிஜா! உன்கக்ஷியையே எப்போதும் பேசாதே. எந்தக் காரணத்தாலும் நான் என் முன்னோர்கள் ஸம்பாதித்து வாழ்ந்து வந்த நிலங்களையும் வீட்டையும் இழக்கமாட்டேன். எப்படியோ கஷ்டப்பட்டு ஆயிரம் ஸவரன்களைக் கொடுத்துவிட்டேன். மீதி அஸலையும் வட்டியையும் கொடுக்க நான் அசக்தனாயிருக்கிறேன். ஸுகுமாரனுக்கு உன்னைக்கல்யாணம் செய்துகொடுத்தால் அவன் அவ்வளவு பணத்தையும் தருவதாகக் கூறுகிறான். எப்படியாவது

நீ அவனை மணக்க இசையவேண்டும். நாட்களோ ஆய்விட்டன. ஸிந்துதேசத்தில் வஸிக்கும் எனது அத்யந்த ஸ்நேஹிதரொருவரிடம் நான்போகலாம் என்றிருக்கிறேன். நான் அவருக்கு ஒரு தடவை ஸஹாயம் செய்துள்ளேன். அவர் அதை ஞாபகத்தில் வைத்திருந்து எனக்கு இப்பொழுது உதவி செய்வாரென்று நம்புகிறேன். * பரஸ்பரஹாயம் ஸ்நேஹலக்ஷணமன்றோ ? அவரும் என்னைக் கைவிட்டால், நீ ஸுகுமாரனை மணக்கவேண்டியது ரொம்ப அவச்யமாகும். சாகப்போகிற கிழவனாகிய என்னுடைய எண்ணத்துக்கு நீ எதிர் ஒன்றும் சொல்லக்கூடாது.

அந்த ராத்ரி முழுதும் கிரிஜா ரொம்ப ஆலோசனையிலிருந்தாள்; "ஊர்முழுதும் அயோக்யனென்று ஸகலராலும் தூஷிக்கப்படும் ஸுகுமாரனையா நான் விவாஹம் செய்துகொள்வது? ஸுரேந்த்ரர் எங்கே? ஸுகுமாரனெங்கே? என்றாலும் மனிதயத்னத்தில் என்ன இருக்கிறது? தெய்வஸங்கல்பமும்கூட ஸஹாயம் செய்தால் தானே நமது ப்ரயத்னங்கள் ஜயமடையும்? ஸத்யத்தை நாம் கடைப்பிடித்தால் கடவுள் நம்மை ரக்ஷிப்பார்" என்று தீர்மானம் செய்துகொண்டாள்.

மேலே சொன்ன ஸம்பவங்கள் நடந்து நாற்பது நாட்கள் ஆயின. அதன் பின் ஒருநாள் ஸாயங்காலம் ஸூர்யன் அஸ்தமிக்கும் ஸமயத்தில் உதயபுரம் மிகவும் மனோஹரமாக விளங்கியதால், அது கவலையற்ற ப்ரபுக்களின்மனதை வசீகரிக்கும் ஸ்திதியிலிருந்தது. ஸ்ரீதாரின் வீட்டுப் பின்புறத்திலிருந்த அழகிய புஷ்பத்தோட்டத்தில் கிரிஜா உலாவிக்கொண்டிருந்தாள். அவள் முகம் குற்றமற்ற தோற்றத்தையும், மனஸ் நிர்மலமான தன்மையையும் காட்டின. ஸாயங்கால ஸூர்யனது சிவந்த ப்ரகாசம் அவள் முகத்தில் பட்டதும், அவள் முன்னிலும் மதின்மடங்கு ஜாஸ்தியான அழகுடையவளாகத் தோன்றினாள். அப்பொழுது அந்தத்தோட்டத்தில் "தொப்" பென்ற சப்தம் கேட்டது. அதனைக் கேட்டதும் கிரிஜா முதலில் பயப்பட்டாளாயினும், சிறிது நேரத்துக்குள் தைர்யமுடையவளாய் விட்டாள். இரண்டு நிமிஷங்கள் தாம் கழிந்தன; அதற்குள் கிரிஜாவின் எதிரில் ஓர் ஆண் உருவம் வந்து

* Cf. Cowper's Lines "......Friendship is a union that bespeaks reciprocated duties".



நின்றது. அவ்வுருவத்தைக் கண்டதும் கிரிஜா அச்சப்பட்டாள். ஆனாலும் ரஜபுத்ர கன்னிகையாதலால், ஜாதி தைர்யமும், பிறவி தீரமும் அவளுக்குச் சிறந்த ஆயுதங்களாயிருந்தன; சிறிதும் தனது தன்னம்பிக்கையை இழக்காமல், கிரிஜா அவ்வுருவத்தை நோக்கி, "இந்தக் கார்யம் நீசர்கள் செய்யத்தக்கது. உதயபுரியின் அரசன் இப்படிச் செய்வது ரொம்ப அகௌரவம். ஜனங்கள் கேட்டால் ஹேளனம் செய்யார்களா ? திலீப மஹாராஜா இதனைச் செய்யத் துணிவாரா ? உம்முடன் ஸம்பாஷிக்கக் கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று சொல்லி நகர ஆரம்பித்தாள்.

மஹேசன்:—நீ யாருடன் பேசுகின்றாய் என்பதைக் கவனித்தாயா ? பேதைப் பெண்ணாகிய நீயா எனக்கு யுக்தா யுக்தம் சொல்லத் தகுந்தவள். நான் உனது க்ஷேமத்தைக் கோருகின்றேன். நீ ஸுகுமாரனை மணக்கப் போவதாக வதந்தி; அவனோ அயோக்யன்; நீ என்னை விவாஹம் செய்து கொண்டால் உன் தகப்பனாரின் நிலங்களை மீட்பிப்பதுடன் உதய புரியின் மஹா ராணியாகவும் ப்ரகாசிப்பாயல்லவா ? அதனை உனக்கு வற்புறுத்தும் பொருட்டே இந்த ஸமயம் நான் ரஹஸ்யமாக இங்கே வந்தேன். என்ன சொல்கிறாய் ? இவ்வார்த்தைகளெல்லாம் கிரிஜாவின் காதில் ஈயம் காச்சி வார்த்தது போல் இருந்தன. அவள், தனது வழிபடு தெய்வமாகிய பராசக்தியை மனஸிலேயே ஸ்தோத்ரம் செய்து, மஹமதியர்களுடன் போராடி வென்ற ரஜபுத்ர ஸ்த்ரீகளின் சரித்ரங்களை ஞாபகப்படுத்திக் கொண்டு, திடீரென்று மஹேசன் மேல் பாய்ந்து, வெடுக்கென்று அவன் கையிலிருந்த தடியைப்பிடுங்கி, அவனை ஓர் அடி அடித்துவிட்டு, பரபரவென்று தோட்டத்தைக் கடந்து வீட்டிற்குள் நுழைந்து விட்டாள். இந்த ஸங்கதியை விஸ்தரித்துச் சொல்ல நமக்கு இத்தனை நாழிகையாயிற்றென்றாலும், கிரிஜா தன் வேலையை ஒரு க்ஷணத்தில் செய்து முடித்து விட்டாள் மஹேசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அல்பப் பெண்ணால் நாம் அவமானம் செய்யப்பட்டோமே யென்று, அவன் மனம் குழைந்து அதிக கோபத்துடன் வந்த வழியே போய் விட்டான்.

ராத்ரி போஜனம் ஆனவுடன் ஸ்ரீதாரிடம் கிரிஜா அன்று ஸாயந்த்ரம் நடந்த ஸம்பவத்தைச் சொன்னாள். அதற்கு அவர், "கிரிஜா ! இப்படிப்பட்ட கொடுங்கோன் மன்னனது ராஜ்யத்தில் வஸிப்பது ரொம்ப அபாயகாமானது. திலீபரும் சீக்ரமாக

வந்து விடப்போகின்றுரென்று ப்ரஸ்தாபம். இன்னும்கொஞ்சநாட்களில்பணம்கொடாவிடில் நிலம் போய்விடும். நீயோ ஸுகுமாரனை மணக்க இசையேன் என்கிறுய். நாளைகாலை புறப்பட்டு நாம் ஸிந்து நாட்டுக்குப் போய்விடலாம். என் நண்பர் கொடுக்கும் தனத்தைக் கொண்டு நிலத்தை மீட்டுக்கொள்ளலாம்'' என்றுர். அங்ஙனமே, மறுநாட் காலை ஒருவரிடமும் சொல்லாமல் அவர்கள் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

காலை பத்துமணிக்கு யஜமானன் வீட்டுக்குவந்தாள் நந்தா. வீடுமுழுதும் நிசப்தமாயிருந்தது. அறைகளெல்லாம் பூட்டப்பட்டிருந்தன. அவளுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. அக்கம்பக்கத்தார், முன் நாள் மாலை நடந்த ஸம்பவத்தை ரஹஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதனை ஒருவாறு கேட்ட நந்தா ரொம்ப வ்யஸனப்பட்டாள். திடீரென்று ஓரெண்ணம் அவள் மனஸில் உதித்தது. அந்த எண்ணப்ரகாரமே செய்யப் புறப்பட்டுவிட்டாள்.

ஸாயந்த்ரம் ஸுமார் ஆறரைமணிக்கு உதயபுரியைத்தாண்டி இருவர் மிக்க விரைவாகச் சென்றுகொண் டிருந்தனர். ஒருவருக்கு ஸுமார் ஐம்பத்தாறு வயதிருக்கும்; மற்றவன் 20 ப்ராயமுள்ளவனுய்க் காணப்பட்டான்; அவன் முகத்தில் மீசையே இல்லை. மழமழவென்றிருந்த அவன் முகம் மிக அழகியதாக இருந்தது. ராத்ரிகாலம் ஸமீபிக்கப்போவதாலும் நடுகாட்டில் தன்னந்தனியாகப்போக விருப்பதாலும் அவ்விருவர் கையிலும் ஒவ்வொரு பட்டாக்கத்தி யிருந்தது.

அவர்களுக்குப் பின்னுல் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்தில், ராணுவ உடைதரித்த மூன்றுபேர் அதிக வேகமாக வந்துகொண்டிருந்தனர். அவர்கள், தம் முன் சென்ற அவ்விருவரைப் பிடிப்பதற்காகப் பின்தொடர்ந்து வருபவர்போல் காணப்பட்டனர்.

சங்கரவனத்துக்கு ஸுமார் நாலைந்து மாஸங்களுக்குமுன் சென்ற ஸுரேந்த்ரனைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். பலர் தாமாகவே அவனிடம் வந்து சேர்ந்தனர். இரண்டொரு மாஸத்திற்குள் ஸுமார் 120 பேருக்குமேல் சேர்ந்துவிட்டனர். ஸுரேந்த்ரன் அந்தவனத்தில் ஓர் ராஜாவைப்போல் ஆண்டுவந்தான்.



எல்லாரும் அவன் சொற்படி நடந்து அவனுக்காகத் தம்முயிரையும் கொடுக்கத் தயாராயிருந்தனர்.

இன்றுமாலை ஐந்தரைமணிக்கு ஸுரேந்த்ரன் ஓர் ஆலமரத்தின் கீழ் தனிமையாக உட்கார்ந்துகொண்டு ப்ரக்ருதிதேவியின் அபூர்வ அதிசயங்களைக்கண்டு ஆநந்தித்துக்கொண் டிருக்கையில், முகுந்தன் ஒரு ஸ்திரீயுடன் அங்கு வந்தான்.

ஸுரேந்த்ரன்:—பெண்ணே! நீ ஸ்ரீதரர் வீட்டில் பணிப்பெண்ணுயிருந்தாயல்லவா? நீ எப்படி இங்கு வந்தாய்?

நந்தா:—ஐயோ! என் யஜமானியும், அவள் தந்தையும் எங்கேயோ போய்விட்டனரே! கிரிஜாவைத் தேடிக்கொண்டு இங்கு வந்தேன்.

(வரும்).

எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா,
வேலூர்.

## பாடலீபுத்ர நகரம்.

## III

(முன் தொடர்ச்சி)

பின்வந்த அடுத்த இரண்டு நூற்றுண்டுகளில் அவ்விராஜ்யம் குசர்களுடைய ஆளுகைக் குட்பட்டதாயிற்று. அதற்குப் பின் பல காரணங்களால், அந்த ராஜ்யம் சிதறிப்போய் அங்கங்குள்ள சிறுதலைவர்களுடைய கைவசமாயிற்று. அத்தலைவர்களுள் பிரபலராயிருந்து ஆட்சிசெலுத்திவந்தவர் லிச்சாபிகள் என்று முன்னரே கூறப்பட்டுள்ள ஜாதியாராவர். பாடலீபுத்ரநகரம், சிலகாலம் லிச்சாபிகளுடைய ஆளுகைக்குட் பட்டிருந்து; பிறகு குப்தர்களுக்குச் சுவாதீனமாயிற்று. இக்குப்தர்கள் பாடலீபுத்ர நகரத்தையே தங்கள் ராஜாங்கஸ்தான மாக்கிக்கொண்டு நான்கைந்து நூற்றுண்டுகள் தலைமைபெற்று வந்தனர். அப்போது, இந்நகரம் உஜ்ஜயினி, அயோத்தியாமுதலியவற்றைப்போலப்பிரசித்திபெற்றுவிளங்கினது; வித்யாபி விருத்தியிலும், ஞானப் பெருக்கிலும் நிகரிலா மேன்மை பொருந்தியதாயிற்று. உலகெங்கும் சிறப்புற்ற காளிதாஸ கவி மாளவத்திலேயே பிறந்து வளர்ந்தவராயினும், பாடலீபுத்ர நகரத்திலும் சிலகாலம் தங்கிவந்தனரென்று புலப்படுகிறது; இதற்குஅத்தாட்சியாதெனின், அக்கவி தம் காவியங்களில் ஓரிடத்தில் ஸோன் என்ற நதி கங்கையில் பெருங்கோஷத்துடன் கலப்

பதை மிகுஇனிமையாய் வர்ணித்திருப்பதேயாம். கிறிஸ்து பிறந்த 319 வது ஆண்டுமுதல் 606 வது ஆண்டுவரையில் பாடலீபுத்ர நகரம், குப்தர்களுடைய ராஜாங்கஸ்தானமாகவே இருந்தது. பிறகு, ஹர்ஷவர்த்தனரென்ற அரசரது ஆட்சியில் இந்நகரம் ராஜாங்கஸ்தானமாக விடப்பட்டதென்று ஏற்படுகிறது; ஆனால், ராஜ்யபாரந்தவிர மற்றெல்லா விஷயங்களிலும் இந்நகரமே சட்டதிட்டங்களைச் செய்து வந்ததென்று தெரிகின்றது. ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகளில், மகததேசத் தரசர்களான குப்தர்கள் இந்நகரத்தையே ராஜாங்கஸ்தானமாக ஏற்படுத்திக்கொண்டு செங்கோல்செலுத்தி வந்தார்கள். இவ்விடமிருந்தே, தர்மபாலரும், அவருடைய பெருமைபெற்ற புதல்வரான தேவபாலரும் தங்களுடைய பிரசித்தியுள்ள சாஸனங்களை வெளியிட்டார்கள், இந்நகரத்தின் ஒளிவு, உயர்வு, செல்வச்சிறப்பு முதலான காரணங்களை முன்னிட்டு, தேவபாலர் இதை ஸ்ரீநகரமென அழைத்து வந்தனரென்று சொல்லப்படுகின்றது. பின்தொடர்ந்த சில நூற்றாண்டுகளில் இந்நகரத்தின் சரித்திரத்தைச் சரிவர அறியத்தக்க பிரமாணங்கள் எளிதில் கிடைக்கவில்லை. ஆயினும், கிடைக்கக்கூடிய வற்றிலிருந்து ஆராயுமிடத்து இந்நகரம் ஜைனர்களால் கொண்டாடப்பட்டு, அவர்களுக்கு ஒருமுக்கிய க்ஷேத்திரமாக விருந்து வந்ததென்று புலப்படுகின்றது. பாடலீபுத்ர நகரத்தின் சூக்ஷ்மஸ்தானங்களின் குறிப்புக்களை முதன்முதலறிந்தவர் அஜாதசத்ருவே. பிறகு, பதினாறாவது நூற்றாண்டில், ஷர்ஷா என்ற மகம்மதியச் சக்ரவர்த்தி, இந்நகரத்தின் பெருமையைக்கண்டுணர்ந்து இதைத் தம் வசமாக்கிக் கொண்டனர். இவ்வரசர் பீஹாரைச்சேர்ந்த ஒரு ஜாகீர்தாருடைய குமாரர். பாடலீபுத்ரத்தின் இரண்டாவது ஸ்தாபகராக மதிக்கப்படத்தக்கவர் இவரே. இதற்குப் பின்வந்த மொகலாயர்கள் இந்நகரத்தின்பெயரை மாற்ற மிகவும் முயற்சி செய்தனர். அம்முயற்சிகள் யாவும் பயன்படாமல் இந்நகரம் இன்றைக்கும் பாடலீபுத்ரம் அல்லது பாட்னா என்றே வழங்கப்பட்டு வருகின்றது. சிலகாலங் கழிந்தபின் ஷர்ஷாவைவிட மேன்மை பொருந்திய குணவிசேஷங்களுடன் விளங்கின கோவிந்தஸிங் கத்ரி என்பவர் இவ்விடத்திலேயே பிறந்து, ஸிக் ஜாதியாருக்குத் தலைவராயினர். இவர் ஸீக்கர்களின் ஆசாரமுறைமைகளை மாற்றியும் பலவிதமாகத் திருத்தியும்



ஹிந்திபாஷையில் பலநூல்கள் எழுதிவைத்துமுள்ளார். பதினேழாவது நூற்றாண்டில் இந்நகரத்தில் அநேகநூல்கள் எழுதப்பட்டுச் சிறந்த வித்யாபிவிருத்தி நடந்துவந்ததென்று காணப்படுகின்றது. பிறகு, சௌஹணஜாதி வீரரான, பிஜ்ஜலதேவ ரென்பவர் டெல்லிச் சக்ரவர்த்தியினிடமிருந்து இந்த நகரத்தையும் இதைச் சேர்ந்த நான்கு பர்க்காணுக்களையும் அபகரித்துக்கொண்டார். இவர், நமது தேசத்தினுடையவும், மற்றுஞ் சில வெளிதேசங்களினுடையவுமான சரித்திரங்களை மிகவும் விரிவாய் வடமொழியில் வரைந்திருக்கின்றார். அக்காலத்தில் நமது தேசத்தில் தலைமைபெற்று நின்ற ராஜ்யங்களின் சரித்திரங்கள் அந்நூலில் விஸ்தாரமாய்க்காணப்படும். லார்ட் ஹார்டிஞ்சு (Lord Hardinge)ம், ஸர் சார்லஸ் பெய்லிப் (Sir Charles Bailey)யுமே பாடலீபுத்ர நகரத்தின் மூன்றாவது ஸ்தாபகர்களென்று எண்ணப்படவேண்டும். அங்கே புதிதாய் ஏற்படப்போகிற நகரத்தின் படமும் அதற்கு நேரிடும் செலவின் மதிப்புத்தொகையும் மேற்கூறிய இரண்டு ராஜாங்கத்தினரால் சமீபகாலத்தில் பார்வையிடப்பட்டும் ஆலோசனை செய்யப்பட்டும் வந்தனவென்று கேள்வி. அவ்விதமே ஆலோசித்துத் தீர்மானித்தபின் உண்டாகும் புதிய நகரம் முன்காலத்திலிருந்ததினும் மிகச் சிறப்புடையதாயும் அழகு அமைப்பு வாய்ந்ததாயும் விளங்குமென்பதே பாடலீபுத்ர நகரத்தின் சரித்திரத்தை யறிந்தவர்களின் கோரிக்கை. மௌரியர்கள், குப்தர்கள், மகம்மதியர்கள் முதலானோர் ஆண்டுகளித்து வந்த பாடலீபுத்ரநகரம் அதன்முன் உயர்ந்தநிலைமையைக்கொஞ்சமேனும் இழக்காதென்பது நமதே நம்பிக்கை. வெகு காலமாய் வியாபாரத்திலும், வித்தியாபிவிருத்தியிலும், அரசாட்சியிலும், நீதிமுறைமையிலும் நிகரற்ற மேன்மைபெற்று விளங்கிவந்த இந்நகரம்முன்போல் எக்காலத்திலும் புகழுடன் சிறப்புற்று விளங்குமென்பதற் கையமில்லை. இந்திய புராதன நகரங்களுள் ஒன்றாகிய இப்பாடலீபுத்ர நகரம் சீரிலும் சிறப்பிலும் முதன்மைபெற்று ஒப்பற்ற உயர்வோடு நீடூழிகாலம் வாழ்க.

K. சடகோபாச்சாரியார்,

சென்னை.

## யுத்தம்.

ஐரோப்பாக் கண்டத்திலிப்போது நடைபெறும் யுத்தம் ஒருவருக்கும் தீர்மானமான வெற்றியை யுண்டாக்கவில்லை. அதனால் யுத்தம் நீட்டித்துக்கொண்டும், வியாபித்துக்கொண்டுமிருக்கின்றது. செர்பியாவைப்போன்று மாண்டிநீக்ரோவும் ஆஸ்டிரியர் வசமாய்விட்டது. மாண்டிநீக்ரோவின் அரசும், அரசகுடும்பத்தினரும் லயான்ஸ் நகரத்திற்குச் சென்றுவிட்டனர். செர்பிய அரசர் கார்பியூத்தீவிற்குச் சென்றுவிட்டனர். மாண்டிநீக்ரோவின் சேனை அல்பேனியாவிலிருக்கும் செர்பியருடன் சேர்ந்துகொள்ள அல்பேனியாவை நோக்கிச்செல்லுகின்றது.

பிரெஞ்சுப் பெல்ஜியப் போர்முகத்தில் பீரங்கிப் பிரயோகம் மிகு உக்ரமாகிவருகின்றது; ஆகாயவிமானப் போர்களும் தீவிரமாக நடந்துவருகின்றன. இவ்விரண்டிலும் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் மீசுரப்பட்டிருக்கின்றனர்; இந்தப் போர்முகத்தில் ஜெர்மானியர் யத்தனங்களெல்லாம் அபலமாகி வருகின்றன.

ருஷ்யப் போர்முகத்தில் ருஷ்யர் கிழக்குக் கலீஷியாவிலும், புக்கோவினாவிலும், பெஸ்ஸரேபியாவிலும், கக்கேஷிய மாகாணத்திலும் முன்னேறிச்சென்று கொண்டிருக்கின்றனர். இவ்விடங்களில் ருஷ்யர் முன்னேறிச் செல்லுவதைத் தடுத்தற்பொருட்டு, செர்பிய - இத்தாலியப் போர்முகங்களிலிருக்கும் ஆஸ்டிரிய-ஜெர்மன் சேனைகள் தருவிக்கப்படுகின்றன.

இத்தாலியப் போர்முகத்தில் ஆஸ்டிரியர் தோற்றுவருவது சகஜமாகி விட்டது.

அர்மீனியாவில் துருக்கியரும், பெல்ஜியத்திலும் - செர்பியாவிலும் ஜெர்மானியரும் அதிக கொடுமைகள் செய்துவருகின்றனர். மத்தியதரைக்கடலில் சென்ற ஒரு மாத காலமாக ஆஸ்டிரியக் கீழ்நீர்க்கப்பல்கள் பிரிட்டிஷ் சாமான் கப்பல்களையும், கருணையின்றிப் பிரயாணிக்கப்பல்களையும் கடற்கிரையாக்கி வருகின்றன; சென்ற ஒரு வாரமாகப்பிரிட்டிஷார் அவற்றின் அக்ரமச் செயலைத்தடுத்தற்குரிய மார்க்கங்களைத் தேடிவருவதனால், கப்பல்களின் சேதம் குறைந்துவருகின்றது. கூடிய சீக்கிரத்தில் பகைவரது கீழ்நீர்க்கப்பல்களெல்லாம அழிக்கப்பட்டுபோம்; அப்போது கப்பல்களின் போக்குவரவு தடைபடமாட்டாது; வியாபாரமும் கிரமமாக நடைபெறும்.

# சக்ரவர்த்தினி.

“கற்றீண்டு மெய்ப்பொருள் கண்ட[...]
மற்றீண்டு வாரா நெறி”.

VOL-11 } February
தொகுதி-11 } பிப்ரவரிமீ 1916. No. 7. பகுதி-7

OFFICE OF THE REGISTRAR OF JOINT...
REGISTERED
1 - APR 1916
MADRAS

## கெடுவது செய்யின் விடுவது கருமம்.

விடுதற்குரியாரிவர் கொள்ளற் குரியாரிவரென்று பல்லாற்றானு மாராய்ந்து விடுதற்குரியாரை விட்டுக் கொள்ளற்குரியாரைக் கொண்டு, எஞ்ஞான்றும் தவறான வழியிற்செல்லா திருப்பவர் தாமிருக்குமளவும் துன்பமென்பது பெரும்பான்மையு மின்றி வாழ்தற்குரியவராவரென்று நன்குணர்ந் தொழுகுதல் ஒவ்வொருவர்க்கு மின்றியாதகடமையாம். இவ்வாறொழுகுகின்றவர் எவ்வாறிருப்பார்? தமக்கும் பிறர்க்கும் பயனுடையவராக விருப்பர். நாம் நமக்கும் பிறர்க்கும் பயனுடையவராக விருக்க விரும்புவோமாயின், விடுதற்குரியாரை மறவாதுவிட்டு, கொள்ளற்குரியாரை மறவாது கொண்டொழுகுதல்வேண்டும். “ஆருமற்றதே தாரம்; ஊருக்கொருவனே தோழன்” என்னும் பழமொழியைச் சிறிதூகித்து நோக்குமிடத்து, விடுதற்குரியார் பலராகவிருப்பர்; கொள்ளுதற்குரியார் மிகச்சிலராக விருப்பரென்பது நன்கு விளங்காது போவதின்றாம். ஒருவன் செல்வத்தோடிருக்கும்போது அவனைவிடாது சூழ்ந்து, அவனுக்கிணக்கமாகப் பேசி அவனிடத் திருந்து பொருள்பறித்து வருபவரென்னுவர்? விடுதற்குரியாரே யாவர்? அத்தன்மையாயிருப்பவரை எவ்வாற்றானும் விடுவதே எவர்க்குந் தகுதியுடையதாம். செல்வக்காலத்திலேயன்றி வறுமைக்காலத்திலு முடனிருந்து நல்லனவற்றைச் செய்பவரே கொள்ளுதற்குரியாராவரென்று நன்குணர்ந்து, அவரோடு நட்புச்செய்து வர நாம் மிகுதியுமுயலுதல்வேண்டும். “நல்லார் செயுங்கேண்மை

நாடோறு நன்றாகும், அல்லார் செயுங்கேண்மை யாகாதே" என்று நன்னெறி கூறுவதை நன்கூகித்து நோக்குமிடத்து நாள்தோறும் நன்மையினைச் செய்துவருபவர் கொள்ளற்குரியவராவர்; நாள்தோறும் தீமையினைச் செய்துவருபவர் விடுதற்குரியவரென்பது விளங்காமற்போகாது; வேம்பு கரும்பாமோ? கரும்பு வேம்பாமோ? ஆகாவன்றோ? அங்ஙனமே வாஸ்தவமாக நல்லனவற்றைச் செய்பவர் தீயனவற்றைச் செய்வதேயில்லையாம்; தீயனவற்றைச் செய்பவர் நல்லனவற்றைச் செய்வதேயில்லையாம். முன் நல்லனவற்றைச்செய்து பின் தீயனவற்றைச்செய்பவர் வாஸ்தவத்தில் நல்லனவற்றைச்செய்தவரல்லர்; ஒருகாரணம் பற்றி நல்லனவற்றைச்செய்தார், அக்காரணமொழியவே தீயனவற்றைச்செய்துவருகின்றனரென் றுணர்தல்வேண்டும். இவ்வாறெல்லாமுணர்ந்து தகாதவரை நேசராகக்கொண்டிருப்பதையொழித்து, தக்கவரை நேசராகக்கொண்டொழுகுபவர் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் மோட்சத்தையு முறையே பெறுதற்குரியவராவரென்பது நிச்சயமாம்.

"இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, உம்மை யுயர் கதிக் குய்த்தலால்—மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டா ரெனப்படு வார்" என் றறநெறிச்சாரம் கூறுவதை யாராய்ந்து நோக்குவோமாயின், நமக்கு உள்ளவாறு அறநெறியி லொழுகுவதை யுபதேசித்து; அடக்கத்தை யுண்டாக்கி, இறந்தபின் புண்ணியலோகத்திற்குப்போம்வழியைக் காட்டுபவரே நட்பினராவார்; அவரே கொள்ளுதற்குரியராவரென்பது விளங்குதலின், நாம் அவரை நட்பினராகக்கொண்டு மற்றவரை நட்பினராகக் கொள்ளாதிருத்தல் வேண்டும்; மற்றவர் நட்பு எந்நாளும் தீமையை யுண்டாக்குவதா மென்பது சிறிது சிந்தித்து நோக்கினால் விளங்காதிராது. தமக்குக்கேடுபுரிபவரை நட்பினராகக் கொண்டிருப்பவர் ஒரு மரப்பிளப்பின்மீ துட்கார்ந்து அதில் கடாவியுள்ள ஆப்பைப் பிடுங்கிய குரங்கு அப்பிளப்பி லகப்பட்டமைபோல வருந்துதற்குரியராவர்; அவர் நட்பினை யெவ்வாற்றாலேனும் விடுதல்வேண்டுமென்று நமக்கு வற்புறுத்துதற் பொருட்டே நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார் கொன்றைவேந்தனில் "கெடுவது செய்யின் விடுவது கருமம்—(நீ நட்பினனென்று கருதினவன் உனக்குக்) கேடுதருவதைச்



செய்வானாயின், (அவனோடு செய்த நட்பினை அவனுக்குச் சொல்லாமலும் அவனுக்குத் தெரியாமலும் பையப்பைய) விடுவதே (நல்ல) காரியமாம்" என்றருளிச் செய்தனர். இவ்வாக்கியத்தை உபதேசவாக்கியமாகக் கொண்டு, நமக்குக் கேடுதருவதைச் செய்வாரோடுள்ள நட்பினைப் பையப்பைய விட்டுவருவோமாயின், நாம் காலக்கிரமத்தில் நன்மையென்று சொல்லப்படுவனவனைத்தையும் கடவுளருளால் தவறாது பெறுதற்குரியவராவோம்.

காலம் வருமளவுங் காத்திருத்தல் வேண்டும்; அது வந்தபோது நாம் செய்யக் கருதிய தீமையைச் செய்யவேண்டுமென்று கருதி நம்முடன் நட்புச் செய்திருப்பவரை நாம் விட்டுவிலகுவது கூடாதாம்; ஆயினும், நாம் நட்புச்செய்தற்குரியாரை யாராய்ந்தே அவரோடு நட்புச் செய்தல்வேண்டும். கஸ்தூரியை யெவ்வாறு மறைத்து வைப்பினும், அதன் மணம் வெளிபாய் விடுமன்றோ? அங்ஙனமே பின்னர்த் தீமையைச் செய்யவேண்டுமென்று கருதி நம்முடன் நட்புச்செய்துவருபவரது செயல்களை நாம் நன்கூகித்து நோக்குவோமாயின், அவரது எண்ணம் வெளியாவதாம்; அதனால் அத்தன்மையவரைப் பையப்பைய விட்டுநீங்கி, அவரது முகத்தையும் பாராதிருப்பதே நமக்கழகாவதாம்.

குற்றமில்லாதா ருலகத்தின்மையின், நமக்குக் கேடுதருவதைச் செய்யாதவர் ஒருவருமிலராவரே; இங்ஙனமாயின், நட்புச்செய்தற்குரியாரே யிலராவரன்றோ என்று வினவுதல் கூடும். குற்றமில்லாதா ருலகத்திலரென்ப துண்மையேயாம்; ஆயினும், இங்கு விடுதற்குரியாரென்று கூறுவது பொறுத்தற்கரிய குற்றமுடையாரென்றுணர்தல் வேண்டும்; பொறுத்தற்கெளிய குற்றமுடையாரே நாம் கொள்ளுதற்குரியவராவர்; அவர் நட்பு நமக்கு நன்மையைச் செய்வதன்றித் தீமையை யொருபோதுஞ் செய்வதில்லையாம்.

பருகுவார் போன்றவராய்; தமக்குறும் பொருள்களை நோக்குபவராய், கள்வர்போன்றும் கணிகையர்போன்றும் வஞ்சனைபலசெய்து பொருள்களைக் கவர்பவராய், துன்பம் வாராதமுன்னெல்லாம் துணையாவார்போன்றிருந்து அதுவந்தபோது விட்டு நீங்குபவராய், விடரும், தூர்த்தரும், வேழம்பரும் போன்று பலவகையால் நகுவித்துத் தாம்கருதியபயனைக் கொண்டொழிபவராய், தாம் செய்துமுடித்தற்குரிய காரியத்தை யாம்செய்து

முடிப்பதன்றென்று நடிப்பவராய், சொல்வேறு செயல்வேறுடையவராய், வீட்டிலிருக்கும்போது நட்பாகப்பேசி, சபையில் வந்திருக்கும்போது பழித்துப்பேசுபவராயுள்ள யாவரும் கேடுதருவதைச் செய்தற்குரியராவர்; அவரோடு கொண்ட நட்பினைப் பையப் பைய விடுதல்வேண்டுமென்றுணர்ந்து, உணர்ந்தவாறொழுகுகின்றவர் தமக்கும் பிறர்க்கும் பயனுடையவராக விருப்பர்; அவரே நட்பாகக் கொள்ளுதற்குரியாராவரென்று நாம் நன்குணர்தல்வேண்டும்.

விடுதற்குரியார் அறிவொழுக்கங்களாற் றகுதியில்லாதவர்; கொள்ளற்குரியார் அறிவொழுக்கங்களாற் றகுதியுடையாரென்று நன்குணர்ந்து, விடுதற்குரியாரைவிட்டு, கொள்ளற்குரியாரைக்கொண்டு, அவர் கூறியவாறொழுகிவர இனியேனும் நாம்பெரிது முயலுதல்வேண்டும்; முயன்றுவருவோமாயின், துரியோதனன் முதலாயினோர் போன்று கேடுறாது சுகமாக வாழ்தற்குரியவராவோம்.

துரியோதனன் சகுனி தனக்குக் கேடுதருங் காரியத்தைச் செய்து வருகின்றானென்றுணராதும், உணர்ந்தாருரைத்ததைக் கவனியாது மிருந்தமையாலன்றோ நிர்மூல மானான்? துரியதனன் போல நிர்மூலமானவரைக்கணக்கிடல்முடியுமோ? முடியாதன்றோ? நாம் சகுனிபோன்றிருப்பாரது நட்பினை நூலுணர்வாலும்-தன்னுணர்வாலும் நன்குணர்ந்து பையப்பையவிட்டுவருவோமாயின், பழுதின்றி வாழ்வதும் பரமேசுவரனது கருணைக் கிலக்காவதும் நிச்சயமாம்.

"ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை சொல்லாடார் சோர விடல் (தம்மால் முடியுங்கருமத்தை முடியாதாக்கிச் செய்தாரோடு கொண்ட நட்பினை அதுகண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக)".

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

## ரொட்டிக்காரச் சிறுவன்.

1791-ம் ஆண்டில் ஒரு நாள் "மேத்ஜ்" பட்டணத்தில் பிரங்கிப் பயிற்சிக்கு அருகர்களான மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் பொருட்டு, ஒரு பரீக்ஷை நடந்தது. மகா கீர்த்திவாய்ந்த "லாப்ளாஸ்" என்ற கணித சாஸ்திரி அவ்விடத்தில் அக்ர பரீக்ஷகராக



விளங்கினார். அப்பரீக்ஷைக் கென்று உயர்தரப் பள்ளிக் கூடங்களிலே தயாரான அநேக பிள்ளைகள் வந்திருந்தார்கள். எல்லாரும் வாலிபர்கள், நல்ல உடை, இலக்ஷணமான முகம், மேன்மையான பார்வை, அமரிக்கையோடு, தாம் பரீக்ஷிக்கப்படும் வேளையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று அவ்வறை முழுதும் ஒரு பெருஞ் சிரிப்பு கலீரெனவெழும்பிற்று. ஒரு சிறிய பட்டிக்காட்டுப் பையன் உள்ளே வந்து விட்டான். கருநிறமான முரட்டு உடை, வலதுகையில் அதிகசாதாரணமான ஒரு தொப்பி, இடதுகையில் ஒரு தடி, இலாடமடிக்கப்பட்டு, புழுதி படிந்த பாதரக்ஷைகள், மிகவும் மெலிந்தசரீரம், இக் கோலத்தைக் கண்டு ஸகலரும் நகைத்தனர்.

அப்பெருஞ் சிரிப்பினால் அவ்வெளிய சிறுவன் திகைத்து நின்று விட்டான்.

"நீ தவறுதலாக வழிதெரியாமல் இங்குவந்ததுபோ லிருக்கின்றது; உனக்கு என்னவேண்டும்? தம்பி" என்றார் பரீக்ஷகர். "நானும் பரீக்ஷைக்கு வந்திருக்கிறேன்; என்னையும் பரீக்ஷிக்கும் படி பிரார்த்திக்கின்றேன்" என்று சிறுவன் சிறிது அச்சத்தோடு மறுமொழி புகன்றான்.

ஸகலரும் உடனே முன்னைப்போல சிரித்தார்கள்.

"சரி!" என்றார் பரீக்ஷகர். பரீக்ஷைக்கு வேண்டிய பாடங்களையெல்லாம் அறிவையோ?

சிறுவன்: அவற்றை நான் படித்திருக்கின்றேன், ஐயா.

பரீக்ஷகர்: நல்லது! உட்காரு; உன்முறை வரும்; அப்போது நீ பரீக்ஷிக்கப் படுவாய்.

பரீக்ஷகரின் அன்பான வார்த்தைகளால் கொஞ்சம் தைரியமடைந்த அச்சிறுவன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்தான். ஆனால் அவனைச் சுற்றிலும் குசு, குசு வென்ற பேச்சுக்களும், கஷ்டத்தோடு அடக்கப்பட்ட சிரிப்புகளும் ஓயவில்லை. பரீக்ஷை நடந்து கொண்டேதா னிருக்கிறது.

சிறுவன் வேறொன்றையும் பாராமல் பரீக்ஷகரின் கேள்விகளையும், மற்ற மாணவர்களின் விடைகளையுமே கவனித்தான். "இவையெல்லாம் நான் அறிவேன்" என்று தனக்குள்ளே நிச்சயித்துக் கொண்டு, வர, வர தைரியமானான்.

அவனுடைய முறை வந்துவிட்டது. அதேசமயத்தில் வெளியிலிருந்து அநேக ஜனங்கள் வேடிக்கைப்பார்க்க வந்து கூடினார்கள். “லாப் ளாஸ்” சாஸ்திரி கேள்விகளை ஆரம்பித்தார். சிறுவன் சிறிதுந் தயங்காமல் மறுமொழிகளைப் பொழிந்தான். தெளிவும், உறுதியுமான விடைகள்; அறையில் சிரிப்பு அற்று எங்கும் நிச்சப்தமாகிவிட்டது. பரீக்ஷகர் ஆச்சரியமடைந்து, கேள்விகளை நிறுத்திவிட்டு, எதிரே நிற்கும் வாலிபனைக் கவனமாக உற்று நோக்கி உடனே, “உனக்குக் கணிதம் கற்பித்தவர் யாவர்?” என்றார்.

“ஐயா, அதனைத் தனியாய், நானாகவே படித்தேன்” என்றான் சிறுவன்.

பரீக்ஷகர் மறுபடியும் கேள்விகேட்கத் தொடங்கினார்; மிகவும் கடினமான பாகங்களில் பொறுக்கி எடுத்த கேள்விகள். அவற்றிற்கு உடனே உத்தமமான விடைகள். பரீக்ஷைக்கென்று குறிப்பிட்ட பாகங்களைக் கடந்து “லாப் ளாஸ்” உயர்தரக் கணிதசாஸ்திரத்திலேயுள்ள சில கேள்விகளைக் கேட்டார். அவற்றிற்கும் தப்பிதமில்லாத விடைகளே வந்தன. பரீக்ஷை இங்ஙனம் இரண்டு மணிநேரம் நடந்தது. அதனிடையில் சிறுவன் ஒருதரமாகிலும் தவறவேயில்லை; கடைசியில் பரீக்ஷகர் எழுந்து அவனருகிற் சென்று அவனை உருக்கத்தோடு கட்டிக்கொண்டார்.

உடனே அறையில் எல்லாரும் எழுந்துவிட்டார்கள். காலையில் அச்சிறுவன் உள்ளே நுழைந்தபோது, கேலிபண்ணி நகைத்தவர்களெல்லாம், இப்போது அவனைச் சந்தோஷமாக ஆரவாரத்தோடு சூழ்ந்து கொண்டார்கள். பிறகு அவர்கள் அவனைத் தூக்கிக்கொண்டு, மேத்ஜ் பட்டணத்தின் வீதிகளிலே ஊர்க்கோலம் வந்தார்கள். அந்தத் தினந்தான் தனது வாழ்நாட்களில் பாக்கியம் பெற்ற நாள் என்று அச்சிறுவன், பெரியவனானபின்னர், ஒரு சமயம் சொல்லியிருக்கிறான்.

(வரும்)

*N.* சுப்பிரமணிய ஐயர், புரொபெசர்.

## தாராபாய்.

இந்தியாவின் வடபாகத்திற்கு ஹிந்துஸ்தான் என்று சொல்லப்படும். இந்த ஹிந்துஸ்தானம் விந்திய மலைக்கும் இமயமலைக்கும் நடுவிலிருக்கும் பிரதேசமாகும். இந்த ஹிந்துஸ்தானத்



தில் இராஜபுதனம் என்றொரு நாடுளது. அந்நாட்டின்கண் தோடா என்னும் ஒரு சிற்றரசு சுமார் 400 வருடங்களுக்குமுன் சிறப்புற்றோங்கியிருந்தது. சூரதான் என்னுங் குணசீலன் இவ்வூரை அரசாண்டு வந்த காலத்தில் முகலாயர்கள் ஹிந்துஸ்தான் முழுவதையும் கோம்சப்படுத்தி வந்தனர். இந்த முகலாயர்கள் இந்தியாவின் மேற்கு எல்லையாயிருக்கும் மலைகளின் கணவாய்களின் மூலமாகப் பாதக்கண்டத்தில் பிரவேசித்து சிந்துநதியைக் கடந்து ஹிந்துஸ்தானத்திலுள்ள குடிகளையும் அரசர்களையும் படாதுபாடும் படுத்தினர்; ஒவ்வொரு ஊராக எதிர்த்துத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு சூரதான் என்னும் அரசன் ஆண்டுவந்த நாட்டையும் எதிர்த்தனர். சூரதான் என்பவன் சிற்றரசனானபடியினால் பெருஞ்சேனையுடன் எதிர்த்துநின்ற முசல்மான்களை வென்று தனது சிற்றூரைக்காத்து இரக்ஷிக்க அசக்தனாயிருந்தான்; இச்சிற்றரசன் சித்தூர் இராஜாவுக்கு கப்பங்கட்டிக்கொண்டிருந்தமையின் அன்னோன் துணையை வேண்டிநின்றனன்; சித்தூரும் மகம்மதியர்களால் எதிர்க்கப்பட்டிருந்தமையின் சித்தூர் இராஜனும் சூரதான் வேண்டுகோளுக்கு இணங்க இயலாமற் போயிற்று. ஆகவே சூரதான் இராஜன் தோல்வியடைந்து தனது ஊரைவிட்டுப் போக நேர்ந்தது.

மேவர் தேசத்து இராஜதானியாகிய சித்தூர் நகரத்தின் அண்மையிலிருந்த பிட்னபூர் (Bidnapore) என்னும் பட்டணத்திற்குத் தனது ஒரே அருமைப் புத்திரியாகிய தாராபாயியுடன் போய் அங்கு வசித்து வந்தான். இராஜபோகத்தை யிழந்து வேறு நாட்டில் சரண்புகுந்திருத்தல் எத்தன்மைய மனக்கிலேசத்தை விளைவிக்குமென்பது கூறாமலே விளங்கும். சூரதான் மன்னன் குணசீலனென்ன முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றது. தான் அரசு செலுத்திவந்த காலத்தில் அரசச்செருக்கினாலும், விடய போகங்களாலும் கீர்த்திப்புகழ்ச்சியாலும் மனமகிழ்ச்சி யடைந்தவனல்லன். உலகமாக்கவும் காக்கவுமல்ல கடவுள் தன்னை அரசனாகச் செய்தனர் என்று தன் மனதில் நன்கு ஓர்ந்தவனாகலின் குடியோம்பலிலே கண்ணோட்டமுடையோனாய் அரசச் செல்வம் பெற்றேமென்று உலோபஞ்செய்தலை அறியாதவனாயிருந்தனன். இராஜபோகத்தில் இச்சை சற்றுமில்லாதவனாகி அரசியனுக்கு வாய்ந்த கடமைகளையே என்றும் புரிந்துவந்தான். சுகாபேக்ஷையின்றி கடமை புரியுமவாவே அவனுக்குக் குடிகொண்டிருந்தமையின்,

"அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்" என்று தெய்வப்புலமை திருவள்ளவ நாயனார் கூறியவண்ணம் தான் அரசுபுரிந்த காலத்தில் அகமகிழ்ச்சி கொள்ளாததுபோல் அவ்வரசு தன்னை நீங்கிய காலத்தும் அழுங்குதலிலனாய் விளங்கினன். ஆதலினால் பிட்னபூரில் தனது அரிய புதல்வியுடன் யாதொரு மனக்கிலேசமுமின்றி வாழ்ந்து வந்த போதிலும் அனது முன்னிருப்பை யடையவேண்டுமென்னு மெண்ணமானது அவன் மனத்தை யகலவில்லை.

"வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்" என்றான்றோர் கூறிய வண்ணம் இவ்வெண்ணமானது அரசிழந்ததனாலுண்டாய இடுக்கணை மேன்மேலடரவல்லதாயிருந்து தனதுபுதல்வியாகிய தாராபாயைக் கொண்டு தான் தனது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று சூரதான ராஜனுக்குத் தோன்றியது. தனக்குக் குமாரனில்லாமையால் தாராபாயிக்கு ஓர் ஆண்பிள்ளைக்கு என்னென்ன கற்றுக்கொடுக்க வேண்டுமோ அவையாவற்றையும் தாராபாயிக்குக் கற்றுக்கொடுத்தான். சிறுவயது முதற்கொண்டே குதிரைச் சவாரிசெய்யவும், வில்லம்புகளைக்கையாளவும், ஒருபோர் வீரனுக்கு வேண்டிய வித்தை யாவற்றையும் சரிவரக் கற்றுக் கொடுத்தனன். பாண பட்டயம் முதலிய ஆயுதங்களைப் போர் முகத்தில் வெகு சாதுர்யமாய்ப் பிரயோகிக்கச் சமர்த்தளாயினள். இவளை யொத்த போர்வீரன் உளனோ என்று சங்கிக்கூடிய அவ்வளவு திறமையுடையவளாய் விளங்கி வந்தனள். ரூபலாவணியத்திலோ இவளுக்கு ஒப்பாரும் மிக்காரும் இராஜபுதனத்தில் பொறுக்கி எடுத்தாலும் சிக்காததாயிருந்தது. ஒரு கற்புடைய ஸ்திரீக்கு எவ்வெக் குணம் அணிகலனாயிருக்கக்கூடுமோ அவையாவும் அம்மாதினிடத்தில் தங்கியிருந்தன. பெண்களுக்குச் சுபாவசித்தமாயுள்ள இளகிய மனதும், அன்பு, பேதமை, நாண முதலிய மாக்ஷிமைக் குணங்களை யுடையளாயினும் அணிகரத்தில் சிங்கப்பேடுபோலும், உற்சாகத்தில் புலிப்பேடுபோலும், போர்முகத்திலோ அதிகச் சிறப்புற்றோங்கிய இராஜ புத்திரனைப் போலும் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தனள். சூரதான இராஜன் தானிழந்த நாட்டை மறுபடியும் கைப்பற்ற பன்முறை முயற்சி செய்தனன். அக்காலத்திலெல்லாம் தாராபாயி அவன் பக்கலிருந்தே சௌரிய பராக்கிரமத்துடன் சண்டை செய்தனள்.

(வரும்).

P. Manckasamy Moodr, B. A., Rangon,

## ஸுரேந்திரன்.

(முன்தொடர்ச்சி)

ஸுரேந்திரன்:—கிரிஜாவா காணோம்? என்ன ஸமாச்சாரம்? சீக்கிரம்சொல்.

நந்தா உடனே நடந்த ஸம்பவங்களைச் சொன்னாள். [ஸ்ரீதார் வீட்டிலிருக்கும்போது அவள் மனதில் ஓர் எண்ணம் உதிக்க, அதன் ப்ரகாரமே செய்யப்புறப்பட்டாள் என்று சொன்னோமே! அந்த எண்ண மென்னவென்றால், உடனே சங்காவனம் சென்று தன் நேசன் முகுந்தன் மூலம் ஸுரேந்திரனிடம் இந்த விஷயத்தைச் சொல்லுதற்காகத் தான்].

இந்த விஷயங்களை ஸுரேந்திரன் கேட்டதும் மஹேசனிடம் கோபமும், பொறுமையும், கிரிஜாவிடம் அன்பும் ஆதரவும் கொண்டான். முகுந்தனும், நந்தாவும் அன்பாகப் பேசத் தனிமையாகப் போய் விட்டனர்.

அதன்பின் ஸுரேந்த்ரன், தன் மனம் நிம்மதியடையும் பொருட்டு, நடக்கலானான். தன் எதிரே யாரோ மூன்றுபேர் ராணுவவீரர்கள்போன்ற உடையுடன், அவஸரமாக வந்துகொண்டிருந்தனர். ஸுரேந்த்ரன் சற்று உற்றுநோக்கினான். அவர்களுள் இருவர் இவனுக்கு அறிமுகமானவர்கள். ஒருவன் மஹேசன் என்பதையும், மற்றவன் ஸுகுமாரன் என்பதையும் அறிந்து கொண்டான். மூன்றும் மனிதன் யாரென்பது அவனுக்குத் தெரியவில்லை. அவர்கள் கண்ணிற்படாமல் எங்காவது மறைந்துகொள்ள வேண்டுமென்பது இப்பொழுது ஸுரேந்த்ரனது பெரியவேலை.

அந்தக் காட்டின் நடுவில் வயஸான கிழவி பொருத்தி ஒரு குடிசையில் வஸித்துவந்தாள். அவளை அந்த வனஸஞ்சாரிகள், மாயக்காரி யென்று நம்பிவந்தனர். மந்த்ரசக்தி பொருந்தியவள் என்று அவள் கருதப்பட்டதால் அவளைக்கண்டால் எல்லாருக்கும் பயம் ஜாஸ்தி. அந்தக்கிழவி ஸுரேந்த்ரனிடம் அன்புடையவளாயிருந்தாள். அந்தக்கிழவியின் குடிசைக்குள் ஸுரேந்த்ரன் நுழைந்து அவளை நோக்கி, "பாட்டி! இப்பொழுது நான் அபாயஸ்திதியிலிருக்கின்றேன். 80 வயஸ் கிழவி எப்படியிருப்பாளோ அப்படி என்னை வேஷம்போட்டுவிடு. ராத்திரி ஸமயமாதலால் என்னை

ஒருவரும் "நிசா" வைத்துக் காணமாட்டார்கள். நானும் என் குரலை மாற்றிக்கொள்கிறேன்; நீ அதோ இருக்கும் மரத்தின் ஸந்தில் போய் மறைந்துகொண்டு, பயங்கரமான சப்தத்தை அடிக்கடி செய்துகொண்டிரு" என்று சொன்னான். அவளும் அப்படியே செய்து மரத்தண்டை போய்விட்டாள்.

சிறிது நேரத்திற்குள், அம்மூவரும் அக்குடிசையின்முன் வந்து "ஸுரேந்திரகிழவி" யைநோக்கி "இவ்வழியாக யாராவது இரண்டுபேர் வந்தார்களா? என்றுகேட்க; "இங்கு ஒருவரும் வரவில்லையே" என்று பதில் சொல்லப்பட்டது.

ஸுகுமாரன்:—இப்பொது சற்றுமுன், யாரோ ஒருவன் இக்குடிசையுள் நுழைந்தானே. இருட்டாகிறது. சீக்ரம்சொல்.

ஸுரேந்திரக் கிழவி:—எனக்கென்ன தெரியும்? எனக்குக் கண்ணும் கிடையாது; காதும் இல்லை; நீங்கள் ஏதாவது சாப்பிட்டுப் போகிறீர்களா?

மாயாவிக்கிழவி மரச்சந்திலிருந்து "ஹூம் ஹும் ஹா" என்று கத்துகிறாள்.

மஹேசன்:—இது பிசாசுகள் வஸிக்கும் இடம் என்று சொல்வது நிஜம்தான். போலும். இருட்டாய் விட்டதே! நாம் என்ன செய்வது?

ஸுரேந்த்ரக்கிழவி:—வழிதவறி இங்கு வந்தீர்களா என்ன? என் பின்னால் வாருங்கள் உதவிபுரிந்து ஸுலபமான வழிகாட்டுகின்றேன்.

வேறுவழியொன்றுமில்லாததால் அம்மூவரும் ஸுரேந்திரக் கிழவியின் பின் நடந்து வந்தனர். ஸுரேந்திரக்கிழவி கிழவிபோல கூனி நடந்ததுடன் கையில் ஒரு வில்லையும் தடியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். சிறிதுதூரம் நடந்ததும் "சலசல" வென்ற சப்தம் கேட்டது. உடனே அங்கு ஒரு ஓநாய் இவர்கள்முன் தோன்றிற்று. முதலில் மஹேசனும், பின், ஸுகுமாரனும் ஓநாயைக் குறிவைத்து அம்புகளை எய்தனர். ஆனால் அவர்கள் அம்பு அந்த ம்ருகத்தின்மீது படவேயில்லை. இதனைக்கண்ட ஸுரேந்த்ரன் தட்டுத்தடுமாறித் தானும் குறிவைத்துச் சுடுவதாகச்சொல்லி ஓர் அம்பு எய்தான். அந்த ஓநாய் உடனே இறந்துவிட்டது. இதைப்பார்த்த மஹேசனுக்கு ஸந்தே



ஹம் தோன்றியது. உடனே ஸுரேந்த்ரக்கிழவியின்மீது பாய்ந்து உடம்பைத் தடவி சந்த்ரவெளிச்சத்தால் அவன் ஸுரேந்த்ரனென்று தெரிந்து, மற்றவர்களுக்கும் அதனைச் சொன்னான். உடனே அம்மூவருக்கும் ஸுரேந்திரனுக்கும் சண்டை நடந்தது; தனிமையாக ஸுரேந்திரன் தைர்யமாக அவர்களுடன் போராடினான். என்றாலும் மூன்றுபேருக்குமுன் ஒருவன் என்ன செய்யமுடியும்? ஆகவே ஸுரேந்த்ரன் அபஜயமடைவான்போலிருந்தது.

அந்த ஸமயத்தில் அங்கே முகுந்தன் ஓடிவந்தான். தன்யஜமானனது ஸ்திதியைக் கண்டதும் மிகவும் கோபத்துடன் சண்டையில் பிரவேசித்தான்; அவனுக்கு வந்த கோபத்தில், ஒரே அடியாய், மஹேச ஸுகுமாரர்களுடன் வந்திருந்த படைவீரனை, அடித்தான். அந்த அடி அவனுக்குச் சிறிது காயத்தை உண்டாக்கியது. ஆனாலும் சண்டை மிக மும்முரமாய் இருந்தது.

இந்த ஸந்தர்ப்பத்தில் அங்கு இருவர் வந்தனர். அவர்களுள் ஒருவர் கிழவர் மற்றவன் வாலிபன். அக்கிழவர் இந்தச் சண்டையைக் கண்ணுற்றதும்" இதென்ன அந்யாயம்! இரண்டுபேருக்கு ஸமமாக மூன்றுபோ சண்டையிடுவது? யாராயிருந்தாலும் ஸரி. இவ்விருவர்பக்கத்தில் போய் நான் சண்டைசெய்து அவர்களுக்கு ஸஹாயம் செய்வேன்" என்று சொல்லிச் சண்டையில் நுழைந்தார்.

சிறிதுநேரத்திற்குள் மஹேசன் பக்கத்தார் தோல்வியடைந்தனர். உயிர்தப்பினால் போதும் என்று அம்மூவரும் க்ஷணத்தில் ஓடிவிட்டனர்.

அவர்கள் ஓடிவிட்டபின் ஸுரேந்த்ரன் தனக்கு, ஆபத்தில் உதவிசெய்தவரை நோக்கி "நீர் யார்" என்று கேட்டான். அவர் பதில் சொன்ன குரலைக்கொண்டு ஸ்ரீதரர் என்றறிந்ததும், ஸுரேந்தரன் அவருக்கு நமஸ்காரம்செய்தான்.

ஸ்ரீதரர்:—இப்பொழுது உன்னோடு போர்புரிந்தவர்கள் யார்?

ஸுரேந்த்ரன்:—மஹேசன், ஸுகுமாரன், ஒரு படைவீரன்.

ஸ்ரீதரர்:—ஸுகுமாரனா? அவன் எனக்கு மருமகனாகப் போகின்றானே! மஹேசன் எங்களைத் துரத்தியா வந்தான், பாவி! எனது நிலங்களை நான் எப்பொழுது மீட்பிப்பேன்.

உடனே ஸுரேந்த்ரன், முகுந்தனைக் கூப்பிட்டு, "இப்பொழுது நடந்தபோரால் இவர் மிகவுங்களைத்திருக்கிறார். இவரை நம் பர்ணசாலைக் கழைத்துப்போய் ச்ரமபரிஹாரஞ் செய்யச்சொல் என்று சொல்லி அவ்விருவரையும் அனுப்பிவிட்டான். அவர்கள் போனபின் ஸுரேந்த்ரன் ஸ்ரீதராருடனிருந்த வாலிபனைநோக்கி," நீயார் அப்பா? கிழவர் சண்டையிடும்போது நீ வெறுமையிருந்தாயே? இதுவா உன் ஆண்மைத்தனம்?" என்று கேட்டான்.

வாலிபன்:—ஐயா! நான் அவரதுபுத்ரன்; என்னைப்பற்றி நீங்கள் தாழ்வாக நினைப்பது யுக்தமல்ல.

ஸுரேந்த்ரன்:—நீ பேசுவது யுக்தமா? அப்படியானால் நீ என்னுடன் குஸ்திபோடுகிறாயா? ஸ்ரீகாருடைய புத்ரியை நான் நேசிக்கின்றேன். அவளுடைய ஸஹோதரனாக நீ இருக்கப் பாத்ரனல்லன் என்பதே என் அபிப்ராயம்.

வாலிபன்:—அப்படியெல்லாம் சொல்லாதீர். வேண்டுமானால் நாளைக்கு உம்முடன் குஸ்திபோட வருகிறேன்.

ஸுரேந்த்ரன்:—அப்படியானால் கைப்போட்டுக்கொடு.

உடனே அந்த வாலிபன் ஸுரேந்த்ரன் உள்ளங்கையில் தட்டிக்கிள்ளினான். அப்பொழுது அவன் கைவிரலில் பளபளப்பான ஒரு மோதிரம் ஜ்வலித்தது. அதனைக்கண்டதும் ஸுரேந்த்ரன் மிகுந்த கோபமுடையவனாய் "இது கிரிஜாவினிடம் நான் கொடுத்த மோதிரம் அல்லவா? அது உன்னிடம் எப்படி வந்தது? கோழைமனஸுடையவனாயிருப்பதுடன் சூது கூடச்செய்கின்றாயா?" என்று கேட்டான். அதற்கு அந்த வாலிபன் மெல்லிய குரலுடன், "உமக்குமுன்பாக கிரிஜாவைத்தவிர வேறு ஒருவரையும் நீர் காண்பதில்லை" என்றான். உடனே ஸுரேந்திரன், அவ்வுருவத்தை உற்றுநோக்கி, "ஆ, ஆம், கிரிஜா! நீ எப்படி இங்கு வந்தாய்? இன்றுமாலை, நந்தா, உனக்கு நடந்த விஷயங்களைச் சொன்னான். இன்று பகலெல்லாம் என்னென்ன கஷ்டங்கள் அநுபவித்தாயோ?" என்று சொல்லி அவளை அன்பாக ஆதரித்துப் பல கேள்விகளைக் கேட்டான்; பின்னர் அவ்விருவரும் பர்ணசாலைக்குப் போனார்கள்.

(வரும்)

எம். எஸ். ஸ்ரீநிவாச சர்மா,

வேலூர்.

## சுகத்தெளிவுரை.

### கடவுள் பிரசன்னம்.

(முன்தொடர்ச்சி).

மாந்தர்களே! மதிப்பு அவமதிப்பு, வெற்றி தோல்வி, சுயாபிமானம் பராபிமானம் என்பவைகளைப்பற்றியுள்ள எண்ணங்களை யொழித்து இம்மொழிகளைக் கேட்டு அவற்றின் உண்மைப்பொருளைக் கிரஹித்துக் கொள்ளுங்கள்; அதனால் நீங்கள் வணங்கும் கடவுளை யறிதல் உங்களுக்கு ஸித்திக்கும். ஸத்திய ஞானத்தினால், உங்களுடைய இருதயங்களை அவரிடத்தே நிறுத்தி, ஆனந்தமே ரூபமாகப்பெற்று நித்தியானந்தத்தில் வாழ்ந்திருங்கள். சத்திய ஞானமாகிய தீபம் எல்லா மாந்தரிடத்துமுள்ளது. அது, கடவுளது அருட்பாங்கினால்மறைந்துகிடப்பனவற்றையெல்லாம்வெளிப்படுத்தும். ஆனால், தோற்றத்தை வைத்தாவது மனிதருடைய அபிப்பிராயங்களைக் கொண்டாவது எதையும் நிதானியாதேயுங்கள். எவனோ ஒருவன், ஒருகாக்கை யுங்களுடைய காதுகளைக்கொண்டோடிற்று என்பானாயின், உடனே அக்காக்கை பின்னே யோடாதீர்கள். முதலாவது காதுகளிருக்கின்றனவா என்பதைக் கவனித்துப் பாருங்கள். மனிதர் 'சித்து' என்று சொல்வது எதனையென்று யோசியுங்கள். நீங்கள் அதனுடைய தொழில்களைப் பார்க்கின்றீர்கள். அஃது இருக்கின்ற நிலைமேல நீங்கள் இருக்கின்றீர்களென்றும், உங்களுக்குப் பொருள்களைப் பகுத்துரைக்கக் கூடுமென்றும் அறிகின்றீர்கள். ஆனால் அது என்ன? உங்களுக்குத் தெரியாது. இவ்வளவு அந்நியோந்நியமான வஸ்துவை யறிந்து கொள்ளாத பக்ஷத்தில், வேறு எந்தப் பொருளைத்தான் உள்ளபடி யறிதல் கூடும்? இந்த க்ஷணத்தில் நீங்கள் பகுத்தறிய வல்லவர்களா யிருக்கின்றீர்கள். ஆனால் ஸ்வப்பநமற்ற நித்திரையில் உங்களுக்கு அங்ஙனம் அறியக்கூடாமற் போகின்றது; அஃதாவது, உங்களுக்கு விஷயப்பிரஞ்ஞை யில்லை. அப்பொழுது எப்பதார்த்தம் இல்லாமற் போகின்றது? இப்பொழுதிருக்கின்றது போலவே சரீரம் இருக்கின்றது; பிராணவாயுவோ, கிரமமாய் ஓடுவதினால் இரத்த ஓட்டத்தை நிலைபெறச்செய்து சரீரத்தை மரணமடையாமற் காத்துக்கொண்டிருக்கின்றது. எல்லாம்

முன்போலவே யிருக்கின்றது; ஒரு பொருள்தான் வேண்டியிதாகக் காணப்படுகின்றது. அதுதான் ஜோதி அல்லது சித்து. இந்தச் சித்து ஸ்தூலமாய் வெளிப்பட்டிருக்கின்றதா ? அன்றேல் அவ்யக்தமாய் அடங்கி யிருக்கின்றதா ? இவற்றைத் தவிர ஸத்தினது பாகுபாடுகள் வேறின்று. அது வெளிப்படாமலடங்கியிருக்குமாயின், மனம், வாக்குக் கெட்டாததா யிருக்கின்றது. இதன் உண்மையைப் பகுத்தறிவில்லா அயர்ந்தநித்திரையில் நீங்கள் இருக்கும் ஸ்திதியில் வைத்து உணர்ந்து கொள்ளுங்கள். அப்பொழுது "நான் இருக்கின்றேன்" என்னும் எண்ணம் மறைகின்றது. "கடவுள் இருக்கின்றார்", அல்லது "உலகம் இருக்கின்றது" என்னும் எண்ணம் அற்பமுமில்லை. பகுத்தறிவு அல்லது வெவ்வேறு பொருளுணர்ச்சி சித்தாயே இருப்பதனால், சித்தில்லாவிடத்திற் பகுத்தறி விருத்தல் கூடாது. இந்தப்பிரகாரமாக, அறிவானது அடங்கி வெளிப்படாதிருக்கின்றதன்று. அது வெளிப்பட்டுத் தோன்றுமாயின், அதனைப்பற்றித் தெரிந்து கொள்வதில் யாதொரு வருத்தமுமில்லை. பரந்ததாய் அளவில்லாததா யிருக்கும் இப்பிரபஞ்சம், நம்முடைய இந்திரியங்கள் சக்திகளுக்குப் பொருந்துமாறு, குறிப்பிட்டு அளவிடக்கூடிய தொகையினவாகிய திரவியம் அல்லது பூதங்களையுடையதா யிருக்கின்றது. இக்கருத்தை யுட்கொண்டே, பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், உஷ்ண சீதங்களைத் தருகின்ற இரண்டு நிலைகளிற் றோன்றும் ஜோதி, அதாவது சூரிய சந்திரர்கள் என்றிவைகளைத் தன்னுடைய பல அங்கங்களாகவுடைய ஒரு புருஷனே விராட்டு அல்லது பரமேசுவரன் இப்பிரபஞ்ச முழுமையுமாகின்றா னென்று இத்தேசத்திய அதிபரிசுத்த வேதங்கள் கற்பிக்கின்றன. இப்புருஷன், ஸ்திரீ புருஷர் என்னும் பாகுபாட்டில் வரும் உங்களெல்லாரையும் விழுங்கி, சராசரமென்னும் பேதத்தில் வரும்பொருள்களெல்லாவற்றையும் உட்கொண்டு நித்தியனாய், நிராதாரனாய், பூரணனாயிருக்கின்றான். உலகத்துள் நடைபெறுஞ் சமயவாதங்களெல்லாம் இப்புருஷனது தன்மையைப்பற்றியுண்டாகும் ஆசங்கைகளையே தமக்காதாரமாகக் கொண்டு கோஷிக்கின்றன. மனத்தைப் புறத்தே செல்லவொட்டாது தடுத்து நிறுத்தும்விவேகஸாமர்த்தியத்தினால், சிலர் அப்பொருளினது சக்தி குணங்களையும் வெளித்தோற்றங்களையும் அதனுடைய ஸத்து மாத்திரையினின்றும் பிரிக்கின்றனர். வெளித்



தோற்றமெல்லாம் மாயையென்று தள்ளி, அன்னோர் ஏகனாய், நிர்க்குணனாய், செயலிறந்தவனாய், அதீதனாயுள்ள கடவுளை யாசரிக்கின்றனர். வேறுசிலர், புறத்தேயுள்ள வெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டு அழியுந்தன்மையவென்றொதுக்கி, சக்தி குணங்களோடு ஸத்துத் தன்மையைக் கலந்து ஆஸ்திகவாதிகளுடைய கடவுளை யாசிரிக்கின்றனர். இன்னுஞ் சிலர், ஸத்து மாத்திரமாய் விளங்காநின்ற பொருளை யிகழ்ந்து, புறத்தேயுள்ளதை மட்டும் பூரணமாகவே பாகித்தே ஒப்புக்கொண்டு, அதற்குச் சித்துக்குணங்களை ஏற்றி, ஒரு கடவுள் வாதிகள், பலகடவுள் வாதிகள் என்னும் இருவகைப்படும் மத பேதங்களைச் சார்ந்து நிற்கின்றனர். ஆனால், அவரோ திரிகாலத்தும் ஒரே தன்மையராய், பூரண வஸ்துவாய், நிர்விகாரியா யிருக்கின்றார். மனிதர்களோ வாதம் பகை யென்னும் காற்றுக்களை விதைத்துத் துக்கந் துன்பமென்னுஞ் சண்டமாருதங்களைப் பலனாக அறுத்துக்கொண் டிருக்கிறார்கள். சித்து வெளிப்பட்டுத் தோன்றுமாயின், அது விராட்டின் அங்கங்களென்று சொல்லப்படுவனவற்றுள் அடங்கியிருத்தல் வேண்டும். அது மண்ணென்று சொல்வீரேல், உங்கள் தசையென்புகளை விட்டு வேறாயில்லை. நீராயின் உங்கள் இரத்தம் கோழை சரீர ரசங்கள் எல்லாம் அதுவே. அக்கியாயின், உங்கள் ஜீர்ணசக்தியும் அதுவே. காற்றேல், உங்கள் பிராணவாயு அது; ஆகாசமேல் தோற்றத்தில் வெறுமையாய்க் காணப்படும் உங்கள் சரீரத்திலுள்ள துவாரங்கள் அது. அது ஜோதியென்று சொல்வீரேல், விவகாரத்தை இம்மட்டோடு நிறுத்திவிடலாம்; உலகத்து ஜோதியே உள்ளொளியாய்ப்பார்க்கப்படுகின்றது. பஞ்ச பூதங்களது கலப்பையே சித்தென்றெடுத்துக்கொண்டால், இதைச் சற்றுக் கவனியுங்கள்: உங்கள் சொந்த சரீரம் அந்தக் கலப்புத்தானே. பிரஞ்ஞையில்லாத ஸுஷுப்தியவஸ்தையில், இதோ சரீரமும் பிராணவாயுவுநின்றும் சித்துக் காணாமற்போகின்றதே. நல்லது, உங்களுடைய அறிவு எது ? அஃதாவது, உங்களுக்குத் தெரிகிறபடி நீங்கள் யார் ? உள்ளேயிருக்குஞ் சித்தையறியாமல், ஜீவ அறிவுகளெல்லாங் கூடிய ஜோதியை அசித்தெனக் கருதுகின்றீர்கள். ஜோதிக்குச் சிறந்த பிறப்பிடமாயிருக்கிற சூரிய சந்திரர்களைக் கீழ்ப்பட்ட அசித்துப் பதார்த்தங்களென அவமதிக்கின்றீர்கள். "நான் இருக்கின்றேன்"

என்னும் எண்ணமாக உங்களுக்குள்ளே விளங்கிக் கொண்டிருப்
பதும், அது தோன்றாமல் உள்ளடக்கப்பட்டபொழுது ஸுஷுப்தி
யவஸ்தையில் அவ்வெண்ணம் மறையும்படி செய்வதுமாகிய சக்தி
யாருடையது? புறத்தே ஜோதியாயிருந்து நாமரூபத்தாலாய
பிரபஞ்சத்தை வெளிப்படுத்தும் அப்பொருளே உங்களுக்குள்
"நான் இருக்கின்றேன்" என்னும் எண்ணத்தை வெளிப்படுத்து
கின்றதென்பதை அறிகின்றீர்களில்லை. புறத்தொளி மறைந்த
காலத்து, உங்களுக்கு ஒன்றையும் காணல் கூடாது; எனினும்
"நான் இருக்கின்றேன்" என்னும் எண்ணம் தங்கியிருக்கின்றது.
ஆனால், உங்களுடைய சரீரத்தினுள் ஒளியை யெடுத்தானபின்,
இந்த எண்ணமும் மறைந்து உங்களை இருள்வடிவமாகிய பிரஞ்
ஞையின்மை வந்து மூடுகின்றது. மாண்டுபோன சரீரத்தைக்
கெட்டுப் போகாதபடி திராட்சரச சத்துநின்று காத்தல்போல,
உங்கள் சரீரம் பாழ்போகாவண்ணம் பிராணவாயு மட்டுமே
நின்று காக்கின்றது. உழைப்பு ஓய்வு என்னும் நியமத்தைப்
பிராணவாயு கூடப் பின்பற்றினதா யிருக்கின்றது. அது இடது
நாசியிலும் வலது நாசியிலும் மாறி மாறியோடும் முறை மாறி
வரும் காவற்காரர் முற்றுகையிடப்பட்ட கோட்டையைக் காத்தல்
போல, பிராணவாயு இந்த விதமாகப் பாடுபட்டுச் சரீரத்தைக்
காக்கின்றது. பிராணவாயு பிரியுங் காலத்துச் சரீரமு மாய்கின்
றது. இதுதான் உறக்கத்துக்கும் மரணத்துக்குமுள்ள வேற்று
மை. நீங்கள் உள்ளே சித்தைக்கண்டு ஒளியைக் காணாமையும்,
புறத்தே ஒளியைக்கண்டு சித்தைக்காணாமையும் ஞானக்குருடா
கின்றது. இந்த ஞானக்குருடுதான் உங்கள் துன்பத்துக்கெல்
லாம் பிறப்பிடமாயும் ஊற்றாயுமிருக்கின்றது. ஒளிதான் சித்து;
சித்துத்தானொளி. ஒரே புருஷன் தான் ஒளியாயுஞ் சித்தாயுமிருக்
கின்றான்; அவன் பூரண வஸ்துவாய் உள்ளும் புறம்பும் ஒக்க
இருக்கின்றான். யார் இந்தப் பிரகாரமாகப் பார்க்கின்றார்களோ
அவர்களே உண்மையாய்ப் பார்க்கின்றவர்கள். இந்த உண்மைக்
காட்சிதான் ஞானம்; ஞானந்தான் சாந்தி. யாருக்கு உண்மைக்
காட்சியில்லையோ அவனுக்கு ஞானமில்லை; ஞானமில்லாது சாந்தி
வாராது. கடவுளிடத்தே சரணடையுங்கள்; அகத்தே யிருப்பதை
யும் புறத்தே யிருப்பதையும் மயங்காமல் ஆராய்ச்சி செய்து
பார்த்து அவையிரண்டும் அபேதமென்பதை யுணருங்கள். எது



உங்களகத்திலில்லையோ அது ஓரிடத்திலுமில்லை; எதாவது எவ்
விடத்தாவது இருக்குமாயின், அது உங்களகத்துமுண்டு. புறத்
தேயுள்ள பஞ்ச பூதங்களுமே உங்கள் ஸ்தூலசரீரமும் பிராணனு
மாதல் கண்டீர் "நீங்கள்" என்று சொல்லிக்கொள்கின்ற உங்
கள் மனம், உணர்வுகள், அறிவு என்பவைகளைக் காணீர்; சந்திர
னென்னுஞ் சீதளஜோதியே, "என்னுடைமை" "உன்னுடைமை"
என்றுங்களோடு பொருள்களைச் சம்பந்தப்படுத்திக் காட்டும்
மனமாகின்றது. சூரியனென்னும் உஷ்ண ஜோதியே சித்தா
யிருக்கின்றது. புறத்தே, ஜோதியாய்க் கடவுள் உலகத்தை யாள்
கின்றார். உள்ளும், அக்கடவுளே நீங்களாயிருந்து சரிதப்புகளைப்
பகுத்தறிவதும், கண்ணாற் காண்பதும், காதாற் கேட்பதும்,
மூக்கால் முகர்வதும், நாவாற் சுவைப்பதுஞ் செய்கின்றனர்.
உங்களிடத்து ஜாக்ரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி யென்னும் மூன்
றவஸ்தைகளும் நித்தமும் மாறிமாறி வருகின்றன. விழித்திருக்
கும்போது நீங்கள் சூரியரூபிகளா யிருக்கின்றீர்கள். கனவு
காணும்போது சந்திரரூபிகளா யிருக்கின்றீர்கள். உறக்கத்தில் பிர
ஞ்ஞையற்றிருக்கும்போது இருள் ரூபிகளாயிருக்கின்றீர்கள். இவ்
வவஸ்தைகளிலெல்லாம் நீங்கள் ஒருவரேயாய் மாறுபாடடையாத
புருஷரா யிருத்தல்போல, 'நீங்கள்' என்று சொல்லப்படும்
ஜோதியையும் தன்னுளடக்கிய அந்த ஏகஜோதியானது சூரிய
சந்திர அந்தகாரங்களா யிருந்தாலும், தோற்றியுந் தோற்றாது
மிருந்தாலும், ஸூக்ஷ்மமாயும் அதிகமாயு மிருந்தாலும் ஒரு படி
த்தாயே யிருக்கின்றது. உங்களையெல்லா முள்ளிட்ட அந்த ஏக
புருஷன், பூரணனாய் ஸர்வவியாபகனாய், நித்தியனாய், நிராதார
னாய், அகண்டிதனாய், அநந்தனாயிருக்கின்றான். குணங்கள் உண்
மையின்மைகளால், ஸகுண நிர்க்குண நிலைகளுள் ஏற்றத்தாழ்
வுளதெனக் கூறுதல்வேண்டா. வஸ்து எதுவாயிருக்கின்றதோ
அதுவாயே யிருக்கின்றது. அதற்கு இரண்டு நிலைகள் உண்டு;
அவை ஸகுணநிர்க்குணங்களும் மற்றிவைபோன்ற துவந்துவங்
களுமாம். காட்சிக்குப் புலனாகாத நிர்க்குண நிலையில், அது கார
ணமா யிருக்கின்றது. மற்றொரு நிலையில், காரியமா யிருக்கின்றது.
காரியமில்லாமல் காரணங் காரணமாயிருத்தல் செல்லாது; காரண
மில்லாமல் காரியமும் காரியமாயிருத்தல் செல்லாது. நிர்க்குண
நிலையில், கடவுள் ஒன்றுஞ் செய்கிறதில்லை; ஸகுணநிலையாகிய

ஜோதி நிலையில், பிரபஞ்சமென்று சொல்லப்படுகின்ற நாமரூபங்களாக விரிந்து, செய்யப்படுவன வெல்லாம் அவரே செய்கின்றார். வஸ்து நாமரூபங்களை யபேட்சித்துக் காரணமெனப்படும் தம்மிற்றாமே, கடவுள் ஸர்வ வியாபகராய்ப் பூரணவஸ்துவா யிருக்கின்றார்; அஃதாவது உள்ளபடியே யிருக்கின்றார். ஆதலால் சந்தேகங்களையெல்லா மொழித்து அவரிடத்தே உபசாந்தியடையுங்கள். ஓம்சாந்தி—பரசாந்தி யுங்கட்கெல்லாம் பலிக்கக் கடவது.

## காமக் கள்வர்

காமமாவது உதிரப்பெருக்கால் ஆண் பெண் என்னும் இருபாற் சீவராசிகளுக்கும் உண்டாகும் பசிபோன்ற ஓர் உபாதை. இந்த உபாதி உதிரப்பெருக்கால் இந்திரிய வலிமைபெற்ற எறும்பு முதல் யானை யீறாகவுள்ள சீவராசிகளில் ஒன்றையேனும் விட்டதில்லை. காமமானது பசியைப்போலும் மாறிமாறி உதிக்கத்தக்க உபாதியேயாயினும், இதனைத் தணிக்கும் மார்க்கம் பசியைத் தணிக்கும் மார்க்கத்திற்கு வியதிரேகமானதே. எங்ஙனமெனின், பசியைத் தணிப்பார் பிறபொருளை உட்கொள்ளுதலானும், காமத்தைத் தணிப்பார் உள்ளபொருளைப் புறத்திற் போக்குதலானுமென்க. ஆகலால், இக்காம உபாதியைப் பசியோடு ஒப்பிடுவதைக் காட்டினும், மல உபாதி சலஉபாதிகளோடு ஒப்பிடுவதே தக்கது. இந்தப் பசிநோய் காமநோய் என்னப்பட்ட உபாதிகள் எல்லவகைப்பட்ட சீவராசிகளுக்கும் பொதுவாக இருப்பினும், அவ்வச் சீவராசிகள் இவற்றைக்கழிக்கும் மார்க்க விசேஷத்தை நோக்கிப் பேரறிவுடைய சீவராசிகளென்றும், சிற்றறிவுடைய சீவராசிகளென்றும், அல்லது பகுத்தறிவுடைய சீவராசிகளென்றும், பகுத்தறிவில்லாச் சீவராசிகளென்றும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விருவகைச் சீவராசிகளுள் பேரறிவுடைய அல்லது அறிவிற் சிறந்த சீவராசிகளாவார் மனிதர். மனிதர் ஒழிந்த ஏனைய சீவராசிகளெல்லாம் மனிதரோடு ஒப்பிடுங்கால் சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையனவேயாம்; எங்ஙனமெனின், சிற்றறிவுடைய சீவராசிகள் பசியுள்ளபோது தம்மையொத்த சீவராசிகளைக் கொன்றுதின்றும், தம்மையொத்த சீவராசிகளுடையதைப் பறித்துத் தின்றும் வயிறு வளர்ப்பதுமல்லாமல், காமமுள்ள



போது தம்மோடொத்த சீவராசிகளுக்குரிய பெண்ணோடு ஆணும், ஆணோடு பெண்ணும் புணர்ந்து தத்தமக்குற்ற காமத்தைத் தணிக்கின்றமையா லென்க. அறிவிற் சிறந்த மனிதரோ இங்ஙனமன்று. தங்களுக்குரிய பொருளைத்தின்று பசிதணிந்தும், தங்களுக்குரிய பெண்பாலாகிய மனைவியரோடுகூடிக் காமந்தணிந்தும் பரதுக்க துக்கராய் இனிது வாழ்கின்றார்கள். இந்த அரும் பெருஞ் செய்கையுடைமையாலேயே மனிதர்கள் அறிவிற் சிறந்த சீவராசிகளென்றும், இவை இல்லாமையினாலேயே ஏனைய சீவராசிகள் அறிவிற்சிறிய சீவராசிகளென்றும் அழைக்கப்படுகின்றன.

மனிதன் அறிவிற்சிறந்த சீவராசிகளாகிய மக்கட் பிறப்பில் ஒருவனாகவிருந்தும், வனம் வனாந்தரங்களில் வசிக்கும் கல்வியறிவொழுக்கங்கள் ஒரு சிறிதுமில்லாத வேடர்வில்லி நாமாமிச பக்ஷிணிகளைப் போலாது, கல்வியாலும் கனத்தாலும் உயர்வாலும் ஒழுக்கத்தாலும் சீராலும் செல்வத்தாலும் சிறப்பாலும் நீதியாலும் நிகரற்ற நன்னாட்டிற் பிறந்து வளர்ந்தும், ஒருவாறு கல்வியும் அதற்குத்தக்க கேள்வியும் உடையவனாயிருந்தும், நீதிநெறி ஒழுக்கங்களாவன இன்ன இன்னவெனத் தெரிந்திருந்தும், குற்றம் இவை, குணம்இவை எனப் பத்திரிகை முகத்தாலும் பிரசங்க வாயிலாலும் பிறவாற்றாலும் போதிக்கவல்ல போதகாசிரியன் நானேயெனப் பசையில்லாப் பட்டைநாமந் தாங்கினவனாக விருந்தும், பரதார கமனம் செய்வானானால் இவன் மனிதப்பிறப்பு என்னும்? கல்வி என்னவாம்? கேள்வி என்னவாம்? ஆசிரியத்தன்மை என்னவாம்? விசாரணை என்னவாம்? இக்காமத்தால் பலர் அழிந்தாராக நாம் கேள்விப்படவில்லையோ?

“ அந்தர முற்றா னகலிகை பொற்பா லழிவுற்றான்
இந்திர னொப்பா ரெத்தனை யோர்தா மிழிவுற்றார்
செந்தரு வொப்பா ரெத்தனை போர்சின் றிருவுண்பார்
மந்திர மற்றா யுற்ற துரைத்தாய் மதியற்றாய்.”

என்று விலாசவதி முஞ்ஞாஜனுக்குப் போதிக்கவில்லையோ? அன்றியும்,

காமமே குலத்தினையும் நலத்தினையும்
கெடுக்கவந்த களங்கமன்றிக்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும்
புகட்டிவைக்கும் கடாரமற்றும்

காமமே பாகதிக்குச் செல்லாமல்
வழியடைக்குங் கபாடமென்றும்
காமமே யனைவரையும் பகையாக்கிக்
கழுத்தரிக்கும் கத்திதானே"

என்றதனால், காமம் என்னென்ன கஷ்டங்களை உண்டுபண்ணும் என்பதை நாம் அறிகின்றோம். இவையெல்லா முணர்ந்தும் தன் மானம் பிறமான மென்பதில்லாத நாய் முதலிய மிருகங்களைப் போலக் கண்டகண்ட பெண்பாலைக் கற்பழித்துத் திரியும் காமப் பேய்களே காமக்கள்வராவர்.

ஒருவன் தான் வருந்தித் தேடியபொருளை உண்பானாயின், அவன் கள்வனாகான்; பிறர் தேடியபொருளை அவர் காணாவிடத்துக் கவர்வானாயின், அவன் கள்வனேயாவன். இதுபோல, ஒருவன் தனக்குற்ற காமத்தைத் தனக்குரியாள்பால் தணித்துக் கொள்வானாயின், அவன் காமக்கள்வனாகான்; பிறனுக்குரிய மனையாளிடத்துத் தனக்குற்ற காமத்தை அவனறியாவிடத்துத் தணித்துக் கொள்வானேல், அவன் காமக்கள்வனாவான். இத்தகைய காமக்கள்வர் மிருகாதிகளினும் கடையாயவரே. எப்படியெனில் மிருகாதிகளுக்குத் தன்மானம் பிறமானமென்பதில்லை. மிருகாதிகளுள் ஒன்றற்குரியவற்றோடு ஒன்று செல்லும். தாய் தமக்கை யென்னும் பேதம் அவைகளுக்குக் கிடையவே கிடையாது. இக் காமக் கள்வனோ தன் தாயோடேனும், தமக்கையோடேனும், மனைவியோடேனும் பிறனொருவன் செல்லச் சகியான்; இங்ஙனம் சகிக்கலாற்றாத இவன் தன் மனம்போல் பிறர் மனமுமிருக்குமென வெண்ணாதது என்ன பேதமை? "பிறர் மனைவியரைப் பெற்றதாயெனவும், பிறர் பொருள் எட்டியேயெனவும், பிறர் வசை புணர்த்தல் பெருமை யன்றெனவும், பிறர்துயர் தன் துயரெனவும்" கருதும் குணமல்லவோ மானுஷீகம். தம் மனைவியரோடு வேறொரு ஆண்பிள்ளைபேசவும் மனம் சகிக்காத இக்காமக் கள்வராகிய துன்மார்க்கர், பிறன் தன் மனையாட்டியைக் கற்பழிக்கக்கண்ட கணவன் மனம் என்னவாகப் புழுங்குமென யோசியாதது என்ன மூடம்? பிறர் மனை விரும்பாமையே நீதிக்கெல்லாம் மேலான நீதியெனத் திருவள்ளுவர் முதலிய நீதிமான்கள் கூறியுள்ளதைக் கண்ணிருந்தும், பழி பகை அச்சங்களைப் பாராமல் காமாந்தகாரக் கள்ளுண்டு, தன்னுண்டு, கண்டார் சீசீயென்று



வெறுக்க உடம்பெடுப்பது என்ன சன்மம்? இவர்களை உலகத்தில் சற்சனர் நேசிப்பார்களோ? இவர்களுக்குக் கடவுள் கிருபைதான் செய்வரோ!

D. B. V. சேஷகிரி ராவ்.

## பிதுர்வாக்ய பரிபாலனம்.

அங்கம்—1.

காட்சி—1

இடம்:—மந்திராலோசனை மண்டபம்.
தசரதர் பிரவேசிக்கின்றார்.

[சேவகர்கள் இருமருங்குமிருந்து கைகட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.]

தசரதர்:—சேவகா! சுமந்திரர் முதலிய மந்திரிகட்கும் நமது குரு வசிஷ்ட முனிவருக்கும் மகாராஜா மந்திராலோசனை மண்டபம் வந்திருப்பதாகக் கூறி யழைத்துவா—

சேவகன்:—இதோ போய் வருகின்றேன்.

(போகிறான்.)

தசரதர்:—(தமக்குள்) இராமன் மகாபுத்திசாலி, பூமியைவகிக்கும் பொறுமையுடையவன். அவன் இந்த அயோத்திக்கு அரசனாக வேண்டியது அவசியமே. ஏனெனின் "விளையும் பயிர் முளையிற்றானே தெரியும்" என்கிறபடி இவன், இளம் பிராயத்திலேயே குடிகள் விஷயத்தில் அன்புகாட்டி

"எதிர்வருமவர்களை யெமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமல ரொளிரா
எதுவின் யிடரிலை யினிதினு மனையும்
மதிதரு குமாரும் வலியர்கொ லெனவே"

என்று வினவி யுபசரித்ததாகப் புகழப்பட் டிருத்தலினென்க.

ஆதலால் இவன்,

"குடிதளர் வுற்றகாலைக் கொள்பொரு ளாறிலொன்றும்
விடுவது செய்துதங்கள் விழுகுறை முறைசொல் வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய வின்சொற் காட்டி
வடுவற விடித்துச் சொல்வார் வன்மொழி" பொறுக்கும்

ஆற்றலுள்ளவனென்பதிற் பிணக்கில்லை. என் மனம் இதை இவ்வாறு நிச்சயிக்கின்றது! மந்திரிகளும் குலகுருவும் வரட்டும். கேட்கின்றேன். இராமனைத் தனக்கு அரசனாக வடைவதற்கு இந்த அயோத்தி உண்மையில் பெருந் தவமே செய்திருத்தல் வேண்டும். பரந்தாமா! பக்தவத்ஸலா! நித்திய கல்யாண குணசீலா! நிரஞ்சனா! உனது கருணையால் இந்தப் புவியை இதுவரையில் முறை பிறழாது அரசுசெய்து வந்தனன். இனி என்னை உன்னுடைய திருவடித் தியானத்திலிருக்கப் பணித்து என்றென்றும் அழியாத இன்ப நிலையை யடையத் திருவருள் புரியவேண்டும். எங்கும் நிறைந்த வகநாயகனே!

ஸ்தோத்திரம்-விருத்தம்.

விடைக்குல மேழடர்த்த விண்ணவா விறல்சே னைந்து
படைக்கலம் பண்பினேந்தும் பரஞ்சுடர்ப் பொருளேமாறாக்
கொடைக்குல வள்ளால்என்றன் குறையற விளிதுகாப்பாய்
அடைக்கலம்புகுந்தேனின்பொ னம்புயத்துணைத்தாட்கம்மா

வஸிஷ்டர் பிரவேசிக்கின்றார்.

(தசரதர் எதிர்சென்று வணங்கி வரவேற்கிறார்.)

தச:—அடியேன் வந்தன மளிக்கின்றேன்! வரவேண்டும்! வரவேண்டும்! ஆசனத்தமர்ந்தருள்வீராக.

வசிஷ்:—கல்யாண்! கல்யாண்!

(ஆசனத் தமர்கிறார்.)

சுமந்திரர் முதலிய மந்திரிகள் பிரவேசிக்கிறார்கள்.

மந்திரிகள்:—(வசிஷ்டரைநோக்கி) சுவாமி! வந்தனம்

(வந்தனம் செய்கிறார்கள்.)

வசி:—மங்கள முண்டாகக்கடவது!

சுமந்திரர்:—(அரசனைப்பார்த்து) பிரபுவே! வந்தனம் செய்கின்றோம்.

(தசரதர் தலையசைத்து வரவேற்கிறார்.)

தச:—வீற்றிருக்கலாம்.

(மந்திரிகள் ஆசனத்தமர்கின்றனர்).



(சபையை நோக்கி) என் உணர்வை யொத்த உத்தமர்களே! இந்த ஆர்ய குலத்தில் தோன்றிய மநு முதலிய ஆன்றோர்கள் அரசாட்சி செய்துவந்ததுபோலவே, இந்த அயோத்தியிலிருந்து அறுபதினாயிரம் வருஷகாலம் இந்தப் பூமண்டலத்தை நடுநிலைமை தவறாமல் நான் ஆண்டுவந்தேன். இப்போது என் உள்ளம் மறுமைப் பயனைத் தேடுவதில் நாடியிருக்கின்றது. இனிஇந்தப் பூபாரந் தாங்க வல்லமை சிறிதுமில்லேன். ஞான சிகாமணிகளே! வருவதறிந்து கூறும் மதியூகிகளே! நீதி தவறாத நிலையினின்று மூன்று காலங்களையு முணர்ந்து தக்கவாறு யுக்தி சொல்லும் தைரிய தீரர்களே! இந்த மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் ஏற்பட்ட பகைவர்களையொழித்து, பெருங்கீர்த்தியொடு அரசு புரிந்த நான், இன்னும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் பகைவர்களுக்குள்ளாகி ஒதுங்கியிருந்து வாழப் பொறுப்பனோ? மனமென்னும் அறிவிலி ஏறிச் செலுத்தும் பஞ்சேந்திரியங்களையும் வெல்லுவது அரியதாமோ?

குருநாதரே! இஃதிருக்கட்டும்; மாய்வதன்முன்னே வகைப்பட்ட நல்வினையை, ஆய்வின்றிச் செய்தலல்லவா ஆண்மை. பெறுதற்கரிய செல்வமாகிய மறுமைச் செல்வத்தை யடைய முயல்வதன்றோ அறிவுடைய மாந்தர்க்கழகு! அந்த மறுமைச் செல்வங் கைவரப்பெற்றவர்யாவர்? போர்க்களத்தில் அஞ்சாமல் நின்று அமர்புரிந்து உயிர்துறந்தவர்களும், உண்மை ஞானம் கைவரப் பெற்றவர்களும், செல்வமானது இந்த மண்ணுலகத்திற்கே யன்றி மறுமைக்கில்லையென்று கருதிவிட்டவர்களும் ஆகிய இவர்களே யன்றோ? (என் ஐயனே) இந்த உலகத்தில் எப்போது பிறந்தோமோ அப்போது இறப்பதும் உண்மையல்லவோ? இதனை மறப்பதுபோல் மாந்தர்க்குக் கேடுதருவது முண்டோ? என்குல தெய்வமே! துறவற மென்னும புணையைக் கைக்கொண்டாலல்லது பிறவி யென்னும் பேராழி கடக்க வழியுண்டோ? காமாதி யுட்பகைகளை வென்று துறவென்னும் தனியரசாட்சியிற் சென்று நிலைத்த மனமானது இந்த அரசுரிமையை இனியது என்று கருதுமோ?

(வரும்) (சற்றுமௌனம்.)

வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதியார்.

# குதூகல வர்த்தனி.

## முதலாம் அங்கம்.

[பிரதேசம்-நாராணசாஸ்திரியார்வீடு. நாராயணசாஸ்திரியார் உட்கார்ந்து வாசித்துக்கொண் டிருக்கும்போது அவர் சிநேகிதராகிய சங்கரபூஷணராயர் பிரவேசிக்கின்றார்].

நாராணசாஸ்திரியார்:—

"கோவியர் நெறியை மாயவனழித்தகொ
டுமையோ அல்லதுவேய்வனத்து
மேவியமகளிர் கற்பினையீசன்விலக்கிய
தீமையோ யன்றோர்
தேவியரென்ன அவர் கைமங்கல நாண்
திருவுறப் பூண்டெழுதாத
ஒவியர்நிகர்த்த வேசையர் நிறையை
உலகினர் தினமழிப்பதுவே".

(என்றுபாடி முடித்தவுடன் சங்கரபூஷணராயர் பிரவேசிப்பதைப் பார்த்து)

நாராயண:—ராயரவர்களே! வரவேண்டும், வரவேண்டும். தாங்களென்ன ஏழெட்டுநாளாக இந்தப்பக்கம் திரும்பவில்லையே!

சங்கரபூஷணராயர்:-நான் ஊரிலிருந்தால் வராமலிருப்பேனா? திடீரென்று என் மாமனாரிடமிருந்து கடிதம் வந்தது; தக்ஷணமே புறப்பட்டுவரும்படி எழுதியிருந்தார். என்னைத் தங்களோடு வார்த்தை சொல்லிவிட்டு, வீட்டுக்குப்போனவுடனே அதை என் கையில் கொடுத்தார்கள். அஃதென்ன வெள்ளிக்கிழமையா? (யோசித்து) ஆமாம், வெள்ளிக்கிழமை சாயங்காலமே புறப்பட்டுப் போய்விட்டேன். நேற்று ராத்திரிதான் வந்தேன். இதோ இன்றுகாலை உங்களிடம் வந்தேன்.

நாராயண:-சரி, அங்கே எல்லாரும் க்ஷேமந்தானா? அவ்வளவு அவசரமாய்ப் போனதென்ன? இத்தனை நாள்கழித்து வந்ததென்ன?

சங்கரபூஷண:-என் மச்சினிக்குக் கலியாணம் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறார். வரனைப் பார்க்கவும், கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவும் வேண்டி என்னை வரும்படி யெழுதினாராம்.

(வரும்.)

சோக்கலிங்கம் பிள்ளை, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAY 1916
MADRAS

# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ".

VOL-11 தொகுதி-11 | March மார்ச்சுமீ 1916. | No 8. பகுதி-8

## கேட்டி லுறுதி கூட்டு முடைமை.

பொருளிழந்த காலத்தில் மனத்தளர்ச்சி யுடையவர் பின் பொருளுடையவராக வாழ்தல் ஒரு வாற்றானு மின்மையின், எவ்வகைத்தாய விபத்து நேர்ந்த காலத்திலும் மனந்தளரா திருப்பவரே பொருளுடையவராய், பிறர் மதிக்க வாழ்வ ரென்பதை நம்மனோர் நன்கு கவனித்து வருவாராயின், எவ்வகைத்தாய விபத்து நேர்ந்த விடத்தும் மனத்தளர் வடைவதில்லையாம். தமக்குக் கேடுண்டாய காலத்தில் இனி நா முன்னுக்கு வருவது எவ்வாற்றாலா மென்று மனங்கலங்கி வாட்டமுற்று வதைபவர் முன்னுக்கு வருவது முக்காலத்திலுமில்லையாம். ஒருவர் பொருளிழந்த காலத்தில் தைரியம் தன லட்சுமி; தைரிய மில்லாரிடத்துத் தன லட்சுமி சேர்வதில்லை; மனவுறுதி யில்லார் வாழ்வ தடையாரென்றற் றொடக்கத்துவாக்கியங்களைக் கவனித்து, அது பற்றிக் கலங்காமலுறுதியாக விருப்பாராயின், அவர் வறுமையுடையவராக வாழ்வது நிச்சயமாக வில்லையாம். மனவுறுதியில்லாதார் பொருளுடையவரா யுள்ளகாலத்திலும் யாமிப் பொருளை யிழந்து விடுவோமாயின், மீண்டும் பொருளுடையவரா யிருப்பது கூடாதேயென்று கலக்க முற்றிருத்தலால், வறுமையுடையவராகவே யிருக்கின்றனர்; மனவுறுதி யுடையவர் பொருளை யிழந்த காலத்திலும் சீ, இது கெட்டது; வேண்டுமானால் நாளைக்கே நாற்பது லட்சம் சம்பாதித்துக் கொள்ளலாம்; பொருள் தேடும் வகையை யறியாதவான்றோ பொருளிழந்தமைக்காக

வருத்த முறல் வேண்டும்; பொருள் தேடும் வகையை யறிந்துள்ள
ராம் இழந்த பொருளைப் பற்றியேன் வருத்த முறல் வேண்டு
மென்று கலக்க முறுநிருத்தலால், செல்வ முடையவராகவே
யிருக்கின்றனர். மனவுறுதி யுடையார் செல்வ முடையவராகவும்;
அஃதில்லாதார் வறுமையுடையவராகவுமிருத்தலை யூன்றிநோக்கு
வார்க்கு மனவுறுதி ஒவ்வொருவர்க்கும் அவசியமாகவேண்டுமென்
பது விளங்காதிராது. பொருளென்பது மணி (இரத்தினம்),
பொன், வெள்ளி, நெல், காணி, மனை முதலியனவாம். இவை
யெல்லாவற்றையு மாவது இவற்றுள் பலவற்றையாவது சிலவற்
றையாவது இழவாதிருத்தல் எவர்க்கும் எப்போதும் முடியாத
தாம்; ஆகவே, நம்மனோர் நம்மிடத்திலுள்ள பொருள்களை
யிழவாதிருத்தல் முடியாது; அவற்றையிழப்பதுபற்றி மனத்தள
ர்வடைவது கூடாது; மனவுறுதியிருந்தால் இழந்தபொருள்களை
யாவது அவற்றை யொத்த பொருள்களையாவது அவற்றினும்
மேலாய பொருள்களையாவது சம்பாதித்துக்கொள்ளலாமென்று
தீர்மானித்து, எத்தன்மையதாயவிபத்து நேர்ந்தவிடத்தும் மனந்
தளராதிருத்தல்வேண்டும்; இவ்வாறிருப்பவர் பொருள்களையிழப்
பதுபற்றி வருத்த முறுவதேயில்லையாம்.

தங் கைப்பொருளை யொருகால விசேடத்தால் இழந்த
விடத்து, அதுபற்றி மனத்தளர்வடையாது, மீண்டும் பொருள்
தேடும்வகையையாராய்ந்து வருபவர் நிச்சயமாகப் பொருளுடைய
வராவரென்பதை நம்மனோர்க்கு நன்குணர்த்தவே நமது ஞானத்
தாயாராகிய ஔவைப்பிராட்டியார் "கேட்டி லுறுதி கூட்டு
முடைமை—(ஒருவன்) பொருளிழந்த காலத்தில் (மனந்தளராது
உறுதியுடையவனாயிருப்பானாயின், அந்த) உறுதியானது (அவ
னுக்கு முன்போலச்) செல்வத்தைச் சேர்க்கும்" என்றருளிச்
செய்தனர். ஆத்திசூடியில் நமது ஔவைப்பிராட்டியாரவர்கள்
"மனந்தடுமாறேல்—(தீவினையாலாவது உள்ளபொருளை யிழந்தமை
யாலாவது மெய்வருத்தத்தாலாவது துன்பமுண்டாயவிடத்து அது
பற்றி நீ) மனந்தடுமாறு திருக்கக்கடவாய்" என்றருளியிருப்பது
'கேட்டி லுறுதி கூட்டு முடைமை' என்னுமிவ்வாக்கியத்தை வற்
புறுத்துவதாமென்பது சிறிதூன்றி நோக்குவார்க்கு நன்கு விளங்
கும். மனந்தடுமாறுமை=மனங்கலங்காமையாம்.

REGISTERED 22 MAY 1916 OFFICE ... MADRAS



"பொருளிலார்க் கின்ப மில்லை புண்ணிய மில்லை யென்றும்,
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை, கருதிய கரும
மில்லை கதிபெற வழியு மில்லை, பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரே
தமாய்த் திரிகு வாரே" என்று வழங்கும் செய்யுளை யூன்றி
நோக்குமிடத்துப் பொருளில்லாதார்க்கு இன்பம், புண்ணியம்,
புகழ், ஒளி (நன்குமதிப்பு), நினைத்தகாரியத்தை நினைத்தவாறே
செய்துமுடித்தல், புண்யலோகப்பிராப்தி யென்பனவற்றுள் ஒன்
றும் சம்பவிப்பதில்லையாம்; அவர் நடைப்பிணமென்று சொல்லப்
படுவரென்பது விளங்குதலால், பொருள்தேடுதற்குரியதென்பது
நன்குவிளங்கும். இழந்தபொருளைத் தேடுவதற்கேயன்றி, உள்ள
பொருளைக் காப்பதற்கும் உறுதி யின்றியமையாது வேண்டியிருத்
தலின், மனங்கலங்காமை அல்லது மனந்தளராமை யென்னு
முறுதியுடையவராக நாம் பெரிதுமுயற்சிசெய்தல்வேண்டும். இவ்
வுறுதியொன்றிருக்குமாயின், நாம் இன்பம், புண்ணியம், புகழ்,
ஒளி முதலியவற்றையெல்லா மிகவெளிதிற்பெறுதற்குரியவரா
வோம். தீயவழியால்வரும் பொருள் ஆக்கம், பாவம், இகழ் முத
லியவற்றைத் தருவதாமென்பதனை நன்குகவனித்துப் பொருள்
களை யிழப்பதுபற்றிக் கலக்கமுறாது, அவற்றை மேன்மேலும்
தேடிவருவோமாயின், நாம் இகத்திலேயன்றிப் பரத்திலும்
மேன்மையடைவது தவறாதாம்.

(1) வசிட்டர் சாபத்தால் சண்டாளத் தன்மையைப்பெற்ற
திரிசங்குராஜன் விசுவாமித்திரர் வாயிலாகப் புண்ணியலோக
மடைந்தானன்றோ? அவனதனை யெதனாலடைந்தான்? உறுதியா
லன்றோ?

(2) மேனகையைப் புணர்ந்தும், அரம்பையைக் கல்லாகச்
சபித்தும் தாம்செய்த தவத்தையிழந்த விசுவாமித்திரர் தவத்
தால் மேன்மைபெற்று, வசிஷ்டமாமுனிவரால் பிரஹ்மரிஷியே
யென்றழைக்கப்பட்டாரன்றோ? அவரப்பாக்கியத்தை யெதனா
லடைந்தார்? உறுதியாலன்றோ?

(3) ஸாவித்திரி தன்கணவனது உயிரையமனிடத்திருந்து
மீட்டது? எதனால்? உறுதியாலன்றோ?

(4) தமயந்தி தன்கணவனைக் கண்டடைந்தது எதனால்? உறு
தியாலன்றோ?

(5) துருவச்சிறுவன் காடுசென்று கடுந்தவஞ்செய்து, சுவாமியினருளை யுறுதியாலன்றோ பெற்றான்?

(6) மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைப் பூசித்து யமனைவென்று, என்றும்பதினாறுவயதினராயிருக்கும் பாக்கியத்தை யுறுதியாலன்றோ பெற்றார்?

இங்ஙனம் தம்மனவுறுதியால் மேன்மையுற்று விளங்கியவரெண்ணிலராவர். எத்தன்மையதாயவிபத்து நேர்ந்தகாலத்திலும் மனங்கலங்காது காரியத்திற்கண்ணு யிருப்போமாயின், நாமும் அவர்போல மேன்மையுற்று விளங்குதல் கூடும்.

பொருளையிழந்தகாலத்தில் மனங்கலங்காதிருப்பவர் முயற்சி, பொருள், கொடை (ஈகை) முதலியவற்றை முறையேயுடையவராவரென்பதனை நன்குணர்ந்து, கேட்டினுறுதி யுடையவராயிருப்பவர் எப்போதும் வாட்டமடையாது வாழ்வரென்பது தவறுவதில்லையாம்.

"அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்:—

(இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும் தன்னுள்ளக் கோட்பாடுவிடாதவனை யடைந்ததுன்பங்கள் தாம் துன்பத்திலே பட்டுப்போம்.)

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

## சுகத்தெளிவுரை.

(முன்தொடர்ச்சி.)

### கடவுள் வழிபாட்டு முறை.

கடவுளை உண்மையாய் வழி பட வேண்டுமாயின், அதற்கு அதிகாரமும் வேண்டாம், செல்வமும் வேண்டாம், தனியிடமும் வேண்டாம், எல்லாவிதக் கோணல்களும் நீங்கிய சுத்த இருதயமே வேண்டும். ஸர்வ வியாபகமான பூரண வஸ்துவினிடத்தில் உங்கள் எண்ணங்களை நிறுத்துங்கள். அகத்தும் புறத்தும் ஒளி செய்கின்ற ஜோதியே அவரது ஜீவிய பிரசன்ன ஸந்நிதான



மாகின்றது. எல்லாப் பொருள்களையுஞ் சோதனை செய்து, இதனையே யுண்மையென் றறியுங்கள். சுவாசம் சுபாவமாய் உச்சுவாச நிச்சுவாச மாகும்போது, ஒருவருங் கேளாதபடி மவுனமாயோ, அல்லது உங்களுக்குப் பரிசுத்த மெனத்தோன்றும் நாமத்தாலோ, அவரை அழையுங்கள். அப்படிப்பட்ட நாமம் பலவாயிருக்கு மென்னில், எவனுக்கும் மனவருத்தத்தை உண்டு பண்ணக் கூடாத நாமத்தைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஸ்திதி இடங் கொடுக்குமாயின், உங்களுக்கு அதி சமீபத்தில் தமது சக்தியை அக்கி ரூபமாக வெளிப் படுத்தியிருக்கும் கடவுளுக்கு, சுவை நாற்றங்களோடு கூடி இனியனவாகிய பொருள்களை மனிதன் மூலமாக அர்ப்பணம் பண்ணுங்கள். உங்கள் உதவியைப் பெறக் கூடிய பிராணிகளுள் ஒன்றேனும் வருந்தும்படி பாராதேயுங்கள். இவ்விதமானசெயல்களைப் புரிந்து உங்கள் ஜீவிய காலத்தில் சந்தோஷமாய் வாழ்ந்திருங்கள். மரணம் வரும்பொழுது, அது உங்களுடைய சந்தோஷத்தை யதிகரிப்பிக்குமே யன்றி யதனைக் கெடுத்து விட மாட்டாது.

எல்லா விஷயங்களிலும் மெய்ம்மையையும் பொய்ம்மையையும் பகுத்தறிந்து, மெய்ம்மையை யன்போடுபசரித் தொப்புக் கொள்ளுங்கள். எல்லாப் பிராணிகளையும் உங்களுடைய சொந்த ஆத்மாவாயிருக்கும் கடவுளின் பலவித உருவ வெளிப்பாடுகளென்று மதித்து உயிர்களையெல்லாம் ஸம திருஷ்டியோடு பாருங்கள். நெறியைப்பற்றி நின்று ஒருவருக்கொருவர் தைரியஞ் சொல்லிக்கொண்டு ஸன்மார்க்கத்தை அநுஷ்டியுங்கள். உங்களிடத்துத் தெய்வக் கிருபையால் ஐசுவரியம் நிறைந்திருக்குமாயின், அஃதவ்வளவும் உங்களுடைய சொந்த அநுபவத்திற் கென்று கருதாதேயுங்கள். அஃதவ்வாறாயின், உங்களுடைய உடைமையெல்லாம் முற்றிலும் அநுபவித்துத் தீர்தற்காக உங்கள் வாழ்நாள் அளவையின்றி நீட்டப் பெற்றிருக்குமே! மனித ஜாதியினின்றும் வேறு பிரித்து அபூர்வ சிருஷ்டியாக வல்லவோ கடவுள் உங்களை உண்டு பண்ணியிருப்பார்? கடவுளது கருத்தில், பூமியில் இருக்கும் எல்லா நற்பொருள்களும் அவருடைய சிருஷ்டிகள் யாவற்றுக்கு மென்றே ஏற்பட்டிருக்கின்றன. எல்லா விஷயங்களிலும் இப்படி விசாரித்துக் கடவுளுடைய கருத்து இன்னதெனக் கண்டு பிடிக்கப் பாருங்கள். கண்டு பிடித்தவுட

னே, அக்கருத்து நிறை வேறுதற்குரிய பிரவிருத்திகளில்
அன்போடு ஊக்கத்தோடும் முயன்று அதை நிறை வேற்றுங்
கள். இந்த விதமாக நீங்கள் கடவுளது அருளால், பகை சச்சர
வில்லாமல் வாழ்ந்திருப்பீர்கள். அப்பொழுது வறட்சியும் வெள்
ளமும் துக்கமும் நோயும் உண்டாவதில்லை; மரணமுங் காலந்
தப்பி வருவதில்லை. சாந்தியுந் திருப்தியும் உங்கள் வாழ் நா
ளிற் குடிகொண்டு ஆளட்டும். உங்களுக் கின்றைப் போ
ஜனம் இருக்குமாயின், இவ்வளவு தூரம் உபகரித்த பகவான்
நாளையும் உபகரிக்க ஸித்தமாயிருக்கின்றார் என்று விசுவசித்து
நாளைய விஷய மொன்றையுங் குறித்துக் கவலைப்படாதேயுங்கள்.

ஜீவநார்த்தத்திற்குப் போதுமான தில்லாமல் ஒரு பிரா
ணியும் வருந்த மனிதர் இடங் கொடுத்தல் கூடாதென்பது கடவு
ளுடைய கட்டளையாகின்றது. கவனமாய்த் தேடிப் பார்த்துப்
பசிக்கிறவர்களுக் கன்னமும் ஆடையில்லாதவர்களுக் காடை
யுங் கொடுங்கள். அன்போடு கூடிய விசுவாசத்தோடு ஜீவிய
தெய்வத்திற்கு ஹோம மூலமாய் ஹவிஸ்ஸை கொடுங்கள். அவர்,
உங்களுடைய கருமங்களால் மகிழ்ச்சி யடைந்து பூமியை ஏராள
மான தானியாதி பொருள்களால் நிரப்பி, மனிதருடைய இருத
யங்களைச் சந்தோஷிக்கச் செய்வார்.

அக்நிக்கும் ஜீவராசிகளுக்கும் உணவு கொடுத்தா லொழி
யக் கடவுளுக்கு உண விட்டதாக எண்ணுதல் கூடாது. இவைகள்
உண்ணாதிருக்கு மாயின், கடவுளு முண்டாரல்லர். இவ்வித
மாகக் கடவுளுக்கு உணவு கொடுத்தாலன்றி, பரிசுத்தமான
ஸ்தலங்களில் வேத சாஸ்திர மந்திர பூர்வகமாய்க் குவியல் குவிய
லாக நைவேத்தியங்கள் படைத்தாலும் அவர் ஒப்புக் கொள்ள
மாட்டார்.

லௌகிக ஞான பாண்டித்திய முடைய மாந்தர், அக்நி
நமது வயிற்றிலிருக்கின்றது; நா முண்ணும்போது அக்நி யுண்
ணுகின்றது என்கின்றனர். வாஸ்தவந்தான். ஆனால், எண்
ணெயையுந் திரியையும் விழுங்கி விடாமல், அதில் விளக்கை ஏன்
ஏற்றல் வேண்டும்? சாஸ்திரஞ்ஞனை நிலக்கரியால் நிரப்பாமல்,
புகை வண்டி யந்திரத்திற் கதனை யுணவாகக் கொடுப்பானேன்?
தசையு மெலும்பும் மண்தானே? நல்ல மாசூல் கிடைக்குமென்று



நம்பி மனுஷர்களுடைய சரீரத்தை ஏன் உழுகின்றார்களில்லை?
மெய்யுணர் வுடைய மனிதன், கடவுளுடைய வழிகளை யநு
சரித்து நடக்கின்றான்; அதனால், இந்த உலகத்தில் ஸ்வகாரிய
சித்தி யடைவதோடு, கடவுள் விதித்த நெறியில் வழுவா தொழு
கிப் பெறப்படும் ஸந்மார்க்க சுகத்தையு மடைகிறான். காலால்
நடந்து போக யாட்டேனென்று ஒருவன் தலையைக் கீழே யூன்
றிச் சென்று நடக்கவு முடியாமல் கழுத்தை முறித்துக் கொள்
வது போல, கடவுள் விதியைக்கடந்து, மனிதர் பாவஞ் செய்து
வருகின்றனர். உண்மை ஞானத்தை யடைந்தவர்கள், காரியாதி
களில் இதற்கிது பொருத்த முள்ளதென்றறிந்து அதனைச்செய்து
முடிக்கின்றார்கள். ஜீவர்கள் மூலமாகவும் அக்நி மூலமாகவும்
கடவுளுக்கு நிவேதிப்பதும் இப்படியே கிரஹிக்கத்தக்கது.

மனிதருடைய இருதயங்களில் பக்தியிருந்த இடத்தில்
ஆடம்பர ஜீவநம் நிலைத்திருக்கின்றது; ஸமபாவனை அவர்களை
விட்டுப் போய் விட்டது. இளவரசர்களும் செல்வ அதிகாரங்
களுடையவர்களும் தங்கள் இருதயங்களில் வேறெண்ணங்களைக்
குடியேற்றி விட்டனர். அவர்கள் அபிப்பிராயத்தில், இவ்வுலகம்
நம்முடைய சொந்த அநுபோகத்திற் கேற்பட்டதேயன்றி
நம்மிடத்திற் சம்ரக்ஷணைக்காக விடப்பட்டவர்களின் நன்மை
யின் பொருட்டன் றென்று தோன்றுகின்றது. பூமியில் உண்
டாகும் உணவுப் பதார்த்தங்களெல்லாம் எங்களுக்கு மட்டும் ஏற்
பட்டனவே யொழிய ஜீவராசிகளுக்காவது அக்நியில் ஜீவிய தெ
ய்வத்திற்கு அர்ப்பணம்பண்ணுதற்காவது ஏற்பட்டனவல்ல வென்
றன்னோர் அறைகின்றனர். தங்கள் எண்ணப்படியே செய்கை
களையுந் திருப்பித் துன்பமே தங்களுக்குப் பலனாக உடையவர்
களாய்ப் பகை சச்சரவுகளிலேயே அவர்கள் வாசஞ் செய்கின்
றார்கள்.

ஓ மாந்தர்காள்! இப்போதாவது உங்களுடைய இருதயங்களி
னின்றும் அகங்காரத்தைப் போக்கிக் கடவுளுடைய கட்டளை
களையும் இவ்வுலகத்தில் அவருடைய நெறிகளையும் அறியத் தலைப்
பட்டுக் கடவுளதாணைக் கடங்கிப் பராநந்தத்திற் களித்துச் சாந்தி
யோடு வாழ்ந்திருங்கள். ஓம் சாந்தி, பரசாந்தி யுங்கட்கெல்லா
முண்டாவதாக.

## நீதிசாரம்.

எல்லாக்காரிய முயற்சிக்கும் பிரதமத்தில் சர்வகாரணராகிய கடவுளை வணங்கவேண்டுமென்பது மனிதருக்குக் கடமையாக விருக்கின்றது.

எங்ஙனம் எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாவதாக விருக்கின்றதோ, அங்ஙனமே உலகத்திற்கெல்லாம் பகவானே முதலாகவிருக்கின்றார். அங்ஙனமாய ஆதிபகவானுடைய பாதாரவிந்தங்களைத் தொழாதவர்கள் எவ்வளவுகற்றும் பயனில்லையாம்.

அன்பருடைய மனத்தின்கண் வாசஞ்செய்யும் பகவானுடையதிருவடிகளைப்போற்றிப்பணிபவர், பரலோகத்தில் நற்கதியடைந்து அழிவில்லாமல் எப்பொழுதும் ஒருதன்மையினராக வாழ்வார்கள்.

விருப்பு, வெறுப்பில்லாத பகவானுடைய திருவடிகளைத் தஞ்சமென்றடைந்தவர்கட்கு எக்காலத்திலும் பிறவித்துன்பமில்லையாம்.

இறைவனாகிய பகவானது கீர்த்தியை விரும்பித் துதிசெய்பவர்க்கு அந்தகாரம்பொருந்திய கர்மபந்தமொன்று மின்றாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களின் வழியால் வருகின்ற ஐந்தாசைகளையும் நீக்கினவருடைய ஒழுக்கநெறியில் நிற்பவர்கள், பிறப்பிறப்பில்லாமல் எக்காலத்தும் ஒருதன்மையராக வாழ்வார்கள்.

ஒப்பில்லாத பரமாத்வாவினது திருவடிகளையடையாதவர் தமக்குள்ள மனக்கவலையினின்றும் நீங்கமாட்டார்கள்.

சர்வதயாபரனாகிய கடவுளது பாதாரவிந்தங்களைச் சேர்ந்தவர்கள் தவிர ஏனையோர் பிறவிக்கடலைக் கடக்கச் சக்தியுள்ளவராகமாட்டார்கள்.

அஷ்டகுணங்களையுடைய பரமாத்வின் பாதங்களைவணங்கி நமஸ்கரிக்காதவர்கட்கு யாதொரு பயனுங் கிடைக்கமாட்டாது. ஆதலின், நம்மனோரைப் படைத்து, காத்து, வீடுபெறச்செய்யும் பகவானை ஸ்துதி செய்யவேண்டுவது அவஸ்யமென்றேற்படுகின்றது.

## ஸுரேந்த்ரன்

(முன் தொடர்ச்சி)

### வனஸஞ்சாரம்.

"Truth loves open dealing"—Shakespeare.—சூதும் கபடமுமற்ற பகிரங்கமான நடத்தையையே ஸத்யம் விரும்புகின்றது.

ஸ்ரீதரருக்குத் தேஹவ்யாதி தினேதினே அதிகரித்து வந்தது. அன்று நடந்த சண்டையில் அவர் கலக்காமல் இருந்தால் ஒருவிதநோயும் அவரை அணுகியிராது. மனோவ்யாகூலமே அவரது தேஹவ்யாதியை அதிகமாக்கியதுபோலும்! அவர் ஸதாகாலமும் "நிலம்! நிலம்!!" என்றே பிதற்றிக்கொண்டிருந்தார். வனத்தில் வசிப்பதற்கு அவருக்கு இஷ்டமேயில்லை. கிரிஜாவும் ஸுரேந்த்ரனும் தம்மாலியன்றவரை அவருக்குத் தேற்றுதல் சொல்லி உபசாரம் செய்துவந்தனர். இப்படிச் சில நாள்கள் கழிந்தன.

தனது தினவாழ்க்கையின் லக்ஷணத்தைக் கிரிஜாவுக்குப் ப்ரத்யக்ஷமாகக் காட்டும்பொருட்டு ஸுரேந்த்ரன், ஒருநாள் பகல் மூன்றுமணிக்குத் தன் பர்ணசாலைமுன், கிரிஜாவுடன் வந்து உட்கார்ந்தான். சிறிதுநேரத்துக்குள், அபிராமனும், க்ருஷ்ணனும் மூன்று பிச்சைக்காரர்களைப் பிடித்துவந்து ஸுரேந்த்ரன் முன் நிறுத்தினார்கள்.

முகுந்தன்:—காட்டிற்குள் வந்ததற்காக, நீங்கள் காணிக்கை செலுத்தவேண்டும்.

முதல்பிச்சைக்காரன்:—ஐயா! நாங்கள் பரதேசிகள். பிச்சையெடுத்து ஜீவனம்செய்பவர்கள். என்னிடம் ஒருபைசாகூட இல்லை.

இரண்டாம் பிச்சைக்காரன்:—இந்தக் கந்தை வஸ்த்ரத்தைத் தவிர வேறொன்றும் என்னிடம் கிடையாது.

மூன்றும் பிச்சைக்காரன்:—ஐயா! நான் பிச்சையெடுத்துச் சேர்த்துவைத்திருந்த ஒரு ரூபாய்தான் என்னிடம் இருக்கிறது. வேண்டுமானால், அதை எடுத்துக்கொள்ளுங்கள்.

ஸுரேந்தரன்:—இவர்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. முகுந்தா! நீ இவர்களைப் பரிசோதித்துப்பார்.

முகுந்தன்:—(பரிசோதனை செய்தபின்) ஸுரேந்த்ரரே! முதல், இரண்டு பிச்சைக்காரர்களிடம் தனித்தனி 20-ஸவரன்கள் இருக்கின்றனன். மூன்றாம் பிச்சைக்காரன் உண்மையைச் சொன்னான். அவனிடம் ஒரு ரூபாய்தான் இருக்கிறது.

ஸுரேந்த்ரன்:—ஒருரூபாய் வைத்திருந்தவனிடம் அவனுடைய ஸத்யத்திற்காக ஒருஸவரன் கொடுத்துவிட்டு மீதிபணத்தை ராஜராஜேச்வரிக்குக் கோவில்கட்டச் சேர்த்துவரும் நிதிக்கும், ஸ்ரீகாசியில் அநாதைப்பிள்ளைகளின் போஷணார்த்தம் சேர்க்கப்படும் நிதிக்கும் பங்கிட்டுவை முகுந்தா!

மூன்றாம் பிச்சைக்காரன்:—ப்ரபுவே! உமது தர்மகுணத்துக்காக வந்தனம்.

அபிராமன்:—அபாரதம்! அபாரதம்! ஸாதாரண ஸுரேந்த்ரரை முகஸ்துதிசெய்யக்கருதி இவன் "ப்ரபு" என்றழைக்கிறான். அதற்காக ஒரு ரூபாய் அபாரதம்.

ஸுரேந்த்ரன்:—ஆம், அவனிடம் ஸவரனை மாத்ரம்விட்டு, ரூபாயை எடுத்துக் காசி விச்வேச்வரர் ஆலயத்து ஸத்ர நிதிக்குக் கொடுத்துவிடு. இன்றுராத்ரி நடக்கும் விருந்துக்கு வாருங்கள். (எல்லோரும் போய்விடுகின்றனர்.)

கிரிஜா:—ஸத்யத்தை ஸதா பேசுபவர்களைத் தாம் ஸம்ரக்ஷிக்கும் விதம் மிகவும் புகழற்பாலது.

இதற்குள் கோவிந்தனும் அபிராமனும், வழிப்ரயாணம் செய்துவந்த ஒரு தம்பதிகளை அழைத்துக்கொண்டு வந்தனர். வரும்வழியில் புருஷன் தன்மனைவியைநோக்கி "அடா! நாம் திருடர்கள் வசம் அகப்பட்டுக்கொண்டோம். மணியோ ஐந்தாகிறது. ராத்ரியில் என்ன ஆபத்துகள் ஸம்பவிக்குமோ?" என்றான்.

ஸுரேந்த்ரன்:—தம்பதிகளே! நாங்கள் உங்களைக் கொள்ளையடிக்கமாட்டோம். திருடர்களைத் திருடுவதும், அந்யாயம் செய்பவர்களுக்கு அந்யாயம் செய்வதும் எமதுதொழில்கள். இத்தொழிலில் கிடைக்கும் பணத்தை நாங்கள் தர்மத்திலேயே செலவழிக்கின்றோம். நாங்கள் ஸ்த்ரீகளுக்குத் துன்பம் செய்வதே கிடையாது. ஆகவே நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இன்று ராத்ரி இங்குப் போஜனம் செய்துவிட்டுக் காலை நீங்கள் உங்கள் ஊருக்குப்போகலாம்.

(உடனே அவர்கள் போய்விட்டார்கள்.)



சிறிது நேரம்கழித்து, முகுந்தன், கோவிந்தன், அபிராமன் ஆகிய இவர்கள் மூன்று ஸந்யாஸிகளை ஸுரேந்த்ரன் கிரிஜா-இவர்கள்முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

அபிராமன்:—ஹே! துறவிகளே! உங்களிடத்தில் எவ்வளவு பணம் இருக்கிறது?

முதல் ஸந்யாஸி:—ஐயா! எங்கட்குப்பணம் ஏது? ஸவரன் ஏது? ஸ்திரமான இடமே எங்களுக்குக் கிடையாதே. ஊரூராய்த் திரிந்து, ஸ்வாமி தர்சனம் செய்வதும், ஜனங்களுக்கு அவ்வப்பொழுது கடவுளைப்பற்றிப்போதிப்பதுமே எங்களுடையதொழில்; ஸகலத்தையும் வெறுத்துத்தள்ளிய எங்களுக்குப் பண ஆசை ஏது?

அபிராமன்:—உங்கள் தத்வ ஞானம் ஓர் மூலையில் கிடக்கட்டும். உங்களிடத்தில் எவ்வளவுபணம் இருக்கிறது? சீக்ரம் சொல்லுங்கள். இல்லாவிட்டால் இந்த வில்லுக்கு இரையாவீர்கள்.

முதல் ஸந்யாஸி:—ஐயா! என்னிடம், பத்துநாட்களுக்கு முன் ஒரு பக்தன் கொடுத்த ஒருரூபாய் மாத்ரம் இருக்கிறதாக நினைக்கிறேன்.

இரண்டாவது ஸந்யாஸி.—அவ்வளவுதான் என்னிடமும் இருக்கிறது,

மூன்றாவது ஸந்யாஸி:—இப்பொழுது குளிர் அதிகமாதலால் சால்வை வாங்கிக்கொள்ளும்பொருட்டு நேற்று பரோபகாரகுணமுள்ள ஒரு மஹான் இரண்டு ரூபாய்க் கொடுத்தார்; அதுதான் என்னிடம் இருக்கிறது.

கிரிஜா:—முகுந்தா! இவர்கள்மீது எனக்குஸந்தேஹமாயிருக்கிறது. இவர்களை ஸரியாகப் பரிசோதனைசெய்.

முகுந்தன்:—(சோதனை செய்தபிறகு) ஸந்யாஸிகளே! உங்களுக்கு வெட்கமில்லையா? ஸுரேந்த்ரரே! இவர்கள் ஒவ்வொருவரிடமும் முப்பது முப்பது ஸவரன்கள் இருக்கின்றன.

ஸுரேந்த்ரன்:—ஒன்றுந்தெரியாத பாமரஜனங்களிடமிருந்து அந்யாயமாகப் பணத்தைப்பறிப்பதுடன், பொய்யும் சொல்கின்றீர்களே! இந்த அழகுக்கு ஸந்யாஸிவேஷம் எதுக்கு ஐயா! உங்களுக்கு? முகுந்தா! இந்த 90-ஸவரன்களையும், திலீப மஹாராஜா

வரும்போது நாம் செய்யப்போகும் வரவேற்பு உத்ஸவ நிதியில் சேர்த்துவை. உங்களுடைய அதர்மமும் அஸத்யமும் உங்களிடமே இருக்கட்டும். ராத்ரி காலமாய்விட்டபடியால் இப்பொழுது இங்குச் சாப்பிட்டுவிட்டு, தோஷமற்ற முடஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கக் காலையிலெழுந்து புறப்பட்டுப்போங்கள்.

ஸுரேந்த்ரன், கிரிஜா முதற்கொண்டு ஸகலரையும் பர்ணசாலைக்குள் அனுப்பிவிட்டு முகுந்தனை மாத்ரம் அழைத்துத் தனியாகப்பேசிப் பின் வருமாறு தீர்மானித்தான்:—“முகுந்தா! ஸ்ரீதரர் கொடுக்கவேண்டிய கடன் தவணைநாள் நாளைக்குப் பன்னிரண்டுமணிக்குமேல் முடிந்துவிடுகின்றது. மார்த்தாண்டனோ ஈவு இரக்கமற்றவன்; ஸ்ரீதரரோ, ஸதா நிலம்! நிலம்!! என்றிருக்கின்றார். நான் கிரிஜாவை மணக்க உத்தேசித்துள்ளேன். நிலத்துக்காக நான் பணம்கொடுத்து, கிரிஜாவை மணந்துகொண்டால் நிலம் எனக்குத்தானே ஸொந்தமாய்விடும்? ஆகையால் நீ, விடியற்காலையிலெழுந்து உதயபுரிக்குச்சென்று மார்த்தாண்டனையும், கடன் பத்ரத்தில் ஸாக்ஷிபோட்டுள்ள, ப்ரதமந்யாயாதிபதி ஞானஸாகரரையும் கையோடு அழைத்துவா. அவர்கள் உண்மையாயும் ந்யாயமாயும் நடந்தால் நாமும் அங்ஙனமே நடந்துகொள்வதாகச் சொல். வரும்பொழுது தவறாமல் ஸ்ரீதரர் எழுதிக்கொடுத்த ஜாமீன் பத்ரத்தை எடுத்துவரச்சொல்”

ராத்ரி எட்டுமணியிருக்கும். எல்லாரும் சாப்பிட்டுவிட்டு ச்ரமபரிஹாரம் செய்தனர். முகுந்தன், அதிதிகளையெல்லாம் நோக்கி, “இன்று ஸம்ப்ரமாக நமக்குப் போஜனம் அளித்த ஸுரேந்த்ரன் நீடூழிவாழ்க! மஹா ராணிபோல்விளங்கும் கிரிஜா பல்லாண்டு வாழ்க!! திலீபமஹா ராஜா உதயபுரிக்குச் சீக்ரமாகத் திரும்பிவர கடவுள் க்ருபை செய்வாராக!!! “என்று வாழ்த்தச்சொன்னான். அதிதிகளெல்லாம் மூன்றாவது வாழ்த்தை ஸந்தோஷமாக உரத்திச்சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது ஓர் போர்வீரன் அங்கு வந்தான்.

முகுந்தன்:—உம்மைப்பார்த்தால் உயர்ந்த வம்சத்தவரைப் போல்தோன்றுகின்றீர். ஆகையால் நீர் இக்காட்டில் ப்ரவேசித்ததற்காக ஒரு ஸவரன் காணிக்கைதரவேண்டும்.

போர்வீரன்:—இதோ, எடுத்துக்கொள் ஒரு ஸவரன், (தனக்குள்) இவர்கள் என்னை இன்னாரென்று அறிந்துகொள்வார்களோ!



ஸுரேந்த்ரன்:—ஐயா! உத்தமவீரரே! நீர் திலீபரைச்சேர்ந்தவரா? அல்லது மஹேசனைச் சேர்ந்தவரா?

போர்வீரன்:—நான் மஹேசனைச்சேர்ந்தவன். நீர்யார்?

அபிராமன்:—அந்யாயம்! அபராதம்! மஹேசனைச் சேர்ந்தவராதலால் இரண்டு ஸவரன்கள் அபராதம். (ஸுரேந்த்ரரைச்சுட்டி) அவர் எங்கள் தலைவர். அவர் பெயர் ஸுரேந்த்ரர்.

போர்வீரன்:—இந்தா இரண்டு ஸவரன். நீரா ஸுரேந்த்ரர்? ஜயவிலாஸத்தின் தலைவர் நீரா?

ஸுரேந்த்ரன்:—ஆம்! அந்த ஏழைதான் நான்; துரதிருஷ்ட வசத்தால் நான் இந்த ஸ்திதியிலிருக்கிறேன்.

போர்வீரன்:—வனராஜாவே! ஸுரேந்த்ரப்ரபுவே! நான் இருபதுநாட்களாய்க் குதிரையின்மீது சவாரிசெய்து வந்ததால்மிகவும் களைத்துள்ளேன். ஏதாவது ஆஹாரம் கொடுத்தால் புண்யமாயிருக்கும்.

அபிராமன்:—அபராதம்! அபராதம்! ஸாதாரண ஸுரேந்த்ரனை “ராஜா” வென்றும், “ப்ரபு” என்றும் அழைத்ததற்காக இரண்டு ரூபாய் அபராதம். பணம் கட்டிவிட்டு வாரும் சாப்பாட்டிற்கு.

போர்வீரன்:—இதோ இந்தா இரண்டுரூபாய்.

ஸுரேந்த்ரன்:—மனம் வருந்தாமல் நீர்பணம் கொடுப்பதற்காக ஸந்தோஷம். ஆனால் நீர் மஹேசனது கக்ஷியைச் சேர்ந்தவராகையால், அபராதங்களை வாங்காமலிருக்கமுடியவில்லை.

போர்வீரன்:—நான் மஹேசனைக்காட்டிலும் திலீபமஹாராஜாவையே அதிகமாகநேசிக்கின்றேன்.

ஸுரேந்த்ரன்:—என்னையா இப்படிப்பொய்சொல்கிறீர்? சற்றுமுன் மஹேசனைச் சேர்ந்தவர் என்றீர்! இப்பொழுது திலீபரை அநுஸரிப்பதாகக் கூறுகிறீர். உம்மிடம் இன்னும் எவ்வளவுபணம் இருக்கிறது.

போர்வீரன்:—என்னிடம் இன்னும் இருபது ஸவரன்கள்தாமிருக்கின்றன. நான் அதைக்கொடாவிடில் என்ன செய்வீர்.

ஸுரேந்த்ரன்:—நாங்கள் உம்மைப் பரிசோதிப்போம். பரிசோதிக்க நீர் இடந்தாராவிடில் இதோ இந்தத் தாரையை ஊதினால் இந்த க்ஷணத்தில் இங்கு நூறுபேர்வந்து சேர்வார்கள்.

போர்வீரன்:—அப்படியானால்சோதனை செய்யுங்கள்.

முகுந்தன்.—(சோதனைசெய்து) ஆம். இவர் சொல்வது முற்றிலும் உண்மையே, இவரிடம் 20-ஸவரன்கள்தாமிருக்கின்றன.

ஸுரேந்த்ரன்:—அப்படியானால் அவைகளை அவரிடம் கொடுத்துவிட்டு அவரைச்சாப்பிடச்சொல்.

போர்வீரன் சாப்பிட்டபின் அவர்கள் வேடிக்கையாகக்கத்தி சண்டைசெய்தனர். அதில் அந்தபோர்வீரனே ஜயித்தான். அவன் தனிமையான இடத்தில் படுக்க இஷ்டப்பட்டான். ஸுரேந்த்ரன், அவனிடம் ஒரு சிறுதாரையைக் கொடுத்து ஆபத்து நேர்ந்த ஸமயத்தில் அதனை ஊதச்சொன்னான்.

ஸுரேந்த்ரன் படுக்கைக்குச் செல்லவிருக்கையில்கோவிந்தன் வந்து அவனிடம், "ஐயன்மீர்! உதயபுரியில் மஹேசனது நடவடிக்கைகளைக் கவனிக்கச்சென்றிருந்த ஆள் வந்துவிட்டான். கொஞ்ச நாட்களுக்குமுன் தோல்வியடைந்து ஓடிப்போன மஹேசன், ஸிப்பாய்களைச் சேர்த்துவிட்டானாம். நாளைக்கு நம்மேல்படையெடுத்துவர உத்தேசித்திருக்கிறானாம்." என்றுசொல்ல, ஸுரேந்த்ரன் அவனை நோக்கி, "அப்படியானால் நீயும் க்ருஷ்ணனும் நாளை மத்யானத்திற்குள் நமது படைகளை ஒன்றுசேர்த்துவையுங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டான்.

தினந்தோறும் ராத்ரியில் சயனிப்பதற்குமுன் ஸ்ரீதரரைப் பார்த்துவிட்டுப் படுக்கைக்குப்போவது ஸுரேந்த்ரனது வழக்கம். அதைப்போல் இன்று அங்கு சென்றபொழுது, ஸ்ரீதரர் தலைமாட்டில் கிரிஜா உட்கார்ந்து அவருக்கு விசிறிக்கொண்டிருந்தாள். ஸ்ரீதரர் ஆழ்ந்த நித்ரையில் இருந்தார்; கிரிஜா ஏதோ ஒன்றைப்பேச வாயெடுத்தாள். அதற்குள், ஸுரேந்த்ரன், "எனக்குத் தெரியும். அதற்குவேண்டிய ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டன. நாளை மத்யானத்துக்குள் ஸகலமும் முடிந்துவிடும்" என்று சொல்லிப்போய் விட்டான். இந்த விஷயம் ஸ்ரீதரரது கடனையும், நிலத்தையும் குறித்ததென்பதை வாசகர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா.

# குதூகலவர்த்தனி.

## ஒரு நவீனநாடகம்.

(முன்தொடர்ச்சி)

### முதலாம் அங்கம்.

நாராயண:-அவர் பாட்டுக்கச்சேரி, ஆட்டக்கச்சேரி எங்கே நடந்தாலும் போவாரே, இந்தக் கலியாணத்தில் ஏதாகிலும் தாசிக்கச்சேரி வைக்க யோசித்தாரா?

சங்கரபூஷண:-ஒரு கச்சேரியா? ஆட்டு, பாட்டு இரண்டுக்கும் முன்னமே ஏற்பாடு செய்திருக்கிறார். யாரோ ஜீவரஞ்சனியாம், ஜனரஞ்சனியாம். இவாளிரண்டுபேரும் சகோதரிகளாம். இவர்களைப்பற்றி அவர் வெகுவாய்ச் சிலாகித்துப் பேசினார்.

நாராயண:-அடடா! இந்தயோகினி தேவதைகள் எங்கிருந்து வந்தன; நீர் இது விஷயத்தில் அவருக்குத் தக்கபடி சொல்லக்கூடாதா?

சங்கர:-நான் வேண்டியமட்டும் சொன்னேன். அவர் அந்தத் தாசிகள் விஷயத்திலேயே பிரியமுடையவரா யிருக்கின்றார். உமக்குச் சங்கீதக்கச்சேரி வைக்கவேண்டுமென்கிற அபிப்ராயமிருக்கும்பட்சத்தில் திருவாரூர் தீக்ஷிதர், மகாவைத்தியநாதையர், பிடில் கணேசகிரி, மிருதங்க ஹரிராவ், வீணை சேஷண்ணா, டோலக் நன்னுமியான் முதலான வித்வாம்சர்க ளிருக்கிறார்கள். அவர்களையழைத்துக் கேட்கிறதுதானே! இந்தத் தாசிகள் தானா மகாவித்வாம்சர்கள்? என்று சொன்னேன். அதற்கு அவர் என்மீது மிகவுங் கோபித்துக்கொண்டார். பிறகு அவருக்கும் எனக்கும் கொஞ்சம் மனஸ்தாபத்திற்கு இடமுண்டாயிற்று. நீர் தாசிக் கச்சேரி வைக்கிற பட்சத்தில் இந்தக் கலியாணத்திற்கு நானும் என் சமுசாரமும் வரவேமாட்டோமென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டேன்.

நாராயண:-கலியாணத்தில் கச்சேரியென்ன? கிச்சேரியென்ன? நாயர் நல்லகாரியஞ் செய்தீர்; சந்தோஷம். நம்ம ஊரில் விசேஷமென்ன? தாங்கள் ஊருக்குப் போனதுமுதல் ஒன்றும் ஏன்காதுக் கெட்டுகிறதேயில்லை.

சங்கர்:-தாங்களறியாத விசேஷமென்ன விருக்கிறது? போகசாமி அவர்கள் குடும்பசகிதமாக ராமேசுர யாத்திரை போனசங்கதி கேட்டிருக்கிறீர்களல்லவா?

நாராயண:-என்ன? அவர் பார்யாளும், அவர் மாமனாரும் நேற்றுச் சாயங்காலம் மதுரைக் கடைத்தெருவில்வேஷ்டி புடவை வாங்க பேரம் பேசிக்கொண் டிருந்தபோது நான் பார்த்தேன். என்னைக் கூப்பிட்டு இரண்டொரு வுருவைக்காட்டி இது சாயம் நிற்குமா? அது வெள்ளிச் சரிகைதானா? என்று கேட்டார்கள். கொஞ்சநாழிகூட பேசிவிட்டுப் போனேன். அவர்கள் நம்மவீதியிலேயே குடியிருக்கின்றார்கள். அந்தவீட்டுப் பெண்டுகள் பிரதிதினமும் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க்கொண் டிருக்கின்றார்கள். தாங்கள் கேள்விப்பட்டது பிசகாக இருக்கலாம்.

சங்கர்:—சரி-சரி-தாங்களின்னம் பழையவழியிலேயே யிருக்கிறீர். பார்யா என்றால் எந்தப்பார்யா என்று நினைக்கின்றீர்? அவர் சமஸ்தானத்தோடு யாத்திரைசெய்யப் போயிருக்கின்றார்.

நாரா:—என்ன சமஸ்தானத்தோடா? இந்தவார்த்தையை யிப்போதுதான் கேட்டேன். சமஸ்தானமென்றாலென்ன?

சங்கர்:—தாங்களிதுவரையுங் கேட்கவேயில்லையா? போகசாமி அவர்கள் நூதனமாகவைத்துக்கொண்ட தேவடியாள் வீட்டிற்கு சமஸ்தானமென்று பெயர்வைத்திருக்கிறார்கள்.

நாரா:—அந்தப்பெயர் வெகு அருமையாக அமைந்தது. கேட்பாரில்லாமல் இந்தவூர் அடியோடுங் கெட்டுப்போய்க்கொண் டிருக்கிறது. பிரதிமனுஷனையுங் கட்டிக்கொண்ட பத்னியிருக்க கூத்தியாரைத்தேடும் பைத்தியம் பிடித்துக்கொண்டது. ஊரில் பெரியமனுஷனென்று திரியும் நாலஞ்சுபேரும் இப்படி அத்துமீறி பிரவர்த்தித்தால் இனிச்சில்லரை தேவதைகளைத் தண்டிப்பதார்? கண்டிப்பதார்?

சங்கர்:—இந்தக்காலத்தில் தண்டிக்கிறதாவது? கண்டிக்கிறதாவது? அதுவெகுகாலத்திற்கு முன்னமே போய்விட்டது. முன் நான் சிறுவனா இருந்தபொழுது இந்தவூரில் கூத்தியாரைவைத்துக்கொண்டிருந்தவர் ஒருவரோ அல்லது இரண்டுபேரோ தெரியாது. உத்தியோகஸ்தர்களில் வேதைபநாயுடு ஒருவர். அவரும் தற்காலத்துப் பிரபுக்களைப்போல பெரியோர் சிறியோரென்பதை



யெண்ணாமல் மரியாதை கெட்டு அத்து மீறித்திரிந்ததில்லை. ஊர் சத்தடங்கியபிறகு 10-மணிக்குமேல் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் முக்காடுபோட்டுக்கொண்டு போவார். உதயமாகுமுன் இருட்டிருக்கும்போதே வீட்டிற்குவந்து சேருவார். அதற்கே யவரையெல்லோருந்தோன்றியபடி பரிகாசஞ் செய்வார்கள். பந்துக்களில்யாரும் அவர்வீட்டிற்குப் போகிறதில்லை. நரனுமேயர் கூடுகிற இடத்திற்கும் அவர்போகிறது மில்லை. பிறகு தேவடியாள் வீட்டிற்குப் போகிறதையும் விட்டுவிட்டார்.

நாரா:—இந்தக்காலத்தில் லஜ்ஜையுமில்லை, பயமுமில்லை. முன்காலத்தில் தேவடியாளை வைத்துக்கொள்வதென்றால் மகா அவமானமென்று எண்ணப்படும். இக்காலத்தில் தேவடியாளை வைத்துக்கொள்வதே பிரதிஷ்டையாகவும், வைத்துக்கொள்ளாமற் போவதே அப்பிரதிஷ்டையாகவு மிருக்கிறது. அக்காலத்தில் வைத்துக்கொள்பவரில்லாமல் தேவடியாட்கள் அல்லாடினார்கள். இப்போது வைத்துக்கொள்வதற்குத் தேவடியாட்கள் போதாமல் புருஷர்கள் அல்லாடுகின்றார்கள். அந்தக்காலத்தில் தேவடியாள் வீட்டிற்குப்போனால் யாராகிலும் பார்ப்பார்களே யென்று லஜ்ஜையினால் ரகசியமாகப் போகுமவர்கள் இந்தக்காலத்தில் எல்லோரும் பார்த்தாலே கௌரவமென்று வெகுடம்பமாக மத்தியானத்திலேயே தனக்கான இரண்டு மூன்றுபேர்களையும் இழுத்துக்கொண்டு அடிக்கடி தாசிகள் வீட்டிற்குப் போகின்றார்கள். இந்தவூர்கட்டுப்பாடில்லாமல் இப்படி கெட்டுப்போகின்றது.

சங்கர்:—கட்டுப்பாடுசெய்ய எவனுக்கு என்னவந்தது? கெட்டுப்போகிறானேயென்று பந்துக்களேதாகிலுஞ் சொன்னால் அவர்களை லட்சியம் பண்ணுகிறார்களா? உத்தியோகஸ்தனோ சிவலிங்கத்தின்மேல் எலி! அவனைக்கேட்கிறவனேயில்லை. அவன் தயவைநாடியவன் எதைச்சொன்னாலுஞ் சரிசரியென்கிறார்கள். உதயமானால் அவன்தயவிருந்தால்தான் இவர்களுக்கு ஜீவனம். அப்படியிருக்க அவர்களைக்கண்டிக்கிறதெப்படி? அவனுக்குக் கோபம் வருஞ்சங்கதியை யெவன்சொல்லப்போகின்றான்? வயதிலும் புத்தியிலும் வித்தையிலும்பெரியவர்களா யிருக்கிறவர்களே ஊரும் பேருங் கெடும்படி ஸ்திரீலோலராய்த் திரிந்தால் மற்றவர்கள் கிரமத்தைவிட்டு யதேச்சையாய்த் திரிவதற்குத் தடையென்ன இருக்

கிறது. பெரியமனுஷர்களுடைய அபிமானத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்று எல்லோரும் அவர்கள் வைத்துக்கொண்டிருக்குந் தேவடியாட்களால் சிபாரிசு செய்துவைத்துக் கொண்டாலொழிய அவர்கள் சகாயங் கிடைக்கமாட்டாது.

(வரும்)

சொக்கலிங்கம் பிள்ளை,

சென்னை.

## ரொட்டிக்காரச் சிறுவன்.

(தொடர்ச்சி.)

ஊர்க்கோலம் நிகழ்ந்த மறுதினம், சிறுவன் தன்னுடைய தடியை எடுத்துக்கொண்டு, "மேத்ஜ்" பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, தனதுகிராமத்திற்குப் போகஎல்லாத் தோழர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டான். அவன் "நான்ஸி" பட்டணத்திற்குச் செல்லும் பாதையில் கால் நடையாகப் போய்க்கொண்டிருக்கிறான். 32 மைல்கள் நடக்கவேண்டும். அஃது அவனுக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லை. பரீக்ஷையில் தனக்கு ஏற்பட்ட வெற்றியினால் மிகவும் சந்தோஷமாக நடக்கிறான். கொஞ்சமேனும் வருத்தமில்லாமல், மனத்திருப்தியாக நடந்து செல்லும் சிறுவனுக்கு எங்ஙனம் ஆயாசம் உண்டாகும்? அதோ அதிசீக்கிரமாகத் தனது கிராமத்துக்கு வந்துவிட்டான்; தெருக்களெல்லாங்கடந்து ஒரு ரொட்டிக்கடைக்குள் நுழைகிறான். அதுதான் அவன்வீடு. அதில்தான் அவனுடைய தாயுந்தகப்பனும் வசிக்கிறார்கள். தமது குமாரனின் சந்தோஷகரமான செய்தியைக் கேட்ட உடனே அவர்கள் அளவில்லாத ஆநந்தமடைந்தார்கள்.

அச்சிறிய கடையில்தான், "ஆந்த்துவான் துருவே" என்ற நாமமுடைய அச்சிறுவன் வளர்ந்தவன். அவனுடைய தாய்தந்தையர் மிகவும் எளியவர்கள். அவர்களுக்கு 12 பிள்ளைகள்; நமது சிறுவன் மூன்றாவது குமாரன். அவன் மூன்றாவது வயதிலேயே, பாடசாலைகளிலிருந்து வரும் மாணவர்களை மிகவும் ஆவலோடும், ஆசையோடும் பார்க்க ஆரம்பித்தான். ஒருநாள் ஒரு பாடசாலைக்குப் போய்க் கதவைத்தட்டினான். உபாத்தியாயர் கதவைத்திறந்து,



இச்சிறுவனைப் பார்த்து "உனக்கு என்னவேண்டும்" என்று கேட்டார்.

பையன்:—நானும் உள்ளேவருகிறேன் ஐயா

உபாத்தியாயர்:—எதற்காக?

பையன்:—மற்றவர்களைப்போல நானும் கல்விகற்க விரும்புகிறேன்.

உபாத்தியாயர்:—நீ மிகவும் சிறியவனாக இருக்கிறாய், விளையாடப்போ.

உடனே பையன் அழ ஆரம்பித்தான்; வெகுநேரம் ஓயாமல் அழுதுகொண்டிருந்தான். அதனைக் கவனியாமலே உபாத்தியாயர் கதவைச் சாற்றிக்கொண்டு போய்விட்டார்.

ஆயினும் சிலமாதங்கள் சென்று அவன் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டான். அன்றையதினம் அவனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவன் பள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தபோதிலும் தன்னாலான சிறிய வேலைகளைத் தகப்பனுக்கு உதவியாகச்செய்து வருவான்.

வாடிக்கைக்காரர்களுக்கு ரொட்டி எடுத்துக்கொண்டு போகும்போது, தன்னுடைய பாடங்களைப் படிப்பதும், எப்போதும் சந்தடியான கடையிலே, கூட்டங்கள் மத்தியில் தனது எழுத்து வேலைகளைச் செய்வதும் அவனுக்கு வழக்கமாயிற்று; எளிய குடும்பமானதால் இரவில் சீக்கிரமாக விளக்கை அணைத்துவிட்டு எல்லோரும் தூங்கிவிடுவார்கள். சிறுவன் மாத்திரம் தூங்காமல், கூடுமானால் நிலவில் படிப்பான். ரொட்டி செய்வதற்காக காலை இரண்டுமணிக்கே, ஸகலரும் எழுந்து ஒருவிளக்கு ஏற்றி வைத்துக்கொண்டு வேலை செய்வார்கள். அவனும் அவர்களோடு எழுந்து அவ்விளக்கின் ஒளியிலே தனது வேலையைக் கவனிப்பான். அநேகமாய் பொழுது விடிவதற்குள், அந்த ஒரு விளக்கும் அணைந்துபோகும். அதற்காக அவன் தன் வேலையை நிறுத்துவதில்லை. ரொட்டி வேவதற்கு அடுப்பு எரியுமல்லவா? அதனுடைய வெளிச்சத்தில் படிப்பான்.

"ஆந்த்துவான்" பெரியவனாகிவிட்டான். ஒருநாள், தனதூரில் சுவர்கள்மீது ஒரு விளம்பரம் ஒட்டியிருப்பதைத் தற்செய

லாகப் பார்த்தான். அதனைக்கவனித்ததினின்று, "மேத்ஜ்" பட்டணத்தில் பீரங்கிப் பயிற்சிக்காக ஓர் பரீக்ஷை நடத்தப்படும் என்பதைத் தெரிந்துகொண்டான்.

உடனே தகப்பனிடம் வந்து, விஷயத்தைச்சொல்லி, அப்பரீக்ஷைக்குப்போக உத்தரவு கேட்டான். தகப்பன் சம்மதித்து, வழிச்செலவுக்காக நான்குரூபாய் கொடுத்தனுப்பினான். சிறுவனும் சந்தோஷமாகப் புறப்பட்டு பரீக்ஷை நிகழ்ந்தன்று மேத்ஜ் பட்டணத்திற்கு வந்துசேர்ந்தான். பிறகு நடந்த சங்கதிகளனைத்தும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன.

சிலகாலஞ்சென்று, பட்டாளத்தில் "ஆந்த்துவான்" உயர்ந்த பீரங்கிப்படை அதிகாரியானான். "வாதெர்லோ" சண்டைக்குப் பிறகு, அவன்தான் பிரான்சுச்சேனையில் மீதி இருந்தவர்களை ஒன்றுசேர்த்து, கூட்டிக்கொண்டு வந்தான். கிழப்பருவத்தில் அவன் தனது குடும்பத்தோடு "நான்ஸி" பட்டணத்திலே வசித்து வந்தான்.

அவன் ஏழையாக இருந்தபோதிலும் தன்னைவிட எளியவர்களாக இருப்பவர்களுக்குத் தன்னாலான உபகாரத்தைச் செய்யாது விடுவதில்லை. ஒரு சமயம், உணவில்லாத சில ஏழைகள் பொருட்டு, சிலர் அவன் உதவியை மன்றாடினார்கள். அப்போது அவனிடத்திலும் பணமில்லை; என்னசெய்வான்? மிகவும் துக்கத்தோடு யோசித்துக்கொண்டிருக்கும்போது, அவனுடைய பார்வை, தனது சேனாபதி உடையின்மீது விழுந்தது. அவ்வுடை இப்போது பிரயோஜனமில்லாமல் ஒரு மூலையில் கிடக்கின்றது. அதனுடைய கழுத்திலும், கைகளிலும் பொற்சரிகைகள் பதிக்கப்பட்டிருந்தன; அவற்றைப்பார்த்து அவன் "ஓ சரிகைகளே, நீங்கள் இன்றுதான் பிரயோஜனமுள்ளவர்களானீர்கள்" என்று சொல்லிக்கொண்டே, கத்தரி எடுத்து, அவற்றை உடையினின்று வெட்டி எடுத்துவிட்டான்.

"என்னவேலை செய்கிறீர்" என்றான் அவன் அண்ணன்மகன்.

கிழவன்:—உணவில்லாதவர்கள், ரொட்டி வாங்கிக் கொள்ளும் பொருட்டு, இச்சரிகைகளை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.



மகன்:—உம்முடைய கீர்த்தியின் சின்னமாகிய இவ்வுடை உம்முடைய பிள்ளைகளுக்கு வைக்கக்கூடிய உயர்ந்த ஆஸ்தி அன்றோ?

கிழவன்:—ஆம். என்னுடைய பிள்ளைகள், தாம் ஒருரொட்டிக்காரனுடைய பேரன்கள் என்பதை மறந்து விடுவார்களென்ற பயத்தினாலே, இவ்வுடையின் சரிகைகளை எடுத்துவிடுகிறேன்.

இறந்து போவதற்குமுன், "ஆந்த்துவான்" தனது வாழ்க்கையின் முக்கியமான பாகங்களான இளம்பிராயத்தையும், முதிர்ந்த பருவத்தையும் சீர்தூக்கிப் பார்த்தான். இளமையில், வறுமையினால் அடிபட்டு, தனக்குப் பிரியமாகிய கல்வியைக் கற்பதற்கு மிகவும் சிரமமடைந்தபோதிலும், அக்காலமே, கீர்த்தி, புகழ் இவற்றால் கௌரவமடைந்து, இராஜாங்க சபைகளிலும், போர்க்களங்களிலும், தன்னைச்சுற்றி இரத்தவெள்ளம் ஓடுவதைக்கண்டு, களித்து, இறுமாந்திருந்த முதிர்ந்த பருவமாகியகாலத்தை விட மிகவுஞ் சிறந்ததென அபிப்பிராயங்கொண்டு:—

"என்னுடைய இளமைப் பருவத்தின், மனத்தூய்மையிலும், வறுமையிலுமே, நான் உண்மையான சுகங்கண்டேன்" என்று எழுதிவைத்தான்.

28 - 3 - 16. N. சுப்பிரமணிய அய்யர்.

## மாமிச பட்சணிகட்கொரு வேண்டுகோள்.

மாம்ஸம் கிடைக்கும் விதம் உங்களுக்குத் தெரியுமா? ஆடுகளை வெட்டுமிடங்களுக்குத் தயவுசெய்து போய்ப் பாருங்கள். திக்கில்லாத அந்த ஜந்துக்கள் எந்தப் புண்ணியபுருஷன் நம்மைக் காப்பாற்றவருவான் என்று உங்களைத் தலை தூக்கிப்பார்க்கின்றன. வாயில்லாத ஜந்துக்களான போதிலும் உங்களைப் பார்க்கும் அவைகளின் கண்களைக் கவனியுங்கள்; தயைகாட்டுங்கள் என்று சொல்வதுபோலிருக்கும். அவைகளின் கூக்குரலைக் கேளுங்கள்; எவ்வளவோ பரிதாபகரமாக விருக்கும். இவற்றை எல்லாம் பார்த்தாலே உங்களுடைய மனம் உருகும்; அல்லது கசாப்புக்காரனுடைய வேலையைப் பாருங்கள். ஆடுகளின் கூக்குரலைக் கேளாமல் அவைகளைக் கீழேதள்ளிக் கூச்சமில்லாமல

கழுத்தை அறுத்துவிட்டு, பிராணன் கொத்துங்குறைவுமாக இருக்கும்பொழுதே வேறு மிருகங்களை வெட்ட ஆரம்பிக்கின்றான். அவசரமாயிருந்தால் பிராணனிருக்கும்பொழுதே தோலை உரித்தெடுக்க ஆரம்பிக்கிறான். ஆரியமாதர்களே! அஃதென்ன உங்களுக்கும் ஹிருதயம் கடினமாகிறதோ! இந்தக் கோரமான காரியங்களை நீங்கள் கேட்டும் பார்த்தும் இருக்கமாட்டீர்கள். கேவலம் வழக்கத்தின் கீழ்வரவே ஆனந்தத்துடன் புசித்துக்கொண்டு வருகிறீர்கள். சில நாடுகளில் மனிதர்களையே புசிக்கும் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நாமோ அல்லது நம்முடைய குழந்தைகளோ அகப்பட்டுக்கொண்டால் நமக்கு எவ்வளவு ஆனந்தமாகவிருக்கும்! பெண்களுக்கே மனம் மிருதுவானது. மாமிசாதிகளைத் தின்பதற்கு இனிமேலும் உங்களுக்கு மனம் வருமா? ஆரியர்களே! ஜந்துக்களுக்கெல்லாம் பிராணன் மீது உள்ள ஆசை ஒன்றுதானென்பதையும் நமக்கிருக்கும் பாதைகள் மிருகாதிகளுக்கும் உண்டென்பதையும் மறந்துவிட்டீர்களோ! ஹிந்துக்களே! நீங்கள் மிகவும் தெய்வபக்தியுள்ளவர்களல்லவா? இவ்வளவு கொடுமையான காரியங்களைச்செய்யும் உங்களுக்கு என்ன தண்டனை விதிக்க நினைத்திருக்கிறாரோ? கடவுள்! ஹிந்துக்களாகிய நாம் செய்யும் பாபங்களுக்கு நாமே தண்டனையடைய வேண்டியதேயொழிய வேறுயாராவது அடையப்போகிறார்களா? மாமிச பட்சணஞ் செய்வதை விட்டுவிடுங்கள்! விட்டுவிடுங்கள்! மிருகங்களின் பிணங்கள் மனிதருக்கல்ல; எவ்வளவு விதங்களாகப் பதப்படுத்தினபின் மாமிசமானது உங்களுக்குப் புசிக்கக் கூடியதாகிறது; பச்சைமாமிசத்தைத் தொடவாவது பார்க்கவாவது சகிக்கிறீர்களா? பழங்களைப்பார்க்க உங்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. ஆனால் நாய் துர்நாற்ற எலும்பைக் கடிக்க எவ்வளவு சந்தோஷப்படுகிறது? இதனால் எந்த வஸ்துக்கள் யாருக்கு ஆகாரம் என்று நீங்கள் தெரியாமல் போகவில்லை.

ஹிம்சையென்பதை அடியோடு விட்டுவிடுங்கள்! அநேக ஐரோப்பிய அமெரிக்க சாஸ்திரிகள், டாக்டர்கள், மாமிஸ ஆகாரம் அநேக தீமைகளை உண்டாக்குகிறது என்று அதைத் தின்பதை விட்டுவிட்டு இதரர்களுக்கும் அப்படியே போதிக்கின்றார்கள்.

## விவேக சோதனை.

ஒவ்வொரு புருடர்க்கும் உலகிருப்பதும் தாமிருப்பதும் கண்கூடு. பிறவியந்தகனும் உலகினைக் கண்ணாற் காணாவிடினும் ஏனைய இந்திரியங்களால் அதை அறிவது அநுபவசித்தம். உலகம் போக சாதனமாயும், தேகம் போகாலயமாயு மிருப்பது ஒவ்வொரு உயிரும் அறிந்த விஷயமே. இத்தகைய உலகமும் யாமும் சதா இப்படியேயிருந்துகொண்டு விபவகாரங்களையியற்றி வருகின்றோமோ வெனின், இல்லை; இவை ஒருபடித்தாயிராமல் மாறி மாறிவருவது ஒவ்வோருயிர்க்கும் அநுபவமாம். எங்ஙனமெனின், நாம் தூங்கும்போது இவை இப்படியே நில்லாது மறைகின்றன; விழிக்கும் போது மறுபடியும் வெளிப்படுகின்றன. உலகம் மறைந்தபின் பத்து நிமிஷங்கள் அல்லது ஐந்து நிமிஷங்கள் அல்லது ஒரு நிமிஷம் அல்லது ஒரு க்ஷண நேரம் பொறுத்தாவது நம் தேகம் மறைகின்றதோ வெனின், இல்லை இல்லை; எந்த க்ஷணத்தில் உலகம் மறைபடுகின்றதோ அதே க்ஷணத்தில் நம் தேகமும் மறைவது கவனிப்போர்க்கு வெளியாகாமற் போகாது அன்றியும், இத்தகைய அநுபவம் ஏதோ வொரு காலத்திற்றான் நிகழ்வதோ வெனின், இல்லை; தினந்தினம் ஒவ்வொருவருக்கும் இவ்வநுபவம் நிகழ்வதற்கு அவரவர்களே சான்றாவர். உலகில் ஏழையாயினும் ஐசுவரியவானாயினும் பாமரனாயினும் பண்டிதனாயினும் வாலிபனாயினும் விருத்தாப்பியனாயினும் பிராம்மணனாயினும் பஞ்சமனாயினும் கறுப்பனாயினும் வெள்ளையனாயினும் ஆணாயினும் பெண்ணாயினும் எக்காலத்தும் எவ்விடத்தும் இவ்வநுபவத்திற்குக் கட்டுப்பட்டே வருவதுண்மை; இத்தகைய அநுபவத்திற்குக் கட்டுப்படாத உயிர் ஒன்றேனு மில்லையென்பது பிரத்தியட்சம். இங்ஙனமிருக்க, ஒருவர்க்குத் தோற்றிய உலகமும் தேகமும் மறைந்த போது எங்கே போயின? மீண்டும் வெளிப்பட்டபோது எங்கிருந்து வெளியாயின என நம்மில் யாவரேனும் திகைப்புற்றதுண்டோ? அத்திகைப்பின் காரணமாய் இவ்விஷயத்தை ஆலோசிக்க முயன்றதுண்டோ? "உள்ளது போகாது" என்னும் நியமமிருக்கின்றமையின், உள்ள வஸ்துக்களாகிய உலகமும் தேகமும் நமக்கு எங்ஙனம் மறைபலாம்? "இல்லாதது வாராது" என்னும் நியமமிருக்கிறபடியால் மறைந்து போய் இல்லாத வஸ்துக்கள் நமக்கு எங்ஙனம் மறுபடியும் வரலாம். அன்றியும் ஒரு பொருள் தோற்றி மறைவதற்கு இடம் வேண்டுமே. சூரியன் தோற்றினான்,

மறைந்தான் என்னுமிடத்து, தோற்றவும் மறையவும் இடமிருத்தல் வேண்டும். அது போல, உலகமும் யாமும் தோற்றவும் மறையவு மிட மிருக்கவேண்டும். மறைந்த தெவ்விடத்தில்? மீண்டும் வெளிப்பட்ட தெவ்விடத்தில்? என்று மக்களாய்ப் பிறந்த நம்மில் யாரேனும் எக்காலத்திலாவது விசாரித்ததுண்டோ? இது சாமானிய பிரதிதின அநுபவமாயிருப்பினும், விசாரணையை யேற்கும் பெருமித முடையதன்றோ! நம்மில் எத்தனை பேர் இவ்விஷயத்தைக் கவனித்துள்ளோம் என்பதை அவரவர் மனச்சாட்சியே யறியும். இதனை யூகித் துணராமல் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்றிருக்கும் விவேகமே விவேகம்! இதனை யறியாமல் பிறவியந்தகராய் உயிர் வாழும் பாக்கியமே பாக்கியம்!

"மடமையொடு வாழ்கின்ற வாழ்வி னீசர்
மனைதொறுமோட் டிரந்துழல்கை வரிசை யாகும்"

என்று ஆன்றோர் கூறியதற்கு ஆட்சேபம் ஏதேனு முண்டோ? விவேகிகளே! இதை உய்த்துணர் வீராக.

அறிவாநந்தம்.

---

## யுத்தம்.

இந்த மாதத்தில் ஜெர்மானியர் வர்டூனைப் பிடிக்கப் பெரும் பிரயத்னஞ் செய்து பிரெஞ்சுக்காரரை யெதிர்த்து வந்தனர்; பிரெஞ்சுக்காரர் சிறிதும் பின்னடையாது ஜெர்மானியர் செய்திருந்த பிரயத்னங்களையெல்லாம் அபலமாக்கி அவர்களை முற்றும் தோல்வியுறச்செய்தனர். இங்கு ஜெர்மானியருக்கு $2\frac{1}{2}$-லட்சம் சேனை சேதமாகிவிட்டது. அதனாலவர்கள் பெரிதும் மனமுடைந்து திகைப்புற்றிருக்கின்றனர். ருஷ்யப் போர்முகத்திலும் அவர்கட்கு அபஜயமே கிடைத்தது. ஆனாலவர்கள் கீழ்நீர்க் கப்பல்களைக்கொண்டு வர்த்தகக் கப்பல்களையும், பிரயாணிக் கப்பல்களையும் சேதப்படுத்தி வருகின்றனர்; நடுவுநிலைமைத் தேசத்தாரது கப்பல்களையும் சேதமாக்கி வருகின்றனர். இவ்வாறு செய்தால் நடுவுநிலைமைத் தேசத்தாராவது சமாதானஞ் செய்துவைக்க முற்படுவார்களென்றெண்ணி யிருக்கின்றனர். ஆனால் நேசராஜாங்கத்தார் ஜெர்மானியரை நாசஞ்செய்யும் வரையில் யுத்தத்தை நிறுத்துவதில்லையென்று ஆக்ரகங்கொண்டிருக்கின்றனர்.

இத்தாலியப் போர்முகத்தில் ஆஸ்டிரியர் தோல்வியடைந்து வருவது சகஜமாகிவிட்டது; ருஷ்யர் கக்கேஷிய மாகாணத்திலும், ஆசியாத் துருக்கியிலும் முன்னேறிச்செல்லுவதைத் துருக்கியரால் தடுப்பதற்குச் சாத்தியப்படவில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 MAY 1916
MADRAS.

# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-11 தொகுதி-11 | April ஏப்ரல்மீ 1916. | No-9. பகுதி-9.

## கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி.

நம்மனோர்க் கத்தியாவசியமாக வேண்டுவன கல்விப் பொருளும் செல்வப் பொருளுமாம். இவ்விரண்டனுள் கல்விப் பொருளில்லாத விடத்துச் செல்வப் பொருளைப் பாதுகாத்தல் முடியாதாகலின், கல்விப் பொருள் செல்வப் பொருளினு முயர்வுடையதாம். கல்விப் பொருள் போலச் செல்வப் பொருள் நன்மை தருவதின்றாதலின், நம்மனோர் மறவாது தேடற்குரியது கல்விப் பொருளேயாம். கல்விப் பொருளுடையவர் செல்வப் பொருளை யடைதலேயன்றிப் புண்ணிய லோகத்தையும் மோட்சத்தையு மடைதற்குரியவரா யிருத்தலின், நம்மனோர் மிக முயன்று தேடற்குரியது கல்விப் பொருளேயாம். கல்விப் பொருள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்த நான்கனையுந் தருவதாக விருத்தலையும், செல்வப் பொருள் இம்மைப்பயன் மறுமைப் பயனென்னு மிரண்டனையுந் தருவதாக விருத்தலையும், நன் கூகித்து நோக்குமிடத்து, செல்வப் பொருள் கல்விப் பொருளினு முயர் வுடையதாகா தென்பது பிறழாது விளங்குவதாம். கல்விப் பொருளில்லாதாரிடத்துள்ள செல்வப் பொருள் அவர்க்குப் பல வகைத் தீமையைத் தருவதாக விருத்தலின், செல்வப் பொருளைப்புகழ்ந்து கல்விப் பொருளை யிகழுதல் ஒருவாற்றானுங் கூடாதாம்.

"செல்வம்வந் துற்ற போது தெய்வமுஞ் சிறிது பேணார், சொல்வதை யறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்,வெல்

வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார், வல்வினை
விளைவுமெண்ணார் மண்ணின்மேல் வாழு மாந்தர்'' என்றுள்ள செய்
யுளைநன்கு கவனிக்குமிடத்து, செல்வப் பொருள் மாத்திரமுடைய
வர் தெய்வ சிந்தனையில்லாதும், சொல்வதை யாராய்ந்து சொல்லா
தும், சுற்றத்தாரையும் துணைவரையும் கவனியாதும், பிறரை
வெல்லுவதையே கருமமாகக் கொண்டு, அவர் தம்மினும் வலி
யவ ரென்பதைக் கருதாதும், தாம் செய்யும் தீவினையின் விளை
வைச் சிந்தியாது மிருப்பரென்பது செவ்விதாக விளங்குதலின்,
செல்வப் பொருளை மாத்திரம் தேடுதல் எவர்க்கும் தகுதி யுடைய
தன்றாம். கல்விப் பொருளில்லாதவர் செல்வப் பொருளைச் சம்
பாதித்தாலும், அதனை அவர் நல்வழியிற் செலவிடுவதில்லையாம்;
அதனால் அவர்க்குப் பழியும் பாவமு முண்டாகின்றன; செல்வப்
பொருள் கல்விப்பொரு ளுடையவரிடத் திருக்குமாயின், அதனை
அவர் நல்வழியிற் செலவு செய்து புகழும் புண்ணியமும் பெறு
தற்குரியவராகின்றனர். இவ்வாற்றால், செல்வப்பொருள் கல்விப்
பொருளுடையவரிடத்துப் பயன்படுவதுபோல மற்றவரிடத்துப்
பயன்படுவதில்லை யென்பது பெறப்படுவதாம்.

கல்வியால் கேள்வியும், அதனால் அறிவும், அதனால் ஒழுக்கமு
முண்டாவனவாயிருத்தலின், கல்விப் பொருளுடையவர் நன்மை
யென்று சொல்லப்படுவனவனைத்தையும் பெறுதற்குரியவராயிருக்
கின்றனர்; கேவலம் செல்வப் பொருளுடையவர் அதன் பயனை
யடைவதின்மையின், கல்விப் பொருளுடையவரே கல்விப் பொரு
ளின் பயனையேயன்றிச் செல்வப்பொருளின் பயனையுமடைதற்
குரியவராகின்றனரென்பது நிச்சயமாம். கல்விப்பொருள் கற்றற்
குரிய நூல்களைப் பழுதறக்கற்று, அவை கூறுகின்ற வழியினிற்ற
லாம். அவை அறம் பொரு ளின்பம் வீடென்னுமுறுதிப்பொருள்
களை யுணர்த்தும் நூல்களாம்; செல்வப்பொருள் மணி (இரத்தி
னம்) பொன், நெல், வீடு, விளைநில முதலியனவாம். இவ்விரண்
டனுள் உயிர்க்குற்ற துணையாயிருப்பது கல்விப்பொருளே யாத
லின், நம்மனோர் தேடற்குரியது அதுவேயாம்.

தாம் நல்வழியிலொழுகுதல் பிறர்க்குறுதி தருவனவற்றைக்
கூறலென்னுமிரண்டுமுடையவர் கல்விப் பொருளுடையவர்;
அவையில்லாதவர் அப்பொருளுடையவரல்ல ரென்றறிவோமா
யின், நாம் படிக்க, எழுத, பாட, பேசத் தெரிந்தவரையெல்லாம்



கல்விப் பொருளுடையவரென்று கனவிலுங் கருதமாட்டோம்.
தாம்நல்வழியிலொழுகுதல் பிறர்க்குறுதி தருவனவற்றைக்கூற
லென்னுமிரண்டுமில்லாதவர் படிக்க, எழுத, பாட, பேசத்தெரிந்
தவராயிருப்பினும், அவர் கல்விப் பொருளுடையவரன்றாம். கல்
விப்பொருளுடையவர் பிறர் நாடுகளிலும் ஊர்களிலும் செல்வப்
பொருளையும் பூசையையும் பெறுதற்குரியவரா யிருத்தலின்,
அவர் யாண்டும் செல்வப் பொருளுடையவராயிருப்பரென்பது
திண்ணமாம்; அவர் வரக்கடவதாகிய விபத்தையறிந்து நீக்கவல்ல
வராயிருத்தலின், வறுமை யடைதலுமில்லையாம். செல்வப்பொருள்
மாத்திரமுடையவர்வரக்கடவதாகிய விபத்தையறிந்து நீக்குதற்கு
உரியவராகா திருத்தலின், வறுமையடைவது நிச்சயமாம்.

செல்வப்பொருள் ஈட்டல் (சம்பாதித்தல்) காத்தல் இழத்த
லென்னுமிவற்றால் துன்பந்தருதலும், பலரையும் பகையாக்குதலு
மாக விருத்தலின், அஃது உயிர்க்குறுதி தருவதன்றாம்; கல்விப்
பொருள் தன்னையுடையவனுக்கு எழு பிறப்பிலுஞ் சென்றுதவி
செய்வதாகவிருத்தலின், அஃது உயிர்க்குறுதி தருவதாம். இவ்
வாறுதவி செய்யும் கல்விப்பொருளைத் தேடாது உடம்போடு
நீங்கும் செல்வப்பொருளை மாத்திரந் தேடுதலெவர்க்குந் தகுதி
யுடையதன்றாம். ''ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்,
கெழுமையு மேமாப் புடைத்து(ஒருவனுக்குத் தானொருபிறப்பின்
கண்கற்ற கல்வி யேழுபிறப்பிலுஞ் சென்றுதவுதலை யுடைத்து)''
என்று திருக்குறள் கூறுவதால், கல்விப்பொருளின் சிறப்புத்
தெளிவாக விளங்குவதாம். கல்வி யேழுபிறப்பிலுஞ் சென்றுதவு
தலாவது ஒருவன் ஒரு பிறப்பிற்கற்ற கல்வி மனத்தின்கண் அறம்
பாவங்கள்போலச் சம்ஸ்கார (வாசனை) வடிவமாகத் தங்கி அவன்
மனிதனாகப்பிறக்கு மேழுபிறப்பு வரைக்கும் தொடர்ந்திருந்து,
அவனுக்குத் தளர்ச்சி வந்தபோதெழும்பி யுதவி செய்தலாம்.
இது பிரபுலிங்கலீலை ''தளர்ந்துழியுதவுங் கல்வி தானென''
என்று கூறுவதாலும் விளங்குவதாம்.

''கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போற், புல்லி
ருள் பரந்தூஉம் புலம்புகொள் மருள்மாலை (வருத்தங் கொள்ளு
தற்குக் காரணமாகிய மருட்சியையுடைய மாலைக்காலம் ஒன்றை
யுங் கல்லாமல் முதிர்ந்தவனுடைய ஞானக்கண்ணில்லாத நெஞ்சம்
போலப் புற்கென்ற இருள் உலகிலே பரந்தலைத்தாரா நிற்கும்)''

என்று நல்லந்துவனார் கலித்தொகை நெய்தற்கலியிற் கூறுவதை நோக்குமிடத்து, கல்விப் பொருளில்லாதவன் தானிருக்குந் தேயத்தன்றி வேறு தேயத் திருப்பனவற்றையும், நிகழ்காலத் தன்றி இறந்தகாலத் திருந்தனவற்றையும் எதிர்காலத் திருப்பனவற்றையும் அறியும் ஞானக்கண்ணில்லாதவனா யிருப்பானென்பது பெறப்படுதலின், அவன் ஒரு வகையில் குருடனேயாவன். இது திருவள்ளுவர் "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லா தவர்" என்றருளியிருப்பதால் இனிது விளங்குவதாம். கல்விப்பொருள் இவ்வளவு சிறப்புடையதாயிருத்தலை நோக்கியே நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் "இளமையிற்கல்"—"வித்தை விரும்பு" என்று ஆத்திசூடியி லருளியதோ டமையாமல் கொன்றை வேந்தனில் "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி (ஒருவனுக்குத் தன் கைவசமாயிருக்கும் பொருளைப்பார்க்கினும்மெய்யாயிருக்கும் பொருள் கல்வியாம்)" என்றருளிச் செய்தனர். கல்விதன்னையொரு பிறப்பிற் கற்றவனுக்கு எழு பிறப்பினுஞ் சென்றுதவி செய்வது பற்றியும், தாயத்தார் (பங்காளிகள்), கள்வர், வலியவர், அரசரென்னு மிவர்களால் பொருள்போலக் கொள்ளப்படாமைபற்றியும், வழிபட்டார்க்குக் கொடுத்தவிடத்துக் குறையாமைபற்றியும்; உபசாரவழக்கால் மெய்ப் பொருளொன்று கூறப்படுகின்றது; மெய்ப்பொருளை (கடவுளை) யடைதற்குச் சிறந்த காரணமாயிருப்பது பற்றி உபசாரவழக்கால் மெய்ப்பொருளென்று கூறப்படுகின்றதென்று கொள்ளுதலுங்கூடும். இது திருமந்திரம் முதற் றந்திரத்தில் "கற்றவர் பேரின்ப முற்றுநின் றாரே" என்று கூறுவதால் நன்கு விளங்குவதாம். "கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி" என்று நீதி வெண்பா கூறுவதையும், "கற்றறிவாளர் கருதிய காலத்துக், கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு" என்று திருமந்திரங்கூறுவதையும் நன்குணருமிடத்து, கல்விப் பொருளுடையார் யாவரும் சிவபெருமானைப்போல மூன்று கண்ணுடையவராவ ரென்பது விளங்குவதாம். சிவபெருமானுக்குள்ள மூன்றுகண் சோமசூரியாக்கினியாம்; கல்விப்பொருளுடையார்க்குள்ள மூன்றுகண் ஊனக்கண்ணிரண்டும் ஞானக்கண்ணொன்றுமாம்.



கல்விப் பொருளுடையார் இம்மையில் சொற் பொருள்களின் இன்பத்தை யனுபவித்து, புகழ் பொருள் பூசைகளைப் பெற்று, அறம்வளரப் பெற்று, எவரும் மதிக்கப் பெற்று, மறுமையில் புண்ணியலோகத்தை யடைதற்குரியவராயிருக்கின்றனர்; அவர்க்குள்ள சிறப்புச் செல்வப் பொருள் மாத்திர முடையார்க்கில்லை; அவர் விரைவில் மெய்யுணர்வு பெற்று, அது வாயிலாகச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையதாகிய வீட்டினையும் பெறுதற்குரியவராவ ரென்பதனை நன்குணர்ந்தவர் செல்வப்பொருளை விரும்பிக் கல்விப் பொருளை விரும்பாதிருப்பதில்லையாம். கல்விப் பொருளுடையவர் என்றுங்கட்டுங்கனமுமாக வாழ்வது நிச்சயமாமாதலின், செல்வப்பொருளில்மாத்திரஞ் சிந்தையைச் செலுத்துவதொழித்துக் கல்விப் பொருளையுந்தேட முயலுதல் நமக் கத்தியாவசியகமாம். கல்விப் பொருளுடையார் ஞானக்கண்ணுடையவராவ ரென்பதனை மறவாதிருப்போமாயின், நாம் அதனைப் பெறுவது தவறாதாம்.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றை யவை (ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி; அஃதொழிந்த மணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல" என்று திருக்குறள் கூறுவதும்,

"தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினால்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்ளராற் றிருடவு முடியாது வாவாக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞா னந்தழையும்" என்று திருவேங்கட சதகம் கூறுவதும், இங்கு நன்குணர்தற்பாலனவாம்.

## மகா கீர்த்திவாய்ந்த ஓர் இளைஞன்.

### "பஸ்கால்"

இருநூறு வருஷங்களுக்குமுன், 1623-ல் பிரான்ஸ் தேசத்தில் ஒரு கணித சாஸ்திரியின் குடும்பத்தில் ஓர் அற்புதமான குழந்தை பிறந்தது. மிகவும் மெலிந்து சதா நோயுடைய அக்குழந்தையைப் பெற்றோர் அதனை அதிக ஜாக்கிரதையாக வளர்த்துவந்தார்கள்; அதன் அற்பாரோக்கிய ஸ்திதியைக் கருதி அது அதிக காலம் ஜீவித்திருக்காதென்றே நினைத்தார்கள். அக்குழந்தையின் பெயர் "பஸ்கால்". நீரைக் கண்ட உடனே நடுக்கல் உண்டாகிக் கோணக் கோண இழுக்கும் வலியையுடைய அவ்வளவு திடமான அப்பையன்தான் பிற்காலத்தில் பிரான்ஸ் தேசத்தினுடைய மஹாமேதாவிகளில் ஒருவனாக விளங்கினான்.

பஸ்கால் மிகவும் சிறியவனாக இருந்தபோதிலும், அவனுடைய ஸூக்ஷ்மமான புத்தியைக்கண்டு வியப்படையாதவர்கள் ஒருவருமில்லை. இளம்பிராயத்திற்கேற்ற புத்தியில்லாமல் எதையும் ஆராயுந் தன்மையுள்ள முதிர்ந்த அறிவு அவ்விளைஞனுக்கு உண்டானது வியப்பினும் வியப்பே. ஒரு நாள் மேசைமீதிருந்த ஒரு பீங்கான் பாத்திரத்தின் மேல் கத்தி பட்டு ஒரு நீண்ட நாதம் உண்டாயிற்று. அப்போது அப்பாத்திரத்தின் மீது கையைவைத்தஉடனே நாதம் நின்றுவிட்டது. இதனைக் கண்டு ஆச்சரியமடைந்து, அதனுடைய காரணத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பையன் சிந்தித்து, நாதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தான். அதிலிருந்தும் அவன் ஒலிசம்பந்தமான அநேக விஷயங்களைக் கண்டு பிடித்து, அவற்றைத் தனது 12-வது வயதிலேயே ஒருசிறு புஸ்தக மூலமாக வெளியிட்டான்.

அவனுடைய மூன்றாவது வயதில், அவன் தாயார் இறந்துவிட்டாள்; ஆகையால் அவளை அவன் நன்றாக அறியமாட்டான். மகாகீர்த்திபெற்ற கணித சாஸ்திரியான அவனுடைய தகப்பனார் அவனை வளர்த்துவந்தார். புத்திசாலியான தனது குமாரனுக்கு மேலான கல்வியைப் புகட்ட எண்ணங்கொண்டு, முதலில் "லத்தின்" பாஷையைக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். கணிதம் முதலிய இதர லௌகிக சாஸ்திரங்களால் ஒருவேளை "லத்தின்" பாஷைக்கு இடைஞ்சல் உண்டாதல் கூடும் என்ற பயத்தினாலே



அவர் தம் வீட்டிலுள்ள கணித புஸ்தகங்கள் எல்லாவற்றையும் பொறுக்கிச் சேர்த்து, அவற்றை ஒரு பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டார். ஏ! அற்ப மதியுடைய தகப்பனே! உன்பிள்ளை ஒருகாலத்தில் இயற்கைச் சாஸ்திரங்களிலே பிரக்யாதி பெற்று விளங்க வேண்டுமென்று தெய்வம் யோசித்திருக்குமானால், உன்னுடைய மனித எண்ணம் நிறைவேறுவதற்கு வழியுண்டா என்பதை யோசித்துப்பார். தேவர்களின் சித்தந்தான் நடைபெறும். பஞ்சாங்கத்தை மறைத்துவிட்டால், அமாவாசை போய்விடுமோ? நீ புஸ்தகத்தை மறைத்துவிட்டால் அறிவை என்ன செய்வாய்?

பஸ்கால் கண்ணில் ஒரு கணித புஸ்தகங்கூடக் காணப்படவில்லை; ஆனால் அவன் கணித சாஸ்திரத்தைப்பற்றித் தகப்பனிடம் அடிக்கடி கேள்விகள் கேட்பதுண்டு. அக்கேள்விகளுக்குத் தகப்பன் மறுமொழி யொன்றும் சொல்வதில்லை.

இங்ஙனம் நடந்து வருகையில், ஒரு நாள் மகனுடைய கேள்விகளால் சலிப்படைந்த தகப்பன், கணித சாஸ்திரமென்பது இன்னதெனப் பின்வரும் வார்த்தைகளால் மிகவும் சுருக்கமாகச் சொன்னான்:—

"உருவங்களைச் செம்மையாக வரைதலும், அவற்றின் பிரமாணங்களின் தாரதம்மியங்களைக் கண்டு பிடித்தலும் கணித சாஸ்திர மெனப்படும்."

மிகவும் நுட்பமான அறிவுக்கு இந்த வியாக்கியானம் போதும். பஸ்கால் வெகு நேரம் சிந்தித்து, ஒருசிறிய கரித்துண்டெடுத்து, தரைமீது வட்டமானவையும், நேரானவையுமான கோடுகள் வரைய ஆரம்பித்துவிட்டான்; பிறகு அவற்றின் லக்ஷணங்களை ஆராய்ந்து பார்த்து, அநேக விதிகளைக் கண்டு பிடித்தான். இங்ஙனம், புஸ்தகமில்லாமலும், ஒருகுருவில்லாமலும், தகப்பனார்சொன்ன ஒரு வாக்கியத்தைக் கொண்டு "யூக்ளிட்" க்ஷேத்ர கணிதத்தின் 32-வது சூத்திரம் வரையில் தெரிந்துகொண்டான்.

பையன் இவ்விதம் வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஒருநாள் அவனுடைய தகப்பனார் அவனைப் பார்த்து "நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்குப் பஸ்கால் யான் ஒரு கணக்கின் விடையைத் தேடிக்கொண்டிருக்கின்றேனென்று மறுமொழி சொல்லி, ஏற்கெனவே தன்னால் கண்டு

பிடிக்கப்பட்ட கணித சூத்திரங்களையும் காண்பித்தான். தகப்பன் இளைஞனுடைய அறிவின்மேன்மையையும்,வல்லமையையும்பார்த்துத் திகைத்திட்டு, ஒரு வார்த்தையும் பேசாமல், உடனே தனது பிராணசிநேகிதனான "லெயேர்" என்ற சாஸ்திரியிடம் விரைந்தோடினான்; அவன்வீட்டிற்குள் நுழைந்து, அவனெதிரேபோய், அசைவற்று ஸ்தம்பமாக நின்றுவிட்டான். அவனுடைய தோழன் அவனுடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக விழுவதையும், அவன் மரமாக நிற்பதையும் பார்த்துப் பிரமங்கொண்டு, அஞ்சி, "என்ன ஆபத்து" என்று கேட்டான். அப்போது அவன் பின் வருமாறு மறுமொழி யுரைத்தான்:—

"நான் துக்கத்தினால் அழவில்லை; இஃது ஆநந்த அழுகை; என் மகன் லத்தின் பாஷையைக் கற்பதற்கு விக்கினங்கள் உண்டாகாதிருக்கும் பொருட்டுக் கணித புஸ்தகங்களை யெல்லாமெடுத்து எவ்வளவோ ஜாக்கிரதையாகமறைத்து வைத்தேனென்பது உனக்குத் தெரியுமல்லவா? ஆயினும் அவன் செய்த வேலையைப் பார்."

இங்ஙனம் சொல்லிக்கொண்டே தன்மகன் கண்டு பிடித்த விஷயங்களனைத்தையும், தனது தோழனுக்குக் காண்பித்தான். அதற்கு அத்தோழன் "தானாகக் கிளம்பும் அறிவை நீ தடைபண்ணாதே" என்று சொன்னான்.

அது முதல், தகப்பன் கணித புஸ்தகங்களையெல்லாம் பெட்டியிலிருந்து எடுத்து, தன் மகனுக்குக் கொடுத்து விட்டான். நான்கு வருஷங்கள் கழிந்தபின்பு, 16-வது வயதில், நமது சிறுவன், முட்டை வடிவான கோடுகளைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டான்; சில நாட்கள் சென்று, ஒரு "எண்ணும் யந்திரம்" கண்டு பிடித்தான். இந்த யந்திரம் தானாகவே கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணக்கு வேலைகளைச் சீக்கிரமாகச் செய்யும்; அநேக பெரிய வியாபாரஸ்தலங்களில் இன்னும் இந்த யந்திரங்கள் காணப்படுகின்றன. (வரும்)

24-4-16

N. சுப்பிரமணிய அய்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAY 1916
MADRAS.

# சுகத் தெளிவுரை.

(முன் தொடர்ச்சி)

## மெய்யுபதேசம்.

ஒவ்வொரு மனிதனும் லௌகிகத்திலும் பாரமார்த்திகத்திலும் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவாது நிறைவேற்றுமாறு அதனைச் செய்யவல்ல உபதேசமே மெய்யுபதேசமெனப்படும். முடிவில், எல்லா விஷயங்களிலும் தன்னிலும் ஆநந்தம் உண்டாகின்றது. வாசனைகளும் அபிப்பிராயங்களுங்கூடி விவேகத்தின் கூர்மையை மழுக்குவதன் முன்னே, உபதேசம் அதனுடைய வேலையை ஆரம்பித்துக் கொள்ளவேண்டும். சாதாரணமாய், ஐந்து வயதில் வாக்குத்தெளிவாகவும்விகசிதமாகவும் வந்தவுடனே குழந்தைகளுக் குபதேசம் ஆரம்பித்தல் வேண்டும். ஆனால்தான், வயது வளர்கிறபோதே அறிவும் பலமும் வளர்ந்துகொண்டுவரும்.

அறிவு உதயமானதுமுதல், பிள்ளைகளுக்குப் பெற்றோர் மூத்தோரிடத்து அன்பு மதிப்புக்களைமூட்டி, அப்பிள்ளைகள் சந்தோஷமாய் அவர்களிடத்தடங்கி யொழுகுமாறு கற்பிக்கவேண்டும். ஒருமனிதன் தன்னுடைய சொந்தப் பிதாமதாக்களை நேசித்துப் பூசித்து அவர்களுக்கு அடங்கி யொழுகானாயின், தன்தோற்றமே ஜோதியாகவுடைய பரம்பொருளைச் செயலிலும் எண்ணத்திலும் வழிபட அவன் எவ்வணம் வல்லவனாவன்? ஒவ்வொரு மனிதனும் ஒரு ஸ்திரீயைக்கண்ட மாத்திரத்தே குலம்-அழகு-வயசு-நிலைமை-அந்தஸ்து ஒன்றுங் கவனியாமல் லோகமாதாவாக அவளைப் பாவிக்கப் பழகிக்கொள்ளல்வேண்டும். முன்னிலையில் அவள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனம் வாக்குக் காயமென்னும் திரிகாரணங்களாலும் அவளை இவ்விதமாகக் கனப்படுத்த வேண்டும். இந்த விதியை எவன் கடக்கிறானோ, அவன் கெட்ட முடிவுக்குவருதல் தப்பாது. ஒருவன், காளி—துர்க்கை-ஸரஸ்வதியென்னும் பல நாமங்களுடைய ஸர்வவியாபக சக்தியாகிய அம்மையின் நாமங்களிலொன்றை முன்னிலைப்படுத்தி நாநாவிதக் கிரியைகளையும் மிகச்சிறப்பாகக் கொண்டாடிச் செய்தபோதிலும், பெண்டன்மையைக் கனப்படுத்தாதவனாயின், அவன் வழிபாட்டை அம்மை ஒப்புக்கொள்ள மாட்டாள். இதைப்பற்றிச் சந்

தேகங் கொஞ்சமுமில்லை; மாதர்களுடைய அழகு இருதயத்
தைக் களிக்கச்செய்யுமாயின், நீங்கள் பார்க்கும் அழகை ஒரு
கிரணமாகச்செய்யும் பேரழகையுடையார் கடவுள் என்பதைச்
சிந்தியுங்கள்; அந்த அழகோ ஆனந்தமயமாய் மண்விண்ணென்
றுள்ள அகலிய இடமெல்லாம் நிறைந்து முடிவற்றதாய் இருக்கின்
றது.

இந்திரிய வுணர்ச்சியுடைய பிராணிகளெல்லாம் அருவப்
பரம்பொருளினது சொரூபங்களாம். அப்பரம்பொருளைக் கனப்
படுத்தவேண்டுமாயின், மேன்மைக் குணமுடையார் சுபாவிகள்,
சித்தர்கள், பாவிகள் என்னும் பேதங்காணாமல் எல்லாமனிதர்களை
யுங் கனப்படுத்தி யுபசரித்தல் வேண்டும்.

பாலியத்திலேயே வீணாய்க்காரியமில்லாது பேசுதலையொழித்
தலாலும், ஒருவருக்குத்தீங்குநேரிடாத விதமாய் உண்மை பேசுத
லாலும் நாவையாளுதற்குக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
பிள்ளைப்பருவத்திலேயே சத்தியத்தில் விருப்பமும் மேன்மை
யான நடையும்உண்டாகும்படி செய்யவேண்டும். பிள்ளைகளுக்கும்
பள்ளிக்கூடத்துக்கல்வி கற்பிக்கும்போதே, சரீரத்தாலும் மனத்
தாலும் உழைத்து ஜீவநார்த்தம் சம்பாதிக்கவும் மற்றையோரு
டைய நன்மைக்காகப் பாடுபடவும் அவர்களை யாளாக்குங் கல்வி
யையும் உடனே போதித்தல் வேண்டும். கல்வி, அறிவு, செல்வம்,
பலம் என்பவற்றைச் சரியாயுபயோகிக்கும் முறையும் அவர்க
ளுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும். பலசாலியிடத்துப் பலமிருப்
பது பலமில்லாதவனுக்கு ஆதரவாயிருக்கின்றது; கற்றோரிடத்
துக் கல்வியிருப்பது மற்றையோரிடத்திலுள்ள அஞ்ஞானத்திற்கு
மருந்தாயிருக்கின்றது; செல்வவானுடைய செல்வம் ஏழைக்கு
நிலைக்களமாயிருக்கின்றது. இவ்விதமாக, மனிதனுடைய எல்லாக்
குறைகளுக்கும் நிவிர்த்தியைக் கடவுள் அளித்திருக்கின்றார்.
கடவுள் அளித்தவற்றைக் கிரமமாய் உபயோகித்தால் எல்லாக்
குறைகளையும் நிவிர்த்தித்தல்கூடும். மனிதனுடைய பிணிக்கு மரு
ந்தும், பசிக்கு உணவும், வெள்ளுடலுக்கு உடையும் இருக்கின்
றன.

இத்தேசத்துப் பூர்வீகர்களால் "சமதிருஷ்டி" யென்று
சொல்லப்பட்டதே நல்லொழுக்கத்திற்கு ஆதாரமாயிருக்கின்றது.



ஒருவனை ஹிம்ஸிப்பது மற்றவனையும் ஹிம்ஸிக்கும்; ஒருவனைச்
சந்தோஷிக்கச் செய்வது மற்றவனையுஞ் சந்தோஷிக்கச்செய்யும்;
ஒருவனை யுணருமாறு செய்யும் இந்திரியம் மற்றையோரெல்லா
ரையும் உணரச்செய்யும். இந்த எண்ணத்தில் உறுதிகொண்டு
உலகத்தில் சந்தோஷம் அதிகரிக்கும்படியாகவும் துன்பமாந்தணி
யும்படியாகவும் பாடுபடுங்கள். இவ்விதமாக, வாழ்க்கை யாத்திரை
ஆநந்தமாகவே முடிவெய்தும்.

எல்லாரும் தாந்தாம் சங்கற்பித்தபடியே நடக்க விரும்புகின்
றனர். ஆனால், அவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளற் கநு
கூலமான மார்க்கங்களை யறியாமல், ஒவ்வொருவனும் மற்றையோ
ரைத் தான் சங்கற்பிக்கிறபடி நடக்குமாறு செய்ய வழிதேடுகின்
றான். ஒருவன் எல்லாருடைய சங்கற்பத்திற்கும் மனங்கோணா
மல் சுவாதீனங் கொடுத்தபோது மட்டுமே, அவனுடைய சங்கற்
பம் உண்மையில் சுவாதீனமுள்ளதாகும். நீங்கள் மற்றையோ
ருக்கு எது கொடுப்பீர்களோ அதனையே நீங்களும் பெறுவீர்கள்.
மரியாதையளிப்பவன் மரியாதையையும், ரக்ஷைதருபவன் ரக்ஷை
யையும் பெறுவான்; இரக்கமுடையார்க்கு மற்றையோரு மிரங்கு
வர். மற்றையோரைச் சந்தோஷப்படுத்தலினால் உங்கள் இருதய
ங்கள் சந்தோஷத்தால் நிறைகின்றன; துன்பம் துன்பத்தையே
யன்றிப் பிறிதொன்றனையுந்தராது; எப்படி விதைக்கின்றீர்களோ,
அப்படியே யறுப்பீர்கள். உங்களுக்கு மாத்திரமென்று நீங்கள்
தேடிக்கொள்வனவெல்லாம் ஏமாற்றுங் கானலென்றெண்ணுங்கள்.
மற்றையோருடைய மேன்மையைப் புகழ்ந்தால், உங்களுடையது
தானே பிரகாசிக்கும்; உயர்வு புகழப்பட்டதாயின், தாழ்வுமடி
கின்றது; எல்லாருக்கும் உங்களுக்கும் சந்தோஷம் உண்டாகின்
றது. பிறிதொருமனிதனை ஹிம்ஸிக்குஞ் செய்கையை நாணமும்
பயமும் தம் தாயாக வழக்கிடும். ஜோதியாக வெளிப்பட்டிருக்
குங் கடவுளை நோக்கிச் செலுத்தும் செயலெண்ணங்கள் ஒவ்வொ
ன்றுக்கும் தைரியமும் சந்தோஷமும் பாரியைகளாதல் வேண்டும்.
பாலியமுதற்கொண்டே எல்லாவிஷயங்களிலும் சுசியாக யிருக்கப்
பழகல்வேண்டும். அதனால், சரீரம், மனம், இந்திரியங்கள், உணவு,
சாமான்கள், குடியிருக்குமிடங்கள் சுற்றியுள்ளனவெல்லாம் ஆடம்
பரத்திற்காக மாத்திரமல்லாமல் வாஸ்தவத்தில் சுசியாயிருக்க
வேண்டும். தர்மாடிக்கைகளிற் பயிலாமலிருக்கும்படி பிள்ளை

களை மிக ஜாக்கிரதையாகக் கவனத்தோடு காக்கவேண்டும். முக்கியமாய், அவர்கள் மற்றவர்களை ஸன்மார்க்கம், கடமை நிறைவேற்றல் என்றிவைகளிலிருந்துபுறஞ்செலுத்தவாவதுபுறஞ்செலுத்தத் தூண்டவாவது பழகாமற்காத்துக்கொள்ளுதல் அத்தியாவசியகம்.

முதிராத வீரியத்தை வீணாக்காமல் தடைசெய்யும் ஆற்றலுடைய சௌகரிய விருப்பத்தை அபால்யத்திலேயே மனதிற் பதியும்படி செய்யவேண்டும்.

ஜோதியைத் தோற்றமாகப் பெற்றதும், அரூபியாய்க் காட்சிக்குப் புலப்படாததும், ஆயினும் நாமரூபங்கள் அளவில் பெற்றதும், ஸ்தூலமும், ஸூக்ஷ்மமும், காரணமும், சரமும், அசரமும், ஆணும், பெண்ணுமாய ஸர்வவியாபக வஸ்துவை உழுவலன்போடு மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் எல்லோரும் வழிபடல்வேண்டும். அவர் ஸந்நிதியில், உங்கள் இருதயங்களைத்திறந்து லௌகிகத்திலும் பாரமார்த்திகத்திலும் உங்களுக்கு நன்மையுண்டாகும் வண்ணம் பிரார்த்தனை செய்யுங்கள்.

(ஓம் ஸத்குருஅஃதாவது ஸர்வவியாபகரான உண்மையாசாரியரே) என்னும் மந்திரத்தை மனத்தால் ஜபித்து அவரை அழையுங்கள். உலகநன்மையை நாடிப் பிரதிதினமும் அக்கியில் ஆகுதி செய்யுங்கள்.

இவ்விஷயங்களைக்குறித்துப் பிள்ளைகளுக்குப் போதிப்பது ராஜாங்கத்துக்கும் பெற்றோர்களுக்குங் கடனாகும். இந்தக்கடமை கிரமமாக நிறைவேற்றப்பட்டால், உலகம் நித்தியசாந்தியிற்களிக்கும். ஓம்சாந்தி ப்ரசாந்தியுங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

## நீதிசாரம்.

### கல்வி.

இளமைப்பருவத்தில் கல்வியைக் கற்கவேண்டும்; கல்வியைக் கற்கச் சோம்பலுற்றவன் தரித்திரத்தை யடைவான்.

கல்வியால் நல்லறிவுமிகும், அதுபெரியோர்கள் சென்ற நல்லொழுக்கத்தில் புத்தியைச் செலுத்தும்.

கணிதநூலும், இலக்கணநூலும், மனிதருக்குக் கண்களென்று சொல்லத் தக்கனவாம்; ஆதலால், கற்றவர்கள் கண்



ணுடையவர்களென்றும் கல்லாதவர்கள்குருடர்களென்றும் சொல்லப்படுவார்.

நன்றாய் வாசித்தறிந்தவர்களை யாவரும்வணங்கி உபசரிப்பார்கள்; ஆதலால், கல்வியினிடத்து இடைவிடாது சிந்தையை வைத்துக் கற்கவேண்டும்.

மணற்கேணி தோண்டுமளவும் நன்னீர்சுரப்பதுபோலக் கல்வியைக் கற்குமளவும் நல்லறிவு மிகும்.

மிகுந்த தூரத்திலிருக்கும் அந்யதேசத்திற்கூட ஸ்வதேசத்திற் போல உபசரிக்கப்படுவதற்குக் கல்வியே காரணமாதலால் அதை ஒரு பொழுதும் விடாது பயிற்சிசெய்து வரவேண்டும்.

இம்மையிற் கற்றகல்வி எழுபிறப்பினுந் துணையாமென்று பெரியோர் கூறுவராதலால், கல்விப்பயிற்சியினிடத்துச் சோம்பலையகற்றிக் கற்கவேண்டும்.

கற்றகல்வியினாலேயுண்டாகிய பிரயோசநங் கற்றவர்க்குமாத்திரமன்று, அவர்களையடுத்த மற்றவர்க்குமுண்டாகும்.

பிறருக்குப் போதிக்கின்றவர்களது கல்வி, திநேதிநேவளர்ந்தேறுமென்பதற்கு ப்ரமாணந்தரம் வேண்டுவதில்லை.

சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்ற விதியையும் விலக்கையும் அறிந்து நடக்கின்ற பெரியோர்களுக்குத் தொண்டுசெய்து நடப்பதே வித்யார்த்தியின் கடமையாம்.

அறிவுடையவர்களினது ஸபையிற்செல்லுங் கல்வித்திறத்தோர் மேம்பாட்டை யடைவார்களென்பதற்கு, அவர்களுடைய ஸலக்ஷணமான கல்வியே காரணமென்று சொல்லப்படும்.

பலநூல்களை யாராய்ந்து அவற்றின் ஸாரமான பொருள்களைச் சிந்தையில் வைத்து உலகநடையியற்றுவதே கல்வித்திறத்தோர்க் கழகாம்.

சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்ற முடிவான பொருளின்னதென்று அறிவதற்கு அதிககேள்வியும் அறிவும்வேண்டுமாயினும் அதற்குக் கல்வியே காரணமாதலால் அதைக்கற்கவேண்டும்.

சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றிலுள்ள பொருள்களைப் பகுத்தறிந்து பிறருக்குபயோகப் படுத்துவதனால் நன்மையுண்டாகும்.

கல்வியைக்கற்றும் அறிவுவிளங்காதாயின் கற்றதனால் பயனில்லை. ஆதலால், அறிவோடு கல்விகற்கவேண்டும்.

அறிவுடையவர்கள் கற்றகல்வியின் உண்மை விருத்தி சந்திரன்போல வளர்ந்தேறும். ஆதலால் அவர்களிடத்து எப்போதும் பழகுதலால் வித்யார்த்திகளுக்கு மிகுந்த நன்மையுண்டாகும்.

சன்மார்க்கத்தையடைய விரும்புகின்றவர்கள், பலநூல்களை ஓதியுணரவேண்டும்; அதனால் மனத்திலுள்ள பற்றுநீங்கும்.

கல்விப்பொருளை யறிந்த அறிவுடையவர்களுடைய வரவுக்கு யாவரும் எதிர்பார்ப்பார்கள். மற்றவர்களையோவென்றால், அப்படி நோக்காராதலின், கல்விப்பொருளே யெல்லாவற்றினுஞ் சிறந்ததென்றறியவேண்டும்.

இலக்கணநூலை அறியாதவர்களோடு பழகவேண்டாமென்று பெரியோருரைத்தது கவனித்தற்குரியதாம்.

இலக்கணநூலையறிந்து மறியாதவனைப்போல் நடப்பவனோடும் ஸ்நேஹம் செய்யலாகாது.

கல்வியைக்கல்லாத அறிவீனர்களுடைய கூட்டத்திற் கலந்து, சேர்ந்தால் பலதீமையு முண்டாகுமென் றறியவேண்டும்.

பொய், களவு முதலான தீயவை நம்மைச்சேராம லிருக்குப்படி முன்னர் ஸஜ்ஜனமந்திரிபோலிருந்து எச்சரிக்கை செய்கின்றது கல்வியாதலால், அதனை விரும்பிக் கற்கவேண்டும்.

கல்வியைநன்றாய்க்கற்றபுத்திமானுக்கு அதனைவிடத் தோழமை வேறு வேண்டுவதில்லையென் றுபெரியோருரைத்திருக்கின்றார்கள்.

தீபம் இருளைத் துலக்குவதுபோலக் கல்வியாகியதீபம் மனிதர்களுடைய அறியாமையென்னும் இருளைத்துலக்கி நல்லறிவை விளக்கும்.

சூரியன், சந்திரன், சுடர், இம்மூன்று மிருளைத்துலக்கு மாயினும், ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வோரிடத்திலுமாத்ர மப்படிச் செய்யும். கல்வியானது அதனைப்பெற்றவருக் கெப்போதும் எவ்விடத்திலு மிருளையகற்றிஎப்பொருளையும்விளங்கச்செய்யும். ஆகலால் அஃது கல்விச்சூரியனென்றும், கல்விச்சந்திரனென்றும், கல்விச் சுடரென்றும், சிறந்தபெயர்களைப் பெறும்.



கல்விப்பொருளினுஞ் செல்வப்பொருளினும் கல்விப்பொருளே சிறந்ததாம். ஏனெனில், செல்வப்பொருள் செலவழியும், அதைக்குறித்து களவுசெய்யப்படும், கொடுக்கப்பட்டால் குறைந்து போகும்; கல்விப்பொருளோவெனில், கொடுக்கக்கொடுக்க மேன்மேலும் விருத்தியாகும்; செலவழித்தாலும் பெருகுமேயல்லது குறையாது; களவிற்கும் உரித்தாகாது. ஆதலால், கல்வியைக் கற்றவனுக்கு ஒருகாலுங் குறைவில்லை.

திரவியத்தினிடத்தில்வைத்த ஆசையால் கல்வியாகிய தெப்பத்தைக் கைவிட்டால் திரவியமிருந்தும் பயன்படாது; அதையுடையவரும் பெருமையடையார்.

கல்வியினால் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தினால் யோக்யதையும், யோக்யதையினாற் பொருளும், பொருளினால் தர்மமும், அதனால் ஸுகமுமுண்டாகுமாதலால், எல்லாநன்மைக்கும் கல்வியே காரணமாக விருக்கின்றது.

ஒரு வித்வான் படிப்பி லூற்றமில்லாமல் விளையாடிக்கெட்டுப் போகிற தனது குமாரரைப்பார்த்து பிள்ளைகளே! நீங்கள் கல்வி கற்கச் சோம்பலுற்றிருக்கிறீர்களாதலால், உங்களுக்குவயது வரும்போது கல்விமான்கள் முன்பாக உளையிலழுந்திய கடாப்போல் விழிப்பீர்களென்றான். ஆனதா லிதனைக்கருதித் தக்கபடி நடக்க வேண்டும்.

கல்விகற்றவன் எவ்வளவுதாழ்ந்தவனாக விருந்தாலும், அது அவனை மேம்பாடடையைச்செய்யும்; ஆதலால் தருணவயதிலேயே வித்தையைக் கற்கவேண்டும்.

சஸ்திரவித்தை, சாஸ்திரவித்தை இவ்விரண்டிலும் சாஸ்திரவித்தையே சிறந்ததாம். ஏனெனில், முற்கூறியது முதுமையில் உபயோகப்படாது; பிற்கூறியது எப்பொழுதும் பெருமைபெறும்.

கல்விமான்களிடத்தில் நற்குணங்களே விளங்கும்; மூர்க்கரிடத்தில் குற்றங்கள்விளங்கும். ஆதலால், ஆயிரம்பெயர்மூர்க்கருக்குள் கல்விமானொருவனிருந்தாலும் அவனே பூஜிக்கப்படுவான்.

எல்லாச்சங்கைகளையும் அறுத்துப் புறப்பொருள் யாவையும் விளக்கும் சாஸ்திரங்களே கண்களெனப்படும். ஆதலால் அக்கண்களில்லாதவன் குருடனெனப் படுவதற்குச் சந்தேகமில்லை.

கல்வி ஆரம்பத்தில் வருத்தமெனுந் துன்பத்தைத் தோற்றுவிக்கும், பின்பு ஸாதிக்கப்படுமாகில் மடமையெனும் அறியாமையை நீக்கி விவேகத்தையுண்டாக்குவதன்றி, செல்வத்தையும் சிறப்பையும் பெருகச்செய்யும். எப்படியெனில், பயிர்செய்யுங்குடியானவனுக்கு அதுமுதலில் கஷ்டத்தையுண்டாக்கி முடிவில் சௌக்யத்தைக் கொடுப்பது போலேதான்.

யாவருக்கு மழகுண்டாக்கும்நவரத்நாபரணங்களுக்கு அழகு செய்யவேண்டுமோ! அப்படியே கல்வியெனும் பூஷணத்தையுடையவனுக்கு வேறுபூஷணம் வேண்டுவதில்லை.

கல்வியானது தாழ்ந்தவனையடைந்திருந்தாலும் அவனை மேம்பாடான ராஜஸமுகத்திற்சேர்க்கும்; எப்படியெனில், மகாநதியானது இயல்பாகத் தாழ்ந்தவிடத்தை யடையத்தக்கதாயினும் எளிதிற் சேரக்கூடாத சமுத்திரராஜனைச் சேர்வது போலேதான்.

முதலிற் கல்வியைக்கற்று பின்பு பொருளையீட்ட விரும்பிய புத்திமான் அத்தொழில்களை நடத்துகிற விஷயத்தில் தனக்கு முதுமையும், மரணமு மில்லையெனக் கருதுதல்வேண்டும். தர்மம் புரிவதிலோ வெனில் அப்போதே கூற்றன் குடுமிகொண்டதாக நினைத்தல் வேண்டும்.

ஆதலால் கல்வியனது சகலவிதத்திலும் முக்யப்ரயோஜனத்தை யுண்டாக்குமெனக்கருதி, அக்கல்விச்செல்வத்தைப் பெருக்கி வாழவேண்டும்.

## குதூகல வர்த்தனி.

(முன்தொடர்ச்சி.)

நாரா:—சில நாள்களுக்கு முன் இந்த வீதியில் தேவடியாள் வீடு கிடையாது. தேவடியாள் வீட்டிற்குப் போகிறவர்களுமில்லை. இப்போது பார்க்கப் போனால் இந்த வீதியில் சுமார் ஏழெட்டு வீடுகளாய் விட்டன. இந்த வீதியிலுள்ள கௌரவ குடும்பஸ்தர் வீட்டுப் பிள்ளைகளில் அனேகர் கெட்டுப் போய் விட்டார்கள்.

சங்கர:—அந்த வயிற்றெரிச்சலை யேன் சொல்லுகிறீர்கள். பிள்ளைகள் கல்வியில் தேறி, குணங்குறி கெடாமல் விர்த்தி யாவ



தற்கும் பெற்றோர் சொல் மீறி உடம்பைக் கெடுத்துக்கொண்டு உள்ளதை யழித்து நாசமாய்ப் போவதற்கும் உள்ளகாரணங்களில் நாம் வசிக்குமிடமும் அவர்களுடைய ச்கவாசமும் ஒரு காரணமாகின்றது. பார்த்தீர்களா? காமபாலன் எப்படியிருந்தான்? எப்படியானான்? அவன் எவ்வளவு கௌரவமான குடும்பத்திற் பிறந்தவன்? அவனுடைய பிதா எவ்வளவு தனவந்தர்? எவ்வளவு படித்தவர்? இப்படிப்பட்டவர் பிள்ளை யென்னென்ன திருவிளையாட்டு ஆடி வருகிறான்?

நாரா:—ஆம் மெய்தான். அவன் வாசித்துக் கொண்டிருக்கும் போதே கெடத் தொடங்கினான். இந்த வீதித் தேவடியாள் வீடுகளுக்கு வருவதும் போவதுமாயிருக்கிற பெரிய மனுஷர்களைப் பார்த்தே கற்றுக் கொண்டான். காலா காலத்தில் போக வாவிருந்தவன். ஒருத்தியை ஸ்திரமாக வைத்துக் கொண்டான். செலவுக்கு வேண்டுமே! பிதாவோடு சண்டையிட்டு சொத்தையெல்லாம் பங்கிட்டுக் கொடுக்கும்படி சொன்னான். அதனால் பிதாவுக்கும் புத்திரனுக்கும் விரோத முண்டாய் ஒருவர்க்கொருவர் பேசாதிருந்தார்கள். இவனுக்கும் அந்தத் தேவடியாளை முன் வைத்துக் கொண்டிருந்தவனுக்கும் பிராணபத்தான சண்டையுண்டாய்ப் போலீசுக்குப் போய் மானங்கெட்டு வந்தான். இவன் பிதாவானவர் சொர்ண விக்கிரகம் போல் ஒருபெண்ணைப்பார்த்துக் கலியாண முடித்து வைத்தார். அந்தப் பெண்ணோ அதி புத்திசாலி. மகா பதிவிரதை. அப்படிப்பட்ட குண வதியைச் சிறை வைத்து விட்டு எந்நேரமும் அந்தத் தேவடியாள் வீடே கதியாயிருக்கிறான். இவனும் அவளுமாய்ப் பண்டியிலேறிக் கொண்டு இந்த ஊரெல்லாஞ் சுற்றி வருகிறார்கள். எந்த ஊரில் உற்சவமானாலும் அவளையும் இவனையுங் காணலாம். கொஞ்சமேனும் லஜ்ஜையென்பது கிடையாது. பணத்தை யெல்லாம் பாழாக்குகிறான். இன்னுங் கொஞ்சந் தானிருக்கிறது. அதையும் அதிசீக்கிரத்தில் தொலைத்து விடுவான், பிறகு என்ன கெதியாவானோ?

சங்கர:—கெதியென்ன? அதோ கெதிதான் தெரிந்தேயிருக்கிறது.

நாரா:—இந்தக் காம பாலனுடைய பார்யாவைப் போலவே இன்னும் அனேகருடைய ஸ்திரீகளுந் துக்கப்பட்டுக் கொண்

டிருக்கிறார்கள். இன்னொரு விசேஷங் கேட்டீரா? இப்போது இந்த வூரில் தேவடியாட்களை வைத்துக் கொண்டிருப்பவர்களெல்லாஞ் சேர்ந்து தேவடியாளை வைத்துக் கொள்ளாதவர்களை நபும்சர்களென்றும், வகையற்றவர்களென்றும் பரிகாசஞ் செய்கின்றார்கள்.

சங்கர:—இந்த வூரிலிருப்பவர்களே யல்லாமல் இதரப் பிரதேசங்களிலிருக்கும் தேவடியாட்களெல்லோருமே யிந்த வூரில் வந்து குடித்தன மிருந்தாலும் போதாது. லோகத்திலிருப்பவர்களெல்லாருந் தேவடியாட்களானால் மிகவும் நன்றாயிருக்குமென்று சில மகானுபாவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

நாராய:—இவ்வளவு பாரிய ஆலோசனை செய்தவர்கள் எவ்வளவு புத்திமான்களோ? ஆனாலிவர்கள் கோரிக்கை லோகத்திலிருக்கும் - நதி-ஏரி - குளம் - குட்டை முதலிய ஜலமெல்லாம் - பிராந்தி (Brandy), வுஸ்கி (Whisky), ஆரக் (Arack), கள் முதலியவைகளாய் விட்டால் வெகு நன்றாயிருக்குமே யென்று கோரிய குடிக்காரன் கோரிக்கையைப் பார்க்கிலும் மிக நன்றாயிருக்கின்றது.

சங்கர:—வெகு நன்றாகச் சொன்னீர். இந்தக் குடி, கூத்தி விஷயத்திற்கு சாக்ஷாத் மைத்துனன் 'முறையாகவே யிருக்கிறது. ஐயோ! இந்தக் குடியர் சங்கதியை யெடுத்துப் பேச வேண்டுமானால் இப்போது காலம் போதாது. குடியர் படும் பாட்டையும், குடியினால் வருங் கேட்டையும் இன்னொரு சமயம் விஸ்தாரமாக எடுத்துப் பேசலாம். நல்லது பந்துக்களென்ன செய்யாமற் போனபோதிலும் போகட்டும். சதாசாரத்தை ஸ்தாபிக்கும் மதாசாரியர்களாகிலும் இந்தத் துராசாரங்களை யொழிக்க ஸ்ரமமெடுத்துக் கொண்டால் நலமாயிருக்கும்'

நாரா:—இப்போது அந்த மதாசாரியர்களுடைய வார்த்தைகளெல்லாம் செல்லாத காசுகளாய் விட்டன. அந்த மதாசாரியர்கள் கூட இந்தப் பெரிய மனுஷர்களை அனுசரித்தாலொழிய அவர்களுக்குப் பிட்சை கிடையாது. அந்த மதா சாரியர்களுக்கு இந்தச் சங்கதி தெரிந்தால் அவர்களிடத்திற் பணத்தைப் பெற்றுக்கொண்டு சர்வோத்கிர்ஷ்டமானவர்களென்று புகழ்வார்கள். 'குலங் குப்பையிலே பணம் பந்தியிலே' யென்றறியீரா?



சங்கர:—எனக்கிப்போது போக வேண்டுங் காரியமிருக்கிறது. இன்னொரு சமயம் நம்முடைய சினேகிதர்களை யெல்லாம் விசாரித்து இதற்கென்ன பிரயத்தனஞ் செய்ய வேண்டுமோ அதை ஆலோசிப்போம்.

நாராயண:—நல்லது நாளைய ஆதிவாரம் நாமெல்லோருங் கூடி யொருவழி தேடினாலொழிய பட்டணத்தில் சங்கதியொன்றுஞ் சரிப்படாது.

சங்கர:—தவறாமல் அப்படியே செய்வோம். (என்று போய் விடுகிறார்கள்).

(இன்னும் வரும்.)

சோக்கலிங்கம் பிள்ளை,
சென்னை.

## ஸுரேந்த்ரன்.

(முன் தொடர்ச்சி)

V

### முடிவு.

"The old trite saying" goodness makes happiness "is as eternally true as that the sun shines in heaven"——Dickens—ஸூர்யன் ஆகாசத்தில் தினந்தோறும் ப்ரகாசிப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு ஸத்யமானதாம், "ஸுசீலமும் யோக்யமுமுள்ள தன்மை ஸதாஸுகத்தையே உண்டாக்குகின்றது" என்ற இந்தப் பழமொழி.

காலை எட்டு மணியிருக்கும். அபிராமன் ஸுரேந்த்ரனிடம் வந்து "நேற்று வந்த போர்வீரர் விடியற் காலமேயே எழுந்து போகப் புறப்பட்டார்." எங்குப் போகிறீர்? எம் தலைவரிடம் சொல்லி விட்டுப்போம் "என்றேன். அவர்," நான் இப்பொழுது அவஸரமாகப் போகவேண்டும். திலீப மஹாராஜா வந்தவுடன் தான் நான் வரமுடியும் "என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்," என்று சொன்னான். இதைக் கேட்டதும் ஸுரேந்த்ரனுக்கு வருத்தமுண்டாயிற்று. "யாரோ புதிய மனிதர் வந்தார்; அவரை ஸரியாகக்கூட பார்க்கவில்லையே" என்று அவன் வ்யஸனப்பட்டான்.

மத்யானம் பன்னிரண்டு மணிக்குள் கோவிந்தனும் க்ருஷ்ணனும், சக்கரவனத்திலுள்ள சண்டை செய்யக்கூடிய நடுவயது மனிதர்களுள் ஸுமார் 110-பேர்களை ஆயுதபாணிகளாய்த் தயார் செய்து விட்டார்கள்.

ஸரியாய்ப் பன்னிரண்டரைமணிக்கு உதயபுரியிலிருந்து மார்த்தாண்டனுடனும், முதல் ந்யாயாதிபதி ஞானஸாகரருடனும் முகுந்தன் ஸுரேந்த்ரனதுபர்ணசாலைக்கு வந்துசேர்ந்தான்.

ஸுரேந்த்ரன்:—ஞானஸாகரரே! மார்த்தாண்டரே! இவ்வளவு தூரம் நான் உங்களுக்கு ச்ரமம் கொடுத்ததை மன்னிக்கக் கோருகிறேன்.

ஞானஸாகரர்:—ஸந்தோஷம் ஸ்ரீதரரைக் கூப்பிடும். ஆயிரம் ஸவரன்களை அவர் வைத்திருக்கிறாரா?

ஸுரேந்த்ரன்:—ந்யாயாதிபதியே! கொஞ்சம் கருணை கூர்ந்து இன்னும் ஒரு மாஸதவணை தாரும். அதற்குள் அவர் பணம் கொடுத்து விடுவார்.

மார்த்தாண்டன்:—ஒரு மணி ஸாவகாசம் கூடத் தாமுடியாது. ஸ்ரீதரரைச் சீக்ரமாகக் கூப்பிடு.

ஸுரேந்த்ரன்:—அவருக்குத் தேஹ அஸௌக்யம். படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூட சக்தியற்றவராயிருக்கிறார். உங்களுக்குக் கொஞ்சம்கூட இரக்கமில்லையா?

மார்த்தாண்டன்:—அதெல்லாம் முடியாது, அவரில்லாமல் இது எப்படி பைஸலாகும்.

ஸுரேந்த்ரன் முகுந்தனுக்குச் சைகை செய்ய அவன் உள்ளே போய்க் கட்டிலுடன் ஸ்ரீதரரைத் தூக்கிவந்தான். கிரிஜாவும் கூடவந்தாள். ஸ்ரீதரர் "நிலம்! நிலம்!!" என்று சொல்லிக்கொண்டே யிருந்தார்.

ஸுரேந்த்ரன்:—பார்த்தீர்களா அவருடைய ஸ்திதியை?

மார்த்தாண்டன்:—ஆயிரம் ஸவரன் கொடுத்தாலாச்சுது; இல்லாவிடின் நிலம் போய்விடும். ஆனால் இன்னொரு வழியுள்ளது. எனது பந்துவாகிய ஸுகுமாரனை, கிரிஜா! நீ கல்யாணம் செய்து கொண்டால் நிலம் உங்களுக்கு ஸொந்தமாய்விடும்.



ஸுரேந்த்ரன்:—ஐயா! மார்த்தாண்டரே! என் முன் கண்டதையெல்லாம் சொல்லாதீர். முகுந்தா! நம் கஜானாவிலிருந்து ஆயிரம் ஸவரன்களைப் போய்க் கொண்டுவா.

முகுந்தன்:—(அங்ஙனமே கொணர்ந்து) இதோ இந்தாரும்! ஞானஸாகரரே!

மார்த்தாண்டன்:—இரண்டாயிரம் பவுனுக்கு ஒரு வர்ஷத்துக்கான வட்டி 400-ஸவரன்களெங்கே?

ஸுரேந்த்ரன்:—முகுந்தா! (தனிமையாக) நீபோய் இன்னும் ஐந்நூறு ஸவரன்கள் கொண்டுவா.

முகுந்தன்:—(அங்ஙனமே செய்து) இதோ இந்தாரும் நானூறு ஸவரன்.

ஞானஸாகரர்:—உதயபுரியின் ப்ரதம ந்யாய ஸ்தலத்தின் அதிபதியாகிய நான் இக்காட்டுக்கு வந்து கடன் பைஸல் செய்ததற்குப் படி நூறுபவுன் தரவேண்டும்.

ஸுரேந்த்ரன்:—அப்படியா? ஆனால் இந்தாரும் உமது "படி" நூறு பவுன்.

ஞானஸாகரர்:—ஆனாலும் இன்னுமொரு கஷ்டமிருக்கிறதே. ஜாமீன் பத்ர ப்ரகாரம் இந்தக் கடன் மார்த்தாண்டன் க்ருஹத்தில் ஸரியாய்ப் பன்னிரண்டு மணிக்குக் கொடுக்கவேண்டியதாயிற்றே. ஆனால் நடுக்காட்டில் ஸுமார் ஒரு மணிக்குத் தானே பணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நிலம் மார்த்தாண்டருடையதுதான்.

ஸுரேந்த்ரன்:—ஆ! ஹா! அப்படியா ஸமாச்சாரம்? ஜாமீன் பத்ரத்தின் எழுத்துப் ப்ரகாரம் ஸகலமும் நடைபெற வேண்டியதோ? இதுதானா நீர்படித்த சட்டம். ந்யாயம் அப்படியிருந்தாலும் இரக்கமில்லையா உங்களுக்கு? முகுந்தா! ஜாக்ரதை! என் தாரையை எடு. இவர்கள் ஏதோ அக்ரமம் செய்யவே இங்கு வந்திருக்கிறார்கள்.

மார்த்தாண்டன்:—ஸுரேந்த்ரா! ஜாக்ரதை. நாங்கள் தனிமையாக வந்துள்ளோம் என்று எண்ணாதே. மஹேச ராஜா தம் சேனையுடன் எங்கள் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்.

ஸுரேந்த்ரன்:—மஹேசன் வந்தால் மாத்திரம் நான் பயப்பட்டு விடுவேனா? இந்தத் தாரையை இப்பொழுது நான் ஊதி

னால் எனக்காகத் தம் உயிரையும் கொடுக்க ஸித்தமாயுள்ள 120 தேர்ந்த வீரர்கள் இங்குவந்து சேர்வார்கள்.

ஸ்ரீதரர்:—கிரிஜா! நீ எப்படியாவது ஸுகுமாரனைக் கல்யாணம் செய்துகொண்டு என் நிலத்தைக்காப்பாற்ற வேண்டியது அவச்யம். தவணையும் தவறி விட்டதே.

அபிராமன்: — (ஓடிவந்து) ஸுரேந்த்ரரே! மஹேசனும் ஸுகுமாரனும் ஸுமார் இருநூறு சிப்பாய்களுடன் சங்காவனத்துக்குள் வந்துவிட்டார்கள்.

ஸுரேந்த்ரன்:—முகுந்தா! நீபோய் நம்சேனைக்குத் தலைவனாயிரு.

இங்ஙனம் அவன் சொல்லிவிட்டு உள்ளேபோய் ராணுவ உடைதரித்துக் கொண்டான். அதன் பின் தன் சேனையைப் பார்த்து அவர்களுக்குத் தைர்ய மூட்டப் போய்விட்டான். ஆனால் போகும்பொழுது அபிராமனையும், க்ருஷ்ணனையும், கிரிஜாவைக் காக்கும்படி அனுப்பினான்.

கிரிஜா, ஸ்ரீதரர், மார்த்தாண்டன் முதலியவர்கள் இருந்த இடத்திற்கு ஸுகுமாரன் வந்தான்.

ஸுகுமாரன்:—கிரிஜா!

கிரிஜா:—ஐயா! நான், சாகும் தகப்பனாரை ரக்ஷித்துக் கொண்டிருக்கின்றேன். ஒன்றும் பேசாதீர்.

ஸுகுமாரன்: — கடனோ இன்னும் கொடுத்தாகவில்லை. கிரிஜா! நீ என் மனைவிதான்.

மார்த்தாண்டன்:—வட்டி, அஸல்முழுதும் தம்பிடிகூட பாக்கியில்லாமல் கொடுத்தாய் விட்டது.

ஸுகுமாரன்:—ஆனால் நான் கிரிஜாவை இழக்கவா நேரிட்டது.

ஞானஸாகரர்:—ஆனால் மற்றொரு "பிடி" இருக்கிறது. கடன் உதயபுரியில் இன்று ஸரியாய் 12-மணிக்குக் கொடுக்க வேண்டியதென்பது ஜாமீன் பத்ரத்தின் கட்டுப்பாடு. ஆனால் அது நடுக்காட்டில் ஒரு மணிக்குச் செலுத்தப்பட்டது. ஆகவே நீர் உமது இஷ்டப்ரகாரம் செய்யலாம்.



இதைக் கேட்டதும் ஸுகுமாரனுக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. ஸ்ரீதரர், கிரிஜாவுக்கு அடிக்கடி தாம் முன்னே சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தார். இதைக் கேட்ட ஸுகுமாரன், "ஆனால் பரவாயில்லை. கிரிஜாவோ ஸ்ரீதரர் இஷ்டப்படி செய்வாள். ஆகவே அவள் என்னைக் கண்டிப்பாய் மணப்பாள் என்று நினைத்தான். இதற்குள் நாலைந்து பேருடன் மஹேசன் அங்கு வந்து விட்டான். அவனைக் கண்டதும் எல்லோரும் திடுக்கிட்டனர்.

அபிராமன்:—யாராவது கிரிஜாவின்மீது கையை வைத்தால் அவனை இந்தக் கத்தியால் ஒரே வெட்டாய் வெட்டி விடுவேன்.

மஹேசன்:—என்னடா உளறுகிறாய் என்னை யாரென்று நினைக்கின்றாய்?

அபிராமன்:—யாராயிருந்தாலும் ஸரியே. கிரிஜாவை எவன் அணுகுகின்றானோ அவன் இந்த வாளுக்கு இரையாவான்.

ஸுகுமாரன்:—அடே! மூடமே! இவர் உதயபுரியின் அரசர் மஹேச மஹாராஜா; பத்ரம்!

அபிராமன்:—அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்குத் தலைவர் ஸுரேந்த்ரர்தான்.

மஹேசன் கோபத்துடன் அபிராமனைத் தன்வில்லால் ஒரு அடி விட்டான். இந்த விஷயத்தை ஸுரேந்த்ரனுக்குச் சொல்ல அவன் போய்விட்டான். உடனே மஹேசன் கிரிஜாவின் ஸமீபத்தில் சென்றான். அவள் தன் கையில் கத்தியை ஏந்திக்கொண்டு யார் வந்தாலும் வெட்டி விடுவதாகப் பயமுறுத்தினாள்.

மஹேசன்:—என்ன, ஸுகுமாரா! ஒரு அல்ப பெண்ணுக்கெதிரில் நீ கூட திக்ப்ரமைகொண்டவனாய் நிற்கிறாயே. உடனே இவளைப்பிடித்து நமது அரண்மனைக்குக் கொண்டுபோ.

ஸுகுமாரன்:—என்ன? மஹாராஜா? அவளை நான் தானே நேசித்து வருகின்றேன். ஆகவே அவள் எனக்குத்தான் ஸொந்தம்.

மஹேசன்:—இல்லை! இல்லை? அவள் எனக்குத்தான் மனைவியாவாள். முதலில் எனக்கும் பின்னர் உனக்கும் அவள் ஸொந்தமாயிருப்பள். ஆகவே உடனே அவளைக் கைது செய். தாமஸம் செய்யாதே.

ஸுகுமாரன்:—அட! பாபி! இதுவா உன் எண்ணம், உன்னையும் நான் இதுவரை நம்பினேனே!

இதன் மத்தியில் முன்னாளிரவு சாப்பிட்டுப்போன போர்வீரன் அங்குவந்தான். அவனைக் கண்டதும், க்ருஷ்ணன் "ஐயா! போர்வீரரே! இதுவரையில் எங்கிருந்தீர்? எங்களுக்கு ஸஹாயம் புரியுங்கள். இந்தப் பேதைப்பெண்ணை மஹேசராஜா கற்பழிக்க முயலுகிறார்" என்று சொன்னான். இந்தப் போர்வீரனைக் கண்டதும் மஹேசன் பயப்பட்டான்.

போர்வீரன்:—பெண்ணே! இவன் சொல்வது உண்மையா?

கிரிஜா:—முற்றிலும் உண்மைதான், ப்ரபோ!

க்ருஷ்ணன்:—திலீப மஹா ராஜாவின் முன்னிலையில்தான் அவள் கல்யாணம் செய்துகொள்வாளாம்.

போர்வீரன்:—இதோ இருக்கிறேன்! திலீபன்! (என்று, தான் உடம்புமுழுதும் உடுத்திருந்த போர்க்கவசத்தை எடுத்துப் பழைய திலீபனாக விளங்கினான். மஹேசன் தவிர மற்றெல்லோரும் "திலீப மஹாராஜா நீடூழிவாழ்க" என்று வாழ்த்தினார்கள். உடனே மஹேசன் தனது சைன்யத்தின் முக்யஸ்தர்களை நோக்கி "இவன் திலீப மஹாராஜாவைப்போல் உருவத்திலும் குரலிலும் இருந்தாலும் இவன் என் தமையனல்லன். இவனை உடனே கொல்லுங்கள்" என்றான். சிறிது நேரத்துக்குள் ஐந்தாறுபேர் திலீபன் மேல் பாய்ந்து சண்டையிட்டனர். மஹேசனது ஸைன்யத்தலைவன் திலீபன் மீது குறிவைத்து ஓர் அம்பு எய்ய ஆரம்பிக்கும் பொழுது திடீரென்று அவன்மேல் ஸுரேந்த்ரன் பாய்ந்து அவனை ஸ்மரணையற்றவனாய்க் கீழே விழும்படிச் செய்துவிட்டான். இதனைக்கண்ட திலீபன், "ஸுரேந்த்ரா! உன் பராக்ரமம் பாராட்டக்கூடியது. நீ வந்திராவிட்டால் நான் அப்பொழுதே செத்துப் போயிருப்பேன்" என்று சொன்னான். ஸுரேந்த்ரன் தன் தாரையை ஊதினான். அதற்குள், திலீபன் சங்கரவனத்துக்கு ஸமீபத்தில் நிறுத்திவைத்திருந்த ஸைன்யமும் வந்துவிட்டது. ஸுரேந்த்ரன், ஊதிய தாரையைக் கேட்டதும், சங்கரவனத்துச் சேனையும் வந்து சேர்ந்தது. இவைகளைக்கண்ட மஹேசன் ஓர் குதிரையின்மீது ஏறி க்ஷணநேரத்தில் கண்ணுக்குமாயமாய் ஓடிவிட்டான். மஹேசன் ஓடிவிட்டதைப் பார்த்த அவனது சேனை திலீபனுக்குக்கீழ்ப்படிந்து மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டது. திலீபன் ஜயசாலியாய் விளங்கினான். (வரும்)

M. S. ஸ்ரீநிவாச சர்மா, வேலூர்.

40

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
JUL 1916
MADRAS.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-11 தொகுதி-11 | May மேமீ 1916. | No-10. பகுதி-10.

## கொற்றவனறித லுற்றிடத் துதவி.

பிறருதவியின்றி வாழ்வது நம்மனோருள் எவர்க்கும் ஆகாதென்பது சிதையாத சித்தாந்தமாமாகலின், நாம் நமக்குத் துன்பம் நேர்ந்த விடத்துவந் துதவி செய்வாரிடத்து விசுவாசமுடையவராயிருப்பது அத்தியாவசியகமான கடமையாம். ஒருவர்க்கு மற்றொருவ ருதவி செய்வது எப்போது? அவர்க்குத் துன்பமுண்டாய போதேயாம். உதவி செய்கின்றவர் உதவியைப் பெறுகின்றவரென் னுமிருதிறத்தாருள், உதவி செய்கின்றவர் மேலோராயும், உதவியைப் பெறுகின்றவர் கீழோராயுமிருப்பரென்பது சிறிதாகித்து நோக்கினால் நன்கு விளங்குவதாம்.

துன்ப முற்றவர் கீழோர்; அதனை நீக்குவோர் மேலோரென்றிங் குணர்தல் வேண்டும். "உறவற்க, துன்பத்துட் டுப்பாயார் நட்பு - துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினாரது நட்பை விடாதொழிக" என்று திருவள்ளுவர் கூறுவதால், துன்பக் காலத்தில் வந்துதவி செய்பவர் மேலோராவரென்பது சொல்லாமலே பெறப்படுவதாம். நமக்கு வரும் துன்பங்கள் பல திறத்தனவாக விருக்கின்றன; அவற்றுள் ஒழித்தற்குரிய துன்பங்களை யொழிப்பார்களும் பல திறத்தனராக விருக்கின்றனர். தலை நோய் கால்நோய் முதலியவற்றால் வருந் துன்பங்களை யொழிப்பவர் யார்? மருத்துவ ரன்றோ? உணவில்லாமையால் வருந் துன்பத்தை நீக்குபவர் யார்! உணவிடுவோரன்றோ? ஆடையில்லாமையால் வருந் துன்பத்தை யகற்றுவார் யார்? ஆடை

கொடுப்பானன்றே? அரசனது † பரிசனத்தாலும், அவனது பகைவராலும், கள்வராலும், யானை புலி முதலிய துஷ்டப் பிராணிகளாலும் வருந் துன்பங்களைப் பரிகரிப்பவர் யார்? அரசனேயன்றோ? அரசன் தன் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் துஷ்டப் பிராணிகளாலும் வருந் துன்பங்களை நீக்கிக் காப்பதொழிவானாயின், குடிகள் சுகமாக வாழ்வது முடியுமோ? குடிகள் பயமின்றி வாழும்போதன்றோ மருத்துவர் முதலியோர் பிறர்க்கு மருத்துவ முதலியவற்றைச் செய்தற்குரியவரா யிருக்கின்றனர். இதனால் அரசன் தன் குடிகளுக்கு வருந் துன்பத்தைத் தாமதியாது நீக்கி வரும்போதுதான் அவர்கள் பயமின்றி வாழ்தற்குரியவரா யிருக்கின்றன ரென்பது பெறப்படுவதாம். அரசன் தன்குடிகளுக்குத் தன் பரிசனத்தாலும் பகைவராலும், கள்வராலும், துஷ்டப் பிராணிகளாலும் வருந் துன்பத்தையொழித்து அவர்களைப் பாதுகாத்தற் குரியவனா யிருத்தலின், குடிகள் அவனறிய வாழ்தல் மிகநன்றாம்.

"ஆற்றங் கரையின் மரமு மரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" என்று நல்வழி கூறுகின்றமையின், அரசனறிய வாழ்தல் ஆபத்திற் கிடமாமன்றோ வென்று வினவுதல்கூடும். குடிகள் அரசனினும் பெருஞ் செல்வராக வாழ்வாராயின், அவ்வாழ்வு நிலைபெறுவதன்றாம்; யுத்தம் மிகு உக்கிரமாக நேரிட்டபோது அவர் பொருளனைத்தும் அரசனுக்குரியதாதல் நிச்சயமாம். அரசனுக் கடங்கி அவனறிய வாழ்வது தவறாகாது. அரசனுக் கடங்கி, அவனறிய வாழ்வார்க்குப் பெரும்பான்மையும் விபத்துண்டாவதில்லையாம்; உண்டாயினும் அது சூரியன் முன் இருள்போல விரைந்து கெடுவதாம். "கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்" என் றுலகநீதி கூறியவாறு அரசனோ டெதிர்த்து நின்று மாறுபாடாய சொற்களைப் பேசாது, அவனுக்குப் பணிந்தொழுகுவது நம்மனோர்க்கு மிக முக்கியமான கடமையாம். இம்முக்கியக் கடமையை மேற்கொண்டு அரசனறிய வாழ்பவர் துன்பமடைவது கூடுமோ? அடைந்தாலும் அது நிலைத்து நிற்பதில்லையாம்.

அரசனறிய வாழ விரும்புகின்றவர் அறிவொழுக்கங்களாற் றகுதியுடையரா யிருத்தல் வேண்டும். "அறிவுடை யொருவனை

† பரிசனம்-அரசனது உறவினர்; உத்தியோகஸ்தர் முதலாயினவர்.



யரசனும் விரும்பும்" என்று வெற்றிவேற்கை கூறுவதை நன்குணர்ந்து நோக்குவார்க்கு அரசனறிய வாழ்பவர் அறிவுடையவரன்றி மற்றவரல்ல ரென்பது தவறாது விளங்குவதாம். அறிவொழுக்கமுடையவராய் அரசனறிய வாழ்வார்க்கு விபத்துவருவதில்லையா மென்பதனை நம்மனோர்க்கு நன்குணர்த்துதற் பொருட்டே நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார், 'கொற்றவனறித லுற்றிடத் துதவி-(அறிவொழுக்க முடையார்) அரசனறிய வாழ்தல் (அவர்க்கு விபத்து) உற்றவிடத்து உதவிசெய்வதாம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அறிவொழுக்க முடையவராய் அரசனறிய வாழ்வார்க்குற்ற துன்பம் கெடாதிருப்பதில்லையா மென்பது குசேலரது கதையைப் படிப்பவர்க்கு நன்கு விளங்கும். குசேலர் கண்ணபிரானையறிந் திருந்தமையினாலன்றோ, துவாரகைக்குச் சென்று அவனது தரிசனம் பெற்றுத் தமது வறுமைப் பிணி மாறும் மாண்பினைப் பெற்றார்? குசேலரது கதை என்ன விளக்குகின்றது? 'கொற்றவ னறித லுற்றிடத் துதவி' என்பதனையன்றோ விளக்குகின்றது?

அரசனறிய வாழ்பவர் எக்காரணம் பற்றியாவது அவனை யிகழுதல் கூடாது; இகழுவாராயின், அவர்க்கு மரண முதலிய தண்டனைகளுள் ஏதாவதொன்று நிச்சயமாக வருவதாம். பிரஹ்மாவின் மானச புத்திரருள் ஒருவனான தட்சப் பிரஜாபதி தனது குமாரத்தியாகிய உமாதேவியைச் சிவபெருமானுக்குத் திருமணஞ் செய்து தந்து,யால்சிவபெருமானுக்கு மாமனென்று கர்வித்து, வழிபாடு செய்யாமல், அப்பெருமானை அவமதித்து வந்தனன்; அதனால் அவன் தான்செய்த யாகத்தில் வீரபத்திர மூர்த்தியால் கொல்லப் பட்டானென்று புராணங்கூறுவதை நன்குணர்வோமாயின், ஒருவர்க்கு அரசனறிய வாழ்வது மாத்திரம் போதாது; அவனுக்கு மிகவடங்கி யொழுகுதலும் வேண்டும்; அவ்வாறிருந்தாற்றான், அவர்க்குற்ற துன்பத்தை அரசன் ஒழித்தற் குரியனாகின்றா னென்பது விளங்குவதாம். தன் குடிகளுக்குத் தன் பரிசனத்தாலும் பகைவராலும், கள்வராலும் துஷ்டப் பிராணிகளாலும் வருந் துன்பத்தை விரைந்து நீக்குவதற்குக் கடமைப்பட்டுள்ள அரசன் தானறிய வாழ்பவர்க்குற்ற துன்பத்தை நீக்காதிருப்பனோ? அவர்க்குத் தன்னுயிரையுங் கொடுக்கச் சித்தமாயிருப்பன். தேர்ப்பாகன் மகனென்று சொல்லப்படுங் கர்ணன் அங்க தேசத்திற்கரசனானதெதனால்? அவன் துரியோதனனோடு கொண்ட

"அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி, இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தே"னில்லை; வைத்தாலன்றோ, யான் புனிதவதியென்னும் பெயரைப் பெற்றவளாவேன்.

குண:—அருந்தவச் செல்வி! அரனது நாமம் அளவிறந்த மகிமையை யுடையதன்றோ? அரனது நாமத்தை யன்புடன் சொல்வார்க்கு அண்டுமோ பிறவி? நடராஜப் பிரபுவை நினைக்குந்தோறும் காணுந்தோறும் பேசுந்தோறும் ஆநந்தத்தேன் சொரியுமென்பது எனக்கனுபவமாக வில்லை அம்மணி! நடராஜப் பிரபுவின் மகிமையை நன்றாகவெனக்குபதேசிக்க வேண்டுந் தாயே!

புனி:—(முகத்தைத் தெருப்பக்கமாகத் திருப்பி) குணவதி! ஒரு சிவனடியாரின் திருச்சொல் செவிப்படுகின்றது? அச்சொல் நெஞ்சை யுருக்கி வஞ்சகத்தை யொழிக்கின்றது; வெளியே சென்று பார்.

குண:—(தெருவிற் சென்று திரும்பி வந்து) அறத்தின் கிழத்தி! வேதங்கள் மொழிந்த பிரான் மெய்த்தொண்டரொருவர் அரனுமதனை யன்போடு சொல்லிக்கொண்டு வருகின்றார். அவர் பார்ப்பதற்குப் பரமசிவம்போல விருக்கின்றார்; பசியால் மெலிந்திருக்கின்றாரென்பது அவர் தளர்நடையால் தெரிகின்றது?

புனி:—(வருத்தத்துடன்) என்ன காரியஞ் செய்தாய்? அழைத்தேன் வரவில்லை?

குண:—(உளநடுங்கி முகம்வாடி உடல் தளர்ந்து) பெருந்தவறு செய்துவிட்டேன்! பேதை மதியால் அப்பெரியாரை யுழையாது விட்டேன்; சமைபறகருமம் முடியாதிருப்பதைச் சற்றுக் கவனித்தேன்; இது பொழுதே சென்று அவரை யழைத்து வருகின்றேன். (வெளியே சென்று சிவனடியாரை வணங்கி) ஆண்டவரே! இவ்வீட்டின்கண் திருவமுது செய்ய எழுந்தருளவேண்டும்! எனது தலைவி புனிதவதியார் தரிசிக்க மிகு ஆவலாயிருக்கின்றார்.

சிவனடியார்:—அப்படியா! வருகின்றேன். இப்பெண்மணி நன்மணி; இப்பொன்மணி இன்சொற்கூறி நம்மை யமுதுண்ணவழைப்பது மிகு இனிமையாக விருக்கின்றது.

[சிவனடியார் புனிதவதியார் கிருகத்துள்ளே வருகின்றார்.]



புனி:—(நமஸ்கரித்து) முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே யென்னும் பெரியாரே! தாங்களிங்கெழுந்தருளியது யாங்கள் செய்த தவப்பயனே யாகும். இவ்வாசனத்தின்கண் எழுந்தருளி யிருத்தல்வேண்டும்.

சிவ:—அருணாசலம் - அருணாசலம் (என்றுட்கார்ந்து) யான் சிவனடியார்களுடன் கூடிச் சிதம்பரஞ் சென்று மாணிக்கக் கூத்தனைத் தரிசிக்கவேண்டுமென்று வந்தேன்; பசியாயிருப்பதுபற்றி இத்தெருவழியாக வந்தேன். எனக்குப் பசி அதிகமாயிருக்கின்றது. தாமதித்திங்கிருந்து விடுவேனாயின், அவ்வடியார்களுடன் செல்வது முடியாதாகும். சீக்கிரம் அமுதளித்தால் உண்டு செல்வேன் தாயே!

புனி:—(கையை நெருக்கிக்கொண்டு) சமையற் கருமம் முடியவில்லையே! என் செய்வது ஈசா! (வெளிப்படையாய்) சுவாமிகள் சிறிது நேரம் தங்கியிருப்பது முடியாதோ?

சிவ:—முடியாது. எனக்குச் சுவைபார்த்துண்ணும் வழக்கமில்லை! நாக்கு ருசிகொள்ளுவது நாறிய பிண்ணாக்கென்பதனை நான் வெகுநாளாக அறிந்திருக்கின்றேன். புளித்த கூழிருந்தாலும் எனக்குப்போதும்.

புனி:—(குணவதியை நோக்கி) என்ன வைராக்கியம்! பார்த்தாயா! சுவை பார்த்துண்பவர் சிவபெருமானை யடைவதுண்டோ? சுவாமிகளுக்கு நீர்கொண்டு வந்து கொடு; இலை போடு.

குண:—(இலையில் சாதம்வைத்து, மோர்விட்டு, மாம்பழமொன்றை வைத்து) சுவாமிகள் திருவமுது செய்தருளவேண்டும்.

[சிவனடியார் திருவமுது செய்கின்றார்.]

புனி:—இம்மாம்பழம் மிகு மதுரமுடையது. சுவாமிகள் திருப்தியாக வுண்டெழுந்தருளல் வேண்டும்.

சிவ:—அம்மணி! உன்சொல்லும் உனது தோழியின் சொல்லும் மிகு வுத்தமமாயிருக்கின்றன. மூப்பாலும் பசியாலு முண்டாய இளைப்பை இம்மோரோடு கூடிய சாதம் தீர்த்துவிட்டது. இம்மாங்கனியின் மதுரம் அளவிடற்கரியது; சுவை பார்த்துண்ணும் வழக்கத்தை யொழித்த வென்னைச் சுவை

பார்த்தனுனும்படி செய்துவிட்டது. சிவநேசமுடைய வங்கனருக்குத் தீங்கொன்றும் வாராது. மகாதேவ - மகாதேவ, சிவசிவ-சிவசிவ, அம்மணி! யான்போய் வருகின்றேன்.

[புனிதவதியும் குணவதியும் நமஸ்காரஞ் செய்கின்றார்; சிவனடியார் போகின்றார்.]

முதற்காட்சி முற்றிற்று.

## சுகத் தெளிவுரை.

### எல்லா மாந்தர்க்கும் நன்மொழிகள்.

மாந்தர்களே! கவனியுங்கள்: மதிப்பு அவமதிப்பு, வெற்றி தோல்வி, சுயேச்சை பரேச்சை என்றிவைகளைப்பற்றியுள்ள எண்ணங்களை யெல்லாம் அறக்களைந்து விட்டு எல்லோருக்கும் நன்மையுண்டு பண்ணும் சத்தியத்தைக் கிரஹியுங்கள்.

கடவுளுடைய நெறியில் நடத்தல், மனிதனுடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்துகின்றது. ஆசைகளால் அலைப்புண்டு, மனிதர் மதங்கள் ஏற்படுத்துகின்றனர். ஒவ்வொரு மதமும் சாதியும் தன்தன் ஏற்றத்தையே கொண்டாடி, மற்றவை யிழிந்தனவெனக் கொள்கின்றன. சுயாபிமானத்தால் ஆட்கொள்ளப்பட்டு, ஒவ்வொன்றும் மற்றவைகளைத் தனக்குட் படுத்தப் பார்க்கின்றது. "என்னகத்தே யோடிவம்மின்; உங்களுக்கு ரக்ஷை உண்டு; புறத்தே யுங்களுக்குக் கதியில்லை" என்றே எல்லாரும் உரக்க விளிக்கின்றனர். கடவுளால் கற்பிக்கப்பட்ட வழியிற் சென்றால், மனிதனுடைய சுயாபிமானத்திற்கும் அகங்காரத்திற்கும் உணவில்லை, ஆதலாற் சமயங்களையுஞ் சாதிகளையும் உண்டு பண்ணிப் புகழும் அதிகாரமுமடைய வேண்டுமென்ற ஆசை மிகுந்திருக்கின்றது.

ஒரு இந்து, மகம்மதிய மதத்தில் அல்லது கிறிஸ்தவ மதத்தில் போய் அலைந்தபின், அவனுடைய பூர்வீக மதத்தில் அவனைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுதல் கூடாதென்பது பரம்பரை வழக்கமா யிருக்கின்றது. இப்போது கொஞ்சங் காலமாகக் கல்கத்தாவிலும் லாகூரிலும் சில இந்துக்கள் இப்படித் தப்பிப்போன சகோதரர்களை அவர்களுடைய பிறவி மதத்திற்குத் திரும்பக் கொண்டுபோக முயற்சிசெய்கின்றார்கள். எல்லாரையும் ஸம



திருஷ்டியோடு பார்க்கும் ஞானி எல்லாரையும் உபசரிப்பான்; ஒருவரையுந் தள்ளமாட்டான். ஆனால், இந்துக்களில் அநேகர், உதவி வேண்டுமென விரைந்து நீட்டிய சகோதரர் கைகளின் மேல் ஓங்கியடிக்கக் கிளம்பியிருக்கின்றார்கள். நல்லது, மதங்கள் சாதிகள் சங்கங்கள் என்பவற்றாற் கட்டப்பட்ட இருதயங்களை யுடையோரெல்லாரும் கேளுங்கள். ஒரு மதத்தை ஒப்புக்கொள்ளுவதும் தள்ளுவதும் எந்தப் பதார்த்தத்தில் நோக்கின்றது? மனிதனிடத்து நன்மை எது? தீமை எது? எவனிடத்து நன்மையுந் தீமையு மொருங்கே அடங்கி யொழுகுகின்றன? இவைகளை யெல்லாம் நன்றாக யோசியுங்கள்.

புருஷர் ஸ்திரீகள் என்றிவர்களுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்கள், உணர்ச்சி—செயல்—எண்ணம் என்றிவற்றிற்குரிய சக்திகள் கருவிகள் என்றிவை யெல்லாம் ஜோதியாய் வெளிப்பட்டிருக்கும் ஸர்வ வியாபக பரம் பொருளிடத்தே உதித்து எல்லாரிடத்தும் ஸமமாக வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாச் சரீரங்களும் தசை, உதிரம், என்றிவற்றாலமைந்த ஸ்வரூபங்களாய் அந்தச் சக்திகரணங்களை யுடைத்தாயிருக்கின்றன. எல்லாச் சரீரங்களிலும், பரம்பொருளோடு அந்நிய வஸ்துவான ஜீவாத்மா வசிக்கின்றது. தண்ணீர் தெளித்தோ அல்லது சரீரத் துறுப்பொன்றை யறுத்தோ, ஒரு இந்து கிறிஸ்தவன் அல்லது மகம்மதியனாகின்றான். மனுஷ சாதியாக கணிக்கப்படுதற்கு யோக்யதையைக் கொடுக்கும் அம்சங்களில், ஞான ஸ்நானத்தினாலும், சுன்னத் கல்யாணத்தினாலும் மாறுபாடடைவது எந்த அம்சம்? இந்துவாயிருந்த பொழுது அவனிடத்திருந்த அங்கங்கள் கருவிகள் சக்திகள் காரணங்கள் என்றிவைகள், அவன் கிறிஸ்வன் அல்லது மகம்மதியனான பொழுதும் ஒன்றேனும் குறையாமற் பழைய படியேயிருக்கின்றன. சரீரம், கறுப்பாயிருந்து வெள்ளையாகவும், மஞ்சளாயிருந்து சிவப்பாகவும் மாறுதலடைவதில்லை. ஒவ்வொரு கருவியுங் காரணமும் முன் போலவே தனக்குரிய வேலையைச் செய்கின்றது. அவன் கண்ணாற் பார்த்தலை யொழிக்கிறதுமில்லை; காதாற் கேளாமலிருப்பதுமில்லை; ஜீவாத்மாவும் முன் போலவே சுகதுக்கங்களை யநுபவிக்கின்றது; ஒன்றும் மாறுகின்றதில்லை. நல்லது, இந்து என்று சொல்லப்படும் எந்தப் பொருள் அவனை விட்டு எடுக்கப்பட்டு, கிறிஸ்தவ அல்லது மகம்மதிய சரீரத்திலிருந்து புறப்பட்டு கிறிஸ்தவ அல்லது மகம்

மதிய என்று சொல்லப்பட்ட எந்தப் பொருள் அதனிடத்தைப் போய்ப் பிடித்துக் கொள்கின்றது என்று ஆலோசியுங்கள். இது வளர இந்நாவா யிருந்தவனுக்குள்ளே நூதன தசை-உதிரம்-எலும்பு-அல்லது ஒரு புதிய ஆத்மா புகுகின்றதா?

புதிய மதத்தைத் தழுவினதினால், கெட்ட குணங்கள் போய் நற்குணங்கள் வருகின்றன வென்று சொல்வீர்களானால், சற்றூன்றி யோசியுங்கள். அக்குணங்களைத் தன்னுடைய கட்டளைப்படி வரவும் போகவுஞ் செய்யும் எஜமானன் யார்? உங்களுக்குள்ளே நோக்கி, உங்களுடைய சுபாவத்தைப் பிரபஞ்ச வழியிலோ அல்லது கடவுளை நோக்கியோ உங்களிஷ்டப்படி திருப்ப முடியாதென்றறியுங்கள். அப்படியானால், உங்களுக்கே செய்து கொள்ளக் கூடாதகாரியத்தைப் பிறர் நன்மைக்காக நீங்கள் எவ்வண்ணஞ் செய்யப் போகின்றீர்கள்? வாஸ்தவத்தில் கடவுளால் ஏற்பட்ட விதியை ஒருவனாலுங் கடக்க முடியாது. அவ்வாறு செய்ய எத்தனிப்பவர்கள், தாங்கள் மீறி நடந்ததற்காகத் துன்பத்தையே கூலியாக அநுபவிக்கின்றனர். பகற் காலத்தில், மனிதர் கடவுளின் தோற்றமாகிய பிரகாசத்தின் உதவியினாலே பொருள்களைப் பார்க்கின்றார்கள். இரா விருட்டில் அந்தச் சக்தி எடுபட்டுப் போகவே கண்ணுக்கு ஒன்றும் புலனாவதில்லை. நீங்கள் எவ்வளவு முயற்சித்தாலும், கடவுள் விதியை யசைக்க முடியாது. இவ்விஷயத்திற் கொஞ்சமாவது மனுஷ பலம் பயன் பட்டிருக்குமாயின், நீங்கள் உங்கள் இஷ்டப்படியெல்லாம் பசி தாகங்களையும் உறக்க விழிப்புக்களையும் அடக்கி யாண்டிருக்கக்கூடும். கடவுள் எல்லா மனிதரையும் ஒரே தன்மையாகச் சிருஷ்டித்திருக்கின்றார். மனுஷ வர்க்க மெல்லாம் கூடி ஒரு சங்கமாகின்றது. ஆகாசத்திற் சஞ்சரிக்கும் பறவைகளும், காட்டு வாசிகளாகிய மிருகங்களும், தம் வயிற்றினாலே யூருஞ் சர்ப்பங்களும் வேறு வேறு சங்கங்களும் வகுப்புக்களுமாகின்றன. ஒருவனை மற்றொரு வகுப்பிலோ சங்கத்திலோ சேர்க்கும் வல்லமை மனிதனிடத்தி லிருக்குமாயின், நஞ்சம் நிறைந்த சர்ப்பத்தையும், பயங்கரமான புலியையும் தன்னுடைய விசேஷ சங்கத்திற் சேர்த்துக் கொள்ளக் கூடாமற் போவானேன்?

இந்து, மகம்மதியம், கிறிஸ்தவம் என்னும் உங்கள் சாதி சங்க பேதங்கள் வாஸ்தவமாயின் அஃதாவது கடவுளாலே படைக்

Record no: 022902



கப்பட்டனவாயின், அவர் உங்கள் சரீரங்களில் வெவ்வேறு குறிகளிட்டிருப்பார்; அதனால் உங்களுக்குச் சமயப் பிரவேசக் கிரியைகளெல்லாம் மீந்திருக்கும்; ஒவ்வொரு மனிதனுடைய சாதி அல்லது சங்கம் கடவுளது கையினால் அவன் முகத்தே தீட்டப் பெற்றிருக்கும்.

உண்ணும் உணவிலுள்ள பேதமே சாதி அல்லது சங்கத்தை யாக்குகின்றதென்னில், உணவு எதற்காக ஏற்பட்டிருக்கின்றதென்று பரியாலோசிப்பது உங்கள் கடனாகும். உணவினால் ரக்ஷணையும், தேக சௌக்கியமும், பலமும் உண்டாகின்றன. பிராணனையுந் தேக சௌக்கியத்தையுங் காத்துக் கொள்வதே மனிதனுடைய கருத்தாயின், அவனுக்குச் சுபாவமாய் ஏற்பட்ட உணவு வர்க்கத்தில் எந்த வகையானாலும் அவன் சாப்பிடுவதனால் தோஷமில்லை. அக்கினியானது எல்லாப் பொருள்களையும் சுத்தா சுத்தங் கவனியாமல் ஏற்றுக்கொண்டு அவற்றைத் தன்னியல்பினவாக மாற்றித் தன்னுடைய சுத்தத்தன்மை கெடாதிருத்தல் போல, ஆத்மாவும் சரீரத்துள் இடப்பட்ட ஆகாரத்தினால் தன் சுபாவங் குன்றுவதில்லை. அது அரிசியை யுண்பதனாலரிசியாவதுமில்லை. அப்பத்தைப் புசிப்பதினால் அப்பமாவதுமில்லை. மாட்டிறைச்சியைத் தின்று காளையாவதுமில்லை. பன்றியிறைச்சியை யருந்திப் பன்றியாவதுமில்லை. ஆதியில் ஆத்மாவுக்கு எவ்வளவு பரிசுத்தமிருந்ததோ அது இப்பொழுது மிருக்கின்றது. இனி யெக்காலத்தினு மிருக்கவுஞ் செய்யும்—கடல்களைக் கடத்தலானும் அந்நிய தேசங்களைக் காண்டலானும் ஆத்மாவுக்கு ஒரு குற்றமும் ஏற்படுவதில்லை. இதனாலெல்லாம், ஸ்தூல சரீரமாயினும் ஸூக்ஷ்ம கருவிகளாயினும் விகாரப்படுவது மில்லை.

தமது தோற்றம் ஜோதியாகவுடைய கடவுளானவர் அழுக்கு நிறைந்த குட்டமாயினும் அதி பரிசுத்த ஸ்தலமாயினும் தாரதம்மியமின்றி எவ்விடத்தும் வியாபித்துச் சுத்தா சுத்த பதார்த்தங்கள் எல்லாவற்றினுமிருந்து ஸாரத்தை கிரஹித்துக் கொண்டிருக்கின்றார். மலக்குட்டத்தில் அளவில்லாத புழுக்கள் தங்குதலால், அவர், தஞ்சுத்தத் தன்மையை யிழக்கின்றிலர்; ஆனால், அசுத்தப் பொருள்களைச் சுத்திகரித்தல் அவராலாகும்.

ஒரு மனிதனை உங்கள் குழுவுட் சேர்ப்பதனால், அவனிடத்துள்ள நற் குணங்களை வளர்த்துத் துர்க்குணங்களைத் தொலைக்கலா மென்று நினைக்கிறீர்களோ? நம்முடைய குணங்களின் நன்மையுந் தீமையும் எவ்விடத்திலுள்ள வென்பதைச் சிந்தியுங்கள். உறுதியில்லாமற் சஞ்சரிக்கின்ற இருதயம் பிரா பஞ்சிக வழியிற் செல்வதே தீமையாகும். சஞ்சல மில்லாமல் ஒரு நிலைப்பட்டு இருதயம் கடவுளிடத்துச் செல்வதே நன்மை யெனப்படும். ஆனால், நற்குணங்களும் துர்க்குணங்களும் கடவுளுக்கு மட்டுமே அடங்குந் தன்மைய. நீங்கள் அவரிடத்திற் சரணமடைந்து அன்போடும் வணக்கத்தோடும் அவரை நோக்கிப் பிரார்த்திப்பீர்களாயின், அவர், தமது அளவு கடந்தெழுங் கருணையினாலே உங்களுடைய இருதயம் பல வழியுஞ் சென்றுழலாது மடக்கி அவரோடு இரண்டறக்கலக்கும் நெறியில் உங்களை நடத்தி, நித்திய சாந்தியாகிற முத்தியை யுங்களுக்குத் தகுந்தருளுவர். அதன் பின், சச்சரவு பகை வாதங்கள் தங்க இடம் பெறா. அன்புஞ் சாந்தமும் மனிதனிடத்தில் தழைத்து விளங்கும்.

ஒவ்வொரு மனிதனும் இந்துவோ மகம்மதியனோ அல்லது கிறிஸ்தவனோ ஆகட்டும்; அவன் கடவுளுடைய கட்டளையை யறிந்து, அன்போடவைகட் கடங்கி யொழுகுதல் வேண்டும். கடவுளால் அளிக்கப்பட்ட அங்க வுறுப்புகளும் கருவி கரணங்களும் மாறுதலடையா திருக்கின்றன. இன்னும், மனிதர் தங்களுக்குத் தேகசௌக்கியத்தையும் மனச் சாந்தத்தையுங் கொடுக்கத்தக்க உணவையே யுண்டல் வேண்டுமென்பது கடவுளுடையசங்கற்பமே யாகும். மனிதனைமுன்னிட்டாவது எந்தத்தலத்தைமுன்னிட்டாவது தாம்வெளிப்பட வேண்டுமென்பது அவருடைய சங்கற்பமின்று. அவர் எவ்விடத்தும் யாவருக்கும் வெளிப்பட்டே யிருக்கின்றார். ஞானியானவன் அவருக்கு அதிப்பிரியனாய் எல்லா மாந்தர்களையும் வாஸ்தவத்தில் தானென்றுங் கடவுளென்றும் நோக்கி அவர்கள் பாதத்தை மெய்ந் நெறியிற் பதிக்க முயற்சிசெய்கின்றார்.

சென்ற காலங்களில், மனித சாதியாருள் இந்துக்களுடைய முன்னோர்கள், தங்களுடைய சிறந்த குணங்களையே துணைக்கொண்டு உண்மை மார்க்கமாகிய சன்மார்க்கத்தில் ஒழுகினார்கள். மனிதன் குழிக்குள் விழுந்தானாயினும் மிருகம் சேற்றிலழுந்தியதாயினும் பூர்விக ஆரியர்கள் அவை தங்களுடைய சொந்த



ஆத்மா வென்றறிந்து அந்த ஜீவர்களை ஆபத்தினின்றும் விடுவித்துக்காக்க உழைத்தார்கள். இக்காலத்திலோ, ஆரியர்களுடைய சந்ததியார் அப்படிப்பட்ட பிராணிகளை விடுவியாமலிருத்தலோடு நில்லாமல் அவைகளின் மேற் கல்லைத் தூக்கிப்போட்டு, அவை முன்னினும் அதிகமாகச் சேற்றில் அழுந்தும்படி செய்கின்றார்கள். சத்தியத்திலும் கடவுளிடத்தும் மனிதருக்கிருந்த அன்பு விடை பெற்றுச் செல்லவே, இவ்வெல்லாம் தொடர்ந்து வந்தன.

ஆதலால், மாந்தர்களே! மனித சாதி முழுதும் கடவுள் கையால் ஆக்கப்பட்ட ஒரு பெருங்கூட்டமென்று நீங்கள் எல்லாரும் கவனியுங்கள். இந்து—மகம்மதியம்—கிறிஸ்தவம் என்று சொல்லப்படும் மனித சிருஷ்டிகளான கூட்டத்தாரில் உங்களுக்கு மிக்க வுரிமை யுண்டென் றபிமானித் தலைவிட்டு, மெய்ப்பொருளாகின்ற கடவுளிடத்து மட்டுமே சரணமடையுங்கள். பகுத்தறிவினால் அவருடைய உத்தேசத்தை யாராய்ந்தறிந்து கொண்டு, அன்போடு அதற்கேற்ப ஒழுகுங்கள். அங்ஙனமாயின், ஒவ்வொருவனும், ஆநந்த ரூபியாய் நித்தியாநந்தத்தில் வாழலாம். ஒவ்வொருவனும், பிறரிடத்திருக்கும் நன்மையைக் கண்டு தன்னிடத்துள்ள தீமையைச் செம்மைப் படுத்தக் கடவன். எந்த ஜீவனாவது கூட்டமாவது பழிக்கப்பட்டதாயின், அப்பழி கடவுளைச் சார்கின்றது. கிளைக்குக் கேடுவருமாயின் மரமும் அதனோடு வருந்துகின்றது. கடவுளைப் பழித்தவன் அழிதல் தப்பாது. இம்மொழிகளுள்ள ஸாரத்தைக் கிரஹித்துக் கொள்ளுங்கள். இகலோக விஷயங்களிலும் ஆத்மார்த்த விஷயங்களிலும் அந்த ஸாரம்சமான தீபம் உங்களுடைய நெறியை விளக்கக்கடவது. இதுவரை மனிதனுக்கு ஒரு நஷ்டமும் வந்திருப்பதில்லை. ஓம் சாந்தி. பர சாந்தி யுங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

## கல்லாமை.

ஸபையிற்பேச விருப்பங்கொள்ளுகிறவன் கல்வியில்லாதவனாகிச் செல்வத்தை மாத்திரம் யுடையவனாக விருப்பானாயின், அவன் அவமானப்படுவா னென்பதற்குச் சந்தேகமில்லை.

புலவர்களின் கூட்டத்திற்சென்ற கல்வியில்லாதவன் பேசாதிருப்பானாயின் அவனது கல்லாமை வெளிப்படாதாகையால் அவனுக்கிழுக்கு நேராமலிருக்கும்.

கல்வியினிடத்துப் பொருந்தாத சிந்தையுடையவனது அறிவு மிகவுந் தெளிவாக விருக்கினும், ஸபையிற் பேசுமிடத்துத் தகுந்த பிரயோஜனத்தைக் கொடாதாதலால், அவன் வெட்கப்படுவான்.

கற்றவர்களே கண்ணுடையவர்கள்; கல்லாதவர்களுடைய முகத்திற் காணப்படு மிரண்டு கண்களும் புண்களெனப் பெரியோருரைத் திருக்கின்றார்கள்.

கற்ற பெரியோர்முன் சென்று பேசுங் கல்வியில்லாதவன், தனக்குள்ள பெருமையையுமிழந்து அவமானத்தையுமடைவான்.

கல்வியை யறியாதார் சிலருண்டு; அவர்கள் களர் நிலத்தைப்போலச் சிறிதும் பயன்படார்கள். ஏனெனின் களர் பூமியில் புல்லும் விளையாது; அதுபோலவே கல்வியறிவில்லாதார் மானிட ஸ்வரூபத்தைப் பெற்றிருந்தும் உலகத்திற்குப் பொதுவான நன்மையைச் செய்யதக்க விவேகத்தையுடைத்தா யிருக்கமாட்டார்கள். ஒருவேளை நற்காரியத்தைச் செய்ய முயலினும், அது நிறைவேறுவது அரிதாக விருக்குமென்று பெரியோர்களுரைத் திருக்கிறார்கள்.

கல்வியைக் கற்கச் சோம்பலுற்றவன், உருவத்தில் சிறந்த அழகுடையவனாக விருக்கினும் (அழகாகச் செய்யப்பட்ட மண் ப்ரதிமைபோல்) உலகத்தில் ஒரு பலனையுமடையமாட்டான். ஏனெனில், அவனுக்கு யுக்தாயுக்தங்களைத் தெரிவிக்கின்ற சாஸ்திரவிசாரணை செய்வதற்கு வேண்டிய கல்வி யறிவில்லாமையால், இம்மையில் தானடையவேண்டிய நற்பயனை யிழந்து மறுமையிலும் மோக்ஷத்தை யடையாமல் நரகத்தை யடைவானென்பதினாலேதான்.

கற்றவர்களிடத் துண்டாகிய வறுமைகூட ஒருவரையுங் கெடுக்கமாட்டாது; கல்லாத மூடரிடத்துண்டாகிய செல்வமும் அவனையும் மற்றவர்களையும் கெடுக்குமாதலால், அதற்கு இது கொடியதாகும்.



கல்லாதவன் உயர்குலத்தானாக விருக்கினும் தாழ்ந்தவனென்றும், கல்வியிலும் அறிவிலுஞ் சிறந்தவன் இழிகுலத்தானாக விருக்கினும், உயர்ந்தவனென்றும், பலநூலிலுஞ் சொல்லியிருக்கின்றது.

மிருகங்களுக்கு மனிதரெவ்வளவு உயர்ந்தவராவரோ அவ்வளவு கற்றவர்முன் கல்லாதவர் தாழ்தவராவர். ஏனெனில் கற்றவர்முன் கல்லாதவர் வாயைத்திறக்க அஞ்சுவார்களென்பதினாலேதான்.

கல்வியான்களுடைய கூட்டத்தில் வந்திருந்த ஒரு கல்லாத அழகுள்ள புருஷனைப் பார்த்து ஒரு வித்வான் சொல்லியதாவது:— ஓ! காகமே! நீ மாமரத்தின்மீது குயில்களுடைய கூட்டத்திற் சேர்ந்திருக்கின்றாயாதலால் நீவாயைத்திறந்து கூவாமலிருக்கிறவரையில் உன்னையுங் குயிலாகவே நினைக்கின்றேன்; ஏனெனில், இடத்தின்பெருமையால் சிலபொருள்கள் பெருமையடைவதுண்டு; அஃதெப்படியெனின், கஸ்தூரி யுண்டாகிற நேபாளதேசத்தின் ராஜாவினுடைய நெற்றியிற்பட்ட மையையும் கஸ்தூரியென்று சொல்வதற்குச் சந்தேகமில்லை யல்லவா? என்றான்.

கல்வியில்லாத சில பேதையர்கள் கல்விமான்களெனப் பெயர் பெறும்பொருட்டு புலித்தோலைப் போர்த்த பசுவைப்போல, ஜனங்களை ப்ரமிக்கச் செய்யினும் கல்விமான்களாகார்.

ஆதலால் கல்லாதிருக்குந் தன்மையாலுண்டாகும் நஷ்டத்தையுமிழிவையும் யோசித்து நடக்கின்றவர்கள் அறிவுடையவர்களாவார்கள்.

## ராமனென்னும் ராட்சச விரோதி.

உலகத்தில் கீர்த்தியுடைய இந்தியா தேசத்தில் கோடிக்கரை என்னும் ஊரில் ஒரு தனிகக் குடியானவன் ஒரு காலத்தில் வசித்திருந்தான்; அவனுக்கு ராமன் என்ற பெயருடைய ஒரு குமாரன் உண்டு. இவன் மிக்க தைரிய சாலியாகவும் புத்திசாலியாகவும் இருந்தான்.

சமுத்திரத்தில் கோடிக்கரையின் கரைக்கு அருகில் ஓர் உயர்ந்த கற்பாறை இருந்தது. அந்தப் பாறையின் ஒரு பெரிய குகையில் ஒரு பெரிய ராட்சசன் வசித்துக்கொண்டிருந்தான்.

அவனது சரீரத்தின் உயரம் பதினெட்டு அடி; மேலும் அது மிக்க பயங்கரமாயும் வலிமை பொருந்தியதாயும் இருந்தது; அதனால் அவனைப் பார்த்த ஜனங்கள் அவனுக்குப் பயந்து அவனைக் கண்டமாத்திரத்தில் விலகிப் போவார்கள்.

அவனுக்கு ஆகாரம் வேண்டியபோது சமுத்திரத்தில் நடந்துபோய் சமீபத்திலுள்ள நாட்டை அடைவான். அங்குள்ள வயல்களில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆடு மாடுகளைப் பிடித்து அடித்துத் தின்னுவான்.

ஒரே தடவை ஆறுபசுக்களையும் எருதுக்களையும் முதுகின் மீது தூக்கிக்கொண்டு போகக்கூடிய அவ்வளவு பலசாலியாம். அவன் ஆடுகளை இடுப்பைச்சுற்றிக் கட்டி ஒரே முறையில் பன்னிரண்டிற்கு மேற்பட்டு எடுத்துக்கொண்டு போய்பாறையின்மீதுள்ள தனது வீட்டில் சேர்ப்பான்.

இவன் ஒருநாள் ராமனது தகப்பனாரின் ஆடுமாடுகளைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான் என்று கேள்விப் பட்டபோது ராமன் இவனைக் கொல்லுவதற்கு மனதில் தீர்மானித்தான்.

இப்படி தீர்மானம் செய்துகொண்ட இந்த ராமன் ஒரு ஊதுகுழல், ஒரு மண்வெட்டி, கெட்டபாரை இம்மூன்றையும் எடுத்துக்கொண்டு மழைக்காலத்தில் ஓர் இரவில் அந்தப் பாரைக்குப் போனான்.

அங்கு இருபத்திரண்டு அடி ஆழமும் அவ்வளவேநீளஅகலமுடைய ஒரு பெரும் குழிவெட்டி அதன் மேல்பாகத்தை மரக்குச்சிகளாலும் செத்தை சருகுகளாலும் மூடி கெட்டித்தரையைப் போல் காணும்படியாகச் செய்துவைத்தான்.

இதைச் செய்த பிறகு அவனது தாரையை வாயில் வைத்து ஊதி உறத்த நீண்ட சத்தம் செய்தான். இதனால் அந்த ராட்சசன் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து தனது குகையைவிட்டு வெளியே வந்தான்.

வந்தவுடனே அங்கிருந்த பையனைப் பார்க்க இவனுக்குக் கோபம் வந்தது. அதனால் அவனை நோக்கி "நீசெய்த இந்தத் துன்மார்க்கத்திற்காக நீ தண்டனை அடைவாய்; நான் உன்னை வேகவைத்து இராப்போஜன காலத்தில் தின்று விடுவேன்" என்று கூச்சலிட்டுச் சொன்னான். இவ்வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே வந்து ராமன் செய்துவைத்த அந்தப் பெருங்குழியில் விழுந்தான்.



இதைப்பார்த்த ராமன் அவனை நோக்கி "ஐயா! ராட்சசரே! நீர் இப்பொழுது எங்கே இருக்கின்றீர்கள்? என்னிடத்தில் வந்து இராப் போஜனத்திற்காக என்னைச் சமையல் செய்வதைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்கள்" என்று கேட்டான்.

இம்மாதிரியாக கொஞ்சநேரம் அவனை ஏளனமாகப்பேசிக் கொண்டிருந்தான். பிறகு அவன் தலைமீது தனது கோடாலி கொண்டு ஓங்கி அடித்தான். இதனால் அந்த ராட்சசன் செத்துப் பிணமாய் அந்த குழியிலேயே விழுந்தான்.

பின்பு ராமன் வீடுபோய் நடந்த விஷயங்களைத் தனது கூட்டாளிகளுக்குச் சொன்னான். ஆகையால் இது முதற்கொண்டு அவனை (ராமனை) ராட்சச விரோதி என்று கூப்பிடத் தலைப்பட்டதுமே யல்லாமல் அவனுக்கு வெகுமதியாக ஒரு கத்தியையும் ஓர் அரைக் கச்சையையும் கொடுத்தார்கள்.

## குதூகல வர்த்தனி.

(முன் தொடர்ச்சி)

(பிரதேசம் 2, பாஸ்கராசாரியார் வீடு. பாஸ்கராசாரியரைக் கண்டு சோமநாதையரும், ஸ்திரீகாந்தரும் தங்கள் கையில் கொண்டுவந்த அறிக்கைப் பத்திரிகையைக் கொடுத்து "நல்ல காலம் வீட்டிலிருந்தீர்; இதைப்பாரும்" என்கிறார்கள்.)

பாஸ்கராசாரியார்:—இந்த நாராயண சாஸ்திரிக்கு நாலெழுத்து தெரியும்; சங்கரபூஷணராயருக்கு (கோபத்தோடு) அதுவுந் தெரியாது. பூனாமெல்லாம் ஏதோ அக்கிரமமான காரியங்கள் செய்கிறதாக நாளையதினம் ஊரில் சபை சேர்க்கவேண்டுமென்று வீடுகள் தோறுந் திரிந்துகொண்டிருக்கிறார்களாம். அதைத்தானிதுவுஞ் சொல்லுகின்றது.

சோமநாதையர்:—அவர்களழுதார்கள் போங்கள். அவர்கள் சபை சேர்த்தால் இந்த ஊரில் போகிறவர்கள் யாரிருக்கிறார்கள்? அப்பேர்ப்பட்ட துஷ்ட புத்திகள் பத்துப்பேர்களிருக்கப் போகி

றார்கள். அவர்கள் பத்துப்பேரும் நாராயண சாஸ்திரியார் வீட்டிற்குப் போவார்கள். போகட்டும்; போய் என்ன செய்கிறார்களோ பார்ப்போம்.

ஸ்திரீகாந்தர்:—பார்த்தீர்களா! இதனால் அவர்களுடைய பொறாமை யொன்று வெளிப்படுகின்றதே தவிர வேறென்ன இருக்கின்றது? அவர்கள் நம்மை அசைக்கக் கூடுமா? நாம் தேவடியாட்களை வைத்துக்கொண்டால் அவர்களுக்கு வந்த கஷ்டமென்ன? நஷ்டமென்ன? இப்போது பெரிய மனுஷாள் என்கிற கௌரவம் அடியோடே போய்க்கொண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட போக்கிரிகளை அடக்கிப் போடுவதற்கு நாமேதாகிலும் உபாயந் தேடினாலொழிய அடங்கமாட்டார்கள். இதுவரையும் பார்த்தும் பாராதவர்போலும், கேட்டுங் கேளாதவர்போலுஞ் சும்மாயிருந்தோம். அப்படியே யிருந்தால் தலைமேலேறுகிறார்கள். இனிமேல் நமக்கும் நாம் வைத்துக்கொண்டிருக்கும் ஸ்திரீகளுக்குங் கூட கெடுதி தேடுவார்கள்.

சோமநாதையர்:—ஆம், ஆம், மெய்தான். நாம் சும்மாயிருக்கப்படாது. எனக்கு இந்த கோணை இங்கிலீஷ் தெரியாதாகையால் ஆக்டுகள் (Act) ஒன்றுந் தெரியவில்லை. ஐயா ஸ்திரீகாந்தரே! தாங்கள் ஒரு பெரிய வக்கீலாகையால் நாம் அவர்கள் பேரில் கேஸ் தொடுக்கும்படி லா (Law)வில் ஏதாவது ஆதாரமிருக்கிறதா பார்த்துச் சொல்லுங்கள்.

ஸ்திரீகாந்தர்:—அவர்கள் சபை சேர்க்கட்டும் சொல்லுகிறேன். பினல் கோட் காமெண்டரி (Penal Code commentary) பார்த்து டிபமேடரி (Defamatory)யின் கீழ்ப்பிரையாதுகொண்டு வருவோம். எனக்கு மாஜிஸ்டிரேட் அவர்கள் நன்றாகத் தெரியும். அவரிடம் சொல்லிப் பந்தோபஸ்து செய்கிறேன்.

சோமநாதையர்:—டெபமேட்ரி யென்றால் என்னமோ எனக்கு விளங்கவில்லை. தமிழில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லுங்கள்.

ஸ்திரீகாந்தர்:—டெப்பமேடரி யென்பதற்கு உங்களுக்குத்தமிழ் வேண்டுமோ?

பாஸ்கராசாரி:—எனக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும், நான் சொல்லுகிறேன் கேளுங்கள். டெபமேடரி யென்றால் அவதூறு என்பது பொருள்; என்றால் அவர்கள் நம்மை அவர்கள்



அவதூறாகப் பேசி மான நஷ்டத்தை யுண்டுபண்ணினார்கள் என்று கொள்ளலாம்.

சோமநாதையர்:—சரி! சரி! தெரிந்தது. இது நல்ல யோசனை. அவர்கள் கர்வத்தை அடக்குவதற்கு இது தகுந்த யுக்தி. எனக்கு இதைக்காட்டிலும் வேறொரு யோசனை தோன்றுகிறது. அவர்களிருவரும் மிஷின் இஸ்கூலில் வாசித்து அடியோடே சந்தியாவந்தனத்தை விட்டு விட்டார்கள். நெற்றியிலும் ஒன்றும் வைக்கிறதில்லை. வேஷ்டி கட்டுவதை விட்டு விட்டு கால்சட்டை மாட்டிக்கொண்டார்கள். பூட்சில் கால் நுழைத்துக்கொண்டார்கள். தலையில் குடுமியை வெட்டிவிட்டு பாம்பு, எலி, ஓணான், பல்லி முதலியவை புகுந்துகொண்டாலும் தெரியாதிருக்கும்படியான புதர், குத்துச் செடிகளைப்போல சுருட்டை சுருட்டையாக மயிர்களை வளர்த்துக்கொண்டு பிராம்மணனென்றும், க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும், சூத்திரனென்றும் இன்னும் மற்ற எவனோவென்றும் சந்தேகப்படும்படியாக முகங்களை விகாரப்படுத்திக்கொண்டார்கள். பைசிகல் ஏறித்திரிகிறார்கள். எந்த ஓட்டல்களிலும், கிளப்புகளிலும் (Beef puff, Mutton puff,) பிஸ்கட், உப்புமா, ரவைதோசை, கேக், காபி முதலிய பலகார தினுசுகளை ஒருவன் நக்கி நக்கிச் சாப்பிட்டு வைத்துவிட்டுப் போன கரண்டி, பிளேட் இவைகளிலேயே அருவருப்பின்றி வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இந்தச் சங்கதிகளை யெல்லாம்விஸ்தாரமாக எழுதி சங்கராசாரியருக்கும், இராமானுஜருக்கும், மடாதிபதிகளாகிய தம்பிரான்மார்களுக்கும், ஜீயர்மார்களுக்கும் தெரிவித்து இவர்களை ஜாதியைவிட்டு நீக்கும்படி ஆக்ஷேபதஸ்தாவேஜி வரவழைத்தால் நல்லதாயிருக்கும். மேலும் அவர்களுடைய பெரியதனக்காரர்களுக்கும், நாட்டாண்மைக்காரருக்கும் தெரிவித்துவிட்டால் ஜாதியைவிட்டு நீக்கிவிடுவார்கள். இதனால் அவர்கள் அயோக்கியதையும், துர்நடவடிக்கையும் எல்லோருக்குந் தெரிய வரும். உங்களுடைய யோசனை யெப்படி யிருக்கிறது? சொல்லுங்கள்.

(வரும்)

A. சொக்கலிங்கம் பிள்ளை,

சென்னை.

## தாராபாய்.

(முன் தொடர்ச்சி)

தனது நாட்டைக் கைப்பற்றத் தகுந்த சந்தர்ப்பம் நேரிடவில்லை. ஒருகால் தோடாநாட்டை மறுபடியும் தன் வசமாக்கிக் கொள்ளாமுன், தனக்கு மரணஞ் சம்பவிக்குமாயின் தனது மாசின்மை தங்கிய புதல்வியான தாராபாய் எவ்வகையினாலும் முசல்மான்கள் கைகளினின்றும் தோடா நாட்டைப் பிடுங்கிக்கொள்ளும் ஆற்றலுடையவளென்று சூர்தான் பூர்ண நம்பிக்கையுடையவனாயிருந்தான். தான் உயிரோடிருப்பினும் அல்லது உயிர் துறந்த பின்னும் தாராபாயைக் கொண்டே தான் தோடா நாட்டை மீட்க இயலுமென்று சூர்தான் மனதிற்றோன்றினமையின் அந்நாட்டை முசல்மான்களுடன் போர் செய்து மீட்டுக்கொடுக்க வல்லவனெவனோ அவனுக்கே தாராபாயை மணஞ் செய்து கொடுப்பதாகப் பிரதிஞ்ஞை செய்து கொண்டான். தாராபாயின் வியக்கத்தக்க ரூபலாவண்ணியமும் அம்மங்கையின் கல்வி கேள்விகளாதி சிறந்த குணங்களும், ஒரு மணமுள்ள மலர் அவிழ்ந்தவுடன் தன்னுடைய மணத்தைத் திக்கெங்கும் பரவச் செய்து மாந்தர் மனதைக்கவர்ந்து தன்னைத் தேடிவரும்படி எப்படி ஏவுகின்றதோ அவ்வண்ணம் இராஜபுதனத்திலிருந்த மன்னர் மன்னர்களும் பிரபுக்களும் இவளைக் கண்டு மணஞ்சூட்ட வரலாயினர். இவ்வாறு வந்து மணங்கேட்போர்களுக்கு சூர்தான் தன் பிரதிக்ஞையைச் சொன்ன மாத்திரத்தில் மனமிளைத்துச்சோர்வடைந்து தங்களிருப்பிடம்போகலாயினர். பிறகு மோவர்நாட்டு இராணாவின் மூன்றாவது குமாரனான ஜெயமல்லா வென்போன் தாராபாயைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ள மனமிருப்பதைச் சூர்தானுக்குத் தெரிவித்தான். சூர்தான் என்பவன் மோவர் நாட்டின் இராணாவுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசனானபடியால் ஜெயமல்லாவை மருமகனாகப் பெறுவது பெரும்பாக்கியமென வெண்ணினான். தனக்குஅதிக கௌரவத்தை விளைவிப்பதாகவும் காணப்பட்டது. தனது பிரதிக்ஞைக்கு யாதொரு இடையூறு வாராதிருக்குமாயினல்லவோ பெரும்பாக்கியத்தையும் கௌரவத்தையும் கோரக்கூடியவன் சூர்தான் என்னும் குணசீலன். ஆதலினால் ஜயமல்லாவை நோக்கி "இராஜகுமாரனே! நானிழந்த தோடா நாட்டைக் கைப்பற்றி என் வசம் ஒப்புவிக்கவல்ல



ஆண்பிள்ளைக்கே எனது புதல்வியைப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுப்பது. வேறொருவருக்கும் அவளைத் தத்தஞ் செய்து கொடேன்; இது என் பிரதிக்ஞையாகும்" என்று கூறினான். இதைச் செவியேற்ற ஜெயமல்லா தகாதமாதிரி நடந்துகொள்ள ஆரம்பித்தான். அவன் இயற்கையிலேயே கர்வம் பிடித்தவன்-வீண்டம்பமுடையவன்-அதிக பொல்லாங்குள்ளவன்-தூர்த்தன்-வெறியன்-சூர்தானைப்பற்றி பல இழுக்குரைகளினால் அவமதித்துக்கொண்டு வந்தான். இதன்றியும் தாராவைப்பற்றி அரச அந்தஸ்துக் கியலாத கேளிக்கை வார்த்தைகளைக் கூறிக்கொண்டு வந்தான். இவையாவையும் சூர்தான் பொறுத்துக்கொண்டு வந்தான். ஒருநாள் ஜெயமல்லா சொல்வானாயினன். "இந்தச் சூர்தானிருக்கின்றானே தனது புதல்வியாகிய தாராபாயை என்னுடைய குதிரைக்காரனுக்கு கூட்டிக்கொடுக்கக் காலம் நேரிட்டுப்போகிறது" என்று கூறினன். இதனைச் செவியேற்ற சூர்தான் "குணமென்னுங் குன்றேறி நின்றாரின் வெகுளி கணமேனுங் காத்தலரிது" என்று ஆன்றோர் கூறிய வண்ணம் மிகச் சீற்றங்கொண்டு உடைவாளினால் உடனே ஜெயமல்லாவின் சிரத்தைச் சேதித்து விட்டான். ஜெயமல்லா மரணமடைந்த விஷயத்தைக்கேட்ட அவன் தகப்பன் சொன்னதாவது:—"நன்று நன்று-ஜெயமல்லாவுக்கு நேர்ந்த கதி தகுந்ததே. அவன் என் குடும்பத்திற்கு ஒரு சாபம்போ லிருந்தான். அவன் மரணமடைந்தது சாபவிமோசனம் போலாயிற்று. சூர்தான்மீது எனக்குச் சற்றேனும் வருத்தமாயினும் கோபமாயினுமில்லை. ஒரு இராஜ புத்திரனுக்குத் தகாதவண்ணம் ஜெயமல்லா நடந்தமையின் அவனைச் சிரச்சேதஞ் செய்து விண்ணுலகமனுப்பின சூர்தானை மன்னித்து விடுகிறேன்" என்று இராணா கூறினன்.

இராணாவுக்கு இன்னொரு குமாரனிருந்தான். அவன் பெயர் ப்ரிதிராய். இவன் ஏதோ ஒரு அடாதகாரியத்தைச் செய்தமையின் தனது தகப்பன் இவன்மீது சீற்றங்கொண்டு மோவர் நாட்டை விட்டுத் துரத்திவிட்டான். ஜெயமல்லா கொலைப்பட்ட வரையிலும் அவன் மோவர்நாட்டை மிதிக்கவில்லை. ஜெயமல்லா மரணமடைந்ததும் பரிதிராயைத் தனது நாட்டுக்கு வரும்படி இராணா உத்தரவு அளித்து இளவரசுக்கு யோக்கியனாக்கினான். மற்ற இராஜ குமாரர்களைவிட ப்ரிதிராய் அதிக மேன்மை வாய்ந்த

குணங்களைப் பொருந்தி யுள்ளோனாகையால் அவன் வருகையைக் குடிகள் எல்லாரும் வெகுவாகக் கொண்டாடினார்கள். ப்ரதிராயைப்போன்ற அழகுள்ளவனும் தைரியமுள்ளவனும் இராஜபுதனத்தில் பொறுக்கியெடுத்தாலுங் கிட்டாது. அவனுக்குச் சமானமான போர்வீரன் மேவார்நாட்டில் கிடையாது; தாராபாய்க்குத் தகுந்த மணாளன் இவனேயென்று ப்ராதிராய் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தான். தாரைபாயைத் தனது தனயனான ப்ரதிராய்க்குமணஞ்சூட்ட இராணாவுக்குஞ் சம்மதந்தான். ப்ரதிராயைத் தனது மருமகனாகப்பெறச் சூர்தானும் ஆவல்கொண்டான். தாரையும் ப்ரதிராயைத் தன் கணவனாக வரித்தனள்-ப்ரதிராயும் தாராபாய்மீது காதல்கொண்டான். இப்படி எல்லாருடைய சிந்தனையும் ஏகோபித்திருக்க தோடாநாட்டை மகம்மதியர் வசத்தினின்று மீட்டுக்கொடுக்க வல்ல ஆடவன் எவனோ அவனேதான் தாராபாயை மனைவியாகப்பெறக் கூடியவன் என்று சூர்தான் செய்திருக்கும் பிரதிக்ஞையானது மேற்கண்ட எல்லாருடைய இஷ்டபூர்த்திக் கிடையூறாய் நின்றது.

இதனை நன்குணர்ந்த ப்ரதிராய் என்னசெய்வான்? இன்னலுக்கழுங்காத்தீர நெஞ்சுடைய இராஜபுத்திர வம்சத்தில் உதித்தவனாதலின் மனமறைவதைத் தவிர்ந்து பின்வருமாறு எண்ணத் தொடங்கினன். "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவியாதினுமரி"தென ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இந்த மானிடப் பிறவியிலும் கூன் குருடாக ஜனிக்காமலிருப்பது பூர்வஜன்ம புண்ணியப் பலனாகும். இதன்றியும் வறுமையாற் பீடிக்கப்படாமல் ஐசுவர்யம் நிறம்பின இராஜ வம்சத்தில் யான் ஜனித்திருப்பதால் கடவுள் கிருபைப் பெற்றவனென எண்ணவேண்டியதாயிருக்கிறது. கடவுள் கிருபையால் இவ்விதம் நேரிட்டுள்ள அனுகூலங்களை நல்வழியிலல்லவா உபயோகிக்கவேண்டும்? கடவுள் திருவுள்ளத்திற்கிசைய நடவாமல் விஷயபோகத்தை இச்சிப்பேனாயின் என் ஜென்மம் நிஷ்பிரயோசனமாகி விடும் என்பதற்கு ஐயமின்று-இப்பூமண்டலத்திலுள்ள மக்கள் சந்நியாசி ஆஸ்ரமம், கிரகஸ்தாஸ்ரமம், வானப் பிரஸ்தாஸ்ரமம், என்று நமது மூதாதைகளால் வகுத்துக் கூறப்பட்டுள்ள ஆஸ்ரமங்களில் யாதாமொரு ஆஸ்ரமத்தில் சேர்ந்தவராவர். யானோ இயற்கையிலேயே கிரகஸ்தாஸ்ரமத்திற் குரியோனாக விருக்கிறேன். இல்லற நடத்தவேண்டு



மாயின் பிரம்மசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இவர்களுக்குக் கட்டாயம் துணைபுரியவேண்டும். பிதுர்களுக்கும், தெய்வங்களுக்கும், விருந்தினர்களுக்கும் இனத்தார்க்கும் தகுந்த தருமஞ் செய்தலைத் தலைமையான கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தவத்தோரைத் தவவழியில் நடக்கச்செய்து நானும் இல்லறத்தினின்றுந் தவறுதற் பொருந்தாத வாழ்க்கையைக் கைப்பிடித்தல் இன்றியமையாததாகும். இவ்விதமாக இல்லற நடத்தவேண்டுமாயின், நற்குண நற்செய்கையையுடைய இல்லாள் அத்தியாவசியகமென விளங்கும். இதை நோக்கியல்லவா

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர்-நற்குண நற்செய்கையுடையவளும் கிரகஸ்தாஸ்ரம தர்மத்தை நடாத்துவதில் எனக்குகந்த துணைவியுமாயிருக்கக்கூடியவள் தாராபாயைவிட வேறொரு மாதைக்கண்டிலன். ஆகையால் இவளை எவ்விதத்திலாயினும் மனைவியாகப் பெறவேண்டும். அதற்கு ஒரே உபாயந்தானுளது. அதாவது மகம்மதியருடன் போர் செய்து தோடாநாட்டைப் பிடுங்கி சூர்தான்வசம் ஒப்புவிப்பதே. இந்தக் காரியம் சாமானியமன்று. எனக்குப் படைவலியில்லை. ஆனால் நான் சேகரிக்கக்கூடிய சேனையுடன்சென்று மகம்மதியரைப்போல் தாக்குவேன். வெற்றி பெறுவேனாயின் இல்லற தருமத்தை நடாத்தத் தக்கதுணைவியைப் பெறுவேன்; வெற்றிபெறாவிடின் போர்முகத்திலேயே மாள்வேன்; இல்வாழ்க்கைக் குகந்த இல்லாளின்றி உயிர் வைத்துக்கொண்டிருப்பது நிஷ்பிரயோஜனமாகும். நான் இதுகாறும் சத்தியத்தைக் கடைப்பிடித்து வந்தேன். இதனாலன்றோ என் தந்தையும் என்னை ஊரைவிட்டு விரட்டினன். அப்பொழுது நான் மனச்சோர்வையடையாது திருவருளைநம்பிப் பிறதேசங்களில் சஞ்சாரஞ் செய்துகொண்டு வந்தேன். அந்தத் திருவருளல்லவா என்னை என் தந்தையுடன் கூட்டி வைத்தது. இப்பொழுதும் அத்திருவருளைப் பூரணமாய் நம்பியே மகம்மதியருடன் போர் செய்யச் செல்வேன். மார்க்கண்டேயர் இந்தத் திருவருள் கொண்டல்லவா யமனை வென்றனர். திருவருட்டுணையைக்கொண்டு அபாரவல்லமையுள்ள மகம்மதியர் சேனையை,

கடவுள் சித்தம் அப்படியா யிருக்குமாயின், என் தோல்வியடை யச் செய்யமுடியாது?" என்று இவ்வாறு தீர்க்க ஆலோசனை செய்து வீராவேச மிகுதியுள்ள இருநூறு குதிரை வீரர்களை ஒருங்கு சேர்த்து தோடாநாட்டைத் தாக்கச் செல்வதற்கு ஆயத் தமாயினன். தாராபாயும் இவனைப்பின்தொடர்ந்துச்செல்லச் சித்த மாயினள்; பிதா முதலியோர் என்ன கூறியும் அவள் கேட்டிலள். தன் தகப்பனைத் தெய்வமெனப் பாவித்து வந்தவளாதலின் தந் தையின் சம்மதமின்றி போர்களத்திற்குப் போக மனமில்லாதவ ளாயினள். ஆதலின் தந்தை ஏகாந்தமாயிருந்த தருணம் பார்த்து அவனிடம் சென்று தீர்க்கதண்டம் சமர்ப்பித்து அடியிற் கண்ட வண்ணம் பகரலாயினள்.

"அண்ணா! ப்ரதிராய் என்னும் மேவர்நாட்டு இளவரசன் தோடாநாட்டை மீட்டுக்கொடுத்து என்னை மணஞ் சூட்டும் வண் ணம் மகம்மதியருடன் போர்புரிய ஆயத்தமா யிருக்கின்றான். அவனுடன் போய் அவனுக்குத் துணைசெய்ய ஆவலுள்ள மனமு டையவளா யிருக்கிறேன் யான். காம இச்சையினால் அவனுடன் செல்லப்பிரியமுடையவாளாயினள் என்றுஉலகோர்வசதிகூறுவர். கல்மிஷாகித சீதா பிராட்டியை உலகம் பழிக்கவில்லையா? தோடா நாட்டைமீட்டு உமது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென் னும் எண்ணமே இந்த நிமிஷம் வரைக்கும் மேலாடியிருந்த எனது ஒரு எண்ணமாகும். இந்த எண்ணமானது நிறைவேறும் வரைக்கும் வேறெந்த எண்ணத்தையும் தலையெடுக்க விடேன். எனது மனோதர்மம் தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. கீர்த்தியில்லா வாழ்க்கை என்னபலன். மாணபயத்திற்கு அஞ்சிப் புழுவைப்போன்ற வாழ்நாள் எற்றிற்கு; காரியம் புரிவதே நமது கடமையாகும். அதனால் விளையும் பலனைப்பற்றி ஆவலாயிருப் பது புத்திமான்களுக்கு இலக்ஷணமன்று. திருவருளை முன்னிட்டு எல்லா நற்காரியத்தையுஞ் செய்ய மனதை ஏவுவதே சுகத்தை யுண்டாக்கும். என் மனமானது தேகபோக இச்சையின் நிமித் தம் ப்ரிதிராயுடன் செல்லப் பிரேரேபிக்கவில்லை. இது சத்தியம்; அதர்மர்களான முசல்மான்களை வெருட்டச் சந்தர்ப்பம் திருவரு ளால் நேரிட்டிருப்பதாக எண்ணுகிறேன். ஆதலின் என் மனமும் தன்னது வழியற்று திருவருள் வழியிலிருக்கின்றமையின் நான்



செய்யப்புகும் காரியம் நிந்திதமாகாது. ஆதலின் அண்ணா என்னை ஆசீர்வதித்து போர்முகத்திற்குச் செல்ல விடைதாரும்" என்றனள். ஞானோபதேசத்தை நிகர்த்த இம்மாற்றங்களைக் கேட்ட சூர்தான் மனமுருகி பேருவகையுடன் தனது குமாரத் தியை மடிமீது வைத்து உச்சிமோந்து ஒரு முகூர்த்த நேரம் கட வுளைத் தியானித்து அவளை ஆசீர்வதித்து போர்களத்திற்கு ப்ரிதி விராயுடன் செல்ல உத்திரவு அளித்தனன்.

(வரும்)

P. மாணிக்கசாமி முதலியார் பீ., ஏ.
இரங்கூன்.

## ஆசாரமஞ்சரி.

### ஆசாரத்தின் காரணமிவை யெனல்.

(1) பிறர் செய்த நன்மையை மறவாமை, பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல், அகமும் முகமும் மலர இனிய சொற்களைச் சொல்லுதல், எவ்வுயிர்க்கும் துன்பந் தரு வன வற்றைச் செய்யாமை, கற்றற்குரிய நூல்களைக் கற்றல், உலக நடையினைச் செவ்வையாக அறிந்தொழுகுதல், தக்கதின்னது தகாத தின்னதென்றறிதல், நல்லினத்தாரோடு சிநேகஞ் செய் தல் என்னு மிவ்வெட்டும் ஆசாரமுண்டாதற்குக் காரணங்களாம்.

ஆசாரம் - நல்லொழுக்கம்; நல்லினத்தார் - அறிவொழுக்கங் களாற் றகுதியுடையவர்.

### ஒழுக்கத்தினின்றும் தவறாதவர் அடைவனஇவை யெனல்.

(2) ஒழுக்கத்தி னின்றும் தவறாதவர் நற்குடிப்பிறப்பும், நீண்டவாழ் நாளும், செல்வமும், அழகும், நிலத்திற் குரிமையும், சொற் செலவும், கல்வியும், பிணியில்லாமையு மென்னு மிவ்வெட் டினையும் தவறாது செவ்வையாகப் பெறுவர்.

நிலத்திற்குரிமை - காணியாட்சி; சொற் செலவு - சொன்ன சொல் பயன் தருவதாதல்.

### காத்தற்குரியன விவையெனல்.

(3) அந்தணர்க்குத் தட்சிணை கொடுத்தலும், யாகஞ் செய் தலும், தவஞ் செய்தலும், கற்றற்குரிய நூல்களைக் கற்றலு

மென்னு மிந்நான்கனையும் ஒருவர் முப்பா லொழுக்கத்தால் பாது காத்து நடத்தக் கடவர். நடத்தாது போவாராயின், அவை எவ்வுலகத்திலும் அவர் தமக்குப் பயனாகாதனவாய்க் கெடும்.

முப்பால் - அறநூல், பொருள்நூல், இன்பநூல்; ஒழுக்கம் - அவை கூறும் விதி.

### முந்தையோர் கண்ட முறை யிஃதெனல்.

(4) ஒருவன் வைகறையாம மென்னும் விடியற் காலத்தில் தூக்கத்தினின்று மெழுந்து தான் மறுநாள் செய்தற்குரிய அறத்தையும், சம்பாதித்தற் குரிய பொருளையும் பற்றி ஆராய்ந்து சிந்தித்து, பொழுது விடிந்த பின், தந்தையையும் தாயையும் தொழுது கொண்டெழுந்து, தனக்குப் பொருந்திய காரியத்தைச் செய்யக் கடவனென்பது முந்தையோர் கண்ட முறையாம்.

முந்தையோர் - அறிவுடைய பெரியார்; கண்ட - கூறிய.

### எச்சிலோடு தீண்டாப்பொருள்களிவை யெனல்.

(5) பசு, பார்ப்பார், தீ, தேவர், உச்சத்தலை யென்னு மிவற்றை எச்சிலை யுடையார் யாவரும் தீண்டுதல் கூடாது; ஆதலின், எச்சிலோடு தீண்டப்படாத பொருள்கள் பசு முதலியனவாம்.

தேவர் - பூசைக்குரிய விக்கிரகங்கள்.

### எச்சிலோடு நோக்கப்படாத பொருள்களிவை யெனல்.

(6) தமக்கு நன்மை வேண்டு மென்று விரும்புகின்றவர் புலையன், சந்திரன், சூரியன், நாய், வீழ்மீனென்னு மைந்தனையும் எச்சிலை யுடையவராய் எந்த நாளிலும் விரைந்து தெளிவாக (கண்ணால்) நோக்கார்.

வீழ்மீன்—எரிந்துவிழும் நட்சத்திரம்.

### எச்சில்களிவை யெனல்.

(7) எச்சில்கள் பலவாறாக விருப்பனவாம்; அவற்றுள், மலங் கழித்தல், மூத்திரம் பெய்தல், இணை விழைச்சு, வாயில் விழைச்சு, என்னுமின்னான்கே சிறப்பாக விருப்பனவாம். இந்நான்கெச்சிலு முண்டாயபோது நீர் கொண்டுடம்பைச் சுத்தஞ் செய்தல் வேண்டும்.



இணை விழைச்சு - புணர்ச்சி; வாயில் விழைச்சு - வாயி லுள்ள நீரைத் துப்புதல்.

### எச்சிலோடு செய்யப்படாதன இவையெனல்.

(8) எப்போதும் அறிவுடையவராக விரும்புகின்றவர் மலங் கழித்தல் முதலிய அந்நால்வகை யெச்சில்களையும் கவனித்து, அவை நிகழ்ந்த போது எப்புத்தகத்தையும் படியாதும், எவரோடும் பேசாதும், நித்திரை செய்யாது மிருப்பர்.

### காலையிலும் மாலையிலும் செய்வன இவை யெனல்.

(9) ஒருவன் சிறு காலையின்கண் ஒரு கோல்கொண்டு பல்லைத் துலக்கி, முகத்தைக் கழுவிக்கொண்டு, தான் வணங்குந் தெய்வத்தைத் தானறிந்துள்ள வழியால் தொழுது, பின் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கக் கடவன்; மாலைப் பொழுதின் கண் தான் வணங்குந் தெய்வத்தை நின்றுகொண்டு தொழாது, உட்கார்ந்து தொழக்கடவன்.

கோல் - ஆலங்குச்சி, அல்லது வேலங் குச்சி.

### சந்தேக மில்லாது நீராடுதற்குரிய சமயங்களிவை யெனல்.

(10) ஒருவன் தான் வணங்குந் தெய்வத்தைத் தொழும் போதும், கெட்ட கனாக்கண்டபோதும், அசுத்த முண்டாய போதும், உண்டவுணவைக் கக்கியபோதும், மயிர்களைந்தபோதும், உணவுண்ணும்போதும், பொழுதேற வுறங்கியபோதும், இணைவிழைச் சுண்டாயபோதும், கீழ்மக்களுடம்பினைத் தீண்டிய போதும், மலமூத்திரங்களைக் கழித்தபோதும் சந்தேக மில்லாது ஸ்நானஞ் செய்யக் கடவன்.

அசுத்தம் - மல முதலியவற்றை மிதித்தல், பிரேத தரிசன முதலியனவாம்; மயிர்களைதல் - க்ஷவரஞ் செய்துகொள்ளுதல்.

(All rights reserved)

## கதாவிநோதமாலை.

முன் ஒருகாலத்தில் தேவபுரம் என்று ஒரு நகரம் இருந்தது. அதில் பங்கஜவர்மா என்றொரு பார்த்திபன் பரிபாலனம் செய்து கொண்டிருந்தான். அந்நகரத்தில் உயர்குலத்தில் உதித்த பங்கஜ லோசனன் என்னும் ஒரு அந்தணன் வசித்துக் கொண்டிருந்தான். அவ்வந்தணனுக்கு அவனுக்கேற்ற நாணமும் நல்லொழுக்கமும் பொருந்தியவளும், மற்றொரு ஸரஸ்வதியென்றும், லட்சுமி யென்றும் சொல்லத்தக்கவளுமான தேவமதி யென்னும் ஒரு மனைவியிருந்தாள். தேவமதி வயிற்றில் ஸர்வ லக்ஷண ஸம்பன்னனான ஒரு புத்திரன் பிறந்தான். அவன் பிறந்தகாலத்தில் ஆகாசவாணி "பங்கஜ லோசன! உனது புதல்வனுக்குப் பூபாலன் என்று பெயர் இடு. அவன் அரசனாகிப் பூமியை ஆளுவான். உனக்கு அதனால் நிச்சயமாய்ச் சுகமுண்டாகும்" என்று கூறினாள்.

பங்கஜ லோசனன் புத்திரன் பிறந்ததை மிகச் சிறப்பாகக் கொண்டாடி ஆகாசவாணி கூறியபடி அவனுக்குப் பூபாலன் எனப்பெயர் வைத்தான். பின் அப்புத்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சகலகலைகளும் கற்று அஸ்திர சாஸ்திரப் பயிற்சியில் மிகுந்த வல்லமையைப் பெற்றான்.

இதற்கு மத்தியில் பங்கஜலோசனன் பத்தினியாகிய தேவமதி, ஸர்வாங்க சுந்தரியான ஒரு பெண்ணைப் பெற்றாள். அவள் லாவண்யத்தைக்கண்டு திலோத்தமையும் பொறாமைகொண்டாள். அவளுக்குப் பங்கஜவதனை எனப் பெயரிடப் பட்டது. பூபாலனும் பங்கஜவதனையும் தமது தகப்பன் வீட்டில் வளர்ந்து வந்தனர்.

இவ்வாறு சில வருஷங்கள் சென்றபின் அந்நாட்டில் மழையில்லாமையால் சூரியகிரணங்களால் பயிர்கள் யாவும் தகிக்கப்பட்டுப் போயின. நாடு முழுவதும் நீலநிறம் பரவியது; அப்பஞ்சத்தின் கொடுமையால் அரசன் தரும மார்க்கத்தை விட்டுத் தன் குடிகளிடமிருந்து பணம் பறிக்கவும், அவர்கள் பொருளைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தான். அப்பொழுது தேவமதி தன் பர்த்தா பங்கஜலோசனனைப் பார்த்து "பிராணநாதா? நாம் இங்கேயே இருந்துகொண்டிருந்தால் நமது குழந்தைகள் பசியால்



இறந்து போனால் என்னசெய்வது? ஆதலால் நாமெல்லோரும் எனது பிறந்தகத்துக்குப் போவோம்" என்றாள். பங்கஜ லோசனன் அதனைக்கேட்டுத் தன் நாயகியை நோக்கி "இவ்வித பஞ்சத்தில் பெரிய வீட்டிலிருந்து வெளியிற் புறப்பட்டுப் போதலும், அதைக்காலி செய்தலும் மிகவும் தவறு. ஆதலால் நான் இவ்விரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுபோய் உனது தகப்பனார் வீட்டில் விட்டுவிட்டு வருகிறேன். நீ இங்கேயே இரு; நான் வெகு சீக்கிரமாக வருகிறேன்" என்றான். இவ்விதம் சொன்னவுடன் தேவமதி, அப்படியே சரி என்று சொன்னாள்.

பின் பங்கஜலோசனன் தன் மனைவியைத் தன்வீட்டில் வைத்துவிட்டு தன் குமாரன் பூபாலனையும் குமாரி பங்கஜவதனையையும் அழைத்துக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தன் மாமனார் ஊரை நோக்கிச் சென்றான். இம்மூவரும் மூன்றுநாள் இப்படி நடந்து ஒரு பெரிய ஆரண்யத்தை யடைந்தனர். அவ்வாரண்யத்தில் பெருமணல் நிறைந்த, மைதானங்கள் இருந்தன. அம்மணல் வெயிலில் காய்ந்து கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த மரங்கள் பல பட்டுப்போனவை போகப் பாக்கி யிருந்தவை இலைகள் உதிர்ந்து பசுமையின்றி வதங்கிப் போயிருந்தன. இவ்வாறு பயங்கரமான பாழும் பிரதேசத்தில் அவ்விரு பாலகர்களுக்கும் பொறுக்கமுடியாத தாகம் உண்டாயிற்று. பங்கஜ லோசனன் அவ்விரு பாலர்களையும் அங்கு ஓரிடத்தில் உட்காரவைத்து நீரைத் தேடிக்கொண்டு நெடுந்தூரம் சென்றான். அவ்வழியும் பில்லர்கள் (Bhils) என்னும் வேடர்களின் அரசனாகிய கேஸரி தம்ஷ்டிரன் (சிங்கப்பல்லன்) என்பவன் ஏதோ ஒரு காரியமாகச் சென்று பரிவாரங்களுடன் திரும்பி வரும்பொழுது, தற்செயலாய்ப் பங்கஜ லோசனனைப் பார்த்து "ஆ? எதைத்தேடிக் கொண்டு இவ்வாறு திரிகின்றீர்" என்று கேட்க; பங்கஜ லோசனன் "ஜலத்தைத் தேடிக்கொண்டு திரிகின்றேன்" என்றான். அப்பொழுது அப்பில்லராஜன், தன் பரிவாரங்களுக்கு ஜாடை செய்து "இவ்வந்தணனை அழைத்துப்போய் ஜலமிருக்கும் இடத்தில் விடுங்கள்" என்றான். அவர்கள் அதைக்கேட்டு, அவன் எண்ணத்தை அறிந்து கொண்டு, நிர்தோஷியான பங்கஜலோசனனைச் சிறைப்பிடித்துத் தங்கள் ஊருக்குக் கொண்டு

போனார்கள். பின் பங்கஜலோசனன் காளி தேவிக்கு தன்னைப் பலிகொடுக்க அழைத்துப் போகிறார்கள் என்பதை யறிந்து வனத்தில் தான் விட்டுவந்த இரண்டு குழந்தைகளையும் நினைத்துத் துக்கித்தான் "ஐயோ? குழந்தாய்? பூபாலா? பெண்ணே? பங்கஜவதனே? உங்களிருவரையும் நிராதரவாய்க் கானகத்தில் விட்டு வந்திருக்கிறேனே? புலி கரடிகளுக்கு இரையாக்கினேனே? என்னை இங்கே, கள்வர் கொன்று விடப் போகிறார்களே? எனக்கு ஒரு வரும் கதியில்லையே; அந்தோ தெய்வமே! என்ன செய்வேன்" என்று புலம்பி விண்மீதூரும் சுடரைப் பார்த்தான். பார்த்ததும் விசனத்தை விட்டு அதிக ஆனந்தமடைந்து, 'நாம் சூரியனைச் சரணமடைந்தால் எவ்வாற்றானும் நம்மைக்காப்பார்' என்று எண்ணி, "ஓ ஆதித்தா! சூரியநாராயணா? நான் உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் பஹிராகாசத்திலும் அந்தராகாசத்திலும் சஞ்சரிக்கின்றீர்? நீர் தேஜோரூபியா யிருக்கிறீர்? வெளியிருட்டு உள்ளிருட்டு இரண்டையும் நாசமாக்குகிறீர்? நீர் மாகாவிஷ்ணு ரூபியா யிருக்கிறீர்? நீரே சிவபெருமான்? நீர் மூவுலகிலும் வியாபித்திருக்கிறீர்? நீர் கலியாணத்திற்கு இருப்பிடமா யிருக்கிறீர்? உறக்க நிலையிலிருக்கும் உலகை எழுப்புகிறீர்? தாமே பிரஜாபதியா யிருக்கிறார்? இரவில் சந்திரனையும் தீயையும் பிரகாசிக்கச் செய்ய அவைகளிடம் அன்பு கூர்ந்து தாம் தமது தேஜஸை விட்டு மறந்து விடுகிறீர்? ஓ? சூரியபகவானே? பின் நீர் உதித்தவுடன் அரக்கர்கள் ஓடிப் போகிறார்கள்; திருடர்கள் வல்லமை சித்திப்பதில்லை; குணவான்கள் களிக்கிறார்கள்; மூவுலகொளியே? நான் தம்மைத் தஞ்சமென்றடைகின்றேன். எனது இன்னலென்னும் இருளை நீக்கி என் மீது கிருபை செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். இவ்விதம் பங்கஜலோசனன் பூரண பக்தியுடன் கதிரவனைத் துதிக்க ஆகாச வாணியானவள் "பங்கஜலோசன? எனக்கு உன்னிடம் சந்தோஷ முண்டாயிருக்கிறது; உனக்குத் தீங்கொன்றும் நேரிடாது; எனது கிருபையால் நீ உனது மனைவி மக்களுடன் மீண்டும் சேருவாய்" என்று சொன்னாள். இதனைக்கேட்ட பங்கஜலோசனன் மனவிசாரம் நீங்கி ஸ்வஸ்த சித்தனா யிருந்தான். பின்னர்ப் பில்லர்கள் அவனுக்கு ஸ்நானம செய்வித்துப் போஜனமும் செய்வித்தார்கள். வரும்.

M. M. Narayanasamy Iyer, Mudikandan.

## யுத்தம்.

ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் யுத்தத்தில் இப்போது மேற்காங்கத்தில், வர்டூனில் மிகு கடுமையான யுத்தம் நடந்து வருகின்றது. ஜெர்மன் இளவரசர் கொலையாளியைப்போன்று தமது துருப்புக்களை போர்முகத்திற் கும்பல் கும்பலாகத் தள்ளிப் பலிகொடுத்து வருகின்றார். இதற்குக் காரணம் எங்ஙனமாவது வர்டூனைப் பிடித்துப் பாரிசுக்குச் செல்லுதல் வேண்டுமென்னும் நோக்கமே யாம். இங்கு மூன்றுமாத காலமாக மிகக் கடூரமாக ஜெர்மன் இளவரசர் யுத்தத்தை நடத்தி வந்தும் அவருடைய நோக்கம் ஈடேறுவதற்குரிய அறிகுறிகளேற்படவில்லை. இத்தாலியப் போர்முகத்தில் ஆஸ்டிரியர் கடுமையாகப் போர்செய்து வருகின்றனர்; பெருஞ் சேனைகொண்டு இத்தாலியரைத் தாக்கி வருகின்றனர். ஆஸ்டிரியாவிலும், ஜெர்மனியிலும் யுத்தம் நீடித்து நடந்து வருவதுபற்றிப் பெருங்கலக்க முண்டாயிருக்கின்றது. அக்கலக்கத்தை யொழிப்பதற்கே ஜெர்மானியரும், ஆஸ்டிரியரும் ஒரு தீர்மானமான வெற்றியை யடையப் பார்க்கின்றனர். அது சாத்தியமாகா திருக்கின்றது. ருஷ்யப் போர்முகமும், பால்கன் போர்முகமும் அமைதியாக விருக்கின்றது. கக்கேஷிய மாகாணத்திலும், ஆசியா துருக்கியிலும் ருஷ்யர் தடைபடாது முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றனர். ஆயினும் யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறு மென்னும் அறிகுறிகள் காணப்படவில்லை. யுத்தம் நீடித்து நடப்பதனால் உலக முற்றிலும் கஷ்டம் அதிகரித்து வருகின்றது.

## காகிதப் பஞ்சம்.

யுத்தத்தினால் நேர்ந்திருக்கும் கஷ்டங்களுள் காகிதப் பஞ்சமும் ஒன்றாம். பவுண்டு $2\frac{1}{2}$ அணாவிற்கு விற்ற காகிதம் இப்போது $6\frac{1}{2}$ வீதம் விற்கப்படுகின்றது. இந்த அதிக விலைக்குக் காகிதம் கிடைப்பதும் கஷ்டமாகி வருகின்றது. காகிதப் பஞ்சத்தினால் அச்சுக்கூடத் தலைவர்கட்கும், புத்தக வியாபாரிகட்கும் அதிக நஷ்டமுண்டாகி விட்டது.

### "நியூ இந்தியா".

சென்னையில் அந்நிபெசண்ட் அம்மையாரால் நடைபெற்று வரும் "நியூ இந்தியா" என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகை 2000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்று மாஜிஸ்டிரேட்டிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றது. அச்சுக்கூடச் சட்டத்தின் நிர்ப்பந்தம் சென்னை ராஜதானியிலும் புகுந்து விட்டது.



8 - JUL 1916 MADRAS


# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-11 தொகுதி-11 | June ஜூன்மீ 1916. | No-11. பகுதி-11


## கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு.

பொய், குறளை, வன்சொல், பயனில் சொல் என்னும் நான்கனுள், குறளை பெருந்தீமையை யுண்டாக்குவதா யிருத்தலின், அது நெருப்பினும் கொடியதாம். வாக்குக் குற்றம், காயக் குற்றம், மனக்குற்ற மென்னு மூன்றும் குறளை கூறுவானிடத்துத் தவறா திருப்பனவாம். பொய், குறளை, வன் சொல், பயனில் சொல் என்னும் நான்கும் வாக்குக் குற்றமாம்; மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னுமிந்திரியமைந்தனையும் அவை சென்ற வாறே விடுதல் காயக் குற்றமாம்; பேராசை, பெருங்கோப முதலியன சித்தத்தில் மாறா திருத்தல் மனக்குற்றமாம். குறளை கூறுவானிடத்துக்குற்றமனைத்து மிருக்குமாதலின், குறளை கூறுவ தொழிந்தால் குற்றமனைத்தும் தாமே ஒழிவனவாம். குறளையாவது காணாத விடத்துப் பிறரையிகழ்ந்து கூறுதலிம். ஒருவன் புறங் கூறுதலுடையவனா யிருப்பானாயின், அவனிடத்துக் குற்ற மனைத்து மிருப்பனவா மென்பதற்கு ஐயப்பா டணுமாத்திரமாக வேனு மில்லையாம். புகையுள்ள விடத்துத் தீயிருப்பது போலக் குறளை அல்லது புறங்கூறுத லுள்ளவிடத்துக் குற்றமனைத்து மிருக்குமாதலின், நம்மனோர் புறங் கூறுதலை யொழிக்கப். பெரிது முயலுதல் வேண்டும். புறங் கூறுதலை யொழிக்க முயல்பவர் மற்றக் குற்றங்களையு மொழிக்க முயல்வா ரென்பது. சிறிதாகித்து நோக்கினால் நன்கு விளங்கும். புறங்கூறுவோன் பொய் பேசாதும், கடுஞ்சொற் கூறாதும், பயனில் சொல்

பகராது மிருப்பதில்லையாம். இந்நான்கு குற்றமுமுடையவன் காயக் குற்றமில்லாதும் மனக்குற்றமில்லாது மிருப்பது ஒரு வகையாலுமில்லையாம். புறங்கூறுகின்றவன் தனக்கேயன்றி, தன்னைச் சேர்ந்தவர்க்கும் தீமையை யுண்டாக்குபவனா யிருக்கின்றானென்பது சகுனி கதையால் நன்கு விளங்கும். துரியோதனன் சகுனி பாண்டவரை யிகழ்ந்து கூறினமையைக் கேட்டமையாலன்றோ, அவரோடு பகைத்து, தன் புத்திரர் மித்திரர் முதலியவர்களுடன் போர்க்களத்தில் மாண்டனன்; சகுனி மாத்திரம் பிழைத்தானோ? அவனுமன்றோ மாண்டனன்? இதனால் பிறர்கூறும் குறளையைக் கேட்பது அறிவுடையார்க்கு ஒருவாற்றானுந் தகுதியுடையதாகாதென்பது சொல்லாமலே விளங்குவதாம்.

மந்தரை யென்னும் பெயரையுடைய கூனி கூறிய குறளையைக் கேட்டமையா லன்றோ கைகேசி மனம் வேறுபட்டுச் சீராமனைக் காட்டுக் கனுப்ப வுடன்பட்டனன்? கைகேசி அக்கூனி கூறிய குறளையைக் கவனியாதுவிட்டால், சீராமன் காட்டிற்குச் செல்வதும், தசரதனிறப்பதும் சம்பவியாவன்றோ? புறங்கூறுவார் வார்த்தைக் கிணங்கிப் பொல்லாங்கு பலவற்றை யடைந்தவரை யிவ்வள வென்றெண்ணி யளவிட லெவர்க்குமாகாதாம். "பொய் குறளை வன்சொல் பயனில் சொல்லெனும், இவ்வகை நான்கு மிழித்தகு சொல்லே" என்று திவாகரம் கூறுவதைக் கவனித் துணர்வோமாயின், இழிக்கத்தக்க சொற்களைப் பேசுவா ரிவரென்பது விளங்குமன்றோ? இழிக்கத்தக்க சொற்களில் புறங் கூறுதல் தலைமையாயதா யிருத்தலின், அதனைக் கூறுவார் இழிமக்களுள் மிக இழிமக்களாவரென்பதற்கு எள்ளளவாகவேனுஞ் சந்தேகமில்லையாம். குறளைகூறுவோர் இருதலைக் கொள்ளி தன்னிருமுனையினும் சுடுவது போல விருக்கின்றனரென்பது அவர் தம் செய்கையால் விளங்குவதாம். அவர் எவரைப்பற்றிக்குறளை கூறுகின்றனரோ அவர்க்கும், தாம் கூறும் குறளையைக் கேட்பார்க்கும் தீமையையுண்டாக்குபவராயிருக்கின்றனர்; அவ்விருதலைக் கொள்ளிமுடிவில்நாசத்தை யடைதல்போல, முடிவில் நாசத்தையு மடைகின்றனர். இவர் பொய் கூறுவோரினும் கடுஞ் சொற் சொல்வோரினும், பயனில் சொல் பகர்வோரினும் மிகப் பாவியராயிருக்கின்றனர். இவரது நட்பு எவர்க்கும் ஆகாதாம். இவரிருப்பதினும் இறப்பதே நன்றாம். "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத



லறங்கூறு மாக்கந் தரும்" - பிறனைக் காணாத விடத்து இகழ்ந் துரைத்துக் கண்டவிடத்து அவனுக்கினியவனாகப் பொய்த்து, ஒருவ னுயிர்வாழ்தலைப் பார்க்கினும், அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக்கொடுக்கும்" என்று திருக்குறள் கூறுவது புறங்கூறுவான் மிகப் பொல்லாதவன்; அவனிறந்தா லடையும் நற்பயனை யிருந்தாலடைவதில்லை யென்பதை யன்றோ உணர்த்துகின்றது? இதனால் குறளை மிகப் பொல்லாததென்பது விளங்குமன்றோ? குறளை யிவ்வளவு கொடியதாயிருப்பது பற்றித்தான் நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் "கோட் செவிக் குறளை காற்றுட னெருப்பு—(ஒருவனது) கோள் கேட்கும் செவியில் (மற்றொருவன் வந்து) கோள் சொல்லுதல் காற்றுடன் கூடிய நெருப்புப் போல்வதாம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். கோள் கேட்குஞ்செவி நெருப்புப் போல்வதாம்; கோள் சொல்லுதல் காற்றுப் போல்வதா மென்றிங் குணர்தல்வேண்டும். நெருப்புக் காற்றுடன் கூடியபோது மூண்டெரிவதுபோலக் கோள் கேட்பவன் பிறர் வந்து கோள் கூறியவிடத்துத் தணியாத கோபமுடையவனாகின்றான்; அதனாலவன் எவர்மீது கோள் சொல்லப்பட்டதோ அவரை வருத்த முயலுகின்றான். இதனாலவன் பலவாறாய தீமையைத் தானு மடைதற்குரியவனாகின்றான். கோள் சொல்லுதலைக் கேட்டல் பலவாறாய தீமைக்குக் காரணமாயிருத்தலின், அதனைப் பிரயத்தன பூர்வகமாக விடுவதுடன், பிறர் மீது கோள் சொல்லுதலையு மொழிப்பது ஒவ்வொருவர்க்கு மத்தியாவசியகமான கடமையாம். கோள் சொல்லுதல் எப்போதுண்டாகின்றது? பிறர்மீது பொறாமையுண்டாய விடத்துண்டாகின்றது? பிறர்மீது பொறாமை கொள்ளுதலை யொழித்துவிட்டால், கோள் சொல்லுதலை யெளிதாக ஒழித்தல் கூடும்; இஃதொழியுமாயின், மற்றக் குற்ற மனைத்தையு மொழிப்பது மிக வெளிதாவதாம். "சொல்லுவார் வார்த்தை கேட்டுத் தோழமை யிகழ்வார் புல்லர், நல்லவர் விசாரியாமற் சொல்வரோ" என்றுள்ள செய்யுளை நன்கு கவனித்து வருதல் நம்மவர்க்கு முக்கியமான கடமையாம். "கண்ணாற் கண்டதும் பொய்; காதாற் கேட்பதும்பொய்; தீரவிசாரிப்பதுமெய்" என்றுள்ள பழமொழியை நன்குணர்ந்துவருதல் வேண்டும்; வந்தால், புறங்கூறுதல் காரணமாகப் பிறரைப் பகைப்பது பெரும்பான்மையு மொழியும். புறங்

கூறுபவர் அதனால் தமக்குக் கேடுண்டாதலையுய்த்துணர்தல் வேண்டும்; உணர்வாராயின், அவரும் அதனை யொழித்து எவர்க்குமினிமை யுடையவராவர். புறங் கூறுபவரும், அதனைக் கேட்பவரும் நெருப்பினைத் தமது முன்றானையில் வைத்து முடித்தவர் போலாவர்; அவர்களுக்குத் தீமை வருவது தவறுவதில்லை யென்பதை நம்மனோர் மறவாது ஞாபகத்தில் வைத்தல் வேண்டும்.

இனியவை நாற்பது.

"நட்டார்ப் புறங்கூறான் வாழ்த லினிதினிதே"

நன்னெறி.

"உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ், கொண்டு புகல்வ தவர் குற்றமே."

பழமொழி.

"பொல்லாதுசொல்லி மறைந்தொழுகும் பேதைதன், சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்"

அறநெறிச் சாரம்.

"முன்னின் றொருவன் முகத்திலும் வாயினும், கன்னின் றுருகக் கலந்துரைத்துப்-பின்னின், றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர், விழித்திமையார் நின்ற நிலை."

திருக்குறள்.

"அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே, புறனழீஇப் பொய்த்து நகை."

இப்பிரயோகங்களிங்கு நன்குணர்தற் பாலனவாம்.

## மகா கீர்த்திவாய்ந்த ஓர் இளைஞன்.

(முன் தொடர்ச்சி)

பிரான்ஸு தேசத்திலுள்ள "ருவான்" நகரத்தில் பஸ்கால் தனது கணித சம்பந்தமான ஆராய்ச்சிகளை ஆரம்பித்தான். அவனுடைய அறிவு ஸகல சாஸ்திரங்களிலும் புகுந்து பழகிற்று. சாமான்களை ஏற்றிச் சுலபமாகத் தள்ளிக்கொண்டு போகக்கூடிய ஒற்றைச் சக்கரக் கைவண்டி (இது ரயில்வே ஸ்டேஷன்களில் காணப்படும்) பாரீஸ் பட்டணத்தில் நடமாடும் ஜட்கா வண்டிகள்



முதலியன "பஸ்கா"லால் கண்டு பிடிக்கப்பட்டன. அவன் கண்டுபிடித்த ஜட்கா வண்டிகள் அவன் இறந்துபோன வருஷந்தான் முதல் முதல் பாரீஸில் ஓட ஆரம்பித்தன. இவ்வளவு அற்புதமான ஆராய்ச்சிகளெல்லாம் அவனுடைய பாலப் பருவத்திலே நிகழ்ந்தன. இருபத்தைந்தாவது வயதில் பஸ்கால் சாஸ்திரங்களைக் கவனிப்பதை விட்டுப் பாரமார்த்திக வழியிலே புத்தியைச் செலுத்த விருப்பங்கொண்டான். முப்பதாவது வயதில் சாஸ்திர ஆராய்ச்சிகளை முற்றிலும் விட்டு விட்டான்; மிகவும் நுட்பமான தேகாரோக்கிய முடையவனாதலால், அடிக்கடி நோயால் வருந்துவான். அவன் தனது 18-வது வயது முதல், ஒரு நாளாகிலும் நோயில்லாதிருந்த தில்லையாம். அவனுடைய நோய் சொஸ்தமாகவே இல்லை. அதனாலே ஆத்ம விசாரணை சம்பந்தமான எண்ணங்கள் அவன் மனதிலே நிரம்பின. அவன் உலக வியாபாரங்களை முற்றிலும் விட்டு விடுவதாக நிச்சயித்தான் தவிர அவனுடைய பாரமார்த்திக புத்தி திடப்பட்டு வளர்வதற்கு அநுகூலமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

பஸ்கால் ஒருநாள் திருவிழா நிமித்தமாக நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு வண்டியில் போய்க்கொண்டிருந்தான். திடீரென இரண்டு குதிரைகள் கடிவாளத்திற்கு அடங்காமல் ஓட ஆரம்பித்து, "சேன்" நதி மேலுள்ள ஒரு பாலத்தின்மீது வந்து சேர்ந்தன; அங்கே மயக்கங்கொண்டு, பாலத்தின் கைப்பிடிச் சுவரைத் தாண்டிக் கீழே நதியில் குதித்தன. அதிஷ்ட வசமாக வார்கள் அறுந்து போனதால், அக் குதிரைகள் மாத்திரம் தண்ணீரில் விழுந்தன. மற்ற இரண்டு குதிரைகளும், வண்டியும் அப்படியே பாலத்தின் ஓரத்தில் தொங்கிக்கொண்டிருந்தன. பஸ்கால் மூர்ச்சை அடைந்துவிட்டான். வெகு நேரஞ் சென்று அவனுக்குப் பிரக்ஞை வந்தது. ஆனால் இந்த ஆபத்து அவனுடைய மூளையில் நன்றாகப் பதிந்து விட்டது தான் தெய்வீகமாகப் பிழைத்தபடியினால், இந்தச் சம்பவம் அவனுக்குத்தெய்வத்தின் அறிக்கையாக, அஃதாவது தான் இந்த உலக வியாபாரங்களைத் துறந்து, ஆத்ம ரக்ஷணையைக் கவனிக்க முயலவேண்டிய தென்ற கட்டளையாகத் தோன்றிற்று.

பஸ்கால், பௌதிக, கணித சாஸ்திரி மாத்திரமன்று; ஆழ்ந்த யோசனையுடைய ஒரு கல்விமான்; "பஸ்காலின் நீதி மொழிகள்" எனப் பெயர் பூண்ட அவனுடைய ஞானத்திரட்டை வாசிக்

காதவர்களில்லை. பின் வரும் உயர்ந்த நீதிமொழியை ஸகலரும் அறிவார்கள்:—

மனிதன் ஒரு புல், இயற்கையில் மிகவும் பலஹீனமான ஒரு திரணம். ஆனால் அவன் சிந்திக்கும் ஒரு புல் அவனை நசுக்குவதற்கு ஜகமனைத்தும் ஆயுதந்தாங்கிவர வேண்டிய தவசிய மில்லை. கொஞ்சம் நீராவி, ஒரு துளி ஜலம் போதும் அவனைக் கொல்வதற்கு; ஆனால் ஜகம் அவனைக் கொன்றபோதிலும், தன்னைக் கொல்லும் ஜகத்தைக் காட்டிலும் மேலானவன், உயர்ந்தவன். ஏனெனில் "நாம் சாகின்றோம்" என்கிற ஞானம் அவனுக்கிருக்கின்றது. மனிதனைவிட ஜகத்திற்கிருக்கும் மேன்மை, ஜகத்துக்குத் தெரியாது. நமக்கிருக்கும் பெருமை முழுதும், நாம் சிந்திக்குந் தன்மை யுடையவர்க ளானபடியினாலேதான்.

பஸ்கால் 1662 இல் ஆகஸ்டு மாதத்திலே இறந்தான். "தெய்வம் என்னை என்றும் கைவிடாதிருக்க" இவைதாம் அவனுடைய கடைசி வார்த்தைகள். அவனுக்கு அப்போது 39-வயது.

**N.** சுப்பிரமணிய அய்யர்.

புதுச்சேரி.

## ராமன் என்னும் ராட்சச விரோதி.

(முன் தொடர்ச்சி)

இப்படி இறந்துபோன இந்த இராட்சசனுக்குச் சிநேகிதன் ஒரு ராட்சசன் உண்டு. இவன் ஒரு அடர்ந்த காட்டின் மத்தியில் ஒருபெரியவீட்டில் வசித்திருந்தான். இவன் தனதுமுக்கிய சிநேகிதனான ராட்சசன் கொல்லப்பட்டான் என்று கேள்விப் பட்டான்; இதற்காக மிக வருந்தினான். மேலும் அவனைக் கொன்ற அந்தப் பையனை எங்கேயாவது கண்டால் கொல்லுவதாகத் தீர்மானித்தான்.

இதற்குப் பிறகு நான்கு மாதத்திற்கு அப்பால் ஒரு நாள் ராமன் காட்டிற் கருகாமையில் நடந்து போய்க்கொண்டிருந்தான்; அப்பொழுது ஒரு ஊருணி (தண்ணீர் ஊற்று)க் கரையின்மீது உட்கார்ந்தான்; அவ்விடத்தில் களைப்பின் மிகுதியால் தூங்கி விட்டான்.



இச்சமயத்தில் தண்ணீர்க்காக ஊருணிக்கு வந்த இந்த ராட்சசன் ராமனைக் கண்டான். அவன் உடுத்தியிருந்த அரைக்கச்சையால் தன்னுடைய சிநேகிதனான ராட்சசனைக் கொன்றவன் இந்தப் பையன்தான் என்று கண்டறிந்தான்.

ஆகையால் இவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு காட்டின் மூலமாய்த் தனது வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போனான். ராமன் அங்கே போனபோது இறந்துபோன மனிதர்களுடைய எலும்புகள் தரை முழுமையும் இருப்பதைக் கண்டான்.

இவனை ஒரு பெரிய அறையில் அடைத்து அதைப் பூட்டி விட்டான். தன்னோடு இந்தக் காட்டில் வசித்திருந்த வேறொரு ராட்சசனை அழைத்துவரப் போனான்.

அந்த அறையில் அடைப்பட்டு இருந்த இராமன் ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தான். அப்பொழுது இரண்டு ராட்சசர்கள் உள்ளே வருவதைக்கண்டு, தன்னைக் கொன்று இராபோஜனத்தில் சாப்பிட்டு விடுவார்கள் என்று மிகப் பயந்தான்.

தான் இருந்த அறைமுழுதும் பார்த்தபோது ஒரு மூலையில் பலமான இரண்டு கயிறுகளைக் கண்டான். அவற்றை எடுத்து முனைகளில் இரண்டு முடிச்சிகள் போட்டான்.

ராட்சசர்கள் ஜன்னலுக்கு அருகாமையில் வந்தபோது இந்தக் கயிறுகளை அவர்களின் தலைகளுக்கு மேல் நேராக எறிந்தான்; தன்னிடத்திருந்தக் கயிறுகளின் மற்றமுனைகளைக் கூறையில் ஒரு சரமாத்துண்டில் கட்டினான். இந்த இரண்டு ராட்சசர்களும் மூர்ச்சை அடைந்து தளரும் வரைக்கும் தனது முழுசக்தியைக் கொண்டு கயிறுகளை இழுத்தான்.

இவர்கள் முகம் கறுத்த பின்பு கயிற்றின் மூலமாய் இவன் இறங்கி அவர்களது தலையண்டை வந்து சேர்ந்தான். பிறகு தனது வாளை உருவி அவர்களைக் கொன்று விட்டான்.

ராமன் பிறகு முதல் ராட்சசனுடைய சொக்காய் ஜேப்பியிலிருந்து ஒரு சாவிக்கொத்தை எடுத்தான். உடனே அவன் வீட்டிற்குப்போய் அங்கே மூன்றுபெண்கள் தங்கள் தலைமயிரால் முடிச்சி போடப்பட்டு ஆகாரமில்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறாப் போல் இருப்பதைக் கண்டான்.

ராமன் இந்தப் பெண்களைப் பார்த்து; "அம்மா! ராட்சசனையும் அவனது சகோதரனையும் கொன்று விட்டேன். நீங்கள் எதேச்சையாக இருக்கலாம்" என்று சொன்னான்.

அவர்களிடத்தில் அந்த வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டு தான் பிரயாணமாய்ப் போய்விட்டான். அவன் வெகுதூரம் நடந்து போனான்; இதனால் இளைப்படைந்தான்; ஆனால் இளைப்பாற ஒரு சத்திரமும் அவனுக்கு அகப்படவில்லை.

கடைசியாக அவன் ஒரு பெரிய வீட்டிற்கு வந்தான்; அந்த வீட்டின் கதவைத்தட்ட உள்ளேயிருந்து இரண்டு தலையுள்ள ஒரு பெரிய ராட்சசன் வெளியே வந்தான்.

அவனைப் பார்த்து இராமன் "தான் ஒரு எளிய பையனென்றும், வழிதப்பி வந்தேன்" என்றும் சொன்னான். இந்த ராட்சசன் அவனை உள்ளே வரும்படி அழைத்துக் கொண்டு போய் ஒரு பெரிய அறையில் விட்டான் அங்கே ஒரு நல்ல படுக்கையிருந்தது. அதைப் பார்த்து இராமன் இராத்திரி சுகமாகத் தூங்கக்கூடும் என்று நினைத்தான்.

இவன் மிகவும் களைத்திருந்தபடியால் தனது சட்டைகளை மிகத் துரிதமாகக் கழற்றிவிட்டுப் படுக்கையில் சீக்கிரமாகப் படுத்துக்கொண்டான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

(இன்னும் வரும்.)

வா. ஆறுமுகச்செட்டியார்.

முத்தியாலு பேட்டை

சென்னை.

## குதூகல வர்த்தனி.

(முன் தொடர்ச்சி)

ஸ்திரீகாந்தர்:—அது நன்றாயிராது. நான் மாத்திரம் சந்தியாவந்தனஞ் செய்கிறேனா? நெற்றியிலேதேனும் வைக்கிறேனா? இன்னும் நம்ம ஸொஸைடி பிரெண்ட்சுகள் (Society friends) அநேகரும் அப்படியேயிருக்கிறார்கள். சந்தியாவென்ன? வந்தனமென்ன ஸார்? நான்ஸென்ஸ்.



சோமநாதையர்:—நீங்கள் இங்கிலீஷில் எவ்வளவு நிபுணர்களானாலும் அது மாத்திரம் சொல்ல வேண்டாம். பிராம்மணர்களானதினால் வாஸ்தவத்தில் சந்தியாவந்தனம் செய்யாமற் போன போதிலும், பிரதிதினம் தீர்த்தமாடா விட்டாலும், எந்த இடத்தில் எவ்விதமாக இருந்த போதிலும் நம்முடைய ஆசாரங்களில் தவறினவர்களல்லவென்று மேலுக்காகிலும் காட்டிக் கொள்ள வேண்டும்.

பாஸ்கராசாரி:—நீங்கள் சொன்னது போல் டெபமேடரி சார்ஜை நன்றாயிருக்கின்றது. நல்லதிருக்கட்டும். போன சுக்கிரவாரம் தெற்கேயிருந்து மானேஜர் குண்டோதர ஐயர் வீட்டவர்கள் கலியாணத்திற்கு வந்த மேளத்தில் பதினாறு வயதுள்ள பெண் எவ்வளவு அழகாயிருக்கிறாள் பார்த்தீர்களா? நம்மில் யாராகிலும் அவளை வைத்துச் கொண்டால் வெகு நன்றாயிருக்கும்.

ஸ்திரீகாந்தர்:—நான் இந்தச் சங்கதியை முன்னமே ஆலோசித்து அவர்களுக்குப் போகடி விட்டேன். அவர்கள் அவளுக்கு எல்லாவற்றிற்கும் மாதம் ஒன்றுக்கு 150-ரூபாய் கொடுப்பதாகப் பத்திரமெழுதிக் கொடுத்தால் ஒப்புக் கொள்ளுகிறோமென்று சொல்லுகிறார்கள். இப்போது 400-ரூபாய் வரையும் செலவுக்கு வேண்டும். ஒரு பெரிய மிராசுதார் கேஸில் 2000—ரூபாய் வரையிலும் பீஸ் (fees) வரவேண்டும். அது இப்போது வந்தால் சௌகரியமாகக் காரியத்தை முடித்து நம்ம பிரெண்ட்ஸுகளை வரவழைத்து விருந்து செய்து அவர்களெதிராகவே ஜதையாக உட்கார்ந்திருக்க வேண்டுமென்கிற அபிப்பிராயமிருக்கிறது.

சோமநாதையர்:—எனக்கு மெத்த சந்தோஷம். தாங்கள் அதிர்ஷ்டவந்தர், உங்கள் கோரிக்கை தப்பாமல் பலிக்கும். மிராசுதார் பீஸ்வராமற் போனாலும் இந்தப் பட்டணத்தில் எந்த வர்த்தகனிடத்திலாவது அனுப்பிக் கைபதிலாகக் கொண்டு வரச் செய்யுங்கள்; அல்லது எந்த மார்வாடிக் காகிலும் ஒரு பிராமிஸரி நோட்டு எழுதிக் கொடுத்து வாங்கிக் கொடுங்கள். நானுடனே போய் அந்தப் பெண்ணுக்கு வேண்டிய பெனாரஸ் புடவை, பட்டுப்பீதாம்பர சேலைகள், அவைகட்குத் தகுந்த இரவிக்கைகள், இன்னும் உங்களுக்கு வேண்டிய வேஷ்டி முதலாயினவும், பல

கார திணுசுகளும், அத்தர் புனுகு ஜவ்வாது திணுசுகளும்,
வாசனை யெண்ணெய்களும் இன்னும் வேண்டிய எல்லாச்
சாமான்களும் வாங்கிக்கொண்டு ஒரு மணி நேரத்திற்குள்
ளே வருகிறேன். என்ன ஸார்! "இன்றைக் கிருந்தாரை நாளைக்
கிருப்பரென் றெண்ணவோ இடமில்லையே." நாமெப்போது இற
ந்து விடுவோமோ நமக்குத் தெரியாது. பிழைத்திருக்கிற நாலு
நாளும் இப்படிப்பட்ட சந்தோஷத்தோடு கழிய வேண்டும். இப்
படிக்கில்லாதவர்கள் பிழைப்பு என்ன பிழைப்பு ஸார் ? விதவைப்
பிழைப்பல்லவா ?

ஸ்திரீகாந்தர்:—கையில் மணி ரெடியாயிருந்தால் இன்றைய
சாயங்காலமே முகூர்த்தம் வைத்து இந்த மத்தியான்னமே உங்க
ளெல்லோருக்கும் விருந்து செய்விப்பேன். இரண்டு மாதங்
களாகக் காயலாவாக இருந்ததால் கோர்டுக்குப் போகாமலிருந்து
விட்டேன். இதனால் பார்டிகளுடைய பீஸ் கைக்கு வரவில்லை.
காயலா பெட்டர் பண்ணிக் கொள்வதற்கே அங்கங்கே கடன்
வாங்கினேன். 50-ரூபாய் போனாலும் நல்ல வைத்தியரிடமிரு
ந்து அவுஷதம் வாங்கிக் கொண்டால் நல்லதென்று இந்த வைத்
தியரை வைத்தீசுரன் கோவிலிலிருந்து வர வழைத்தேன். இவரிங்
கிருக்கும் போதே உங்கள் தேகத்தில் நீடித்திருக்கும் படியான
பழைய சாட்டியங்களையெல்லாம் போக்கடித்துக் கொள்ளுங்கள்.
தெரியாத முண்டத்தினிடமிருந்து மருந்து வாங்கிக் கொண்ட
தால் அவன் ரஸத்தை வைத்தான். அதனால் வாய்ப்பிடித்துக்
கை கால்களுக்கும் பிடிப்புண்டாகிப் போன வருஷம் நாலு மாத
காலம் பாயும் படுக்கையுமாயிருந்து மகா சிரமப்பட்டேன்.

சோமநாதையர்:—நீங்கள் வைத்துக் கொண்டவளிடத்தில்
ஜாட்டியங்கள் ஒன்றுமில்லை யென்று சொல்லுகின்றார்களே!

ஸ்திரீகாந்தர்:—அவளிடத்தில் இல்லை ஸார். போன வா
ரத்தில் நூதனமாக மதனபுரத்திலிருந்து மேளம் வந்ததே; அவ
ளிடத்தில் தெரியாமல் பால் மாறினது. அவளை யிராத்திரி
யில் பார்த்தால் அதி பாலியையாகத் தோன்றுகிறாள்; பகலிற்
பார்த்தால் குறைந்தது நாற்பது வயதிருக்கும். எனக்குக்
கண்ணிருந்தும் அவள் மயக்கத்தால் தெரியாமற் போய்விட்
டேன்.



சோமநாதையர்:—சரி! சரி! தெரிந்தது. அந்த முண்டை
எனக்கு முன்னமே தெரியுமே. எனக்குப் பதினாறு வயது
வந்தது முதல் இப்போது வரையும் இருநூறு முண்டைகள்
தெரியும். நம்பவேண்டும். எனக்கு எப்போதும் பாரிய வியாதி
யொன்றுஞ் சம்பவிக்கவில்லை. ஒரு தரம்மாத்திரம் விசித்திரமான
ஜாட்டியங் கண்டது; அதனால் சாகிறவன் தான். தெய்வாதீ
னம் பிழைத்தேன். நாலுநாள் என்னைத் தரையிலேயே போட்டு
வைத்திருந்தார்கள். பாஸ்கராசாரியரே! உங்கள் தமையனாரும்
இப்படிப்பட்ட ஜாட்டியத்தினாலேயே இறந்து போனாரல்லவா?

பாஸ்கராசாரியர்:—எல்லோரும் சாகிறார்களையா. ஆயுசு
முடிந்தவன் எவனோ ஒருவன் சாகிறான். நாமித்தனை நாளாக
இந்த வியாபாரத்தில் திரிந்து கொண்டிருக்கிறோம். இப்போ
தாகிலும் செத்தோமோ? நாமொரு விஷயத்தில் மாத்திரம் சாக்
கிரதையா யிருக்க வேண்டும். பார்த்த முண்டைகளை யெல்லாம்
சிநேகம் பண்ணுவதை விட்டு ஒருத்தியையே வைத்துக் கொண்
டால் நூறு வருஷமானாலும் பாவாயில்லை.

சோமநாதையர்:—நீர் ஒருத்தியையே வைத்துக் கொண்
டிருந்தீரே? உமக்கேன் வியாதி வந்தது?

பாஸ்கராசாரி:—எப்போதும் வியாதி வராமலிருக்குமா?
அடிக்கடி வந்து கொண்டிருந்தாலும் பிராண பயமிராது. நான்
வைத்துக் கொண்டிருப்பவள் மகா பதிவிரதை, சுசிலை, கபட
மற்றவள். நான் ஒருநா ளில்லாமற் போனால் அவள் வீட்டில்
செவ்வையாகச் சாப்பிடவே மாட்டாள், நான் எதற்காவது கண்
டித்தால் பதில் பேசாள். என்னோடு அவள் தாயாரே பத்து
தரம் இரகசியமாகச் சொல்லியிருக்கிறாள். அவளுக்குப் பர
புருஷரென்றால் துரும்புக்குச் சமானம். ரோகங்களென்ன சரீர
பேதத்தாலுண்டாகும்?

சோமநாதையர்:—நீங்கள் வைத்துக் கொண்டிருப்பவள் ஒரு
த்தியேயல்ல, நம்முடைய சிநேகிதர்கள் வைத்துக் கொண்டிருக்
கும்படியான தாசிகளும் அப்படியேதான். அன்றியும் இந்த ஊரி
லிருக்கும்படியான கோவில் தாசிகளும், இதாவூர்க் கோவில் தாசி
களும், மற்ற எல்லா அனுமத்து தாசிகளெல்லோருமே அதே
மாதிரி. முக்கியமாகத் தாசிகளெல்லாம் பதிவிரதைகளே. இவர்க

ளோடு பழகி இவர்கள் குணானுபவங்கள் தெரியாதவர்கள் மாத்திரமே பலவாறாக இவர்களைத் தூஷிக்கின்றார்கள். இப்போது நான் வைத்துக்கொண்டிருப்பவள் பர புருஷன் முகத்தை யறியவே மாட்டாள். நம் மதிருஷ்ட வசந்தான் இப்பேர்ப்பட்டவர்கள் கிடைத்தார்களே யொழிய வேறல்ல.

ஸ்திரீகாந்தர்:—நீங்கள் வைத்துக் கொண்டிருப்பவள் அங்கங்கே மேளத்திற்குப் போகிறாள். நான் வைத்துக் கொண்டிருப்பவள் இந்த வீதி யெப்படியிருக்கு மென்றும் அறியாள். கோவில் முறைக்கும் போகிறதில்லை. நான் வைத்துக் கொண்ட ஒரு வருஷமாக கெஜ்ஜை கட்டுவதையே நிறுத்தி விட்டேன். மாதம் நாலு ரூபாய் சம்பளங் கொடுத்து ஒரு ஆளை அவளுடைய வாசலில் காவல் வைத்தேன். காமராஜா அவர்கள் வைத்துக் கொண்டிருப்பவள் வேறொருவன் பேரில் மோகப்பட்டு அவனுக்குத் தன்னுடைமைகளைக் கொடுக்கிறாளென்று கேள்விப்பட்டேன். ஆனால் அது எவ்வளவு வாஸ்தவமோ தெரியாது.

சோமநாதையர்:—இந்தச் கசந்தியைப் பற்றிப் பிறகு சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம். நாம் முதல் பேசிய விஷயத்தைச் செவ்வையாக ஆலோசித்துச் சீக்கிரம் ஏதாவதொன்று செய்யவேண்டும். இல்லாமற் போனால் அவர்கள் அத்துமீறி நாளைக்கு நாம் அந்தப் பெண்ணை வைத்துக் கொண்டால் ஏதாவது கலபா செய்வார்கள்.

ஸ்ரீகாந்தர்:—பாருங்கள், அந்தப் பூல்சு (fools) களுடைய வியாதியை ஒருவாரத்தில் சொஸ்தப்படுத்துகிறேன். நாம் பேசிய சங்கதி ஒருவருக்குந் தெரிய வேண்டாம். கோர்டுக்கு டைமாய்விட்டது. எழுந்திருப்போம் (என்று எல்லோரும் போகிறார்கள்).

(வரும்)

சொக்கலிங்கம் பிள்ளை,

சென்னை.

# தாராபாய்.

(முன் தொடர்ச்சி)

இவ்வாறு தந்தையின் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட தாராபாய் அவருக்குத் தீர்க்க தண்டம் சமர்ப்பித்து அவர் சந்நிதியை விட்டு ப்ரிதிராயிருந்த இடத்திற்குச் சென்றனள். அவளும் ப்ரிதிராயும் தங்களுக்குக் கிடைத்த இருநூறு குதிரைச் சேவர்களுடன் தோடா நாட்டுக்கருகிலுள்ள ஒரு காட்டிற்குள் சென்று தங்கினர். இவ்விருவரும் அதிக வீரத்தன்மையும் கூரிய புத்தியும் உடையவர்களானமையின், முசல்மான்களைத் தாக்கும் உபாயத்தை எண்ணலாயினர். வெகு நேரம் தீர்க்க ஆலோசித்து மொஹரம் பண்டிகை தினத்தில் முசல் மான்களைத் தாக்க வேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். மொஹரம் பண்டிகையானது முசல் மான்களுக்கு மிகுந்த சிறந்த உகந்த பண்டிகையாகும். முசல்மான்கள் நன்மைக்காக அதிகப்பிரயாசப்பட்டுத்தன்னுடைய வாழ் நாள் முழுமையும் இவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டே வினி யோகித்து வந்த உசேன் என்னும் ஒரு சீமான் இருந்தான். அவன் தன் பகையாளிகளால் கண்டுபிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். இதனை வருஷந்தோறும் 3-பதார்த்தமாக முசல் மான்கள் கவனித்து வருகின்றனர். இந்தத்தினம் மொஹாரம் என்று அவரால் கூறப்படும். அந்நாளில் முசல் மான்கள் சமயோன் மத்தர்களாய் (like fanatics) த் திரிவார்கள்; மதா வேசத்தால் பைத்தியம் பிடித்தவர்கள் போல் நடந்து கொள்வார்கள்; ஹிந்துக்களுக்குச் சம்மதமில்லாச் சிற்சில காரியங்களை வேண்டுமென்றே செய்து கோபத்தை மூட்டி கலகத்திற்கு ஹேது விளைப்பதில் பிரியமுள்ளவராயிருப்பர்; அத்தினத்தில் பிசாசைப் போலப் பயமுறுத்தும்படியான பயங்கரமான காரியங்களைப் புரிவதற்கஞ்சாதவராயிருப்பார். அத்தன்மையான தினத்தில் முசல் மான்களை யல்லோலகல்லோலப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தவண்ணம் அந்தப்பண்டிகைதினம் இருட்டாவதற்கு முன்னரே இரண்டு இராஜ புத்திர வீரர்கள் தோடா நாட்டுக் கோட்டைக்குள் பிரவேசித்தனர். இவர்களை இன்னொரு இராஜபுத்திர குதிரைவீரன் பின் தொடர்ந்து புக்கனன். முதற் சென்ற இரண்டு வீரர்களும் யாரெனின், ப்ரிதிராயும் தாராபாயும். இவர்கள் பின் சென்றவன் ஸெனிகார் (Senegar) என்னும் நாட்டுக் கதிபதியாவன். இருநூறு

குதிரை வீரர்களும் இவனுடையவர்களே. ப்ரிதிராய் இவ்வதிபதியின் அன்னியோன்னிய சிநேகன். இவர்கள் தம்முள் உடற்பேதமே யொழிய உயிர்ப்பேத மில்லாதிருந்தனர். இவர்களுக்குள் சேர்ந்திருந்த நட்பானது புணர்ச்சியும் பழகுதலும் ஆகிய இக்காரணங்களாலுண்டாயதன்று. இருவருக்கு மொத்த அறிவுதான் இவர்களுடைய் நட்புக்கு முக்கிய காரணமாயிருந்தது. இவ்வதிபதி ப்ரிதிராயை நல் வழியிற் செலுத்தி ஊழினால் வந்த துன்பத்தை உடனிருந் தனுபவித்தவனாகலின், இவனது சிநேகத் தன்மையை இங்கு தக்கவாறு எடுத்துரைக்க இயலுமோ.

“உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு” என்று தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் ப்ரிதிராயுக்கு நேர்ந்த கஷ்டத்தை விலக்கத் தன்வசமிருந்த 200-குதிரைச் சேவகர்களை கொண்டு வந்து அவர்களுக்குத் தகுந்த கட்டளைகளை யிட்டு விட்டுத் தானும் கோட்டைக்குள் பிரவேசித்தான். இவன் நட்பன்றோ நட்பாகும். ஸெனிகார் நாட்டதிபதி கட்டளை யிட்ட வண்ணம், இருநூறு குதிரை வீரர்களும் தோடா நாட்டுக் கோட்டையை நோக்கி மெல்லச்செல்லலுற்றனர். கோட்டையைச்சுற்றி மலைகள் செறிந்திருந்தமையின், குதிரை வீரர்கள் வந்து கொண்டிருந்தது முசல் மான்களுக்குத் தெரியாமற் போயிற்று. இவ்வாறவர்கள் யாதொரு தடங்கலுமின்றிக் கோட்டைவாயிலை அணுகியதும் சித்திரப்பாவை யொத்து அசைவற நின்றுகொண்டு கோட்டைக்குட்சென்ற தங்கள் தளகர்த்தர்களின் உத்தரவுக் கெதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இது இப்படியிருக்கக் கோட்டைக்குள் புகுந்த அம்மூன்று வீரர்களும் தங்களுக் கெதிர்ப்பட்ட முகலாயர்கள் எல்லாரையும் கண்டதுண்ட மாக்கியதால் அங்கிருந்த ஜனங்கள் மனக்கலக்கமடைந்து எல்லாப் பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். முசல்மான் வீரர்களும் நிராயுத பாணிகளாய் உடுத்த உடையோடு நாலுதிக்கிலும் இருந்தோடினர். இவ்வாறு கோட்டை முழுதும் கூக்குரலும் குழப்பமும் உண்டாயின. அபாயக் குறியைத் தெரிவிக்கும் பேரிகையை அடித்தனர். கோட்டைக் கதவு மூடப்பட்டது.

இவையெல்லாம் இப்படி நேரிடுமென்று ப்ரிதிராய் எதிர் பாராததன்று. போர்வீரர்களைத் தன்னுடன் இட்டுக்கொண்டு போ



யிருந்தால் இவ்விதக் குழப்பமும் கலக்கமும் உண்டாக்க முடியாவென்று ப்ரிதிராய் நன்றாய்த் தெரிந்தே தனது சைனியத்தை வெளியே நிற்கும்படி கட்டளையிட்டான். இங்ஙனமின்றிப் போர்வீரர்களைத் தன்னுடன் கொண்டு போயிருந்தால் குதிரைகளின் காலடிகள் சப்தத்தால் முசல்மான்கள் உஷாராகிக் கோட்டைக்கதவை உடனே மூடிவிட்டு எல்லாவித எறிபடைகளையும் யாதொரு இரக்ஷணையும் களைப்புமின்றி நிற்கும் இராஜ புத்திர வீரர்களின் மேல் பிரயோகித்து அழிப்பதற்குச் சுலபமாயிருக்கும். இதுகாரணத்தைப் பற்றிதான், அம்மூன்று வீரர்களும் கோட்டைக்குள் படையையுடன் செல்லவில்லை. கோட்டைக் கதவு மூடப்பட்டதும் வெளியேயிருந்த குதிரை வீரர்கள் கோட்டையை தாக்கினர். எல்லா ஜனங்களுடைய கவனமும் கோட்டையைத் தாக்கின்ற குதிரைப் போர்வீரர்கள் மேல் போனது. இதுதான் நல்ல சமயமென்று ப்ரிதிராய் கோட்டைக் கதவைத் திறந்துவிட்டான். உடனே தனது குதிரைப் போர்வீரர்கள் சரேலென்று கோட்டைக்குள் புக்கனர். இராஜ புத்திரர்களின் ஆலோசனை முற்றிலும் கைகூடி வந்துவிட்டது. கோட்டைக்குள் நுழைந்த இராஜபுத்திர போர்வீரர்கள், பிரமித்துக்கலக்க முற்றிருந்த முசல்மான்களை வதை செய்ய ஆரம்பித்தனர். மகம்மதியப் போர்வீரர்கள் ஒன்று சேர முயன்றனர். அவர்கள் பிரயத்தினம் வீணாய்ப் போய்விட்டது; இராஜ புத்திரர்களுடைய வாளுக்கு இரையாகி உதிர் சாகுபோல் கீழே விழுந்து மாண்டனர். தாராபாயும் ப்ரிதிராயின் பக்கலிலேயிருந்து தனது தேசப்பகைபாளிக ளனேகரையும் தனது குடிசனங்களை ஹிம்சித்த துராத்மாக்களான முசல்மான்க ளனேகரையும் தன் கையினாலே கொன்றனள். மாலைப்பொழுது நெருங்குவதற்குமுன் இராஜபுத்திரர்கள் ஜயம் முற்றுப்பெற்றது. முக்காலே மூன்றுவீச முசல்மான்கள் யமபுரம் அனுப்பட்டனர். மிகுந்த சிற்சிலர் நாலாப் பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். இவ்வாறு ஓடத்தலைப்பட்டவர்களையும் இராஜபுத்திர வீரர்கள் பின் தொடர்ந்து சென்றதைக் கண்ணுற்ற தாராபாய் அவர்களைத் தடுத்து “இப்படி பயந்தோடும் மகம்மதியர் பிழைத்துப் போகட்டும். தோடா நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்பது நமது யெண்ணமே யொழிய அவர்களைக் கொலை செய்ய வேண்டுமென்பதல்ல” என்று காருணியத்துடன் புகன்றனள். இவ்வாறு தோடா நாடு மறுபடியும் இராஜபுத்திரர் வசமாயது. குண

சிலனான சூர்தான் அபீஷ்டம் நிறைவேறிற்று. நற்குண நற்செய்கையையுடைய ப்ரிதிராயுக்கும், பதிவிரதா சிரோமணியாகிய தாராபாயுக்கும் அதிக குதூகலத்துடனும், ஆடம்பரத்துடனும் பாணிக் கிரஹண மஹோற்சவம் நடந்தேறிய தென்று கூறவும் வேண்டுமோ—சூர்கான் தன் நாடாகிய தோடா நாட்டுக்கு மீண்டும் சென்று சிலநாள் கழித்து அந்நாட்டின் அரசாட்சியை ப்ரிதிராயினிடத்தும் தாராபாயினிடத்தும் ஒப்புவித்து விட்டு மறுபடியும் பினாபூருக்குச் (Pinapore) சென்று வானப் பிரஸ்தாஸ்ரமத்தை அவலம்பித்துத் தனது வாழ்நாளைக் கழிப்பானாயினன்.

(இன்னும் வரும்)

P. மாணிக்கசாமி முதலியார் பி., ஏ.

இரங்கூன்.

All rlghts reserved

## கதாவிநோதமாலை.

(முன் தொடர்ச்சி)

இஃது இவ்வாறிருக்க வனத்தில் என்ன நடந்த தென்பதைக் கவனிப்போம். வனத்திலுட்கார்ந்த சகோதர சகோதரிகள் இருவரும் வெகு நேரம் வரையில் தகப்பனார் வழியைப் பார்த்துக் கொண்டிருந்து, அவர் வராததால், ஏதோ கேடு நேரிட்டதென்று அழத் தொடங்கினர். அப்பொழுது அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த வியாபாரிகளின் தலைவனான சூடாதரன் என்னும் வாணிபன், அங்குழந்தைகள் அருகே வந்து "இங்கே ஏன் நீங்கள் ஒன்றியா யிருக்கிறீர்கள்" என்று கேட்டான்; குழந்தைகள் நடந்ததை யெல்லாம் சொல்ல, வாணிபன் கருணை கூர்ந்து அண்ணன் தங்கை இருவரையும் தன்னூரில் தன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அச்சிறுவனைத் தன்மகனைப்போல் வளர்த்துவந்தான். பூபாலன் அவ்வைசியன் வீட்டிலிருந்து கொண்டு இளவயதிலேயே அக்கினியில் ஹோமம் செய்தல் முதலிய அக்கினி காரியங்கள் செய்யத்தொடங்கினான். ஒருநாள் தேவபுரத்து அரசனாகிய தேவதர்மன் என்பவனுடைய மந்திரி, அரசன் காரியமாக அவ்வழியாய்ப் போகையில் அவ்வியாபாரி வீட்டுக்கு வந்தான். அம்மந்திரி உயர் குலத்து உதித்த பிராமணன், அவனுக்கு ஆதிசேஷன் என்று பெயர். அவன் இந்த



வியாபாரிக்கு வேண்டியவன். ஆதலால் யானை, குதிரை, காலாட் படையோடு, இவ்வியாபாரி வீட்டில் இறங்கினான். அங்குப் பூரண தேஜஸோடு கூடியவனும், ஜபத்திலும் வைசுவ தேவத்திலும் ஆழ்ந்தமனதை யுடையவனுமான பூபாலனைப் பார்த்து, "நீயார்" என்று வினவி, அவ்வண்ணன் தங்கை யிருவரும் தன்னினத்தைச்சேர்ந்தவர்களென்று அறிந்து, தனக்குக் குழந்தைகள் இல்லாமையால் அச்சிறுவன் சிறுமி இருவரையும் அவ்வர்த்தகனிடம் கேட்டுத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டுபோய், கல்வி கேள்விகளாலும் செல்வத்தாலும் விளங்கும் தன் மாளிகையில் பூபாலனைத் தனது புத்திரனாக வைத்து வளர்க்கத் தொடங்கினான்.

கானவர்களால் சிறை பிடிக்கப்பட்டு விடுதலை பெறுமாறு கதிரவனை வணங்கிக் கொண்டிருந்த பங்கஜலோசனன் கதியென்ன ஆயிற்றென்று பார்ப்போம். அவன் சிறையிலிடப் பட்டுச் சில நாட் சென்றபின் கேஸரி தம்ஷ்டிரன் பங்கயலோசனனிடம் சென்று "ஓ இருபிறப்பளா! சூரியதேவன் என் கனவில் வந்து பிராமணனைக் கொல்லாதே; அவனுக்கு வேண்டிய உபசாரஞ் செய் என்று கட்டளை யிட்டிருக்கிறார். ஆகையால் எழுந்திருந்து உமக்கு இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்" என்று சொல்லி அவனைச் சிறையிலிருந்து விடுவித்து, அவனுக்கு மரியாதை செய்து, முத்து, கஸ்தூரி இவைகளைக் கொடுத்து, முன் அவ்வந்தணன் அகப்பட்ட காட்டில் கொண்டுபோய் விடும்படி இரண்டு பில்லர்களை அனுப்பினான். இவ்வாறு சங்கடத்திலிருந்து விடுதலை பெற்ற பங்கஜலோசனன் அவ்வனத்தில் தன் பிள்ளைகளைத்தேடத் தொடங்கினான். எங்குத் தேடியும் அவர்கள் அடையாளம் கிடையாமையால் இன்னும் அதிகமாய் அலையத் தொடங்கினான். அலைந்து அலைந்து அவ்வந்தணன் கடற்கரையிலுள்ள கமலபுரம் என்னும் நகரத்தை அடைந்தான். அந்நகரில் ஒரு பிராமணன் வீட்டில் அதிதியாக இறங்கிப் போஜனமான பின் பேசிக்கொண்டிருக்கையில் பங்கஜலோசனன் தன் கதையைக் கூறினான். அப்பொழுது அவ்வீட்டு எஜமானன் "ஐயா? சிலநாளுக்கு முன் இந்த ஊரில் சூடாதரன் என்னும் ஒரு வியாபாரி வந்திருந்தான். அவன் தனக்குக் காட்டில்கிடைத்தனவென்று ஒருபிராமணச் சிறுவனையும், அவன் தங்கையையும் அழைத்துக்கொண்டு வந்திருந்

தான். அவர்கள் மிகவும் அழகாயிருந்தார்கள். அவன் இவ்
விடமிருந்து நாரிகேள தீவுக்குச் சென்றான். அச்சிறுவன் பெ
யர் என்னிடம் சொல்லவில்லை என்றான். அதைக் கேட்டு அவன்
அவ்விருவரும் தனது குழந்தைகள் தாமென்று நிச்சயித்து, அவ்
விரவைக் காலபுரத்திலேயே போக்கி மறுநாட் காலையில் நாரி
கேள தீவிக்குச் செல்பவனாகி விஷ்ணுவர்மா என்னும் அவ்வியா
பாரியைத் தேடிப் பிடித்து, அவனைச் சிநேகஞ்செய்து புத்திர
வாஞ்சையால் அவனுடன் கப்பலேறி நாரிகேள தீவுக்குச் செ
ன்று அங்கே யிருக்கும் வாணிபர்களைச் சூடாதரன் இங்கே வந்
திருக்கிறானா?" என்று விசாரிக்க, அதற்கு அவர்கள் "அவன்
இங்கே வந்திருந்த துண்டு; அவனுக்கு இரண்டு சிறுவர் அகப்பட்
டிருக்கிறார்கள்; ஆனால் இப்பொழுது அவன் அவ்விருவரையும்
அழைத்துக்கொண்டு கடாகத் தீவுக்குப் போயிருக்கிறான்" என்
றார்கள். அதைக்கேட்ட அந்தணன் கடாகத்தீவிற்குச் செல்வோ
னாகிய கிருஷ்ண வர்மாவிடம் சிநேகஞ் செய்துகொண்டு அவனு
டன் கப்பலேறிக் கடாகத்தீவிற்குச் சென்றான். அவ்விடம் விசா
ரித்த பொழுது அவன் கர்ப்பூரத்தீவிற்குச் சென்றிருக்கின்றா
னென்று தெரிந்தது. இப்படி அதிலிருந்து ஸ்வர்ணத் தீவுக்கும்
அதிலிருந்துசிங்களத் தீவிற்கும் அவ்விடமிருந்து அவனது இருப்
பிடமாகிய சித்திரகூடம் சென்று விட்டானென்று கேள்விப்பட்டு
அவ்விடமிருந்து அமுர்த சுரபியென்னும் தன் சொந்தக் கப்பலில்
சித்திரகூடத்திற்குச் செல்லும் கோடீஸ்வரன் என்னும் வர்த்தக
னோடு சித்திரகூடம்சென்றான். குழந்தைகளைத் தேடிப் பிடிப்பதில்
பிடிவாதத்தோடுகூடிய அப்பிராமணன் அவ்வூரில்போய்ச்சேர்ந்து
சூடாதரனிடம் சகல விருத்தாந்தத்தையும் சொல்லச் சூடாதரன்,
அவ்வந்தணன் வார்த்தையைக் கேட்டுப் பிராமணனது துக்கத்தை
யறிந்து, தனக்குக் கிடைத்த சிறுவர் இருவருக்குப் பதிலாக
வேறு இரு சிறுவரைக் காட்டினான். ஆனால் அந்தணன் ஆசை
க்கு அஸ்தமனம் ஏற்பட்டு விட்டது. பங்கஜலோசனன் அவ்விரு
பாலர்களையும் பார்க்கும்பொழுது அவர்கள் அன்னியர் குழந்தை
கள் என்று தெரிந்தது. இதைப்பார்த்துப் பிராமணன் சோக
மேலிட்டு "ஐயோ! தெய்வமே! என் விதியே! நான் அலையாத
இடமெல்லாம் அலைந்தேனே! மிகுந்த கஷ்டத்தைப் பொறுத்
தேனே! பலிதாகத்தைப் பார்க்கவில்லையே! எனக்கு எனது மக
னும் அகப்படவில்லையே! மகளும் அகப்படவில்லையே! ஐயோக்



கியனான அரசன் முன்பு ஆசைகாட்டிப் பின்பு அதை ஈடேற்றா
மல் விட்டுவிடுவது போல என்பிராப்தமானது, எனக்கு ஆசை
காட்டி என்னை மோசஞ் செய்து விட்டது. போக்கிரியான ஒரு
பிரபு வீணாக ஒரு மனிதனை இங்குமங்கும் அலைக்கழிப்பது
போல என் துரதிருஷ்டமானது என்னை இங்குமங்கும் இழுத்
தடித்து என்னை வெகுதூரம் அலையவைத்து விட்டது" என்றான்.

இவ்வாறு பிராமணன் துயரப்படுவதைப் பார்த்துத் தனவா
னாகிய சூடாதரன் சமாதானம் சொன்னான். அதைக்கேட்டுப் பங்
கஜலோசனன் வியாபாரியைப் பார்த்து "வியாபாரியே! நான்
என்னசெய்வேன்! புத்திரனைக் காணாமல் எனது மனம் எங்கும்
செல்லவில்லையே! என் மனதில் குழந்தை எங்கேபோனானோ
என்று அநேகவிதமான எண்ணங்கள் உண்டாகின்றன. இப்படி
நான் எப்பொழுதும் விசாரப் பட்டுக்கொண்டிருக்கிறேன். என
க்கு எப்படித் தைரியமுண்டாகப் போகிறது? ஆனால் அதிருஷ்
டத்தின் மஹிமை அதிசயகரமானது என்பது எனக்குத் தெரி
யும். நான்ஒரு வருஷமாக இப்பூமண்டலத்தில் அலைந்து திரி
ந்து குழந்தைகளைத் தேடுகிறேன். அவர்கள் எனக்குக் கிடைக்
காவிட்டால் நான் கங்காநதி தீரத்தில் தவம் செய்து பிராணனை
விட்டு விடுகிறேன்" என்று சொன்னான். இப்படிச் சொல்லவே
அங்கே உட்கார்ந்திருந்த ஒரு ஞானி "ஓ அந்தணரே! நீர் நாரா
யணி தேவியின் அருளால் உமதுமக்களை மீண்டும் காணப்போகி
றீர்" என்றார். இதைக் கேட்டதும் பங்கஜ லோசனனுக்குச்
சூரியனுடைய அநுக்கிரகம் நினைவுக்கு வந்தது; திரும்ப மனதில்
ஆசை முளைக்கவே அவன்மனது சமாதானம் அடைந்தது. சூடா
தரன் அவனுக்கு அதிதிஉபசாரம் செய்ய அதை ஏற்றுக்கொண்டு
அந்தணன் அவ்வூரைக் கடந்து அப்புறம் போனான்.

அப்பால் பங்கஜலோசனன், கிராமங்கள், பட்டணங்கள்,
தேசங்கள் இவைகளில் தன் மக்களைத் தேடிக்கொண்டு திரிந்து
ஒருநாள் சாயங்காலத்தில், கதிரவன் மேற்றிசையில் மறையும்
பொழுது, விருக்ஷங்கள் ஓங்கி அடர்ந்து வளர்ந்து நிறைந்திருக்
கும் ஒரு வனத்தை அடைந்து அவ்வனத்திலேயே இரவில் வா
ஸஞ் செய்வதாகக் கனிகளைப் புசித்து, நீருந்தி, சிங்க முதலிய
கொடிய விலங்குகளுக்கஞ்சி ஒரு மரத்தின் மேலேறி உட்கார்ந்
தான். இரவில் அவனுக்கு தூக்கம் வரவில்லை ஆதலின், விழித்

துக்கொண்டே யிருந்தான். பாதிராத்திரியில் அவன் உட்கார்ந்
திருந்த மரத்தின் கீழே தேவிகள் அநேகர் கூடினார்கள். இத்
தேவிக் கூட்டத்தில் நாராயணி முக்கிய தேவியாயிருந்தாள். அத்
தேவிகள் தங்கள் தங்களுக்கு ஏற்றவைகளாய்க் கிடைத்த கா
ணிக்கைகளை ஒன்றாய்ச் சேர்த்துத் தேவநாதனாகிய பைரவன்
வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்
கெல்லாம் பைரவநாதன் வந்து சேர்ந்தார். தேவிகள் யாவரும்
பைரவரைப் பூஜித்துத் தங்களுக்குக் கிடைத்த காணிக்கைகளை
அர்ப்பணம் செய்து உபசரித்தனர். பின் பைரவநாதர் சிறிது
நேரம் நர்த்தனம் செய்து உல்லாசமாய் இருக்கத் தொடங்கினார்.
இவற்றை யெல்லாம் மரத்தின் மேலிருந்த பங்கஜலோசனன்
பார்த்துக்கொண்டிருந்தான். இப்படி இருக்கும்பொழுது நாரா
யணியின் தாதி பங்கஜ லோசனனைப் பார்த்தாள்; பார்த்தவுடன்
அவளுக்கு அவனிடம் மோகமுண்டாயிற்று. நாராயணி தேவி
இதையறிந்து அதை மனத்தில் மறைத்து வைத்துக்கொண்டு,
மரத்திலிருக்கும் பங்கஜலோசனனைக் கூப்பிட்டாள். அவன் இற
ங்கி நாராயணியிடம் வந்தான். நாராயணி இருவரையும் கூப்
பிட்டு "உங்கள் இருவருக்குள், ஒருவரிடத்தில் ஒருவருக்கு
ஆசை உண்டாயிருக்கிறதல்லவா" என்று கேட்க, அவ்விருவரும்
"தாயே ஒருவரிடத்தில் ஒருவருக்கு அநுராகம் உண்டாயிருக்
கிறதென்பது உண்மைதான்" என்றனர்.

அதைக்கேட்ட நாராயணி கோபந்தணிந்து நீங்கள் உண்மை
பேசியதால் நான் உங்களிடம் சந்தோஷ மடைகிறேன். ஆன
தால் உங்களைச் சபிக்கவில்லை என்று கூறிப் பங்கஜலோசனனை
நோக்கி உனக்கு இந்தத் தாசியைக் கொடுக்கிறேன். நீங்கள்
இருவரும் சுகமாயிருங்கள் என்றாள். அதனைக்கேட்டுப் பங்கஜ
லோசனன் தாஸியை நோக்கி:—

"இந்த வுடலுளம் ஐம்பொறி யின்னுயிர் யாவு மணுஞ்செய்
யும், அந்தநன் ஞானிமென்னி லவகட்கன்போ டளித்தனன்
யான் பொதுப், பைந்தொடியே யுனைச் சேர்ந்திடப்பாரி லெனக்
குடல் வேறில்லை, சிந்தை புலன்களும் வேறில்லை சீவனும் வேறில்லை
செல்லுவையே".

நான் பரஸ்திரீயை நினைக்காமல் என்மனதை அடக்க வேண்
டியதுதான் எனது கடமைகளில் முதன்மை பற்றியதாகும். நான்



161431

உன்னை ஸ்பரிசிக்க மாட்டேன் என்றான். இவ்வாறு அந்தணன்
கூறியதைக் கேட்டு நாராயணிதேவி உன்பேரில் சந்தோஷமுண்
டாயிருக்கிறது. உனக்குச் சீக்கிரம் உனது குழந்தைகள் அகப்
படுவார்கள். விஷ முதலியவைகளைப் பரிகாரஞ் செய்யும் நீலோற்
பல மலரை உனக்குக் கொடுக்கிறேன். இதை வாங்கிக் கொள்.
இது ஒருநாளும் வாடாது என்று சொல்லிப் பங்கஜலோசன
னுக்கு ஒரு கருநெய்தல் மலரைக் கொடுத்துத் தாசியுடன் மறை
ந்து விட்டனள். (இன்னும் வரும்)

M. M. Narayanasamy Iyer, Mudikandan.

## புனிதவதி.

(முன் தொடர்ச்சி)

காட்சி - 2.

இடம்:—காரைக்கால்-பரமதத்த செட்டியார் கிருகம்.

பரமதத்தர் அமுதுண்ணுகின்றார், புனிதவதியார் பரமசிவனைப்
பிரார்த்தித்து மாங்கனி பெறுகின்றார்.

பரமதத்தசெட்டியார்:—புனிதவதி! இன்றையதினம் சமைத்த
கறி வகைகள் மிகு சுவையுடையனவா யிருக்கின்றன; ஆயி
னும் அக்கறிவகைகளை யுண்ண வென்மனம் விரும்பவில்லை.
தஞ்சையம்பதியி லிருந்துவந்தவ ரிருவர் தந்த மாங்கனி
களைக் கொடுத்துத் தம்பி முனியனை யனுப்பினேனே? அந்
தப் பழங்க ளெங்கே?

புனிதவதியார்:—மோர்ச்சாத முண்ணும்போது வைக்கலா மென்
றிருக்கின்றேன்; மாம்பழத்தை மோர்ச்சாத மன்றோ விரும்
பும்?

பர:—ஆம்; ஆம். அம்மாம்பழங்கள் மிகு மணமுடையனவல்லவா?

புனி:—தொட்டகையும் மணக்கும் சொரூப முடையனவா யிருக்
கின்றன.

பர:—தஞ்சையம்பதியிலிருந்து வந்தவர்கள்பெரிய வியாபாரிகள்;
பகல் பதினைந்து நாழிகை யளவும் நமது பட்டு மளிகையி
லிருந்து சாக்குகள் வாங்கினார்கள்; பொழுதேறி விட்டமை
யால், எனக் கிளைப்பேறி விட்டது; மோர் கொண்டுவா!
பழத்தை யெடுத்து வை.

புனி:—(மோர் வார்த்துப் பழமொன்றை வைத்து) இளைப்பு நீங்க மெதுவாய்ச் சாப்பிடுங்கள்.

[விசிறி கொண்டு வீசுகின்றார்.]

பர:—(மாங்கனியைச் சப்பிச் சப்பியுண்டு) புனிதவதி! இப்பழம் மிகு மதுரமா யிருக்கின்றது. பாலுக்குறவு வாழைப்பழமே; மோருக்குறவு மாம்பழமே. என் தந்தை நாகை-நிதிபதி செட்டியார்க்கு வகை வகையான மாம்பழங்களை வர்த்தகர்கள் கொண்டுவந்து கொடுப்பதுண்டு. அதனால் யான் பல வகையான மாங்கனிகளை யுண்டிருக்கின்றேன். அவற்றுள் எதுவும் இப்பழத்திற் கிணையாகாது. (பின் கொட்டையைச் சப்பிச் சப்பியுண்டு) அந்தப் பழத்தையுங் கொண்டுவந்துவை.

புனி:—(அந்தப் பழத்தைக் கொண்டு வருவார்போலச் சமையலறையுள்ளே சென்று கையைநெரித்துக்கொண்டு) என் செய்வேன் ஈசா! மற்றொரு பழத்தைக் கேட்பாரென்று யான் மறந்தும் நினைக்கவில்லை. உண்ணும்போது இது கொண்டுவந்துவையென் றவர் ஒரு நாளும் சொன்னதில்லையே! அவர் கேளாவாறன்றோ கறி யமுதுகளைக் குறிப்பறிந்து படைத்து வந்தோம். இன்று கேட்டும் பழமில்லை யென்று கூறுவது தகுதியாகாதே! திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளே! மங்கையை யோர் பங்கிலுடைய மாதேவனே! அன்பர்க்கு விபத்தை யரைக்கணமும் பொறுக்கா தொழிக்கும் அப்பனே! ஒப்பலாமணியே! மாசிலாமணியே! வேதநாயக! வேதியர்நாயக! ஆதிநாயக! அமரர்கள் நாயக! அம்பலத்தாடும் குஞ்சிதபாத, அரகர, அரகர, மகாதேவ மகாதேவ, சிவசிவ, சிவசிவ (என்று தியானஞ்செய்து சிவ பெருமானிடத்துமாங்கனிபெறுவார்போலக் கையைநீட்டி) (வெளிப்படையாய்) தில்லையுட் கூத்தனே! தந்தருள்வாய்; சிதம்பர தேவனே! தந்தருள்வாய்.

(என்று கூறி மெய்ம் மறந்தவராயினர்.)

பர:—புனிதவதி! சென்று வெகு நேரமாயிற்றே! என்ன செய்கின்றாய்?

புனி:—(அச்சொற்கள்செவிப்பட்டவுடன் தெளிவடைந்து,நீட்டிய கரத்தில் ஒரு நறு மாங்கனி யிருக்கக்கண்டு) இஃதென்ன



வியப்பு? இப்பழம் அப்பழத்திலும் மணமுடையதா யிருக்கின்றதே! இப்பழங் கொண்டுவந்து தந்தவர் யார்? இங்கொருவரும் வருவது முடியாதே! யார் கொண்டுவந்து கொடுத்திருத்தல் வேண்டும்? மடந்தைபாக மகிழ்ந்த மணாளனார் தாம் கொடுத்திருத்தல் வேண்டும்; எல்லாம் சிவன் செயலேயாம் (என்று சிவனருளை வியந்து வெளியே வந்து) இப்பழத்தை யரிந்து போடவேண்டுமோ? அப்படியே போட வேண்டுமோ?

பர:—நாவில் நீரூறுகின்றது; அரிந்தேன் போடவேண்டும்; அப்படியே போடு.

புனி:—இப்பழத்தைச் சாவதானமாகச் சாப்பிடுங்கள்; இளைப்பனைத்தும் நீங்கி விடும்.

பர:—புனிதவதி! இப்பழம் உன்னைப் போலப் புனிதமுடையதாக விருக்கின்றது; இப்பழத்தை யுண்ண வுண்ண வென் சித்தம் சீதளநீரில் வைக்குங் கரம்போலாகின்றது. இதன் மணமும் நிறமும் சுவையும் வேறு; அதன் மணமும் நிறமும் சுவையும் வேறு. இது யானனுப்பிய பழமன்று. இது மூவுலகத்திலும் பெறுதற் கரியதாம். அந்தப் பழம் எப்படி போயிற்று? இந்தப் பழம் எப்படி வந்தது.?

புனி:—(ஒன்றுந் தோன்றாது சிறிதுபோது நின்று பின் பொருவாறு தெளிந்து) என்ன செய்வேன் ஈசா! உன தருட்டிறத்தை யெவ்வாறுரைப்பேன்? கற்புடைய மங்கையர் தங் கணவர்க்குப் பொய்யுரை புகலலாகாதன்றோ!

(உடல் நடுங்குகின்றார்.)

பர:—புனித்வதி! ஏன் நடுங்குகின்றாய்? அஞ்ச வேண்டாய்; கனி வந்த வகையைச் சொல்லு!

புனி:—(நடந்தவாறு கூறுவதே நமக்கறமா மெனத்தேறி) நாதா! இப்பழம் ஈசனருளால் கிடைத்தது; அப்பழத்தை யமுதுண்ண வந்த ஓரருந்தவர்க் களித்து விட்டனன்.

பர:—நன்றா யிருக்கின்றது! நன்றா யிருக்கின்றது! ஈசனருள் கிடைப்பது எளிதோ? ஈசனருள் கிடைப்ப தெளிதாயின், இங்குள்ளார் யாவரும் முத்தி யுலகத்தன்றோ. விருப்பர். பொய் பேச இன்றுதான் கற்றுக் கொண்டனை போலும்!

பொய் பேசாதவளாயின், இன்னொரு கனியை வரவழைத்துக் கொடு; பார்ப்போம்.

புனி:—(சமையலறையுள்ளே சென்று) எல்லாம் வல்ல இறைவனே! இன்றென்மீது கருணை செய்யவேண்டும். பேதைப் பெண்ணென்று கைவிடாது காத்தருள வேண்டும் கண்ணுதலே! பணி பணி பணிந்த பரமனே! நீ மாங்கனி யருளாதொழியின், என்னுரை பொய்யாம்; என்னுரை பொய்யாமாயின், இனி யுயிர் வாழேன். என்மீதருள் புரிவாய் மகாதேவா! மாகாதேவா!

(கையை நீட்டுகின்றாள்.)

ஆ! என்ன ஆச்சரியம்! இப்பழம் அப்பழத்தினும் அருமையாகத் தோன்றுகின்றது; கடவுளை நம்பினோர் கைவிடப்படாரென்பது பொய்யாமோ? (வெளியே வந்து) இப்பழமும் ஈசனருளால் கிடைத்தது; ஏற்றுக்கொள்ளுங்கள்.

பர:—ஏற்றுக்கொண்டு என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! இப்பழத்திற்கு எப்பழமும் ஒப்பாகாது. (பழம் மறைந்துவிட்டது) இஃதென்ன ஜாலவித்தை; கையிலிருந்த பழம் காணமற் போயிற்றே! புனிதவதி! ஈசன் செயலையளவிட்டறிவது எப்படியாம்? இன்று சீக்கிரம் மளிக்கைகுப் போகவேண்டும்.

புனி:—சற்றிருந்து தாம்பூலந் தரித்துக்கொண்டு போங்கள்.

பர:—அப்படியே.

(பரமதத்தன் சுத்தி செய்துகொண்டு சற்றிருந்து, தாம்பூலந் தரித்துக்கொண்டு மளிகைக்குச் செல்கின்றான்.)

காட்சி - 3.

இடம்:—கொற்கையப்பதி-பரமதத்த செட்டியார் - கிருகம்.

பரமதத்த செட்டியார் தமது இரண்டாவது மனைவி மணிமாலையுடன் தம் புத்திரிக்கு நாம காரணஞ் செய்ய ஆலோசிக்கின்றார்; வேலைக்காரன் சுப்பன் நடுவே வந்து வேடிக்கை செய்கின்றான்.

பரமதத்த செட்டியார்:—ஆ! தெய்வமே? விதி வலியை வெல்பவர் யார்? புனிதவதிக்கும் நமக்கு மிருந்த தொடர்பு கனப்



போல மறைந்து விட்டதே! புனிதவதியை மகளிருள் ஒருவராக நினைத்து அபராதம் பல செய்து விட்டோம். அவர் தெய்வ வடிவினரென்பது, மாங்கனியைப் பெற்றதனாலன்றோ தெரிந்தது? அதனாலன்றோ நாம் "திரை கடலோடியுந் திரவியந்தேடு" என்பதை வியாஜ்ஜியமாகக் கொண்டு மரக்கலமேறிச் சீனஞ்சென்று, இரத்தினவியாபாரஞ்செய்து பெரும்பொருள் தேடி, கொற்கையம்பதி வந்து சேர்ந்து, மணிமாலையை விவாகஞ் செய்து கொண்டோம். புனிதவதி யாரருளால் நமக்கொரு பெண் பிறந்தது! அப்பெண்ணுக்கு என்ன பேரிடலாம்? (சிறிது தலை நிமிர்ந்தாலோசித்து) யாருடைய பெயரை யிடுவது? புனிதவதியாரின் பெயரைத்தானிடவேண்டும். (வெளிப்படையாக) மணிமாலை! நம் பெறலரும் புத்திரிக்கு என்ன பெயரிடலாம்?

மணிமாலை:—உங்களிஷ்டம் போலப் பெயரிடலாம்; ஆனால் என்னப்பாவோடு ஒரு வார்த்தை கேட்பது நல்லதென்று நினைக்கின்றேன்.

பர:—அப்படியா? (தனக்குள்ளே) புனிதவதியின் குணம் இவளோடு பேசும்போதெல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றது? புனிதவதி நமது வார்த்தைக்கு மாறு சொன்னதில்லையே! புனிதவதி தெய்வமல்லவா? தெய்வத்தோடு இவளையொப்பிட்டுச் சொல்வதெப்படி? அத்தெய்வத்தின் குணத்தை நோக்க இவள் குணம் உரையிட்டுப் பார்க்கவும் ஒவ்வாதன்றோ? (வெளிப்படையாய்) மணிமாலை! உன்னப்பாவைக் கேட்டுவந்து சொல்.

மணி:—அப்படியே கேட்டு வந்து சொல்லுகின்றேன்.

(போகிறாள்.)

பர:—(தனக்குள்ளே) பரதேவதை! புனிதவதி! நீ என் குலதெய்வமன்றோ! என் குழந்தைக்கு உன் பெயரையிட நிச்சயித்திருக்கின்றேன். அக்குழந்தையையும் எங்களையும் நீ பக்கத்துணையாக விருந்து பாதுகாக்க வேண்டும். (வெளிப்படையாய்) மணிமாலை பக்கத்து வீட்டுக்குப் புழைக்கடை வழியாய்ப் போய் வருதற்கு இவ்வளவு நேரம் வேண்டியதில்லையே! ஏதோ ஒன்று அங்கு நடக்க வேண்டும்?

(மணிமாலை வருகின்றாள்.)

மணிமாலை! என்ன சொன்னாருன்னப்பா?

மணி:—அவர் தமது பெயரைக் குழந்தைக்கு வைத்து மாணிக்கமென்று கூப்பிட வேண்டுமென்று சொல்லுகின்றார்; உங்கள் மாமியார் தமது பெயரைக் குழந்தைகளுக்கு வைத்துப் பச்சையென்று கூப்பிட வேண்டுமென்று சொல்லுகின்றார்; நானோ முத்து என்று பெயர் வைத்தால் அழகாயிருக்குமென்று நினைக்கின்றேன். முத்து! ஒரு முத்தங் கொடு என்று கேட்பது எவ்வளவு அழகாயிருக்கும் பாருங்கள்?

சுப்பன்:—எத்தனை பேரடப்பா! மாணிக்கமாம்! பச்சையாம்! முத்தாம்! என்ன அம்மா தடபுடலாகச் சொல்கிறாய்.

மணி:—சுப்பா! ஏன் குறும்பு செய்கிறாய்? என் கண்ணுக்கு என்ன பேர்தானிடுதல் கூடாது? அது கட்டிக் கரும்பல்லவா?

சுப்:—என்றைக்கிருந்தாலும் அது ஒரு வீட்டுக்குப் போகிறதுதானே; கட்டிக்கொண்டவன் அடே! முத்து என்றல்லவா கூப்பிடுவான்? என்னமோ பேசுகிறாய்! போ! போ!

மணி:—(தனக்குள்ளே) சுப்பனுக்கு வயதோ எழுபதுக்குமேலாய் விட்டது? குறும்போ கோபுரம்போலக் குறையாதிருக்கின்றது? (வெளிப்படையாக) சுப்பா! எனக்கொன்றுந் தோன்றவில்லை! செட்டியாரோடு ஆலோசித்து, ஒரு பெயர் சொல்லு!

சுப்:—என்னம்மா ஆலோசிக்கின்றது? ஊளை மூக்கி யென்று பெயர் வையுங்கள்.

மணி:—சீ! சீ! உன்னோடு பேசுவது எனக்குத் தகாது! என் கட்டிப் பொன்னுக்கு ஊளை மூக்கி யென்று பெயரிடுவது? நீ! மிகக் கெட்டவன்.

சுப்:—என்னம்மா கெட்டவன்! இப்பெண்ணின் மூக்கைச் சிந்திப் பாருங்கோ அது தெரியும்?

மணி:—இப்படி யெல்லாம் பேசாதே! ஒரு நல்ல பேரை நீயே சொல், பார்ப்போம்.

சுப்:—அந்தப் பெண்ணை யெனக்குக் கொடுப்பதாயிருந்தால், ரத்னாங்கி யென்று நான் பெயரிடுவேன்.



பர:—மணிமாலை! சுப்பனுக்குக் குறும்பு பேசுவது எப்போதும் வழக்கந்தானே? உங்கள் வீட்டில் அவனுக்குச் சர்வசுதந்தரமுமுண்டே! உனக்கவன் ஒரு முறையில் பாட்டனாகவும் வேண்டும். அவன் என்ன சொன்னாலும் சொல்லலாம்? பல பல பேசவேண்டாம். நானொரு பெயர் வைக்கத் தீர்க்கமாக ஆலோசித் திருக்கின்றேன். அந்தப் பெயர் மிகப் புனிதமானது.

மணி:—(ஆவலோடு) அந்தப் பெயரை வைத்தால், என் கண்ணு பூர்ணாயுசா இரும்பாளா?

பர:—பூர்ணாயுசா மாத்திர மிருப்பாள்? அநேகம் பிள்ளைகளையும் பெறுவாள்; தீர்க்க சுமங்கலியாகவுமிருப்பாள்; என் மாமி பச்சையம்மாள்போலப் பெருமையாகவும் வாழ்வாள்.

மணி:—அந்தப் பெயரைச் சொல்லுங்கள்.

பர:—புனிதவதி; அது எங்கள் குலதெய்வத்தின் பெயர். அந்தப் பெயர் மகா மகிமை யுடையது!

சுப்:—செட்டியாரே! இந்தப்பெயர் மிகுஅழகானதே! பல வருஷங்களுக்கு முன்னே நான் காரைக் காலுக்குப் போயிருந்தேன். அங்கு எனக்குப் பேருபகாரஞ் செய்த தனதத்த செட்டியார் தம் பெண்ணுக்குப் புனிதவதியாரென்று பெயரிட்டிருந்தார். இந்தப் பெண்ணும் அந்தப் பெண்போலவே யிருக்கிறது. இதற்குப் புனிதவதி யென்று பெயரிடுவது தகுதியானதே!

பர:—(ஒருவிதமாக மயிர்க்குச்செறிந்து) மணிமாலை! கேட்டாயா? நமது செல்வத்திற்குப் புனிதவதி யென்று பெயரிடுவது உனக்கிஷ்டந்தானா?

மணி:—பெயர் கேட்கக் கேட்கப் பிரியமாக விருக்கிறது. அந்தப் பெயரையே நம் கண்ணுக் கிடுவோம்.

(யாவரும் போகின்றார்கள்).

மூன்றாங் காட்சி முற்றிற்று.

முதலங்க முற்றிற்று.

## இரண்டாவது அங்கம்.

### காட்சி 1.

இடம்:—காரைக்கால்-பரமதத்த செட்டியார் கிருகம்.

*புனிதவதி குணவதியுடன் தமது கணவர் வரவுதாமதமாயிருப்பதற்குக் காரணம் யாதோவெனப் பேசிக்கொண்டிருக்கும்போது; குணபதி செட்டியார் முதலாயினோர் பிரவேசிக்கின்றனர்.*

புனிதவதி:—குணவதி! வர்த்தகத்தின் பொருட்டு மரக்கலமேறிச் சென்ற செட்டியார் வருஷம் மூன்றாயும் வாராதிருக்கின்றனர்; அவரங்ஙன மிருப்பதற்குக் காரணந் தெரியவில்லை; அவருடன் சென்ற வர்த்தகர்களுள் ஒருவரும் இங்கு வந்தாரில்லை. அவரைப்பற்றி யெனக்கொன்றுந் தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் நான் அவரைச் சொப்பனத்திற் கண்டு பேசி மருவி மகிழ்வடைகின்றேன். அவரெப்போதும் என் கண்ணுள்ளேயே யிருக்கின்றார். அவர் வரவால் யான் மகிழ்வடைவ தெப்போதோ?

† "அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்"

என்னும் குறள் என் விஷயத்தில் தவறுகின்றது. அடி! குணவதி! யான் படுந் துன்பத்தை நீ கவனியாதிருக்கின்றனையே!

குணவதி:—ஏன் அம்மா! அப்படி சொல்லவேண்டும், செட்டியார் வரவைப்பற்றி யான் விசாரியாதிருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் அதே கவலையாக விருக்கின்றேன்; குணபதி செட்டியார் கிருகத்திற்கு இன்று காலை சென்றபோது, நமது செட்டியார் பாண்டி நாட்டில் வந்திருக்கின்றாரென்று அங்கு வந்துள்ள சிலர் சந்தேகமாகப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன்; சரியாய்த் தெரிந்த பிறகு தங்களுக்குத் தெரிவிக்கலாமென்றிருக்கின்றேன் அம்மணீ!

---

† திருக்குறள் - காமத்துப்பால்; பிரிவாற்றாமை - 10-வது குறள்.



புனி:—(ஒருவாறு தியக்கமுற்றுத் தெளிந்து) நமது செட்டியார் பாண்டி நாட்டிலா வந்திருக்கின்றார்? என்ன ஆச்சரியம்? அவர் இம்முறை வங்கமேறப் பிரயாணமானபோது நம்முடன் அணுகிப்பேசிக் குலாவாமைக்கு யாதவதொரு காரண மிருத்தல்வேண்டும். காரணமின்றிக் காரியம் நிகழாதென்பது எங்கும் பொதுவிதி யன்றோ? (வெளிப்படையாய்) குணவதி! குணபதி செட்டியார் கிருகத்தில் நமது செட்டியார் விஷயமாக இன்னும் யாதாவது யாராவது பேசினரா? பயமுறாது சொல்.

குண:—அம்மணீ! அங்கு வந்திருந்த கணபதி செட்டியார் குணபதி செட்டியாரிடத்து நாகை நிதிபதி செட்டியார் மகன் பரமதத்தன் கொற்கைப்பதியில் மற்றொரு பெண் கொண்டு வாழ்ந்திருக்கின்றான்; ஒரு பெண் மகவும் பெற்றிருக்கின்றானென்று கூறினர். அதனைக் கேட்டவுடன் என் மனம் நிலத்திலூற்றிய பாதரசம்போலச் சஞ்சலமுடையதாய் விட்டது. அதனைத் தங்களுக்குத் தெரிவிப்பது எனக்கு மிக அருவருப்பாகத் தோன்றியது; அதனால் அவரைப் பற்றி யின்று ஒன்றுஞ் சொல்லாதிருந்தேன்.

புனி:—குணவதி! ஏனஞ்சுகின்றாய்? யான் விரும்புவது செட்டியாரது க்ஷேம மொன்றையே! அவர் விவாகஞ் செய்து கொண்டது விரும்பத் தக்கதேயாம். எனக்கு மண நடந்து பலவாண்டாயினவே! புத்திரப்பேறொன்று முண்டாகவில்லையே! யான் மாறு சொல்வேனென்று கருதி எனக்குத் தெரிவியாது விவாகஞ் செய்து கொண்டனர் போலும்! அவரைக் காண என் கண்கள் விரைகின்றன; நாம் அவரிருக்கு மூர்க்குப் போவதெப்போதோ? ஒவ்வொருநாளும் நமது செட்டியாரைப்பற்றி ஆர்வமாக விசாரித்து வந்து, ஏதாவதொன்று கூறும் நீ, இன்று அவர்மீது அருவருப்புக்கொண்டு பேசியது எனக்கு ஆச்சரியமாகவே யிருக்கின்றது. அவர்மீது கொண்ட அருவருப்பை யிப்போதே விட்டு விடு.

குண:—அறிவிலும் வயதிலும் சிறிய எனது தப்பிதத்தை அம்மணி! இப்போதே மறந்து விடும்படி கேட்கின்றேன்.

குணபதி செட்டியார் கணபதி செட்டியாருடன் இன்றிங்கு வந்தாலும் வருதல் கூடும். அஃது அவர்கள் பேசிய விஷயத்தால் தெரியலாயிற்று.

புனி:—அப்படியா? அவர்கள் வரவை யான் ஆவலோடெதிர் பார்க்கின்றேன். குணபதி செட்டியார் குரல் கேட்பது போலிருக்கின்றது. குணவதி! வெளியே சென்று பார்.

(வெளியே சென்று வந்து)

குண:—அம்மணி! குணபதி செட்டியார் முதலியவர்கள் நமது வீட்டிற் கருகே உரக்கப் பேசிக்கொண்டு வருகின்றார்கள்.

புனி:—சீக்கிரமாகப் பாயெடுத்துப் போடு; வந்து விட்டார்களா பார்?

குணபதி செட்டியார்:—என்ன கணபதி செட்டியாரே! அப்படியே பேசுகின்றீர்? அவனுக்கவ்வளவு தைரியமா? அவனை நான் சும்மா விடமாட்டேன்.

(பேசிக்கொண்டே உள்ளே வந்து விட்டார்கள்.)

புனி:—வாருங்கள் மாமா! வாருங்கள் அத்தான்! வாருங்கள் பெரியப்பா! வாருங்கள் தாத்தா!

குணபதி:—புனிதவதி! சமாச்சாரம் தெரியுமா? பரமதத்தன் பரமதுஷ்டனாய்விட்டான், அவன் கொழுப்பையடக்கி விடுகின்றேன்.

புனி:—தாத்தா! சமாசாரத்தைத் தெரிவித்தல் வேண்டும்.

குணபதி:—என்னம்மா சமாச்சாரம்? பரமதத்தன் கொற்கையம் பதியில் விவாகஞ் செய்துகொண் டிருக்கின்றானும்; ஒரு பெண்ணும் பெற்றிருக்கின்றானும். இன்றே உன்னைக்கொற் கையம்பதிக் கழைத்துக்கொண்டுபோகத் தீர்மானித்துக் கொண்டு வந்தோம். எங்கள் சொல்லுக்கு இரண்டு சொல்லாது வரவேண்டும். என்ன சொல்லுகின்றாய்?

புனி:—தாத்தா! நீங்களேன் அப்படி பேசுதல்வேண்டும்? நான் உங்களிஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன்.



குணபதி:—அப்படியானால் புனிதவதி! இப்போதே புறப்படு; தோழி! குணவதி! பிரயாணத்திற்கு வேண்டியவற்றைச் சீக்கிரமாகச் சேகரஞ் செய்; அடா! கணபதி! மூடுபல்லக்கைச் சீக்கிரங் கொண்டுவரச்செய்.

(யாவரும் கொற்கையம்பதிக்குச் செல்லுகின்றனர்).

முதற்காட்சி முற்றிற்று.

## காட்சி 2.

இடம்:—கொற்கையம்பதி-குமரப்பசெட்டியார் கிருகம்.

பரமதத்தன் மனைவி மணிமாலையுடனும் மகள் புனிதவதியுடனும் வந்து பிரவேசிக்கின்றான்.

பரமதத்தன்:—(என்ன செய்வது? எல்லாம் இறைவன் கட்டளைப் படியே நடக்கும். நம்மைக் காணவந்த புனிதவதியின் முகத்தைக் காண்பதெப்படி. நிரபராதியான புனிதவதியின் எதிரே அபராதியான யான் செல்வது எப்படி? புனிதவதி பெய்யென்றால்) மழை பெய்யுமன்றோ? அந்தத் தெய்வத்தின்முன் அஞ்சாது செல்வது எப்படி? (வெளிப்படையாய்) அடீ! மணிமாலை! என்குலதெய்வம் வந்திருக்கின்றது? அதனைக்கண்டு தரிசித்து வருவோம்; சீக்கிரம் குழந்தையை எடுத்துக்கொண்டுவா!

மணிமாலை:—என்னுங்கோ! நம்முடைய குலதெய்வம் அங்காளபரமேசுவரியல்லவோ? அந்தத் தெய்வத்திற்கு உற்சவம் நடக்க இன்னுமிரண்டுமாத மிருக்கின்றதே!

பர:—அதல்லடி! இது பேசுந் தெய்வம்; பிரத்தியட்சதெய்வம். இந்தத் தெய்வத்தைத் தரிசித்தால் நமது பாவமெல்லாம் பறந்து போய்விடும்.

மணி:—அந்தத் தெய்வம் எங்கேயிருந்து வந்திருக்கின்றது?

பர:—காரைக்காலிலிருந்து இங்கே வந்திருக்கின்றது.

மணி:—அப்படியானால் இப்போதே சென்று அந்தத்தெய்வத்தைத் தரிசித்துவரலாம்; வாங்க போவோம்.

(குமரப்பசெட்டியார் வீட்டுக்கு வந்து விட்டனர்).

(புனிதவதியார் பரமதத்த செட்டியார் வந்துவிட்டாரென் றறிந்து ஒருபுறமொதுங்கி நிற்கின்றார்).

பர:—அடீ! மணிமாலே! அதோ நிற்கின்றதே அதுதான் எனது குலதெய்வம். அந்தத் தெய்வத்தின் பெயரைத்தான் நமது குழந்தைக்கிட்டேன். அந்தத் தெய்வத்தின் காலில் விழுந்து கும்பிடுவோம் வா.

(பரமதத்தன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் புனிதவதியின் காலில் விழுந்து வணங்குகின்றான்; புனிதவதி அச்சமுற் றொருபுறம் ஒதுங்கி நிற்கின்றார்).

குணபதிசெட்டியார்:—என்ன வேலை செய்தாயடா பரமதத்தா! பெண்டாட்டி காலில்விழுந்து கும்பிடுவது நியாயமாகுமடா? இந்தப்பெண் உன் குழந்தையோ? அந்த அம்மாள் உன் பெண்டாட்டியோ? என்ன குற்றங்கண்டு புனிதவதியை விட்டு வேறு விவாகஞ் செய்துகொண்டாயடா?

பர:—தாத்தா:-புனிதவதியாரையென் பெண்டாட்டியென்றுசொல்வது பெரும்பாவமாகும். அவரது மகிமையை யளவிட்டுக் கூறுவது ஆகாது. அவர் தெய்வமாயிருப்பதைத் தெளிந்தறிந்த பிறகே, மரக்கலமேறிச் சென்று வர்த்தகஞ்செய்யும் வியாஜ்யத்தை முன்னிட்டு இங்குவந்து, இவளை மணந்து, இந்தப்பெண்ணைப் பெற்றேன். இந்தப் பெண்குழந்தைக்கு அந்தத் தெய்வத்தின் பெயரையே என் க்ஷேமத்தின்பொருட்டு வைத்திருக்கின்றேன். என்மீது தப்பொன்றுமில்லை தாத்தா! இந்தத் தெய்வத்தின் காலில் நாமெல்லோரும் விழுந்து வணங்கவேண்டும் தாத்தா!

புனி:—நாம் ஒன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்குமென்பது சரியாய்விட்டது. நம்மோடு வந்தவரும் இங்கிருப்பவரும் நமது செட்டியார் செய்கையைக் கண்டு திகைத்து நிற்கின்றனர். நமது கணவரென்று நினைக்கின்றவரோ இனித் திரும்பமாட்டார்; கொன்றைவார் சடையினனே! நீ இச்சமயமென்னைக் கைவிடாது காத்தருளல்வேண்டும்; பரமதத்த செட்டியார் பொருட்டுத் தாங்கிநின்ற இவ்வழகிய வுடம்பையுதறிவிட எனக்கு அருள்புரிதல் வேண்டும். தேவரீரைத் திருக்கைலாயத்தில் சூழ்ந்து போற்றும் பேயின்வடிவத்தைத் தாங்கப் பேதைக்குக் கருணைசெய்தல் வேண்டும்.



(உடனே அவர்க்கு ஈசனருளால் பேய் வடிவம் வந்துவிட்டது; வானவர் மலர் மழை பெய்கின்றனர்; வானதுந்துமி முழங்குகின்றது).

குணபதி:—என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! புனிதவதி தெய்வமென்பதை யின்றுதா னறிந்தேன்; பரமதத்தன் சொல்லியவனைத்தும் மெய்யே. கணபதி, பரமதத்த, நாமெல்லாரும் இத்தெய்வத்தை வணங்கிச் செல்லுவோம்.

(யாவரும் புனிதவதியை வணங்கிச் செல்லுகின்றனர்).

2-வது காட்சி முற்றிற்று.

## ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

### முந்தையோர்கண்ட முறை யிவையெனல்.

(11) வஸ்திரமொன்றை யுடுத்திக்கொள்ளாமல் அம்மணமாக நீராடுதல் கூடாது; இரண்டு வஸ்திரத்தை யுடுத்திக்கொள்ளாமல் ஒரு வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு உணவுண்டல் கூடாது; உடுத்தியிருந்த வஸ்திரத்தை (துவைக்கும்போது அதனைக் குளம் கிணறு முதலியவற்றுள்ள) நீரில் பிழிதல் கூடாது; ஒரு வஸ்திரத்தையுடுத்திக்கொண்டு சபையினிடத்து எப்போதும் செல்லுதல் கூடாது; இவற்றை ஆசாரமுடையார் கவனித்தொழுக வேண்டுமென்பது முந்தையோர்கண்ட முறைமையாம்.

### இன்னின்னகாரியஞ் செய்தல் கூடாதெனல்.

(12) தலையில் தேய்த்த எண்ணெயைக்கொண்டு, கைகால் முதலிய உறுப்புக்களில் எதனையுந்தேய்த்தல் கூடாது; பிறருடுத்தியிருந்த அழுக்குவஸ்திரத்தைத் தொடுதல் கூடாது; சுடுமணலில் நடக்கும் சமயமாயிருப்பினும் பிறர் போட்டிருந்த செருப்பைப் போட்டுக்கொள்ளுதல் கூடாது.

(13) நீரினிடத்துத் தமது நிழலை ஆசையோடு பார்த்தல் கூடாது; நிலத்தின்கணிருந்து அதனை நகத்தால்வது குச்சி

முதலியவற்றுளாவது ஏறுதல் கூடாது; இராக்காலத்தில் மரத்தின் கீழ் தங்கியிருத்தல் கூடாது; நோய்கொண்டு துன்பமடைந்த விடத்தும் நீரைத் தொடாமல் உடம்பினிடத்து எண்ணெயைத் தேய்த்தல் கூடாது; எண்ணெய் தேய்த்துக்கொண்டபின் நீராடாது புலையரைப் பார்த்தல் கூடாது.

நீராடாது — ஸ்நானஞ் செய்யாமல்.

ஆய்ந்த வறிவினவர் தொழில்க ளிவையெனல்.

(14) குளமுதலியவற்றுள் குளிக்கும்போது எப்போதும் நீந்துதல் கூடாது; நீருள் கொப்பளித் துமிழ்தல் கூடாது; நீரைக் கலக்குதல் கூடாது; அதில் விளையாடுதல் கூடாது; எண்ணெய் பெறாது தலை காய்ந்திருந்தாலும், தலையொழிய நீராடுதல்கூடாது. இவற்றை யொருமுறைப்பட்டு ஆராய்ந்த அறிவினையுடையவர் கவனித் தொழுகுவர்.

தலையொழிய நீராடுதல் - கண்ட ஸ்நானம் செய்தல்.

ஐம்பூதங்கள் இன்னகாரியஞ் செய்தால் நீங்கிப்போமெனல்.

(15) ஒருவன் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் ஐம்பூதங்களையும், பார்ப்பாரையும், பசுவையும், சந்திரனையும், சூரியனையும் தன்னுடம்பென்று கருதாமல் இகழ்வானாயின், அவன்றன் உடம்பின்கணுள்ள பிருதிவி முதலிய ஐம்பூதங்களும் இகழ்ந்தவப்போதே அவ்வுடம்பிலிருந்து நீங்கிப்போய்விடும்.

ஐம்பூதங்களும் நீங்குதலாவது, அப்பூதங்களுக்குரிய தெய்வங்கள் நீங்கிப்போதலாம்.

பிருதிவிக்கு (மண்ணுக்கு) அதிதெய்வம்-பிரஹ்மன்.
அப்புவிற்கு - (நீர்க்கு) ,, விஷ்ணு.
தேயுவிற்கு - (நெருப்பிற்கு) ,, உருத்திரன்.
வாயுவுக்கு (காற்றுக்கு) ,, மகேசன்.
ஆகாயத்திற்கு (வெளிக்கு) ,, சதாசிவன்.

அறிவுடையார் யாவரும் நெறியிஃதெனல்.

(16) அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமைய னென்னுமைவரும் குரவராவர்; இவ்வைவரையும் கடவுளைப் போலத் தொழுது துதிக்கவேண்டும் என்பது அறிவுடையார் யாவரும் கண்ட நெறியாம். குரவர்-குருமார்.



நல்லறிவாளர் துணிவு இஃதெனல்.

(17) ஐங்குரவர் சொல்லிய சொல்லைக் கடந்து, ஒன்றனையுஞ் செய்தல் கூடாது; மேற்கொண்ட விரதத்தை முடிக்காது குறைவாகவுடையவர் அதனை முடிப்பதுபற்றிச் சிறிதும் மறத்தல் கூடாது; நிறையுவாவென்னும் பௌர்ணமியில் கோலால் பல் துலக்குதல் கூடாது, விருட்சங்களை வெட்டுதல் கூடாது என்பது நல்லறிவாளரது துணிவாம்.

விரதம் - ஒருவன் இன்ன அறஞ்செய்வனென்றும் இன்ன பாவம் செய்வனென்றும் தன்னாற்றலுக்கேற்ப ஏற்படுத்திக்கொள்ளும் கருமமாம்.

துணிவு - நிச்சயம்.

நிறையுவா - பௌர்ணமி; குறையுவா - அமாவாசை.

உணவுண்ணு முறையைக்கூறல்.

(18) ஸ்நானஞ்செய்து, காலை நன்றாகக்கழுவி, வாயைக் கொப்பளித்துத்துடைத்துக்கொண்டு, உணவுண்ணுமிடத்தை மண்டலஞ் செய்து உணவினை யுண்டவரே உணவுண்டாரென்று சொல்லப்படுவர்; இவ்வாறு செய்யாது உணவினையுண்டவர் உணவுண்டார் போல வாயைக்கழுவிச் செல்லுவர்; அவர் உண்ட வுணவினை அரக்கர் தமக்குரியதென்று கருதியெடுத்துக் கொள்வர்.

உண்ணுமிடத்தை மண்டலஞ் செய்தல் - உண்கலத்தைச் சுற்றி வேத மந்திரங்கூறி நீரிறைத்தல். அரக்கர் - ராட்சதர்.

பேரறிவாளர் துணிவு இஃதெனல்.

(19) கால் கழுவியநீர் உலர்வதற்குமுன்னே உணவுண்ணத் தொடங்குதல்வேண்டும்; (உண்டபின்) கால்கழுவியநீர் உலர்வதற்குமுன்னே சயனத்தில் சயனித்தல் கூடாது என்பது பேரறிவாளரது துணிவாம். பேரறிவாளர்-சிறந்த அறிவினையுடையவர்.

இவ்வாறுணவுண்ண வேண்டுமெனல்.

(20) ஒருவன் உணவுண்ணும்போது தான் பார்க்குந்திசை கிழக்காக, மணையிலுட்கார்ந்து, தூங்காமலும் அசையாமலும் தெளிவாகவிருந்து, வேறெவ்விடத்திலும் வேறெதனையும்பாராது, எவருடனும் பேசாது, கடவுளைத் துதித்துக்கொண்டு உணவைச் சிந்தாமல் நிதானமாக உண்ணக்கடவன்; உண்ணுமுறைமையிதுவாம். (வரும்)

## சுகத்தெளிவுரை.

(முன் தொடர்ச்சி).

### துறவு — யதார்த்தம்-போலி.

கடவுளுடைய நோக்கத்தில் இனியதாயிருக்கின்ற துறவு இதுவென்று மனிதன் உணர்கின்றானில்லை. விவேக சூனியனாய்ப் பிறந்து, அகங்காரத்தினாற் கடவுளுடைய ஆக்ஞையைக் கடந்து சந்தோஷத்திற்கு மாறாகத் துக்கத்தையே தனக்குரிமையாகக் காண்கின்றான்.

வாஸ்தவத்தில் தனக்கே யுரியதென்று சொல்லக்கூடிய விதமாய் ஒரு புல்லரும்பு தானும் மனிதன் உண்டாக்கியிருப்பதில்லை. இவனுடைய உரிமைத் தன்மைக்கு அளவாயும் ஸாக்ஷியமாயுமிருப்பதும் தனக்குச் சொந்தமென்று இவன் சொல்லிக் கொள்வதுமான இந்தச் சரீரத்தையும், மரணம் வந்தவுடனே இவன் கீழே போட்டுவிட்டோடுகின்றான். ஆனால், இவனிடத்தில் என்ன உடைமைதானிருக்கின்றது? இவன் தனக்குச் சொந்தமென்று சொல்லக்கூடிய பொருள்தானென்ன? எல்லாப் பொருள்களும் கடவுளுடைய சக்தியினுடையதாகலால் அவருடைய தோற்றங்களும் ரூபங்களுமாகின்றமையின், அவரையொழிந்து, மனிதனில்லை. இதுவே யிப்படியாயின், விடுதற்கும் பற்றற்கும் பொருள் அவனுக்கு எங்கேயுளது?

இந்தச் சரீரத்தில் நீங்கள் தொழில் செய்துகொண்டிருக்கும் வரை, சரீரத்திற்கு வேண்டியவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளா யிருக்கின்றன. கடவுளுடைய உடைமையாகிய ஏராள ஐசுவரியத்தைக் கொண்டு இக்குறைகளை நிவர்த்தித்து மேல் ஒன்றுங் கேளாதிருங்கள். மெய்த்திருப்திதான் மெய்த்துறவாகும்; அது சுபாவமாய் வரவேண்டுமேயன்றி வலிந்துகொள்ளற்பாலதன்று. குறைகளை யிவையென அறியும் விவேகத்தைத் துணைப்பற்றி, வேண்டும் விஷயங்களை ஏற்றுக்கொள்ளவோ வேண்டாதனவற்றைத் தள்ளவோ செய்யுங்கள். இதற்காக எப்பொழுதும் கடவுளை விசுவசித்து அவருக்கு வந்தனஞ் சொல்லுங்கள். இருப்பனவெல்லாங் கடவுளுடைமைகளே. உங்களுக்கு வேண்டியனவெல்லாம் அவர் உபகரிக்கின்றார். அவர் கருணையுடையவர்; அவரிடத்தே அடைக்கலம் புகுந்து ஆநந்த ரூபிகளாய் நித்தியாநந்தத்தில் வாழ்ந்திருங்கள்.

உங்களுடைய நிருவாணத்தை மறைக்க ஒரு வஸ்திரம் வேண்டுமேயன்றி, அதற்காக உலகத்திலுள்ள பட்டுகள்சல்லாக்களெல்லாம் வேண்டாவே. உங்கள் வயிற்றில் உள்ள பசியைத் தணிக்க ஆகாரம் வேண்டுமேயன்றி அதற்காகப் பேருண்டியான் இச்சிக்கும் நிலம் நீர் ஆகாசம் என்றிவற்றிலுள்ள பொருள்களெல்லாம் வேண்டாவே. உங்கள் வாசஸ்தானங்களிலுள்ள இருளைத் துரப்பதற்கொரு தீபம் வேண்டுமேயன்றி அதற்காகப் பூமியிலுள்ள தீப வகைகளெல்லாம் வேண்டாவே.

கடவுளாற் கொடுக்கப்பட்டனவற்றை யேற்றுக்கொள்ளுங்கள். ஒன்றையுஞ் சொந்தம் பாராட்டாதேயுங்கள். நீங்களும், சராசரங்களெல்லாமும், இவையன்றி மனம் வாக்குக் கப்பாற்பட்டதும் அவரே; அவர் தோற்றமே அகத்தும் புறத்தும் விளங்காநின்ற சோதியெனப்படுகின்றது. இவ்விதமாக உங்கள் எண்ணங்களை யொருவழிப்பட நிறுத்தி ஜீவித்திருக்கும்போது சந்தோஷத்தோடு ஜீவித்திருங்கள். மரணம் வரும்போது சந்தோஷத்தோடு அதனை அங்கீகரியுங்கள். கடவுளிடத்தும் கடவுளாகவும் நீங்கள் சாவதுமில்லை, ஜீவிப்பதுமில்லை. நீங்கள் குணரஹிதராயும் விசேஷண ரகிதராயுமிருப்பினும் எல்லாப் பொருள்களிலும் எல்லாப் பொருள்களாகவுந் தோற்றி இருக்கின்றபடியே யிருக்கின்றீர்கள். இதுவே உங்களுடைய நிலையின் லக்ஷணம். உங்களுடைய திருஷ்டி மாத்திரம் நேராயிருக்குமாயின், இப்படியே காண்பீர்கள். ஒன்றை விடவும் பற்றவும் உங்களாலாகாது. எல்லாவற்றையும் அநுபவியுங்கள்; ஒன்றுக்கும் ஆசைப்படாதேயுங்கள். சென்ற அநுபவத்தைச் சிந்தித்து இரங்காதேயுங்கள். வருங்காலத்தநுபவத்திற்காகத் தேடாதேயுங்கள். உங்களுடைய அவசியங்களை நிவிர்த்திக்கும் விஷயங்களை அநுபவிக்கும்பொழுது சந்தேகத்தினாலும், உள்ள நெகிழ்ச்சியினாலும், பயத்தினாலும் தைரியத்தைக் கைவிடாதீர்கள். இதுவே கடவுளுடைய நித்திய கட்டளை.

கடவுளைக் காணவேண்டின் ஸ்திரீசெல்வம் போகபோக்கியம் என்பவற்றைத் துறந்து விடுங்கள் என்று மனிதர் உங்களுக்குப் போதிப்பாராயின், உங்கள் வாழ்க்கைக்கு உண்மை விதியாகின்ற கடவுளாஞ்ஞையை எதிர்ப்பார்த்து அது வருமட்டுங் காத்திருங்கள். கடவுளானவர், ஸ்திரீ செல்வங்கள் போகபோக்கியங்கள்

இவைகளெல்லாந் தாமாய் விளங்க நித்தியராயும் நிராதாரராயுமிருக்கின்றார். ஸ்திரீயுஞ் செல்வமுமின்றேல் அவரது பூரணத்தன்மை குறைந்துவிடும். அவ்விரண்டும் நீங்களும் கடவுளினின்றும் வேறெனக்கருதி அவற்றினிடத்துச் சொந்தம் பாராட்டுவீர்களாயின், பக்தியின்றிக் கடவுளுடைய பூரணத்தன்மையை மட்டுப்படுத்த வழிதேடுகின்றீர்கள். உங்களையும் அவற்றையுங் கடவுளிடத்தி லுள்ளனவாகவும் கடவுளாகவும் பாவிப்பீர்களாயின், துறவென்பது கூடாதகாரியம்; துறவுக்காசைப்படுவது கடவுளின்மைக் காசைப்படுவதாகும்.

மனிதன் தான் நீக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளும் ஸ்திரீயென்றாலென்ன? அவள் மனிதனுடைய மாதாவாயிருக்கின்றாள். அவளையின்றி, சித்தனும், பாவியும், ஸந்நியாசியும், லௌகிகனும், அவதாரபுருஷனும், ஞானியுஞ் சனிப்பதில்லை. அவளைத் தள்ளுதற்கு ஏற்பாடுபண்ணும் நீங்கள் அவளையின்றி எங்கேயிருந்து வந்து விட்டீர்கள்?

சரீரம் இந்திரியம் கரணம் உணர்வு புத்தியென்றிவை யெல்லாம் புருஷர் ஸ்திரீகளுக்குச் சமமாகவே ஒரேவிதப் பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. தசை யுதிரம் எலும்புகளாலான இந்த அசுத்தப்பிரதிமையை ஸ்திரீயென்று சொல்லலாமாயின், மனிதனே ஸ்திரீதான் ஆகின்றான். வெளிப்பட்டும் வெளிப்படாமலு மிருக்குங் கடவுளாகிய விராட்டின் பலவித உறுப்புக்களினால் புருஷன் ஸ்திரீ முதலான எல்லாப் பிராணிகளும் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஒரேமண்தான் புருஷன் ஸ்திரீயென் றிருதிறத்தாரிடத்துந் தசையு மெலும்புமாகின்றது; ஒரே ஜலந்தான் இருவரிடத்தும் உதிரம் கோழை ரசமாகின்றது. இதே பிரகாரம் அக்நியானது வசனாசக்தியும் ஜீர்ணாசக்தியு மாகின்றது; காற்று, பிராணவாயுவாகின்றது. ஆகாசம் இருவரிடத்தும் சுரோத்திரேந்திரிய சக்தியாகின்றது. புருஷன் ஸ்திரீயென்னு மிருவரிடத்தும், சந்திரனே உணர்ச்சிகளா யிருக்கின்றான். இருவரிடத்தும் சூரியனே புத்தியாக லலாடத்தி லிருந்துகொண்டு சரிதப்புகளைப் பகுத்தறிகின்றான். சூரியனெனப்படுஞ் சோதியும் ஜீவனெனப்படுஞ் ஜோதியும் காரணாவஸ்தையில் ஐக்கியமா யிருக்கின்றன. புருஷனுடையதாயினும் ஸ்திரீயுடையதாயினும் அந்தச் சரீரத்



தை நிலம் நீர் தீயென்பன தம்மியல்பின தாக்குமென்பது மூடசிகாமணிகளுக்குந் தெரிந்தவிஷயம்.

“விராட்டினுடைய அவயவங்கள்” புருஷனிடத்தும் ஸ்திரீயினிடத்துஞ் சமமாகவே யிருக்கின்றன. ஸ்திரீயென்று சொல்வது மண்ணா (சரீரமா) யிருந்தால், அவளைத்துறக்கும்பொருட்டு ஆகாசப்பழங்களைத் தின்றுகொண்டு வானத்திற் சஞ்சரிக்க வேண்டிவரும். சுருங்கச்சொல்லின், இந்தப் பரிசுத்தாவயவங்களில் ஒன்றாயினும் எல்லாமாயினும் ஸ்திரீயே யென்னில், அவளைத் துறக்க, நீங்கள் கடவுளையும் உங்களையுமே துறக்கவேண்டிவரும்.

உலகத்தார் நினைப்பதுபோல, ஸ்திரீ செல்வங்களைத் துறப்பதே மனிதனைக் கடவுளிடத்துய்க்குமாயின், ஒவ்வொரு நபும்ஸகனும் பாப்பரும் (பிச்சைக்காரனும்) மேலான நித்தியானந்த வாழ்வையடையக்கண்டிலமே. அஃதென்? சத்தியமென்னவென்றால், புறத்திலுள்ள பொருள்கள் ஜீவனைப் பந்திப்பதுமில்லை விடுவிப்பதுமில்லை. அவ்வாறுசெய்வது இருதயம் அல்லது மனத்தின் நிலைதான். பக்கிரியின் கந்தைக்கும் பிச்சைக்காரன் ஓட்டுக்கும் உங்கள் மனம்பிரியப்படுமாயின், நீங்கள் இன்னும் பந்தத்துள் தான் இருக்கின்றீர்கள். சுவர்க்கம் பூமியென்றிவைகளிலுள்ள போகங்களை யநுபவிக்கும் பொழுதே ஒருவன் ஒன்றும் விரும்பாதிருப்பானாயின், அவன் உண்மையில் துறந்தவனாகின்றான். அவன் எல்லாப் பொருள்களையும் அடைந்தபோது அவற்றையடைந்ததாக எண்ணுவது மில்லை. அவற்றை யிழந்தபோது இழந்ததாக எண்ணுவதுமில்லை. தான் உள்ளபடியே என்றும் ஒரு தன்மையனாக இருக்கின்றமையை அவன் அறிகின்றான். அவனுக்கு இழக்கிறதற்கும் பெறுகிறதற்கும் ஒரு பொருளுமில்லை. காரணமாகவும் சக்திகளாகவும், காரியங்களாகவும், கடவுள் பூரணராயிருக்கின்றார். அப்படியானால் எதனைத்துறப்பது? எதனைப்பற்றுவது? இந்நிலைமையையடைந்தார், புருஷரேயாயினும் ஸ்திரீயேயாயினும் யதார்த்தத்துறவு (அதாவது ஜீவன்முத்தி) அடைந்தாராவர். வாஸ்தவத்தில், அவர் தெய்வசொரூபிகள். எந்தப்பொருளையாவது கடவுளினின்றும் வேறெனக்கருதி அதனிடத்து இச்சை வைப்பது பந்தமாகும். எல்லாப்பொருள்களையுங் கடவுளிடத்துள்ளனவாகவும் கடவுளாகவும் காண்டலே உண்மைத்துறவாகும். எல்லாம் முந்தியிருந்தபடியே யிருக்கின்றது; இருதயமட்டுமே

மாறுதலடைகின்றது. இதுதான் உண்மைத்துறவு. ஆனால், இது புற விஷயங்களைக் கொள்ளாது வெறுத்தலினாலும், உங்களுடைய மனோமுயற்சியினாலும் அடையப்படுவதன்று; இதனை ஏற்றுக்கொள்ளும்படி உங்களுடைய மனத்தை யசைக்கும் கடவுளிடத்தினின்று வாராநின்ற ஒரு நன்கொடையாம்.

எல்லாருங் கடவுளிடத்து அடைக்கலம்புகுந்து மெய்த்துறவைப்பெற்று ஆநந்த ரூபிகளாய் நித்தியாநந்தத்தில் வாழ்வாராக. ஓம் சாந்தி பரசாந்தி உங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

## யுத்தம்.

இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் நடைபெற்று வரும் யுத்தத்தில் ருஷ்யர் மிகுதியும் வெற்றிபெற்று வருகின்றார்கள். கலீஷியாவிலும், புக்கோவினாவிலும் முன்னேறிச் சென்றுவருகின்றார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்குமாறு ஜெர்மானியர் பிரெஞ்சுப்போர்முகத்திலிருந்தும், ஆஸ்டிரியர் இத்தாலியப் போர்முகத்திலிருந்தும் துருப்புக்களையும், பீரங்கிகளையும் ருஷ்யப் போர்முகத்திற்கு அனுப்பிவருகின்றார்கள். இதனால் பிரெஞ்சுப் போர்முகத்திலும், இத்தாலியப் போர்முகத்திலும் நேசராஜாங்கத்தாருக்கு வன்மை அதிகமாகும்.

ஜெர்மானியர் வர்டூனைப்பிடிக்க 4 மாதகாலமாக உக்ரமான போர்செய்து வருகின்றனர். பிரெஞ்சுக்காரர் சளைக்காமல் ஜெர்மானியரை யெதிர்த்து நிற்கின்றனர்.

இத்தாலியப் போர்முகத்திலிருந்து துருப்புக்களையும், பீரங்கிகளையும் ருஷ்யப்போர்முகத்திற்கு ஆஸ்டிரியர் அனுப்பிவருகின்றமையின், இத்தாலியர் ஆஸ்டிரியரை யெதிர்த்தடித்து முன்னேறிச் செல்லுகின்றனர்.

இந்தமாதத்தில் பிரிட்டிஷாரோடும், பால்டிக் கடலில் ருஷ்யரோடும் கப்பற்போர் நடந்தது. அதில் ஜெர்மானியருக்கு அதிக சேதம் நேர்ந்தது.

யுத்தம் 2 வருடகாலமாக நடந்துவருகின்றது. தீர்மானமானவெற்றி ஒருவருக்கும் உண்டாகவில்லை. சுந்தோப சுந்தர்நியாயம்போல ஐரோப்பிய ராஜாங்கத்தினர் ஒருவரோடொருவர் பகைத்து ஐரோப்பாவிலுள்ள ஜனத்தொகையைக் குறைத்து வருகின்றனர்.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-11 July No-12.
தொகுதி-11 ஜூலைமீ 1916. பகுதி-12

[stamp] .. SEP 1916 ... MADRAS

## கேளாவை சொல்லி னெவ்வருக் கும்பகை.

ஒருவர் நமது வாழ்க்கை சிறந்திருத்தல்வேண்டும்; பிறரது பகை நமக்கில்லாதிருத்தல் வேண்டுமென்று விரும்புவாராயின், அவர் பிறரது பழியை யெடுத்துக் கூறாதிருத்தல் வேண்டும். பிறரது பழியை யெடுத்துக் கூறுவார் எப்போதும் ஆபத்தின்வாயிலிருப்பவராயிருக்கின்றனர். ஒருவர் தம்மைப் பழித்துக் கூறுவதை மற்றொருவரறிவாராயின், அவர் அவர்க்குப் பகைவராய் நினையாத நேரத்தில் துன்பத்தை யடைதற்குரியவராயிருக்கின்றனரென்பதுணர்ந்தவர்கள் என்ன செய்வர், எப்போதும் பிறரது புகழைக் கூறுவதன்றி, அவரது பழியைக் கூறுவதில்லையாம். பிறரது பழியைக் கூற முற்படுகின்றவர் நாம் பிறரது பழியைக் கூறுவது நமக்குப் பழியாமென்பதனை யுணராதிருக்கின்றனர்; உணர்வாராயின், அவர் பிறரது பழியைக் கூற வொருபோதும் முற்பட்டு வருவதில்லையாம். பிறரது பழியைக் கூற முற்படுகின்றவர் முன்னர் நாம் பிறர்பழித்தற்குரிய குணங்களில்லாதிருக்கின்றோமாவென்று சிறிதுநினைத்து நோக்குதல் வேண்டும்; அவ்வாறு நோக்குங் குணமெவரிடத்திருக்கின்றதோ அவர் பிறரது பழியை மறந்துங் கூறுவதில்லையாம். முன்னர்த் தமது குற்றத்தைக் கண்டு அதனை யொழித்தவர் பின்னர்ப் பிறரது குற்றத்தைக் கண்டு, அதனை யொழிக்க வேண்டுமென்றவர்க்கிதமாகக் கூறுவாராயின், அவனை யவர் வந்தனத்துட னேற்றுக்

கொண்டு அக்குற்றத்தையொழிக்க முயலுவர்; அவ்வாறன்றிப் பிறரது குற்றத்தைமாத்திரங்கூறித்திரிபவர் அதனைக்கேட்டோர் யாவராலும் பகைக்கப்பட்டு, தீங்கினை யுறுதற்குரியவராக விருக்கின்றனரென்பது சிதையாத சித்தாந்தமாம். ஒருவன் பிறரது பழியை மற்றொருவரிடத்துக் கூறுவானாயின், அவர் நமது பழியையும் இவன் மற்றவரிடத்து இவ்வாறே கூறுவானென்பதுணர்ந்து, அவனிடத்து அன்பு செய்யாது விடுகின்றனர்; அதனோடு அவனுக்குப் பகைவராயும் விடுகின்றனர். எவ்வாறு பகைவராகின்றனர்? சீ சீ இவன் கெட்டான்; இவனெப்போதும் உண்ணீசீழை விரும்புவதுபோலப் பிறரது பழியைக் கூறுவதை விரும்புகின்றவனாயிருக்கின்றான்; பிறரது பழியை நம்மிடத்தெடுத்துக் கூறுகின்ற இவன் நமது பழியை மற்றவரிடத்தெடுத்துக்கூறாது விடுவனோ? இவனது சிநேகங் கூடவே கூடாதென்றவனைப் பழித்துப் பேசிப் பகைக்கின்றனர். இதனால் பிறரது பழியை யெடுத்துக் கூறுவார் யாவர்க்கும் பகைவராவரென்பது இனிது விளங்குவதாம்.

“கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை, சொல்லா நலத்தது சால்பு—பிறவறங்களும் வேண்டுமாயினும் தவம் ஒருயிரையுங் கொல்லாத அறத்தின்கணிருப்பதாம்; அதுபோல, பிறகுணங்களும் வேண்டுமாயினும் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கணிருப்பதாம்” என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்திருப்பதனை நன்குணர்ந்து நோக்குவார்க்குப் பிறரது பழியைச் சொல்லாதவரே சால்புடையவராவரென்பது இனிது விளங்கும். சால்பாவது பல குணங்களாலும் நிறைந்திருத்தலாம். சால்பு தவம்போலச் சிறப்புடையதாக விருத்தலின், அதனைப் பெற விரும்புகின்றவர் பிறரது பழியையெவரிடத்தும் மறந்துஞ் சொல்லாதிருத்தவேண்டும்; அவ்வாறிருப்பவர் பெற்றோர், பிறந்தார், பெருநாட்டார், உற்றோர், நட்டார் (சிநேகிதர்) முதலாயினோரது பகையின்றி வாழ்வரென்பது நிச்சயமாம். பிறரது பழியை யெடுத்துக் கூறுவோர் தமது தந்தை, தாயார், சகோதரர், ஊரார், நாட்டார், நட்பினர் முதலாயினோரது பழியைக் கூறாதிருப்பதில்லையாம்; ஆகவே அவர் தமக்குரியவராலும் பகைக்கப்படுகின்றனர்; அதனால், அவர் நல்வாழ்வு பெறாது நாசமடைகின்றனர்; ஆகலின், பிறரது பழியை யெவரிடத்தும் மறந்துஞ் சொல்லுதல் கூடாதென்று நமக்கு அறநெறியைப்



போதிக்கவே, தமிழ்த் தெய்வமென்னும் ஔவைப் பிராட்டியார் “கௌவை சொல்லி னெவ்வருக்கும்பகை—ஒருவன் பிறரது பழியை யெடுத்துக் கூறுவானாயின், அவன் யாவர்க்கும் பகையாவன்” என்று திருவாய்மலர்ந்தருளினர்.

பிறரது பழியை யெடுத்துக் கூறாமை ஒருயிரையுங் கொல்லாமைபோலச் சிறந்திருத்தலின், பிறரது பழியை யெடுத்துக் கூறுதலை நாம் பிரயத்னபூர்வகமாக விடுதல் வேண்டும். ஒரு காரியத்தைச் செய்பவர் அதனால் வரும் பயனை முன்னராலோசித்து நோக்குகின்றாரென்பது மிகு பிரசித்தமாமன்றோ? பிறரது பழியை யெடுத்துக் கூறுகின்றவர் அதனால் வரும் பயனை முன்னராலோசித்துப் பார்த்தல் வேண்டும். பிறரது பழியை யெடுத்துக் கூறுதல் பலரைப் பகையாக்கி, இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் பெறாவாறு செய்தலின், அதனைப் பழிக்க நாம் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். கோபத்தை யொழிக்க முயலுகின்றவர் அஃதெழும்போது அதனைக் கோபிப்பது (அடக்குவது)போல, நாம் பிறரது பழியைக் கூறச் சம்பந்தமுண்டாயபோது, அதனைப் பழிக்க (கூறாதிருக்க)ப் பழகிவருதல் வேண்டும்; இவ்வாறு பழகி வருவோமாயின், பிறரது பழியைக் கூறுதலென்னும் குற்றத்திற் குறைவிடமாகாது, நற்றவமுடையவராய் வாழுதற்குரியவராவோம். பிறரது பழியை நாமெடுத்துக் கூறுதற்குக் காரணம் அவர் நமக்கிணக்கமாக விராமையேயாம். பிறர் நமக்கிணக்கமாக விராமைபோல நாமும் பிறர்க்கிணக்கமாக விராதிருக்கின்றோம்; பிறர்க்கு நாமிணக்கமாக விருந்தாலன்றோ பிறர் நமக்கிணக்கமாக விருப்பரென்பதை நாம் மறந்துவிடுகின்றோம்; அதனால், பிறர் நமக்கிணக்கமாக வாராதபோது அவரது பழியை யெடுத்துக் கூற முற்படுகின்றோம். பிறரது பழியை நாமெடுத்துக் கூறுவதுபோல நம்முடைய பழியையுமவரெடுத்துக் கூறுவாரேயென்பது நமது ஞாபகத்திற்கு வாராதிருக்கின்றது; வந்திருக்குமாயின், நாம் பிறரது பழியை மறந்துங் கூறமாட்டோம். நாம் பிறரது பழியை யெடுத்துக் கூறுவது அவர் நம்முடைய பழியை யெடுத்துக் கூறுவதற்குக் காரணமாயிருக்கின்றதென்பதுணர்ந்து, உணர்ந்தவாறொழுகுவோமாயின், எவர்க்கும் பகையாகாமல் இம்மைப் பயனையும் மறுமைப்பயனையு மடைதற்குரியவராவோம். மதுவுண்பவர் மாமிச முண்பவராயு மிருத்தல்போல,

பிறரதுபழியை யெடுத்துக்கூறுபவர் பாவ காரியங்களையுஞ்செய்து வருவரென்பது சிறிதூகித்து நோக்கினால் நன்குவிளங்கும். பிறரது பழியை யெடுத்துக் கூறுதவரெவரோ அவரே பொய்பேசல், புறங்கூறல், (கோட்சொல்லுதல்), பிறரது பொருளை யபகரித்தல் முதலிய பாவகாரியங்களுள் எதனையுஞ் செய்யாதிருப்பரென்பது திண்ணமாம்.

ஒருவர் எப்போதும் பெருமை, அறிவு, முயற்சியென்னும் ஆற்றலால் பெரியவராய வேந்தரது பழியையும், தவத்தால் பெரியவராய முனிவரது பழியையும் எடுத்துக் கூறுதல் கூடாது; கூறுவாராயின், அவர் எவர்க்கும் பகைவராய்க் கெடுதல் தவறுவதில்லையாம். முனிவர்பகையும் ஆகாது; வேந்தர் பகையு மாகாதென்பதுணர்ந்தவர் எவர்க்கும் கூடுமானவளவு மிணக்க மாகவே யிருக்க முயலுதல் வேண்டும். திரிசங்கு மகாராஜன் வசிஷ்ட முனிவரைப் பழித்துக் கூறி, அவரால் சபிக்கப்பட்டுச் சண்டாளனானான்; இந்திரன் பதம் பெற்றுச் சென்ற நகுஷமகாராஜன் சப்த ரிஷிகளைப் பழித்துக் கூறி, அகத்திய முனிவரால் சபிக்கப்பட்டு மலைப்பாம்பானானென்றும், பிறவும் புராணம் கூறுவதை நன்குணர்வோமாயின், முனிவரது பழியைக் கூறல் ஒருபோதும் கூடாதென்பது நன்கு விளங்கும். வேந்தரது பழியை யெடுத்துக் கூறுபவர் அவரால் பகைக்கப்பட்டுக் கெடுவரென்பது மிகப் பிரசித்தமாய விஷயமாம். "பழித்தவை சொல்லுதல் வற்றாகும் பேதைமை பிறரது பழிகளைக் கூறுதற்குரிய சொற்களைச் சொல்லுதலில் அறிவில்லாதவன் வல்லமை யுடையவனாவன்" என்று திரிகடுகம்கூறுவதை நோக்குமிடத்து, அறிவில்லாதவனே பிறரது பழியை யெடுத்துக் கூறுவானென்பது பெறப்படும்; ஆகவே, நாம் அறிவுடையவராக வேண்டுமாயின், பிறரது பழியை யெடுத்து மறந்துங் கூறாதிருத்தல் வேண்டும்.

ஒரு சாரார் காரணமொன்றுமில்லாமலே பிறரது பழியை யெடுத்துக் கூறுகின்றனர்; இவர் தமக்குத்தாமே பகையாயிருக்கின்றனர். இவர் "கலியாணவீட்டில் கட்டிக்கொண்டழுபவள் இழவு வீட்டி லென்செய்ய மாட்டாள்" என்னும் பழமொழிக் கிலக்கியமாக நின்று, தமக்கிணக்கமாக விருப்பவர், இணக்கமாகா திருப்பவர், இவ்விரண்டு மாகாதிருப்பவர் யாவரையும் வெறுத்து அவர்களது பழிகளைப்பலரிடத்துமெடுத்துக்கூறி, அவர்களுக்குப் பகைவராயொழிகின்றனர்; பிறரது பழியை யெடுத்துக் கூறுவது நமக்குப் பலவகைத் தீங்கினைத் தருமென்பதனை யறியாதிருக்கின்றனர். அவ்வாறிருக்கும் குணம் நம்மிடத்திருக்குமாயின், அதனை யறவே யொழிக்க நாம் முயலுதல் வேண்டும். பிறரது பழியை யெடுத்துக் கூறுவது நெருப்பை முன்றானையில்வைத்து முடிவதுபோல விருத்தலின், அதனை விடுவது நலம் பெற விரும்புவா ரொவ்வொருவர்க்கு மின்றியமையாத கடமையாம்.



"புன்சொல் விடர்ப்படுப்ப தல்லா லொருவனை
இன்சொல் விடர்ப்படுப்ப தில்"
"பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்."

என்று பழமொழி கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

## ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி).

### ஒழுக்கம் பிழையாதவர் உண்ணும்முறைமை யிதுவாமெனல்.

(21) எப்போதும் தமது நல்லொழுக்கத்தினின்றுந் தவறாதவர் விருந்தினர்க்கும் மிக மூத்தோர்க்கும், பசுக்களுக்கும், பறவைகளுக்கும், குழந்தைகளுக்கும் உணவு கொடுத்தல்லாமல் உண்ணார்.

### அறிவுடையார் இவ்வாறுண்டால் புகழ்வர்; இவ்வாறு படுத்தால் இகழ்வரெனல்.

(22) (ஒருவன் உண்ணும்போது கிழக்குத்திசைநோக்கி யிருந்துண்ணல் வேண்டும்; அவ்வாறுண்பது கூடாதாயின்), மற்றத் திக்குகளையும் நோக்கியுண்ணலாம்; அவ்வாறுண்டால் அத்திசைகளும் நன்மை தருவனவாம்; வாசற்படியின் நேரே யுண்ணுதலை யறிவுடையார் புகழ்ந்து, வீட்டின் முகட்டிற்குநேரே கட்டிலிட்டுப் படுத்துறங்குதலை நன்மை தருவதாகாதென் றிகழ்ந்தனர்.

### இவ்விவ்வாறுண்ணுதல் தகாதெனல்.

(23) ஒருவர் படுத்துக்கொண்டு உணவினை யுண்ணுதல் கூடாது; நின்றுகொண்டு உண்ணுதல் கூடாது; வெள்ளிடையின்க ணிருந்துண்ணுதல்

கூடாது; வயிறு நிறைய உண்ணவேண்டுமென்று விரும்பி மிகுதியாக உண்ணுதல்கூடாது; சட்டிவின்மேலிருந்து உண்ணுதல்கூடாது; உண்ணு முறைதப்பி யாதொன்றையும் நின்றுகொண்டு உண்ணுதல்கூடாது.

வெள்ளிடை - வெளியிடம் (மைதானம்).

பெரியோர்களுடனிருந்து உண்ணும்போது இவ்வாறுண்ணல் வேண்டுமெனல்.

(24) அறிவுடையார் தம்மினும் பெரியார் தமது பந்தியிலிருந்து உண வுண்ணும்போது, அவருண்பதற்கு முன்பு தாமுண்ணார்; அவரெழுந்திருப் பதற்குமுன் பெழுந்திரார்; அவர்களை நெருங்கியிரார்; உண்ணுமிடத்து என்ன லாபத்தைப் பெறுவதாயிருப்பினும், அவரது வலப்பக்கத்திருந்துண் ணார்.

இவ்விக்கறிவை உண்ணும்போது இவ்விவ்வாறுண்ண வேண்டு மெனல்.

(25) ஒருவர் கைக்குங் கறிகளையெல்லா முடிவிலும், தித்திக்குங் கறி கறிகளையெல்லா முதலிலும், இவையொழிந்த (சுவையினை யுடைய) கறி களையெல்லாம் இடையிலும் உணவுண்ணும்போது குறிக்கொண்டு உண் ணக்கடவர்.

உணவுண்ணும்போதொழுகும் முறைமை இவையாமெனல்.

(26) அறிவுடையார் தம்மினு மூத்தவருண்ணும்போது, அவரைத் தம் பக்கத்தில் வைத்துண்ணுது, உண்ணுங்கலங்க ளெல்லாவற்றுள்ளும் சிறிய கலங்களைத் தமக்குரியனவாகக்கொண்டு, தமக்குரிய அன்பினின்றும் நீங்கா மலும் ஆசாரத்தினின்றுந் தவறாமலும் உணவினை யனவாகவுண்டு, உண்ட கலங்களை நீக்கிவிடக்கடவர்.

கலங்கள் - இலை, தொன்னை.

உண்டபின் செய்வன விவையாமெனல்.

(27) (ஒருவருணவுண்ட பின்னெழுந்து கைமுதலியவற்றைச் சுத்தி செய்யுமிடத்திற்குச்சென்று) வாயிற்புக்கநீருள்ளே செல்லாதபடி, அதனை நன்றாகக் கொப்பளித் துமிழ்ந்து, எச்சிலொழியும்படி வாயையும் வாயினடி யையும் நன்றாகத்துடைத்து, பின் அழகுண்டாகக் கண் காது முதலிய அவ



யவங்களைச் செவ்வையாக விரல்களைக் கொண்டழுத்தி, மூன்றுமுறை ஆச மனஞ்செய்து, அவ்வவயவங்களைத் துடைத்து, அப்பால் வாயைக் கழுவக் கடவர். இவ்வாறு செய்வது மிக்கவர் கண்டமுறையாம்.

மிக்கவர் - அறிவொழுக்கங்களால் மேம்பட்டவர்.

தண்ணீர் பருகும் விதமும், குரவரிடத்து ஒன்றனைக் கொடுத்தல் முதலிய விதமும் இவையாமெனல்.

(28) அறிவுடையார் தம்மிரண்டு கைகளாலும் தண்ணீருண்ணார்; குரவர் கொடுப்பதை ஒருகையால் வாங்கார்; அவர்க்கொன்றனை ஒரு கை யால் கொடார்; தம்முடம்பினை இரண்டு கைகளையுங்கொண்டு சொறிந்து கொள்ளார்.

குரவர் - ஆசிரியர்.

இராப்போதின்கண் செய்வன இவையாமெனல்.

(29) அறிவுடையார் மாலைப்பொழுதில் படுத்துறங்கார்; ஒரூர்க்குச் செல்லார்; உணவுண்ணார்; எவர்மீதுங் கோபங்கொள்ளார்; அம்மாலைப் போதில் விளக்கேற்றுவதை யிகழ்ந்துபோகார்; இராப்போதில் உண வுண்டு, வெளியே செல்லாது குறித்த தோரிடத்தில் படுத்துக் கொள்வர். இவ்வாறு செய்வது மிக்கவர் கண்ட முறையாம்.

இரவில் படுத்துக்கொள்ளும் முறை யிதுவாமெனல்.

(30) அறிவுடையார் இரவில் படுக்கும்பொழுது நம்மிஷ்டதெய்வத் தைத் தம்மிருகரங்களையுங்கூப்பித்தொழுது, வடக்குத்திசையிலும் கோணத் திசையிலும் தலையினைவையாது, மேலே போர்த்துக்கொள்வதற்குரிய வஸ் திரத்தைத் தம்முடம்பின்மீது போர்த்துக்கொண்டு, படுத்துறங்குவர். இவ் வாறு செய்து மிக்கவர் கண்ட முறையாம்.

திசை பெருந்திசை, கோணத்திசையென விருவகையாம். பெருந் திசை வடக்குந் தெற்குமாம்; கோணத்திசை கிழக்கும் மேற்குமாம்.

## ஜாதிசண்டாளனா, கர்மசண்டாளனா பெரியவன்?

(ஒரு சிறிய கதை).

முன்னொரு காலத்தில் கங்காநதி தீரத்தில் ஏகாந்தமாக ஒரு தோட்டத்தில் ஒரு ஆசிரமங்கட்டி அதற்குள் ஒரு தபசி வசித்திருந்தார். அவர் நதியில் ஸ்நானஞ்செய்துகொண்டுசமீபத்திருந்த தோட்டத்தில் ஒரு மரத்தின் நிழலிலிருந்து தியானஞ்செய்யத் தொடங்கினார். அச்சமயம் ஒரு வண்ணான் தனது துணிகளைத் துவைக்கும் பொருட்டு நதியிலிறங்கித் துணியைத் துவைத்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு துளி ஜலம் தபசுசெய்து கொண்டிருக்கும் ஸ்வாமிகளின் மேற்பட்டது. உடனே ஸ்வாமிகள் கோபங்கொண்டு ஓடிவந்து வண்ணான் தலையைப்பற்றியிழுத்துக்கீழே போட்டுமிதித்தனர். ஏழையாகிய வண்ணான் "ஸ்வாமிகளே! நான் ஓரபசாரமுஞ்செய்யவில்லையே! ஏன் என்னைத்தண்டிக்கவேண்டும்" என்று மிக வணக்கமாகக்கேட்டான். உடனே ஸ்வாமிகள் "அடா துஷ்டப்பயலே! எனது பரிசுத்தமான சரீரத்தில் அழுக்குஜலம் படும்படியாகச் செய்தாயல்லவா?" என்று கூறி மீண்டும் ஸ்நானஞ்செய்தார். உடனே வண்ணானும்ஸ்நானஞ் செய்தான். உடனே ஸ்வாமிகள் வண்ணானிடம் "நீயேன் ஸ்நானஞ்செய்தாய்" என்று கேட்டார். வண்ணான் "ஸ்வாமி! தாங்கள் ஏன் ஸ்நானஞ்செய்தீர்களெனக்கேட்டான் அதற்கு ஸ்வாமிகள் "அடா சண்டாள! நானுன்னைத் தீண்டியபடியால் ஸ்நானஞ் செய்தேன்" என்றார். வண்ணானும் "ஸ்வாமி! இவ்வளவு கோபமுடையோர்களை நான் பார்த்ததில்லை. 'கோபஞ்சண்டாளம்" என்னும் வசனத்திற் கிணங்கச் சண்டாளத்தன்மையுடைய கோபத்திற்கிருப்பிடமாகிய தங்கள் திருமேனி என் சரீரத்திற் பட்டதால் நானுஞ்சண்டாளனாய் விடுவேன். அதனாலேயே ஸ்நானஞ் செய்தேன்" என்றான். இதைக்கேட்ட தபசி "ஆ! நான் கோபத்தால் சண்டாளத்தன்மையையடைந்தது உண்மையே; இவன்ஜாதி சண்டாளனாயினும் குணத்தால் மிகவுயர்வுடையவனே" என்று நினைத்து விவேகத்தையடைந்தார். அன்பர்களே! சண்டாளத்தன்மை யெதனாலுண்டாகின்றதெனவுணருங்கள்!

இராமகிருஷ்ணஸ்வாமி.

All rights reserved.

## கதாவிநோதமாலை.

(முன்தொடர்ச்சி)

அவ்வந்தணன் தேவியிடமிருந்து கருநெய்தல் மலரைப் பெற்றுக்கொண்டு இரவில் மீந்தபொழுதை அங்கேயே போக்கி உதயமானதும் பிரயாணஞ் செய்யப் புறப்பட்டான். வெகுதூரம் நடந்து தன்குமாரன் பூபாலனும் குமாரி பங்கஜவல்லியும் இருக்கும் தேவபுரத்துக்கு வந்து சேர்ந்து, அங்கே ஆதிசேஷன் அதிதிகளை ஆதரிப்பவர் என்று தெரிந்துகொண்டு அவர் வீட்டு வாசலில் வேத பாராயணம் செய்து கொண்டிருந்தார். பிராமணன் வந்திருக்கும் செய்தியை அறிவித்த ஏவற்காரப்போன் மூலமாய் உள்ளே வரும்படி மந்திரிசெய்த உத்தரவையறிந்து உள்ளே போகவே மந்திரியால் போஜனம் செய்ய வேண்டுமென்று அழைக்கப்பட்டார். பின்பு அவர் அவ்வூரில் அனந்தன் மடுவென்று ஒரு புண்ணிய தீர்த்தமிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே ஸ்நானம் செய்யச் சென்று தீர்த்தமாடித் திரும்புகையில் ஊர் முழுவதும் "ஐயோ? ஐயோ? குடி முழுகிப் போயிற்றே?" என்று ஜனங்கள் அலறுவதைக் கேட்டு அதென்ன என்று விசாரித்தார். அதற்கு ஜனங்கள் "இந்த ஊரில் பூபாலனென்று ஒரு பிராமண வாலிபன் இருக்கிறான். அவனையும் அவன் தங்கையையும் சூடாதரன் என்னும் வாணிபன் வனத்திலிருந்து கொண்டு வந்திருந்தான். அமைச்சனாகிய ஆதிசேஷன் அவ்விருவரையும் அவ்வைசியனைக்கேட்டு அழைத்துக் கொண்டு வந்து தனக்குப் புத்திரபாக்கியம் கிடையாதகால், அச்சிறுவனைத் தன் மகனாக வைத்து வளர்த்துவந்தான். அந்த நல்லபையன் மகாராஜா தாரவர்மாவிற்கும் இராஜ்யம் முழுமைக்குமே பிரியபுத்திரனான். அவனை இன்று ஒரு கருநாகம் கடித்துவிட்டது. அதனால் ஊர்முழுவதும் இப்படி தத்தளிக்கிறது" என்றனர். அதைக் கேட்டு அவன் அவ்விருவரும் தனது மக்கள்தாமென்று அறிந்து பங்கஜலோசனன் பறந்துகொண்டு மந்திரியகம் வந்து சேர்ந்தான். வந்து பார்க்கையில் அப்பையனைச் சுற்றி யாவரும் உட்கார்ந்திருந்தனர். பத்மலோசனன் அப்பையனைப் பார்த்து அவன் தனது தனயன் தானென்று தெரிந்துகொண்டு நாராயணிதேவி தனக்குக் கொடுத்திருந்த கருநெய்தல் மலரை நாசித்துவாரத்தில் பிடிக்கவே,

அம்மலரின் வாசனையால் விஷம் இறங்கிவிட்டது. அவ்வாலிபன் தூங்கி எழுந்திருந்தாற்போல் எழுந்திருந்து உட்கார்ந்தான். இப்படி அவன் எழுந்துட்கார்ந்ததைக் கண்டு அரசனும் அந்நகரத்தாரும் அன்றையதினத்தை ஒரு உற்சவமாகக் கொண்டாடினர். ஆதிசேஷனும் அரசனும் பிரஜைகளும் பங்கஜலோசனனைத் தேவாம்சமென்று நினைத்து அவருக்கும் மகா உபசாரஞ் செய்தனர். இவ்வாறு புகழடைந்த பங்கஜலோசனன் தன்மகனையும் மகளையும் பார்த்துக் களிப்புற்றுமந்திரி மாளிகையிலேயே இருந்தான். இம்மூவரும் ஒருவரையொருவர் அடையாளங் கண்டுகொண்டாலும், அந்தச் சமாச்சாரத்தை வெளியிடாது மௌனமாய் இருந்தார்கள். ஏனெனில் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்ற உத்தேசத்தையுடைய மதியூகிகள், சமயத்தில் தவிர மற்றையகாலத்தில் தங்கள் சுயரூபத்தைக் காட்டமாட்டார்கள்.

அந்நகரத்தரசனாகிய தாரவர்மா பூபாலன் குணத்தைக் கண்டு மகிழ்ந்து தனக்கு ஒரே குழந்தையாகிய ரூபாவதியை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்துத் தன் ராஜ்யத்தில் பாதியை அவனுக்குச் சீராகக் கொடுத்து முழுராஜ்யத்தின்விசாரணையையும் அவனிடமே ஒப்புவித்தான். மஹீபாலன் இவ்வாறு இராஜ்யத்தைப் பெற்ற பிறகு பத்மலோசனன் தன் விருத்தாந்தத்தை வெளியிட்டுத் தன் பெண்ணுக்குத் தகுந்தவிடத்தில் மணஞ் செய்வித்தான்.

ஒருநாள் பத்மலோசனன் தன் தனயனை நோக்கி, குழந்தாய்! இப்பொழுது நாம் உன் தாயாரைப் பார்க்க ஊருக்குப் போக வேண்டும்; உன் அன்னை உன்னையும் என்னையும் விட்டுப் பிரிந்து நெடுநாளாய்த் துக்கப்படுகிறாள். அவளுக்கு உனக்கு இராஜ்ஜியம் கிடைத்திருக்கும் சமாசாரம் தெரிந்தால் அவள் ஒருவேளை "என் மகன் மறந்து போய்விட்டானல்லவா" என்று நினைத்துக் கோபித்து, உன்னைச் சபித்தால் நாம் என்னசெய்வது? பெற்றோர்கள் எந்தப் பிள்ளைகளைச் சபிக்கிறார்களோ? அவர்கள் "முன்னுக்கு வருவதில்லை" என்று சொல்லி, பெற்றோர்களைச் சேவித்தால் அச்சேவை, காமதேனுவைப் போலவும், கற்பக விருக்ஷத்தைப் போலவும், சிந்தா மணியைப் போலவும், மனோரதத்தை யீடேற்றுமென்றும் சொல்லி, அதற்கு உதாரணமாக



தர்மவியாதர் கதையைச் சொல்லவே, பூபாலன் தன் தாயைத் தேற்ற ஊருக்குப்போகச் சம்மதித்து, தன் தர்ம பிதாவாகிய ஆதிசேஷனிடம் தன் ஜனன தேசத்திற்குச் செல்லவேண்டிய அவசியத்தைச் சொல்லி அவனிடம் இராஜ்யத்தை ஒப்புவித்து விடை பெற்றுக்கொண்டு தன் தகப்பனுருடன் இரவில் புறப்பட்டு ஊர்வந்து சேர்ந்தான். வஸந்த காலமானது எப்படி தர்சனம் கொடுத்துக் குயில்களுக்கு ஆனந்த முண்டாக்குகிறதோ, நாயகன் தன் தரிசனத்தைக் கொடுத்து நாயகிக்கு எப்படி சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறானோ, நல்ல அரசன் பஞ்சகாலத்தில் தரிசனம் கொடுத்து ஜனங்களுக்கு உணவளித்து எப்படி களிக்கச்செய்கிறானோ, அவற்றைப்போலத் தன்தாயாருக்குத் தரிசனம் கொடுத்து ஆனந்த முண்டாக்கினான். பத்மலோசனன் நடந்த விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய்ச் சொல்ல, இஷ்டமித்திரர்கள் யாவரும் கேட்டுச் சந்தோஷித்துப் பூபாலனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினார்கள். பின் பூபாலன் தன் தாயாருடன் சிறிதுகாலம் வசித்திருந்தான்.

இவ்வாறு சில நாட் சென்றபின் பூபாலன் தன் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு தன் மாமனார் ஊராகிய தேவபுரம் வந்து சேர்ந்தான். பூர்ணசந்திரன் தன் தரிசனத்தால் சமுத்திரத்திலுள்ள ஜலலக்ஷ்மியை எவ்வாறு களிக்கச் செய்கின்றானோ, தாமரைப் பூக்களையும், சக்கிரவாகப் பறவைகளையும், கதிரவன் எவ்வாறு களிக்கச்செய்கின்றானோ, சகோரபக்ஷியைச் சந்திரன் எவ்வாறு சந்தோஷிக்கச் செய்கிறானோ, அவ்வாறு பூபாலன் ஜனங்களுக்குத் தரிசனம்கொடுத்துக் களிக்கச்செய்து பெற்றோர்களும் தன்னுடன் வாழ, ரூபாவதியுடன் இன்பமாய் வாழ்ந்து கொண்டு இராஜ்ஜியத்தை நீதிவழுவாமல் பல்லாயிரமாண்டு பரிபாலனஞ் செய்து கொண்டிருந்தான். சுபமஸ்து. முற்றும்.

யம். யம். நாராயணசாமி ஐயர்.

முடி கொண்டான்.

## தாராபாய்.

(முன் தொடர்ச்சி)

தனக்கு வெற்றியைத் தந்தது பகைவர்மேல் தான் எறிந்த எறிபடையன்று; ஆனால் தான் இதுகாறும் விசுவசித்துக் கடைப்பிடித்து வந்த நடுவு நிலைமையின் பயனாகிய கடவுள் கிருபை யென்று ப்ரிதிராயுக்கு மனதில் நன்றாய்ப்பட்டது. மழையின்றிப் பயிர்கள் விளையா. பயிர் விளைச்சலின்றி உயிர் வாழ்க்கை இல்லாதது போல நடுவுநிலைமையற்ற அரசாட்சியில் குடிகள் க்ஷேமமாகவிருக்கைக்கு அசாத்தியமாகும். ஆதலின், குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்திலும் நடுவு நிலைமைப் பொருந்து மன விருத்தியையுடையனாய் விளங்கினன் ப்ரிதிராயென்னும் நீதியான். நியாயச் செய்கைகளை அநியாயச் செய்கைகளினின்றும் பிரித்து உணரும் வண்ணம் ஒற்றர்களை நியமித்ததுமன்றித் தானும் வாதிப்பிரதிவாதியாகிய "இருவர் தஞ் சொல்லையும் எழுதகம் கேட்டே" இருவருக்கும் பொருந்த" உரைக்கும் ஆற்றலுடையோன் என யாவராலும் மதிக்கப்பட்டுவந்தான். இஃதன்றியும் குடிகளைப் பிறர்வருத்தாமற் காத்துத் தானும் வருத்தாமல் ஆதரவுசெய்து அவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு விவசாயம், வர்த்தகம் முதலிய தொழிலீட்டும் தொழில்களைப் புதுக்குதலிலும், நூதனமாயுண்டாக்குஞ் சூழ்ச்சியிலும், அதிக சமர்த்தனாய்க் காணப்பட்டான்; மன்னுயிரைத் தன்னுயிரெனக் கருதும் சுபாவசித்த முடையோனாகலின் தனது குடிகளைச் சற்றேனும் இடுக்கண் அணுகாமல் காத்து அவர்கள் நன்மையையே அல்லும்பகலும் கருதினவனாய்ச் செங்கோலோச்சி வந்தமையின்,

"குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன
னடிதழீஇ நிற்கு முலகு" என்று நமது வள்ளுவனார்

கூறியிருக்கும் வண்ணம் குடிகளும் ப்ரிதிராயை விடாது பற்றி நின்றனர். மேலும் சதிபதிகளாகிய தாராபாயும் ப்ரிதிராயும் காமவிச்சையினாற் புணர்ந்து பன்றி பலகுட்டி பெறுவது போலப் புதல்வர்களைக் கலகலவெனப் பெறுவதே வாழ்நாளின் பயனெனக் கருதாதவராகலின், சாஸ்திரத்தில் விதித்திருக்கும்வண்ணம் மாதம் இருமுறை புத்திரோற் பத்திக்காக ஒருபடுக்கையிற் சயனித்து, விருந்தோம்பல், சாதுக்களைச் சன்மானித்தல், தேவபூஜை, குடி-



யோம்பல் முதலிய கிருகஸ்தாஸ்ரம தர்ம விதிகளை அன்புடன் அநுஷ்டித்து வந்தனர். இவ்வாற்றால் அவ்விருவரும் கடவுளுடைய திருவருளுக் குரித்தானவராகி, சித்த சாந்தியைப் பொருந்திப் பரமான இன்பவெள்ளத்தில் வைகியிருந்தனர்.

இச்சுக வாழ்க்கையானது நீடூழியில்லாமற் போயிற்று. இத்தரணியில் பாபிகள் நீண்ட ஆயுளுடையாராகவும் புண்ணியசீலர்கள் அற்ப ஆயுளுடையோராகவும் காணுதல் சகசமன்றோ? சாயுஜ்ஜிய பதவியை நல்லோர்க்கு ஈயும் வண்ணம் அவர்களுக்கு விஷய இச்சையில் விரக்தி யுண்டாக்கி எம்மட்டும் அன்னோரால் உலகோபகாரம் புரியப்பட வேண்டுமோ அம்மட்டும் செயவிடுத்து உயர்ந்த அந்தஸ்தை வகிக்கும் வண்ணம் உயிரைத் துறக்கச் செய்தல் ஆக்கி அளித்துத் துடைக்கும் கடவுளுடைய கிருபா கடாக்ஷமன்றோ? இதனை யோராது மூடர்கள் கடவுளை நிந்திப்பர் அவர்கள் தோடாநாட் டரசாட்சியை இரண்டாண்டு நடத்திவந்தனர். அப்பொழுது ப்ரிதிராய் சகோதரியண்டையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அச்சகோதரி ப்ரவுராய் என்னும் ஒரு தூர்த்தனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தனள். அவன் கூடா வொழுக்க முடையோனாகலின் தன் மனைவியை அதிகச் சீர்மாறு செய்து வந்தான்; இவ்வித ஹிம்சையைச் சகியாதவளாகித் துயரத்தினின்றும் மீட்கக் கூடியவன் தனது சகோதரனாகிய ப்ரிதிராய் தவிர வேறொருவனுமிலனென மனதிற் பட்டமையின், அவனுக்குக் கீழ்க்கண்டிருக்கும் நிரூபத்தை வரைந்தனள்.

"பிரிய சகோதரனே! என்னுடைய புருஷன் செய்யும் அக்கிரமம் என்னால் பொறுக்க முடியவில்லை; அவன் ஓயாக் குடியனாய் எனது வாயினாற் சொல்லவுங் கூசும்படியான கிருத்தியங்களைப் புரிந்து கொண்டு வருகின்றான். என்மீது உனக்குக் கிஞ்சித்து அன்பிருக்குமாயின், நான் படுங் கஷ்டத்தினின்றும் என்னை விடுவித்து இரக்ஷிக்கக் கடுகியே வருவாயாக". இந்தக் கடிதம் ப்ரிதிராயுக்குக் கிட்டினவுடனே தனது சகோதரி வீட்டிற்குப் போகப் புறப்பட்டான். தன் சகோதரி படும் இம்சையை நேரில் கண்டு அவள் கொழுநனைக் கண்டித்து அவன் இதுகாறுஞ் செய்து வந்த அடாத காரியத்திற்காகவும், இனிமேல் அவ்விதம் நடந்து கொள்வதில்லையென்பதற்கு அறிகுறியாகவும் தனது சகோதரியின் பாதரக்ஷையைச் சிரசுமேல் வைத்துக் கொள்ளும்படி ப்ரவு-

ராயைப் பல வந்தப்படுத்தினன். ப்ரவுராய் என்ன செய்வன்? தனக்கிழுக்குண்டாகுங்காரியத்தைச்செய்யச் சற்றும் மனமில்லாத வனாய்த் திகைத்தனள். ப்ரிதிராய் என்பவனுடைய சௌரிய பராக்கிரமங்களை நன் கோர்ந்தவனாதலின், அவன் சொல்லிய வண்ணம் செய்யாவிடில் மரணம் நேரிடும் என்னும் பயத்தால் பிடிக்கப்பட்டவனாய் அதிக மன வருத்தத்துடன் தனது மனைவியின் பாதாஜ்ஞையைத் தலைமேற் கொண்டான்; இவ்வாறு தன்னை மானபங்கம் செய்ததற்கு ப்ரிதிராயை எவ்வண்ணமாயினும் கொலை செய்ய வேண்டுமென்னும் எண்ணத்தை மனதிற் கொண்டனன். அந்தப் ப்ரவுராய் என்னும் கொடியோன் கபட சித்தனாய் ப்ரிதிராயுடன் அன்புடன் பேசிக்கொண்டிருந்து தன் வீட்டில் விருந்துண்ணும்படி கேட்டுக் கொண்டனன். நிஷ்களங்க மனதுடையவனாகிய ப்ரிதிராய் அதற்குச் சம்மதித்தனன். சாப்பிடப் பரிமாறின உண்டிகளில் ஒன்றாகிய பான பதார்த்தத்தில் விஷங் கலந்து வைத்தான் ப்ரிவுராய் என்னும் துராத்மன். இப்பானத்தை அதிகப் பிரீதியுடன் கொடுப்பவன் போலத் தானே ப்ரிதிராயுக்கு ப்ரவுராய் எடுத்துக்கொடுத்தமையின், யாதொரு சமுசயமுமுதியாத மனதுடைய ப்ரிதிராயும் அப்பானத்தைக் களிப்புடன் வாங்கி உட்கொண்டனன். சகோதரியின் வீட்டை விட்டு முற்றத்திற்கு வந்தபொழுது ஸ்மாரணையற்றுத் திடீரென்று ப்ரிதிராய் கீழே விழுந்தான். ப்ரவுராய் செய்த மோசம் அப்பொழுது தான் தெரிய வந்தது. தாராபாயும் அவள் மாமனாரும், தந்தையும் இச்செய்தியைக் கேட்டு உருண்டு புரண்டு ஓடிவந்து அநேக அவிழ்தங்களைக் கொடுத்தும் பயனிலதாயிற்று.

“வினைப்போக மேயொரு தேகங்கண்டாய் வினை
தான் ஒழிந்தால், தினைப் போதளவுநில்
லாதுகண்டாய்” என்று பட்டினத்தடிகள் கூறிய வண்ணம் ப்ரிதிராயுக்குப் பிராரப்த கருமம் முடிவு பெற்றமையின், சித்தூர் நாட்டார் புலம்பிக் கொண்டிருக்கக் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்த தாராபாயின் மடிமீது தனது ஆருயிரைத் துறந்து விண்ணுலகம் புக்கனன் ப்ரிதிராய் என்னும் மன்னன்.

தனது நாயகன் விண்ணுலகம் புக்கதைக் கண்ணுற்ற தாராபாய் தன்னுயிரை வைத்துக்கொண்டு தாணிமிசை இனித் தரித்திருப்பளோ? உடல்சாயை உடலை விட்டு இருக்க இயலுமோ?



தான் தனது புருஷனுக்குச் சாயை என்று எண்ணியிருந்தமையின், தனது நாயகன் நாட்டமின்றி வேறு நாட்டந் தாங்க இயலுமோ.

“தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு
தெழுவாளா” யிருந்த தாராபாய் தனது நாயகன் உம்பருலக மடைந்த பின்னும் அரைக்கணம் தரைக்கணுற்றிடுவளோ? ஆதலின், தாராபாய் தன் கணவனுடன் உடன் கட்டையேறத் தீர்மானித்தனள். இவளிருந்த நன்மைக்கும் இவள் பேரிலிருந்த பேரன்பினாலும் இவளது பிதா, மாமனார் அருத்துக்கசாகரத்தில் படிந்திருந்த பிரஜைகள் முதலாயினோர் உடன் கட்டை ஏறாமலிருக்க மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறு மன்றாடிக் கேட்டோருக்கு இன்னலை விளைவிக்க, தாராபாயின் அன்புருவமான மனம் இடங்கொடுக்கவில்லை; தான் கொண்ட கருத்தையும் விட மனமில்லை. இருதலைக் கொள்ளியின் மத்தியில் அகப்பட்ட எறும்பு போலத் தவிக்கலாயினள், செய்வது ஒன்றும் தெரியாமல் ஒரு முகூர்த்த நேரம் திருவருளைச் சிந்தித்து இவ்வாறு கூறலாயினள்:—“ஒரு ஸ்திரீ குழந்தைப் பருவத்தில் பெற்றோர் வசமாகவும், மங்கைப் பருவத்தில் கணவன் வசமாகவும், கணவனிறந்த பின் குமாரன் வசமாகவும் இருக்க வேண்டுமென்பது சாஸ்திர சம்மதம். என் தகப்பனோ வானப் பிரஸ்தனாயினன். எனக்குக் குமாரனோ இல்லை. கணவனோ தெய்வகதியால் என்னைப் பிரிந்து விட்டனன். யான் யார்வசத்தில் இருக்கப் பெறுவேன். இப்பூமண்டலத்தில் இனியானிருந்து என் செய்வது? கிருகஸ்தாஸ்ரம தர்மத்தை நடத்துவது இனி இயலாது. எனக்கு விடய போகங்களில் இச்சையுமில்லை. எனக்கு இத்தேகமும் இனிமேல் உலக வாழ்க்கையும் வேம்பாய் விட்டன. உயிரகன்ற உடலால் எவ்விதம் பிரயோசனமில்லையோ அவ்வாறு என் பிராண நாதன் என்னை விட்டு அகன்றமையின் நான் சவமேயாய், விளங்குவன். இதற்கு ஐயமின்று. நானும் துக்காக்கிராந்தியாயிருப்பேன்; நீங்களும் மனக்கிலேச மடைவீர்கள். இது திண்ணம்; ஆதலின், என்னருமைச் சுற்றத்தார்களே! பிரிய முள்ள பிரஜைகளே! உடன் கட்டையேறச் சம்மதமளிப்பீர்” என்று இவ்வாறு தாராபாய் கதறி வினய பூர்வகமாய் மன்றாடிக் கேட்டுக் கொண்டனள். பிதா முதலியோர் இதற்கு மாறுத்தாஞ் சொல்ல இயலாமல் மௌன முற்றிருந்தனர்.

உடனே காஷ்டமொன்று சித்தமாக்கப்பட்டது. ப்ரிதிராய் சவம் அதின் மேல் வைக்கப்பட்டது. பிரேத சடங்குகள் யாவற்றையும் தாராபாய் அதிக அமரிக்கையான மனதுடன் செய்து முடித்தனள். பிறகு வேதியர்கள் மந்திரங்களை ஓத ஆரம்பித்தனர். வாத்தியங்கள் கோஷிக்கவும், ஜனங்கள் ஆரவாரிக்கவும் தாராபாய் காஷ்டத்தைப் பன்முறை வலம் வந்து அதன் மீதேறி தன் கணவன் சவத்தின் பக்கலில் படுத்துக்கொண்டு காஷ்டத்திற்கு தீமூட்டும்படி கட்டளையிட்டனள்.

அவ்வண்ணமே காஷ்டத்தில் அக்கினியை மூட்டவே பெருந்தீயுண்டாயிற்று. தீயின் சுவாலை சப்தித்தது. கட்டைகள் பிளந்த சப்தமும் உண்டாயிற்று. தாராபாயின் தேகமோ அசைவற்றுக் கிடந்தது. பதிவிரதைப்ரனமையின் தன் தேகத்தில் தீப்படாமுன் உயிரைத் துறந்து விட்டனள் போலும்! இல்லாவிடில் தேகமசையாது எவ்வாறு இருக்கக்கூடும்? மரண பயம் சிறுவயது முதற் கொண்டே இல்லாமையின் மேல் நோக்கமே என்றென்று மதிகரித்திருந்தமையின், இஷ்டப்பட்ட போது தேகத்தை விடக்கூடிய சக்தி தாராபாய்க்கு இருந்ததாகத் தெரியவருகின்றது; இதுவன்றோ கற்பின் பயன்.

P. Manickasawmy Moodr: B. A,
Rangoon.

## நீதி சாரம்.

### கேள்வி.

கேள்வியாலுண்டாகும் விவேகச்செல்வம் நிலைபெற்றிருப்பது போலப் பொருளினாலுண்டாகுஞ் செல்வம் நிலைபெற்றிராது.

கேள்வியை யிச்சிக்கின்ற புத்திமான்கள் ஆஹாரத்தினிடத்து விருப்பங்கொள்ளார்கள்; ஏனெனின், நல்லசொற்களையுடைய வசனம் மதுரமான அம்ருதபானத்திற் கதிகமானதென்று பெரியோர்களுரைத்திருப்பதினாலேதான்.

நல்ல விவேகிகளுடன் தொண்டுபட்டுக் கேள்விபெற்றவர்கள் துன்பத்திற் கிடங்கொடார்கள்.

கல்வியில்லாத ஒருவனுக்குப் பெரியோர்களினது கேள்வி மாத்ரமுண்டாயிருக்குமாயின், அது தளர்ச்சிவந்தபோது காக்கும்.



ஒழுக்கமுடையவர்கள் சொல்லியசொல் ஆபத்து வந்தவிடத்தில் ஊன்றுகோல்போ லுதவுமாதலால், அச்சொல்லினிடத்து புத்தியை யிடைவிடாது செலுத்தவேண்டும்.

கேள்வி கொஞ்சமாகவிருக்கினும், அது நன்மையாகவிருக்குமாயின், மிகுந்த பெருமையுண்டாக்கும்.

கல்வியிலுங் கேள்வியிலும் மேன்மையடைந்தவர்கள் தாமஸ குணத்தினாலே பிழைபடவறிந்தாலும் அறிவுவிளங்காச் சொற்களைச் சொல்லார்கள்.

நுட்பமான நல்ல கேள்வியில்லாதவர்கள் தம்மைத்தாமே புகழுவதல்லது பிறரால் புகழப்படார்கள்; அதனாலவர்கள் ஹீனத்வத்தை யடைந்து நாணமுற்றிருப்பார்கள்.

நிரம்பக் கற்றோர்களுடைய வாய்மொழிகளைக் கேளாதவர்களது செவி மற்ற ஓசையைக் கேட்குமாயினுஞ் செவிடாகவே மதிக்கப்படும்.

அறுசுவைகளேயன்றிக் கேள்விச்சுவையறியாதவர்கள் இறந்தாலும் வாழ்ந்தாலும் உலகத்திற்கியாதொரு லாபமும் நஷ்டமுமில்லையென்று பெரியோருரைத்திருக்கிறார்கள்.

ஆதலால், பெரியோர்களுடைய கேள்வி யெல்லாநன்மைகளையும் எளிதிலுண்டாக்குமென நம்பி, அதற்கு இடைவிடாது காது கொடுத்து நடக்க வேண்டும்.

## ராமன் என்னும் ராட்சச விரோதி.

(முன் தொடர்ச்சி).

"இன்றிரவு என்னுடனிங்கு நீ யிருக்கினும்
காலை வெளிச்சம் காண மாட்டாய்
உன்றலை மூளை உடைபடுமதனால்."

என்று சொல்லிக்கொண்டு இந்த ராட்சசன் அடுத்த அறையில் இங்குமங்குமாக நடந்துகொண்டிருப்பதைப் பையன் கேட்டான், "ஆ, ஆ, அப்படியா சொல்லுகிறாய்; இது ஒரு தந்திரமா? ஆனால் நானும் உன்னைப்போலவே புத்திசாலி" என்று ராமன் மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

பிறகு தன்படுக்கையைவிட்டு எழுந்து அந்த அறையை இருட்டிலேயே தடவிப்பார்த்தான்; அங்கே ஒரு பெரிய மரத்துண்டைக் கண்டான். இதைத் தான் படுத்திருந்த படுக்கையில் தனக்குப் பதிலாக வைத்துவிட்டு, படுக்கையின் பின் ஓர் இருண்ட மூலையில் ஒளித்துக்கொண்டான்.

இராத்திரி இந்த ராட்சசன் அறைக்குள்ளே வந்து ராமன் தனக்குப் பதிலாகக் கட்டையை வைத்துவிட்டுபோன படுக்கையின்மேல் ஒரு பெரிய தடியால் அநேக விசை அடித்தான்.

பிறகு ராமனுடைய எலும்புகளை எல்லாம் முறித்துவிட்டதாக எண்ணிக்கொண்டு ராட்சசன் மறுபடியும் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

மறுநாள் காலை ராமன்எழுந்து ராட்சசனிடத்திற்குப்போய், தனக்கு நல்ல அறையும் சுகமான படுக்கையும் கொடுத்து உதவி செய்து பட்சம் காட்டியதற்காக வந்தனம் செய்தான்.

ராமனைப் பார்த்த உடனே ராட்சசன் ஆச்சரியமடைந்தான். "நீ நன்றாய்த் தூங்கினையா? இராத்திரி ஏதாவது ஒரு விசேஷம் கண்டதுண்டா அல்லது கேட்டதுண்டா?" என்று கேட்டான்.

ராமன் சந்தோஷமாகச் சொன்னது:—"நான் ஒருவிசேஷத்தையும் காணவுமில்லை, கேட்கவுமில்லை; ஆனால், ராத்திரி ஒரு சின்ன எலி தன் வாலினால் மூன்று அல்லது நான்குமுறை என்னை அடித்தது என்று நினைக்கிறேன்."

இதைக் கேட்ட ராட்சசன் ஒரு பெரிய கிண்ணியில் பாலும் ரொட்டியும் கொண்டுவந்து சாப்பிடும்படி கொடுத்தான். ராமன் இதை அவனோடு சாப்பிடுவதற்கு இஷ்டப்படவில்லை; ஆனால் இதை அவனுக்குக் காண்பிக்கவும் விரும்பவில்லை; ஆகையால் ஒரு பெரிய பையைச் சம்பாதித்து அதைத் தன்னுடைய சட்டைக்குள் மறைத்துக்கொண்டான். ராட்சசன் இந்த ரொட்டியை வாயில்போடும் சமயத்தில் ராமன் அதைத் தன்னுடைய பையில் நழுகவிட்டான்.

ராமன் ராட்சசனைப்பார்த்து "ஐயா! நான் உனக்கு ஒரு வேடிக்கைகாட்டுகிறேன்" என்று சொன்னான். பிறகு ஒரு கத்தியை எடுத்து இந்தப் பையை அறுத்தான். அதிலிருந்து இந்த ஆகாரம் கீழே விழுந்தது. இராமன் இப்பொழுது சாப்பிட்ட உணவுதான்



வெளியே வந்தது என்று இதைப்பார்த்த ராட்சசன் நினைத்தான். பிறகு ராட்சசன் தானும் இதைச்செய்து காட்டுவதாகச் சொல்லி அந்தக் கத்தியை எடுத்துத் தன் வயிற்றண்டை செவ்வையாகக் கீறிகொண்டான். இதனால் அவன் கீழே விழுந்து இறந்தான்.

பின்பு ராமன் தன் வழியே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது பாண்டியராஜனுடைய குமாரனைச் சந்தித்து அவனோடு போய்க்கொண்டிருந்தான். இந்தக்குமாரன் தன்னிடத்திலிருந்த பணத்தை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்து உதவி புரிந்து வந்தான்.

இப்படிப் போய்கொண்டிருக்கும்போது ராமனைப் பார்த்து பாண்டிய குமாரனான முருகன், "நம்மிடத்தில் பணமில்லையே! இந்த இராத்திரி எங்கே சாப்பிடுகிறது, தூங்குகிறது?" என்று கேட்டான்.

"முருகு! நீ பயப்படவேண்டாம். என்னுடைய மாமன் ஒருவர் இங்கே வசிக்கிறார். அவர் உதவி செய்வார். ஆனால் அவர் மூன்று தலையுடைய ஒரு பெரிய ராட்சசன்" என்றான்.

இதைக் கேட்ட முருகன் "ஐயோ! இந்த வீட்டில் நாம் என்ன செய்வது, ஒரே கடியில் நம்மை இரண்டு பேரையும் கடித்துத் தின்றுவிடுவான்" என்றான். அதற்கு ராமன் "அவசரப்படாதே; நானே முன்னேபோய் என்ன செய்யவேண்டுமென்று பார்த்துவருகிறேன்; நான் திரும்பிவரும் வரைக்கும் நீ இங்கேயே இரு" என்று சொல்லிவிட்டு ராமன் தன் மாமன் வீட்டுக்குப் போனான்.

(வரும்)

வா-ஆறுமுக செட்டியார்,
முத்தியாலு பேட்டை, சென்னை.

## கோபமும் அதைவெல்லும் உபாயங்களும்.

பிறர் நம்மினும் மிக்கவராயிருக்கினும், நமக்குச்சமானமானவராயிருக்கினும், நம்மினும் குறைந்தவராயிருக்கினும், ஒரு காரியத்தைச் செய்தவிடத்து அது நம்முடையமனதுக்கு ஒவ்வாவிட்டாலும் நமக்குத் தீங்கை விளைத்தாலும் அவர்களை அந்தக்காரியத்திற்காகத் தண்டிக்க நாமே நம்மைத் தூண்டும் "தூர்க்குணமே

கோபம்" என்று சொல்லப்படும். இந்தக் குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒரு காலத்தில் உண்டாகும் என்று மனஸ்தத்துவ லட்சண சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். சகல உணர்ச்சிக்கும் மூலாதார ஸ்தானமாகிய மூளையினின்றும் பற்பல நரம்புகள் தேகமுழுவதும் வியாபித்திருக்கின்றன; இந்நரம்புகள் ஜீவமுக்ய நிலையாகிய மூளைக்கு உணர்ச்சி உண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகளென்றும், மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகளென்றும், இருவகையாயுள்ளன. ஒருவன் நம்மைத் திடீரென்று தோளில் குத்தினனென்று வைத்துக்கொள்வோம். நம்மை அந்தப்படி குத்தினவனை மறுபடியும் நாம் அதேமாதிரியாய்க் குத்தவேண்டியதென்று நாம் எண்ணங்கொள்வதற்கு முன்னமே அவனைக் குத்தவோ வேறே எதற்கோ வெகு சீக்கிரத்தில் நம்முடைய கை எழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக் குத்தியவுடனே அதிசீக்கிரத்தில் அவ்விஷயத்தை விழிப்பு நிலையில் ஆன்ம நிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் வேறே சில நரம்புகள் அதி அற்புதமான வேகத்துடன் இயங்கி நம்முடைய கரத்தைத் தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கரத்தை நாம் கிள்ளினால் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணங் கொள்ளாதிருந்தும் அவனுடைய கரம் உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையாகிலும் முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத் திரும்புவதையாகிலும் நாம் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம்; உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக்கொண்டு போய்த் தெரிவிக்கும் நரம்புகள், "மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமே மேலெடுத்துக் காட்டப்பட்டதற்குக் காரணம். ஒருவன் தன்மொழிகளினாலாவது, செய்கைகளினாலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியையுண்டாக்குங் காலத்து, உடனே அவனைத் திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறே யாதொரு தீங்கைச்செய்யவாகிலும் எழும் மன நிலைமைக்குத்தான் கோபம் என்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக் காரணம். ஒவ்வொருவனுக்-



கும் அவ்விருவகையான நரம்புகளும் அமைந்திருக்கின்றபடியினால் ஒவ்வொருவனுக்கும் கோபம் என்பது இயல்பில் உதிக்கத்தக்கதொரு குணமாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால் அவற்றிற்கும் கோபம் என்னுங் குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை முழுவதும் போக்குவது சாத்தியமில்லாத காரியமாயிருக்கினும் ஒவ்வொருவனும் அதைத் தன்னுடைய புத்தியினால் அடக்குதல்கூடும். அந்தப்படி அடக்காது விடுவோமாயின், பெருந்தீமைகள் நமக்கும் ஏனையோர்க்கும் சதா உண்டாய்க்கொண்டேவரும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பலகாரியங்களைச் செய்து கொண்டுவருகையில் அபிப்பிராயபேதத்தினால் நம்மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் பிறந்துகொண்டேயிருக்கும். அதைக்கூடுமானவரையில் அடக்கமுடியவேண்டியது நம்முடைய கடைமை. அறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்று கூறாமல் ஆறுவது (தணியத்தக்கது) சினம் என்று கூறிய ஔவையின் அருமையையோசித்துப்பார்க்கையில், மனிதனுடை மநஸ்தத்துவ லட்சணத்துக்குச் சினம் இயற்கையான குணமென்பதையும், அதை அறவேபோக்குவது எப்படிப்பட்டவனுக்கும் அசாத்திய மென்பதையும்; அதை ஒவ்வொருவனும் தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்கவேண்டியதென்பதையும், அறிவிக்கவே அம்மாதுசிரோமணி அங்ஙனம் கூறினரென்று தெரிகிறது. ஒருபெரியவர் ஒரு ஊரில்யார் என்னசொன்னபோதிலும் கோபிக்கிறதேயில்லை என்று பிருது கூறிக்கொண்டிருந்தார். அதைக்கேள்வியுற்ற ஒருஅகசியக்காரன் அவரிடத்திற்சென்று, "சுவாமீ தங்களுக்கு எப்போதும் கோபம் வருகிறதில்லையா?" என்றான். அவர் அவனைநோக்கி 'அதிசாந்தமாய், அப்பா! எப்போதும் வருகிறதில்லை", என்றார். மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அதேமாதிரியாய் விடை பகர்ந்தார். மீண்டும் மீண்டும் முப்பது நாற்பதுதரம் அவன் அதேகேள்வியைத் திரும்பத் திரும்ப மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டேயிருந்தான். அப்போது அப்பெரியவர் "சீ! சீ! சீ! நீ முட்டாளாயிருக்கின்றாய், எத்தனை தட்வை உனக்கு நான் உத்தரம் சொல்லுகிறது? போ," என்று முகங்கடுத்துக் கூறினார்.

இதைக்கண்டமாத்திரத்தில் அவன் சுவாமீ! "இதோ தங்களுக்கு
இப்போது கோபம் பிறந்ததே, எப்போதும் கோபிப்பதில்லை
யென்னும் பிரதாபம் வெட்டவெளிச்சமாயிற்றே" என்று பரிகா
சம்செய்து கொண்டேபோய்விட்டான். ஆகையால் எப்படிப்பட்ட
வனிடத்தும் ஒரு காலத்தில் கோபம் தன்னையறியாமலே உதிக்
கும். காமக்குரோதாதிகளை அறவே விட்டொழிந்த துறவிகளுக்
கும் சினம் ஒவ்வொருகாலத்தில் உண்டாதலியற்கை; ஆனால் அவர்
களுடைய கோபம்பிறருக்கு நன்மையையே விளைக்குமென்றும்
ஆதலால் அதை மறக் கருணையென்றும் சாஸ்திரம் கூறுகிறது.
கோபம் பெரும்பாலும் மனோதிடமற்றவனுக்கும் அஹங்காரிக்
குமே அடிக்கடி உண்டாகும். பாலியர்களுக்கும் வயோதிகர்களுக்
கும் அடிக்கடி சொற்பவிஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்
டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோ
திடமும் தேகதிடமும் அத்தியாவசியகமென்று தெரியவருகிறது.
கோபம் உண்டாகும்போது மாத்திரம் அதைச்சற்றே அடக்கி
விட்டால் அதன்வேகத்துவம் வெகுவாய்க்குன்றும். ஒருவரைக்
கோபிக்கமனமெழும்போது "நெடுங்கணக்கை ஒருவிசை முகபா
டமாகச் சொல்லிவிட்டுப் பிறகு கோபித்துக்கொள்" என்று ஒரு
தத்வசாஸ்திரியார் கூறுகிறார். அதை ஒருதரம் சொல்லி முடிப்
பதற்குள்ளாகக் கோபம் தணிந்தே போய் விடுமென்பது அனுப
வப் பிரசித்தம்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்கும் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ"

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே"!

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்து மூதறி
ஞர்பலவாறாகக் கூறியுளார். உலகசரித்திரமும் அதற்குச் சாட்சி
புகர்த்தக்கதா யிருக்கிறது.



ஒருவன் நமக்கு யாதாவதொரு தீங்கானகாரியத்தைச்செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டல்லவா நாம் அவனைக்கோபிக்கின்றோம்? நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மா இருந்து விடுவோமாயின், நமது பொறையுடைமையே அவன் மனச்சான்றுடையவனாயிருந்தால் அவனது மனதையறுக்கும்; இது மனஸ்தத்துவ லட்சணம். அந்தச்சமயத்தில் நாம்கோபித்துக் கொண்டு அவனுக்குப் பிரதிபலனாக யாதாவதொரு தீங்கைச் செய்வோமானால் அப்போது எவ்வளவு நமக்கு மனச்சந்துஷ்டி உண்டாகுமோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமாய்ப் பொறையுடைமையாற் பெருமகிழ்வு பின்புண்டாகும். இக்கருத்தையமைத்தே,

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்." என்றும்

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்." என்றும்

தெய்வப்புலவர் தமது தமிழ்மறையில் கூறியுளார். அன்றியும் மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் தனக்கும் தீமையைத் தரத்தக்கனவாயிருக்கின்றது. அவற்றுள் சில தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாயும், மற்றும் சில பிறர்க்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. இவ்விருவகைக் குணங்களுக்குள் தனக்கே பெருத்த ஹானியைத்தரத்தக்கனவற்றிலெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையினால்தான்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்".

என்று நாயனார் தமது உத்தரபாஷா வேதத்திற் கூறியிருக்கின்றனர். தன்னிலும் மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக் கூடாதென்று நாம் வற்புறுத்திக்கூற வேண்டுவதில்லை; ஏனெனில் அதனால் விளையும் பலப்ராப்தியே அவனுக்கு வெகு சீக்கிரத்தில் புத்தி கூறத்தக்கது! ஒருவன் தன்னிலுங் கல்வி, செல்வம், பலம் முதலியவற்றில் குறைந்தவனிடத்துச் சினங்கொள்ளா திருத்தலே பெருமையாகும். அதுதான் பொறையுடைமைக்கு அழகு "எல்லா, பொறுக்கு மதுகை யுரனுடை யாளன்,

பொறுக்கும் பொறையே பொறை" என்று மேலோர் கூறியிருக்கிறார்கள்.

இவ்வளவு தீயதாக ஒரு குணத்தை ஜகதீசன் மனிதனிடத்து ஏன் அமைத்துவைக்க வேண்டும்? என்னும் வினா நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு காலத்தில் நிகழக்கூடும் அல்லவா? லௌகிக தந்திரத்தை நடத்திக்கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம் முற்றுமே இல்லையென்று வைத்துக் கொள்வோம். அவன் கூட்டுறவு கொள்ளும், ஏனையோரிடத்துப் பொய் களவு கொலை முதலிய தீக்குணங்களிருக்கிற படியினால் அவற்றினின்றும் அவன் தப்பிப் பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தி னிராமல் ஓட்டுவதற்காவது அவனிடத்தில் சிறிது சினம் இருத்தல் அத்தியாவசியகமாம்.

ஒருவன் தன்னுடைய அருமைப்புதல்வன் தீயகாரியங்களைச் செய்யக் கண்டகாலத்து உடனே அவனைத் தண்டிக்கவேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங்கடமையல்லவா? அவனை அந்தப்படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே இல்லையானால், அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத்தான் பெரியோர் மறக்கருணை என்பார். ஆகவே, நடுவுநிலைமையுடனிருந்து இந்தவிஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்துச் சினம் வரம்பு கடந்துசென்றால் ஜனஸமூகவாழ்க்கைக்கும் சினங் கொள்வோனுக்கும் பெருங்கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்களிருக்கிறபடியினால் அவற்றை அளவு கடக்க வொட்டாமைக்குச் சினம் சிறிதிருத்தல் ஜனஸமூக வாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும் தற்காப்பிற்கேனும் சினம் முற்றுமே யில்லாமற் போகாதென்றும், அதைக் கூடியவரையில் தணித்துக்கொண்டே வருவதுதான் உத்தமபுருஷனுடையகுணமென்றும் தெரியவருகின்றன. ஆனால் விவேகிகள் முக்யமாய், தம்மையறியாமல் ஒருபோதும் கோபம் வரும்படி நடந்து கொள்ளுதல்கூடாது; ஏதேனும் குற்றங்கள் நேர்ந்தாலும் தாமே கோபத்தை வருவித்துக்கொண்டு வெளிக்குமட்டும் கோபம் வந்தாற் போலக்காட்டிக்கொண்டு தம்மனம் (உள்) குளிர்ந்தே இருக்கும்படி பழகவேண்டும். ஒருகால் தம்மை மீறிக்



கோபம் வந்துவிட்டால் உடனே கண்ணாடியை எடுத்துப் பார்த்துக்கொண்டால் தன் முகம் பிரம்மஹத்திபோல் விகாரமாயிருப்பதைப்பார்த்துத் தாமே வெட்கித் தலைகுனிவர். அவிவேகிகட்குத் தாமே கண்ணாடி பார்த்துக்கொள்ளும்படி தோற்றுவது அருமை. ஆகவே பக்கங்களிலுள்ளவர் கண்ணாடியைக் கோபித்தவர் முன் காட்ட உடனே கோபந்தீரும். இவ்வாறு சில பிடிவாதமுள்ள குழந்தைகள் (புத்திசாலிகளாயினும் நற்பழக்கமின்மையால் கோபிக்கும் குணம் மிகுந்திருந்ததைப்பார்த்த) என்னு கண்ணாடிப் பிரயோகத்தினால் உடனே கோபம் மாறி வெட்கமும் சந்தோஷமும் ஏககாலத்தில் உண்டாகி எனக்குக் கீழ்ப்படிந்தனர். ஒவ்வொருவரும் தந்தம் அநுபோகத்தில் பார்க்கவேண்டுமென விரும்பி இந்த வியாஸத்தை முடித்துக்கொள்ளுகின்றேன்.

T. K. இராமபத்ரசர்மா,

காளையார் கோயில்.

## சுகத் தெளிவுரை

(முன் தொடர்ச்சி)

### மனிதனுடைய நன்றியின்மை.

மாந்தர்காள்! மதிப்பு, அவமதிப்பு, வெற்றி, தோல்வி எனவரும் எண்ணங்களையெல்லாம் தூரவொதுக்கி இம்மொழிகளைக்கேட்டு அவற்றின் ஸாரத்தைக் கிரஹித்துக்கொள்ளுங்கள். மனிதன் நன்றிகெட்டவன்; தான் பிறத்தற்குக்காரணமாயிருந்து, உதவியற்ற குழந்தைப் பருவத்திலிருந்து காளைப்பருவம் அடையும் வரை தன்னை அன்போடும் கவனத்தோடும் போதித்து வளர்த்த பெற்றோரைக் கனப்படுத்துகின்றானல்லன்; இவர்களுக்கு அன்போடு அடங்கி நடக்கின்றானுமல்லன்; அவர்களுடைய மூப்புப் பருவத்தைத் துக்கசாகரத்தால் நிரப்பி, அன்புசெய்யப்படாமலும் மதிக்கப்படாமலும் கவலைகள் தணிக்கப்படாமலும் அவர்கள் மரண மடைவதைப் பார்த்துக்கொண் டிருக்கின்றான்; தன் பெற்றோர்களைத் துன்பத்தாலும் துயராலும் குறைவுறும்படி விட்டு, ஆத்மாவுக்கு மறுவை யுண்டுபண்ணவல்ல சுகங்களில் தன் பொருளையெல்லாம் ஆடம்பரமாய்ச் செலவிட்டு, வீணுக்கு

கின்றான். தன்னுடைய தாய் இறந்த உடனே அவளுடைய சா
மக்கிரியைகளைச் சிறப்பாகவும் இடம்பமாகவும் நடத்தச் சித்தமா
யிருக்கும் இவன், ஜீவியகாலத்தில் அவளை யலையவிடுகின்றான்.
மனிதன் தனக்கு ரக்ஷையைத்தரும் அரசனைக் கனப்படுத்தி, அவ
னுடைய கட்டளைகளை அன்போடும் விசுவாசத்தோடும் ஏற்றுக்
கொள்ளுகின்றானில்லை; தன்னுடைய அரசனைமீறி யவனை யிகழுந்
குறிதோன்ற நகைக்கின்றான். எங்கே பணிகளுக்கு லாபமிருக்கின்ற
தோ, அங்கேதான் அவனுக்கு அன்புமிருக்கின்றது; பெற்றோரிடத்
திருந்து பூஸ்திதி முதலிய ஐசுவரியங்கள் ஏராளமாய் வருவதற்கு
வழியுண்டென்னில், பிள்ளைகள் அவர்களைக் கனப்படுத்துப்புடுகின்
றார்கள். பெண்டாட்டி, இளமைப்பிராயமுடையவளாய், செல்வவான்
வீட்டுப்பெண்ணாய், அழகிற்சிறந்தவளாயிருப்பவளாயின், புருஷனால்
நேசிக்கப்படுகின்றாள். புருஷன், ஏழையாயாவது நோயாளியாயாவது
கிழவனாயாவதிருப்பனாயின், மனைவியால் இகழப்படுகின்றான். ஆடு
மாடுகள் வேலைசெய்யச் சக்தியற்றபொழுது, புறத்தே யொதுக்கி
யடிக்கப்படுகின்றன; அன்றேல், கவனக்குறைவால் மெள்ள
மெள்ளக் கொல்லப்படுகின்றன. மனிதன் நன்றி கெட்டவனா
யிருத்தலின், தனக்கு லாபந்தராதவைகளைப் பேணுகின்றானில்லை.
மனிதன் ஐசுவரிய அதிகாரங்களோடிருக்கும்பொழுது அவனைப்
பக்கத்திலுள்ளவர்களெல்லாம் நன்குமதிக்கின்றனர். ஆனால் கட
வுளது திருவருட்செயலால் அவனுக்குக்கெட்டகாலம்வந்து கிட்டு
மாயின் அவனைக் கையால் தீண்டுவாருமில்லை; அவனை யணைத்துச்
சமாதானஞ்சொல்லித் தேற்றுவாருமில்லை. அவனுக்கே பழைய
நல்லகாலம் திரும்பிவிட்டதாயின், சிநேகக் கூட்டங்கள் அன்போ
டும் மரியாதையோடும் வந்து அவனை மொய்ப்பார்கள். மனிதன்
தன்னிடத்து நன்றியின்மை குடிகொண்டிருக்கின்றபடியால், எல்லா வித
வாழ்க்கை நிலைகளிலும் ஆத்மா தன் சுபாவம் மாறாமல் உள்ளபடி
யே யிருக்கின்றமையை யறிகின்றிலன். செல்வமும் அதிகார
மும் வரும்; போம்! ஆத்மாவோ, நிர்விகாரியாய் அமர்ந்திருக்கின்
றது. தன்னுடைய சொந்த பிதா, மாதா, மற்றையோ ரென்றிவ
ரிடத்துள்ள நிர்விகார ஆத்மாவை வணங்கமாட்டாதவனாகிய மனி
தன், தன் தோற்றம் ஜோதியாகவுடைய பரம் பொருளாகிய
லோக பிதாமாதாவை எவ்வண்ணம் வழிபடுவான்? ஜோதியாக
வெளிப்பட்டிருப்பதும், இத்தேசத்துப் பூர்வீக ஜனங்களால்
விராட்டு என்று சொல்லப்பட்டதுமாகிய ஸர்வவியாபக ஈசுவரன்



பிரபஞ்சத்திற்கு மாதாவாகியும் பிதாவாகியும் இருப்பதோடு,
ஆசாரியராகியும் கர்த்தாவாகியும் ஆத்மாவாகியும் இருக்கின்றார்.
அவர் ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயும் ரூபியாயும் அரூபியாயும்
எவ்விடத்தும் எப்போதுமிருக்கின்றார். மனிதன் நன்றி மறந்த
வனாயிருத்தலின், ஒருவிசைகூட அவரைத் திரும்பிப்பார்த்து அவர்
யாரென்று கேட்கின்றானில்லை. மனிதனுடைய நன்றியற்ற தன்மை
யின் கொடுமையை அளவிடப்போமோ? அவன் ஒரு சமயமாவது
அன்போடும் வணக்கத்தோடும் அவரை வழிபடற்காகத் தலையைத்
தாழ்த்துகின்றானில்லை; அவரை யிகழ்ச்சியாக வெண்ணித்தான்
அவமதிப்பது தோன்ற நகைக்கின்றான். இதிலிருந்துதான், மனித
னுடைய கஷ்டங்களாகிய அநந்த நதிகள் உற்பவிக்கின்றன. அவன்
இவ்வளவு துக்கானுபவத்தி லழுந்தியும், கடவுளைத்தவிர வேறொ
ன்றுமிருக்கவில்லை, இராது இருத்தல்கூடாது என்னும் உண்மை
யைத்தெரிந்து கொள்ளமாட்டான். இவ்வுலகத்து வேதநூல்களில்
ரூபியாயும் அரூபியாயும் தன் தோற்றஞ் ஜோதியாயுமிருக்கும்
இந்தப் பொருளினுக்குக் கணக்கில்லாத நாமங்களைக் கொடுத்
திருக்கின்றனர். ஆனால் நம்முடைய லௌகிக ஆத்மார்த்த சௌ
கரியங்களுக்குக் கர்த்தா இவர் தாமென்பது தெளிவான சொற்களி
னால் போதிக்கப்படவில்லை; கடவுள், அல்லா, பிரஹ்மம், ஈசுவரன்,
சிவன், விஷ்ணு, காளி முதலிய நாமங்களெல்லாம் அவரையே
குறிக்கின்றனவென்பதும் போதிக்கப்படவில்லை. மனிதர், இந்நாமங்
களை வழிபட்டு ஆராதித்தால் சுவர்க்கம் கைலாசம் வைகுண்டம்
என்னும் பேறுகளைப் பெறலாமென்று நினைக்கின்றனர். இவைகள்
யாருடைய நாமங்களாகின்றனவோ அந்த நித்தியவஸ்துவைத்
தெரிந்துகொண்டு அவருக்கேவழிபாடுசெய்வாரில்லை; ஆனால், அவி
வேகமாய்வைத்த விசுவாசத்தோடு அளவற்ற விருந்துகள் உப
வாஸங்கள் கிரியைகள் என்றிவற்றால் வாஸ்தவத்தில் இல்லாதன
வாகிய நாமங்களை வழிபடுகின்றனர். பிரபஞ்சத்தில் ஜீவியசக்
கரவர்த்திக்குரிய சிம்மாசனத்தில், மனிதனுடைய கையால் ஆக்
கப்பட்ட சிலைகள்வைக்கப்பட்டிருக்கின்றன. மாந்தர், உண்மைக்
கடவுளை நோக்காது தம்முகங்களைக் கோணிவைத்திருக்கின்றா
ராதலின், அவர்களுடைய வழிபாடுகளெல்லாம் நன்மையென்பது
சிறிதும் பயவாதிருத்தலோடமையாது, பரஸ்பர விரோதம்-
வாதம்-சச்சரவு என்றிவற்றால் உண்டாகுந் துன்பங்களை யதிகரிப்
பிக்கின்றன. இத்தகைய வழிபாடுகள் பலசாமியினுடைய

கைகளைச் சோர்வடைவிக்கின்றன; ஞானியினுடைய மனத்தையும் இருள் மூடச்செய்கின்றன. இப்படியிருந்தாலும் உலகவேதங்கள் உத்கோஷித்துப் போற்றும் ஸ்துதி நாமங்கள் யாரைக் குறிக்கின்றனவென்றும், அவ்வேதங்கள் எடுத்துப்புகழும் வழிபாடுகள் யார்பாலவென்றும், சிந்திப்பாரொருவருமில்லை. பிரபஞ்ச ஜோதியாகிய பரம்பொருளின் நாமங்களிவை யென்றொருவன் சொல்வானாயின், 'கடவுளின்பேரைவைத்து மனிதர்களுள் இத்தனை சண்டையேன்? சமயம் ஏன் உலகத்தைப்பகுக்கின்றது? ஒவ்வொருமனிதனும் தன்னுடைய கடவுள் மற்றையகடவுளரினுமுயர்ந்தாரென ஏன் பறையறைகின்றான்? என்று அவன்தானே சொல்லட்டும். நாமம் எதுவானாலுஞ்சரி, வழிபாடுகொள்ளும் வஸ்து ஒன்றுதானே, என்னென்னபேரால் மனிதன் கடவுளை யாராதிப்பினும் அந்த ஒருவர்தாமே யாராதிக்கப் படுகின்றனர் என்று அவன்மறுமொழி பகர்வானாயின், ஆழ்ந்துயோசிக்கக் கடவன். பாஷைதோறுஞ் ஜலத்திற்குப் பலபெயர்கள் உண்டு ஒருமனிதனுக்குத் தாகம்வந்ததும், ஜலத்தை அவன் ஜலமென்பவனாயினும் வேறுபெயரிட்டழைப்பவனாயினும், அதனைக்குடித்த வக்கணத்தே தாகந்தணிகின்றான். தண்ணீரிலே கண்களைமட்டும் பாய்ச்சிக்கொண்டு மகிழ்ந்து, மனிதராசிகளுள் வழங்கும் பாஷைகளிலெல்லாம் ஜலத்திற்குள்ள பெயர்களை அவன் உச்சரித்துக்கொண்டிருப்பானாயின், தாக எரி வடங்காது; ஆனால், ஒரு பாஷையிற் கூட ஜலத்தின்பெயரை யறியாதபொழுதும் அதனையள்ளிக் குடித்தானாயின், தாகம் நீங்கப்பெறுவன்; சாந்தி யவனுக்குண்டாகும். ஸ்தூலமும், ஸூட்சுமமுமாகிய கடவுள் ஒருவரே. தூங்குகிற மனிதன் விழித்தபொழுது அந்தமனிதனாய்த்தானிருக்கின்றான். விழித்திருக்கும்பொழுது பெற்றோரை வணங்குவது தகுதியே; ஏனென்றால், அப்படிச்செய்வதனால், தூங்கும்பொழுதும் அவர்கள் வணங்கப்பட்டவராகின்றனர். தூங்குகின்றதந்தைதாயருக்கு விசேஷமரியாதை செய்யாமையினால்தோஷம் ஒன்றும்வருவதில்லை. நித்திரையில் அயர்ந்து கிடக்கும் பெற்றோர்கள் விழிப்புக் காலத்திற் குழந்தையைப் போஷித்து வளர்க்கின்றார்கள். தூங்குகிறதாய் ஒருத்தி; விழித்திருக்கிறதாய் மற்றொருத்தி யென்று சொல்லி ஒருத்தியை வணங்கி மற்றவளுக்கு வழிபாடு மறுப்பவன் மூடனேயாவன்.



ஜோதியே தன் தோற்றமாவுடைய ஸர்வ வியாபக வஸ்துவே பிதா; நீங்களெல்லாருமே அவருடைய பிள்ளைகள்; குணமுஞ் செயலுமிறந்த நிலையில் அவர் தூங்குவதாகச் சொல்லப்படுகின்றனர். எங்கும் வியாபித்த ஜோதியாயும் எல்லாம் வல்ல இறைவனாயும் வெளிப்பட்டிருக்கும் நிலையில் அவர் விழித்திருக்கின்றாரென்று சொல்லப்படுகின்றனர். மனிதர்கள் அவரை விழித்திருக்கும்பொழுது வழிபடுவார்களாயின், ஜோதியே தன் தோற்றமாவுடைய ஸர்வ வியாபக வஸ்துவாகிய அவரை வாஸ்தவத்தில் வழிபடுகின்றார்கள். புருஷன் ஸ்திரீ குழந்தை யாவரும் அவரை வணங்குவார்களாக. நன்மைக்கெல்லாம் ஸாரமும் எல்லாருக்கும் நன்மை யளிப்பவரும் அவராகவே யிருக்கின்றார். அக்கடவுளே, உங்களுக்கு ஞானத்தை யருளி, முத்தி, மோக்ஷம், நிருவாணம் என்று பலவிதமாகச் சொல்லப்படுகின்ற நித்தியாநந்தத்தில் உங்களை ஆழ்த்தி, உங்களுடைய குருட்டை நீக்கி ரக்ஷிப்பர்.

ஜோதியாகத் தோன்றுவதும் ஆநந்தத்திற்குப் பிறப்பிடமுமாகிய இந்த வஸ்து எவ்விடத்தும் எல்லாரிடத்தும் வீற்றிருக்கின்றது. இவ்வுண்மையைப் பாராமல் மற்றையோர்க்கு அநீதஞ் செய்து உங்களுக்கு நன்மை தேடிக்கொள்ளப் பார்க்கின்றீர்கள். மற்றையோருடைய நன்மையில் உங்களுடைய நன்மையும் அவர்களுடைய கேட்டில் உங்களுடைய கேடும் இருப்பதை மறந்து விடுகின்றீர்கள். ஏனென்றால், மற்றையோரிடத்திருப்பவர் தாமே உங்களகத்து மிருக்கின்றார்; ஆதலால், பயனற்ற கிரிகைகளாலும் வஞ்சகம் பொருந்திய சடங்குகளாலும் உலகத்தைப் புண்படுத்தலை யொழியுங்கள்.

கடவுளுக்கு மனிதனாலே கொடுக்கப்பட்ட அநேக நாமங்களுளொன்று நித்தியமாயும் ஆநந்தகரமாயுமிருக்கின்றதென்னின், எல்லா நாமங்களும் அவ்வாறாதல் வேண்டும். பல பாஷைகளிலும் ஜலத்திற்குரிய பல நாமங்களில் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததாவதெப்படி?

கடவுள் என்னும் நாமம் ஆநந்தகரமென்னின், அல்லா, பிரஹ்மம் முதலிய நாமங்களும் அவ்வாறாதல் வேண்டும். அன்றியும், தனக்குப் பின் பிறப்பவனாகிய மகனுக்குத் தந்தை பெயரிடலாம்; தன்னைப் பெறுந் தந்தைக்கு மைந்தன் பெயரிடல் கூடாது. கட—

வுள்; அல்லாஹ் பிரஹ்மம் என்னும் பெயர்களையுடைய வஸ்துவைத் தவிர இரண்டாவது பொருளில்லை. அது நித்திய நிராதார வஸ்து; அப்படியானால், அவருக்கு ஒரு பெயராவது பல பெயர்களாவது இடுதற்கும் ஒருபெயரை மற்றொரு பெயரினும் உயர்ந்ததெனக் காட்டற்கும் அவரையன்றி யார் இருந்தனர்?

கடவுளிடத்து நித்ய ஆத்மாக்களுள் பக்தி ஞானங்களிற் சிறந்தபுருஷர்கள் கடவுளது செல்வப்பிள்ளைகள்; அவர்கள் (மாந்தர்) அவரைப் பல நாமங்களுள் ஒன்றாலேனும் வாழ்த்துகவென்றும், கருணாநிதியாகிய கடவுள் தனது அளவு கடந்தெழுங் கருணையினாலே அவர்களகத்தே சத்திய ஞான தீபத்தை யேற்றி லௌகிக ஆத்மார்த்த கடன்களை அவர் கிரமமாக நிறைவேற்றுமாறு செய்து அவர்களை நித்தியானந்தத்துள் இருத்துக என்றும் உத்தேசித்து, அவருடைய பல நாமங்களை உலகத்திற் பிரசித்தப் படுத்தினார்கள்.

ஆனால், மனிதனுடைய நன்றி ஹீனத்தை யெவ்வளவிற்றென்று சொல்வது? இப்பிரபஞ்சத்திற்குப் பிதா மாதா குரு ஆத்மா என்றித்துணையு மொருங்கே யாகின்ற கடவுளை அவன் வணங்குகின்றானில்லை; அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுகின்றானுமில்லை. நாய் குதிரை மாடு மற்றுமுள்ள மிருகங்கள் என்றாலும், தமக்கு உபகரித்தாரையறிந்து அவர்களிடத்து அன்பு செய்யும்; மனிதனோ, நித்தியராயும் ஸ்தூலமாயும் ஸூக்ஷமமாயும் ரூபியாயும் அரூபியாயும் இருந்து, சிறந்த பொருள்களைச் சிருஷ்டிகளிலெல்லாந் தனக்கே யுபகரித்து வருகின்ற கடவுளை யறிகின்றானலன்; அவரை நிந்தனையோடும் இகழ்ச்சியோடுந் தள்ளி விடுகின்றான். சத்தியமாய்க் கேட்கின்றேன், மனிதனே! உன் ஜாதியைப்போல நன்றிகெட்ட ஜன்மம் எங்கேனுமுண்டோ? இப்போதாவது தன்கேடு பிறன்கேடு சூழ்தல் முதலிய துஷ்டதனத்திலிருந்து திரும்பிக் கடவுளிடத்து அடைக்கலம் புகுதி. எல்லாம் நன்றாகும். இதுவரை மோசம் போனதொன்றுமில்லை. ஓம் சாந்தி. பரசாந்தியுங்கட்கெல்லாம் பலிக்கக் கடவது.

முடிவுரை,

சுபகாரிய நினைவுகளெல்லாமொழித்து, இம்மொழிகளைக் கவனித்து அவற்றின் தாற்பரியத்தை அறிந்து கொள்ளுங்கள்.



அரூபியாயினும் ரூபங்களெல்லாமாயும், ஸ்தூலவாழ்வாயும், ஸூக்ஷம வாழ்வாயும், காரணப் பொருளாயும், சராசரமெல்லாமாயும், ஸர்வ வியாபக வஸ்துவாயும், ஜோதியாய் வெளிப்பட்டதாயுமுள்ள கடவுளை அன்போடு வணங்குங்கள்.

சூரிய சந்திரர்கள் உதயமாகும்பொழுதும் அஸ்தமிக்கும் பொழுதும் அவற்றை நோக்கிக்கொண்டு, கடவுளுடைய ஸர்வ வியாபக பரிபூர்ணத்வத்தோடு உங்களை அபேதப்படுத்தி நன்மைக்கெல்லாம் இறைவராகிய அவரை நமஸ்கரியுங்கள்.

ஒவ்வொருவனும் தனக்குப் பூமியிலுள்ள உடைமைகளை வைத்துக் கடவுளை யவரது உருவமாகிய அக்கினியிலிருத்தி, அவருடைய சிருஷ்டிகளுக்கெல்லாம் அவசியமாய் நிவிர்த்திக்கவேண்டிய குறைகளை நிவிர்த்திக்கக் கடவன்.

மனத்தையும் சரீரத்தையும் தரையையும் ஜலத்தையும் காற்றையும் எப்போதும் சுத்தமாகவும் சுசியாகவும் வைத்துக் கொள்ளும்படி முயலுங்கள். இங்ஙனஞ் செய்வது கடவுளுக்குத் திருப்தியாயும், எல்லாமாந்தருடைய விசேஷமாய் ஐசுவரியவான்களுடைய கடமையாயுமிருக்கின்றது.

இவ்விதமாக நடப்பானாயின், மனிதன் இப்போதும் எப்போதுஞ் சந்தோஷமாயிருப்பான். எவனாயினும் இவ்வளவு செய்தாலே போதும்; கிரியைப் பெருக்கெல்லாம் துன்பத்திற்கு வழி காட்டுகின்றன. ஓம் சாந்தி. பரசாந்தியுங்கட்கெல்லாம் பலிக்கக் கடவது.

## புனிதவதி.

(முன் தொடர்ச்சி)

### காட்சி 3.

இடம்:—கொற்கையம்பதி-வணிகவீதி.

புனிதவதியார் குணவதிக்கு நடராஜப்பெருமானைத் தியானிக்கும்முறையை யுபதேசித்து, அற்புதத் திருவந்தாதியையும் திருவிரட்டைமணி மாலையையும் அருளிச் செய்து, திருக்கைலைக்குத் தலையால் நடந்து செல்லுகின்றார்.

குணவதி:—என்ன அற்புதம்! என்ன அற்புதம்! நமது புனிதவதியாரின் தெய்வத்தன்மையின் றன்றோ விளங்கியது. அவர்க்

குப் பேய் வடிவம் அவர் நினைத்த போதே வந்து விட்டதே! இதுகாறும் அவரைத் தெய்வமென்று கருதித் தொழாது வீணே என் காலத்தைக் கழித்து விட்டேன். என் பிறப்பும் ஒருபிறப்பாமோ? நடராஜப்பிரபுவைத் தியானிக்கும்முறையை யுனக்குரைக்கின்றேனென்றவர் முன்னொரு நாள் கூறியதை வீட்டு வேலையின் மிகுதிப்பட்டால், கவனியாதிருந்து விட்டேன்; நமக்கினி யென்ன வேலையிருக்கின்றது? நடராஜப் பிரபுவைத் தியானிப்பதே நமக்கு வேலையாகும். (வெளிப் படையாய்) நமஸ்காரஞ் செய்து, பரதேவதை! சின்மயச் செல்வி! எனக்கின்று நடராஜப்பிரபுவைத் தியானிக்கும் முறையை யுபதேசித்தருளல் வேண்டும்; எனக்கினி வேறு வேலையில்லை; யானோ கன்னிப்பெண்; என் காலத்தைக் கன்னிப் பெண்ணாகவே கழித்து விடுகிறேன். கருணை செய்ய வேண்டும்.

புனிதவதி:—குணவதி! நீ கன்னிப் பெண்ணாக விருந்து காலத்தைக் கழிக்க விரும்பியது மிக நன்றே! காலத்தைச் சிறிதும் வீணாகக் கழித்தல் கூடாது. நடராஜப் பிரபுவைக் கண்ணாரக் கண்டு, கையாரக் கூப்பித்தொழுது, எண்ணாரவெண்ணியிருப்பாயாயின், உன் பிறப்புப் பயனுடையதாகும். அறிவாற் சிவமாக விளங்கிய மணிவாசகப் பிரபு,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன் கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார, வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத், தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"

என்று திருவாசகத்தில் அருளிச்செய்திருப்பதைச் செவ்வியாகச் சிந்தித்து தியானஞ் செய்யக்கடவாய். இதுவே உனக்குபதேசமாகும்; தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து, யான் கூறியவாறு சாதனஞ் செய்யக்கடவாய். நானினி அப்பனைக்கண்டு தரிசிக்க வெள்ளிமலைக்குச் செல்ல விரும்பியிருக்கின்றேன்; நீ விரைந்து செல்.



குண:—(உள்ளங்குளிர, உரோமஞ் சிலிர்ப்ப, ஆநந்தக்கண்ணீர் பெருக அம்மையார் அடியில் விழுந்து வணங்கி), என்குல தெய்வமே! ஏழையேன் செல்லுகின்றேன்; என்று முன் திருவடியை மறவேன்; உமது கருணை ஏழைமீது என்றும் மாறாதிருக்கவேண்டும்.

(பிரிய மனமில்லாது திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு செல்லுகின்றாள்.)

புனி:—நமக்கு ஈசன் பற்றொழிய வேறொருபற்றுமில்லை. கண்ணுதலை, கறைக்கண்டனை, கைலைமலையானை, இனி அற்புதத் திருவந்தாதி பாடித்துதித்து அடியவருள் ஒருவராவோம்.

("பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்."

என்று தொடங்கி அற்புதத்திருவந்தாதி பாடி முடித்தார்).

காலையேபோன் றிலங்கும் மேனியையும், கடும்பகலின் வேலையேபோன் றிலங்கும் வெண்ணீற்றையும், மாலையின் தாங்குருவே போலுஞ் சடைக்கற்றையுமுடைய ஈசனைப் பாடப் பாட நமக்கின்பவெள்ளம் பெருகுகின்றதே! ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! இனித்திருவிரட்டை மணிமாலையொன்றைப் பாடிமுடிப்போம்.

"கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பால்
தளர்ந்திங் கிருந்த தவிர்திகண் டாய்தள ராதுவந்து
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
யிளந்திங்க ளும்மெருக் கும்மிருக் குஞ்சென்னி யீசனுக்கே."

என்று தொடங்கித் திருவிரட்டை மணிமாலையைப் பாடி முடித்தார்.)

இனி யாம் மக்களுலகில் வசிப்பது நமக்குத் தகுதியாகாது; வெள்ளிமலையில் வாழ்வதே வேண்டும்.

(வடதிசைத் தேசமெல்லாவற்றையும் மனத்தினுங் கடிகக்கடந்து சென்று கைலைமலையின் பக்கத்திருந்து,)

தேவாதிதேவன் வாழும் திருக்கயிலை மலையின்மீதும் யாம் காலால் நடந்து செல்வது கன அபராதமாகும்; தலையால் நடப்பதே தகுதியாம்.

(கைலைமலைமீது தலையால் நடந்து செல்லுகின்றார்).

மூன்றாவது காட்சி முற்றிற்று.

காட்சி 4.

இடம்:—வெள்ளிமலை—திருவாலங்காடு.

புனிதவதி: பார்வதி, பரமேசுவரரைத் தரிசித்து, அவரருள்பெற்று, திருவாலங்காட்டுக்குத் தலையால் நடந்துசென்று, இரத்தினசபாபதியினது எடுத்தருளுஞ் சேவடிக்கீழ்ப் பிரவேசிக்கின்றார்.

பார்வதி:-(பேய்வடிவமொன்று தலையால்நடந்து வருவதைக்கண்டு) இப்படியுமொருவடிவமிருக்குமா? இவ்வடிவம் தலையால்நடந்து வருவது ஆச்சரியமாயிருக்கின்றது! இதனது அன்பு மிக வியப்பாக விருக்கின்றது. (விரைந்தெழுந்து வணங்கி, வெளிப்படையா) எம்பெருமானே! தலையால் நமது மலையின்மீ தேறிவரும் எலும்புடம்புடையவர் யார்? இவரன்பின் பெருமையை யளவிடல் முடியாது போலும்!

பரமேசுவரர்-:பார்வதி! இவரது அன்பின் பெருமையை யளவிடல் முடியாது. இவர் காரைக்கால்-புனிதவதியாரன்றோ?

பார்:—அப்படியா! தேவரீர் இரண்டுமுறை அவர்க்கு மாங்கனி யளித்தீரன்றோ; அன்பினால் என்புருகுவார்க்கன்றி மற்றவர்க்கு உமதருள் கிடைக்குமோ? இவரது அன்பின் பெருக்கை யெத்தனையோமுறை யென்னிடத்திற் சொல்லியிருக்கின்றீரே! இவரேன் இவ்வடிவங் கொண்டார்?

பர:—இவர் இவ்வடிவத்தை நம்மைப் பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டனர்; இவ்வடிவத்தைப் பெற்றபின் அற்புதத்திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடி நம்மை மகிழ்வித்தனர். உமையே! தலையால் நடந்துவரும் இப்புனிதவதியாரை நம்மைத் துதிக்கும் அம்மையென் றறியக்கடவாய்.

(புனிதவதியார் அருகே வந்துவிட்டார்).



பர:—(புனிதவதியை அன்போடு நோக்கி) அம்மையே! வரக்கடவாய்.

புனி:—அப்பா! வந்தேன்.

(என்று கூறி அவர் திருவடியில் விழுந்து வணங்கி யெழுந்து நின்றார்].

பர:—உனக்கு வேண்டுவது யாது? கேள்; தருகின்றேன்.

புனி:—அருட்கடலே! பாசப்பகையே! ஐம்முகத்தேவே! உமையொருபாக! இறவாத இன்ப அன்புவேண்டிப் பின்வேண்டுகின்றார் பிறவாமைவேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உம்மையென்றும் மறவாமை வேண்டும்; அறவா! நீயாடும்போது நான் மகிழ்ந்துபாடி உன்னடியின்கீழிருக்க வேண்டும்; இன்னுமொன்றும் வேண்டாம்; யான்விரும்பும் வரம் இவ்வளவே.

பர:—அம்மையே! அப்படியே தந்தேன். நமது கைலாசபருவதத்திற்குத் தெற்கேயுள்ள திருவாலங்காட்டில் நாம் செய்யும் நடனத்தையும் தரிசித்துப் பரமாநந்தமடைந்து, நம்மை எப்போதும் பாடிக்கொண் டிருக்கக்கடவாய். உனக்கினி யஞ்சுவது யாதொன்றுமில்லை; நீ அஞ்சவருவதுமில்லை.

புனி:—அப்பனே! ஒப்பிலாமணியே! இவ்வரம் எனக்குப்போதும்; விடை யருள்வேண்டும்.

பர:—போகலாம்.

புனி:—(உமையொருபாகரது திருவடிகளை வணங்கித் துதித்துத் திரும்பி, வெள்ளிமலையினின்றும் தலையாலேயே நடந்திறங்கிவந்து) அப்பனருளிய திருவாலங்காட்டிற்கும் நாம் தலையாலேயே நடந்து செல்லுதல் வேண்டும்.

[தலையாலேயே நடந்துவந்து திருவாலங்காடடைந்து,)

இஃது ஆண்டவன் அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற ஆலங்காடன்றோ! மோட்சவுலகமென்பது இதுவேயாகும்; அன்றியின், அப்பன் இங்கேயிரு என்றருள்செய்யானன்றோ? இங்கு வசிப்பவர் செய்தபுண்ணியமே புண்ணியமாகும்; திருவாலயத்துட்சென்று, ஆண்டவனைத் தரிசிப்போம்.

(திருவாலங்காட்டுப் பண்ணையாட்கள் அம்மையாரைக்கண்டு, தம்முள் பேசிக்கொள்ளுகின்றனர்).

வீரன்:—அடா! பொன்னு! ஓடிவா; ஓடிவா; அதைப்பாரடா!

பொன்னன்:—எதடா பார்க்கிறது; ஒன்றுந் தெரியலையே!

வீரன்:—அதோ குளக்கரை மூலையிலே பிசாசுபோல ஒன்றுவருதே; அதைப் பார்!

பொன்:—ஆமாண்டா! பார்க்கப் பயமாயிருக்கிறதடா?

சுப்பன்:—(நடுவேவந்து) அதொரு தெய்வமடா! கும்புடு! கும்புடு; நானும் கும்புடுரேன்.

(யாவரும் கும்பிடுகிறார்கள்).

(திருவாலங்காட்டு வேளாளர்கள் அம்மையாரைக்கண்டு தம்முள் பேசிக்கொள்ளுகின்றனர்).

குமரப்பன்:—தம்பி! சுப்பு! சிவாலயத்தருகே ஓருருவம் தலையால் நடந்துவருவதைப் பார்! இவ்வுருவம் மகிமை யுடையதாயிருக்கவேண்டும்.

சுப்பு:—அது மகிமையுடையதா யில்லாவிட்டால், தலையால் நடந்துவருமா?

கும:—அவ்வுருவத்தைப் பிசாசென்று நினைக்கின்றாய்?

சுப்:—அப்படி நினைக்கவில்லை; பிசாசுக்கு மகத்துவ உற்பூதவுருவமும் பரிசமுமில்லை யென்பது எனக்குத் தெரியும்; அஃதொருமானுட வுருவம்.

ராமன்:—(நடுவேவந்து) தம்பி! குமரப்ப! தம்பி! சுப்பு! அது தெய்வானுக்கிரகம் பெற்ற ஒருபெண் மானுடவடிவம். இவ்வாறு ஒருவடிவம் நேற்றிரவு என்கனவில் வந்தது. இது கோயிலுள் தலையால் நடந்துசெல்லுவது மிகு அற்புதமாகவிருக்கின்றது. இவ்வடிவத்தை நீங்கள் விழுந்து நமஸ்காரஞ் செய்யுங்கள்; நானும் நமஸ்காரஞ் செய்கின்றேன்.

(யாவரும் நமஸ்காரஞ் செய்கின்றார்).

புனி:—உலகம் பலவிதம்; இதனால் நமக்காவது யாது? ஒன்றுமின்றே; ஆலயத்துள்ளே சென்று ஆண்டவனைத் தரிசிப்போம்.

(ஆலயத்துள்ளே செல்லுகின்றார்).

(குருக்கள் தம்முள் பேசிக்கொள்ளுகின்றனர்).



முத்து:—தாண்டவராய குருக்களே! அந்த உருவத்தைப் பார்த்தீரா! அது தலையால் நடந்துவருவது வியப்பா யிருக்கின்றது.

தாண்:—இஃதொரு பாமிசப்பற்று நீங்கிய மானுடவுருவம்; ஆண்டவனருளைப்பெறத் தலையால் நடந்துவருகின்றதென்று நினைக்கின்றேன்.

முத்:—அப்படித்தா னிருத்தல் வேண்டும்.

ராம:—(நடுவேவந்து)நேற்றிரவு இவ்வாறொருவடிவம் கோயிலுள் வரக் கனாக்கண்டேன். இஃது ஆண்டவனருள்பெற்ற வடிவமாகும். நீங்களும் நமஸ்காரஞ் செய்யுங்கள்; நானும் நமஸ்காரஞ் செய்கின்றேன்.

(யாவரும் நமஸ்காரஞ் செய்கின்றார்).

புனி:—(அம்மையார் குருக்கள்மார் பணிவோடழைத்துச் செல்ல, இரத்தின சபாபதியின் சந்நிதானத்திற்குச் சென்று). ஆண்டவனது தரிசனம் அற்புதமாயிருக்கின்றது; நாம் கண்பெற்றபேறு பேற்றோம்.

("கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற்குழி
யிற்றுப், பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பாடுயர் நீள்கணைக்
காலோர் பெண்பேய், தங்கியலறி யுலறு காட்டிற் றாழ்சடை யெட்
டுத் திசையும் வீசி, யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்பனிடந்
திரு வாலங் காடே."

என்று தொடங்கி, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் பாடி முடித்தார்).

ஆண்டவனது நடனதரிசனம் நமக்குக் கிடைத்தது நாம் முன் செய்த புண்ணியத்தின் நற் பயனேயாம். பரமனுடல் பார்க்குந்தோறும் பரமானந்தந் தருகின்றது.

(என்று பின்னும் வியந்து,

"எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே."

என்று தொடங்கி, மற்றொரு மூத்ததிருப்பதிகம் பாடி முடித்தார்).

இனியாம் ஆண்டவனுக்கு அன்னியமாயிருந்து அவனைத்தரிசித்துப்பாடாது, அவனெடுத்தருளுஞ் சேவடிக் கீழென்று மிருந்துபாடுவோம்.

(என்றுகருதி ஆண்டவனது எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் செல்லுகின்றார்).

கந்து:—தாண்டவராய குருக்களே! முத்துக் குருக்களே! ஆண்டவனது எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் சென்ற அவ்வுருவம் எனக்குத் தெரியவில்லை; உங்களுக்குத் தெரிகின்றதா?

தாண்-முத்:—எங்களுக்குந் தெரியவில்லை. அவ்வுருவம் ஆண்டவனடியில் ஐக்கியமாய்விட்டது போலும்!

கந்து:—அப்படித்தா னிருத்தல்வேண்டும்; இல்லாவிட்டால், அது புலப்படாதா?

பத்திக் கெல்லையுண்டோ? ஆண்டவனருளுக் களவுண்டோ?

(குருக்கள் மூவரும் பரவசமாகி, அரகர! மகாதேவ! மகாதேவ! என்று துதிக்கின்றனர்).

(அங்குவந்துள்ள அன்பர் யாவரும் அதுகண்டு பரவசமாகி வியந்தனர்; அமரர் யாவரும் புகழ்ந்து மலர் மழை பெய்தனர். தேவதுந்துபி முழங்கியது.)

முற்றிற்று.

---

## உறுதி மொழி.

எவரும் பெறலா மீச னருளை.
அன்புடை யாரை வன்பறு காது.
ஆசை யற்றவ ரரனடி சேர்வர்.
பத்தி யிலாவிடின் முத்தி வராது.
தேகாபி மானந் தீமையெ லாந்தரும்.
உலக போக மோக்கான மாகும்.
மங்கள மாக வாழ்வது நன்று.



## யுத்தம்.

இம்மாதத்தில் மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் ஜெர்மானியரைத் துரத்தி யடித்து முன்னேறிச் செல்ல ஆரம்பஞ் செய்திருக்கின்றனர். ருஷ்யப் போர்முகத்திலும், இத்தாலியப் போர்முகத்திலும் மிகு உக்ரமான போர் நடந்து வருகின்றது; ருஷ்யரும், இத்தாலியரும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றனர். நேச ராஜாங்கத்தாரது பகைவரான ஜெர்மானியரும், ஆஸ்டிரியரும் இம்மாத முதற்கொண்டு பெருந் தோல்வி யடைந்து வருகின்றனர். எல்லாப் போர்முகங்களிலும் நேச ராஜாங்கத்தார் வலுவில் தாக்க ஆரம்பஞ் செய்து விட்டனர். அதனால் பகைவர் எல்லாப் போர்முகங்களிலும் மிகு விழிப்பாக விருக்கவேண்டியவராக விருக்கின்றனர்; அதனால் அவர்கள் ஒரு போர்முகத்திலிருக்குஞ் சேனையை வேறொரு போர்முகத்திற்கு அனுப்பச் சாத்தியமாகாதிருக்கின்றனர். இக்காரணத்தினாற்றான் அவர்கட்கு எங்குந் தோல்வி அதிகரித்து வருகின்றது. நேச ராஜாங்கத்தார்க்கு யுத்த தளவாடங்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றமையின், அவர்களை ஜெர்மானியரினிமேல் வெல்லுவது சாத்தியமாகாது.

ஜெர்மானியரிப்போது அமெரிக்காவுடன் வியாபாரஞ் செய்ய 5 பெரிய கீழ்நீர்க் கப்பல்கள் செய்திருக்கின்றனர். இப்போது ஒரு கப்பல் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கின்றது.

சென்றமாதம் ஜட்லாண்டிற் கருகே நடந்த கப்பற்போரில் ஜெர்மன் போர்க்கப்பல்களுக்கு அதிக சேதம் நேர்ந்து விட்டது.

## நியூ இந்தியா பத்திரிகை.

நியூ இந்தியா பத்திரிகையின் சொந்தக்காரராகிய அன்னி பெசண்ட் அம்மையார் சென்றமாதம் 2000 ரூபாய் ஜாமீன் கட்டியிருக்கின்றார். அவ்வம்மையார் பம்பாய் மாகாணத்திற்குச் செல்லுதல் கூடாதென்று பம்பாய்க் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கின்றார்கள்.

ஸ்ரீமான் திலகருடைய சஷ்டி பூர்த்திக்கொண்டாட்டம் இம்மாதம் நடைபெற்றது. அப்போது அவருடைய சிநேகிதர்கள் அவர்க்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தனர்.

ஸ்ரீமான் திலகர் நன்னடக்கைக்காக 40000 ரூபாய் ஜாமீன் கொடுத்தல் வேண்டுமென்று புனா மாஜிஸ்டிரேட் உத்தரவு செய்திருக்கின்றார்.

சர்வாலண்டைன்சிரால் தம்மை அவதூறு செய்திருக்கின்ற விஷயமாக ஸ்ரீமான் திலகர் அவர்மீது இங்கிலாந்தில் ஒரு மானநஷ்ட வியாஜ்யம் தொடுத்திருக்கின்றார். அதுபற்றி அவரும், அவருடைய சிநேகிதர் ஆனரபில் மிஸ்டர் நேரும் இங்கிலாந்து செல்லச் சித்தமாயிருக்கின்றார்கள்.

வெங்கடகிரி மகாராஜா இம்மாதம் 22-ந் தேதி வேட்டையில் நேர்ந்த விபத்தால் இறந்து போனார்.

தென்னிந்தியா ரயில்வேயில் ஐரோப்பியர் - யூரேஷியர்களுக்கென்று பிரத்தியேகமாக 3-வது வகுப்பு வண்டியொன்று விடப்பட்டிருக்கின்றது. ஏனைய 3-வது வகுப்பு வண்டிகளிலெல்லாம் பிரயாணிகள் நெருக்குண்டிருக்க, மேற்படி பிரத்தியேகமான வண்டியில் ஒரு யுரேஷியனுமில்லாத காலத்திலும் அவ்வண்டியில் இதர ஜாதியார் ஏறுதல் கூடாது. இதுபற்றி ஒருவரும் கவனியாதிருந்தனர். இவ்வாறு ரயில்வே அதிகாரிகள் ஜாதி வித்தியாசம் பாராட்டுவது தவறுமென்று கோர்ட்டுத் தாவாவில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில் தீர்மானமானது. அதனை முன்னிட்டுக்கொண்டு பல்லாவரத்திலிருந்து வரும் ஆபீசர் ரயில் வண்டியில் சில காலேஜி மாணவர்கள் யூரேஷியருக்குப் பிரத்தியேகமாக விடப்பட்டிருக்கும் ரயில் வண்டியில் ஏறிவந்தனர். அதுபற்றி யூரேஷியருக்கும், இந்த மாணவர்களுக்கும் கலகமுண்டானது; அதுமுற்றிப் பெருங் கலகமாகப் பரவியது; யூரேஷியர்கள் ரயில்வே அதிகாரிகளின் ஆதரவைக்கொண்டு தடி முதலிய முஸ்தீப்புக்களுடன் வந்து சென்னை கோட்டை ஸ்டேஷனில் இந்த மாணவர்களைத் தாக்கி அவர்களுள் இருவர்க்குப் பலத்த காயமுண்டாக்கி விட்டனர்.

16143

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : 16143 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 20/9/96 | | | |
| 23-12-96 | | | |
| 12-6-97. | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.